மகாவித்வான்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆய்வுமாலை
2000

தொகுதி - 2

பதிப்பாசிரியர்

முனைவர் ச. மெய்யப்பன்

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

முனைவர் வே. இரா. மாதவன்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஆய்வுமாலை

தொகுதி - II

திருவாவடுதுறை ஆதீனமும் உலகத்தமிழ்க் கல்வி இயக்கமும், மெய்யப்பன் தமிழாய்வகமும் இணைந்து நடத்திய மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இலக்கிய ஆய்வு மாநாட்டு வெளியீடு.

பதிப்பாசிரியர் :
முனைவர் ச. மெய்யப்பன்
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் வே.இரா. மாதவன்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
இலக்கிய ஆய்வுமாநாட்டு வெளியீடு
தஞ்சாவூர்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆய்வு மாலை

முதற்பதிப்பு : 25, நவம்பர் 2000

பதிப்பாசிரியர் :

பதிப்புச்செம்மல், தமிழவேள்
முனைவர் ச. மெய்யப்பன்
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

செந்தமிழ்ச் செம்மல், பேராசிரியர்
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர், அடைக்கலப்பட்டணம் அஞ்சல்
திருநெல்வேலி மாவட்டம் - 627 808.

முனைவர் **வே.இரா. மாதவன்**
இணைப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை, சுவடிப்புலம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

விலை : ரூ. 100-00

நூல் கிடைக்குமிடம் :
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

கணினியாக்கம் : உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், தமிழூர் - 627 808.
அச்சாக்கம் : ஸ்டெட்பாஸ்ட் பிரஸ், சென்னை - 600 013

56. தில்லையமகவந்தாதித் திறன்

ஜா. திரிபுர சூடாமணி
தருமபுரம்

தமிழிலக்கிய வரலாற்றில் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்ற பல்வேறு பெயர்களில் வளர்ந்துள்ள பிரபந்தங்களுக்கு குறிப்பிட்ட இடம் உண்டு. இத்தகை பிரபந்தங்களை மிகுதியாகப் படைத்து சிறப்புப் பெற்றவர் பலராவர். அவர்களுள் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடத்தகுந்தவர். இவரை 'பிரபந்தவேந்தர்' என்றே கூறுவர். இவர் படைத்துள்ள திருத்தில்லையமகவந்தாதி குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

நூல் அறிமுகம்

திருத்தில்லையமகவந்தாதி என்னும் இந்நூல் நூறு கட்டளை கலித்துறைகளால் அமைந்துள்ளது. (காப்பு 1 நூற் செய்யுள்கள்)

பெயர் காரணம்

சொல்லணியாகிய யமகம் இதனுள் அமையப்பெற்றிருத்தலின் இது இப்பெயர் பெற்றது. யமகம் ஆவது பல அடிகளாயும் ஒரே அடியில் பல இடங்களாயினும் வந்த எழுத்து தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இது தமிழில் மடக்கு எனப்படும். இந்நூலில் உள்ள செய்யுட்களில் எல்லாம் நான்கடிகளிலும், முதலெழுத்து முதலாக சிலவும் பலவும் ஒன்றி நின்று வெவ்வேறு பொருள் விளைவிப்பதைகீழ்காணும் உதாரணம் வழி அறியலாம்.

வனசங் குவளை யலர்பணை
  சூழ்தில்லை வாணவென்செய்
வனசங் குவளை யலர்பட
  ராவகை மாற்றுங்கழல்
வனசங் குவளை பலர்பயி
  லேநலம் வாடுறப்பாய்
வனசங் குவளை யலர்படு
  வீரையும் வாய்விடுமே (5)

இப்பாடலில் ஒவ்வொரு அடியிலும் வசைங்குவளை என்ற சொல்லே மீண்டும் மீண்டும் வந்து பொருள் வேறுபட்டுள்ளது.

முதல்வரி: வசைங் குவளை-வனசம் குவளை தாமரை, குவளை

இரண்டாவது வரி:(செய்)வசைங்குவளை - அசம் கு.வளை- ஆடுபூமி வளைதல்

மூன்றாவது வரி:(கழல்)வனசங் குவளை- சங்கு வளை (கழல்வன்) சங்கு வளையல்.

நான்காவது வரி:(பாய்)வளைசங்குவளை- சங்கு, வள்ளை, சங்கு, வள்ளைக்கொடி.

இதே அமைப்பு நூறு பாடலிலும் அமைந்துள்ளது.

அந்தாதி

அந்தாதி என்பது யாப்பிலக்கண நூல் கூறும் நாற்பத்து மூன்று தொடைகளுள் ஒன்றாகும். அந்தாதித்தொடையானது அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தாலும் அசையாலும், சீராலும், அடியாலும் வரும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுக்கப்படுவது. இந்நூலில் யமகம் என்ற அமைப்பு இருப்பதோடு அந்தாதி அமைப்பும் நூல் முழுமையும் உள்ளது.

இந்நூலில் நூறு பாடல்களில் அந்தாதி அமைப்பு மின்வரும் நிலைமில் அமைந்துள்ளது.

அடிசீசொல்அந்தாதியாக வரும் பாடல்கள்	42
இனஎழுத்து அந்தாதியாக வரும் பாடல்கள்	24
ஈற்றுச் சொல் அந்தாதியாக வரும் பாடல்கள்	11
ஈற்றுச் சொல்லின் முதலெழுத்து அந்தாரியாக வரும் பாடல்கள்	5
ஈற்றுச் சொல்லின் இடையெழுத்து அந்தாதியாக வரும் பாடல்கள்	5
ஏகாரம் அந்தாதி வரும் பாடல்கள்	5
ஈற்றுச் சொல்லின் ஈற்றெழுத்துப்பாடல்கள் அந்தாதியாக வரும் பாடல்கள்	4
ஈற்றுச் சொல்லின் ஈற்றுஎழுத்து இரண்டு அந்தாதியாக வரும் பாடல்கள்	4
	100

புராணக்கூறுகள்

வேதங்களின் ஒருபிரிவு புராணங்கள், வேத கருத்துக்களை கதைகளின் வாயிலாக பதிப்பது புராணங்கள் கடந்த காலத்தால் பழமையானதாகவும், இன்றும் பயன்பெறுவதால் புதுமையானதாகவும் சிறந்து விளங்குவன இவை. இத்தகைய புராணங்கள் 18 எனக்கூறுவர். பொதுவாக புராணக்கருத்துக்கள் இறை இலக்கியங்கள் அனைத்திலும் விரவி இருக்கும். அந்த வகையில் மகாவித்துவான் அவர்கள் திருத்தில்லை யமக அந்தாதியில் பல புராண கருத்துக்கள் அதிக அளவில் இடம்பெறச்செய்துள்ளார். அவையாவன திரிபுரம் எரித்த வரலாறு,(1.84) திருமாலும், பிரம்மனும் அடிமுடி தேடிய வரலாறு என்பன. அவைமட்டுமன்றி, கஜமுகாசுரன் என்ற யானை முக அசுரனை அழித்து அவனது தோலை போத்தியமை, தாருகாவனத்து முனிவர்கள் செய்த யாகத்திலிருந்து வந்த வலிமை வாய்ந்த புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தமை(19,79) பிருங்கி என்ற முனிவர் உமையம்மையை விடுத்து சிவனை மட்டும் வழிபட அதனைக் கண்டு வெகுண்டெழுந்த

பார்வதி தவம் இருந்து சிவனின் இடப்பாகத்தை பெற்றமை, (20)சூரியனின் பல்லை உதிரச் செய்தமை (18,65,84,) தக்கன் சிவபெருமானை மதியாமல் ஆணவம் கொண்டு யாகம் செய்தான், அதனால் சிவபெருமான் தக்கனது தலையைக்கொய்தான். பிறகு ஆட்டின் தலையை வைத்து அருள்புரிந்தமை. (68). சிவபெருமான் யோக நிலையில் அமர்ந்திருந்தபோது மன்மதன் மலரம்புகளை எய்து சிவபெருமானின் கோபத்திற்கு ஆளானான். அப்போது மன்மதன் சிவனது நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டமை (78)

தேவர்களும், அசுரர்களும் பார்கடலைக் கடைந்தனர். அப்போது ஆலகாலம் என்ற கொடிய நஞ்சு வந்தது. அந்த நஞ்சை சிவபெருமான் உண்டு கண்டத்தில் அடக்கி (22,23)தேவர்களை காத்தமை. இவை போன்ற புராணக் கூறுகளும் இந்நூலில் அமைந்துள்ளன.

திருத்தில்லைவளம்

தில்லையின் வளம் இந்நூலில் தாமரையும் குவளையும் மலர்கின்ற வயல்கள் சூழ்ந்த தில்லை(5,6)அழகிய தில்லையம்பதி(7)சோலையும் வளப்பம் பொருந்திய சங்குகளும் சஞ்சரிக்கின்ற தடாகம் சூழ்ந்த பொன்னம்பலம் (23)அழகிய சோலையில் வண்டுகளின் ஒலியோடு தேன் உள்ள ஆத்தி மரங்கள். புட்பிக்கின்ற குளிர்ந்த தில்லை(27), நீர்ச்சிறையை உடைய வயல்களில் பொருந்திய அன்னங்கள் சூழ்ந்த தில்லையம்பதி(31), அன்னம் பாவிக்கும் தில்லை (39),

தெய்வப் பெண்கள் சூழ்ந்த தில்லையம்பதி(88) தாமரை பட்டங்கள் இடங்கள் தோறும் கொண்ட தில்லை (66)நீருள்ள பள்ளங்களில் சங்குகளும் வண்ணங்களும் கோரையும் மொய்த்த தில்லைபதி(73),தாமரையில் வசிக்கும் இலக்குமி நிலைபெற்ற அழகிய திருமடங்களும் பாடசாலைகளும் நிறைந்த திருத்தில்லை(76), மின்னலை ஒத்த மேகங்கள் ஊர்கின்ற மாடங்கள் நிறைந்த தில்லைப்பதி(82) முத்துக்கள் தோன்றுகின்ற அழகிய குளிர்ந்த நீர்த்திரைகளிலுள்ள தில்லை(90) எனப் பலவாறு கூறப்படுகிறது.

பிறநூல் தாக்கம்

மகாவித்துவான் அவர்கள் திருத்தில்லையமக வந்தாதியில் பல இடங்களில் கருத்துக்களை எடுத்தாண்டு உள்ளார்.

சான்று

மனமானது ஐந்து வேடரோடு (பொறிகளோடு)சேர்ந்து வருந்துகிறது;என 42ஆம் பாடலில் சுட்டுகின்றார். இக்கருத்து, சிவஞானபோதத்தின் 'ஐம்புல வேடரின் அயர்த்தனை வளர்த்தனை(8) என்ற கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது. இறைவன் அகர எழுத்து போல அனைத்திலும் கலந்து நிற்கின்றான் என்பதை,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள்: 1)

திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை மகாவித்துவான் அவர்கள் இறைவனை அகரம் போல்வான் (39)என்று சுட்டுகின்றார்

அம்பலவாணன் அருகூத்து: தத்துவவிளக்கம் இறைவனது திருநடனத்தை ஊனநடனம் ஞான நடனம் என இருவகையாகக் கூறுவர்.

ஊனநடனத்துகுரிய திருவைந்தெழுத்து நகர முதலாகச் சொல்லும் நமச்சிவாய என்னும் தூல பஞ்சாக்கரம்

விளக்கம்

தூக்கிய திருவடி	- ந
திருவயிறு	- ம
தோள்	- சி
(ஆசிகூறும் கரம்)	
முகம்	- வ
முடி	- ய

அருளே முற்றிலும் கிடைக்க உதவுவது ஆக்கும பஞ்சாக்கரம். அதன்படி அமைவது இறைவனின் ஞானநடன வடிவம். அது சிவாயநம என்பது.

துடி(உடுக்கை)	- சி
வீசியகரம்	- வ
அபயகரம்	- ய
அங்கி(நெருப்பு)	- ந
ஊன்றிய மலர்ப்பதம்	- ம

இதனை உண்மை விளக்கம்,

"ஆடும்" படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே 'ந' கரம் - கூடும்
'ம' கரம் உதரம் வளர்தோள் 'சி' கரம்
பகருமுகம் 'வா' முடி 'ய'ப்பார்.
'சேர்க்கும் துடி'சி' கரம் சிக்கன 'வா' வீசு கரம்
ஆர்க்கும் 'ய' கரம் அபயகரம்- பார்க்கில் இறைக்(கு)
அங்கு 'ந'கரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கு 'ம' கரமது தான்'

என்ற பாடல்களில் விளக்குகிறது. மகாவித்துவான் இந்த இருநடன தத்துவத்தையும் ஒரே பாடலில் விளக்குகின்றார்.

வரநக ரம்பதம் வன்னிமப்
　　பூதம் வயிறுவருல்
வரநக ரம்பதம் பூண்டோன்
　　சிதுடி வதனமிந்தீ
வரநக ரம்பதம் பாலிக்குந்
　　தில்லைவண் கைமுடிய
வரநக ரம்யதம் யோல்வானில்
　　லான்மன்ற வாணனுக்கே (39)

என்பது அப்பாடல்.

மேற்கூறியது போல் இன்னும் பல இடங்களில் பிறநூல் கருத்துக்களைக் கையாள்கிறார்.

திருத்தில்லையமகவந்தாதியில் இடம்பெற்றுள்ள வடமொழி சொற்கள், ஆரணம், வாரணம், கற்பகம்(கடவுள்வாழ்த்தில்)அமர்பித்ரு அவம்(1) அனேகதங்காவத்து, ஈசன், பாகம்(2)வனசம் (5)ஆகமம் (6)கேதாரம்(8) பதுமர், மன்மதர் (9) வனம், யௌவனம் (10) அருள் (11) தரங்கம் (12) ஆரணம் (14) கார்கை காரி(18) கஞ்சம்(20) ஆவம் (21) குஞ்சிதம் (22)கதம் நந்தி, அங்கதம்(23)வாசிகை(24) பந்தம் (26) தனம், அமுது, குயம்(29)பவம் (31) அங்கம் (32) விரகர்(33) அகம் (34) பதி (35)வாரி(38)வதனம் பதம் இந்தீவரம் (39)விசாரம் (42)பாகன் (44)அந்தகன்(48)கமலை, பாசுரம் (50)பதி, அதமன்(56) பதஞ்சலி, யாதவன் (59) அமலை (60) தவம் (63) தினசரன் (65) அம்போருகம் (66)திக் (67)தகர் (68) கஞ்சம் (71) சரர் (76) புயம்(79) யமகம் (86) அற்பர் (87) ஆசு (99).

மேற்கூறிய 63 வடமொழிசொற்களை மகாவித்துவான் திருத்தில்லை யமக வந்தாதியில் கையாண்டுள்ளார்.

மேலே கூறிய செய்திகளோடு, அம்பர், அனாகதங்காவதம், கழுமலம், காசி, கச்சி, இடைமருதூர், காக்கைக்குளம், கேதாரம் நள்ளாறு, திருவாரூர், திருக்கழுக்குன்று போன்ற பல தலச்சிறப்புகளும், திருநீலகண்டர், குங்குலியக்கலையர் திருஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர், சிறுதொண்டர், சண்டீசர் ஆகிய நாயன்மார்கள் வரலாற்று குறிப்புகளும், சிவபெருமானது திருவுருவப்பொலிவு இவைபோன்ற பிற செய்திகளும், திருத்தில்லை யமகவந்தாதியில் சுட்டப்பட்டுள்ளன.

57. பெரிய புராண நுண்பொருள் விளக்கம்

வெற்றி திருநாவுக்கரசு
திருநாகேச்சரம்

தெய்வப் புலவர் சேக்கிழார் இயற்றியருளிய நூல் திருத்தொண்டர் புராணமாகும் இந்த நூலின் திட்ப, நுட்ப பொருட்சிறப்பையும் சேக்கிழாரது நுண்மாண் நுழைபுலத்தையும் மாண்பையும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்னும் நூலில் திறம்பட பாடி அமைத்துள்ளார். பிள்ளைத்தமிழ் இலக்கியம் தெய்வம், அரசர் அல்லாதோர் மீது பாடலாமா? இவ்வாறு அல்லாதோர் மீது பாடப்பட்ட நூலாகச் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலைக் கருதலாமா? என்றும் சேக்கிழாரது அருட்சிறப்பையும், பெரியபுராணத்தின் பொருட்சிறப்பையும் பிள்ளையவர்கள் எவ்வாறு விளக்குகிறார் என்றும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்

பிள்ளைத்தமிழ் இலக்கியம் புறப்பொருள் வகையாகிய பாடாண் திணையில் "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்று தொல்காப்பியரால் கூறப்பட்ட காமப்பகுதியின் பாற்பட்டு மக்கட் குழவிக்குரியதாக வழங்கப்படும். எனினும் தெய்வத் தோற்றமாகிய குழவியின் பருவத்தைச் சிறப்பித்துப் பாடுவதால் அக்குழவியோடு ஒற்றுமையுடைய தெய்வத்துக்குரியதாக இது வழங்கப்படும். இவ்வாறாகத் தொடக்கத்தில் தெய்வங்கள் மீது பாடப்பட்ட பெரியாழ்வார் பாசுரங்களிலும், பெரியபுராணத்திலும் பிள்ளைத் தமிழ் இலக்கிய கருக்கள் காணப்படுகின்றன.

கி.பி.12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் என்ற நூலே இவ் இலக்கிய வகையில் எழுந்த முதல் நூலாகும். முழுமையாகப் பிள்ளைத் தமிழ் இலக்கிய மரபில் தோன்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் அரசன் மீது பாடப்பட்டதாகும். இதன் தோற்றத்திற்கு பின்னரே பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் அமைய தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு முழுமையான வடிவில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றின. பிள்ளைத்தமிழ் தோற்ற முறை வளர்ச்சியினை நோக்க தெய்வங்கள் மீதும், முறை செய்து காப்பாற்றும் அரசன் இறை எனக் கருதியதால் அரசன் மீது பிள்ளைத்தமிழ் பாடப்பட்டது எனலாம்.

இவ்வாறாகத் தெய்வங்கள் அரசர்கள் மீது மட்டுமே பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியம் பின்னர்க் காலப்போக்கில் தெய்வம், அரசர் அல்லாதோர் மீதும் பாடப்பட்ட காரணம் என்ன? என ஆய்தல் வேண்டும்.

தொடக்கக் காலத்தில் தோன்றிய பிள்ளைத் தமிழ்நூல் அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. பின்னர்த் தோன்றிய நூல்கள் தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. இவற்றுள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் எவ்வகையினைச் சார்ந்தது என ஆய்தல் வேண்டும்.

தெய்வச் சிறப்பு

சேக்கிழார் சோழ அரசனை நெறிப்படுத்தும் முதல் அமைச்சராக இருந்தவர். அரசனைச் சார்ந்து நெறிப்படுத்தக்கூடிய முதல் அமைச்சர் அரசர் மனத்தின் கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணரவல்லாராக விளங்கினால் அவரைத் தெய்வத்தோடு ஒப்பமதிக்க வேண்டும் என்பதை வள்ளுவர் அமைச்சியலில்

ஐயப்படாஅது அகத்துணர்வானைத்
தெய்வத் தொடொப்பக் கொளல்

(குறள்:702)

என்பார். எனவே சேக்கிழார் முதலமைச்சராகி அரசனது உளமறிந்து நெறிப்படுத்தியதால் தெய்வத்தோடு ஒப்பக் கருதக்கூடியவர் என்பதாலும் பிள்ளை அவர்கள் சேக்கிழார் மீது பிள்ளைத்தமிழ் பாடினார் எனலாம்.

மேலும், தெய்வம் மணக்கும் செய்யுள்களை இயற்றிய தெய்வத் தன்மையுடையவராக விளங்கியமையாலும் தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொள்வது போல தெய்வத் தன்மையுடையாராகிய தெய்வச் சேக்கிழாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இயற்றினார் எனலாம்.

அரசர் சிறப்பு

அநபாய சோழன் சேக்கிழார்க்குச் செங்கோல் கொண்டு அரசு நடத்தும் உரிமை அளித்து உயர்பட்டம் அளித்தான் என்பதை உமாபதி சிவாச்சாரியார்

"....சேக்கிழார் குடியில் வந்த அருண்மொழித் தேவர்க்குத் தத்து பரிவளவனுந்தன் செங்கோலோச்சுந் தலைமை அளித்தவர் தமக்குத் தனது பேரும் உத்தமச் சோழப் பல்லவன் தான்" என்றும் உயர்பட்டங் கொடுத்திட"(பா.18) எனச் சேக்கிழார் புராணத்தில் குறிக்கிறார். இதனை நோக்க சேக்கிழார் முதலமைச்சராக விளங்கியதோடு செங்கோலோச்சுந் தலைமையுடைய அரசராக விளங்கியுள்ளார் என அறியமுடிகிறது. எனவே அரசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படும் பிள்ளைத் தமிழ் இலக்கிய மரபின்படியே பிள்ளையவர்கள் அரசராக விளங்கியவரும். அநபாய சோழன் விரும்பி பணிசெய்ய வீற்றிருந்தருளிய அருளரசாகி விளங்கியவரும் ஆகிய சேக்கிழாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டார் எனலாம்.

ஞானாசிரியர் சிறப்பு

சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர்க்குப் பிள்ளைத்தமிழ் பாடுகிறார். இது முழுமையாக இல்லையென்றாலும் பிள்ளைத்தமிழ்

பருவங்களின் கரு வெளிப்பட அமைந்துள்ளது. இதனை நோக்க தெய்வங்களையும், அரசர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பிள்ளைத் தமிழ் இலக்கியம் இயற்றப்படவேண்டும் என்ற இலக்கண வரம்பைக் கடந்து செல்வதைக் காணலாம். இதன் வாயிலாக ஞானாசிரியர்களையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றியுள்ளமையை உணரலாம்.

பெரியபுராணத்தை நன்கு ஊன்றி படித்துணர்ந்த பிள்ளையவர்கள் அதன் சுவையில் நன்கு திளைத்துச் சேக்கிழார் ஞானசம்பந்தரை ஞானாசிரியராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடியது போல அவர் காட்டிய நெறிகாட்டுதலில் சேக்கிழாரையே தமது ஞானாசிரியனாகக் கொண்டு அவரையே பாட்டுடைத் தலைவனாக்கி சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இயற்றினார் எனலாம்.

இதுகாறும் கண்ட செய்திகளை நோக்க தெய்வத் தன்மையுடையவராகியும், செங்கோலோச்சும் தன்மையால் அரசராகியும், சைவ மரபுகளையும், ஆகமங்களையும், உணர்த்தும் ஞானாசிரியராகியும் விளங்கிய சேக்கிழாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் இயற்றி, பிள்ளைத்தமிழ் மரபு இலக்கணத்தை ஒட்டி அமைத்த பிள்ளையவர்களின் நுண்மாண் நுழைபுலம் போற்றுதற்குரியது.

சேக்கிழார் அமைத்த நெறி

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதல் பருவமாக அமைவது காப்புப் பருவம். இப்பருவம் பாடும் முறையையும், அமையும் செய்யுள் எண்ணிக்கையையும் இலக்கண விளக்கப் பாட்டியல் கூறுகின்றது. மகாவித்துவான் அவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் காப்புப் பருவத்தில் தெய்வங்கள் எதனையும் காப்புத் தெய்வமாக வைத்துப் பாடாமல் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையில் அமைந்த நாயன்மார்கள் அனைவரும் சேக்கிழாரைக் காக்க என்று பாடி அமைத்துள்ளார். இவ்வாறு அமைத்துள்ளமை ஆய்விற்குரியது.

முன்னர்த் தோன்றிய பிள்ளைத்தமிழ் நூல்கள் காப்புப் பருவத்தில் தெய்வங்களைக் காப்பாக வைத்துப் பாடியது போல் பிள்ளையவர்கள் பாடாததைப்பற்றிப் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் குறிப்பிடும் பொழுது; இவ்வாறு காப்புப் பருவம் அமைந்ததற்குக் காப்புப் பருவ அமைப்பு அவ்வவ் ஆசிரியர்களின் மனப்போக்கிற்கு அமையப் பாடப்படும் என்பார்.

பிள்ளை அவர்கள் காப்பு பருவத்தில் தெய்வங்கள் காக்க எனப்பாடாது தம் உளப்போக்கிற்கு ஏற்ப பாடினார் என்பதைவிட சேக்கிழாரை நாயன்மார்களே காக்க வேண்டும் எனப்பாடியதற்குரிய நுட்பத்தை ஆய்தல் வேண்டும். பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடவும், சேக்கிழாரைப் போற்றவும் காரணமாக அமைந்தது பெரியபுராணம் இயற்றியருளிய செயலேயாகும்.

தெய்வச் சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தில் பரசமய நிறாக்கும்

பிள்ளையாராகிய ஞானசம்பந்தர்க்குக் காப்புப்(பா.43) பாடும்பொழுது திருநீற்றின் பெருமையை வெளிப்படுத்தத் தோன்றிய ஞானசம்பந்தர்க்கு வேறு தெய்வங்களின் காப்பை வேண்டாது நீறு திருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார் எனத் திருநீற்றையே காப்பாகக் கூறுகின்றார். இதனை நன்கு கற்று உணர்ந்த பிள்ளை அவர்கள் திருநீற்றுத் தெய்வப் பெருமையை வெளிப்படுத்திய திருஞானசம்பந்தர்க்குத் திருநீறே காப்பாக அமையப் பாடிய சேக்கிழாரைப் பின்பற்றியே திருத்தொண்டர்கள் தெய்வப் பெருமையைத் தமிழால் வெளிப்படுத்திய சேக்கிழார்க்குத் திருத்தொண்டர்களே காப்பாக அமையப் பாடியுள்ளார் எனலாம். இந்நெறி பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையுள் புதுமையானதாக இருந்தாலும் சேக்கிழார் அமைத்த மரபினை பின்பற்றியே பிள்ளை அவர்கள் காப்புப் பருவம் பாடினார் என்பது சிறப்பாகும்.

சேக்கிழார் அருட்சிறப்பு

திருத்தொண்டர்களின் பெருமைகளை வெளிப்படுத்திய சேக்கிழாரைப் பிள்ளை அவர்கள் பல உவமைகளால் சிறப்பிக்கிறார். சேக்கிழார் தம் காப்பியத்துள் கூறிய பொருள் புண்ணியரை அடைவிக்கும் முதல். அம் முதலை அளித்தவர் என்றும், இவரது புகழ் என்றும் மங்காது விளங்கும் என்பதால் மணியே என்றும், என்றும் நிலவி உலகெலாம் வாழும் பொய்யாப் பெருவாழ்வே என்றும், சேக்கிழார் அடியவர் எவரும் விரும்பி ஏற்றுப் போற்றும் நிலையினர் என்பதால் முத்தே என்றும், சைவ உலகில் என்றும் நிலைக்கும் அழியாவித்து என்றும், இவர் கவியும், பொருட்செறியும் என்றும் நினைக்க உருக வைக்கும் என்பதால் சுவைப்பாகே என்றும் இவரது பெரியபுராணக் கவிகள் இம்மையில் பேரின்பம் நல்கி மறுமைக்குப் பிறவியறுக்கும் மாமருந்து என்பதால் அமுதே என்றும், வானத்திலன்றி மண்ணில் மதியென மிளிர்தலின் மதியே என்றும், தமிழ்ப்புலவர்களுக்கெல்லாம் உயர்ந்தவராய் வைத்துப் போற்றப்படுதலின் நாவலர் ஏறே என்றும்; என்றும் இன்பம் பெருகும் நன்மையே தரும் இனிய சொற்களையே (திருமுறைச் சொற்களையே)பெரியபுராணத்தில் பெய்து பாடியுள்ளமையினால் தத்துவ நிதியே என்றும், உயிர்கள் எல்லாம் சார்ந்துள்ள மலங்களை அழிக்கும் பெரும்பகையே என்றும் இறைவனையும் அவரது திருத்தொண்டர்களையும் எண்ணும் அடியார்கள் உள்ளத்தில் ஊறும் இன்ப அமுதத்தின் இனிக்கும் நறுந்தேனே என்றும்; பக்திச் சுவை மிகுதியும் அமையப் பாடிய முதற் தமிழ்க் காப்பியம் என்பதால் என்றும் பத்தி ரசம் கலிகலியே என்றும், அன்பர்க்கு அண்மையராய் இருக்கும் அண்ணிய பொருள் என்றும் பெரிய புராணத்தை ஆய்வு செய்யும் ஆய்வாளர்கட்கெல்லாம் அறிவு விளக்காய் விளங்கி ஞான ஒளி தருதலால் ஆய்வபர் தெருளே என்றும் பிள்ளையவர்கள் சேக்கிழாரைச் சிறப்பித்துக் கூறுகின்றார். (செங்கீ:7)

மேலும் சேக்கிழார் பெரியபுராணத்தை அருளிச் செய்து இவ்வுலகில் பிறந்த உயிர்களை யெல்லாம் பிறவியாகிய துன்பக் குழியினின்று எடுக்கும் ஞானாசிரியராக விளங்குவதைப் பிள்ளையவர்கள்

நாடிய விரிநூல் சொற்றிடும் திறனால்
நல் நூல் ஆசிரியன்
நருபாசுரம் முதல் உரை செய்தலினால்
நவில் உரை ஆசிரியன்
நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனை செய்
நிலையால் போதகாசிரியன் இவை
நிகழ்தொறும் நிகழ்தொறும்
ஆடிய ஞானத்திறன் உறலால் ஞான
ஆசிரியனும் நீ என்
சான்றோர் பலரும் புகழப்படுபவ (சப்பாணிப். 9)

என்பார். இதன்வாயிலாகச் சேக்கிழார் சிறப்பும் பெரியபுராணச் சிறப்பும் ஒருங்கே புலனாகும்.

பெரியபுராணப் பொருட்சிறப்பு

பெரியபுராணத்தை நன்கு கற்றுணர்ந்த பிள்ளை அவர்கள் அதன் செய்யுட் சுவையினைக் குறிக்கும் பொழுது பத்திச்சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி வலவ என்பார். மேலும் ஆவின்பால், தேன், சர்க்கரை, கற்கண்டு, மா, பலா வாழைக்கனிகள், முந்திரிப்பழம், தேவாமிர்தம், குழல்இசை, வீணையின் இசை, ஆகியவற்றின் சுவைகள் எல்லாம் கலந்தபோது அச்சுவை எவ்வாறு இனிக்குமோ அவ்வாறும் இனிக்கும் கவிகளை உடையது பெரியபுராணம் என்பார். பெரியபுராணம் பெருங்காப்பியத்திற்குரிய சொல் அழகும், பொருள் அழகும் கட்டி அழங்கல சொல் கூறாது கல்லும் கரையச் செய்யும் கவியைப் பெற்றுள்ளது என்பதைப் பிள்ளையவர்கள் முத்தப்பருவத்தில்,

சொல்லும் பொருளும் நனி சிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டியமைய அமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுந்தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதி தழுவி
விரும்பு மூல இலக்கியமே (முத்தப்.3)

என பெரியபுராணம் அமைந்துள்ளமையும், அதன் சிறப்பையும், ஆய்வு செய்துள்ளார். இவ்வாறாகப் பெரியபுராணத்தை இலக்கிய நோக்கிலும், இலக்கண நோக்கிலும் முதன் முதலில் முழுமையாக ஆய்வு செய்தவர் பிள்ளை அவர்களே எனலாம்.

நுண்பொருள்களை விரித்தல்

மூல ஆசிரியன் நினைந்து பெய்த கவிச் சொற்களுக்கு உரையாசிரியன் புது விளக்கம் எழுதுவதுண்டு. ஆனால் திருவருள் உடைய உரையாசிரியர்களது உரை மூல ஆசிரியரது கருத்தை வெளிப்படுத்தி நுட்பத்தை உணர வைத்து இன்பம் பயக்கும். எனவே உரிய நூல்களில் பெரியோர்கள் அமைத்துள்ள நுண்பொருள்களை அருளாளர்களே உணர்ந்து

உணர்த்துவர்.

சேக்கிழார் அருளிய பெரியபுராணத்துள் அமைந்த நுண்பொருள்களை யெல்லாம் உணர்தற்குப் பெருந்துணையாக இருப்பது மகாவித்துவான் அருளிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஆகும். அதில் சில சான்றுகளை ஈண்டுக் காண்போம்.

பெரியபுராணத்தின் முதற்செய்யுளில் ஈற்றடியில் வரும் "மலர் சிலம்படி" என்பதற்கு சிலர்"மலர் போன்ற திருவடி" எனப் பொருள்(கொண்டனர்)

கொள்ளக்கூடும் என யூகித்து பிள்ளை அவர்கள் அதற்குத் தெளிவை ஏற்படுத்தி சேக்கிழார் கருதிய பொருளை வெளிப்படுத்துகிறார்.

முதற்செய்யுளில் முதலடியின் முதற்சீராகிய உலகெலாம் என்ற சொல்லை ஈற்றடியின் முதல் சீருடன் பொருத்தி "உலகெலாம் மலர்சிலம்படி" எனக்கொண்டு உலகெலாம் மலர்ந்த சிலம்படி, உலகெலாம் மலருகின்ற சிலம்படி, உலகெலாம் மலரும் சிலம்படி என்று வினைத் தொகையாகப் பொருள் கொள்ள அறிவுறுத்தியது சேக்கிழார் நுண்மையாகக் கூறியதைப் பிள்ளையவர்கள் விரித்துள்ளார்.

சிவனடியார்கள் எதற்கும், எவர்க்கும் மெலிந்தவர்கள் அல்லர். அவர்கள் வலிமை மிக்கவர்கள். இதனைப் பெரியபுராணத்தில் பல வரலாற்றில் காணலாம். இதனைப் பிள்ளை அவர்கள் "அடல் சூழ்ந்த தொண்டர் வரலாற்று விரி" எனக் குறிக்கிறார்.

குழந்தைகள் மொழியும் சொற்கள் மழலை மொழிகள். பொருள் விளங்காது. ஆனால் இன்பம் பயக்கும். சேக்கிழாராம் குழந்தையின் மழலை மொழிகள் அவ்வாறு பொருள் பயவா நிலையின்றிப் பொருள் செறிவுடையனவாய் யாவர்க்கும் பயனுறற்குரியனவாய் உள்ளன. அப்படி இருக்க நீர் ஏன் செப்பலுற்ற என்ற செய்யுளைப் பாடினீர்? என்று வினவ முகத்தான் சேக்கிழாரின் மொழிச் சிறப்பை உணர்த்தியதோடு செப்பலுற்ற என்ற செய்யுளின் நுட்பத்தினையும் பிள்ளையவர்கள் விரிக்கிறார்.

பெரியபுராண நாயன்மார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு நெறிகளில் நின்று இறைவனை அடைந்தனர். இந்நான்கு நெறிகளின் பயனாக சாலோகம், சமீபம், சாரூபம், சாயச்சியம் என்ற முத்திநிலைகள் பெறப்படும். இவ்வாறு நூல் வகை நெறிகளையும், நாயன்மார் அடைந்த முத்திநிலைகளையும் சித்தாந்த நோக்கிலே எடுத்து மொழிந்தவர் சேக்கிழார் என்பதைப் பிள்ளையவர்கள்,

அவரவர் செயல் முதல் அருளிய வல்லவ எனக்குறிக்கிறார்.

(செங்கீ. 9)

சேக்கிழார் பிள்ளைத்தமிழை ஊன்றிக் கற்பார்க்கு பிள்ளை அவர்களின் அருட்புலமைத் திறத்தை அறிந்து கொள்ள இயலும். இவ்விலக்கியத்தில் பொதிந்து கிடக்கும் பல்வேறு இலக்கிய இலக்கண, சைவசித்தாந்த, நயங்களை ஆழ்ந்து நோக்கும் பொழுது இவைஅனைத்தும் பெரியபுராணச் சிறப்பையும், சேக்கிழாரின் தெய்வப்புலமையையும் உணர்த்துவதாகவே அமைந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நுண் மாண் நுழைபுலம் போற்றுதற்குரியது.

58. மாந்தநேயர் மகாவித்துவான்

கனிமொழி திருவள்ளுவரடிமை முருகு
சென்னை

நாற்கவியாம் நாற்படையால் அழுக்காற்றக்
கவிகளென நவிக்கு றும்பு
தோற்கவலம் கொண்டவர்பின் துதிக்குறுபாத்
திறைகொண்டு தொல்பார் முற்றும்
கோற்கியலும் புலமையெனும் ஆழியுருட்
டிப்புகழ்வெண் குடைக்கீழ்க் காத்து
மாற்குநிகர் மீனாட்சி சுந்தரனென்
றுரைசெயும்பா மன்னர் கோவே. என்னும்

சதாவதானம் சுப்பிரமணிய ஐயரின் புகழுரைக்கு ஏற்ப, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனக்கு நிகர் தானே 'என்னும் நிலையில் வாழ்ந்து மறைந்தவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

'ஆறுமுகநாவலர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். கவி இயற்றுவதில் வல்லவர் மகாவித்துவான்' எனப் புலவர்களால் பாராட்டப்படுபவர் இவர் எனினும், இவர் சொற்பொழிவாற்றுவதிலும் திறமையுள்ளவராகவே விளங்கினார் என்று கூறுவதில் தவறில்லை.

மகாவித்துவானிடம் பாடங்கேட்டோரே அன்றும் ஏன்? இன்றும் சிறப்புக்குரிய தமிழறிஞர்களாக எண்ணப்படுகிறார்கள். இந்நிலையை உருவாக்கியவர் மகாவித்துவானே. 'இவர் கேட்டதை எல்லாம் பாடியருளினார். கேட்டவர்க்கெல்லாம் பாடஞ்சொன்னார்' என்னும் பெருமைக்கு உரிய பெருமகனார்.

இவரால் பாடப்பெற்ற தலங்கள் தேவார ஆசிரியர்களால் பாடப்பெற்ற புகழுக்குரியனவாக கருதப்பட்டன.

நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது (குறள்:235) என்னும்

குறட்பாவை மெய்பித்த-மெய்ப்பிக்கும் வித்தகர் மகாவித்துவான்.

பொறுமை, கிடைத்ததைக் கொண்டு நிறைவடைதல், தன்னை வியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, மனமுவந்து பிறரைப் பாராட்டுதல், புறங்கூறாமை, இரக்கம், நன்றி மறவாமை, தம்கொள்கையில் ஆறாப்பற்று, மாணாக்கர்களை அரவணைத்தல், மாந்தர் உள்ளிட்ட அனைத்துயிரிடத்தும் அன்பு செலுத்துதல் போன்ற மாந்தநேயக் குணங்களின் உருவமாய்த் திகழ்ந்த மகாவித்துவான் மாந்த நேயமிக்க மாமனிதர் என்பதைக் கூறுவதே இக்கட்டுரை.

தமிழ்ப்பற்றுமிக்க எளிய குடும்பத்தில் பிறந்த இவர். தமிழ்ப்பசி மிக்கவராக விளங்கினார். தன் தமிழ் அறிவைப் பெருக்க எங்கெல்லாம் போக வேண்டுமோ அங்கெல்லாம் சென்றார். எவர் எவரிடம் பாடங்கேட்க வேண்டுமோ அவர்களை எல்லாம் அணுகி, பணிந்து பாடங்கேட்டார். இளம் வயது முதற்கொண்டே கவி பாடினார். நினைத்தபோதே கவிபாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தார்.

மகாவித்துவான் தமிழை நன்றாக அறிவதற்குப் பலபேரிடம் சென்றார். ஆனால், இவரிடம் தமிழ் கற்க வந்தவர்களோ இவர் ஒருவரிடம் மட்டுமே தமிழை நன்கறிந்தனர். இவர்காலத்தில் இவர் ஒருவரே தமிழுக்காக அரசர்க்கும், மடாதிபதிகளுக்கும் மேலானவராகக் கருதப்பட்டார் என்று கூறினால் அது ஒன்றும் மிகையாகாது.

மகாவித்துவானும் மாணவர்களும்

இவரிடம் பாடங்கேட்டோரே அக்காலத்தில் தமிழறிஞர்கள் என மதிக்கப்பட்டனர். தியாகராஜ செட்டியார், உ.வே.சா போன்ற எண்ணற்றவர்கள் இவரின் மாணாக்கர்களே.

அக்காலத்தில் மாணக்கர்கள் (சிஷ்யர்) என்போர் அடிமைகளாக நடத்தப்பட்டனர். ஆசிரியர் என்போர் பாடம் சொல்லித்தருகின்ற ஒரே காரணத்தால் அவருக்கும் அவர் வீட்டுக்குமுரிய எல்லா வேலைகளையும் மாணாக்கர்களே செய்யவேண்டும் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மாணாக்கர் நிலையறிந்து அவர்களுக்கு ஆசிரியர்கள் உதவமாட்டார்கள். இந்த நிலைக்கு மாறாக, மகாவித்துவான் மாணாக்கர்களுக்கு வசதிகளைத் தேடிக் கொடுப்பதில் முதன்மை பெற்று விளங்கினார். மாணாக்கர்கள் தங்குதற்குரிய வசதியுள்ள இடங்களையே இவர்தான் தங்குவதற்கு தேர்ந்தெடுத்தார். சிலபோது மாணாக்கர்களை வண்டியில் அனுப்பி விட்டு இவர் நடந்தும் போவார் என்று உ.வே.சா அவர்கள் எழுதியுள்ளார்.

இவரிடம் பயின்ற ஒரு மாணாக்கர் தன் மனைவியின் நினைவால் வாடுவதை இவராகவே அறிந்து, அவருக்குத் தெரியாமலேயே அவரின் குடும்பத்தாரை வர வழைத்து, அவர்கள் தங்குவதற்குரிய வசதிகளைச் செய்து கொடுத்து அந்த மாணாக்கரையே வியப்பில் ஆழ்த்தினார் என்பது மறக்கமுடியாத செய்தி தம் மாணாக்கர் சாமிநாத தேசிகருக்கு தனக்கு வந்த திருவாங்கூர் சமஸ்தான புலவர் பதவியை அளித்து, பெருமைபடுத்தினார். பணத்துக்காகவே பாடம் சொல்லிக் கொடுத்தல் என்ற நிலையை மாற்றி, பணமில்லாவர்க்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார். தனக்கு வந்த பொருளை எல்லாம் தனக்கே என வைத்துக்கொள்ளாமல் தம் மாணாக்கர்கட்கும் பகிர்ந்தளித்து

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ' என்னும் குறட்பாவுக்கு இலக்கணமாய்த்திகழ்ந்தார்.

சாதிமத பேதமில்லை

மகாவித்துவான் பழுத்த சைவர். இவர் சைவ நெறிதழைக்கவே உழைக்க வேண்டும் என்பது இவரை அணுகியிருந்தோர். அரவணைப்பு தந்தோர் அத்துணைபேர்களின் விருப்பம். ஆனால் மகாவித்துவானோ மனித நேயமிக்கவராக சாதி, மத, பேதமின்றி அனைவருக்கும் பாடம் சொன்னார்.

திருக்குறளையும், தேவாரங்களையும் கற்பிப்பது போன்றே திருக்குர்ஆனை விளக்கும் சிறாப்புராணத்தை குலாம் காதருக்கு கற்பித்து அவரைப் பாவலராக்கினார். திருமூலரையும் திருத்தொண்டர் புராணத்தையும் கற்பிப்பது போன்றே திருமறை எனப்படும் விவிலியத்தை விளக்கும் பெஸ்கியின் தேம்பாவணியை சவரிராயலு நாயகருக்குக் கற்பித்து அவரை தமிழறிஞராக்கினார். இந்துக்களிலும் உள்ள பல சாதியினருக்கும் பாடம் சொன்னார். கண்ட தேவிபுராணம் பாடச் சென்றபோது தேவிப்பட்டிணம் அருகே இருந்த சிற்றூரில் வாழ்ந்த, ஏழைப்பிராமணனுக்கு உதவி செய்ததோடு அவனுக்கும் பாடம் சொன்னார். சுருக்கமாகக் கூறின், இவரிடம் பாடம் கேட்க எவர் வந்தாலும் அவரின் குலம் கோத்திரம், சாதி, மதம், பாராது தமிழைச் சொல்லிக் கொடுத்தார். தனக்குவரும் பாலிலும் பாதியை மாணாக்கர்கட்கு அளித்து மகிழ்ந்தார்.

வேலைக்காரரிடம் பரிவு

தம்மிடம் வேலைபார்ப்போரை இழிவாகக்கருதும் மனப்பான்மை அற்ற மகாவித்துவான் அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளையும் செய்யத் தயங்கியதில்லை. இவரிடம் தவசிப்பிள்ளையாக இருந்த ஒருவருக்கு வீடுகட்டிக் கொள்ள உதவி செய்து அவருக்கு வசதிகளை செய்து தந்தவர் மகாவித்துவான். இதுபோன்று பலருக்கும் பல உதவிகளை அவர் செய்துள்ளார்.

அன்பில் பிறரைக் கவருவதில் வல்லவர்

உலகிலேயே சிறந்த படைக்கருவி அன்பு' என்பார். 'படைக்கலன்கள் சாதிக்க முடியாததை அன்பு சாதிக்கும்' என்பார் நெப்போலியன் 'அன்பே சிவம்' என்றும், 'அன்பே கடவுள்' என்றும் மதவாதிகள் கூறுவர். இந்த அன்பைப் பொழிவதில் மகாவித்துவான் ஒரு மகாவித்துவானாக விளங்கினார்.

தஞ்சை மாவட்டப் பெரிய அதிகாரியாகப் பதவிக்கு வந்த ரெங்கசாமிபிள்ளை என்பார் நேர்மை மிக்கவர். எங்கும்தனியார் நிகழ்ச்சிகளுக்குச் செல்லாத பண்பாளர். தமிழிடத்துப் பற்றுள்ள இந்த ரெங்கசாமிப் பிள்ளையைச் சிறப்பிக்க மகாவித்துவான் அரவணைத்த திருவாவடுதுறை மடம் விரும்பியது. இதன்மூலம் மடத்துக் காரியங்களில் தடை ஏற்படாதிருக்கும் என நம்பியது. ஆனால் அவரை அங்கு வரவழைப்பது எப்படி? அவரை அழைக்க மகாவித்துவான் ஏவப்பட்டார். அவர் தம் நண்பர் ஒருவர் மூலம் அந்த அதிகாரியுடன் தொடர்பு கொண்டு தம் தமிழறிவால் அவரைத் தஃபக்கம் ஈர்த்து, அவரிடம் அன்பு பாராட்டி அவரை மடத்து நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பெறச் செய்தார். இது அவரின்

ஆளுமையையும் காட்டுகிறது. இவர் காலத்தில் வாழ்ந்த புலவர்களும் புரவலர்களும் இவரின் அன்புக்கும் தமிழறிவுக்கும் கட்டுப்பட்டனர்.

பொறுத்தருளும் பெருந்தன்மை

தமிழறிஞர் பலரும் தனக்கு நிகர் தானே என எண்ணுபவர்கள். தன்னை யாராவது குறைத்துப் பேசினால் மல்லுக்குச் செல்லும் பழக்கத்தினர் ஆறுமுகநாவலரும், வடலூர் வள்ளலாருமே இதனால் வழக்குமன்றம் வரையில் சென்றவர்கள் என்பதை நாமறிவோம். இந்த நிலைக்கு மாறாக மகாவித்துவான் தன்னைப் பழித்தவர்களையும், தனக்குக் கேடு செய்ய முயன்றோரையும் மன்னித்தருளும் மாண்புடையவராக விளங்கினார் என்றால் அது பலருக்கு வியப்பாகத் தோன்றும்;ஆனால் உண்மை.

இவரின் புராணப் பிரசங்கம் சிறப்பாக நடைபெற தான்தான் காரணம் என எண்ணி இறுமாப்புடன் நடந்த வட்டாட்சியர் சிவகுருநாதம் பிள்ளையை இவர் மன்னித்தருளினார்.

இவரிடம் இருந்த இருவரே இவர்பற்றி இல்லாததும் பொல்லாததுமாக வேதநாயகம் பிள்ளையிடம் கூற, அவர் சினந்து இவரின் கூட்டத்துக்கோ தம்மிடமோ வரக்கூடாது என உத்தரவிட, இது அறிந்த மகாவித்துவான் அவர்களை மன்னித்து விடும்படி வேதநாயகம் பிள்ளையிடம் மன்றாடி வெற்றி பெற்றார்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமையும் நனிநாதரிகராக' விளங்கினார். இது அவரின் மாந்த நேயத்தை எடுத்துக்காட்டும் மகுடமான நிகழ்ச்சி எனலாம்.

பெரியபுராண பிரசங்கத்தை திருச்சியில் நடத்தியபோது இவருக்கு அரவணைப்புத் தந்து கொண்டிருந்த செல்வரை இவரின் பகைவர்கள் ஏதேதோ சொல்லி மயக்கத்தை உண்டு பண்ணினர். இப்புராணப் பிரசங்கத்தால் அச்செல்வருக்குக் கேடுவரும் எனக் கோள் மூட்டினார். இதனால் அச்செல்வர் மனமுடைந்து பிரசங்கத்துக்கு வரவில்லை. உண்மையறிந்த மகாவித்துவான் அச்செல்வர் மனமகிழ தனது பிரசங்கத்தையே நிறுத்தி அவரை மகிழ்வித்தார். அப்படி இன்னும் பலவகைகளில் மகாவித்துவான் தான் ஒரு 'முழு மனிதன்' என்பதை தன் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் வெளிக்காட்டினார்.

பாடல்களில் மாந்த நேயம்

பொருளுக்காக பாடுவதே புலவர் தொழிலாக இருந்தது. ஆனால் இவர் பொருளுக்காகப் பாடியதில்லை. ஆயினும் இவருக்குப் பொருள் வந்து கொண்டே இருந்தது. நந்தன் கீர்த்தனையை இவர் மதித்து மதிப்புரை வழங்கவே பல காலம் அதன் ஆசிரியர் தவங்கிடக்க நேர்ந்தது. உண்மையான சிறந்த கவிகளையே இவர் போற்றினார். நல்ல புலமையில்லாத எதையும் எவரையும் இவர் புகழ்ந்ததே இல்லை. அப்படிப்பட்ட சிறந்த புலவராகிய மகாவித்துவான் தான் இயற்றிய பாடல்களிலும் மாந்த நேயத்தை வலியுறுத்தினார் என்பது புதிய

செய்தியல்ல.

இவர் இயற்றியுள்ள எல்லா நூல்களிலும் மாந்த நேயம் வெளிப்படும் எனினும் யாமறிந்த ஒன்றிரண்டை மட்டும் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

திருத்தவத்துறை என்னும் இலால்குடியில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு பெருந்திருவாட்டி அம்மையைப் பற்றிய பிள்ளைத்தமிழில் இவர் தனது மாந்த நேயத்தை முழுமையாகக் காட்டியுள்ளார்.

அவர் பாடிய பாடல்களுள் மிகச் சிறந்த ஒரு பாடலாக இது கருதப்படுகிறது. அப்பாடல்:

மறைமுதல் பலகலைகள் வாழஅந் தணர்வாழ
மாமகத் தழலும்வாழ
மன்னுமான் நிரைவாழ மழைபொழியும் முகில்வாழ
மற்றுமெவ் வுயிரும்வாழ
நிறைதரும் பெரும்புகழ் விளங்கும் சைவம்வாழ
நீடுவை திகம்வாழ
நெக்குருகி நின்னப்பர் துதிசெய்த சொற்பொருள்
நிலவுபா மாலைவாழ
இறையவர் அழைத்துவாழ வித்தவர் திருப்புகழும்
எஞ்ஞான்றும் நன்குவாழ
யார்க்கும் இனிதாம்பெருன் திருவென்று நின்பெயர்
இலங்கி நனி வாழஉலகில்
பொறையருள் தவந் தானம் வாழவெம் பெருமாட்டி
பொன்னூஞ்சல் ஆடியருளே!
பொன்னகர நிகரான தென்னளகை நகர்மாது
பொன்னூஞ்சல் ஆடியருளே!

மேற்காணும் பாட்டில் அவர் வேண்டுவன யாவும் எல்லா மாந்தர்க்கும் கட்டாயம் தேவையானவையே. இவையாவும் மாந்தர்க்குக் கிட்ட வேண்டும் என வேண்டுகிறாரேயன்றி தனக்குக் கிடைக்க வேண்டும் என வேண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அவர் குறிப்பிடும் சைவம் வாழ என்பது அவர்தம் மதத்தைக் குறிக்காதா? என வினவலாம். இந்தத் தொடர் அவர் மதத்தைச் சுட்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்கு வேறு பொருள் கொள்ளலாமே' சைவம் எனில் உயிரைக் கொல்லாமை; ஊனைத் தின்னாமைதானே அந்தவகையில் இப்பாட்டுக்குப் பொருள் கொண்டால் அத்தொடரும் அவர் மதத்தைக் குறிப்பிடாதன்றோ?

வைதிகம் வாழ்கவென்பது இந்துமதத்தைக் குறிப்பிடாதா எனலாம். வைதிகம் என்பது ஆசார அனுஷ்டானங்கள். எல்லாமதங்களிலும் வைதிகக் கொள்கை உண்டு. வைதிகம் என்பது சற்று மூடத்தனம் உள்ளதாக இருந்தாலும் நல்ல நடத்தைகளைக் கொண்டதே, இது ஒரு மதமல்ல. இப்பாடலில் உலகில் பொறுமை, அன்பு, அருள், தவம், தானம் நிலவ

அருள்புரியுமாறு இறைவியை வேண்டுகிறார் மகாவித்துவான். இவையாவும் எல்லா உயிர்க்கும் தேவையன்றோ? இப்பாடல் ஒன்றே இவரின் மனிதத்தன்னையை எடுத்துக்காட்டும் சிறந்த பாடல் எனலாம். இது போன்ற ஒரு பாடலை அவரின் வேறெந்த நூலிலும் காணமுடியவில்லை என வியந்து கூறுகிறார் அறிஞர் உ.வே.சா.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பதிற்றுப்பத்தில், காமம், வெகுளி, மயக்கம், மும்மதம், மாசுள்ள மனம் என்னும் யாவும் இல்லாத நன்னிலையில் தான் வாழ அருள்புரியுமாறு குமரனை வேண்டுகிறார்.

மாசற்ற மனமே மாந்த நேயத்துக்கு அடிப்படை, 'மனத்துக் கண் மாசில னாதல் அனைத்தறன்' என்று திருவள்ளுவரும் செப்பியுள்ளார். அறவழி வாழ்வோர் அன்பின் திருவுருவாய், அருளின் பெருங்கடலாய், அனைத்துயிரிகளையும் காக்கும் நற்குணக் குன்றாய் விளங்குவார். கவிகள் தங்கள் உள்ளத்தை வெளிப்படுத்துவதே கவிதைகள் என்பர். மகாவித்துவான் கவிதைகள் யாவும் அவரின் உள்ளத்தின் வெளிப்பாடே என்பதால் அவர் கவிதைகளில் காணப்படும் மாந்த நேயக்காட்சிகள் யாவும் அவரின் மாந்த நேயத்தைக் காட்டுவனவே.

சோகங்கள் உற்றஉயிர்த் துன்பகல வேணியிடை
மேகங் களைத்தாங்கும் வித்தகனே - போகங்கள்
பாலித் தருளும் பரமனே கார்மழையை
ஆலித்துப் பெய்ய அருள்.

இது இவர்பாடிய தனிப்பாடல்களில் ஒன்று. இதிலும் அவர் தனது மாந்தநேயத்தை வெளிப்படுத்தியுள்ளார். உயிர்களின் சோகங்களும், துன்பங்களும் அகல, மழை பெய்வித்தருள்வாய் எனப் பரமனை வேண்டுகிறார். பரமன் என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தின் இறைவனைக் குறிக்காது. இப்பெயர் கடவுளைக் குறிப்பிடும் பொதுப் பெயர்;சாதி, மதம், இனம், பாராது எல்லாரும் வாழவேண்டுவதும், எம்மதத்தின் கடவுள் பெயரையும் குறிப்பிடாது கடவுளைப் பொதுப் பெயரால் குறிப்பிடுவதும் இவரின் மாந்த நேயத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

குருபூசை மான்மியத்தில்

இன்னவடி வயர்வயிற்றுப் பசிதீர அனம்படைத்தல் இன்னன் மேனி
மன்னவரு பிணியகல மருந்துதவல் குளிர்க்காடை வாங்கி நல்கல்
சொன்னமுதல் யாதானும் வேண்டியவை மனமகிழ்ச்சி தூங்க நல்கல்
நன்னரிடங் கொடுத்தலிவை முதற்பலவும் பூசையென நவில்வர் நல்லோர்,

என்கிறார்.

இப்பாடல் பூசைக்கு விளக்கமாக அமைந்துள்ளது. இவர் இப்பாட்டில் கூறும் பூசை முறைகளை எத்தனைபேர் கடைப்பிடிக்கிறார்கள் என்பது வேறு, இக்கவிதையின் கருத்தா எப்படிப்பட்ட உள்ளத்தினர் என்பதே இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது.

அற்றார் அழி பசி தீர்த்தல்
என்னும் குறளுக்கேற்ப பசி தீர்த்தலும்

உற்றநோய் நோன்றல்
என்பதற்கேற்ப பிணியகற்றலும் ஆடை நலங்களும் மனமகிச்சியோடு தாங்கச் செய்தலும் என்னும் மாந்தநேயச் செயல்களே பூசைகளாகும் என்று பூசை செய்யாமல் புசிப்பதறியாத புலவரேறு மகாவித்துவான் கூறுகிறார். இது இவரின் மாந்த நேயத்துக்கு நல்ல எடுத்துக்காட்டல்லவா?

தன் தவசிப்பிள்ளை சாமிநாத செட்டியாருக்கு வீடில்லா நிலையைப் போக்க ஒரு செல்வந்தருக்கு எழுதிய கடிதத்தில் 'ஒப்புரவை' வலியுறுத்துகிறார். ஒப்புரவு என்பது எல்லாருக்கும் எல்லாமாகக் கிடைக்கும் சமவாய்ப்பு உயர்வு தாழ்விலா நிலை, இந்நிலையை இவ்வுலகு அடைந்து விட்டால் எல்லாரும் இன்புற்று வாழ்வர் அன்றோ? இதுவும் அவரின் மாந்தநேயத்தைக் காட்டுவதே.

இவர் இயற்றியுள்ள எல்லா நூல்களிலும் மாந்தநேயத்தை வலியுறுத்தும் முழுப்பாடல்கள் இல்லை என்றாலும் பல சொற்றொடர்களைக் காணலாம்.

'அனைவரின் பிழைகளும் பொறுத்தருள வேண்டும் என்பதை' அளவறு பிழைகள் பொறுத்தருள்' என திருவானைக்கா புராணத்திலும், 'இடையறா அன்பு பெருக்கி அருளுடையவராக விளங்க அருள் செய்ய வேண்டும்' என அகிலாண்ட நாயகிமாலையிலும் அவர் குறிப்பிட்டுள்ளதை இங்கே எடுத்துக் காட்டாக வைக்கலாம்.

இப்படிக்கூறிக்கொண்டே போனால் இதுவே ஒரு நூலாக விரியும் என அஞ்சி விடுக்கிறோம்.

இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் எனினும் ஏற்றமிகு மடாதிபதி போல் வாழ்ந்தவர்; புலவர் என்றால் வறுமையில் வாடுபவர் என்னும் கருத்தைப் பொய்ப்பித்தவர் தனக்கு வந்த பொருளை பங்கிட்டு அளித்த வள்ளல்; தன்னை அண்டியோர்க்கு அவரவர் விரும்பியதை அளித்த அறவாளர்; தன்பெண்டு, தன்பிள்ளை, தன்சுற்றம் என்போருக்குச் சேமித்து வைக்காத ஒப்புரவாளர். "தமிழ்மகளின் திருவழகைக் காவியங்களாகிய ஓவியங்களில் அமைத்து மகிழ்ந்த வித்தகர். மாணாக்கர்களின் மனமாகிய நிலத்தில் அன்பு நீர்ப்பாய்சித் தமிழாகிய வித்திட்டு தமிழ்ப்பெரும்பயிரை வளர்த்த சொல்லேருழவர். காலம், இடம், நிகழ்ச்சி என்பவற்றால் வரும் துன்பங்களால் சோர்வுறா மாவீரர். மானமும் பெருமையும் குறையாமல் நின்ற குணமலை மகாவித்துவான்" எனும் அவரின் மாணாக்கர் மகாவித்துவான் உ.வே.சாமிநாதைய்யர் புகழுரையோடு 'சாதி, மதம், இனங்கடந்த மாந்தநேயர் மகாவித்துவான்' என்னும் தொடரையும் சேர்த்துக்கூறுவதே சிறப்புக்குரியது. இது வெறும் புகழ்ச்சியில்லை; முற்றிலும் உண்மையானது.

59. சேக்கிழார் பிள்ளைத்தமிழும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும்

க.துரையரசன்
கும்பகோணம்

புலவர்கள் தாங்கள் விரும்பும் தெய்வங்களையோ அரசர்களையோ, வள்ளல்களையோ, பண்பு நலன்களால் உயர்ந்து விளங்கும் பெரியோர்களையோ குழந்தையாக எண்ணிப் புனைவது பிள்ளைத்தமிழ் ஆகும். இவ்விலக்கியத்திற்குப் பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்ற வேறு பெயர்களும் உண்டு. இவண், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழும் குமரகுருபர சுவாமிகள் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகிறது. முழுமையாக ஒப்பிடின் விரியும் என்றஞ்சி அம்புலிப் பருவம் மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஒப்பிடக்காரணம்

இப்பிள்ளைத்தமிழ் நூல்களை ஒப்பிடுவதற்குக் காரணம் இப்புலவர் பெருமக்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூல்களுள் இவ்விரண்டுமே தலைசிறந்தவை ஆகும். மேலும் அம்புலிப் பருவமே பிள்ளைத்தமிழ்ப் பருவங்களுள் பீடுமிக்கது என்பதாலும் புலவர்களுக்கு வெண்பாப் புலியாவது போலப் பிள்ளைக்கவியுள் அம்புலி புலியாகப் பேசப்படும் என்பதாலும் இவ்விரு புலவர்களுமே புலியெனும் கிலியின்றி எழுதி உள்ளனர் என்பதாலும் அம்புலிப் பருவம் ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்படுகிறது.

இரு பெரும் புலவர்கள்

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் எட்டுப் பிள்ளைத் தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். அவையாவன: உமையம்மை மேல் ஐந்தும், முருகன் மேல் ஒன்றும், சேக்கிழார்மேல் ஒன்றும், அம்பலவாண தேசிகர் மேல் ஒன்றும் ஆகும். இவற்றுள் பெண்பால் பிள்ளைத் தமிழாக ஐந்தும் ஆண்பால் பிள்ளைத் தமிழாக மூன்றும் அமைந்துள்ளன. பாடுபொருள் அடிப்படையில் நோக்கின் தெய்வம் பற்றியவை ஆறு; மக்கள் பற்றியவை இரண்டு ஆகும். இவற்றுள் சேக்கிழார் பிள்ளைத்தமிழே சிறப்புடைத்து என்பர்.

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் இரண்டு பிள்ளைத் தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். அவை: மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ். முன்னது பெண் பால் பிள்ளைத் தமிழ்; தெய்வம் பற்றியது. பின்னது ஆண்பால் பிள்ளைத்தமிழ்; மக்கள் பற்றியது. இவை இரண்டனுள்

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழே சிறப்புடைத்து என்பர்.

அமைப்பு முறை

பிள்ளைத் தமிழ் நூல்களில் பத்துப் பருவங்கள் அமைந்திருக்கும். பருவத்துக்குப் பத்துப்பாடல்கள் வீதம் நூறு பாடல்களைக் கொண்டு திகழும். கடவுள் வணக்கமாக ஒரு பாடல் இருக்கும். ஆதலால் கடவுள் வணக்கப் பாடலையும் சேர்த்து 101 பாடல்களைக் கொண்டு பிள்ளைத்தமிழ் நூல்கள் விளங்கும்.

இவ்விரண்டு பிள்ளைத் தமிழ் நூல்களிலும் காப்புப் பருவத்தில் 11 பாடல்கள் உள்ளன. எனைய 9 பருவங்களிலும் 10 பாடல்கள் வீதம் 90 பாடல்கள் உள்ளன. கடவுள் வணக்கமாக ஒரு பாடல் உள்ளது. ஆக 102 பாடல்கள். ஆனால் சேக்கிழார் பிள்ளைத் தமிழில் மட்டும் குரு வணக்கமும் அவையடக்கமுமாக ஒரு பாடல் உள்ளது. ஆகவே சேக்கிழார் பிள்ளைத் தமிழில் 103 பாடல்கள் உள்ளன. ஆனால் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் 102 பாடல்கள் உள்ளன.

காப்பில் புதுமையும் பழமையும்

பிள்ளைத் தமிழ் தலைவனையோ அல்லது தலைவியையோ காப்புக் கடவுளர்கள் காத்து அருள்புரியவேண்டும் எனப்பாடுவது மரபு ஆகும். இம்மரபு முறை மீறாமல் குமரகுருபரர் மீனாட்சியம்மையைத் திருமால், சிவபெருமான், சித்திவிநாயகக் கடவுள், முருகக் கடவுள், பிரம தேவர், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சத்தமாதர்கள், முப்பத்துமூவர் ஆகியக் கடவுளர் காத்து அருள்செய்தல் வேண்டும் என்று வேண்டி காப்புப் பருவத்தை அமைத்துள்ளார்.

ஆனால் மகாவித்துவான் காப்பு பருவத்தில் ஒரு புதுமையைச் செய்துள்ளார். தாம் எடுத்துக்கொண்ட பாடுபொருளுக்கு ஏற்ப காப்புக் கடவுளர்களாக நாயன்மார்களை அமைத்துப் பாடியுள்ளார். மேலும் திருத்தொண்டத் தொகை செய்யுள் அமைந்துள்ள வரிசை முறைப்படியே காப்புக் கடவுளர்களையும் வரிசைப் படுத்தியுள்ளார் மகாவித்துவான். இது இப்பெருமகனார் செய்த புதுமையாகும்.

அம்புலிப் பருவம்

பிள்ளைத் தமிழின் தலைவன் அல்லது தலைவியோடு விளையாட வருமாறு அம்புலியை அழைக்கும் வகையில் பாடல்கள் அமைந்திருக்கும். சாம, பேத, தான, தண்ட உபாயங்களின் மூலம் புலவர்கள் அம்புலியை அழைப்பது மரபாகும்.

மகாவித்துவான் சாமம் (1,2. பாடல்கள்), பேதம் (3,4.5,6)தானம் (7,8,9,) தண்டம்(10) என்ற வரிசை முறைப்படிப் பாடியுள்ளார். ஆனால் குமரகுருபரர் சாமம்(1.2.3) தானம் (4,5,6) பேதம்(7,8,) தண்டம்(9,10) என்ற முறையில் அமைத்துள்ளார். இவ்விரண்டு முறையமைப்பினுள் மகாவித்துவானின் அமைப்பு முறையே சிறப்புடைத்தாகும். எனெனில், பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவிக்கும் அம்புலிக்கும் உள்ள ஒற்றுமையைக் கூறி

அம்புலியைப் புலவர்கள் முதற்கண் அழைப்பர். அங்ஙனம் அழைத்தும் வராத அம்புலியை வேற்றுமை காட்டி அழைப்பர். அதன்பின்பும் அம்புலி வரவில்லை. எனவே, நீ அம்புலியாட வந்தால் உனக்குத் தானமாக இவை இவை கிடைக்கும் என்று ஆசை காட்டி அழைப்பது வழக்கம். இப்பொழுதும் அம்புலி வரவில்லை. இறுதியில் அம்புலியை அச்சுறுத்தும் வகையில் நீ விளையாட வரவில்லையாயின் உனக்கு துன்பங்களும் இடர்களும் ஏற்படும் என்று கவி புனைவர் புலவர்கள். இம்முறைப்படி அம்புலிப்பருவம் பாடப்படுவதே மரபும் சிறப்பும் உடையதாகும். ஆகவே, இம்முறைப்படி அமைந்துள்ளதால் மகாவித்துவானின் அம்புலிப் பருவம் சிறப்புடையது எனலாம்.

சாமம்

மகாவித்துவான் அம்புலிக்கும் சேக்கிழார் பெருமானுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கூறி அம்புலியைச் சேக்கிழாரோடு விளையாட வருமாறு அழைக்கிறார்.

அம்புலியே! நீயும் மதியோன். சேக்கிழார் பெருமானும் தெய்வக் கவிபாடும் மதியோன். நீ 16 கலைகளில் வல்லவன். எம்பெருமான் நாற்கலைகளில் வல்லவராகத் திகழ்கிறார். நீ சிவபெருமானின் தலையில் சூடப்பட்டு அவனை அடைந்துள்ளாய். ஆனால் சேக்கிழார் அன்பால் தொண்டு புரிந்தமையால் சிவபெருமானை அடைந்துள்ளார். நீயும் சாந்தம் என்னும் அமைதியை உடையை. எம்பெருமானும் சாந்தமே உருவானவர். உன் கதிர்களைக் கண்டு தாமரை மலர்கள் தம் இதழ்களைக் குவிக்கும். ஆனால் தாமரை மலர்களே கூட தோற்றுக் குவியத்தக்கக் கைகளை உடையவர் சேக்கிழார். சிவபெருமானின் திருமுடியில் இருப்பதால் கங்கையோடு தொடர்புடை நீ. எம்பெருமானும் கங்கையோடு தொடர்புடைய வேளாண் குடியில் பிறந்தவர். நீ தண்ணொளி வீசி பயிர் வகைகளைக் காக்கிறாய். எம்பெருமான் தாம் விளைவிக்கும் உணவுப் பொருள்களால் உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் காக்கிறார்.

இங்ஙனம் இருவரும் ஒன்றுபட்டு விளங்குவதால் சேக்கிழாரோடு அம்புலியாட வா என்று மகாவித்துவான் நயம்பட அழைக்கிறார்.

குமரகுருபரர் அம்புலிக்கும் அம்மை மீனாட்சிக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கூறி அம்புலியைப் பின்வருமாறு அழைக்கிறார்.

அம்புலியே!நீயும் கலாநிதி, அம்மையும் கலாநிதி, நி 16 கலை வேறுபாடு உடையவன். அம்மையும் 64 கலை வேறுபாடுகளைக் கொண்டவள். எனவே இருவரும் கலைகளின் உறையுளாகத் திகழ்கின்றீர்கள். நீ பாண்டியர் குல முதல்வன். அம்மையும் அக்குலத்தின் வழி வந்தவள். நீ சிவபெருமானின் சடைமுடியில் ஒளி பெற்றுத் திகழ்கின்றாய். அம்மையும் சிவபெருமானின் இடப்பாகத்தில் சரிபாதியாகத் திகழ்கின்றாள். நீ திருமகளுடன் பிறந்தனை. அம்மையோ திருமகளை ஆருயிர்ப் பாங்கியாகக் கொண்டவள் என்று ஒப்புமைக் கூறுகிறார் சுவாமிகள்.

இங்ஙனம் இருவருமே கலைகளின் உறைவிடம், கங்கையோடு கொண்டுள்ள தொடர்பு ஆகியவற்றையும் ஒன்று போலக் கூறி அம்புலியை விளையாட அழைப்பது கண்டு உணரத்தக்கது.

பேதம்

இருபெரும் புலவர்களும் சேக்கிழாரோடும் மீனாட்சி அம்மையோடும் அம்புலிக்கு உள்ள ஒற்றுமையை எடுத்துக்கூறியும் அம்புலி அசைந்து கொடுக்கவில்லை. எனவே, வேற்றுமையை எடுத்துக் கூறி அம்புலியை விளையாட அழைக்கும் திறம் குறித்து காண்போம்.

அம்புலியே! நீ பிறரிடம் யாசிப்பவன். ஞாயிற்றை யாசித்து ஒளி பெறுகிறாய். ஆனால் சேக்கிழார் பெருமான் பெருஞ்செல்வர். நீ இரவிற்கு உரியவன். ஆதலால் நீ அல்லோன். எம்பெருமானோ நல்லோன்.

நீ கடக ராசியை விரும்பிச் சென்று வீடாகக்கொண்டு தங்குவாய். ஆதலால் கள்வனை என்றும் உவப்பவன் என்ற கெட்ட பெயர் உனக்கு உண்டு. சேக்கிழாரோ கள்வனை எஞ்ஞான்றும் வெறுப்பவர்.

இத்தகைய குறைபாடுகள் உன்னிடம் உள்ளமையால்தான் சிவபெருமான் உன்னைப் பாதியாகத் தன் திருமுடியில் கொண்டார். ஆனால் சேக்கிழார் பெருமான் உன்னிடத்து உள்ள குறைபாடுகள் ஏதுமின்றித் திகழ்வதோடு மட்டுமல்லாமல் பல நிறைகுணங்களையும் பெற்று விளங்குவதால் அவருக்குச் சிவபெருமான் அருள்பாலித்து முழுமையாகக் கொண்டார்.

நீ வானவர் குரவனான வியாழனிடம் நிக்கிரகம் (தள்ளுதல்) பெற்றவன். பரம சற்குரவராகிய சிவபெருமானிடம் முழுவதும் அநுக்கிரகம் (அருளல்) பெற்றவர் சேக்கிழார்.

வெண்மை நிறமும் அறிவு முதிராமையும் கொண்ட உன்னை வெண்மை மதியோன் என்று உலகத்தவர் அழைப்பர். ஆனால் சேக்கிழார் சிவப்பு நிறமும் நேர்மையும் உடையவர் என்பதால் அவரைச் செம்மை மதியர் என்று அழைப்பர்.

நீயோ ஒரு முறை தேய்கிறாய்; ஒரு முறை வளர்கிறாய்; ஒரு முறை இல்லாமலே போகிறாய் மொத்தத்தில் நீ நிலையற்றத் தன்மை உடையவன். ஆனால் இவரோ நிலைத்தத் தன்மை கொண்டவர் ஆவார்.

உன் வாழ்வு பிறை தொழுதல் அல்லது எருவிட்டு இறைஞ்சுதல் என்ற முறை மூலம் நிகழ்கிறது. 'ஏரினும் நன்றாம் எருவிடுதல்' என்ற முறை வேளாண்மை மேற்கொண்ட எம் செல்வமகனார் பயிர்த்தொழிலில் முயன்று கண்ட முறை ஆகும். இம்முறைப்பட எம்பிரானின் வாழ்வு சிறந்து விளங்குகிறது. இங்ஙனம் பேதம் காட்டி அம்புலியை அழைக்கிறார். மகாவித்துவான்

குமரகுருபரர் பேதம் கூறி அம்புலியைப் பின்வருமாறு அழைக்கிறார்.

அம்புலியே! தேவரெல்லாம் உன்னைப் பிழிந்து எடுத்துக் குடித்து உமிழ்ந்த கோது, நீ. இராகு, கேதுக்கள் உண்டு உமிழ்ந்த எச்சில் நீ. நீங்காத களங்கம் உடையை நீ. நாளுக்கு நாள் தேய்கின்ற உடலுருக்கு நோய் உடையவன் நீ. பிறை நிலவாய் இருக்கும்போது வாள்நுதல் வனப்பை வெளவ வந்தாய். முழு நிலவாய் இருக்கும்போது முக அழகைக் கவர்ந்தோடி விட்டாய். இவளுக்கு மாற்றாள் கங்கை. அவளுக்குத் துணையாகக் கணவர் சிவபெருமானின் திருமுடியில் அமர்ந்தாய். விநாயகர்த் திருநாளில் உன்னைக் காண்பதும் பாவம். குரு பத்தினியுடன் கூடி புதனைப் பெற்றாய். எனவே நீ குருவுக்குத் துரோகம் செய்துவிட்டாய். வியாழனாகிய குருவின் சாபந்தானே உனக்குச் சயரோகம் வந்ததற்குக் காரணம். இத்துணைக் குறைபாடுகள் உடையவன் நீ. ஆனால் அம்மையோ மாசற்றவள். அவளோடு அம்புலி ஆட நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறார் குமரகுருபரர்.

இருவருமே அம்புலியைக் கள்வன் என்றும், களங்கம் உடையவன் என்றும், நிலையற்றவன் என்றும் கூறுவதைக் காணமுடிகிறது.

தானம்

சாமம், பேதம் ஆகிய முறைகளில் அம்புலியை அழைத்தபொழுதும் விளையாட வரவில்லை. ஆதலால் நீ விளையாட வந்தால் உனக்குத் தானமாக இவை இவை கிட்டும் என்று கூறும் தான முறையில் இருபுலவர்களும் அம்புலியை அழைக்கின்றனர்.

அம்புலியே! நீ சேக்கிழார் பெருமானோடு அம்புலியாட வந்தால் உன் உடலில் உள்ள கூன் நீங்கப் பெறுவாய். இதை நான் ஒப்புக்குச் சொல்லவில்லை. உண்மையாகச் சொல்லுகின்றேன். சுந்தரரும் சம்பந்தரும் திருவாய் மலர்ந்து அருளியதால் முறையே கூனும், குருடும், வெப்பு நோயும் நீங்கியது. விபரமாகச் சொல்கிறேன் கேள்.

சுந்தரர் பரவையாரின் ஊடல் தீர்த்தபோது, அவள் வீட்டில் சின்னாள் தமக்குத் திருமாலைத் தொடுத்துக்கொடுத்து வந்த கூனனையும், அடைக்காய் கொடுத்து வந்த குருடனையும், முறையே கூனும் குருடும் தீரக் கருணை புரிந்து ஏவல் கொண்டார். சம்பந்தர் கூன் பாண்டியனின் வெப்பு நோயையும் கூனையும் நீக்கியருளினார். அதுபோல சேக்கிழாரும் திருவாய் மலர்ந்தருளினால் உன் கூனும் நீங்கப் பெறுவாய். மேலும் சொல்லுகிறேன் கேள். சேக்கிழாருக்குக் கூன் மேல் நிரம்ப வெறுப்பு உண்டு. ஆதலால் தான் தம் பெரியபுராணச் செய்யுள்களில் அடி முதலில் செய்யுளின் பொருளைத் தழுவித் தனியே வந்து நிற்கும் கூன் இல்லாமல் எழுதியுள்ளார்.

உன் அழகையெல்லாம் அழிக்கும் விதத்தில் களங்கம் உள்ளது. அக்களங்கத்தைப் போக்கும் திறன் எம்பெருமானுக்கு உண்டு. ஏன் தெரியுமா? சமண நெறி சைவ நெறிக்குக் களங்கம் ஏற்படுத்தியது. அக்களங்கத்தைப் போக்கியவர் சேக்கிழார் பெருமான். இதில் ஐயமில்லை. இவரது கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நிற்போர் பலர். அவ்வாறிருக்க இவர் உன்னை

அழைப்பதற்குக் காரணம் இவரது இயல்பான இரக்க உணர்வே ஆகும். ஆதலால் விரைந்து வந்து கிடைப்பனவற்றைப் பெற்றுக்கொள் என்று மகாவித்துவான் அம்புலியை ஆசை வார்த்தைகளைக் கூறி அம்புலியாட அழைக்கிறார்.

குமரகுருபரர் மதுரையின் பெருமைகளை எடுத்துக் கூறி அம்புலியை அழைக்கிறார். மதுரையின் கண் நீ வந்தால் உனது துன்பங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஓடிவிடும் என்று கூறி அம்புலியை அம்மையோடு விளையாட அழைக்கிறார். பாண்டிய மன்னனின் கூனும் வெப்பும் ஒழித்தது இத்தலம். இந்திரனுக்கு நேர்ந்த பழியையும், வெள்ளை யானைக்கு ஏற்பட்டப் பழியையும் தீர்த்து வைத்தப் பெருமை மதுரைக்கு உண்டு. மேலும் ஓர் இளைஞன் மாபாதகச் செயல் ஒன்றைச் செய்து விட்டான். என்ன செயல் தெரியுமா? அந்த இளைஞன் இளம் வயதை உடைய தாய் தந்தையர்க்குப் பிறந்தவன். தன் தாயையே தாரமாக்கிக்கொண்ட மாபாதகன். இதற்கு இடையூறாக இருந்த தன் தந்தையையும் கொன்றுவிட்டான். தந்தையைக் கொலை செய்துவிட்டுத் தாயைத் தாரமாக்கிக்கொண்ட இப்பஞ்சமாபாதகனின் பழியையும் நீக்கியது இம்மதுரை. ஆதலால் அம்மையோடு அம்புலி ஆட வருவாயாயின் உனது கூனும் நரையும் பழியும் இன்ன பிற குறைகளும் நீங்கும்.

மாறாக நீ இங்கு வராமல் விசும்பில் பொலிந்தால் இராகு உன்னைப் பற்றிக்கொள்ளும். சூரிய மண்டலத்தில் புகுந்தாலோ ஒளி மழுங்கிப் போவாய். சிவபிரான் சடையில் வைக்கப்பெற்றால் மாசுணம் கவரும் என்று அஞ்சுவாய். அன்றியும் உமாதேவியால் உதைக்கப்படுவாய். ஆனால் நீ அம்மையின் பக்கம் வந்தாலோ உலகம் முழுவதும் பெற்று இன்பமுடன் வாழ்வாய் என்று அம்புலியை ஆசை காட்டி அழைக்கிறார் சுவாமிகள்.

நீ அம்புலியாட வந்தால் உனது கூனும் களங்கமும் இன்ன பிற பழிகளும் நீங்கப் பெறுவாய் என்று மகாவித்துவானும் சுவாமிகளும் ஒன்றுபோலக் கூறுவது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

தண்டம்

இரு கவிஞர்களும் என்ன சொல்லியும் அம்புலி வந்த பாடில்லை. கவிஞர்களுக்குக் கோபம் வந்துவிட்டது போலும். ஆதலால் அம்புலியை அச்சமூட்டி அழைக்க முயல்கின்றனர்.

அம்புலியே!உன்னைச் சேக்கிழார் பெருமானோடு விளையாட வா என்று அன்பாகப் பலமுறை அழைத்தும் நீ வரவில்லை. ஆதலால் எம்பெருமான் மனம் வெதும்புகிறார். அவன் என்னதான் நினைத்துள்ளான் என சேக்கிழார் பெருமான் எம்மிடம் அடிக்கடி வினவுகிறார். நானும் தன்பால் களங்கம் இருப்பதால் தங்கள் எதிரே வர நாணுகிறான். ஆதலால் சினம் கொள்ளவேண்டாம் என்று எம்பெருமானிடம் வேண்டி அவரது சினத்தைச் சற்றே தணித்துள்ளோம். எனவே இனியும் காலம் கடத்தாதே காலம் கடத்தினால் அவரது சினம் தணிப்பது இயலாது. அவரது சினம் நொடிப் பொழுதே நீடிக்குமெனினும் அதனைத் தாங்கும் ஆற்றல் உனக்கு இல்லை.

மேலும், இவன் பொடிப்பயல் என்று உன்னை இகழ்ந்து ஒரு செய்யுள் திருவாய் மலர்ந்து அருளினால் சிவபிரான் உன்னைத் தன் திருமுடியிலிருந்துத் தூக்கி எறிந்துவிடுவார். அதனால் நீ அழிந்து போவாய். அவர் வாய்ச் சொல்லுக்கு அவ்வளவு மரியாதை உண்டு. எனவே உன் எதிர்காலத்தை எண்ணிப்பார்த்தாவது எம்பெருமானோடு அம்புலி ஆட வா. அருளே உருவான அவர் உனக்கு அருள் செய்வார். அருண்மொழித்தேவர் என்ற இயற் பெயரை உடைய சேக்கிழார் என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அம்புலிக்கு அச்சமூட்டி அழைக்கிறார்.

குமருகுருபரர் அம்புலியை அச்சுறுத்தி அம்மையோடு விளையாட வருக என்று பின்வருமாறு அழைக்கிறார்.

அம்மை வெகுண்டெழுந்தால் உனக்குப் பிழைப்பும் இல்லை; புகலிடமும் இல்லை. அதுபோல அவள் மகிழ்ச்சியுற்றால் உனக்குக் கிட்டும் நன்மைகளும் அளவிறந்தவை ஆகும்.

நீ ஏன் வரவில்லை என்று அம்மை சினந்து கேட்டாள். உன் எதிர் வர நாணம் கொண்டான் போலும். உன் வான்முகச் செவ்விக்குத் தோற்றோடினான் போலும். பாம்பு பற்றும் என்று அஞ்சினான் போலும் என்றெல்லாம் சமாதானம் கூறி அம்மையின் சினத்தை ஓரளவு தணித்தோம். இனியும் எம்மால் உன்னைத் தப்புவிக்க முடியாது. மேலும் அம்மையோடு அம்புலியாட, நீ வரவில்லையாயின் உனக்கு அழிவே ஏற்படும். இது உறுதி என்கிறார் குமரகுருபரர்.

இரு புலவர்களுமே சினம் தணித்தோம். உன்னைத் தப்புவித்தோம். இனியும் எங்களால் உன்னைத் தப்புவிக்க முடியாது. உனக்கு அழிவே ஏற்படும் என்றாற்போன்ற ஒப்புமைக் கருத்துக்களைக் கொண்டு தண்ட முறைப்பாடல்களை அமைத்துள்ளனர்.

எருவிட்டு இறைஞ்சுதல்

எருவிட்டு இறைஞ்சுதல் என்பது இளம்பெண்கள் தங்களுக்கு விரைவில் மணம் முடியுமாறு நிலாச் சோறு சமைத்துப் படைக்கும்பொழுது எருவைப் பிட்டு வைத்துச் சந்திரனை வணங்குவதாகும். இம்முறையைக் குமரகுருபரர் தமது அம்புலிப் பருவத்தின் மூன்றாம் பாடலில் அமைத்துப் பாடியுள்ளார்.

வளரும் இயல்பினை உடைய பிறைச் சந்திரனிடத்து கன்னிச் சிறுமியர் விரையில் மணமாதற்கு நிலாச் சோறிட்டுச் சந்திரனுக்குப் படைக்குந்தோறும் எருவிட்டு வணங்குவர் என்று எருவிட்டு இறைஞ்சும் முறையை மகாவித்துவான் தமது அம்புலிப் பருவத்தின் ஏழாம் பாடலில் அமைத்துப் பாடியுள்ளார்.

இரு பிள்ளைத் தமிழ் நூல்களின் அம்புலிப் பருவங்களை ஒப்பிட்டு நோக்கிய வகையில் அப்பருவப் பாடல்களின் அமைப்பு முறையிலும் பாடு பொருளிலும் காணலாகும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஓரளவிற்கு உணரமுடிகிறது.

60. பிள்ளைத்தமிழும் பெரியபுராணமும்

புரிசை. ச. நடராசன்

பதிற்றுப்பத்து அந்தாதி 6, திரிபு அந்தாதி 4, யமக அந்தாதி 3, வெண்பா அந்தாதி 1, மாலை 7, பிள்ளைத்தமிழ் 10, கலம்பகம் 2, கோவை 3, உலா 1, தூது 2, குறவஞ்சி பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நூல்கள் இயற்றும் அருமையை ஸ்ரீ இராமசுவாமி ஐயா அவர்கள், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுப் பெருமிதம் உறுகின்றார்.

எனைவைத்தி யெனைவைத்தி யெனப்பதங்களிடைநின்றிரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின் பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற வொரு கடிகைக்களவில் கவித் தொடைதொடுத்து
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்ளலைப் போல்வார்புவியில்யாரே.

இவ்வண்ணம் இப்பெருமகனார் இயற்றியுள்ள பிரபந்தங்களுள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இக்கட்டுரையின் கருப்பொருள் ஆகிறது.

அமைப்பு

சேக்கிழார் பிள்ளைத் தமிழ் 10 பருவங்களைக் கொண்டது. காப்புபருவம் தவிர ஏனைய பருவங்கள் பத்துப் பாடல்களைக் கொண்டன. காப்புப்பருவம் 11 பாடல்களைக் கொண்டது. வேறு பிள்ளைத்தமிழ் நூல்களில் காணமுடியாத பாயிரம் என்ற பகுதி இந்நூலில் இரண்டு பாடல்களைக் கொண்டு இலங்குகின்றது. தொடங்கிய செயல் தடையின்றி நிறைவுற விநாயப்பெருமானைப்போற்றி வணங்குகின்றார். ஓங்கு கைலாய ஞானபரம்பரை திருவாவடுதுறை ஆதீனமுத்ல்வர்களைப் போற்றி குருவணக்கம் கூறுகின்றார். மேலும், உமாபதிசிவம் சேக்கிழார் மீது ஒருபுராணமே பாடியிருக்க, தாம் ஒரு பிள்ளைத்தமிழ் அவர் மீது பாடுவது அறிஞர்கள் எள்ளி நகையாடுவதற்கேயாகும் என்று அவையடக்கம் பாடுகின்றார். மொத்தமாக 103 பாடல்களை இப்பிள்ளைத்தமிழ் கொண்டிருக்கின்றது.

புதியநோக்கு

பிள்ளைத்தமிழில் காப்புப்பருவம் முதலில் இடம் பெறும். அப்பருவத்தில் இறைவன், இறைவி, ஆகியோரைப்பரவி குழந்தையைக்காத்து அருளுமாறு வேண்டுவது கவிமரபாகும். ஆனால் பிள்ளையவர்கள் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் உள்ள ஒவ்வொருபாடலையும் அடிப்படையக வைத்து அப்பாடலில் குறிக்கப்பெற்ற அடியார்களை, சேக்கிழார் என்ற குழந்தையைக் காக்கும் தெய்வங்களாகக்

கொண்டு வேண்டுதல் செய்கின்றார். திருவாவடுதுறை ஸ்ரீ அம்பலவாண தேசிகர் மீது, பிள்ளையவர்கள் பாடிய பிள்ளைத்தமிழ் காப்புப் பருவத்திலும், அகச்சந்தானம், புறச்சந்தானம் முதலியன சைவ சித்தாந்த குரவர் பெருமக்களை, தேசிகக்குழந்தையைக் காக்குமாறு வேண்டியுள்ளார். ஆகவே, பிள்ளைத்தமிழ் நூல்கள் பலவற்றைப் பாடிய சிறப்பு நோக்கியும், பிள்ளைத்தமிழில் புதுமுறை காப்புப்பருவம் பாடிய பெருமையைக் கருதியும், பெருமக்கள் இவரை "பிள்ளைத்தமிழ் மீனாட்சி சுந்தரம்பிள்ளை" என்று அழைத்தனர்.

புதிய விளக்கம்

பெரிய புராணப் பெருங்காப்பியப் பெரும்களஞ்சியத்துள் நுழைந்து ஞான ஒளிவிடும் நவமணிகளையெல்லாம் எடுத்துக் கொணர்ந்து, பிள்ளைத்தமிழ் என்ற நவரத்தினமாலையாக்கி நற்றமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளார் பிள்ளையவர்கள். பெரிய புராணத்தில் மலிந்து கிடக்கும் நுண்கலைச் செல்வங்களை எடுத்து விளக்கமுறச் சொல்லும் வித்தகர் இவர் எடுத்துக்காட்டாக, பெரியபுராணத்தின் முதற் செய்யுளின், ஈற்றடியில்வரும், "மலர்சிலம்படி" என்பதற்குச் சிலர், மலர் போன்ற திருவடி என்று உவமைத்தொகையாகப் பொருள் கொள்ளக்கூடும் என்று கருதி, இப்பாவலர் பெருமான், "உலகெலாம் மலர்ந்த சிலம்படி, மலரும் சிலம்படி, மலர்கின்ற சிலம்படி" என்று வினைத்தொகையாகப் பொருள் கொள்ள வேண்டும் என்பதனை,

...............................உலகெலாம்
என்னும்மறை ஆதியாக் கொண்டவர் உயிர்க்கருளும்
இயல்பனைத் தும்தெரித்து
நாமேவும் அம்முதலோ டொன்றவினை உருபுதொக
நான்கன் அடி ஆதிசெய்து
நால்சீரில் நால்நெறி விளக்கி ஒளிர் சேக்கிழார் (பாயிரம்-1)

என்று பாடுகின்றார். இறைவனை அடைவதற்கு உரிய வழிகள் நான்கு என, சித்தாந்தம் கூறும். மகன்மைநெறி, தொண்டு நெறி, தோழமைநெறி, ஞானநெறி ஆகியவை அவை. இந்த நால்வகை நெறிகளையே, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்னும் அடியில் வரும் நான்கு சீர்களில் சேக்கிழார் குறிப்பிடுகிறார் என்று இப்பாவலர் விளக்குகின்றார்.

திருத்தொண்டத் தொகையில் சுந்தரரால் சிறப்பிக்கப்பெற்ற தனிஅடியார்கள் அறுபதின்மர், அவர்களோடு நம்பியாரூரரையும், அவர்தம் தந்தையாகிய சடையனாரையும் தாய் ஆகிய இசை ஞானியாரையும் சேர்த்து அறுபான் மும்மை தனி அடியார் வரலாற்றையும், தொகை அடியார் ஒன்பதின்மர் புராணத்தையும், சேர்த்து, சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடியிருக்கின்றார். தொகை நூலில் இருந்து விரிநூல் விரிந்த தன்மையை ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டு உரைப்பது பொருத்தமானது ஆகும்.

மிக்க தொகையா ரொன்பதின்மர்
மேய தனியா ரறுபதின்மர்
மேலு மூவர் சரித்திரமாங்
கருப்பஞ் சாறு மொழி மருரக்
கனிவாய் (முத்தப்பருவம்-1)

என்று பாடுகிறார்.

இலக்கணம் - கேட்போர் - பயன்

திருத்தொண்டர் புராணத்திற்கு இலக்கணம், தொல்காப்பியம், இந்நூலினைக் கேட்கத்தக்கவர், சமய தீக்கை முதலியவைகளைப் பெற்று, ஐந்தெழுத்து ஓதி, சமய அடையாளங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் முதலியன அணிந்து, மலபரிபாகம் பெற்று, சத்திநிபாத நிலையுற்ற உத்தமர்கள் ஆவர். பலபிறவியெடுத்து, துன்பம் அடைவது நீங்கி இன்பம் அடைவதே நூலைக்கேட்பதனால் விளையும் பயன், என்று அறுதியிட்டு உரைக்கின்றார் பாவலர். புராணம் பாடிய குன்றத்தூர் கோமானும், நூலைக்கேட்கத்தகுந்தவர் யார் எனக் கூறும்போது "மெய்ப்பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்" என்றார். பெருங்காப்பியத்தின் பயன் இதுவெனச் சேக்கிழார் கூறும்போது, மக்களின் மனத்து இருளைப் போக்கும் மாண்புடையது என்றார்.

இறைவன் அருளியதிறம்

தில்லையில் நடம்புரியும் எல்லையில் அழகன், சேக்கிழாருக்கு "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்த சிறப்பினை மகாவித்துவான் பலமுறை பாராட்டி உரைக்கின்றார். அடியார்களுடைய அருமையும், பெருமையும் உணர்ந்தவன் அம்பலத்து ஆடும் ஐயன். அவன், பெருமைமிகு சிவனடியார்களின் வரலாற்றை விரித்துரைக்கவல்ல புலவர் யார் என ஆய்ந்து பார்த்தான். சேக்கிழாருக்கே அத்திறம் உள்ளது என அவன் கண்டறிந்தான். எனவேதான், அடியார் வரலாற்றை அவர் பாட முயன்றபோது, "உலகெலாம்" எனத் திருவாக்கு அருளினான். மேலும், அச்சிவனடியார்கள் நிகழ்த்திய சிவநேயச் செயல்களை ஞானக்கண் கொண்டு காணுமாறு, அருளினான். இவ்வாறு, இறைவனால் தேர்ந்தெடுக்கப் பெற்று, அருட்கண்ணால் கடந்த கால வரலாறுகளைக் காணுமாறு செய்யப்பெற்று; நூலைத் தொடங்கிப் பாட முதற் சொல்லை எடுத்துக் கொடுத்து, யாருக்கும் சிவபெருமான் உதவியதில்லை. இப்பெருஞ்சிறப்பினை, இவ்வுலகில் பெற்றவர் சேக்கிழாரைத்தவிர வேறுயாரும் இல்லை, என்று மகிழ்ச்சி பொங்க ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

அவர் வரலாறு விரித்துரை செய்பவர்
ஆரென உட்கருதிக்
கடியார் மற்றவர் அன்பத் தனையும்
கண்காண் படி செய்து
காமரு முதலும் எடுத்தரு ளினர்இக்
கடல்சூழ் புவிஇடைஇப்
படியார் பெற்றார். (தாலப்பருவம்-7)

வழிகாட்டி

ஒரு நாட்டைப்பற்றி, பாட முற்படும் புலவன் முதலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்களையும், முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றோடு பொருந்த விளக்கி, மக்கள் வாழ்க்கையின் பயனாக விளங்கும் அந்தந்த நிலத்திற்கு உரிய தெய்வங்கள் உறையும் கோயிலைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கற்பித்தவர் சேக்கிழார். (சப்பாணி-8) இச்செய்திக்கு அடிப்படையாக அமைந்தது பெரிய புராணத்தில் வரும் திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் வரலாறு ஆகும். அப்புராணத்தில் ஐந்துதிணைகளுக்கு உரிய கோயில்களைக் குறிப்பிடும் இடத்து, குறிஞ்சி நிலத்திற்குத் திருக்கழுக்குன்றமும், முல்லை நிலத்திற்குத் தக்கோலமும், மருத நிலத்திற்கு மாற்பேறும், நெய்தல் நிலத்திற்குத் திருமயிலாபுரியும், திருவான்மியூரும் சேக்கிழாரால் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

பல்துறை அறிஞர்

கல்வெட்டுகள், திருமுறைப்பாடல்கள், முதலியன அடியார் வர்லாறுகளைத் தெரிவிப்பதற்கு உறுதுணையாக இருந்தாலும், சேக்கிழார் திருத்தொண்டத் தொகையைத் தான் அடிப்படையாகக் கொண்டு நாயன்மார் வரலாற்றை விரித்துரைத்தார். எனவே, இவரை "வரிநூல் செய்த நன்னூல் ஆசிரியர்" என்கிறார் பாவலர். திருஞான சம்பந்தர் பாடிய "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும்பதிகம் பன்னிரெண்டு பாடல்களைக் கொண்டது. இப்பாடல்களுக்கு விளக்கமாகச் சேக்கிழார் 23 பாடல்கள் பாடியுள்ளார். இவ்வாறு, திருமுறைப் பாசுரங்கட்குப் பொருள் விளக்கம் தருகின்ற காரணத்தால் இவர் ஓர் "உரையாசிரியர்" ஆகின்றார். வேற்றுச்சமய நெறிகளில் புகாமல்தடுக்க மக்களுக்குச் சைவநெறி மாண்பை எடுத்துரைத்ததால் இவர் "போதக ஆசிரியர்" ஆகின்றார். முப்பொருள் உண்மை முதலான செய்திகளைச் சொல்லி உயிர்கட்டு ஞானவழி காட்டுகின்ற காரணத்தால் சேக்கிழாரை "ஞானாசிரியர்" என்று உரைக்கலாம். என்று பாராட்டுகின்றார் பாவலர். (சப்பாணி-9) மேலும், இவரை, "அத்தி தரும்கவி", "புத்தி தரும்கவி", "சித்தி தரும்கவி", "சுத்தி தரும்கவி", "பத்தி தரும்கவி", "முத்தி தரும்கவி", (சிறுபறை-7)

எனக்குறிப்பிட்டு நிறைவு அடைகின்றார் ஆசிரியர். "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியகவி வலவ!" (தால்-8)"நம் பரமகுரு சுவாமி" (சப்பாணி-5),"சகலஆகம பண்டிதர்" (தால்-1) என்று எல்லாம் வாயாரப்பாடி மகிழ்கின்றார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர்.

பெரிய புராணக்கவிகளின் சுவை

ஆவின்பால், தேன், சர்க்கரை, கற்கண்டு, மா, பலா, வாழைக் கனிகள், முந்திரிப்பழம், இவைகளை ஒன்றாகச் சேர்த்து பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்தில் கலந்து, குழலிசை வீணையிசை ஆகியவற்றைப் புகச்செய்து எப்போதும் சிவமணம் கமழத் திகழ்பவையே பெரியபுராணத் தீங்கவிகள் (சிறுபறை 6) என்கின்றார்.

மூவர் முதலிகளாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணக்கவிகளைக் கேட்டு உளம் மகிழ்ந்து, தலையசைத்து, கையசைத்துப் போற்றுகின்றனர் என்று நூலாசிரியர் நுவலுகின்றார். முதல் இருவர் இம்மண்ணில் இருந்தகாலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு. திருநாவலூர்க்கோன் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டு. சேக்கிழார் 12-ஆம் நூற்றாண்டினர். அப்படியானால் பின்னர் தோன்றிய சேக்கிழாரின் கவிச்சுவையைக் கேட்டு, முன்னர் தோன்றிய மூவரும் பாராட்டி உரைப்பது எங்ஙனம்? என்ற வினா எழுதல் இயல்பு. ஆனால் மூவர் பெருமக்களும் சேக்கிழார் கவிதையை எங்கிருந்து கேட்டார்கள் என்றுவினா எழுப்பினால் நல்லவிடை கிடைக்கும். குன்றத்தூர் செல்வர், தில்லை பொன்னம்பலத்தில் பல்லோர் தொழநடமிடும் பெருமான் திரு முன்பு நின்று பாடுகின்றார். அச்சந்நிதியில் நுண்ணுடல் தாங்கிய நிலையில் மூவர் முதலிகள் எப்போதும் இருப்பர் அன்றோ? காரைக்கால் அம்மையாரும், இறவாத இன்பஅன்பு வேண்டிய போது, "அறவா? நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்றார், அல்லவா? எனவேதான் தில்லைச் சிற்றம்பலத்தில் சேக்கிழார் பாடியபோது தேவாரம்பாடிய மூவரும் இருந்து கேட்டு மகிழ்ந்தனர் என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள் எனலாம்.

61.பிள்ளையவர்களின் குருபக்தி

கோ.ப. நல்லசிவம்
தஞ்சாவூர்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே

என்று திருமந்திரம் சொல்லுமாப் போலே நம் பாரத நாட்டில் குரு என்ற சொல்லுக்கு அத்துணை மதிப்பும் பேராற்றலும் உள்ளது. குரு என்ற சொல்லுக்கு(கு-இருள்; ரு-நீக்குபவர்)இருளை நீக்குபவர் என்று பொருள். எனவே தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் தத்துவனாகவே, அறியாமை இருள் நீக்கும் அருட்சோதி சிவமாகவே குருவைப் போற்றுவது நம் மரபாக இருந்ததுள்ளது. குரு மூலமாகவே இறைவனை அடைய முடியும், உணர முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. குருவின் பெருமை பேசுவது, குருவழிபாடு, குருபக்தி என்பது நாடு, மொழி, இனம், சாதி, மதம் என்ற எல்லைகளையும் கடந்த நிலையினது. இது உலகம் முழுதும் காணப்பெறும் சிறப்பினைக் கொண்டதாம். நம்முடைய முன்னோர் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில் இறைவனுக்கு முன்னால் வைத்து வழிபடத்தக்கவர் குரு என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளனர்.

உலக வரலாற்றில் குரு என்ற சொல்லில்தான் எத்தனைப் பொருள்கள் பொதிந்துள்ளன? எத்தனை வகைகள்? எத்தனைக் கோணங்கள், அப்பப்பா இந்த இரண்டு எழுத்திற்குள் விரியும் பேராண்டப் பெரும் பொருள்கள் எழுதின் வானத்தின் நீலத்தை மையாக்கி, மேகத்தைத் தூரிகைகளாக்கி, பூமியையே காகிதமாக்கினாலும் முடியுமோ? ஐயந்தான்.

துறைதோறும் துறைதோறும் நுண்மாண் நுழைபுலன் கொண்டவர்கள் என்று குருமார்களைப் பலவாறாக நாம் பார்க்கலாம். அரசியல் குரு, ஏட்டுக் கல்வி நல்கும் குரு, போர்ப்பயிற்சி தரும் குரு, நூலறிவு தரும் குரு என்று பட்டியல் நீளும். இவர்கள் எல்லாம் இம்மை வாழ்விற்கு ஏற்ற கல்வியை, ஆயகலைகளைக் கற்றுத் தந்து ஏற்றம் பெறச் செய்பவர்கள். ஆனால் மறுமைக்குத் தேவையான மனப்பக்குவத்தையும், பயிற்சியையும் தருபவரே ஞான குரு ஆவார். இந்திய இலக்கியங்களும் இலக்கணங்களும் குருவின் வரலாற்றுப் பட்டியலைப் பலபடக் காட்டியுள்ளன. இந்திரன் உள்ளிட்ட தேவர்கட்கு குரு வியாழன், அசுரர்கட்கு குரு சுக்கிராச்சாரியார். இவர்கள் அரசியலோடு ஞானத்தையும் அவர்கட்கு அருளிய வரலாறுகளைப் பல புராணங்கள் காட்டுகின்றன.

நெப்போலியனுக்கு அரிஸ்டாடிலும், சத்திரகுப்ரதனுக்குச் சாணக்கியரும் அரசியல் குருவாக அமைந்து அவர்கள் உலகையே வெற்றி கொள்ளச்

ß.3.

செய்தார்கள். திருமுறை கண்ட சோழனாம் இராசராசனுக்குக் கருவூரார் குருவாய் அமைந்து அவன் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி செய்தார். பின்னோக்கி நோக்கின் இராமாயணத்தில் வசிட்டரும், விசுவாமித்திரரும், பாரதத்தில் துரோணர் போன்றவர்களின் குரு வரலாறுகள் தொடர்கின்றன.

இவை எல்லாவற்றையும் விட ஞானகுரு தாம் நமக்கு இறைவனைக் காட்டுபவர். சித்தமலம் அறுத்து சிவமாகவே திகழுபவர்கள், சிவமாம் தன்மையை அருளுபவர்கள். குருவானவர் தம் மாணவர்களை, தம்மைப்போலவே, ஏன் தம்மைவிட மேலானவர்களாகவே மாற்றும் மேலாந் தன்மை படைத்தவர்கள். தம்மின் தம் மக்கள் அறிவுடைமை கண்டு ஆனந்தம் அடையும் உள்ளத்தர். அப்படிப்பட்ட குருவாக விவேகானந்தருக்கு இராமகிருஷ்ணர் கிடைத்ததுபோல நம் மகாவித்துவான் பிள்ளையவர்கட்கும் ஞானகுருவாய் அமைந்தவர் அம்பலவாணதேசிகர் என்றால் அது மிகையாகாது. இக்கட்டுரை மகாவித்துவான் அவர்களின் குருபக்தி குறித்து அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் வழி விளக்க முயல்கிறது.

அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்

திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினைந்தாவது குருமகா சந்நிதானமாகத் திகழ்ந்தவர் அம்பலவாண தேசிகர். பிள்ளையவர்கட்கு மெய்ஞ்ஞான குருவாக விளங்கியவர். இறைவனே குருவடிவில் வந்து தன்னை ஆட்கொண்டான் என்று மணிவாசகரும், குமரகுருபரரும் கூறுமாப் போலே பிள்ளையவர்களும் குருவை இறைவனாகவே பார்க்கின்றார். இந்த பரசிவ வெள்ளமாகிய பெருங்கருணையே குருஉரு தாங்கித் தம்மை ஆட்கொண்டதாகக் குறிப்பிடுகிறார். திருமூலரும்,

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே - திருமந்திரம் 1581.

என்று குறிப்பிடுகிறார். இதையே தம் குறிக்கோளாய்க் கொண்டு பிள்ளையவர்கள் தம் ஞான குருவாகிய அம்பலவாண தேசிகர் மீது பாடல் பல புனைந்து தம் வழிபாட்டை, தம் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். தாம் படைத்த கலம்பகத்துடன் பிள்ளைத்தமிழ் நூலொன்றும் சமைத்துள்ளார். பிள்ளையவர்கள் பாடிய பத்து பிள்ளைத்தமிழிலும் இல்லாத ஒரு பெருஞ்சிறப்பு அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழில் உள்ளது. பிள்ளையவர்கட்கு இந்தளவிற்குத் தம் குருவின் மீது பக்தி ஏற்படக் காரணமாய் அமைந்தது அம்பலவாண தேசிகரின் தமிழார்வத் தூண்டுதல்தான் என்றால் அது மிகையாகாது.

ஒருமுறை அம்பலவாணதேசிகருக்கென்று பிள்ளையவர்கள் ஒரு கலம்பகம் இயற்றி அரங்கேற்றினார். கலம்பகத்தின் பீடும், பெருமையும், சொற்பொருள் ஆழமும் உணர்ந்த தேசிகர், பிள்ளையவர்கட்கு

''மகாவித்துவான்'' என்ற பட்டம் தந்து பெருமைப் படுத்தினார். அப்பட்டத்தைப் பிள்ளையவர்கள் தம் இறுதிக்காலம் வரை போற்றினார். மேலும் அவரது தமிழ்ப் பணி இன்னும் பல கோணங்களில் பெருக்கெடுத்து ஓடவும் அது காரணமாய் அமைந்தது எனலாம்.

தேசிகர் பிள்ளைத்தமிழின் சிறப்பு

குருபக்தியின் விளைவால் விளைந்தது அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், அப்பிள்ளைத்தமிழில் தம்முடைய நோக்கும் போக்கும் குருவின் மீது தாம் கொண்ட ஆழமான பற்றை, பக்தியைக் காட்டுவதாய் அமைய வேண்டும் என விரும்பினார். இப்பிள்ளைத்தமிழில் காப்புச் செய்யுளில் காத்தற்கடவுளாம் திருமால், பிறவாயாக்கைப் பெரியோனாம் சிவன், உமையம்மை, முருகன், பிள்ளையார், இந்திரன், தேவர் என்ற மரபினை விட்டு குருபரம்பரையைக் கூறி அவர்கள் பிள்ளைத்தமிழ்ப் பாட்டுடைத் தலைவனைக் காத்தருள வேண்டும் என நினையும் பாங்கு போற்றற்குரியது.

"வழிபட தேவுளும் கொலைதீர் தெய்வதங் காப்புரைக்க" என்ற ஆன்றோர் வாக்கின்படி, பிள்ளையவர்கள் வழிபடு தேவுளாக, கொலைதீர் தெய்வமாக குருபரம்பரையையே கருதுகின்றார். அதனால்தான் அகச்சந்தான குரவர் நால்வர், புறச்சந்தான குரவர் நால்வர், அருமைச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர் என்னும் பத்துக் குரவரும் காக்க என்று தனித்தனியாகக் கூறி, பதினொராம் பாடலில் பாட்டுடைத்தலைவனின் குருவாய் விளங்கிப் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளைக் கூறி, "காத்தருள்க என்று தொழுதெழுவாம்" என்று காப்புப் பருவத்தை நிறைவு செய்கிறார்.

பண்பார் நமச்சிவாயர் முதற்
பதினால்வரையும் தொழுதெழுவாம்
விரவும் அரச வனத்து அமர்ந்து
விளங்கா நின்ற சின்மயனை
மிக்கபுகழ் அம்பல வாண
மேலோன் தனைக் காத்தருள்கவென்றே (அம்.பி.கா-11)

குருபக்தியில் குமரகுருபரரும் பிள்ளையவர்களும்

காசிமா நகரில் தமிழ்மடம் நிறுவிய பிரபந்த வேந்தராம் குமரகுருபரர் குருபக்தியில் தலைசிறந்தவராகக் காட்சியளிக்கிறார். அவருடைய குருநாதர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகராவார். குமரகுருபரரும் தம் ஞான குருவை இறைவனாகவே பார்க்கின்றார். தமக்காக, அவ்விறைவனே தன்னுடைய அடையாளங்களாகிய நான்கு கரங்கள், பாம்பு, புலிபுரித்தோல், கறைமிடறு இவற்றை மறைத்துக் கொண்டு மானிட சட்டை தாங்கி வந்ததாகவே பாடிப்பரவுகின்றார். அவர் பாடிய பண்டார மும்மணிக்கோவையில்,

பழமறைக் கிழவனும் கமலக் கண்ணனும் பரஞ்சுடரும்
எம்மனோர் போல இனிதெழுந் தருளி
மோன வாழ்வளிக்கும் ஞான தேசிகன் .... (ப.மு.மி 1.16)

என்றும்,

விளங்கெழில் மிடற்றோர் களங்கமுண்டு என்ப அக்
காகலா மலினங் கரத்த காரணத்தால்
மாசிலாமணியென வன்பெயர் (பண்.மும். 5.14.17)

அவ்வழி பிள்ளையவர்களும், குருவை உணராதான், குருமகிமையைப் புரியாதான் கோடிதவம் செய்தாலும், ஆயிரமாயிரம் வேதங்களையும், ஆகம பொருட்களை உணர்ந்தாலும் பயனில்லை என்பதை நன்கு உணர்ந்து தம் ஞானகுருவாம் அம்பலவாணதேசிகரை உச்சிமேல் வைத்துப் போற்றுகின்றார்.

செங்கீரைப் பருவத்தில்,

வங்கத் துறைகெழும் ஆவடு துறைஇறை
ஆடுக செங்கீரை
அறிவுரு வாகிய அம்பல வாணன்
ஆடுக செங்கீரை

அள்ளிய வாவிய கோகழி நாயக
ஆடுக செங்கீரை
சிர்பூத்த பேரருட் திருமேனி கொண்டவன்
செங்கீரை ஆடியருளே

வாரானைப் பருவத்தில்,

செம்மை திகழ் சிவஞான வடிவன் அம்பலவாண
தேசிக உத்தமன் வருகவே

மேலும் ஒவ்வொரு பருவப்பாடலிலும் தம்குருநாதரைப் பற்பலப் பெயர் கொண்டு பாடிப்பரவுகின்றார். அவை,

1. காப்புப்பருவத்தில் - "திருவாவடுதுறை வீற்றிருக்கும் தேவன்"
2. செங்கீரைப்பருவம் - "சிற்பரன்றுறைசை அம்பலவாண தேசிகன்"
"அறிவுருவாகிய அம்பலவாணன்"
3. தாலப்பருவம் - "சித்திற் பொலியம்பல வாண தேவன்"
4. சப்பாணிப்பருவம் - "குரவர் சிகாமணி அம்பலவாணன்"
5. முத்தப்பருவம் - "முத்தன் குரு அம்பலவாண முதல்வன்",
"சின்மயன் அருட்பெருங் குரவன்".
6. வாரானைப்பருவம் - "சிவஞான வடிவன்", "திகழ்சீர் குரு"
7. அம்புலிப்பருவம் - "அருள்நெறி நடாத்தும் அம்பலவாணன்"
8. சிற்றிற்பருவம் - "சிந்தாமணி அம்பலவாண தேவன்"
9. சிறுபறைப்பருவம் - "சித்தர் பல மொய்த்த கோ"
"முத்தி அம்பலவாணன்"
"முத்தி முதற்குரு அம்பலவாணன்"
10. சிறுதேர்ப்பருவம் - "திணிகொண்ட மும்மதிலு நீறெழச் சின்மயன்
சிறுதேர் உருட்டியருளே"

இவ்வாறு ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு சிறப்பை மிக

அழகாக எடுத்துக் கூறித் தம் குருபக்தியை வெளிப்படுத்துகின்றார்.

குரு பக்தியில் கந்தசாமி சுவாமிகள்

கோவை சிரவை ஆதீனகர்த்தராக விளங்கிய கந்தசாமி சுவாமிகளும் தம் நூல்களில் தம் குருவாகிய இராமானந்த சுவாமிகளைப் பல இடங்களில் பக்திப்பரவசத்துடன் தொழுது பாடுகின்றார். அதில் தம் குருவை "இதயத்தில் இலங்கும் பெருமாள்" என்று பல பாடல்களில் பொதுவாகவும், கதை மாந்தர்சிலருடன் ஒப்பிட்டும், உயர்த்தியும் குறிப்பிட்டு மகிழ்கின்றார்.

பத்தர் புகழ் எல்லாம் சொலும் சீர் எனக்கு அருள்வாய்
இராமனந்தப் பெயர் கொடெனது இதயத் திலங்கும் பெருமாளே
(நாபதாசர்கதி:47)

புகழுழியா வீடணன் போல் எனைப் புரப்பாய்
(வீடனன் கதி:50)

அணைந்தார் வியப்ப நினதடியிற் புகு மீராபாய் ஏங்கற் அறக்
காத்திட்டது போல் எனை எப்போழ்து உன்னிடைக் காப்பாய்
(மீராபாய்கதி:49)

பிள்ளையவர்கள் "ஆதீகுமரகுருபரர் சரித்திரம்" என்ற நூலைப் படைப்பதற்கு, குமரகுருபரரின் தமிழ்ப்புலமையும், பக்திச்சிறப்பும், காசியில் தமிழ்மடம் நிறுவிய பெருமையும் மட்டும் காரணமன்று, இதையெல்லாவற்றையும் விட குருபரரின் குருபக்தியும் அதனால் விளைந்த பண்டார மும்மணிக்கோவையும் தான் காரணம் எனலாம். அதே நிலையில் தாமும் இருந்தமையால் குருபக்தியில் சிறந்து விளங்கிய குமரகுருபரரின் வரலாற்றை எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியிருப்பது அவருடைய பல பாடல்களில் கண்கூடாய்த் தெரியும் உண்மையாம்.

எழுகடல் மணலை அளவிடினும் குருவின் மேன்மையை அளவிட முடியாது.

கம்பன் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை ஆயிரம் பாடல்கட்கு ஒருமுறை நினைவு கூர்வதைப் போல பிள்ளையவர்கள் தாம் பாடிய இலட்சத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் பிள்ளைத்தமிழ், கலம்பகம் இரண்டிலுமாக பல பாடல்களில் தம் குருபக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வளவில் நாம் குருவின் பெருமை பேசுவதென்பது அரிது என்பது தெள்ளிதின் உணர்ந்தோம். அதிலும் நம் பிள்ளையவர்கள் தம் குருநாதரின் பெருமைகளைப் பாடியதை நாம் விரிக்கின் அது எழுதொணா, சொல்லொணாச் செயலாய் அமையும் என்பதில் ஐயமில்லை. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல மிகச்சிலவே ஈண்டு தரப்பெற்றது.

62. உ.வே.சாவும் பிள்ளையவர்களும்

வெ.அ.நாகரத்தினம்
கோவை

அச்சில் நூல்கள் வெளிவராத காலத்தில் ஏட்டுப் பிரதிகளைத் தேடித்தேடிக் கண்டறிந்து பலரிடம் சென்று வருந்தித் தமிழ்க் கற்றுத் தான் அறிந்தவற்றைப் பலருக்கும் வருத்தாமல் கற்றுத் தந்தவர் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் வித்துவானாகத் திகழ்ந்தவர். அவருடைய தமிழ்ப் புலமையையும் செய்யுள் இயற்றுவதில் அவருக்கிருந்த ஆற்றலையும் வியக்காதவர்கள் இல்லை. தன் வாழ்க்கை முழுவதும் தமிழுக்காகவே அர்ப்பணம் செய்த நல்ல மனிதரை இன்று யாவரும் அறியும் பொருட்டு இந்தப் பூமிக்கு வெளிக்கொணர்ந்தவர் உ.வே.சா ஆவார். தமிழ் வடிவமாக வாழ்ந்த அவர் இன்னொரு தமிழ் வடிவமாக இருந்த பிள்ளையவர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் சிலவற்றை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உ.வே.சாவின் சுவைமிக்க நடையால் உருவாக்கிய 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்' ஒரு காப்பியமாகவே உள்ளது. அது ஒரு நுணுக்கமான ஆராய்ச்சியுங் கூட. பண்பாட்டுச் சிதறல்களினால் எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறுவதுடன் சிந்தனைகள் திரிந்து, பொருள் சம்பாதிப்பதற்கு உதவக் கூடிய ஒன்றே படிப்பு என்ற இன்றைய நிலையில் இரண்டு மகாவித்துவான்களையும் மேலும் மேலும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. தான் கற்ற கல்வியைப் பலருக்கும் கற்றுத் தந்து தமிழின் பெருமையை இவ்வுலகிற்கு அளித்து எத்தனையோ பேரை கல்விமான்களாக்கியப் பெருமை இவ்விருவருக்கும் உண்டு. பிள்ளையவர்கள் சரித்திரம் முழுக்க முழுக்க அவர் தன் மாணவரான உ.வே.சாவின் மீது கொண்ட தூய அன்பினை விளக்குவதாகவே உள்ளது.

பிள்ளையவர்கள் இளமையிலேயே தன் தந்தையிடம் தமிழ்ப் பயின்றார். பல்வேறு நூல்களைக் கற்றிருந்ததுடன் செய்யுள் இயற்றும் பழக்கமும் கொண்டிருந்தார். கல்வியிற் சிறந்த புலமைமிக்கவர்களை நாடி, அவர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டால் கற்றுத் தருவார்களோ அவ்வாறு நடந்து நூல்களைக் கற்றார். அவ்வாறே, திரிசிரபுரத்தில் திரிந்து கொண்டிருந்த ஒரு துறவியிடம் தண்டியலங்கார நூலைக் கற்றுணர்ந்தார்.

யமகம், திரிபு போன்றவற்றால் அந்தாதி, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற எத்தனையோ பிரபந்தங்களைச் செய்துள்ளார். தல புராணங்கள் இயற்றுவதில் கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தார். கடின நடையில் செய்யுள் இயற்றும் திறன் பெற்றிருந்த அவர், தன் மாணவர்களுக்கு எளிமையாக, விளக்கமாகப் புதிய கருத்துக்களைச் சொல்லக்கூடியவராக

விளங்கினார். அவர் வகுப்பு நடத்தும் போது எத்தனையோ செய்யுட்கள் அவர் வாக்கிலிருந்து பெருகிக் கொண்டேயிருக்கும்.

"இவர்கள் சொல்லச் சொல்ல என் கையினால் எழுதிய நூல்கள் அளவிறந்தன. இருபத்தெட்டு காப்பியங்களும் நாற்பத்தைந்து பிரபந்தங்களும் இவர்கள் இயற்றியனவாகத் தெரிய வருகிறது. இவர்கள் இயற்றியத் தனிப்பாடல்களோ அளவு கடந்தன. இவ்வளவு மிகுதியான நூல்கள் இயற்றியவர்கள் தமிழ்ப் புலவர்களில் வேறுயாருமில்லை"
(மீ.சரித்திரம் ப. XII)

என்று உ.வே.சா குறிப்பிடுவார்.

தளர்ந்த வடிவத்துடன் எந்நேரமும் மாணவர்களுக்கிடையில் இருந்து கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கும் காட்சி என்றும் நீங்காத நினைவுகள் என்கிறார் உ.வே.சா., பல்வேரிடம் தமிழ்ப் பாடம் கேட்டும் பல இலக்கிய நூல்களைக் கற்றறிந்தும் அவருடைய தமிழ்ப் பசியைப் பிள்ளையவர்களால் தான் தீர்க்க முடியும் என்று அவரிடம் செல்லுமாறுத் தூண்டியவர் விருத்தாசல ரெட்டியார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாயூரத்தில் இருந்த பிள்ளையவர்களைப் பார்ப்பதற்காகத் தன் தந்தையுடன் சென்றிருந்தார் உ.வே.சா தன் மகனின் ஆர்வத்தை நன்கு உணர்ந்திருந்த அவரின் தந்தை எப்படியாவது தன் மகனை மாணவராகப் பிள்ளையவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உ.வே.சா கற்றிருந்த நூல்களையும், இலக்கணங்களையும், கற்றுத் தந்தவர்களையும் சொன்னதுடன் சங்கீதத்தில் முறையான தேர்ச்சி கொண்டிருந்ததையும் சொன்னார். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளையவர்கள், உ.வே.சா வைப் பார்த்து நைடதத்திலிருந்து ஒரு செய்யுளைச் சொல்லிப் பொருள் சொல்லுமாறு கேட்டார். அவரும் அவ்வாறே சொல்ல, பிள்ளையவர்கள் ஒன்றும் பேசாமல் இருந்தார். உ.வே.சாவின் தந்தை, பாடம் கேட்க எப்பொழுது வரலாம் என்று கேட்ட பின்பு தான், முறையானப் பயிற்சியை மாணவர்கள் பெறுவதில்லை என்ற கருத்தைச் சொல்கிறார் 'உ.வே.சாவின் தந்தை எத்தனை ஆண்டுகளாயினும் இங்கேயேயிருந்து படித்து வரட்டும்' என்று சொன்னதற்குப் பின்பு தான் மாணவராக ஏற்றுக் கொண்டார் என்பது தெரிய வருகிறது. இப்படிப் பிள்ளையவர்கள் மட்டுமல்லாமல், ஆதீனத் தலைவர்களும், ஆசிரியர்களும் தன்னிடம் பாடம் கேட்டு வரும் மாணவர்களைச் சோதித்தார்கள்.

கும்பகோணம் தியாகராஜ செட்டியார் கல்விப் புலமை மிக்கவர். பிள்ளையவர்களின் சிறந்த மாணவராயிருந்தவர். உ.வே.சா உத்தமதானபுரத்தில் இருந்த பொழுது அவருடைய புலமையும், மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் கேட்டு அவரிடம் மாணவராகயிருந்து பயிற்சி பெறவில்லையே என்று ஏங்கியதுண்டு. பிள்ளையவர்களின் மீது மதிப்பும் மரியாதையும் கொண்ட செட்டியார். பட்டீச்சுரத்திற்கு வந்து அவரிடம் பாடம் கேட்பதுண்டு. மனதில் இருப்பதை மறைக்காமல் பேசுகின்ற துணிச்சலைப் பெற்றிருந்தார்.

பிள்ளையவர்கள் உ.வே.சாவை அழைத்துக் கொண்டு அவரிடம் சென்றார். உ.வே.சாவைப் பார்த்த அவர், ஒரு நூலிலிருந்து செய்யுள் ஒன்றைச் சொல்லி பொருளும் கேட்க அவரும் அவ்வாறு செய்ததுடன் அவருக்குப் பிடித்தமான நூல்களிலிருந்து செய்யுட்களைச் சொல்லி விளக்கமும் தந்தார். உ.வே.சாவின் புலமையைத் தெரிந்த செட்டியார், பிள்ளையவர்களின் முன்னிலையில், 'ஐயா அவர்களைப் போல இன்று பாடம் நடத்துபவர்கள் யார் இருக்கிறார்கள், அவருடன் இருப்பதையே பெரிது என்று எண்ணாமல், அவரை நன்கு பயன்படுத்திக் கொள்' என்று சொன்னார்.

அதே போன்று திருவாவடுதுறைக்கு பிள்ளையவர்கள் உ.வே.சாவை அழைத்து சென்றார். அங்கு ஆதீனத் தலைவராக விளங்கியவர் சுப்பிரமணிய தேசிகர். அவர் சிறந்த கல்விமான். தமிழ் இலக்கண இலக்கியப் புலமையும் சாஸ்திரங்களின் அறிவும் வாய்க்கப் பெற்றவர். அவர், உ.வே.சாவைப் பார்த்து நீங்கள் சொல்லிய மாணவர் இவர்தானா? என்ற கேள்வியைக் கேட்டு விட்டு, உ.வே.சாவை ஒரு செய்யுள் சொல்லி விளக்கம் தரச் சொன்னார். அவரும் துறையசையந்தாதி, திருத்தில்லை யமகவந்தாதி, திருக்குற்றால யமகவந்தாதி, புகலூரந்தாதி என்பவற்றுள் ஒவ்வொரு செய்யுளைச் சொல்லி அதற்குப் பொருளும் சொன்னார். அப்போது 'தேசிகர் சாரீரமும் சங்கீத ஞானமும் இவருக்குள்ளன. தங்களிடம் படித்துக் கொண்டு வந்தால் முன்னுக்கு வருவாரென்று தோன்றுகிறது' என்று பிள்ளையவர்களிடம் கூறினார். மேற்கண்ட சிறந்தவர்களால் சோதிக்கப்பட்டு அவர்கள் மனதில் இடம் பிடிக்கச் செய்து உ.வே.சாவின் புலமையை பலர் அறியும்படிச் செய்தவர் பிள்ளையவர்கள்.

அரண்மனைகளிலும் ஜமீன்களிலும் முடங்கிக் கிடந்த தமிழ், மடங்கள் வாயிலாக உயர்வினைப் பெற்றிருந்தது. பிரசித்தி பெற்ற கோயில்களில் மடங்கள் பெரிய தனவான்களால் அமைக்கப் பெற்றிருந்தன. அதுவும் தஞ்சையில் மடங்கள் வாயிலாகத் சைவத் தமிழ் நன்றாகவே வளர்ந்து வந்தது. பிள்ளையவர்கள் மாயூரத்தில் அங்குள்ள தம்பிரான்களுக்கும், மாணவர்களுக்கும் வகுப்புகள் நடத்துவார். அவர் வந்திருக்கும் செய்தி அறிந்தவுடன் பல்வேறு இடங்களிலுள்ள வித்துவான்களும், புலமை மிகுந்தவர்களும், செல்வப் பிரபுகளும் இவரிடம் வந்து சந்தேகங்கள் கேட்டுச் செல்வர். புதிய நூலை அரங்கேற்றும் போதும் ஆங்காங்குள்ள செல்வந்தர்கள், ஜமீன்தார்கள், மிராசுதாரர்கள் போன்றோர் எல்லாம் இவர் பாடல்களின் கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்து செல்வர். இப்படி மடங்கள், கற்றறிந்தவர்களும், புலமை மிகுந்தவர்களும் கூடியிருக்கும் சபையாகத் திகழ்ந்தன. சாதி மத வேற்றுமையின்றி எல்லோரிடமும் அன்பு காட்டும் அவரிடம் நிறையப் பேர் அன்பு கொண்டதைப் போல, அவரிடம் பொறாமை கொண்டவர்களும், அவரைப் பற்றிப் புறஞ்சொல் கூறுவோரும் இருந்து வந்தனர். ஒரு நாள் பிள்ளையவர்கள் வகுப்பு நடத்தும் போது தன் புலமையின் மீது செருக்குற்ற ஒருவர், வகுப்பைக் கவனியாமல் அவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தார். அது மட்டுமல்லாமல்,

காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணியுங்காற்
காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணிமுக்காற்
காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணிநாற்
காணியுங் காணியுங் காணியுங் காட்டும் கழுக்குன்றமே

என்னும் ஒரு செய்யுளைச் சொல்லி பொருள் வினவினார். அதிலுள்ள காணிகளைக் கூட்டி 'காலைக் காட்டுமென்பது இதன் பொருள். இதிலுள்ள காணிகள் இருபது. இருபது காணிகள் கொண்டது கால் என்னும் எண். கால் என்பது இங்கு பாதத்தைக் குறிக்கும் (மீ.சரித்திரம்:118) திருக்கழுக்குன்றத்தை அடைந்தால் அத்தலம் சிவபெருமான் திருவடியைக் காணச் செய்யும் என்பது அதன் கருத்து.

பிணக்கில்லாத பெருந்துறைப் பெரும் பித்தனே........
என் வினையொத்த பின், கணக்கில்லாத் திருக்கோலம்
நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்பதை நினைத்துப் பாடப் பெற்றது என்று விடையளித்தார். இப்படியொரு விளக்கத்தை இதுவரையறிந்திராத அவர் பிள்ளையவர்களின் புலமையை வியந்து வாழ்த்தி மகிழ்ந்து சென்றார்.

பிள்ளையவர்கள் இயற்றிய திருவிடை மருதூர் உலாவைப் பற்றிசில பேர் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற ஆறுமுகத்தாபிள்ளை, கற்றறிந்த அனைவரையும் ஒன்று கூட்டி அவர்களை நன்கு உபசரித்துப் பின்னர், திருவிடை மருதூர் உலாவைப் பற்றி ஏதேனும் குறைகள் உள்ளனவா என்று கேட்க, வந்திருந்தவர்கள் அந்நூலின் சிறப்பையும் செய்யுளின் இனிமையும் வியந்து பாராட்டிச் சென்றார்கள்.

அதே போன்று பிள்ளையவர்களின் திருநாகைக் காரோணம் புராணத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது, அப்பா தீட்சிதர் அவர்கள், அவர் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துக் கொண்டிருந்ததை அறிந்த சுப்பிரமணிய தேசிகர், அடுத்த நாள் தியகராஜ சாஸ்திரிகள் அங்கு வர எல்லோர் முன்னிலையும் அதே பாடத்தைப் பிள்ளையவர்களை நடத்தச் சொல்லி, அதில் குற்றங்குறைகள் இருந்தால் கூறுங்கள் என்று கேட்க, சாஸ்திரிகள் தமிழ் தெரியாத எனக்கே இவ்வளவு நன்றாகப் புரிந்துள்ளது. இதில் போய் குறையா? யார் சொன்னது? சொன்னவர் மூடனாக இருக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு தேசிகர் தங்கள் குரு தான் என்று சொல்லி, அப்பா தீட்சிதருடைய தன்மையை எடுத்துச் சொன்னார்.

இவ்வாறு பலரின் முன்னிலையில் பிள்ளையவர்களின் நூல்கள் படிக்கப் பெற்ற பின்பே வெளியிடப்பட்டன. புலமை மிகுந்த வித்துவான்கள் படிக்கக் கூடிய நூல்களில் கடின நடையையும், ஊருக்குள் பொது மக்களிடம் செய்யுட்கள் கூறுமிடத்து எளிமையான நடையையும் மேற்கொள்ளும் திறமை பெற்றிருந்தார். மேலும் பல பேர் விருப்பத்திற்கேற்ப நூல்கள் இயற்றுவதால் அவர்கள் எதிர்பார்த்த சொற்பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார்.

பிள்ளையவர்களின் துறையசையந்தாதி, திருநாளைக் காரோணம் ஆகிய நூல்கள் கடின நடையில் இருப்பதை அறிந்த தியாகராஜ செட்டியார், அவரிடம் அந்நூல்களின் பொருள்கள் விளங்கவில்லை என்றும் இப்படிப் புரியாத நடையில் இருந்தால் மாணவர்களுக்கு எப்படிப்புரிய வைப்பது என்றும் கேட்கிறார். புலமை மிக்க தியாகராஜ செட்டியார் அவர்களுக்கே புரியவில்லை என்றால் எந்தளவு கடின நடையில் எழுதும் பயிற்சியைக் கொண்டிருந்தார் என்பது விளங்கும். பலரின் வேண்டுகோளுக்கு ஏற்ப எழுதுவதாலும், வித்துவான்களும் புலமை மிக்கவர்களும் பழைய சொற்களைக் கையாள வேண்டும் என்ற மரபினாலும் தானும் அவ்வாறிருக்க வேண்டும் என்னும் அவசியத்தை செட்டியாருக்குப் புரியவைத்தார். இப்படி எழுதுவதில் சில கட்டுப் பாடுகள் இருந்ததால், சூழ்நிலைக்குத் தக்கவாறு எழுதுகின்ற தன்மை பிள்ளையவர்களிடம் இருந்தது.

தண்டியலங்கார நூலை நன்கு கற்றுணர்ந்தவர் என்பதால் திரிபு, யமகம், பாடக மடக்கு, ககர வருக்கச் செய்யுள், ஏகபாதம், கோமூத்திரி, வடசதுக்கம், முரசபந்தம், அக்கர வருத்தனை, அக்கர சதகம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், மாலை மாற்று, காதை கரப்பு, கரந்துரைச் செய்யுள், மாத்திரைப் பெருக்கம், மாத்திரைச் சுருக்கம், இரட்டை நாகபந்தம், இரதபந்தம், கமல பந்தம், நான்காரைச் சக்கரம், ஆறரைச் சக்கரம், எட்டரைச் சக்கரம், பிறிதுபடு பாட்டு, திரிபங்கி, நீரோட்டகம், அநாசிகம், அகரவுயிரால் வந்த செய்யுள், ஆகாரவுயிரால் வந்த செய்யுள், இகரவுயிரால் வந்த செய்யுள்' என்று பல்வேறு சொல்லணிகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது(மீ. சரித்திரம் ப:215) உ.வே.சா தன் ஆசிரியரைப் போலவே இலக்கணத்தில் புலமையுடையவராக விளங்கினார். இளமையிலேயே பல்வேறு இலக்கண நூல்களையும் நன்கு கற்றிருந்தார். ஒரு நாள் குமாரசாமி ஆசான் திருவாவடுதுறையில் தேசிகர் முன்பு, பிள்ளையவர்களைப் பல்வேறு கேள்வி கேட்டார். அதில் தான் சொல்லும் செய்யுளுக்கு நாகங்களைப் போடுமாறு சொல்ல, ஏடும், எழுத்தாணியும், எடுப்பதற்குள் உ.வே.சா நாகங்களை வரைந்து காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாயூரத்தில் இருந்தபோது தன்னால் உ.வே.சாவிற்கு ஆகாரம் தரமுடியாத சூழ்நிலையில் பிள்ளையவர்கள் இருந்தார். அதனால் பட்டீச்சுரத்திலோ, திருவாவடுதுறையிலோ மாணவனாகச் சேர்த்து விட்டால் உ.வே.சாவிற்கும் அவர் தந்தைக்கும் கவலை இராது என்று நினைத்தார். ஆறுமுகத்தா பிள்ளை என்பவர் பட்டீச்சுரத்தின் ஆதினத் தலைவராகயிருந்தார். பிள்ளையவர்களால் தம்பி என்று அழைக்கப்பட்டவரும் அவருடைய மாணவருமாவார். புலவர்களையும் வித்துவான்களையும் நன்கு உபசரிப்பவர். நல்ல உபகாரியும் கூட 'வேளாண் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்பதற்கேற்ப, இரவில் வெகுநேரம் காத்திருந்து யாராவது வருவார்களா என்று பார்ப்பதும் வந்தவர்களுக்கு விருந்தளிப்பதையும் அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் மீது மிக்க மதிப்பு வைத்திருந்தார். யாராவது அவரை

அவதூறாகப் பேசிவிட்டால் வெகுண்டு விடுவார். பிள்ளையவர்களைத் தவிர மற்றவர்களிடம் கடுகடுப்பாக நடந்து கொள்ளும் சுபாவம் கொண்டவர்.

அன்பு வார்த்தைகளையே கேட்டுப் பழகியிருந்த உ.வே.சா ஆறுமுகத்தா பிள்ளையிடத்து மட்டும் கடுஞ்சொற்களைக் கேட்க வேண்டியதாய் இருந்தது. ஆயினும் தன் ஆசிரியப் பிரான் அருகில் இருந்து வந்தது மிக்க ஆறுதலைத் தந்தது. காலையில் சற்றுத் தாமதமாக எழுந்து விட்டாலோ, உண்ணச் சென்று விட்டாலோ, அவருடைய பாடப் புத்தகங்கள், எழுத்தாணி, ஆகியவற்றை யாருக்கும் தெரியாமல் மறைத்து விட்டு, 'சுத்த சோம்பேறி, இவருக்குப் பாடம் சொல்லித் தருவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. இரவு பகல் பாராது தாங்கள் சொல்லித் தர, படிப்பவர் போன்று பாவனை செய்கிறார். ஏதாவது செய்யுள் செய்யும்படி பயிற்சி பெற்றுள்ளாரா? என்று பிள்ளையவர்களிடம் கேட்டு அவரை சோதிப்பது ஆறுமுகத்தா பிள்ளைக்கு இயல்பாக இருந்தது.

அவ்வப்போது செய்யுள் எழுதும் திறம் பெற்றிருந்ததால் ஆறுமுகத்தா பிள்ளையின் ஏளனத்தைத் தாங்காதவராய் செய்யுள் செய்தாலும், பிள்ளையவர்கள் அதனைத் தடுத்து தானாகவே யாருக்கும் தெரியாமல் உ.வே.சா.விற்கு மட்டும் கேட்குமாறு வெண்பாவை எழுதச் செய்து அதை ஆறுமுகத்தா பிள்ளையிடம் காட்டச் செய்து அவர் கோபத்தைத் தணிப்பார். இப்படியிருக்க ஒரு நாள், உ.வே.சா சாப்பிட்டு வருவதற்குள் ஆறுமுகத்தா பிள்ளை அவர் எழுத்தாணியை மறைத்து விடுகிறார். தன் ஆசிரியர் செய்யுள் சொல்லும் போது என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்க, எப்போதும் போல் அவரை ஆறுமுகத்தா பிள்ளை திட்ட, பிள்ளையவர்கள் நான் தான் சாப்பிடுவதற்கு அனுப்பினேன். எழுத்தாணியை வருவித்துக் கொடுத்து விடு என்று கூறியும் கோபம் தணியாத வராய், நான் திரும்பி வருவதற்குள் யாருடைய உதவியும் இல்லாமல் புதிதாகச் செய்யுள் ஒன்றைச் செய்திருக்க வேண்டும் என்று கண்டிப்புடன் சொல்லி, பக்கத்தில் அவரைக் கவனிப்பதற்குத் தம்பிரான் ஒருவரையும் இருக்கச் செய்துவிட்டுச் செல்கிறார். பிள்ளையவர்கள் பூஜைகாரியமாக ஏதோ ஒன்றை எடுத்து வர செய்யுமாறு அனுப்பிவிட்டு, விரைவாக தன் மனதிற்குள் செய்திருந்த செய்யுளைச் சொல்வதற்குள் தம்பிரானும் வேகமாக வர, உ.வே.சா விற்கு மட்டும் காது கேட்கும் படிசில சொற்களைச் சொல்கிறார். புலமைமிக்க உ.வே.சா, சொற்களைப் பொருத்தி அமைக்க அது ஒரு சிறந்த வெண்பாவாகயிருப்பதை அறிகிறார். அதுவுமட்டுமல்லாமல் அவ்வெண்பாவைப் படித்த ஆறுமுகத்தா பிள்ளையின் கோபமும் தணிந்தது. அச்செய்யுள் பின்வருமாறு, (மீ. சரித்திரம் ப:137)

தழுவுபுக ழாறுமுகத் தாளாளா வென்றும்
வழுவில் புராணம் வரைய - மெழுகில்
அழுத்தாணிப் பொன்னா லமைந்தவுருவிற்றாம்
எழுத்தாணி யொன்றெனக்கின் றீ

இவ்வாறு ஆறுமுகத்தா பிள்ளை உ.வே.சாவை செய்யுள் செய்து

அப்போதே தர வேண்டும் என்று கண்டித்த போதெல்லாம், தானாகவே தன் கைப்பட வெண்பா இயற்றி தன் மாணவனை ஆறுமுகத்தா பிள்ளையின் கடுங்கோபத்திலிருந்து காப்பாற்றுபவராய் இருந்தார். இப்படிப் பிள்ளையவர்களின் மீது தூய அன்பு காட்டினார்.

உ.வே.சா தன் ஆசிரியரைக் குருவாகக் கொண்டிருந்ததைப் போல, பிள்ளையவர்கள் சுப்பிரமணிய தேசிகரை 'குருவாகக்' கொண்டிருந்தார். பட்டீச்சுரமும் திருவாவடுதுறையும் பிள்ளையவர்களை நன்கு ஆதரித்த மடங்கள் என்றாலும், பிள்ளையவர்களுக்குத் திருவாவடுதுறையே தங்கும் உறைவிடமாக இருந்தது. திருவாவடுதுறைக்கு துறையசை, கோமுத்தி, நவகோடி சித்தபுரம் என்ற பெயர்கள் உண்டு. அதனை நினைத்த போதெல்லாம் தான் கண்ட காட்சிகள் தனக்கு மகிழ்ச்சியை ஊட்டுகிறது என்கிறார் உ.வே.சா.

ஒரு நாள் திருவாவடுதுறையில் ஸ்நானம் செய்வதற்காகக் குளப்பிரையின் தெற்குப் பகுதிக்குச் சென்ற போது அங்குள்ள பெரிய தம்பிரான்கள், சிறிய தம்பிரான்கள், மடத்துக் காரியஸ்தர் முதலானோர் பிள்ளையவர்களுக்கு வரவேற்புக் கூறி அனுப்பி வைத்தார்கள். அவர் வருவதற்கு முன்பே வெந்நீர் போடப்பட்டிருந்தது. ஸ்நானம் முடித்து பூஜைக்குச் செல்லும்போது, பூஜை முடித்து வருபவர்களும் ஆச்சார அனுஷ்டங்களுடன் பூஜைக்குச் செல்பவர்களும் வழி நெடுகிலும் தம்பிரான்கள் அவர்களுக்குத் தக்க பணிவிடை செய்து கொண்டும் இருந்த காட்சி வேறு இடத்தில் எங்கும் காணப்படாத ஒன்று என்கிறார்.

ஸ்நானம் முடித்து சாப்பிடுவதற்காகச் சென்றால் அங்கு சாப்பிட்டிருந்த சமஸ்கிருத சங்கீத வித்துவான்கள் எல்லாம் தேசிகரின் நற்பண்புகளைப் பாராட்டிக் கொண்டிருந்தனர். அங்கிருந்த ஒருவர் உ.வே.சாவைப் பார்த்து ஸந்நிதானம் உம்மைப் பரீட்சித்த காலத்தில் நீர் உத்தரம் சொன்னதையெல்லாம் கேட்டு ஸந்தோசம் அடைந்தது. பிள்ளையவர்களிடம் நீர் பாடம் கேட்டு வருவதும் ஸந்நிதானத்தை இன்று பாத்ததும் பெரும் பாக்கியமென்றே எண்ணுகிறோம். அவர்கள் நேத்திரங்களுக்கு எப்பொழுது விசய மானீரோ அப்பொழுதே பாக்யசாலி ஆனீர். அவருடைய அன்பிற்குப் பாத்திரமான காலந்தொட்டு பரமசௌக்கியத்திலேயே இருந்து வருகிறோம். இப்பொழுது யாதொரு கவலையும் எங்களுக்கில்லை. பிறருடைய யோக்யதையை அறிந்து ஸம்மானஞ் செய்ததில் அவர்களுக்குச் சமமாக யார் இருக்கிறார்கள் என்று தேசிகரைப் போற்றிப் புகழ்ந்தனர். (மீ.சரித்திரம்:ப.85)

பிள்ளையவர்கட்கு 'மகாவித்துவான்' என்ற பட்டத்தைக் கொடுத்து சிறப்பித்ததோடு அம்மடத்திற்குப் பல்வேறு வித்துவான்களையும் பிள்ளையவர்களுடன் கலந்துரையாடச் செய்து' அவரை நடமாடும் பல்கலைக் கழகம்' என்று சொல்லும்படிச் செய்தவர் தேசிகர் ஆவார். மேலும் அவருக்கு நிறைய உதவிகள் செய்ய நினைத்தார். ஆனால் தான் அப்படிச் செய்தால் ஸந்நிதானம் தன்னைத் தவறாக நினைக்கக் கூடுமென்று

எண்ணி, பல்வேறு செல்வப் பிரபுக்களையும், ஜமீன்தார்களையும் இவருடன் தொடர்புபடுத்தி அவர்கள் மூலம் வருமானம் ஏற்படும் படிச் செய்தார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் சேற்றையூர் முத்துச்சாமி பாண்டியன்.

தேசிகர் சங்கீதத்தில் நாட்டம் உடையவர் என்பதால் பிள்ளையவர்களின் செய்யுளை யாராவது இசையுடன் பாடினால் மிகவும் மகிழ்ந்து கேட்பார். ஒரு நாள் தேசிகர் பிள்ளையவர்களிடம் மகாவைத்தியநாதர், ' சோமாசி மாறனார் சரித்திரத்தை' இசையுடன் கலந்து பொருள் சொல்லும் போது பல்வேறு நூல்களை எடுத்துக் காட்டி விளக்கினார். 'அவற்றுள் உங்களுடைய பாடல்கள் அவர்களுடைய சாரீரத்தோடு சேர்ந்து செயற்கை அழகும் பெற்று எல்லோருடைய மனதையும் கவர்ந்தன. அவர்கள் ஒரு விசயத்தை எடுத்துச் சொல்லி விட்டு, 'இந்த விசயமாகப் பிள்ளையவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லிச் சொல்லும் பொழுது கேட்டவர்கள் உங்களுடைய அறிவின் வன்மையும் ஸாஹியத்தின் அழகையும் அறிந்து வியந்தார்கள். அது தொடங்கி உங்கள் ஞாபகமாகவே இருக்கிறோம்' என்று சொல்லும் போது தேசிகர் அவர் மீது கொண்ட அன்பினை அறியலாம். அதுவுமட்டுமல்லாமல் புதிய நூல்கள் எழுதச் செய்தும், அந்நூல்களை அரங்கேற்றமும் செய்தும் பிள்ளையவர்களை வாழ வைத்த பெரும் வள்ளல் சுப்பிரமணிய தேசிகர்.

அவரவர் செய்யும் நூலுக்கு அவரவரே சிறப்புப் பாயிரம் செய்வது மரபு இல்லை என்பதால், வித்துவான்களிடம் 'சிறப்புப் பாயிரம் பெறுவது' தங்களுக்குப் பெருமையளிக்கும் என்று பிள்ளையவர்களிடம் வந்து தாங்கள் இயற்றிய நூலுக்குச் சிறப்புப் பாயிரம் பெறுபவர்களும், நூல்களைத் திருத்தம் செய்து பெற்றுச் செல்பவர்களும் வந்து போய்க் கொண்டிருப்பர். திருவாவடுதுறையில், குரு பூஜையின் போது பல்வேறு வித்துவான்களையும் கூட்டி அவர்களுக்குச் சிறப்புச் செய்வார் தேசிகர். அப்போது ஓதுவார்களுக்கும் அவர்கள் தகுதிக்கு ஏற்ப பரிசு தருவார். அவர்களில் பசுபதி பண்டாரம் என்பவர் ஓதுவார்களை விடக் கொஞ்சம் புலமை பெற்றவர். அவர் தன்னை வித்துவான்கள் கூட்டத்தில் ஒருவராக நினைத்து மரியாதை தனக்கும் செய்ய வேண்டும் என்று நினைத்தும், தனக்கும் அவர்களைப் போல ஒரு ஜோடி பட்டு ஜரிகை உள்ள வேட்டி கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, பிள்ளையவர்களிடம் தன் நிலைமையைச் சொல்லி, ஒரு செய்யுளைச் செய்து தனக்குத் தருமாறு கேட்க, பிள்ளையவர்களும் அவ்வாறே செய்து தர, பசுபதி பண்டாரமும் ஒரு ஜோடி ஜரிகை வேட்டியைப் பெற்றுக் கொள்கிறார். இதையறிந்த ஓதுவார்களில் பலர் தங்களுக்கும் செய்யுள் இயற்றித் தரும்படி பிள்ளையவர்களிடம்கேட்க அவரும் செய்யுள் செய்து தர, தேசிகரிடம் சென்று பரிசினைப் பெற்றனர். இதில் என்ன ஆச்சரியமென்றால் தேசிகர் பரிசு தரும் போது 'இந்தச் செய்யுள் தான் உங்களுக்கு இந்த மரியாதையைச் செய்வித்தது' என்று சொன்னதும், அதனை வாங்கியவர்களும் பிள்ளையவர்கள் தாம் உதவியது என்பதைச்

சொல்லாமல் இருந்ததும், அதனை அவரும் கேட்காமல் இருந்ததுதான்' என்பதை அறியலாம். பிள்ளையவர்களின் எழுதும் நடை தேசிகருக்கு நன்றாகவே தெரியும். குறைந்த கல்வியை உடையவர்களையும் கௌரவித்து அவர்களின் மீது கருணை காட்டிய அவருடைய ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நினைத்துப் பெரிதும் மகிழ்ந்து, இவர் இருப்பதால் ஆதீனம் பெருமைப்படுகிறது என்று நினைத்தார். இப்படி தன்னைத் தேடி வருபவர்களையெல்லாம் ஜாதி, மதம் பாராமல் அன்பு காட்டும் அவருடைய பெருங்குணத்தை, அம்பரில் இருந்த போது அங்கிருந்த ஒரு தலைவர் அவரை சிறிதும் மதியாமல் அவமதித்ததை நினைத்து வருந்தி தேசிகரின் தயாள குணத்தைப் போற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்ப, தேசிகரும் அக்கடிதத்தைப் படித்து அவர் அங்கெல்லாம் சென்றாரா என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

தஞ்சையில் எத்தனையோ சைவ மடங்கள் இருப்பினும் திருவாவடுதுறை போன்ற ஒரு ஆதீனம் இல்லை என்பது பெறப்படுகிறது. கையிலாய மலையிலிருந்து வந்த பரம்பரையில் 19-ஆவது தலைவரும், திரிகூடராசப்பக் கவிராயரின் வழிவந்தவருமான தேசிகர், சைவ சித்தாந்த சாஸ்திரங்களைப் படித்ததுடன், அதன் படி நடப்பவராய் இருந்தார். ஆதீனத்தில் இருந்தவர்களையும், பிள்ளையவர்களையும், உ.வே.சா.வையும் கடிந்து பேசியதாக எங்கும் காணப்படவில்லை. எல்லோரிடமும் அன்பு காட்டுகின்ற சிறந்த குணத்தைப் பெற்றிருந்தார்.

பிள்ளையவர்களிடம் அன்பு காட்டியதைப் போலவே, தேசிகர் உ.வே.சா விடமும் காட்டினார். எப்பொழுது வகுப்பு எடுத்தாலும் உ.வே.சா.வே செய்யுட்களைப் படிப்பது வழக்கம். ஏனெனில் அவர் படிப்பதையே பிள்ளையவர்களும், தேசிகரும் விரும்பினர். பெரியபுராணம் வகுப்பு எடுக்கும்போது உ.வே.சா விற்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதால், அவர் வீட்டிலிருந்து நலமுடன் திரும்பிவரும் வரைக்கும் பிள்ளையவர்கள் பாடம் நடத்துவதை நிறுத்தச் சொன்னார். பிள்ளையவர்கள் தன் மாணவன் மீது மிக்க அன்பு கொண்டவர் என்பதே அதற்குக் காரணமாகும். தன்னிடம் எதுவும் தனக்காக கேட்டு அறியாத பிள்ளையவர்கள், சமையற்கட்டிற்குத் தன் உடம்பை குறுக்கிச் செல்வதைப் பார்த்து உடனே அதனை இடித்துக்கட்டச் செய்தார். அதுமட்டுமல்லாமல் வகுப்பு நடத்துவதற்கும் போதிய இடம் இல்லை என்பதால் புதிய வீடு ஒன்றைக் கட்டித் தந்தார். இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற வள்ளலை 'குரு'வாகக் கொண்டிருந்தார் பிள்ளையவர்கள். அவரை 'குருமணி' என்றும் 'ஞானாசிரியன்' என்றும் குறிப்பிடுகிறார். அது மட்டுமல்லாது பழனி மாம்பழக் கவிச் சங்க நாவலர் புதுக்கோட்டை மகாராஜாவாகிய இராமச் சந்திரத் தொண்டைமான் இயற்றிய இங்கிலீஷ் நோட்டின் மெட்டுள்ள கீர்த்தனத்தைப் போல தானும் தன் குருவாகிய தேசிகருக்கு விருத்தமும், கீர்த்தனமும் இயற்றினார். அதுவுமட்டுமல்லாமல் திருவாவடுதுறை குரு பூஜையின் சிறப்பினை மெ.பெரி. ராமமெய்யப்ப செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க 'குருபூஜை மான்மியம்' என்னும் நூலையும் சுப்பிரமணிய தேசிகரின் விருப்பப்படி

'சிவஞானயோகிகள் சரித்திரம்' என்னும் நூலையும் எழுதினார். பிள்ளையவர்கள் காசிக்கலம்பகம் எழுதிய கச்சியப்ப முனிவரிடம் பக்தி கொண்டிருந்ததைப் போல தேசிகர் காஞ்சிபுராணம் எழுதிய சிவஞான யோகிகள் மீது பக்தி கொண்டவராக இருந்தார். கச்சியப்ப முனிவரும், சிவஞான முனிவரும் ஒன்றாய் படித்தவர் என்பது பிள்ளையவர்கள் கூற்று. ஆனால் தேசிகர் சிவஞான முனிவரின் மாணாக்கர் தான் கச்சியப்ப முனிவர் என்பார். ஒரு நாள் பழைய ஏட்டுச் சுவடி ஒன்றைக் தேசிகர் எடுத்து வந்து உ.வே.சா விடம் காட்ட அதில் சிவஞான முனிவரின் மாணாக்கன் என்றிருப்பதை அறிந்து ஒப்புக் கொண்டார். மேலும் மாணிக்க வாசகர் மேல் கொண்டிருந்த பக்தியினால் 'மாணிக்க வாசகர் சரித்திரத்தையும் எழுதினார். தியாகராஜ சாஸ்திரிகள் வேகமாகப் பாடிய வடமொழி ஸ்லோகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். தமிழில் எப்படி வேகமாக எழுதுவாரோ அப்படியே வடமொழியிலும் எழுதுகின்ற ஆற்றலையும் பெற்றிருந்தார்.

இப்பேர்ப்பட்ட பெருஞ்சிறப்பினைப் பெற்ற பிள்ளையவர்கள் பரிபூரணம் அடைந்த போது தேசிகர் உ.வே.சாவைத் தேற்றி, 'அவரிடம் கேளாமல் எஞ்சியுள்ள நூல்களை நம்மிடம் பாடம் கேட்கலாம். அவற்றைக் கேட்டுச் சிந்தனை செய்து கொண்டும் புதியவர்களாக வருபவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டும் சௌக்கியமாக நீர் இங்கே இருக்கலாம். அவர்களுடைய பக்கத்தில் இருந்தது போலவே நம்முடைய பக்கத்தில் இருந்து வரவேண்டுமென்று கூறினார். தன் ஆசிரியப் பிரானிடமும் தன்னிடமும் அன்பு காட்டி ஆதரித்த சுப்பிரமணிய தேசிகரை நினைவு கூறும் வகையில் 'சுப்பிரமணிய தேசிகர் விலாசம்' என்னும் நூலை முதன் முதலாகப் பதிப்பித்தார். பிள்ளையவர்கள் பாடிய பிரபந்தங்களையெல்லாம் தொகுத்து 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிரபந்தத் திரட்டு' என்னும் பெயரிலும், அவருடைய சரித்திரத்தை இரண்டு பாகங்களாகவும் செய்து வெளியிட்ட பெருமை உ.வே.சா வையே சாரும். பிள்ளையவர்கள் இறுதி வரைக்கும் தன் மீது காட்டிய பேரன்பைப் போலவே அவர் குடும்பத்தாரிடம் இவர் காட்டினார்.

தமிழில் சங்க இலக்கியம், காப்பியங்கள் போன்ற பழைய நூல்கள் இருப்பதை சேலம் இராமசாமி முதலியார் மூலம் அறிந்து கொள்கிறார், உ.வே.சா அங்கு சுப்பிரமணிய தேசிகர் தான் அவரை அனுப்பினார். பின்னாளில் பழைய நூல்களை எல்லாம் ஒன்று விடாமல் தேடிப் பிடித்து பதிப்பிக்கும் போது தன் ஆசிரியருக்குப் பழைய நூல்களை இருப்பது பற்றிய செய்து தெரியாமல் போயிற்றே என்று வருந்தினார்.

மேற்கண்டவாறு 'ஆசிரியர் எப்படியோ அப்படி' என்று வாழ்ந்து காட்டினார் உ.வே.சா. வாழ்க்கை முழுக்க தமிழுக்காகத் தொண்டு செய்த பெருமை அவ்விருவருக்குமே உண்டு. தமிழ் இருக்கும் வரை அவர்களும் இருப்பர் என்பதில் ஐயமில்லை.

63. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதியில் அகத்துறைச் செய்யுள்கள்

புலவர். ப. வெ. நாகராஜன்
கோவை

முற்காலத்தில் மரபுவழித் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு முதன்முதலில் நீதிநூல்களும் பிரபந்தங்களும் கற்பிக்கப்பட்டுவந்தன. அவற்றுள் அந்தாதி இலக்கியங்கள் அவர்களுடைய நினைவாற்றலை வளர்த்து, பல புதிய சொற்களையும், பதங்களைப் பிரித்துப் பொருள் காணும் முறையையும் இலக்கிய மரபையும், புராண வரலாறுகளையும் கற்பிப்பதற்கு உரிய கருவிகளாக இருந்தன. இந்தக் காரணத்தால் சென்ற சில நூற்றாண்டுகளில் மிகப் பல அந்தாதிகள் இயற்றப்பெற்றன. செய்யுள் இயற்ற விழைபவர்கள் தொடக்கத்தில் இத்தகைய சிற்றிலக்கியங்களையே இயற்றுவது வழக்கம். தமிழ் மாணவர்களின் மொழித்திறமையை வளர்ப்பதற்கு இந்தப் பயிற்சி ஏற்றதொரு கருவியாக இருந்தது.

தமிழ் இலக்கியவகைகளுள் இந்த அந்தாதிகள் தொடர்நிலைச் செய்யுள்களில் ஒன்றாகிய சொற்றொடர்நிலையின்பாற்படும். முன்பாடலின் ஈற்றுப்பகுதி(அந்தம்)அடுத்ததின் தொடக்கமாக(ஆதி) அமைவதால் அந்தாதி என்று பெயர் பெற்றது. நூலின் கடைசிச் செய்யுளின் ஈறு முதல் செய்யுளின் முதலோடு இயைந்து வருவது மண்டலித்தல் எனப்படும். திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி 'திருத்தாமரை' எனத் தொடங்கித் 'திருவடியே' என முற்றுப் பெறுவதால் மண்டலித்த அந்தாதி ஆகும்.

செய்யுட்களின் எதுகையைக் கொண்டு அந்தாதிகள் யமகம், திரிபு, என இருவகைப்படும். இவற்றுள் நான்கடிகளிலும் முதலில் முதல் எழுத்தை ஒழித்த மற்ற எழுத்துக்கள் பல ஒன்றி வருவது திரிபந்தாதி எனப்படும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் திருப்பைஞ்ஞீலி என்னும் சோழநாட்டுத் திருத்தலத்தைப் போற்றி இயற்றியுள்ள சிற்றிலக்கியம் திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி ஆகும்.

இச் சிற்றிலக்கியம் இயற்றப்பெற்ற வரலாற்றைத் தமிழ்த்தாத்தா இவ்வாறு தெரிவிக்கிறார்:-"(திரிசிரபுரத்தில் வட்சுமணபிள்ளை முதலியவர்களால் ஆதரிக்கப்பெற்று) இருந்துவருகையில் பிள்ளையவர்கள் திருப்பைஞ்ஞீலிக்குச் சில அன்பர்களுடன் ஒருமுறை சென்றிருந்தார்; அப்பொழுது உடன் சென்றவர்களும் அங்கே உள்ளவர்களும் அந்தத் தல சம்பந்தமாக ஒரு பிரபந்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பல திரிபு யமக அந்தாதிகளை வாசித்த பழக்கத்தாலும்

வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பல திரிபு யமகப் பாடல்களின் உரையையும் அவற்றின் போக்கையும் அறிந்துகொண்ட வன்மையாலும் திரிபு யமகங்களைத் தாமும் பாடவேண்டுமென்னும் அவாவுடையவராக இருந்துவந்தனராதலின் அவர்கள் விருப்பத்திற்கிணங்கி அத்தலத்திற்கு ஒரு திரிபந்தாதி சில தினத்தில் இவராற் செய்யப்பெற்றது. அது மிக எளிய நடையில் அமைந்துள்ளது". இந்த வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பிலிருந்து இதுவே மகாவித்துவான் அவர்களால் இயற்றப்பெற்ற முதல் திரிபந்தாதி இலக்கியம் என உரைப்படுகிறது. இதனை இயற்றும்போது அவருக்கு வயது ஏறக்குறைய இருபத்தாறு இருக்கலாம் எனத் தெரிகிறது.

இத்தகைய சிற்றிலக்கியங்கள் தோத்திரப்பாடல்களாக இயன்றதாயினும் இடையிடையே அகத்துறைச் செய்யுட்களைக் கலந்து பாடுவது பெரும்புலவர்களின் வழக்கம். இவை இறைவனையே கிளவித் தலைவனாகவும் கொண்டு கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம் என்னும் புறத்துறையில் அமைந்தனவாகவும், தூய அகப்பொருட் கிளவிகளாகவும் அமைக்கப்படும்.

எடுத்துக்காட்டாகப் பிள்ளைப்பெருமாளையங்காரின் திருவரங்கத் தந்தாதியின் 24, 58-60 ஆகிய செய்யுள்களும், தலைமலைகண்ட தேவரின் மருதூர் (யமக)அந்தாதியின் 16,18,19,25,86 ஆகிய பாடல்களும், துறைமங்கலம் சிவப்பிரகாசரின் பழமலை (திரிபு)அந்தாதியின் 5,9,10,14,16,21,23,29,31,33,45,46,54,59,60,64,69,73-75,82,85,86,91-96 ஆகிய கவிகளும், மாதவச் சிவஞான முனிவரின் வட திருமுல்லைவாயில் (திரிபு) அந்தாதியின் 25,27,28,33,35,36,44,57,80,81,91,98,99 ஆகிய செய்யுட்களும் கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமாகப் புறத்திணையில் அமைந்த அகப்பொருள்பாடல்கள் ஆகும். இந்த இலக்கிய மரபைப் பின்பற்றி மகாவித்துவான் அவர்களும் திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதியின் 43,49,57,60,61,62,65,67,75,80,87,91,93, ஆகிய பதின்மூன்று கவிகளை இறைவன்மீது மானிடப்பெண் கொண்ட காதலாக அமைத்துள்ளார்.

தமிழ்த்தாத்தா கூறுகிறபடி இந்த அந்தாதி மிகமிக எளிமையாக அமைந்துள்ளது. அகத்துறைப் பாடல்களிலும் பெரும்பான்மை (பதின்மூன்றுக்கு ஏழு)தூதுப்பொருண்மையிலேயே அமைந்துள்ளன. அன்னப்பறவை (43), கிளி (49,75)வண்டு (60) குருகு (61), பாங்கி (80), மேகம் (91), என்னும் ஆறும் தூதாக அனுப்பப்பெறுகின்றன. செவிலி இரங்கல் என்னும் துறையும் (57, 67), தலைவி வருந்தலும் (62,65,87,93)இடம் பெற்றுள்ளன. இந்த மூன்று துறைகளிலும் அமைந்துள்ள பதின்மூன்று பாடல்களுமே ஆழமான கற்பனையோ, நுட்பமான குறிப்புப் பொருளோ, பொருள் காண்பதற்கு அதிகமாகச் சிந்திக்கவைக்கும் சொற்சிலம்பமோ இடம் பெறாமல் இயல்பான எளிய பாடல்களாக அமைந்துள்ளன.

திருப்பைஞ்ஞீலி இறைவனின் பிரிவாற்றாமையால் தலைவி தன் நகில்களில் சந்தனம் பூசிக் கொள்ளாமல் (எந்த ஒப்பனையும் செய்து

கொள்ளாமல் என்பது கருத்து) இருக்கிறாள். அன்னத்தை அழைத்து இறைவனிடம் தன் காதலைச் சொல்லி அவரைத்தன்னிடம் வரச்செய்ய வேண்டுகிறாள்.

அரும்பன்ன மென்முலை மேற்சாந்
  திடாஎன தாசைமுற்றும்
விரும்பன்ன மேதிருப் பைஞ்ஞீலி
  மேவும் விமலற்கெதிர்
பொரும்பன் கைப்புலித் தோல் அணிந்
  தாற்றுப் புகைந்துழலா
வரும்பன் னகப்பணி யாற்கோதி
  இங்கு வரச்சொல்வையே. (43)

(அரும்பு அன்ன எனது ஆசை, விரும்பு அன்னமே, விரும்பப்படும் என்னும் பொருளில் ஆட்சி விமலற்கு. பொருள்-போரிடும். பல்நகபுலி - கூர்மையானபற்களையும் நகங்களையும் உடைய புலி. புகைந்து உழலா வரும் - சினத்தோடு ஆடிக்கொண்டு வருகின்ற. பன்னக-பாம்-பாகிய. பணியாற்கு - அணிகலன்களை உடையவருக்கு. அன்னமே!எனது ஆசை முற்றும் விமலற்கு ஓதி இங்கு வரச் சொல்வையே என்பது முடிவு.

49, 75 ஆகிய இரு பாடல்கள் கிளிவிடு தூது ஆகும். "வருகின்ற கிளிகளே! இப்பொழுது நான் கைவளை சோர, அன்னையர்களால் வெறுக்கப்பட்டு வருந்திக் கொண்டிருப்பதை நீங்கள் அறியமாட்டீரோ? உமாதேவியாருக்கு இடப்பாதியை அளித்த சிவபெருமானிடம் இன்று நீங்கள் சென்று, எனது பெரிய துன்பங்களை எல்லாம் எடுத்துச் சொல்லிச் சந்திரன் உதிப்பதற்குமுன் திரும்பி வாருங்கள்'' எனத் தலைவி தூதனுப்புகிறாள். இன்று மாலைக்குள் காதலனை அழைத்து வாருங்கள் என்பது குறிப்பு.

வரும்தத்தை காள்!கை வளைசோர்ந்
  தனையர் மனம்வெறுக்க
இருந்தத்தை இன்றறி யீரோ? பைஞ்
  ஞீலி இறையவற்கு,
பொருந்தத்தை யற்கொரு பாகம்தந்-
  தாற்கின்று போய்எனது
பெரும்தத்தை ஓதி வருவீர்
  மதியம் பிறக்கும் முன்னே. (49)

(தத்தைகாள்-கிளிகளே. சோர்ந்து அ(ன்)னையர். இருந்தத்தை-இருக்கின்ற நிலையை. பொருந்த தையற்கு, தையல்-பெண், உமை. தத்தை-துன்பத்தை.)

அடுத்த பாடலில் தலைவியின் பிரிவாற்றாமை சற்று விரிவாக வெளிப்படுத்தப் படுகிறது. அவள் கூறுகிறாள் - "வயலில் விளைகின்ற நீலோத்பலம் போன்ற என் கண்கள் கண்ணீர் சொரிகின்றன. என் கைகளிலிருந்து வளைகள் கழன்று விழ்கின்றன. சந்திரன் உதித்துக் கடல்

பொங்கி என்னை மேலும் வருத்தத் தொடங்குமுன் கிளிகளே! சிவபெருமானிடம் என் நிலைமையைச் சொல்லுங்கள்".

செய்க்கு வளைக்கு நிகர்நேத்-
 திரம்புனல் சிந்துவதும்
கைக்கு வளைக்குலம் சேராததும்
 சுகங்காள்!சொலும் நம்-
மைக்கு வளைக்கும் கடல்சீ-
 றிடும்முன், மதிஎழும்முன்,
ஐக்கு வளைக்குழை பாகற்கு
 அரம்பை அடவியற்கே. (75)

(செய்-வயல். குவளை- பானல்மலர். நேத்திரம்-கண். வளைக்குலம்-வளையல்கள். சுகங்காள்-கிளிகளே. கு-உலகத்தை. வளைக்கும்-சூழ்ந்துள்ள. ஐக்கு-என் தலைவனுக்கு.வளைக்குழை-வள்ளைக் கொடிபோன்ற காதுகளை உடைய உமாதேவி. அரம்பை அடவி-வாழைக்காடு, திருப்பைஞ்ஞீலி. சுகங்காள்!நம்மைச் சீறிடும் முன், எழும்முன், சிந்துவதும் சேராததும் அடிவியற்குச் சொலும் என்பது முடிவு)

தலைவனின் மாலை வரும் என எதிர்நோக்கியிருந்து ஏமாந்த தலைவி வண்டுகளைத் தூது விடுவதாக அமைந்துள்ளது 60ஆம் செய்யுள். அது வருமாறு:-

வரும்தார் எனமகிழ்ந் தேன்இற்றை
 ஞான்று வரையும் சும்மா
இருந்தார் அனுப்புதல் இன்றி, வண்-
 டீர்!இன்று போய்ச்சொலுங்கோள்
பெரும்தா ரணிபுகழ்ந் தேத்தும்பைஞ்-
 ஞீலிப்பெம் மானுக்குத்தேன்
திருந்தார் முடிஉடை யாருக்குத்
 தேவர்தம் தேவருக்கே. (60)

(தார்-மாலை. இற்றை ஞான்று- இந்நாள். தாரணி-உலகம். தேன்திருந்து ஆர்- தேன் நிறைந்த ஆத்திமலர் சூடப்பெற்ற)

அடுத்த நாரைவிடு தூதில் தூது செல்லும் குருகு தக்க அடைமொழிகளால் சிறப்பிக்கப்படுகிறது. உமாதேவிக்குத் தன் உடலில் பாதியை அளித்தவர் இன்று பரிதாபத்திற்குரிய என்மீது சற்றும் பரிவு காட்டுவதில்லை. நாரைகளே!நான் அவர் மீது கொண்டுள்ள காதலை அவரிடம் சென்று கூறுங்கள்" என்கிறாள் ஒரு தலைவி.

தேவிக் குருவம் பகிர்ந்தார்பைஞ்
 ஞீலிச் சிவபுரற்கு,
பாவிக் குருகும் மனம்இலர்
 ஆய பரமருக்கு-

தூவிக் குருமணி நந்தினம்
சிந்தும் துறைமலியும்
வாவிக் குருகினங் காள்!சொல்லு-
வீர்என்றன் மையலவையே. (61)

(உருவம்-உடல். பாவிக்கு உருகும். நந்து இனம் குருமணி தூவிச் சிந்தும் துறை மலிவாவி-சங்குக் கூட்டங்கள் சிறந்த மணிகளை அள்ளி வீசும் நீராடும் துறைகள் நிறைந்த தெப்பக் குளங்களில் வாழ்கின்ற. குருகு இனங்காள்- நாரைக் கூட்டங்களே.)

தலைவி தன் பாங்கியரைத் தூதுவிடுப்பதாக 80ஆம் செய்யுள் அமைந்துள்ளது. தலைவி சந்திரன் தன்னை மிகவும் வருத்துவதாகவும், நகில்களின்மேல் அப்பப்படும் சந்தனமும் சூட்டால் கொதிப்பதாகவும் கூறித் தன் பிரிவாற்றாமையை வெளிப்படுத்துகிறாள். பழித்தற்குரிய செயலைச் செய்யமாட்டேன் என்கிறாள் அவள்.

உதிக்கின்ற அம்புலி வெம்புலி
ஆகி உற அவ்உடு
பதிக்கின் றவம்புரிந் தேன்;சந்தம்
பூசப் பருமுலைமேல்
கொதிக்கின்ற;அம்பல்செய் வேனோ? பெண்
காள்!என் குறைஉரையீர்-
மதிக்கின்ற அம்பலத் தாடும்பைஞ்
ஞீலி வரனுக்கின்றே (80)

(அம்புலி-சந்திரன். வெம் புலி- கொடிய விலங்காகிய புலி. உடுபதிக்கு-சந்திரனுக்கு. இன்று. அவம்-தீமை. சந்தம்-சந்தனம். அம்பல்-பழி. ஆகுபெயராகப் பழித்தற்குரிய செயலை உணர்த்துகிறது.)

மேகவிடு தூதிலும் மாலைப்பொழுதிற்குள் இறைவனை வரச் செய்யுமாறு வேண்டப்படுகிறது. கயிலைமலையைத் தூக்க முயன்ற இராவணனைச் சிவபிரான் நெறித்த வரலாறு இச்செய்யுளில் இடம் பெற்றுள்ளது.

வந்தித் தலைஉடை யார்க்கன்பன்
நீலி வனத்துறைவோன்
பந்தித் தலையன் வரைக்கீழ்
அலறும் படிநெரித்தோன்
சிந்தித் தலைகடல் போலேகண்
நீர்மிகச் சிந்தும்என்முன்
இந்தித் தலைவரும் முன்வடு-
மாறியம் பெய்திமஞ்சே (91)

(வந்தித்தலை-வணங்குதலை. பந்தித் தலையன்-வரிசையாகத் தலைகளை உடையவன், இராவணன். வரை-மலை, கயிலை.

சிந்தித்து-தலைவன் பிரிவை எண்ணி. இந்து இத்தலை- சந்திரன் இந்தப்பக்கம். வருமாறு இயம்பு. எய்தி-சென்றடைந்து. மஞ்சே-மேகமே. மஞ்சே!என்முன் இந்து வரும்முன் நெரித்தோன் வருமாறு எய்தி, இயம்பு என்பது முடிவு).

தூதிற்குரிய பொருள்களைப் புகழ்தல், பிற ஆகா என விலக்குதல், உரிய நேரம் கூறல், மாலை வேண்டல் போன்ற சிறப்புக் கூறுகள் எதுவுமே இல்லாத மிக எளிய பாடல்கள் இவை.

இவ்வந்தாதியில் இரு செய்யுள்கள் (56,67) செவிலி கூற்றாக அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவது பொதுவாகவும் அடுத்தது தலைவனிடமே கூறுவதாகவும் அமைந்துள்ளது. முதல் பாடலில் இறைவனின் சிறப்புக்களே அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. அவர் தெய்வலோக ரம்பையைப் போன்ற தன்மகள்பால் வரவில்லையே எனச் செவிலி வருந்துகிறாள்.

பேர்அரம் பைக்குலம் ஓங்கும்பைஞ்
 ஞீலியர்;பெய்மதுஆர்த்
தாரர்;அம்பைச்சடை வைத்தவர்;
 முப்புரந் தம்மைவென்ற
வீரர்;அம் பைப்பணி பூண்டவர்
 மேவ விரும்பியஎன்
ஓர்அரம் பைக்கனை யாளைஇன்-
 றாளவந் துற்றிலரே. (57)

(அரம்பைக் குலம்-வாழைமரங்கள். மது-தேன். ஆர்த் தாரர்-ஆத்திமாலை அணிந்தவர். அம்பை-தண்ணீரை, கங்கையை. அம் பை பணி-அழகிய பாம்பாகிய அணிகலன். அரம்பைக்கு அனையாளை -தெய்வலோக ரம்பை போன்றவளை, இன்று ஆள.)

தலைவனை முன்னிலைப்படுத்துவதாக அமைந்த பாடலில் தலைவியின் மெய்ப்பாடுகள் சற்று விரிவாகக் கூறப்படுகின்றன. தன் மகள் இறைவனையே நினைந்து பாடிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் துயரப்படுகிறாள் என்று செவிலி கூறுகிறாள். எனவே வந்து வாழ்விக்க வேண்டும் என்பது கருத்து.

படப்பணி பூண்ட புயத்த!பைஞ்
 ஞீலிப் பரம்பர!பூங்
கடப்பணி வேள்அத்த!செங்கையின்
 வண்டு கழலமுத்து
வடப்பணி சிந்தி, மலர்ப்பாயல்
 நீத்து, மருவ எண்ணி,
நடப்பள்நிற் பாடி, கைப் பாள்உயிர்ப்
 பாள்எங்கள் நல்நுதலே. (67)

(படைப்பணி-படத்தை உடைய பாம்பு, பணி இரட்டுறமொழிதலாக அணிகலன். பூம்கடப்பு அணி வேள்-கடம்ப மலர் புனைகின்ற முருகப்பெருமான். அத்த-தந்தையே. வண்டு-வளையல். வடப்பணி-மாலையாகிய ஆபரணம். பாயல்-படுக்கை. உயிர்ப்பாள்-பெருமூச்சுவிடுவாள்.)

மேற்கண்ட இருபாடல்களையும் நற்றாயின் கூற்றாகவும் கொள்ளலாம். இவற்றில் துறைக்குரிய அடிப்படைப் பொருள் மட்டும் மிக எளிமையாகச் சொல்லப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இவ் வந்தாதியில் தலைவி கூற்றாக நான்கு செய்யுள்கள் உள்ளன. முதல் பாடலில் மன்மதனுக்கு நான் என்ன தீங்கு செய்தேன் ஏன் இப்படி எனக்குக் காதலைக் கொடுத்து வருந்துகிறான் என்கிறாள். இதனைக் காமனைப் பழித்தல்(மன்மதோபாலம்பனம்) என்னும் துறைக்கு இனமாகக் கொள்ளலாம்.

மையற் கடாக்களி றல்லா
 நடத்தி வரும்மதனப்
பையற் கடாததென் செய்தேன்?எஞ்
 ஞான்றும் பகைத்துவெங்கோல்
மொய்யற் கடாவித னாகப்பைஞ்
 ஞிலி முழுமுதல்என்
அய்யற் கடானை உரித்தாற்-
 குறுமையல் ஆயினனே. (62)

(மைஅல்-கண்மையைப் போல் கரிய நிறம் உடைய. கடாக்களிறு-யானை. அல்-இரவு. அல்லைக் களிறா நடத்தி வரும் என்க. பையற்கு-பயலுக்கு. அடாதது என். வெம்கோல்- கொடியகணைகள். மொய்-கூட்டம். அல் அசை. அய்யற்கு-தலைவருக்கு. அடு ஆனை-போரிடுகின்ற யானையை.)

அடுத்த பாடலை மதியைப்பழித்தலுக்கு இனமாகக் கொள்ளலாம். நான் தலைவன்பால் மேகத்தைத் தூதாக அனுப்பியுள்ளேன்;அது மாலையை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால் பிறகு இந்தச் சந்திரனால் என்னை என்ன செய்யமுடியும் என்று தலைவி நம்பிக்கையோடு பேசுகிறாள். இப் பாடலிலும் சிவபெருமானின் சிறப்புக்களே மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. துறைக்குரிய அடிப்படையான செய்தி மிக நேரடியாகச் சொல்லப்பட்டுள்ளது.

அறுகா ரணிசடை யாற்குயர்
 ஓங்கல் அரையன்அன்பாய்ப்
பெறுகா ரணிஒரு பாகற்குத்
 தேவர் பிராற்கிலங்கு
மறுகா ரணிதிருப் பைஞ்ஞிலி
 யாற்கென் வருத்தம் சொல்லி

உறுகா ரணியல் கொணர்ந்தால் என்
ஆம்கொல் இவ் வொண்மதியே? (65)

(அறுகு,ஆர்-ஆத்தி.அணி-புனைந்துள்ள. ஓங்கல் அரையன் -மலையரசன், இமவான். காரணி- பார்வதி-மறுகு அணி ஆர் என் மாறுக, வீதிகளின் அழகு பொருந்திய. உறு-மீண்டு வருகின்ற. கார்-மேகம். அணியல்- மாலை. கார் அணியல் கொணர்ந்தால் மதி என் ஆம் என்பது முடிவு.)

அடுத்த செய்யுள் தலைவி தன் தோழியிடம் கூறுவதாக உள்ளது. காமன் கணையாலும் அன்னையர் பகையாலும் ஏற்படும் துன்பத்திற்கு என்ன செய்வேன்; தலைவன் விரைவில் வந்துவிட்டால் நல்லது என்கிறாள் தலைவி.

சாருக் கனைய மொழியாய்!
இரதி தவன்நடத்தும்
போருக் கனையர் பகைக்கினிச்
செய்வதென்? பூங்கதலித்
தாருக் கனையடர் பைஞ்ஞீலி
மேவும் தலைவன் எம்மான்
மேருக் கனையக் குழைத்தான்இங்-
கெய்தில் மிகவும் நன்றே. (87)

(சாருக்கு அனைய-கிளியைப்போன்ற. இரதி தவன்-இரதி தேவியின் கணவன். மாரன். போருக்கு அ(ன்)னையர். பூம்-அழகிய. கதலித்தாரு கனை-வாழைமரக்கூட்டம். அடர்-நெருங்கியுள்ள. மேருக் கல்-மேருமலையை. நையக் குழைத்தான்-வருந்துமாறு வில்லாக வளைத்தவன். இங்கு-காலம். இடம் என இரண்டையும் குறித்து நின்றது.)

அடுத்த கவியில் தலைவி, "எனக்கு உணவின்மீதோ ஒப்பனையின்மீதோ நாட்டம் செல்லவில்லை; என் ஆசை எல்லாம் தலைவனின் மாலையைப் பெறுவது தான்" என்கிறாள்.

விருப்பன்ன மீதில்லை ;பாலினும்
இல்லை;வெண்முத்தணிகொள்
அருப்பன்ன மென்முலை காந்துவ-
தால்அவ் விருப்பம்எங்ஙன்?
இருப்பன்ன முண்டகம் சேரும்பைஞ்
ஞீலியின் எம்இறைவர்,
திருப்பன்ன கம்தரித் தார்புயத்
தேறும் தெரியலினே. (93)

(விருப்பு அன்னம்மீது. அருப்பு அன்ன- அரும்பினைப் போன்ற. காந்துவதால்-எரிச்சல் உண்டாவதால். இருப்பு-வசிப்பிடமாக. அன்னம்-அன்னப்பறவை. முண்டகம்-தாமரைப் பூவினிடம். திரு பன்னகம்-அழகிய பாம்பு. புயத்து ஏறும். தெரியலினே-மாலையிடத்திலேதான், பிரிநிலை ஏகாரம்).

திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதியில் கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்து பக்கமாகப் பதின்மூன்று செய்யுள்கள் உள்ளன என்றும், அவற்றுள் தலைவி கூற்று பதினொன்றும் செவிலி கூற்று இரண்டும் ஆகும் என்றும், தலைவி கூற்றில் ஏழு தூதுப்பொருண்மையிலும் ஏனைய தன் பிரிவாற்றாமையைக் கூறும் வகையிலும் உள்ளன என்றும், செவிலி கூற்றை நற்றாய் கூற்றாகவும் கொள்ளலாம் என்றும் காட்டப்பெற்றன.

இப்பாடல்களுள் கற்பனை மிகுதியோ, இறைச்சி உள்ளுறை போன்ற குறிப்புப் பொருள்கோளோ, சாதுரிய வசனங்களோ, இயல்பு மீறிய இயற்கை வர்ணனையோ இடம் பெறவில்லை. எடுத்துக்கொண்ட துறைக்குரிய செய்தி நேராகக் கூறப்பட்டுள்ளது. 19-ஆம் நூற்றாண்டின் இணையற்ற பெருங்கவிஞராகப் பெரும்பெயர்பெற்று விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் முதன் முதலாக இயற்றப்பெற்ற திரிபந்தாதி ஆகிய இந்தத் திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதியை இந்நாளைய தமிழ்ப் பட்டவகுப்பு மாணவர்கள் ஊன்றிக் கற்றால் சொல்வளம், புணர்ச்சி இலக்கணம், இலக்கிய மரபு, சைவச் செய்திகள் ஆகியவற்றில் தெளிவு பெறலாம்.

64. புராணம் பல புனைந்த புலமையோன்

நாகப்பா. நாச்சியப்பன்
புதுச்சேரி

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனிநிலைச் செய்யுட்கள், தொடர்நிலைச் செய்யுட்கள் வளர்ச்சி பெற்று நீண்டகருத்தமைய, நிலைத்த பொருளமைய அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைச் சாற்றும் முகமாய் பெருங்காப்பிய நிலையை அடைந்தன. பெருங்காப்பியங்கள் பெரும்பாலும் சமயக் காப்பியங்களாகவே அமைந்தன. சமயத்தைப் பரப்பும் நோக்கிலும், சமய உண்மைகளைக் காட்டும் நோக்கிலும் காப்பியக் கருப்பொருளை அமைத்துக்கொண்டு காப்பிய ஆசிரியர்கள் தமிழ் உலா வந்தனர். தமிழ் உலகில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான இலக்கிய வகைகள் மேலோங்கி தமிழ் ஆட்சி செய்துள்ளன. இத்தகைய இலக்கிய வகைமைகள் ஆள்வோரையும், ஆளப்படுவோரையும் வைத்தே காலத்தின் கோலம் கொண்டுள்ளன.

இலக்கியங்கள் மக்களைக் கருவாகக் கொண்டு மக்களுக்காகப் படைக்கப்படும் மக்கள் இலக்கியமாக மாறும் போது அவை மாண்புற வளர்ச்சி பெற்றுள்ளன. மக்களை விட்டு ஒதுங்கி ஆள்வோரை மகிழ்ச்சிப் படுத்தும் தனியின்ப நூலாக அமையும் போது மக்களாலும், காலத்தாலும் ஒதுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஒதுக்கப்பட்ட இலக்கியங்கள் சிலவற்றை சிற்றிலக்கிய வரிசையில் நம்மால் காண முடிகிறது. மக்களை நன்னெறிப் படுத்தும் நோக்கோடு மக்களின் நம்பிக்கைகளை அடியொற்றி அவர்கள் வாழ்கின்ற இடப்பகுதியை வைத்து இலக்கியம் அமைகின்றபொழுது, அவ்விலக்கியம் அப்பகுதி மக்களால் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் திணை இலக்கியங்களாக அமைந்தவைகளும், பிற்கால இலக்கியத்தில் வட்டார இலக்கியங்களாக அமைந்தவைகளும் பெரும்பாலும் இத்தகைய இலக்கிய வீச்சையே பெரிதும் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

தமிழ் இலக்கியத்தில் சமய இலக்கியங்களின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியாக இருந்து வந்துள்ளது. சமயக் காப்பியங்களின் காலத்திற்குப் பின்னர் பன்னிரு திருமுறை ஆசிரியர்களும் அருளிச்செயல்கள் செய்த ஆழ்வார்களும் தோன்றி சமய உலகில் பெரும் படைப்புக்களைத் தந்து சமுதாயத்தை நன்னெறிப்படுத்த முனைந்தனர். நாயன்மார்கள், ஆழ்வார்களின் தொண்டு சமய இலக்கிய உலகில் பெருந்தொண்டாகும். சைவ, வைணவ சமயத்தில் திருத்தொண்டர் புராணமும், கம்பராமாயணமும், மாபாரதமும் தோன்றி சமயத்தின் பேருண்மைகளைக் கதைகள் மூலம் காட்டி மக்களைக் கழிபேருவகை கொள்ளச் செய்தன.

காப்பியங்கள் தோன்றிய காலத்திற்குப் பின்னர் மக்களின் இலக்கியத்தாய்ப்பிற் கேற்ப சமுதாய ஆட்சி முறை, வாழ்க்கை முறைக்கேற்ப 'இலக்கிய வகைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. பேரிலக்கியங்கள், பெருங்காப்பியங்கள் தோன்றிய சமுதாயத்தில் சிற்றிலக்கியங்கள், சிறுபுராணங்கள், தலபுராணங்கள் தோற்றம் பெற்றன.

தலபுராணங்களில் முதல் புராணமாகத் தெரிய வருவது புராணசாகரமும், சாந்திபுராணமும் ஆகும். இதன் காலம் பத்தாம் நூற்றாண்டு என யாப்பருங்கல விருத்தியுரை மூலம் அறிய முடிகிறது. இதன் பின்னர் 12ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டு வரை சற்றேறக்குறைய ஏழு நூற்றாண்டுகள் தலபுராண இலக்கியங்கள் பல ஆங்கொன்றும் இங்கொன்றுமாய் தோன்றியுள்ளன. இதில் 19ஆம் நூற்றாண்டு பல தலபுராணங்களைப் பெற்றுள்ளது. 19ஆம் நூற்றாண்டில் பேரளவில் தலபுராணங்களைப் படைத்த பெருமைக்குரியவராக மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் விளங்குகிறார்கள். தலபுராணங்கள் பாடிய புலவர்களில் அதிக எண்ணிக்கையில் புராணங்கள் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது இவர் இருபத்திரண்டு புராணங்களைப் பாடியுள்ளார். காலத்தின் தேவைக்கேற்ப மக்கட் சமுதாயத்தின் உணர்விற்கேற்ப அக்காலத்தில் இத்தகைய அளவு தலபுராணங்கள் தோன்றி அமைந்துள்ளன.

மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்கள் வாழும் இடத்தின் பெருமையினை அவர்கள் மனம் மகிழுமாறு பாடுவது தலபுராணத்தின் இயல்பாக அமைந்துள்ளது. திருமுறை ஆசிரியர்களும் அருளிச்செயல் செய்த ஆழ்வார்களும் பரம்பொருள் குடிகொண்டுள்ள திருத்தலங்களைப் பாட வரும் பொழுது இத்தகைய இலக்கிய உத்தியைக் கையாண்டு அவ்விடத்துமக்களிடம் இலக்கியத்தை உலாவரச் செய்துள்ளனர். காப்பிய ஆசிரியர்களும் நாடு, நகர், ஆறு என்று அவ்வூர்ச் சிறப்பினை விதந்தோதிப் பாடியுள்ளனர். மக்கள் தாம் வாழும் இடத்தின் மீதும் மண்ணில் மீதும் கொள்ளும் பற்றினைப் பயன்படுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தும் உயர்நோக்கம் இங்கு இலக்கிய நோக்காகப் பயன்பட்டுள்ளது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று மக்கள் மத்தியில் ஆலயங்கள் சிறப்புப்பெற்று ஆலயங்கள் சமுதாய மையங்களாக விளங்கிய கால கட்டத்தில் தலபுராணங்கள் தலச் சிறப்பைக் காட்டும் நோக்கோடு மக்களை நன்னெறிப்படுத்தும் போக்கில் அமைந்துள்ளன.

தலபுராணங்கள் தோன்றியதால் ஆங்காங்கு வாழ்ந்த சாதாரண மக்கள், தங்கள் ஊர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானை வழிபட்டு, நல்லொழுக்கமுள்ளவர்களாய் வாழ்ந்தார்கள். இரக்கம், பொறை, நாட்டுப்பற்று, அஞ்சாமை, ஆசாரம், விருந்தோம்பல், தன்னலமின்னை, ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டார்கள். வாழ்க்கையில் மகிழ்ச்சியும்

அமைதியும் நிலவியது. அரசியல் அமைதி குலைந்த காலத்தில் இப்புராணங்கள் சமூகத்தில் அமைதி நிலவ உதவின. ஓரளவு மக்களிடையே கலையுணர்வும், இலக்கிய உணர்வும் வளர்வதற்கு இவை துணை புரிந்தன என்பர் அறிஞர் மு. அருணாசலம்.

தலபுராணங்களில் தோற்றத்தில் அரசியலும் மக்கள் பொருளாதார நிலையும் காரணமாக அமைந்தன. செல்வச் செழிப்பு கொண்டோர் வீடு பேறு காரணமாய் இறைவன் கதை கேட்பதை ஒரு புண்ணியச் செயலாய் கருதியதுண்டு ஆகவேதான் படித்த புலவர்களைக் கொண்டு வட மொழிப் புராணங்களைத் தமிழ்ப்படுத்தியும், புதிய தலபுராணங்களைப் புதுக்கியும் அவற்றைக் கோயில்களில் படிக்கச் செய்தும் இன்பம் எய்தினர். ஊர்ப்பற்றும், கோயில் பற்றும் மக்களிடையே சிறந்து விளங்கியதால் புலவர்கள் சமயத் தத்துவங்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்குத் தலபுராணங்கள் பெரிதும் துணை செய்துள்ளன. இந்நிலையில் மதுரை, திருவண்ணாமலை, காஞ்சீபுரம், காசி முதலிய திருத்தலங்களுக்குப் பெருமளவு தலபுராணங்கள் ஏற்பட்டுள்ளன.

தலபுராணங்கள் மக்கள் வாழும் தலத்திற்கு, ஊருக்கு, மண்ணுக்கு முதன்மை கொடுத்து தலத்தையும், தலத்திற்கு வளமை சேர்த்து மக்கள் நலம் காக்கும் ஆறு, குளம் ஆகிய நீர்நிலைகளாகிய தீர்த்தத்தையும், மண்ணையும், மக்களையும் காக்கும் தலைவனாகிய இறைவன் மூர்த்தியையும் பாடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அவ்வாறு பாடும் போது அவ்வந்நிலத்து மக்களின் நாடோடி இலக்கியங்களும், ஏட்டில் எழுதா இலக்கியங்களும் இடம் பெற்று அவ்வந்நிலத்து மக்களைத் தன்னகப் படுத்திக் கொண்டு உள்ளன. இவ்வாறு மக்களைத் தன்னகப்படுத்திக் கொள்வதற்காக இலக்கிய ஆசிரியர்கள் மண்ணின் மாண்புகளை வானளாவப் புகழ்ந்துள்ளனர். இதனால் இவ்வகை இலக்கியங்கள் அக்கால கட்டத்தில் அவ்வூர் மக்கள் மத்தியில் பெருஞ் செல்வாக்குப் பெற்றுள்ளன. கற்பனைகள் கதைகளாகி, கதைகள் காலப்போக்கில் கலைவடிவமும் பெற்றுள்ளமையை இன்றும் நாம் பல திருக்கோயில் சிற்ப வடிவங்களில் காண முடிகிறது.

தலபுராண இலக்கிய கால கட்டத்தில் இவ்விலக்கிய வரிசையில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்து பெருமளவில் தலபுராணங்கள் பாடிய பெருமைக் குரியவர் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பெரும்பான்மையும் வடமொழிப் புராணங்களைத் தமிழ்ப்படுத்தி தமிழில் தலபுராணங்கள் செய்துள்ளார். நாடோடிக்கதைகள் பழங்கதைகள், வரலாற்றுக் கதைகள், புராணக்கதைகள், சமயக்கதைகள் இவற்றை அடியொற்றி வடமொழி ஆசிரியர்களும் தமிழ்ப் புலவர்களும் தலபுராணங்களை இயற்றியுள்ளனர். பிள்ளை அவர்கள் வடமொழிப் புராணங்களை எடுத்துக்கொண்டு தமிழ் மரபிற்கேற்ப தலமரபிற்கேற்ப கற்பனை கலந்து தமிழ்ப் புராணங்களாகப்

படைத்துள்ளமை இவண் நோக்கத்தக்கது.

சமுதாயம் எவ்வாறு இருக்கிறது என்பதைவிட எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கவிஞர் கண்ட கனவையே தலபுராணங்கள் காட்டுகின்றன. தலபுராண இலக்கியங்கள் அது தோன்றிய சமகாலக் கதைகளைக் கூறுபவை அல்ல. என்றோ நடந்ததாகக் கூறப்படும் கதைகளைக் கற்பனை கலந்து கூறும் இலக்கிய வகை என்பர் வே.கிருட்டிணசாமி. அவ்வகையில் பிள்ளை அவர்களின் படைப்புக்களான தலபுராண இலக்கியங்கள் சமகாலக் கதைகளைக் கூறாமல் சீர்மிகு தொன்மைக் கதைகளை, அவ்வத்தலத்திற்குரிய கதையாக்கிக் கொள்ளும் பான்மையுடையதாய் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டில் எல்லாப் பகுதிகளில் உள்ள தலங்களுக்கும் புராணங்கள் தோன்றியுள்ளன. என்றாலும் சோழவளநாட்டிற்கு அதிகமான தலபுராணங்கள உள்ளன என்பர். சோழவளநாடு சோறுடைத்து, சோற்றுச் செருக்கால் தோன்றிய இலக்கியங்களும் தோற்றுவிக்கப்பட்ட கலை இலக்கியங்களும் அம்மண்ணில் அதிகம் உள்ளன. சோற்றுப்பாரம் சுமையாக இல்லாமல் மக்களின் மனம் பலவகையான நாட்டத்தையும் நோக்கிச் செல்வது இயல்பு. இவ்வியல்பு காரணமாகவே காவிரி நாட்டில் கன்னித்தமிழ் இலக்கியங்களும், கலைகளும் பெருக்கெடுத்து உள்ளன.

பிள்ளையவர்கள் பாடியுள்ள துறைமாநகர்ப் புராணம் "துறையம்பதிமான்மியம்" என்ற பெயரில் வடமொழிப் புலவரால் பாடப் பெற்றுள்ளது. அந்நூலைப் பிள்ளையவர்கள் 1866 இல் தலபுராணமாகச் செய்துள்ளார்கள் இந்நூல் பத்துப் பாடல்களையும் 539 திருவிருத்தங்களையும் கொண்டு 88 பக்கங்களில் அமைந்துள்ளது.

கடவுள் வாழ்த்து, ஆக்குவித்தோர், அவையடக்கம், சிறப்புப்பாயிரம், திருநாட்டுப் படலம்(88திருவிருத்தங்கள்)திருநகரப்படலம்(65) நைமிசவனப்படலம்(38) சூரியன் பூசித்த படலம் (71) சூரன் பூசித்தபடலம்(42) பொன்னான விசயாலய தேவன் திருப்பணிப் படலம் (51) பொன்னான விசயாலய தேவன் நிருத்ததரிசனஞ் செய்த படலம் (28) சங்கப் புலவர் பூசித்த படலம் (101)திருமால் பூசித்த படலம்(27)தல விசேடப்படலம்(28) அரும்பதவுரை என்ற முறையில் அமைந்துள்ளது.

இந்நூல் காரைக்குடி முரு. வெ. இலக்குமணச் செட்டியாரவர்களுடைய குடும்பஸ்தர்களின் பொருளுதவியைக் கொண்டு இந்நூலாசிரியர் மாணுக்கரும், சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய உத்தமதானபுரம் வே. சாமி நாதையரால் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன் சென்னை பிரஸிடென்ஸி அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது. விரோதி வருஷம் ஆனி மாதம் 1904 என்ற முகப்புரையுடன் அமைந்துள்ளது. இந்நூலின் சிறப்புப்பாயிரம்,

தொடுகட முலக மேத்துஞ் தூறையம் பதிப்புராணம்
வருவது தமிழாற் சொற்றான் வயங்கு பல்கலையுந் தேர்ந்தோன்
கொடுவினை துமிக்குந் தெய்வக் குளிர்சிராயில் மலையில் வாழ்வோ
னடுநிலை யமைமீனாட்சி சுந்தர நாவலோனே

என்றும்,

தூரையம் பதிமான் மியத்தை மீனாட்சி சுந்தர நாவலன் பாடிக்
காரையம் பதிவாழ் கிருட்டின மகிபன் கருத்துறை வேண்டலாவடைந்த
சீரைநன் குடுத்த கழனியம் பதிவாழ் சிதம்பரதேசிகன் வியப்ப
வேரை நன் குடுத்த கயற்க ணாருமுன் னிருந்தரங் கேற்றினன் மாதோ

என்றும் அமைந்துள்ளது.

இந்நூல் வடமொழி நூலாய் இருந்ததை இந்நூலின் ஆக்குவித்தோர் பற்றிய பாடலில் "தெய்வ மான்மிய மென்னப் பகர்தரு பெரு வடமொழியை மொழிபெயர்த்தெடுத்து தமிழினாற் பாடி முடித்திட வேண்டுமால்" என்னும் குறிப்பால் அறிய முடிகிறது. தூரைமாநகர்ப் புராணம் கழனியம்பதி வாழ் சிதம்பர தேசிகன் வியப்ப வேரை நன்குடுத்த கயற்கணா' என்று குறிப்பிடப் பட்டுள்ளதால், சிதம்பர தேசிகனான நடராசப் பெருமான் வியப்பான அங்கயற்கண்ணம்மையான மதுரை மீனாட்சியின் திருமுன் அரங்கேற்றப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் தலத்து இறைவர்களைப்பாடி அடியார்களைப் பாடிய பிள்ளையவர்கள் தம் நன்றியைக் காட்டும் முகமாக, ஒருமலம், இருவினை, மூவகை மாயை, நாற்கதி, ஐந்தவத்தை, ஆறுவகைத்திறன், எழுபிறப்பு ஆவடுதுறையின் மேவிய குருநமச்சிவாயரைப் பஞ்சாக்கர தேசிகர் வாழ்த்தாகப்பாடிய அம்பலவாண தேசிகரைப்பாடி மற்றைச் சிவ நேசர்களைப் பாடித் தொடங்கியுள்ளார். திருநாட்டுப் படலத்தில் ஐந்திணை வளங்களைப்பாடி திணைமக்கத்தையும் கூறியுள்ளார்.

சூரியன் பூசித்தாகவும் சூரன் பூசித்ததாகவும் இரு படலங்கள் அமைத்துத் தலச் சிறப்பை விளக்கியுள்ளார். பொன்னான விசயாலயத்தேவன் திருப்பணிப்படலம், நிருத்த தரிசனஞ்செய்த படலம் என இரு படலங்கள் அமைத்துத் தலத்திருப்பணி செய்த மன்னனைப் பாடியுள்ளார். தூரை மாநகர்ப் புராணத்தின் பெரும் படலமாக விளங்குவது சங்கப்புலவர் பூசித்த படலம் என்பதாகும். இந்நூலுள் இப்படலம் மட்டும் 101 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. மதுரையை மையமாகக் கொண்டு அருள் விளங்கும் சுந்தரனை சொக்கநாதப் பெருமானை தலத் தெய்வமாகக் குறிப்பிடுவதால் இந்நூலுள் சங்கப் புலவர்கள் பற்றிய செய்தி முதன்மை பெற்றுள்ளது. தேவர்கள், மன்னர்கள், புலவர்கள் பூசித்ததாகக் குறிப்பிடும் வழக்கு தல புராணங்களுக்கே உரிய வழக்காகும்.

பிள்ளையவர்கள் பாடிய தூரைமாநகர் என்பது பாண்டிய நாட்டில் கிழக்கே வீரவனத்தையும், தெற்கே கோயிலூரையும் மேற்கே மயூரகிரி எனப்படும் குன்றக்குடியையும் வடக்கே திருமெய்யத்தையும் எல்லைகளாகப்

பெற்று இவற்றினிடையே விளங்கும் புராதனமான சிவஸ்தலம், இது சூரைக்குடி, சூரை, விசயாலபுரமென வழங்கப்படுகிறது. இது சூரை முட்கள் குடிகொண்ட காட்டுப் பகுதி நகரத்தார்கள் எனும் தனவைசியர்கள் சோழநாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்தும் தொண்டைநாட்டுக் காஞ்சிபுரத்திலிருந்தும் புலம் பெயர்ந்து பாண்டிய நாடு சென்று ஒன்பது நகரக் கோயில்களை குலக்கோயில்களாகக் கொண்டு அக்கோயில்களின் வழிவழி அடிமைகளாக இருந்து வாழ்ந்து வரும் பகுதியாகும். ஒன்பது நகரக் கோயில்களில் ஒரு கோயிலேசூரைக்குடிக் கோயிலாகும். இக்கோயிலுக்கு விசயாலயன் எனும் மன்னன் திருப்பணி செய்ததாகத் தலபுராணம் குறிப்பிடுகிறது. ஆனால் அது பற்றிய வரலாற்றுச் சான்றுகள் காணக் கிடைக்கவில்லை.

இலக்கியச் சான்றாக வடமொழிப் புராணம் 'சூரையம்பதி மான்மியம்' எனும் நூல் இருந்ததாகவும், அந்நூலின் தமிழ் மொழியாக்கமே சூரைமாநகர்ப் புராணம் எனும் இத்தலபுராணம் என்பது பிள்ளையவர்களின் தலபுராணம் காட்டும் ஆகச்செய்தியாகும் பிள்ளையவர்கள் இத்தலத்தின் இறைவன் பெயராகச் சுந்தரேசுரரையும் இறைவியின் பெயராக அங்கயறம்மையும் வைப்பது பெரு வழக்காகும் ஆனால் இன்று சூரைக்குடிக் கோயிலில் விளங்கும் இறைவன் இறைவி பெயர்கள் ஆவுடைய நாயகி, தேசிகநாதர் என்பதாகும். இப்பெயர் மாற்றம் எக்கலாத்தில் நிகழ்ந்தது என்பது அறிய இயலவில்லை.

தலபுராணத்தில் தலவிசேடப்படலத்தில் பிள்ளையவர்கள் சூரையம் பதியைப் பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பிள்ளையவர்களின் இலக்கியப் புலமையும் சாத்திரப்புலமையும் தத்துவ நுட்பமும் சிறந்து விளங்குமாற்றை இப்படலம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

சூரையை நினைத்தோரீற்றிற் றுன்னுவர் சிவசாலோகஞ்
சூரையைக் கண்டோ ரீற்றிற் றுன்னுவர் சிவசாமீபஞ்
சூரையைத் தொழுதோ ரீற்றிற் றுன்னுவர் சிவ சாரூபஞ்
சூரையில் வசித்தோரீற்றிற் றுன்னுவர் சிவக்கலப்பே

என்று திருமந்திரம் காட்டும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய நிலைகளைப் பிள்ளையவர்கள் சூரைமாநகர்ப் புராணத்தில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அமைந்துள்ளார்.

நூலின் நிறைவுப் பகுதியில் சூரைமாநகர்ப் புராணம் தன்னை எழுதுவோர், எழுதுவிப்போர், கற்போர், கேட்பவர், பொருள் விரிப்போர் அத்தனை பேரும், சித்த நன்குடையராகிச் சிவலோகம் மருவி வாழ்வார் என்று நூற்பயனாகக் கூறுகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கேற்ப பிள்ளையவர்கள் சூரைமாநகர் என்னும் பாண்டிய நாட்டு வறண்ட பகுதியைச் சோழவளநாட்டுச் சொர்க்க பூமி போலத் தன் கவிதைத் திறத்தால் வளம்பெருகச் செய்கிறார். மக்களின் மன உணர்விற் கேற்ப, காலத்தின்

தேவைக்கேற்ப பிள்ளையவர்கள் செய்துள்ள இப்புராணம் அக்காலத்தின் இலக்கியத் தேவையை நிறைவு பெறச் செய்துள்ளது என்பது உண்மை. வட மொழிப் புராணத்தைப் பிள்ளையவர்கள் தமிழாக்கம் செய்திருந்தாலும், பிள்ளையவர்களின் கவித்திறத்தாலும், கைத்திறத்தாலும் புன்செயும் நன்செயலாகி புதுவளம் காண்பது தெரியருகிறது.

தலபுராணங்கள் இலக்கிய வரலாற்றில் ஓர் உயர்ந்த இலக்கிய மதிப்பைப் பெற்றவை என்று கூற இயலவில்லை என்றாலும் அக்கால மக்களின் உணர்விற்கேற்ப, சமுதாயத் தேவைக்கேற்பப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் என்பது மறுத்தற்கில்லை. அந்த அளவில் பிள்ளையவர்களின் தலபுராணம் ஒப்பற்ற ஓர் உயர்ந்த இலக்கியப் படைப்பாகத் திகழ்கிறது.

65. பிள்ளைத்தமிழ் இரண்டு

தா. நீலகண்டபிள்ளை
நாகர்கோவில்

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அதிகமான இலக்கியங்களை படைத்தளித்தப் பெருமை பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களையேச் சேரும். இம்மாபெரும் அறிஞரின் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் இரண்டினை மட்டும் அறிவோமாக. அவையாவன அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் என்பன.

காப்புப் பருவம்

திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழில் ஆசிரியர் காப்புப்பருவத்தில் சந்தனாசாரியர், சமயாசாரியாயர், சண்டீசர், திருத்தொண்டர்கள், அனைவரையும் வாழ்த்தக்கருதி தன் வழக்கமாக 13 பாடல்களைக் கூறித் தொடங்குகின்றார். காப்புப்பருவம் பற்றிப் பிள்ளைத்தமிழ் போல திருமால் முதல் முப்பத்துமுக்கோடி தேவர்கள் வரையுள்ள கடவுளர் வாழ்த்தப் பெறுகின்றனர். திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழில் விநாயகரை வாழ்த்துவதுடன் வழக்கமான தெய்வங்களையும் காக்குமாறு சொல்லித் தல விநாயகரையும் காக்குமாறு வேண்டுகின்றார்.

தன்னடக்கம் மனிதப்பண்பு, பணியுமாம் பெருமை என்பது வள்ளுவர் வாக்கு. பிள்ளையவர்களின் தன்னடக்கப்பண்பை அவரது நூலாலே அறியலாம்.

மின்னும் பளிங்கு ஈர்த்தெடுத்தன்ன
விளக்குஞ் சால்வென் திருவுருவும்
வெள்ளித் தகடும் சமழ்ப்ப இதழ்
விரிக்கும் வெண்டாமரை மலரும்
மன்னும் படிக வெண்மாலை
வடமும் உவக்கும் அதற்கேற்ப
மாறா வெள்ளை மதியுடையேம்

வாக்கும் புகுந்தாள் பதம்பணிவாம்' எனத் தன் முருகன் பிள்ளைத்தமிழ் நாமகள் வணக்கத்தில் விளக்கி நிற்கின்றார்.

அம்புலிப்பருவம்

பிள்ளைத்தமிழில் அம்புலி புலி எனப்படும். அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் அம்மையும், அம்புலியும் கடலில் உதித்தவர்கள், தக்கனைப் பகைத்தவர்கள், செந்தாமரை இவர்களைக் கண்டால் முகம்வாடும், மாதிரம் தவழ வருபவர்கள், கங்கையை கலக்குபவர்கள்,

பாண்டியர் குலம் செழிக்க வருபவர்கள் ஒற்றுமையைப் போல வேற்றுமையும் காட்டுகின்றார். ''அம்புலி இலைவந்த கமலம் திரட்டுவானேயன்றித் திரையெற்று கமலம் திரட்டானாம், என இருபொருள்பட உவமிக்கின்றார். அம்மைக்கு எல்லா ஆற்றலும் உண்டு என அம்புலியை விட அதிகரித்துச் சொல்கின்றார்.

மேற்கண்ட சாம, பேத, தான, தண்டம் முருகன் பிள்ளைத்தமிழிலும் உள்ளது. அலைகடல் கலங்க எழும்புதல், குவலயத்தை கலைபல விரித்து மலரச் செய்தல், தாமரையாள் கோலம் கொடுத்தல், அம்பலை மணந்து புணர்தல், பரமனார் நயனம் மலர பொலிந்து வெளிவரல் போன்றவற்றாலே முருகனை ஒத்துள்ளாய் ஆயின் உன்னிடத்து 16 கலை, முருனிடம் 64 கலைகள், நீ சிறுமானை ஏந்தியவன், முருகன் பெருமானை ஏந்தியவன், உனக்கு ஒரு குண்டலம், முருகன் 12 உடையவன், நீ காலையில் ஒழித்துறைவாய் முருகன் அத்தகையவனல்ல முருகன் என்றும் ஒரே தன்மையுடையவன் என அம்புலியிடமிருந்து முருகனை வேறுபடுத்தி உரைக்கின்றார்.

கற்பனையும் வருணனையும்

கற்பனையும் வருணனையும் கவிஞனுக்கு உயிர் போன்றன. கற்பனை யின்றேல் கவிதை சுவைக்காது வருணனை இன்றேல் ரசனை இருக்காது. இயல்பாக உள்ள நிகழ்வுகளை கவிஞன் தன் கற்பனைக் கண்கொண்டு நோக்கும் பல காட்சிகள் நூலில் இடம்பெற்றுள்ளன. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் பல கற்பனைக் காட்சிகளைக் காண முடிகின்றது. பெரியபுராணம் செய்திகளால் இறைவனைக் குறை காணுகின்றாள். இறைவன் மீது காணுகின்ற குறைகளாக, இயல்பகை நாயனாரின் மனைவியைக் கேட்டது, சுந்தரருக்காகப் பரவையார் வீட்டுக்குச் சென்றது. மண்டோதரி மகப்பேறு வேண்டி பூஜிக்க இறைவன் அருளியது போன்ற செயல்கள் அம்மையை மனம் நோகச் செய்கின்றதாம். இறைவனை வெளியே சுதந்திரமாக அனுப்பினால் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. எனவே வெளியே விடாமல் சித்தத்துள் சிறைப்படுத்தி வைத்துள்ளதாகக் காரணம் கூறுகின்றார் பிள்ளையவர்கள்.

இலக்கியம் அழகுபெறுவது வருணனையால், திருவிசைக்கழி ஊரின் வருணனை இலக்கிய நயத்தை மேலும் மெருகூட்டுகின்றது. நகர் முழுவதும் உயர்ந்தோங்கிய மாளிகைகள் நிரம்பி உள்ளன. மாளிகைகள் மேக மண்டலத்தை தடவி நிற்பதால் மேகம் இயங்கத் தடையாய் உள்ளதாம். மாளிகையின் மேல் மகளிரும் ஆடவரும் கூடிக்கலந்து இன்புறுகின்றனர். கலவியும் புலவியும் விளைகின்றன. கமலங்களை அம்மகளிர் பறித்தெரிகின்றனர். நெல்லைத் தின்ன வரும் கோழிகளை அம்மகளிர் தம் செவிக்குழைகளை கழற்றி வீசி எரிகின்றனர். அக்குழைகள் சிறுவர்கள் உருட்டும் தேருக்குத் தடையாக எடுப்பாரின்றி வீதிகளில் கிடக்கின்றன. இது நகரின் செல்வச் செழிப்பைக் காட்டி நிற்கின்றது.

கால்வாய் வழியாகத் தண்ணீர் பாய, அந்த தடங்களில் எருமைகள்

ஸ.5.

பல பூக்களைத் தின்று தம் கன்றை நினைத்துத் தீம்பாலை பொழிகின்றது. அந்த பால் நன் பரப்பெங்கும் பாய்கின்றது. அப்பொழிலில், சேல்மீன்கள் பாய்கின்றன. அந்நீர் பல்வேறு மரங்கள், பறவைகள் கொடிகள் மீது தோய்கின்றன. உயர்ந்து வளர்ந்து நிற்கும் பாக்கு மரங்களை

உரைசெய் உருவ முத்தரும்பி
ஒருங்கு நெருங்கு மரகதம் காய்த்து
ஒளி செய் பவளம் பழுத்து நெடிது
ஓங்கும் கூமுகும் என வருணனை செய்கின்றார்.

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழில் அம்புலி பருவத்தில் 'மாலெச்சிலைச் சுற்று முனியெச்சில் தோன்றியோடு மாசுனத்தெச்சிலானாய்' என்னும் பாடலடியில் மால் எச்சிலாகப் பூமியையும், முனி எச்சிலாகக் கடலையும் குறிப்பிடுகின்றார்.

திருமால் திருப்பாற்கடலில் உறங்குவது ஏன்? என்பதற்கு விடை தருகின்றார். இடைச்சியர்கள் வீட்டில் உள்ள பால் முழுவதையும், உட்புகுந்து உண்டு பின் அவர்களுடைய மத்தடியைப் பெற்று வருந்தும் தன் கணவனாகிய திருமாலை உம்முடைய விருப்பத்தின் படி பாலை உண்டு கொண்டு சுகமாகத் தூங்குக என்று, தான் பிறந்தகமாகிய பாற்கடலில் இருக்கச் செய்தவள் என அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழின் காப்பு பருவப் பாடலில் இயம்புகின்றார்.

இறைவி தோன்றல், திரிதல், கெடுதலின்றி இருக்கின்றாள் என்பதனை,

பங்கய மலர்த்திரவரு செங்கதிர்
நிலுத்தவுடல் பனிமதி நிறங்கொளாது
படரரி மதர்த்தகன் குழியாது
நாடிகள் பசந்துறாது நுனைவாய்
கொங்கைகள் கூறாது மட்சுவை நாப்
பெறாது அகடு குழையாது உறாதினம்பல்
குறிபடாது;அருமை யொரு உயிர்த்திமய
மாதேவி என வருணிக்கின்றார்.

சொல் நயங்கள்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை இனிய சொல்நயம், மிக்கப் பாடல்களைத் தம் நூலில் அமைத்துள்ளார். பாடல்கள் இனிய சந்தம் மிக்கதாய் விளக்குகின்றன. நூற்களில் நைமிசப்படலம் ஒன்றமைத்துச் சொற்சிலம்பம் ஆடுகின்றார்.

முத்தியளித்திடு மத்தி வனத்தவள்
முத்தமளித்தருளே - (அகி.பி.த. முத்தப்பருவம்)

நாவிரி பாவிரி பூவிரி காவிரி நன்னீர் ஆடுகவே
(அகி.பி.த.நீராடற் பருவம்)

திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழில் தமிழின் பெருமையையும், தமிழுக்கும், முருகனுக்கும் உள்ள தொடர்புகளையும் விளக்குகின்றார். முருகன் தமிழோடு தொடர்புடையவன். தமிழ் இனிமையையும், எழிலும் கூடிய தண்ணிய உருவினன், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் பேரன்புமிக்க பெருமான் வாழ்த்தியவர்க்கும் பேரருள் சுரப்பவன், புலவர்கள் பாடுகின்ற பாவினுக்கு இசைந்து அவரோடு நட்புரிமை கொள்ளும் நன்மைக் குணமுடையவன்.

குறவர் பெற்றவொரு மடமயிர் கினிய
கொழுநனைப் புலவர் பாடுபாவிற்கினிதாய்
மிக்க நம்புறுகுணவனை - எனவும்

முருகன் விரும்பும் மொழியாக இரு மொழிகளைக் கூறுகின்றார். ஒன்று குறவர் கொழுங்கொடியாகிய வள்ளி அம்மையின் தெள்ளுமொழி. மற்றொன்று புலவர்கள் தம் அறிவும் அன்பும் குழைத்தளிக்கும் கவிமொழி.

விரையெறி கருங்குழற் செவ்வாய்க் குறக்கோதை
வெண்முறுவல் கொண்டுரைக்கும்
வெம்மொழிக்கும் புலவர் தம் மொழிக்கும்

குழை விருப்பனை முருகன் கவிஞர்க்குத் தோழன் என்பதைச் செங்கீரைப் பருவம் பாடலில் (பாடல் 10)

நாமலர் பாமொழி, தூமொழி யாரிடை
நண்பா பண்பாளா' என்கின்றார்.

முருகனே தமிழாய்ந்த தன்மையை தாலப்பருவத்தில்,

தண்ணிய குரவமர் புண்ணிய குரவா தாலோ தாலேலோ
தமிழ்தெரி சங்கத் தலைமைப் புலவா தாலோ தாலேலோ!

எனத் தலைச்சங்கம் குறித்தும், முருகன் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தனம் குறித்தும் உரைக்கின்றார் மேலும்,

கருத்தைத் திருத்தும் இனிய

மாமலி பெரும்புகழ்த் தென்கலைக்கும், வடகலைக்கும் தலைவ, என்றும் சிறுதேர்ப் பருவத்தில் பாடுகின்றார். தமிழ் மொழியின் தலைவன் முருகபிரானே என்ற குறிப்பு அதில் காணப்படுகின்றது.

சைவ சமயக் கருத்துக்களை உள்ளடக்கிய பாடல்கள் பல இவரது பாடல்களில் காணப்படுகின்றன. 'ஆறு சமயங்களுக்கும், ஆறு ஆதாரங்களுக்கும் ஆறு அத்துவாக்களுக்கும் தாமே முதல்வன் என்பதைத் தெரிவிக்கவே முருகன் ஆறு திருமுகங்களுடன் விளையாடுகின்றான் 'ஆட்டும் சமயம் ஆறினுக்கும் ஆதாரங்கள் ஆறினுக்கும்' அத்துவாவோர் ஆறினுக்கும் அமையும் தானே முதலென்று தீட்டும்படி யாவரும் தெளியத் தெளிந்தாங்கு ஆறுமுகம் திகழ்' என சமய கருத்துக்களை உரைக்கின்றாள்.

புதிய உத்திகளாக, அகிலாண்ட நாயகியை 'திரிபுரச் சந்ததி தழைக்க முலை கொடுத்த தலைவி' என அழைக்கப்படுகின்றமை. (அ.ந.பி.த.முத்.10)

திருமுருகனுக்கு ஆறுதலை, பன்னிரு கரங்கள், ஆனால் திருவடி இரண்டே, காரணம் என்னவெனில் சிற்றில் இழைத்துச் சிறுமியர் விளையாட முருகன் சிற்றிலைச் சிதைக்கின்றான். இரு காலாலே இப்படி செய்கின்றான். பன்னிரு காலிருப்பின் என்ன செய்வான்? அது அச்சிறுமியின் தவப்பயனே முருகனுக்கு இருகால்கள் அமைந்தன என்றுரைக்கின்றார். (முருகன். பிள்ளைத்தமிழ்-காப்பு-9)

வரலாற்றுச் செய்திகள்

புராண வரலாற்றுச் செய்திகளைக் கவிஞர்கள் சொல்வது மரபு. பிள்ளையவர்களும் தம் நூலில் இதனைச் சொல்லிச் செல்கின்றார். பிரம்மன் திருக்கைலாயம் வழியாகச் செல்லும் காலத்து முருகபெருமானை வணங்காது, கவனியாது சென்றான் அவனை அருகே அழைத்து முருகன் நீ செய்யும் தொழில் யாது? எனக் கேட்க பிரம்மன் படைப்பு எனது தொழில் எனச் செருக்குடன் கூற, முருகன் மீண்டும் உனக்கு வேதம் வருமோ என்று கேட்க, வரும் என்றான் பிரம்மன் ரிக் வேதத்தை உரைப்பாயாக என முருகன் கேட்க, பிரம்மன் பிரணவத்தை ஓதினான். பிரணவத்தின் பொருளுரைத்துப் பின் வேதம் கூறுக என முருகன் சொல்ல, பொருள் தெரியாத பிரம்மனின் தலையில் குட்டினான் குமரக்கடவுள். என புராணக்கதையோடு தொடர்பு படுத்தி, குட்டிய அந்த செங்கையால் சப்பாணி கொட்டிட வேண்டும்.

தீதுபதியாத கைலாயத் தளிக்கு முன் திகழ்மணிக் கோபுரத்துட்
திருவாய்தல் வைகி அவ்வழியாற் றொழாதேகு திசைமுகனை
அருகழைத்து அங்கு
ஏதுபுரிவாய் என வினாவப் படைப்பேன் யான் என்ன
மறைவருங்கொல் என்னவரும் இருக்கு
ஒதுக என ஒதுவான் இயையமுற் குடிலை யோத
ஒதுகுடிலைப் பொருள் உணரத்துப் பின் உரை என ஒருங்கவன்
மயங்க நோக்கி
ஒள்ளிதழ்அதுக்குபு நடுத்தலை புடைப்ப மிக்க கூறிப் புறஞ்சி
வந்த
தாதுமலி கைத்தளிரகத்துவம் சிவப்ப ஒரு சப்பாணி கொட்டியருளே,
தன்னிகர் விடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே

- என திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழில் சொல்லப்படுகின்றது.

தமிழிலக்கிய வரலாற்றில் தனித்தோர் இடம் பெற்ற பிள்ளையவர்கள், பல இலக்கியவகைகளிலும் தன் கவனத்தை செலுத்தியவர். அதிக அளவில் தலபுராணங்கள், பிள்ளைத்தமிழையும் பாடியவர். நூல்களை மரபு வழியிலும் புதுமையாகவும் பாடியுள்ளார். இனிய வருணனை, புராண வரலாற்றுக் கற்பனைக் கருவூலமாக அவரது இலக்கியங்கள் அமைந்துள்ளன.

௬௬. மகாவித்துவான் கலம்பகங்களில் உறுப்புக்கள்

ச. பத்மினி
கோவை

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெருங்கவிஞர். எண்ணற்ற தமிழ்ப்புலவர்களை உருவாக்கி அளித்ததோடு, ஓர் தமிழாசான் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை வாழ்ந்துகாட்டியவர். தமிழ் அன்னைக்கு உ.வே. சாமிநாதையர் அவர்களை வழங்கியது மகாவித்துவான் அவர்களின் பெருவள்ளன்மையே. அவரோடு பழகியவர்கள் அனைவருமே கவிஞர் பெருமானின் பண்பு நலன்களையும் குறிப்பாக அடக்கத்தையும் மிகப் போற்றினார்கள் என்பதை அவருடைய வாழ்க்கை வரலாற்றால் அறிகிறோம்.

மகாவித்துவானுக்குச் சமகாலத்தவராக வாழ்ந்து எண்ணிக்கையில் அவருக்குச் சமமாகத் தமிழ்ச்செய்யுட்களை இயற்றிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணத்தின் கண்கண்ட புலவர் சருக்கத்தில்,

தும்பியே நிகர்மீ னாட்சி
  சுந்தரப் பெயர்ப்பா வாணன்
பம்பிய தலபு ராணம்
  பலபல பாடித் தீர்த்தோன்
அம்பிகை மயூரம் ஆகி
  அரனைப்பூ சித்த ஊரில்
வெம்பிணக்கு அணுவும் கன்றி
  மிகக்களித்து உறவுஆ னானே. (பாடல்:9)

என்று வியந்து பாராட்டுகிறார்.

மகாவித்துவான் அவர்கள் 22 தலபுராணங்களையும், பிறவகைக் காப்பியங்கள் ஐந்தையும் இயற்றியுள்ளார். இவற்றைத் தவிரப் பதிகம், அந்தாதி வகைகள், மாலை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், உலா, தூது, குறவஞ்சி, சிலேடை வெண்பா என்னும் சிற்றிலக்கிய வகைகளில் 45க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடல்களும் மிகப்பல. இக்காரணம்பற்றியே தமிழ் அறிஞர்கள் அவரைப் பத்துக்கம்பர் என்கின்றனர்.

மகாவித்துவானின் கலம்பகங்கள் - அறிமுகம்

மகாவித்துவான் வாட்போக்கிக் கலம்பகம், அம்பலவாண தேசிகர் கலம்பகம் என இருகலம்பகங்களை இயற்றியுள்ளார். இவற்றுள்

முதலாவதாகிய வாட்போக்கிக் கலம்பகம் கவிஞர்பெருமானின் முப்பத்தேழாம் வயதில் இயற்றப்பட்டிருக்கலாம். திருவாட்போக்கி என்னும் தலத்தில் கோயில்கொண்டுள்ள சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது இந்நூல். இதனைப்பற்றி டாக்டர். உ.வே.சாமிநாதையர் அவர்கள் 'இவர் ஒரு முறை இரத்தினகிரியென வழங்கும் வாட்போக்கி யென்னுந் தலத்திற்குச் சென்று சுவாமிதரிசனம் செய்தார். அப்பொழுது அந்தத் தலத்தின் அடியவர்களாகவுள்ள பன்னிரண்டாஞ் செட்டிமார்களிற் பலர்விரும்ப, அந்த தல விஷயமாக ஒரு கலம்பகம் இவராற் பாடப்பெற்றது. அது வாட்போக்கி கலம்பகம் என வழங்கும்........................ கலம்பகத்திற்குரிய உறுப்புக்கள் எவ்வளவு செவ்வையாக அமைய வேண்டுமோ அங்ஙனமே இதில் அமைந்து விளங்குகின்றன...................... பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகங்களில் இது முதலாவதாகும். இவர்கள் சொல்ல இந்நூலை அப்பொழுதப்பொழுது எழுதி வந்தார். சி. தியாகராச செட்டியார்.

கவிஞர்பெருமான் திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினைந்தாவது பட்டத்தில் இருந்த தவத்திரு அம்பலவாண தேசிகரைப் போற்றி இயற்றிய கலம்பகம் அம்பலவாண தேசிகர் கலம்பகம் எனப்படும். இக்கலம்பகத்தை யாத்ததற்காக அவருக்குத் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இச் சிற்றிலக்கியம் ஏறக்குறைய கவிஞர் பெருமானின் நாற்பத்தைந்தாவது வயதில் இயற்றப்பட்டிருக்கலாம். இக்கலம்பகத்தைப் பற்றித் தமிழ்த்தாத்தா அவர்கள், "அப்பால் ஒரு விசேட காலத்தில் திருவாவடுதுறையில் அம்பலவாண தேசிகர் முன்னிலையில் பல வித்துவான்களும் பிரபுக்களும் சூழ்ந்த மகாசபையில் அந்நூல் அரங்கேற்றப்பட்டது. அதைக் கேட்ட எல்லோரும் அதிசயித்தார்கள். திருவாவடுதுறை சம்பந்தமாகப் பல பிரபந்தங்கள் இருந்தாலும் அக் கலம்பகம் எல்லாவற்றிலும் சிறந்ததாகவும் பொருள்நயம் செறிந்ததாகவும் சைவ சம்பிரதாயங்களையும் ஆதீன சம்பிரதாயங்களையும் விளக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதென்று கொண்டாடினார்கள்." எனக் கூறுகிறார்.

இரு கலம்பக ஒப்பீடு - உறுப்புக்கள் அளவில்

மகாவித்துவான் அவர்கள் ஈடு இணையற்ற பெருங்கவிஞர். இவரால் இயற்றப்பெற்ற இருகலம்பகங்களும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து சைவ சம்பிரதாயங்கள், பக்தி, தத்துவச் செறிவு ஆகியவற்றால் சிறந்து விளங்குகின்ற சிற்றிலக்கியங்களே ஆகும். இவற்றுள் ஒன்று சிவபெருமானையும் மற்றொன்று சைவ குருபீடத்தையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. கவிஞர்பெருமான் தம் வாட்போக்கிக் கலம்பகத்திற்குப் பாயிரமாக விநாயகர் துதி, சமயாசாரியர் துதி என இரண்டு கட்டளைக்கலித்துறைகளை அமைத்துள்ளார். அம்பலவாண தேசிகர் கலம்பகத்திற்கு விநாயகர் காப்பாக நேரிசை அகவல் ஒன்று மட்டும் பாடப்பட்டுள்ளது. இந்த இரு கலம்பங்களிலும் மகாவித்துவான் எந்த எந்தக் கலம்பக உறுப்புக்களை அமைத்துள்ளார் என்பதையும் அவற்றை எந்தெந்த யாப்பில் யாத்துள்ளார் என்பதையும் செய்யுளின் புறநிலையில்

நின்று ஒப்பிட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

1.அம்மானை

மகளிர் விளையாடல்களுள் ஒன்று அம்மானை ஆகும். மூன்று பெண்கள் பாட்டுடைத் தலைவனைப் புகழ்ச்சியாகவோ, நிந்தாத் துதியாகவே பாடிக்கொண்டு அம்மானை ஆடுவதாக இப்பாடல் அமைக்கப் பெறும்.

இவ்வுறுப்பு அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் கூறப்படுகிறது. மகாவித்துவான் அவர்கள் தம் இரு கலம்பகங்களிலும் இவ்வுறுப்பை இலக்கிய மரபிற்கேற்ப ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசையாகவே படைத்துள்ளார்.(வாட்போக்கி, 13, தேசிகர் 12).

2.இடைச்சியார்

இடைச்சியார் என்னும் உறுப்பை எந்தப் பாட்டியல் நூலும் குறிப்பிடவில்லை. இது ஒரு புதிய உறுப்பாகும். இதற்குரிய செய்யுள் பால், தயிர், முதலியவற்றை விற்கும் ஆயர்குல மங்கையொருத்தியைக் கண்டு காமுற்றவனின் கூற்றாக அமைக்கப்படும். வாட்போக்கிக் கலம்பகத்தில் இவ்வுறுப்பு அறுசீர் விருத்தம் ஒன்றாலும் நேரிசை வெண்பா ஒன்றாலும்(79.80)அமைக்கப்பட்டுள்ளது. அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் இவ்வுறுப்பு காதல்கொண்டோன் கூற்றாக அமையாமல் வேறுவகையாக உள்ளது. இரண்டையாசிரிய விருத்தத்தில் அமைந்த இந்தப் பாவில்(82)கவிஞர் ஓர் இடைச்சியைப் பார்த்துத் திருவாவடுதுறையில் உன்னிடம் யாரும் பால் தயிர் மோர் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். எனவே வேறு எங்காவது சென்று வியாபாரம் செய் எனக் கூறுகிறார்.

3.ஊசல்

பெரும்பாலும் பாட்டுடைத் தலைவன் ஊஞ்சலாடும்போது அதை ஊக்கிவிட்டுக்கொண்டு பாடுவதாக அமைவது ஊசல் என்னும் கலம்பக உறுப்பு ஆகும். பொதுவாக இது எண்சீர் விருத்தத்தில் பாடப்பெறும். எல்லாப் பாட்டியல் நூல்களிலும் இவ்வுறுப்பு கூறப்பட்டுள்ளது. மகாவித்துவான் தம் இரு கலம்பகங்களிலும் இதனை ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை யாப்பில் அமைத்துள்ளார். (57,70) இவற்றில், "பெண்களே!பாட்டுடைத்தலைவரின் புகழைப்பாடிக்கொண்டு ஊசலாடுங்கள்" எனக் கூறகிறார். அதற்கேற்ற யாப்பு கொள்ளப்பட்டுள்ளது.

4.கள்

கள்ளை விரும்பிக் குடிக்கும் ஒருவன் அதனைப் புகழ்ந்து கூறுவதாகச் செய்யுள் இயற்றுவது களி எனப்படும். இதுவும் சித்து, சம்பிரதம் போல இருபொருள் பயப்பதாக அமையும். இவ்வுறுப்பு தொன்னூல் விளக்கம் தவிரப் பிற பாட்டியல்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளது. வாட்போக்கிக் கலம்பகத்தில் இவ்வுறுப்பு எண்சீர், கட்டளைக்கலித்துறை, பதினான்கு சீர் (62,63,64) ஆகிய யாப்புக்களிலும், அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் அறுசீர், எண்சீர் (62,63,64) யாப்புக்களிலும்

இயற்றப்பட்டுள்ளது.

5.காலம்

தலைவியின் பிரிவாற்றாமையைக் காட்டும் துறை. தலைவன் பொருள் முதலியன காரணமாகப் பரிந்து செல்லத் தலைவி கார் முதலிய காலங்களில் தனக்கு உளவாகும் துன்பங்களைக் கூறுவது இத்துறை. அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் இடம்பெற்றுள்ள கார் என்னும் இவ்வுறுப்பினை இக் கவிஞர்பெருமான் இரு கலம்பகங்களிலும் எண்சீர் விருத்தமாகவும் மடக்காகவும் அமைத்துள்ளார்.(27, 16)

6.குறம்

தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் குறத்தி ஒருத்தி குறி சொல்லுவதாக அமையும் உறுப்பு குறம் எனப்படும். வாட்போக்கிக் கலம்பகத்தில் இவ்வுறுப்பு எண்சீர் விருத்தமாகவும் (31) அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் பதினான்கு சீர் விருத்தமாகவும் (68) அமைந்துள்ளது.

7.கைக்கிளை

ஒருதலைக்காமத்தைக் குறிப்பது கைக்கிளை எனப்படும். தலைவியைக் கண்ட தலைவன் அவள்மீது காதல் கொள்வதைக் கூறும் திணை. இவ்வுறுப்பு பொதுவாக மருட்பாவால் அமைக்கப்பெறும். கவிஞர் பெருமான் அவர்களும் இம்மரபையே பின்பற்றியுள்ளார்.(வாட்போக்கி:55, தேசிகர்:60).

8.கொற்றியார்

திருமாலின் வேடத்தைத் தாங்கிப் பிச்சையேற்குமொரு பெண்ணைக் கண்ட ஒருவனின் கூற்றாகச் செய்யுள் அமைப்பது கொற்றியார் எனப்படும். இதுவும் பாட்டியல் நூல்களில் குறிப்பிடப்படாமல் சில நூல்களில் மட்டும் காணப்படும் புதிய உறுப்பாகும். மகாவித்துவான் இரு கலம்பகங்களிலும் இதனை அறுசீர் விருத்தங்களாக அமைத்துள்ளார். (90,81)

9.சம்பிரதம்

மாய வித்தைகளில் வல்லவனொருவன் தன் ஆற்றலை எடுத்துக் கூறுவதாக அமைக்கப்படும் இந்த உறுப்பிற்குரிய செய்யுள் இரு பொருள் பயப்பதாக அமையும் கவிஞர்பெருமான் தம் இரு கலம்பகங்களிலும் இவ்வுறுப்பைப் பதினான்குசீர் விருத்தத்தில் (45,28)அமைத்துள்ளார்.

10.சித்து

இரச வாதத்தில் வல்லவனொருவன் தன் திறமையைக் கூறுவதாக அமைவது சித்து எனப்படும். சம்பிரதத்தைப் போலவே இதுவும் இருபொருள் பயப்பதாக அமையும். அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் இவ்வுறுப்பு கூறப்படுகிறது. வாட்போக்கிக் கலம்பகத்தில் ஒர் அறுசீர், இரண்டு எண்சீர் என மூன்று விருத்தங்களால் (51,53) இவ்வுறுப்பு அமைய, அடுத்ததில் இரண்டு அறுசீர், ஓர் எண்சீர். ஒரு பதினான்குசீர் என நான்கு(53-56)பாடல்களால் அமைந்துள்ளது

11.தவம்

இம்மை மறுமைப் பயன்களை நாடி உடம்பை வருத்திக் கொண்டு கொடிய நோன்புகளை மேற்கொள்ள வேண்டாம்;இப்பாட்டுடைத் தலைவனைச் சரணடைவதன் மூலம் மிக எளிதில் அவைகளைப் பெறலாம் என்பதே இவ்வுறுப்பின் பாடுபொருள் ஆகும். இவ்வுறுப்பு வெண்பாப் பாட்டியல் தவிர மற்ற அனைத்திலும் இடம் பெற்றுள்ளது. வாட்போக்கிக் கலம்பகத்தில் அறுசீர் (12)நேரிசை வெண்பா(32) என்னும் இரு யாப்பிலும் அடுத்த கலம்பகத்தில் அறுசீர் விருத்தத்திலும் (15)தவம் என்னும் உறுப்பு அமைந்துள்ளது.

12.தழை

தலைவன் கையுறையாகத் தருகின்ற தழையாடையைப் பற்றிய செய்யுள். கையுறையைப் பாங்கி ஏற்கப் பாங்கியைத் தலைவன் வேண்டல். பாங்கி தலைவியை வேண்டல் அல்லது தலைவி கையுறை ஏற்றமை பாங்கி தலைவற்குரைத்தல் ஆகிய துறைகளில் இப்பாடல் பெரும்பாலும் கலம்பகங்களில் இடம்பெறும். வாட்போக்கிக் கலம்பகத்தில் தலைவி கையுறை ஏற்றதைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தலாகக் கட்டளைக்கலித்துறை யாப்பில் (33) இவ்வுறுப்பு இடம் பெற்றுள்ளது. மற்றொன்றில் பாங்கி தழையைப் புகழ்ந்து உரைப்பதாக நேரிசை வெண்பாவால் (22) கூறப்பட்டிருக்கிறது.

13.தூது

தலைவனைப் பிரிந்த தலைவி தலைவனிடத்துக் கிளி, மயில், நெஞ்சு, நாரை, போன்ற அஃறிணைப் பொருள்களையோ, பாங்கி போன்றோரையோ தூதாக விடுப்பது இந்த உறுப்பாகும். இதுதூது விடுக்கப்படுவதன் பெயரால் அழைக்கப்பெறும். இவ்வுறுப்பு பன்னிருபாட்டியல் தவிர அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

வாட்போக்கிக் கலம்பகத்தில் நாரை (93)மேகம் (25) வண்டு (23,26) ஆகியன தூதாக அனுப்பப்படுகின்றன. இவற்றுள் நாரைவிடு தூது கொச்சகக் கலிப்பா ஆகவும், மேகவிடு கட்டளைகலித்துறையாகவும், வண்டு கொச்சக் கலிப்பா, பதினான்கு சீர்த்தாழிசை என்னும் இருவகைப் பாக்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்ததாகிய அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் நாரை நலிநிலைத்துறையாகவும் (23)மேகம் கட்டளைக் கலித்துறையாகவும் (21) வண்டு கலிவிருத்தமாகவும்(24)யாக்கப் பெற்றுள்ளது.

14.பாண்

பரத்தையிடம்சென்ற தலைவன்பால் தலைவி உடல் கொள்ள, அதைத் தணிக்கத் தலைவனால் தூதாக அனுப்பப்பட்ட பாணனை நோக்கித் தலைவி கூறுவதாக அமைக்கப் பெறுவது பாண் என்னும் உறுப்பு. இதனைத் தொன்னூல் விளக்கம் பாணன் என்ற பெயரால் குறிப்பிடுகிறது. பன்னிருபாட்டியலில் இவ்வுறுப்பு கூறப்படவில்லை. வாட்போக்கிக் கலம்பகத் தலைவி பாணனை நோக்கி எதிரில் நின்றால் கற்களை எறிந்து

மண்டையை உடைத்து விடுவேன் என்கிறாள். (74.எண்சீர்)அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் தலைவி பாணனிடம் தன்பால் வந்து பொய்யுரைப்பதைவிடத் தேசிகரின் திருவடிகளை வணங்கினால் உய்யலாம் என்கிறாள். (76.அறுசீர்)

15.பிச்சியார்

சைவ வேடம் பூண்டு பிச்சையெடுக்கும் ஒரு பெண்ணை முன்னிலைப்படுத்திச் செய்யுள் இயற்றுவது பிச்சியார் எனப்படும். இவ்வுறுப்பு பாட்டியல் நூல்களில் கூறப்படவில்லை. வாட்போக்கிக் கலம்பகத்தில் எண்சீர் விருத்தமாகவும் (91) மற்றொன்றில் அறுசீர் விருத்தமாகவும் (86) இவ்வுறுப்பு பாடப்பெற்றுள்ளது.

16.புயவகுப்பு

பாட்டுடைத் தலைவனின் தோள்களின் சிறப்புகளைப் பலவாறு புகழ்ந்து கூறுவது புயவகுப்பு ஆகும். 8,16,32, அல்லது 64 கலைகளையுடையதாக நான்கு எதுகைகளைப்பெற்று, எடுத்துக்கொண்ட ஒரு பொருளின் புகழையே வகுத்துக் கூறுவது வகுப்பு என்னும் வண்ண யாப்பு விசேடம் ஆகும். இவ்வுறுப்பினை அனைத்துப் பாட்டியல் நூல்களும் குறிப்பிடுகின்றன. வாட்போக்கிக் கலம்பகத்தில் சிவபெருமானின் தோள்களின் சிறப்பு 16 கலை வகுப்பால் (9)விரிவாகப் பாடப்பெற்றுள்ளது. தேசிகர் கலம்பகத்தின் புயவகுப்பு எண்சீர் வண்ணவிருத்தமாக (8)அளவாக அமைந்துள்ளது.

17.மதங்கு

மதங்கு என்னும் சொல் ஆடல்பாடலில் வல்லவர் என்னும் பொருளது. இரு கைகளிலும் வாளை எடுத்துச் சுழற்றிக் கொண்டு ஆடல் பயிலுமொரு இளமங்கையைக் கண்டு காமுற்ற ஒருவனின் கூற்றாகச் செய்யுள் அமைப்பது மதங்கு அல்லது மதங்கியார் எனப்படும். இவ்வுறுப்பு அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவித்துவான் அவர்களுடைய இரண்டு கலம்பகங்களிலும் இவ்வுறுப்பு அறுசீர் விருத்தத்தால் இயற்றப்பட்டுள்ளது.(20,14)

18.மறம்

மறவர் குடியில் பெண்கேட்ட ஒரு மன்னனுக்கு அவர்கள் பெண்தர மறுத்து, அவ்வரசனையும் தூதனையும் இதழ்ந்துரைப்பதாக மறம் என்னும் இவ்வுறுப்பு அமைக்கப்பெறும். மகள் மறுத்தல் என்னும் புறத்துறை ஆகிய இந்தப் பாடுபொருள் அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாட்போக்கிக் கலம்பகத்தில் எண்சீர் விருத்தம் ஒன்று (68)கலிவிருத்தம் ஒன்று (69) நேரிசை வெண்பா ஒன்று (72) என மூன்று செய்யுள்களும், மற்ற கலம்பகத்தில் எழுசீர் (72)பதினான்குசீர் (73) அறுசீர்(74) என மூன்று பாடல்களும் மறம் என்னும் உறுப்பாக உள்ளன.

19.வலைச்சியார்

மீன்விற்கும் பரதவப் பெண்ணைக்கண்டு காமுற்ற இளைஞனின் கூற்றாகக் கலம்பகங்களுள் அமைக்கப்படும் உறுப்பு வலைச்சியார் ஆகும்.

இதுவும் பாட்டியல் நூல்களில் காணப்படாததோர் புதிய உறுப்பு ஆகும். வாட்போக்கிக் கலம்பகத்தின் இவ்வுறுப்பு காமுகன் கூற்றாக அமைகிறது. அறுசீர் விருத்தமாகிய இதில் (83) பல சாதி மீன்களின் பெயர்கள் தொனிக்கின்றன. அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் இது காமுகன் கூற்றாக அமையாமல் திருவாவடுதுறையில் யாரும்புலால் உண்ணமாட்டார்கள் எனவே உனக்கு விற்பனையாகாது. வந்த வழியேத் திரும்பச்செல் எனக் கூறும் அறுசீர் விருத்தமாக அமைந்துள்ளது. சிரவையாதீனம் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் தம் திருப்பேரூர்க் கலம்பகத்தில் இதனைப் பின்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

20.விறலி

விறலி என்பது எந்தப் பாட்டியல் நூலிலும் கூறப்படாததோர் உறுப்பு ஆகும். மேலும் இது கலம்பகங்களில் மிகமிக அருகிலே காணப்படுகிறது. பொதுவாகச் சிற்றின்பவேட்டையால் சீரழிந்த ஒருவன் மனம் திருந்தி, தன் மனைவியின் கோபத்தைத் தணிக்க விறலியொருத்தியை அவள்பால் தூதாக அனுப்புவது விறிலிவிடுதூது என்னும் சிற்றிலக்கிய வகை ஆகும். இந்தப் பொருண்மை கலம்பகங்களுள் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. தலைவி விறலியைப் பழித்தல், விறலியைப் புகழ்தல் அவளைப் பாடவேண்டுதல், விறலி யாற்றுப்படை என இவ்வுறுப்பை அமைக்க வாய்ப்புண்டு.

திருவாவடுதுறை திருச்சிற்றம்பல தேசிகர்மீது சீனிப்புலவர் (18ஆம் நூ) இயற்றிய துறைசைக் கலம்பகத்தில் விறலி என்னும் உறுப்பு காணப்படுகிறது. (25ஆம் செய்யுள்) எண்சீர் விருத்தமாக அமைந்துள்ள இப்பாடலில் விறலியைக் கவிஞர் முன்னிலைப்படுத்தித் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் பண்புநலன்களைப் பாடும்படி கேட்டுக்கொள்கிறார்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் பன்னிரண்டாவது குருமகா சந்நிதானத்தின்மேல் எழுந்த இந்தக் கலம்பக உறுப்பே மகாவித்துவான் அவர்களுக்கு முன்னோடியாக இருந்திருக்கலாம்.

மகாவித்துவான் அவர்களின் இரண்டு விறலிப்பாடல்களும் தலைவி கூற்றாகவும் அறுசீர் விருத்தமாகவும் உள்ளன. (92,75) இரண்டிலும் தலைவினிடமிருந்து தூதாக வந்த விறலியைத் தலைவி கடிந்து கொள்கிறாள். தலைவன் என் மீது அன்புடையவன் எனப்பொய் சொல்லாதே என்கிறாள். இது தலைவன் விறலியைத் தூதாக அனுப்புவான் என்னும் சிற்றிலக்கிய மரபிற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது. பாண் என்னும் கலம்பக உறுப்பு இதனோடு தொடர்புடையது.

இந்த ஒப்பீட்டைப் பார்க்கும்பொழுது மகாவித்துவான் அவர்கள் இரு கலம்பகங்களிலும் 20 உறுப்புக்களையே(தூது என்னும் பொதுப் பொருண்மை நோக்கி நாரை முதலிய மூன்றும் ஓர் உறுப்பாகவே எண்ணப்பட்டன) கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது. ஊசல் என்னும் உறுப்பைப் பாட்டுடைத் தலைவனை நோக்கிக் கூறுவதாக அமைக்காமல்,

அவன் புகழைப் பாடி ஊசலாடுக என மகளிரை முன்னிலைப் படுத்தி ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை யாப்பில் அமைந்துள்ளார். பல கலம்பகங்களில் இந்தப் பொருண்மை காணப்படுகிறது. இடைச்சியார், வலைச்சியார் என்னும் உறுப்புக்களைக் காதல் கொண்ட ஒருவனின் கூற்றாக அமைப்பதோடு அவர்களை விலக்குகின்ற வேறோரு பொருண்மையிலும் அமைத்துள்ளார். இரு கலம்பகங்களிலும் நாரை, மேகம், வண்டு என்பனவே தூது செல்லும் பொருள்களாக உள்ளன.

கலம்பகங்களில் மிகமிக அருகி வருகின்ற விறலி என்னும் உறுப்பை இரு கலம்பங்களிலும் இடம் பெறச் செய்துள்ளார்.

உறுப்புகளைப் புறநிலையில் மட்டும் இருந்து நோக்கிய இந்தப் பார்வையைத் தொடர்ந்து அந்தந்த உறுப்புகளை எப்படிஎப்படிப் பாடியுள்ளார் எனப்பொருளோடு இயைந்து ஆய்வதும், அவற்றோடு பிற கவிஞர்களின் பாடல்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும் இலக்கியச் சுவை மிக்க ஒன்றாகவும், சிற்றிலக்கிய மரபை, உணர்ந்துகொள்ள உதவுவதாகவும், அந்தந்த காலச் சமுதாய வாழ்வை ஆராயத் துணை செய்வதாகவும் அமையும்.

67. வரலாற்றில் சில, பாக்களில் சில.

இல. பழநிச்சாமி
கரூர்

பாண்டி நாடே பழம்பதி பாண்டி நாட்டுள் பூலோக சிவலோகம் என்று விளங்குவதும் ஸ்ரீ மீனாட்சியம்மை தடாக பிராட்டியாராகவும் சோம சுந்தர கடவுள் சுந்தர பாண்டியராகியும் அரசுபுரிந்த பெருமை மிக்கது மதுரையம்பதி.

அந்நகரின் கண் ஆதிநாராயண பிள்ளைத்தெருவில் ஒரு சைவ வேளாள குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஸ்ரீ சோமசுந்தர கடவுளின் திருக்கோயிலின் முத்திரை கணக்கர்களாக இருந்து வந்தனர். அக்குடும்பத்தில் சிதம்பரம்பிள்ளை என்னும் ஒருவர் தன் மனைவியராகிய அன்னத்தாச்சி என்பவருடன் இல்லறம் நடத்தி வந்தார். அவர்கள் மிக்க சிவபக்தர்கள். அவர்கள் அக்காலத்தில் திருக்கோயில் முத்திரைப் பணியை ஒழுங்காகப் பார்த்து வந்தனர். கோயில் அதிகாரிகட்கும், அவருக்கும் மன வேறுபாடு உண்டாயிற்று. அதனால் அவர் வேலையை வேண்டாம் என்று விட்டு விட்டு தம் மனைவியரோடு வடதிசையை நோக்கி பல ஊர்களையும் கடந்து எண்ணைக் கிராமம் என்ற ஊரை அடைந்தார். இவ்வூர் திரிசிரபுரத்திற்கு மேற்கே காவிரியின் தென்பால் உள்ளது. அவ்வூரார் அவரது நிலைமையும் கல்வித் திறமையும் அறிந்து அவர் இருப்பதற்கு இடம் ஒன்றை கொடுத்து உணவுக்குரிய பல பண்டங்களையும் கொடுத்து ஆதரித்து வந்தனர். சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறந்த கல்விமான். அவர் பாடம் சொல்லும் அருமையையும், ஒழுக்கத்தையும் கண்டு நீங்கள், எங்கள் பிள்ளைகளுக்கு உரிய தமிழ் பாடங்களை கற்பிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். அவ்வாறே அங்கு ஒரு பள்ளிக் கூடம் வைத்து நடத்தினார். சிதம்பர வாத்தியார் என்றும் பெயர் பெற்றார். பழைய கால திண்ணைப் பள்ளிக் கூடம் என்னும் பெயரால் அவை வழங்கப் பெற்றது. அங்கு பிள்ளைகள் அறிவு பெறுவதற்கு நீதிநூல்கள், புரபந்தங்கள், நிகண்டு, கணிதத்திற்கு உதவியான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தார்.

சிதம்பரம் பிள்ளை இங்ஙனம் இருந்து வருகையில் தமிழ்நாடு செய்த பெருந்தவத்தால் பல வருஷம் பங்குனி மாதம் 26-ம் தேதி (6.4.1815) அமர பட்சதுவாதசியும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் மகர லக்னத்தில் ஒரு புண்ணிய குமாரர் அவதரித்தார். அவர் தான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆவார். பின்னர் சிதம்பரம் பிள்ளைக்கு ஓர் ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் பிறந்தது. ஆண் குழந்தைக்கு சொக்கலிங்கம் என்றும், பெண் குழந்தைக்கு மீனாட்சி என்றும் பெயரிட்டார்.

முதற் குழந்தையாகிய மீனாட்சிசுந்தரத்தின் கிரக நிலைகளை அறிந்து இந்த குமாரன் சிறந்த கல்விமானாக விளங்குவான் என்று, சோதிட

வல்லுனர்கள் உணர்த்த சிதம்பரம்பிள்ளை மிக மகிழ்ச்சி அடைந்தார். தம் பள்ளிக் கூடத்திலேயே கல்வி பயிலத் தொடங்கினார். மற்ற பிள்ளைகளுடன் அக்கால வழக்கப்படி ஆத்திச்சூடி முதலிய நீதி நூல்களும் அருணகிரி அந்தாதி முதலிய அந்தாதிகளும், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் முதலிய பிள்ளைத்தமிழ்களும் நிகண்டு. கணிதம் முதலியவற்றையும், கற்றார். இவர் பழம் பிறப்பிற் செய்த புண்ணியத்தால் இவருக்கு கல்வி அறிவு மென்மேலும் பெருகியது. இவரே பள்ளிக்கூட முதல் மாணவராக விளங்கினார். தம் தந்தையார் இவரது கல்வி அறிவின் ஆழத்தை உணர்ந்து மற்ற பிள்ளைகளின் படிப்பும், பாடங்களும் அன்றி சகல பிரபந்தங்களையும், சதகங்கள் மாலைகள் முதலியவற்றையும், நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும் மனப்பாடம் செய்ய ஊக்குவித்தார். அக்காலத்தில் அச்சுப்புத்தகங்கள் இல்லாததால், பழைய ஏட்டுப் பிரதியைப் பார்த்து நன்றாக ஏட்டில் எழுதவும், இவரை பழக்குவித்தார். அன்றியும் தான் கற்ற பாடத்தை சொல்லி காட்டுவது, தனியே எழுதி வைத்து கொள்வது, தனக்கு மனனமான பாடல்களை எழுதி வைத்துக் கொள்வது இவர் பழக்கமாகும். அந்த சிறுவயதிலே செய்யுள் இயற்றும் ஆற்றலும் வந்தது. இவர் செய்யுள் செய்யும் திறமை அறிந்து சிதம்பரம் பிள்ளை அடிக்கடி சமுத்தி கொடுத்து செய்யுள் இயற்றச் சொல்லியும் திரிபு, யமகம், சிலேடைகளை அமைத்து பாடல் செய்யும் படியும் சொல்லி வந்தார். அவற்றை இவர் விரைவில் முடித்து விடுவதைக் கண்டு தந்தையார் மகிழ்ச்சி உற்றார்.

சிதம்பரம் பிள்ளை இவர் சிறந்தவராக இருத்தல் கண்டு திரிசிரபுரம் முதலிய ஊர்களில் உள்ள பிரபுக்கள் வேண்டுகோளின் படி அழைத்துச் சென்று பழைய பாடல்களை சொல்லும்படி செய்தும், அதற்கு பொருள் சொல்லவும் செய்து வந்தார். இவர் விடுமுறை நாட்களில் சுங்கம் வாங்கும் உத்தியோகஸ்தர் ரங்கம்பிள்ளை என்பவர் சிதம்பரம் பிள்ளையின்பால் மிக்க அன்புடையவர். அவர் ஒரு நாள் பிள்ளைகளை நோக்கி உங்களுக்கு ஆசிரியர் செய்யுள் செய்யும் பழக்கம் உண்டாக்கி இருப்பாரே. பிள்ளையார் மேல் ஒரு வெண்பா பாடுங்கள் என்று சொன்னபொழுது எல்லோரும் பாட முயன்று கொண்டு இருக்கும் போது இவர் பாடி முடித்தார்.

இவரிடத்தில் அன்புடைய மலையாண்டியா பிள்ளை என்பவர். இவர் ஆற்றலை எல்லோரும் அறியச் செய்ய எண்ணினார். முருங்கைப் பேட்டை என்னும் ஊரில் உள்ள மிராசுதாரரிடம் அழைத்து சென்று இவர் திறமையை அவருக்கு சொன்னார். பக்கத்தில் இருந்த ஒருவர் இவரை, நோக்கி ஒரு பாட்டைச் சொல்லி அப்பா இப்பாட்டிற்கு அர்த்தம் சொல் என்பதை ஈற்றடியாக வைத்து ஒரு வெண்பா பாடு என்று கூறினார். இவர் சொல் என்பதற்கு நெல் என்னும் பொருளை அமைக்க எண்ணி வெண்பாவின் ஈற்றடியாக வைப்பதற்கு தூய என்பதை முன்னே சேர்த்து தூய இப்பாட்டுக்கு அர்த்தம் சொல் என்று ஈற்றடி அமைத்துக் கொண்டு நெல்லுக்கும், திருமூர்த்திக்கும் சிலேடையாக

ஒண்கம ம வாழ்ந்தன்ன மாகி உரலணைந்து
தண்கயநீர்த் தூங்கித் தகுமேறூர்ந் - தெண்கதிரின்
மேயவித் தான்மூவ ராகும் விளம்பியதென்
தூயவிப்பாட் டுக்கருத்தஞ் சொல்

இது பிரமனுக்கும், நெல்லுக்கும் சிலேடை.

ஒன் கமலம்- தாமரையில் வாழ்ந்து- இருந்து, அன்னமாகி - அன்னப் பறவையை வாகனமாக கொண்டதாலும் உரலணைந்து - இது திருமாலுக்கும், நெல்லுக்கும் சிலேடை உரலில் அசோதையால் கட்டப்பற்று தண்கயநீர்- ஆழமாகிய கடலில் தூங்கி-நித்திரைச் செய்தலாலும் தகுமேறூர்ந்து- இது சிவபெருமானுக்கும், நெல்லுக்கும் சிலேடை - காளை வாகனத்தில் ஏறி அருளி கதிரில் -சூரியனிடத்தில், மேயவிதத்தான்- பொருந்திய காரணத்தாலும் மூவராகும்- பிரமனும், திருமாலும், சிவபெருமானும் ஆகும் விளம்பியது என் - நீ கேட்டு கொண்ட இப்பாட்டுக்கு அர்த்தம் நெல்லாகும். நெல்லுக்கு பொருள் காண்போம் நெல்லானது ஒண்கமலமாகி தண்ணீரில் வாழ்ந்து அன்னமாகி உணவாகி இருப்பதாலும், உரலணைந்து நெல்லை குத்துதற்கு உரலில் சேர்த்தலாலும், தண்கயநீர் தூங்கி. ஆழமான தண்ணீரில் தங்கி இருத்தலாலும் தகும் ஏறூர்ந்து- நெல் விளைந்த பின் காளை பூட்டிய வண்டியில் ஏற்றி செல்லுததாலும், என் கதிரின் மேய விதத்தான் நெற்கதிர்கள் நிறைந்த காரணத்தாலும் இது மும்மூர்த்திகளுக்கு இணையாகும்.

இதனை கேட்ட அந்த கனவான் ஒரு வண்டி நெல் கொடுத்தனுப்பினான். இவ்வாறே பலரால் அழைக்கப்பட்டுச் சென்று அங்கு விரைவில் பாடிப் பாடி இவர் பெற்ற பரிசுகள் பல. இவைகள் எல்லாம் தந்தையாருக்கு மகிழ்ச்சி தந்தது. இவரைப் படிப்பிக்கும் விசயத்திற்கும் ஊக்கம் அளித்து வந்தனர் இவ்வாறு பலரால் மதிக்கப்பட்டு வருங்காலத்தில் இவருடைய வயது 15. பதினைந்தாவது வயதில் விரோதி வருடத்தில் இவர் தந்தையார் சிவபதம் அடைந்தார். அருமை தந்தையாரின் பிரிவால் இவருக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று அப்பொழுது வருந்தி இவர் செய்த பாடல்களுள் ஒன்று.

முந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும்
தந்தை யெனைப்பிரியத் தான் செய்த - நிந்தை மிகும்
ஆண்டே விரோதியெனு மப்பெயர்நிற் கேதகுமால்
ஈண்டேது செய்யா யினி.

தந்தையார் காலமான பின் அவ்வூரார் இவருக்கு வீட்டுக் கவலை இல்லாதபடி வேண்டியவற்றை கொடுத்து உதவினார். இவருக்கு வேண்டியவற்றை கொடுத்தருளிய நண்பர்களும், கனவான்களும் பிறகு அதி உதவிகளை செய்து இவருக்கு காவேரி ஆச்சி என்னும் பெண்ணை சிறப்பாக திருமணம் செய்து வைத்தார்கள். தமிழ் பயிற்சியை மென்மேலும் அபிவிருத்து செய்யக் கருதி சோமரசம் பேட்டையில் உள்ளவர்களிடம் விடை பெற்று கொண்டு திரிசிரபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே

மலைக்கோட்டைக் கீழ வீதியில் தென்பக்கத்தில் உள்ள ஒரு பாறைமேல் கட்டப்பட்ட சிறிய ஓட்டு வீடு ஒன்றில் மாதம் ஒன்றுக்கு கால் ரூபாய் வாடகை கொடுத்து இருப்பாராயினர்.

இவர் காலத்தில் உள்ள வித்துவான்கள் பலர். ஆதரித்த வள்ளல்களும் பலர். ஐந்திலக்கணமும் நன்றாக கற்றும் ஆராய்ந்தும் வாசித்து முடிந்தார். கம்பராமாயணம் முதலிய நூல்களை பல முறை படித்து சந்தேகங்களை தெரிந்தவர்களிடம் கேட்டு நீக்கி கொண்டார் இவர் தண்டியலங்காரம் எனும் நூல் அன்னப் பிச்சை உண்டு காலங்கழித்து வந்த பரதேசி ஒருவரிடமிருந்து பெற்று அவரிடம் பாடம் கற்றுக் கொண்டு தண்டியலங்காரத்தை கைப்பிரதி செய்து கொண்டார்.

சித்திரக் கவிகளின் இலக்கணம் முழுவதும் கற்று அறிந்து கொண்டார். பல பிரபந்தங்களை செய்யத் தொடங்கினார் அவர் எழுதிய பிரபந்தங்கள் பலவாகும்.

பின்னர், திருவாவடுதுறைக்கு வந்து சிவதீட்சையும், சுஷணிகலிங்க பூஜையும் பெற்றார். இவர் பூஜையை அன்போடு நாள்தோறும் செய்து வருவாராயினர். இவருக்கு சிவ பூஜை செய்து வைத்தவர் திரிசிரபுரம் கீழச் சிந்தாமணியில் இருந்த செட்டி பண்டாரத்தய்யா என்பவராவர். திருவாவடுதுறைக்கு செல்ல நினைந்து பட்டீசுவரம் என்னும் தலத்துக்கு வந்தார். அப்பொழுது இவருக்கு வயது 21. அப்போது அங்கே ஆவூர் பசுபதிபண்டாரம் என்பவர் வந்து இருந்தார். இவருடைய கல்வித் திறனை அளக்க எண்ணி இவருடைய அளவை அறியாத அவர்.

நன்கொடிச் சிக்கை யருந்தரி சேய்க்குற்ற நாகவல்லி
மென்கொடிச் சிக்கை விடுக்கு மயிலை விமலர்வெற்பில்
என்கொடிச் சிக்கை புரிந்தாய் தினையுண் டிலையுடுக்கும்
புன்கொடிச் சிக்கையு நின்போல் பவர்க்கிது பொறப்பல்லவே

என்னும் செய்யுளை சொல்லி இந்த திரிபுப் பாடலுக்கு பொருள் சொல்லும் என்றார். இவர் சிறிதும் மனம் வருத்தம் அடையாமல் அச்செய்யுளை இரண்டாம் முறை மெல்ல சொல்லும்படி செய்து அச்செய்யுள் அகத்திணைத் துறைகளுள் பாங்கி குலமுறை கிளத்கதலன்பதற்கு இலக்கியமாக உள்ளது என்பதை முதலில் கூறினார் அப்பால் பதங்களைப் பிரித்து காட்டி பொருளும் சொன்னதன்றி அச்செய்யுளைப் போன்ற வேறு செய்யுட்கள் சிலவற்றையும் மேற்கோளாக எடுத்துக் கூறி விளங்கச் செய்தனர்.

அச்செய்யுளுக்கு உரை

பதப்பிரிப்பு

நன்கு ஒடிச்சு இக்கை அருந்து அரிசேய்க்கு உற்ற நாகவல்லி
மென்கொடி சிக்கை விடுக்கும் மயிலை விமலற் வெற்பில்
என்கொடு இச்சிக்கை புரிந்தாய் தினைஉண்டு இலை உடுக்கும்
புன்கொடிச் சிக்கு அய்ய நின்போல் பவர்க்கு இது பொறப்பல்லவே

நன்கு ஒடிச்சு - நன்றாக ஒடித்து
இக்கை அருந்தும் - கரும்பைத் தின்னுகின்ற
அரிசேய்க்கு - குரங்கின் குட்டிக்கு
உற்ற நாகவல்லி - பிணையாக சுற்றிய நாகவல்லியின்
மென்கொடி சிக்கை - மெல்லிய கொடியன் சுற்றை
விடுக்கும் - குரங்கு விடுவிக்கும்
மயிலைவிமலற் வெற்பில் -மயிலை சிவபெருமானின் வரையின்கண்
தினை உண்டு - தினை மாவை உண்டு
இலை உடுக்கும் - தளைகளை ஆடையாக உடுக்கும்
புன்கொடிச் சிக்கு - சிறியவளான இந்த வேடுவ பெண்ணுக்கு
அய்ய - அய்யனே.
எள்கொடு - என்ன காரணம் கொண்டு
இச்சிக்கை புரிந்தாய் - ஆசைப்பட்டாய்
நின்போல் பவர்க்கு - உன்னை போன்றவர்கட்கு
இது பொற்பல்ல - இது அழகல்லவாம்

இஃது குலமுறை களத்தில் என்னும் துறை

அருஞ்சொற்பொருள்

இக்கு-கரும்பு, அரி-குரங்கு, சேய்-குரங்கின் குட்டி, இச்சிக்கை-விருப்பம், கொடிச்சி-வேடுவப்பெண்.

பின்னர் பற்பல புலவர்களையும் கனவான்களையும் சந்தித்து பற்பல நூல்களை இயற்றினார். 96-வகை பிரபந்தங்கள் எல்லாம் இயற்றினார் என்றே கூறலாம். அவர் அருளிச் செய்த திரிசிராமலை யமக அந்தாதியில் ஒரு பாடல்

கலக்கந் தரமட வார்மயல் வாரிகலந்த வென்முன்
கலக்கந் தரவெஞ் சமன்வருங் காலங் கடுக்கைதப்ப
கலக்கந் தரநதி சூடுஞ் சிராமலை யாய்கன்னிபா
கலக்கந் தரநினை வேண்டிக் கொண்டேனெனைக் கண்டுகொள்ளே

பதப்பிரிப்பு

கலம்-கந்தரம் மடவார்-மயல்வாரி, கலந்த என்முன்-கலக்கந்தர வெம்சமன் வருங்காலம், கடுக்கை-தப்பு, அகல்-அக்கு அந்தரநதி-சூடும் சிறாமலையாய், கன்னிபாக, இலக்கந்தர, நினை வேண்டிக் கொண்டேன்-எனை கண்டு கொள்ளே.

பதவுரை

கலம் - ஆபரணம்
கந்தரம் - ஆபரணம் பூண்ட கழுத்தை உடைய
மடவார்மயல் - பெண்களின் மையல்
வாரி - சமுத்திரத்தில்
கலந்த என் முன் - முழுகிய என் முன்பு
கலக்கந்தர - மனக் குழப்பத்தை தர

ß.6,

வெல்சமன் வரும் காலம்	- யமன் வருகின்ற காலத்தில்
கடுக்கை	- கொன்றை மலர் மாலை
தப்பு அகல்	- குற்றம் நீங்கிய
அக்கு	- உத்திராட்சம்
அந்தரநதி	- கங்கா நதி
சூடும்	- (முதலியவற்றை)சூடிய
சிராமலையாய்	- திரிசிராமலையை உடையவரே
கன்னி பாக	- அம்பிகை பாகரே
லக்கந்தரம்	- லட்சம் தரம்
நினை வேண்டிக் கொண்டேன்	- உம்மை வேண்டினேன்
என்னைக் கண்டு கொள்ளே	- என்னை ஆதரித்துக்கொள்

அருஞ்சொற்பொருள்

கலம்-ஆபரணம், கந்தரம்-கழுத்து, கடுக்கை- கொன்றை மலர் மாலை. தப்பு அகல்- குற்றம் அற்ற, அக்கு-உத்திராட்சம் அந்தர நதி- கங்கா நதி, கன்னி பாக- பரமேஸ்வரி பங்கரே, லக்கந்தரம்-லட்சம் தரம்.

இப்புலவர் பெருமான் பல மாணாக்கருக்கு பாடம் சொல்லி அவர்களை கல்வியில் வல்லவராக்கினார். இவர் சென்ற இடங்கள் பல பல. இறுதியில் திருவாவடுதுறை ஆதீனத்தில் சென்று தங்கினார். அங்கும் அனேகருக்குப் பாடம் சொன்னார். பாடம் மாணவர்க்கு நடந்து கொண்டும், உட்கார்ந்து கொண்டும் சொல்லிக் கொண்டே இருப்பார். இவரது புலமை அளத்திற்கு அரியது இவரை பத்து கம்பருக்கு சமம் என்பார்கள். எத்தனை தலபுராணம், எத்தனை பிள்ளைத் தமிழ் எத்தனை பிரபந்தங்கள் என்று அறுதியிட்டு கூற இயலாது. நால்வகை பாக்களும் எழுதியவர்.

நால்வகைப் பாக்கள்

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்பனவாம் இவர் பாடிய திருநாகைக் காரோண புராணத்தில் 26-வது நந்தி நாதப்படலத்தில் சித்தரக்கவிகள் பாடியுள்ளார். அவற்றுள் இப்படலம் 24-வது செய்யுள் முதல் 47-வது செய்யுள் வரை 23 செய்யுட்கள் சித்திரக் கவிகளாக உள்ளன. இவர் பாடிய அம்பர் புராணம், நைமிசாரணியப்படலம் 44-பாடல்களும் சித்திரக்கவிகளாகவே பாடியுள்ளார். இப்பாடல்களுக்கெல்லாம் பிள்ளை அவர்களே உரை இயற்றியுள்ளார்.

மாலை மாற்று

தேயா வாமா வாவா டாதே, தேசா மூவா யாவா னாதே
தேனா வாயா வாமு சாதே, தேடா வாவா மாவா யாதே

ஈறு முதலாகக் கொண்டு வாசிப்பினும் அச்செய்யுளே வருவது இப்படலின் பொருள் விரிவு அஞ்சி எழுதவில்லை.

காதை கரப்பு

ஒரு செய்யுள் முடிய எழுதப்பட்டு அதன் ஈற்று மொழியின் முதல் எழுத்துத் தொடங்கி ஒவ்வோரெழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு

செய்யுள் வருவதாம்.

சாது பாய தயாவமை யானித்த
கோது போய சுமேதத வானிப்பு
மீது மேய மராகவி தேளிப்ப
போது தூய வளாவிய மானிக்க.

காதை கரப்பிற் கரந்தப் பாடல்
கனிய ளாயது பனிவி ராயது
புனித மேயது தனிமை யாயது

எட்டு நாக பந்தம்

எட்டுப் பாம்பு தம்முள் இயைவனவாக உபதேசமுறையான் வரைந்தவற்றுள், எட்டுக்கவி எழுதப்பட்டுச் சந்திகளில் நின்ற எழுத்தே மற்றை இடங்களிலும் உறுப்பாய் நிற்க வருவது.

நேரிசை வெண்பா

காயுங் கனியுங் கலவ மலர்கெழுமி
யாயுஞ் செழுமைமல்க வாயதே - நேயமிகும்
பாவுசீர் மேவிய பங்கமக லக்கமா
மேவுபார் கொண்டாடு மே.

இப்புலவர் பெருமான் உடைய கவிதைகளும், வரலாறும் எழுதுவது எளிதான காரியமல்ல. சிற்சில பாடலை எடுத்துக் காட்டினேன். இவரது மாணாக்கர் எல்லாம் பெரும்பெரும் புலவர்கள். இவர் திருவாவடுதுறை ஆதினம் மகாசன்னிதானங்களின் ஆணையின் படி அங்கு தங்கி இருந்தார். பட்டீசுவரத்தில் தனக்கு என்று ஒரு வீடு அமைத்துக் கொண்டார் என்பார் உ.வே.சாமிநாதய்யர். இவரை பற்றி மாயூரம் முன்சீப் வேதநாயம் பிள்ளை அவர்கள் பாராட்டிய பாடல்களில் ஒன்று.

பன்னூலு மாய்ந்தாய்ந்தோர் பயனுமுறா துளம்வருந்தும்
பாவலீரே
நன்னூலோர் மீனாட்சி சுந்தரமா லொரு கோவை
நவின்றான் காழிக்
கந்நூலு ளொருபாவி லோரடியி லொருசீரை
ஆய்வீ ராயின்
எந்நூலுங் கற்றவரா யிகபரமும் பெற்றவரா
யிலகு வீரே"

மகான் வண்ண சரபம் தண்டபாணி சுவாமிகள் இவரை பற்றி கூறியது.

தும்பியே நிகர் மீனாட்சிச் சுந்தரப்பெயர் பாவாணன்
பம்பியே தலபுராணம் பலபல பாடிதீர்த்தோன்
அம்பிகை மயூரமாகி அரனைப் பூசித்த ஊரில்
வெம்பிய பிணக்கு ஒன்றி இன்றி மிக நயந்து உறவானானே

என்று பாராட்டி உள்ளார்.

௬௭. திருவிடைமருதூர் உலாவில் பெண்கள்

மு. பழனியப்பன்
புதுக்கோட்டை

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்ற ஒரே உலா திருவிடைமருதூர் உலாவாகும். இவ்வுலா 721 கண்ணிகளைக் கொண்டது. 1870 ஆம் ஆண்டு அரங்கேறியுள்ளது.

இவ்வுலாவின் பாட்டுடைத் தலைவர், திருவிடை மருதூர் உறையும் மகாலிங்கப் பெருமான் ஆவார். இவரின் திருவுருவச் சிறப்பு, பரிவாரங்களின் சிறப்பு, அடியார்களின் சிறப்பு, உலாவரும் அழகு, உடன்வருவோர் இயல்பு, எழு பருவமகளிர் செயல்கள், இறைவன் மீது அவர்கள் கொண்ட காதல் ஆகியன உலாவில் விரிவாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், சாமிநாததேசிகருக்குப் பாடம் சொல்லி வரும்போது, திருவிடைமருதூர் புராணத்தினை விளக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அப்போது அவர், அப்புராணத்தின் பெருமையால் கவரப்பெற்று, ஒரு சிற்றிலக்கியம் பாடுகின்றார். இம்முயற்சியில் விளைந்ததே திருவிடைமருதூர் உலாவாகும். முக்கால் பங்கு நிறைவெய்தியதும், இவ்வுலா நடைபெற்று நின்று விடுகின்றது; சிலகாலம் கழித்து, திருவாவடுதுறை ஆதீனமடத்தில் தங்கிய போது முழுதும் பாடப்பெறுகின்றது.

இவ்வுலாவில் எழுவகைப் பெண்டிரின் இயல்புகள் உவமைகளோடு சேர்த்துரைக்கப்பெற்றுள்ளன. அவ்வுவமைகள் புதுமையாகவும், இலக்கிய நயமிக்கதாகவும் அமைந்துள்ளன. உவமைகள் அனைத்தும் எழுவகைப் பெண்டிரின் உடல்நலம், உருவ எழில், செயல்பாடு ஆகியனவற்றை வெளியிடுவதாக இருந்தாலும், ஆணின் தொடர்புடையனவாக அமைந்திருப்பது எண்ணத்தக்கதாகும். அதாவது உவமிக்கப் பெறுவன பெண்கள் குறித்தனவாக இருந்தாலும், உவமைப்பொருள் ஆண் தொடர்புடையனவாக அமைக்கப்பெற்றுள்ளன. இதன் காரணமாக இப்படைப்பினைப் பெண்ணிய வாசிப்பின் அடிப்படையில் அணுகவேண்டியத் தேவை ஏற்படுகின்றது.

'ஆண் அல்லது இருபால் சார்புடைய ஆண், படைப்பினைப் படைக்கும் போது, ஆண் அனுபவ வழியாகவே படைக்கின்றார்" (Being male or not androgynows men will naturally speak interms of male experience) என்றக் கருத்து அடிப்படையில் திருவிடைமருதூர் உலாவை இருபால் சார்புடைய ஆசிரியரால் படைக்கப் பெற்ற படைப்பாகக் கொள்ளலாம். மேலும் இப்படைப்பில் ஆண் எண்ணமே தலைதூக்கி

நிற்கின்றது என்பதைச் சான்றுகளோடு நிறுவவும் முடிகின்றது.

"ஆன் படைப்புக்களில் பெண்பிம்பம் மீண்டும் மீண்டும் ஆணோடும், இயற்கையோடும் சம்பந்தப்படுத்தப்படும் ஒரே மாதிரியான போக்கு காணப்படுகிறது"(A repeaked association of women with nature and of men with art)என்ற மேரி எல்மனின் கருத்து இலக்கியத்தில் பெண், பெண்ணாகவே படைக்க பெறவில்லை என உரைப்பதாக உள்ளது. உலாவில் காணப் பெறும் எழுவகைப் பெண்களும், ஆணை விரும்புவதாகவும், அவனை அடைய மோகம் கொள்வதாகவும், ஆணின்றி வாழ்வில்லை என நடந்துகொள்வதாகவும் படைக்கப்பெறுவது மரபாகும். மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் இம்மரபினைப் பின்பற்றியுள்ளார். திருவிடைமருதூர் உலா பெண்கள் குறித்த இலக்கியமானாலும், அஃது உண்மையான பெண்களை, அவர்களின் இயல்பை உணரப்பதாக இல்லை என்பது இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

எழுவகை மகளிர் உருவநலன்

உலா இலக்கிய வகையுள் பேதை (5 வயது முதல் 7 வயதுவரை), பெதும்பை (8வயது முதுல் 11 வரை), மங்கை (12முதல் 13வரை)

மடந்தை(14முதல் 19வரை), அரிவை (20முதல் 31வரை), பேரிளம் பெண் (32முதல் 40வரை) ஆகிய எழுவகைப் பெண்களின் உருவநலன் சிறப்பாக வருணிக்கப் பெறும்.

திருவிடை மருதூர் உலாவில், பெண்களின் உருவநலனுக்குக் கூறப்பெற்றுள்ள உவமைகள் இங்கு நோக்கப் பெறுகின்றன.

கூந்தல்

இளையான் குடி மாறரெய்ப் பொழிப்பான் சென்று
முளைவாரும் போது நிகர் மோகம் (534)

அரிவையின் கூந்தல் இளையான் குடிமாறர் நெல்முளை வாரச் சென்ற இருட்பொழுதை ஒத்திருந்தது என உவமை கூறுகிறார் ஆசிரியர்.

கண்

உண்டானுமிழ்ந்தான் கொல்லோவென்று மால்பிரமன்
கண்டால் நடுங்கும் இரு கண்ணினாள் (434)

"நஞ்சுண்ட சிவன் இவள் கண்கண்டால், உமிழ்ந்திடுவான் அத்தகைய கொடுமையை உடையது இவள் கண்" என மீனாட்சி சுந்தரம் பிள்ளை கண்டுள்ளார்.

கொங்கை

சம்பந்த மேவமொரு தண்டீசனார் நிறைத்த
கும்பந்தா மென்றேத்து கொங்கையார் (543)

சண்டீசர் நிறைத்த பாற் குடங்கள் அரிவையின் கொங்கைக்கு உவமையாகியுள்ளது.

நிதம்பம்

அல்குலிற்கு
மடங்கூர் முனிவர் மடிக்கவிட்ட பாம்பின்
படம் போல கன்ற நிதம்பத்தான் (605)

என உவமை காட்டப் பெற்றுள்ளது. இங்கு காட்டப் பெற்ற,

கூந்தல் - இளையான் குடிமாறர் முளைவாரச் சென்ற இருட்பொழுது
கண் - விடமுண்ட சிவன், உமிழ்ந்துவிடும் கொடுமை உடையது.
கொங்கை - கண்டீசரின் பால் நிறைந்த செப்புக்குடங்கள்
அல்குல் - முனிவர் மடிக்கவிட்ட பாம்பின் படம்

என்ற உவமைகளின், தெரிந்த பொருட்கள் அனைத்தும் ஆண்களின் தொடர்புடையதாக உள்ளன. இதுபோன்ற பல உவமைகள் கையாளப் பெற்றுள்ளன. பெண்ணின் உடல்நலன் அவளின் சிறப்புகளுள் ஒன்றாகும். அதனை பெண் உருவமாகக் கண்டு எண்ணாது, ஆண்களின் செயற்பாடுகள் கொண்டு அறியவைக்க முயற்சி செய்திருப்பது, மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் ஆண் அனுபவப் பாங்கை வெளியிடுவதாகவே உள்ளது.

மற்றொரு கோணத்தில் நோக்கும்போது, பெண்களின் உடல் சிறப்பு அவளுக்கு மட்டுமே உரிய பண்பு மட்டுமல்ல;அப்பண்பினைச் செயலாலோஅல்லது வேறு எவற்றாலோ அடையும் தன்மையினை ஆண்களும் பெற்றுள்ளனர் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது.

இவற்றிலிருந்து உவமைகளை மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கையாண்டிருந்தாலும், அவற்றில் ஆண் அனுபவமே வெளியிடப் பெற்றுள்ளது என முடிய இயலுகின்றது.

எழுவகை மகளிரின் செயல்பாடுகள்

ஆண்மகன் ஒருவனைக் கண்டு, எழுபருவ மகளிரும் காமுறுவதாகப் படைப்பது உலாவின் இலக்கணமாகும். மகளிரின் இக்காமம், உண்மை உணர்வாகக் காட்டப் பெறாது, ஆண் தன்மைக் கேற்பவே அமைவதாகப் படைக்கப்பெற்றுள்ளது. திருவிடைமருதூர் உலாவில் காணப்பெறும் பெண்கள், தத்தம் வயதிற்கேற்பக் காமுறுபவர்களாகக் காட்டப் பெற்றுள்ளனர்.

பேதை பருவப் பெண் " தொடங்கு மரப்பாவைக்கு சூட்டத்தடங்கொளிவர் தோண் மேலணிந்த தொடையாவது வாங்கென்" (366-67)என்றவாறு செயல்பட்டுள்ளாள். மகாலிங்கப் பெருமானின் மாலை மரப்பாவைக்குத் தேவை என அவள் மொழிவது, தனக்கு விருப்பம் இலாதது போலவும், மரப்பாவைக்காகவே கேட்பதாகவும் உள்ளது.

எனையுமருகே இருக்க வைப்பீரன்னப்
புனையுமலர்க் குழலார் பூவாய் (408)

என பெதும்பை காமுறுகிறாள். இவள் "தானாகச் சென்றமரமாட்டேன், நீங்கள் இருக்க வைத்தால் இருப்பேன்'' என தன் விருப்பத்தை

மற்றவர்க்காக, செய்வதாகச் சுட்டியிருப்பது எண்ணத்தக்கது.

மங்கை பருவத்தாள், தேரில் வந்த பெருமானைக் கண்டுகாமுறுகிறாள். அவளுக்குக் காமவேட்கை மிகுகின்றது. ஆடை நெகிழ்கின்றது.

தகச் செய்தா ளிங்குந் தகாமை செய்தாய் பெண்காள்
நகச் செய்வதாகு நலமோ? (471)

என அவளைத் தோழிகள் எள்ளி நகையாடுகின்றனர். அதற்கு அவள், என் நோய் தீர பரமர் சடைமேல் விழும் கங்கை நீர் கொண்டு வாருங்கள். மருதர் பெயரைச் சொல்லிக் கொண்டே இருங்கள் என மொழிகிறாள். இதன் மூலம் தன் நோயைத் தானே போக்கிக் கொள்ள வழி தெரிந்தவளாக அவளிருந்தும் தோழியரை அழைத்தமையால், தன்முனைப்பு கொண்டவளாக இல்லை என்பது புலனாகின்றது.

காதலால் வீழ்ந்த மடந்தையை தோழியர் மாளிகையில் சேர்த்து பன்னீர், சந்தனம் பூசினர். அவை வெந்நீரும் நெருப்புமானது, இப்படிப்பட்ட இவள் மகாலிங்கப் பெருமான் மீது கொண்ட மையலால் பலவாறு மொழிகிறாள்.

கோளறிந்த தந்தை கொடுவினையை நோக்கியவன்
தாளறிந்த போதன் றோ தாரருள்வீர்! (532)

என சண்டீசர் தந்தைதாள் வெட்டியபோது தார் தந்தீர்: அதுசெய்தால்தான் எம்மைக் காப்பீரா? என மொழிந்தாள். இங்கு செயற்கருஞ்செயல் செய்த ஆண் நினைவு கூறப்பெற்றுள்ளார். எனினும் அதுபோன்ற செயல்கள் செய்ய பெண்கள் தயங்குவது போல வரிகள் அமைந்துள்ளன.

அரிவையும், தெரிவையும் காமத்தால் பெரிதும் துன்பப்பட்டனர். அவர்களையும் தோழியர் தேற்றி உயிர்கொள வைத்தனர். பேரிளம் பெண்.

வலியவந்து மேல்விழுந்து மார்பிலெழுந்து
பொலியுமுலை ஞெமுங்கப் புல்வேன் - பொலிய
ஒருத்தியிடப் பாகம் உீறவைத்தீ ரற்றால்
வருந்தியது புரிய மாட்டேன். (714-715)

எனும் தகையவளாக உள்ளாள். இவள் உலா வந்த தலைவனைத் தொடர்ந்து வந்து, தேர் நிலைபெற்ற பின் நெட்டுயிர்த்து வீடு திரும்புகிறாள்.

ஏழு பெண்களும், காம வயப்பட்டுள்ளனர். ஆணை எண்ணி ஏங்கும் பெண்களின் இயல்பு உயிர்நாடி உத்தியாக, உலாவில் கையாளப் பெற்றுள்ளது. இப்பெண்கள் காமம் செப்பி அழுதுள்ளனர். தோழியர் துணையை நாடியுள்ளனர். அவர்களின் செயல்பாட்டில் மற்றவர்க்காக காமம் ஏற்றல், என்பது காணப் பெறுகின்றது. மற்ற பெண்களால் அக்காமம் மட்டுப்படுத்தப் பெறுகின்றது என்றாலும், எப்பருவப் பெண்ணும் உலாவந்த காதலனை அடைந்தவளாக இல்லை. தலைவன் தனதுவழி போக, இவர்கள் வீட்டிற்குள் கிடந்து அழுதுள்ளனர். மேலும் இதனைப் பெண்ணிய வாசிப்பு

அடிப்படையில் நோக்கும் பொழுது, பெண் காமத்திற்குரிய ஒரு பொருள், காமம் மிக்குறும் பிறவி என்ற எண்ணமே தோன்றுகின்றது.

எனவே உலா என்ற இலக்கியவகை பெண்களை இயல்பான காம, காதல் உணர்வு கொண்டவர்களாகப் படைக்கத் தவறியுள்ளது. அதற்கு ஒரு சான்று திருவிடைமருதூர் உலா. மேலும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பெண்களின் உருவநலனை வருணிக்கும் போது, ஆணின் தொழில் உவமைகளைக் கொண்டு விளக்கி ஆண் அனுபவம் கொண்ட படைப்பாளராக விளங்கியுள்ளார் என முடியலாம்.

குறிப்புகள்

1. Denoun Josephine, Femenist literary criticism. Explorations in Theory lexington. Trouniversinypress. Hentueky P. 4.

2. Kingskey Amis, LuckyJim, Femenist criticism Reading are Women P. 144.

௬௯. கல்விப் பயிற்சியும், கவிதைப் பயிற்சியும்

கவிஞர் பிரபாகரன்
மீஞ்சூர்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்னும் வான்புகழ் வள்ளுவனின் வாய்மைக்கு இலக்கியமாகத் திகழ்ந்து, தமிழ் வானில் முழு நிலவாக அமுத கிரணங்களை வீசி வருபவர் பிள்ளையவர்கள் ஆவர். எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும், பிரபந்தங்கள், புராணங்கள் முதலியவற்றைப் படித்து இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் பிள்ளையவர்களது தொடர்போ, அவர்பால் பாடங் கேட்டோர் தொடர்போ பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. கண்கூடு. புதிய புதிய விரிவான நூல்கள் இயற்றித் தமிழ் நயங்களின் அணிவகுப்பை அமைத்துக் காட்டிய பிள்ளையவர்களின் நிறைவாழ்வும், அமுத வாக்குகளும், அவர் தம் உயிரோடு ஒன்றிக் கலந்த உயர் சிந்தனைகளும் தமிழ்த்தாய்க்கு மணி முடி சூட்டின. அன்னார் அருமையாகப் பெற்ற கல்வி மற்றும் கவிதைப் பயிற்சிகளைப் பற்றியும், பெற்றதைக் காளமேகம் போல் வரையாது பொழிந்தளித்த வழி காட்டுதல்களைப் பற்றியும் இக்கட்டுரையில் சிறிது காண்போம்.

தமது ஐந்தாம் அகவையில் கல்விப் பயிற்சியின் முதல் முயற்சியை முறையாகப் பெற்ற அவர், தந்தை சிதம்பரம் பிள்ளையிடம் நெடுங்கணக்கு, ஆத்திச்சூடி, அருணகிரி அந்தாதி, கலம்பகங்கள், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நிகண்டு, கணிதம், சதகங்கள், மாலைகள், நன்னூல், முதலிய இலக்கிய இலக்கண நூல்களைப் பெரும்பாலும் ஓலைச் சுவடிகளில் பிரதி செய்து படித்து, மனனம் செய்து அமுதத் தமிழ்க் கடலில் முக்குளித்தார்;காவியங்கள் கற்றுச் சிறந்தார்;செய்யுட் பயிற்சியில் சிறந்து நால்வகைக் கவி நலம் (ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தார கவி) கனியப் பெற்றார். திரிபு, யமகம், சிலேடை முதலியவற்றில் இளமையிலேயே செம்பாகப் பயிற்சி பெற்றார்;செய்யுட்களுக்குப் பொருள் சொல்லும் பயிற்சியை வேலாயுத முனிவரிடம் பாடங் கேட்கும்போது பெற்றார். எழுத்து, சொல், பொருள், யாப்பு நால்வகை இலக்கணமும் கற்றதுடன் அமையாமல் அணி நலம் காண,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது கற்கை நன்றே

என்பதற்கிணங்க ஊரூர் திரிந்த பரதேசிஒருவரிடம் பாடுபட்டுப் பணிந்து தண்டியலங்காரச் சுவடி பெற்றுத் தேர்ந்தார்.

இலக்கண விளக்கப் பாடங் கேட்டல்

கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகரிடம் இலக்கண விளக்கப் பாடங் கேட்க விழைந்தார் பிள்ளையவர்கள். பல நூல்களை இயற்றிப் பலருக்குப் பாடம் சொல்லி உயர் நிலையில் விளங்கிய போதும், தேசிகரை அடுத்துப் பாடங் கேட்க முனைந்தார். மாதம் ரூபாய் இருபது வீதம் அன்றைய நாளில் குறைந்த காலம் ஆறு மாதம் பாடங் கேட்க, மூன்று மாத முன்பணம் செலுத்திப் பதிவு செய்து, காத்திருந்து தேசிகர் பாடம் முடிந்த பிறகு, தக்க சன்மானம் கொடுத்து முறைப்படி பேரார்வத்துடன் 'இலக்கண விளக்கம்' - மூலமும் உரையும் பாடங்கேட்டார். அந்நூல் தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கல விருத்தி, தண்டியலங்காரம், வச்சணந்தி மாலை முதலிய பாட்டியல் நூல்களின் தெளிவும், விகற்பமும், தழுவி இயற்றப்பட்ட சிறந்த நூலாகும்.

ஐயம் தெளிதல்

பிள்ளையவர்கள் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், காஞ்சிப் புராணம், திவ்யப் பிரபந்தம், திருவாரூர்த் தலபுராணம் முதலியவற்றில் நமக்கெழுந்த ஐயங்களில் தெளிவு பெற்றார். திருவம்பலத்து இன்னமுதம் பிள்ளையிடம் கல்லாடம், திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார், திருக்குறள்-பரிமேலழகர் உரை முதலியவற்றிலிருந்த ஐயங்களில் தெளிவு பெற்றார். எழும்பூர் திருவேங்கட முதலியாரை அடுத்து கம்ப இராமாயணம், செவ்வைச் சூடுவார் பாகவதம், திவ்ய பிரபந்தம் முதலியவற்றில் தமக்கிருந்த ஐயப்பாடுகளை அகற்றிக் கொண்டார்; மழவை மகாலிங்க ஐயரிடம் நன்னூல் விருத்தி உரை, காரிகை உரை, தண்டியலங்கார உரை, நாற்கவிராய நம்பி அகப்பொருள் உரை முதலியவற்றில் ஐயந்தெளிந்து, இலக்கணக்கொத்துரை பாடமும் பயின்றார்.

அம்பலவாண முனிவரிடம் பாடங் கேட்டமை

வடமொழி, தென்மொழி இரண்டிலும் முறையான பயிற்சியும், பல சிவபுராண, பிரபந்த, சாத்திர ஆராய்ச்சியும் உடைய திருவாவடுதுறை அம்பலவாண முனிவரை அடுத்து, விநயத்தோடு பலநாள் பணிந்து, அவருடைய கண்டிப்பு மற்றும் சம்பிரதாய நெறிகளில் தேறி, கம்பர் அந்தாதி போன்ற நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

இவ்வாறு பலகாலும் பல இடங்களிலும் தாம் பாடுபட்டுப் பயின்ற கல்விப் பயிற்சியை அடுத்து வந்தவர்களின் குலம், கோத்திரம், செல்வநிலை, பதவி நிலை எதையும் நோக்காது, இரவு பகல் பாராமல் உணவளித்து, சுவடி கொடுத்து, அன்போடு ஆதரித்து வரையாது அமுதத் தமிழ் விருந்தை வழங்கியவர் பிள்ளையவர்கள்.

பிள்ளையவர்களின் சில கருத்துக்கள்

கல்வி: உணர்வோடு ஆழ்ந்து கற்பதே கல்வி. கல்வியின் பயன் உணர்விலும், நடத்தையிலும் பண்பட்டு, சமுதாயத்திற்குப் பயன்படுவதாகும்.

நிகண்டு

நிகண்டை மனனம் செய்வது நல்லது. இக்காலத்தில் அதை நெட்டுருப் பண்ணும் பழக்கமே போய்விட்டது. சொன்னால் யாரும் கேட்பதில்லை.

இலக்கணம்

இலக்கண அறிவு ஒருவருக்கு இன்றியமையாதது;ஆயினும் இலக்கியப் பாடங்களைப் பயின்ற பின்பே இலக்கண நூல்களைக் கற்றல் பயன் விளைக்கும்.

செய்யுள் இயற்றல்

செய்யுள் செய்வதற்கு முன் எந்த விஷயத்தைப் பற்றிச் செய்யுள் இயற்ற வேண்டுமோ அதை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். எந்த மாதிரி ஆரம்பித்தால் கடினமாக இராதோ அதை அறிந்து கொள்ள வேண்டும். பாட்டில் எதுகையில் இன்னதை அமைக்க வேண்டும் என்பதை வரையறுத்துக் கொண்டு அதற்கேற்ற எதுகையை வைக்க வேண்டும். மனம் போனபடி ஆரம்பித்து அதற் கேற்றபடி அடிகளைச் சரிப்படுத்துவது கூடாது. முதலடியில் அமைக்க வேண்டிய பொருளை மாத்திரம் சிந்தித்துத் தொடங்கிவிட்டு நாலாவது அடிக்கு செய்தியோ வார்த்தையோ அகப்படாமல் திண்டாடக் கூடாது. நான்கு அடிகளிலும் தொடர்ச்சியாக அமையும் அமைப்பை நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

செய்யுள்களில் எதுகை, மோனைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதைப் பிள்ளையவர்கள் மாணாக்கரை கவனிக்கச் செய்வார். தனிப்பெருங்கவிஞராகிய அவர் செய்யுள் செய்யப் பழகுவோர்க்கு இன்ன இன்ன முட்டுப்பாடுகள் நேரும் என்பதை நன்றாக அறிவார். அவை நீங்க வழிகாட்டுவார்.

இசை

இசையில் அதிகப் பழக்கம் வைத்துக் கொண்டால் இலக்கண, இலக்கியங்களில் தீவிரமாகப் புத்தி செல்லாது.

கவிதைப் பயிற்சி

அடிக்கடி செய்யுள் இயற்றிப் பழகி வரவேண்டும். அங்ஙனம் பழகி, வந்தால் நாளடைவில் செய்யுள் இயற்றுவது எளிதாக இருக்கும். உரிய முயற்சியும், தக்க பயிற்சியும், இன்னது இன்னபடி இருந்தால் நன்றாயிருக்கும் என்னும் ஆராய்ச்சியும் கூடிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதலும் செய்யுளைச் சிறக்க வைக்கும்.

பாடம் சொல்லுதல்

விடியற்காலையில் பாடம் ஆரம்பமாகிவிடும். எட்டுமணி வரையிலும் பாடம் நடக்கும். சற்று நேர உணவு இடைவேளைக்குப் பிறகு 10, 11 மணி வரையிலும் பாடம் நடக்கும். மதிய உணவிற்குப் பின் பிள்ளையவர்கள் சிறிது நேரம் ஓய்வு கொள்வார். அதன் பிறகு மீண்டும் பாடம் தொடங்கி மாலை வரை நடைபெறும்.

மாணாக்கர் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கேற்ப நாள்தோறும் 50;100;200 பாடல்கள் கூடப் பாடம் கூறுவார். ஒவ்வொரு செய்யுளுக்கும் சுருக்கம் கேட்பார். அதனால் செய்யுட்பொருளை மாணாக்கர் தெளிவாக அறிந்து கொள்வதோடு ஒரு கருத்தைப் பிழையின்றி தக்க சொற்களை அமைத்துச் சொல்லும் பழக்கத்தையும் அடைவர். மாணாக்கர் விரும்பினால் மறுமுறையும் கூட முழு நூலையும் பாடம் சொல்வதுண்டு.

பிள்ளையவர்கள் பாடம் சொல்லப் பிறந்தவர். அவர் நூலாசிரியர், உரையாசிரியர்;மற்றும் போதகாசிரியர், அவர் பாடம் சொல்வதையே நோன்பாகக் கொண்டவர். அக்காலத்தில் ஒவ்வொருவரும் சிற்சில நூல்களையே பாடம் சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தனர். பல நூல்களை ஒருங்கே ஒருவரிடத்துப் பார்ப்பதும், பாடங்கேட்பதும் அருமையாக இருந்தது. இச்சூழ்நிலையில் பாடம் சொல்லும் போது பிள்ளையவர்களுக்கு புத்தகம் தேவைப்படாது. அவருக்கு அத்துணைச் செய்யுட்களும் மனப்பாடமாகவே இருந்தன. சிறிதேனும் தடையின்றிப் பாடங்களைச் சொல்வதும், பதப்பொருள் கூறுவதுமாகவே பெரும்பாலான நேரத்தைப் பயன்படுத்துவார். பாடம் சொல்வதில் அவருக்குச் சிறிதும் சலிப்பே ஏற்படாது. நூலுக்குப் பொருள் சொல்வதோடு நூலாசிரியர் தொடர்பான வரலாறுகளையும் எடுத்துரைப்பார்;பலப்பல தனிப்பாடல்களையும் சொல்வார்;இவை தவிர மிகப் பயன்தரும் பற்பல செய்திகளைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இடையிடையே விளக்குவார்.

மாணாக்கர் நலன்களை அடிக்கடி ஆராய்ந்து, அன்போடு பழகி, ஆதரவு காட்டுவதால் தமிழ்க்கல்வி வளர்ச்சியுற வழி வகுப்பார்.

அவர் பாடம் புகட்டுகையில் அங்கங்கே அமைந்துள்ள இலக்கணச் சிறப்புக்களையும் எடுத்தியம்புவது வழக்கம். அரிய பதமாக இருப்பின், பிற நூல்களிலிருந்து, தக்க சான்று காட்டுவார். பிள்ளையவர்கள் இன்ன சமயங்களில் தான் பாடம் சொல்லுவது என்ற நியமம் வைத்துக் கொண்டதில்லை. வண்டியிற் செல்லும் போதும், உண்ணும் போதும், இரவில் படுக்கையில் படுத்துள்ள போதும் கூடப் பாடம் கூறுவார்.

தமிழை இன்பம் தரும் விளையாட்டாகக் கருதி வாழ்ந்த அப்பெரியார் தமிழ்க்கல்வியை விளையாட்டாகவே போதித்து வந்தார். ஈற்றடி அல்லது பொருள் கொடுத்துச் செய்யுள் இயற்றப் பழக்கினார். தாமும் அவர்களோடு இணைந்து விளையாட்டாகச் செய்யுள் இயற்றி வழிகாட்டினார்.

கவிப்பெருக்கு

திருவாவடுதுறை நோக்கிய மாட்டுவண்டிப் பயணத்தில் அம்பர்ப் புராணத்தில் தாம் அதுவரை செய்த ஐம்பத்து மூன்றாவது செய்யுளை வாசிக்கச் சொல்லிக் கேட்டு, சிறிதுநேரம் பிள்ளையவர்கள் சிந்தனையில் ஆழ்ந்தார். அப்பால் புதிய பாடல்களைப் பாட ஆரம்பித்தார். மனப்பாடம் பண்ணிப் பாடல்களை ஒப்பிப்பது போலத் தங்கு தடையின்றி ஒவ்வொரு செய்யுளாகச் சொல்லி வந்தார். அவை திருத்தமும், பொருட்சிறப்பும்

கொண்டன. ஒரு வரலாற்றை அமைத்துத் தொடர்ச்சியாகப் பேசுவது போலவே பாடி முடிப்பார். அவர் கவிதை இயற்றும் வேகம் கேட்கும், பார்த்தும், உணர்ந்தும் மகிழ்தற்குரியது. துறைமங்கலம் சிவப்பிரகாசர் ஒருமுறை திருவண்ணாமலை கிரிவலம் வருவதற்குள் சோணசைல மாலை பாடி முடித்ததைப் போல, பிள்ளையவர்கள் ஒருமுறை திருவானைக்கா அகிலாண்ட நாயகி அன்னை திருக்காட்சி பெற்று வருவதற்குள் அகிலாண்ட நாயகி மாலை பாடியுள்ளார். பிள்ளையவர்களின் கல்விப் பெருமை, போதனா சக்தி, செய்யுள் இயற்றுவதில் இருந்த ஒப்புயர்வற்ற ஆற்றல், மாணாக்கர்களுக்கு முறையாக சலிப்பின்றி பலவருடம் பாடம் சொல்லும் திறன், ஆர்வம் அனைத்தும் முன்மாதிரியானவை.

புலமையின் தலைமை

பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் பழக்க வழக்கங்களை ஆழக் கற்றுணர்ந்து, சைவ சிந்தாந்தப் பொருள்களையும், முறைப்படி உணர்ந்து தம் செய்யுட்களில் பதித்துச் சென்றுள்ளார்.

ஞானாசிரியராக சுப்பிரமணிய தேசிகரை பிள்ளையவர்கள் பணியும் காட்சி தவத்தின் தலைமையை நினைவுறுத்துவதாகவும், அப் புலவர் கோமான் தேசிகருக்கு முன் தமிழிலக்கிய, இலக்கணத் தொடர்பான ஐயங்களை விளக்கிய காட்சி புலமையின் தலைமையைப் புலப்படுத்துவதாகவும் விளங்கியது. பிள்ளையவர்கள் சாதாரணமாகச் சிறிதும் சிரமமின்றி திருமடத்து மாணாக்கர்களின் ஐயங்களை விடுவித்துக் கொண்டே சென்றார். ஆணவத்தின் சாயை சிறிதுமின்றிப் பணிவோடு மெல்ல விளக்கினார்.

பிள்ளையவர்கள் முதலில் பாடிய பாடல்களில் பக்தியும், கவிச் சுவையும், எளிமையும் மிகுந்திருந்தன. பின்பு பாடியுள்ள பாடல்களில் பல அரிய கருத்துக்களும், சாத்திரக் குறிப்புகளும், ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் யமகம், திரிபு முதலியவைகளும் நிறைந்து விளங்கின.

அவர் செய்யுள் இயற்றுவதை கற்றுச்சொல்லி (தலை மாணாக்கன்) எழுதிய பின், அதைப் படித்துக்காட்டி அவர் சொல்லிய திருத்தங்களைக் குறித்துக்கொண்டு மீண்டும் வேறு ஏட்டில் நன்றாக எழுதுவர். குளிர்ந்த வேளைகளில் அக்கவிஞருக்கு ஊக்கம் உண்டாகும் போது புராணச் செய்யுட்கள் வெகுவேகமாக விரைந்தோடி வரும். இயற்கைக் காட்சிகளாக அமைந்த இடங்களில் அவருக்கு உற்சாகம் மின்னும் அதிகமாகும். பெரும்பாலும் காலை வேளைகளிலும், பிற்பகல் நேரங்களிலுமே புராணச் செய்யுட்களை இயற்றுவார். தாம் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை அங்கங்கே செய்யுட்களில் அமைத்துப் பாடி இன்புறச் செய்வார்.

சொற்பொழிவு

பிள்ளையவர்களின் சொற்பொழிவு சாந்தமாகவும், யாவருக்கும் விளங்கும்படியாகவும் இருக்கும். இவர் புராணச் சொற்பொழிவாற்றும்போது ஒவ்வொரு கருத்தையும் விரிவாக எடுத்துரைப்பார். விரைவின்றியும்

தெளிவாகவும், இடையிடையே மேற்கோள்கள் காட்டியும், பத சாரங்கள் கூறியும் விளங்க வைப்பார்.

தலபுராண வரையறை செய்து கொள்ளல்

மாணிக்க வாசகர் சரித்திரத்தை விரிவாக அமைக்க எண்ணிய பிள்ளையவர்கள் வடமொழி நூல்களாகிய, ஆதி கைலாச மாகாத்மியம், மணிவசன மகாத்மியம் என்னும் இரண்டு நூல்களை அங்கிருந்த வடமொழி வல்லுநர் வாய்மூலம் கேட்டுணர்ந்தார். திருப்பெருந்துறை பழைய தமிழ்ப் புராணங்களையும், திருவாதவூரடிகள் புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையும் படிக்கச் சொல்லிக் கேட்டு மணிவாசகர் வரலாற்றை இன்னவாறு பாட வேண்டும் என்று வரையறை செய்து கொண்டார்.

திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்ற நாளில் பிள்ளையவர்கள் இடையிடையே காண வந்தவர்களுடன் பேசியும், அதே சமயத்தில் கற்பனை வளம் செறிந்த செய்யுட்கள் பலவற்றை இயற்றிக் கொண்டுமிருந்தார். அவர் உள்ளம் கவிதை விளைபுலம்; அது உற்சாகமாக இருந்த போது சோர்வின்றிக் கற்பனைகள் உதயமாகும்.

ஒரு புராணத்தை முற்றும் இயற்றிய பிறகுதான் அரங்கேற்ற வேண்டும் என்ற நியதி அவருக்கு இல்லை. புராணத்தில் பிற்பகுதியை இயற்றிக் கொண்டேயிருப்பார்; முற்பகுதிகளை அரங்கேற்றுவார். அவர் எந்தச் சமயத்தில் நினைத்தாலும் தன் உள்ளப் பெட்டியைத் திறந்து வேண்டிய கவிகளை எடுத்து வெளியிடும் நிலையிலிருந்தார். அப்பெட்டியைத் திறப்பதற்குரிய திறவுகோலாகிய உற்சாகம் மாத்திரம் அவரிடம் இருக்க வேண்டும். அப்பொழுது அவரிடமிருந்து புறப்படும் கவிதை வெள்ளத்தை யாரும் தடை செய்ய முடியாது.

பிள்ளையவர்களிடம் பல மதத்தினரும், பல இனத்தினரும் தமிழ் கற்றுத் தேர்ந்தனர். அந்தணர்களில் ஸ்மார்த்தர், வைணவர், மாத்வர் முதலிய பல பிரிவினரும், இது போன்றே வேளாளர்களில் பல்வகைப் பிரிவினரும், மற்றும் பல சாதியினரும், பிள்ளையவர்களை அடுத்துப் பாடம் கேட்டனர். கிறித்தவர், முகமதியர் முதலிய பல சமயத்தவரும் அவர்பால் தமிழ் நலம் துய்த்தனர். வித்துவான் தியாகராசச் செட்டியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வல்லூர் தேவராசப் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் போன்றோர் குறிப்பிடத்தக்க ஒரு சிலராவர்.

பிள்ளையவர்கள் இயற்றிய பாடல் வகை

இவர் சமயத்திற்கு ஏற்றவாறு சாதுர்யமாகப் பாடிய பாடல்கள் பல; செய்ந்நன்றி மிகுதியால் தமக்கு உதவியவர்களைப் பற்றிப் பாடிய செய்யுட்கள் பல; கடிதம் எழுதுகையிலே தலைப்பில் ஒரு பாடலை எழுதியனுப்பும் வழக்கத்தால் தோன்றியவை பல;வடமொழிப்புலவர்கள் அவ்வப்போது கூறும் ஸ்லோகங்களை உடனே மொழி பெயர்த்து இயற்றிய செய்யுட்கள் பல; பிறரது நூல்களுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரங்கள் பல.

பிள்ளையவர்கள் செய்யுள் இயற்றுவதற்குத் தனி இடம், தனி நேரம், தனி வசதிகள், ஓய்வு முதலியவற்றை எதிர்பார்த்ததே இல்லை. பாட வேண்டிய செய்திகளை மனதில் ஒழுங்கு படுத்திக் கொண்டு ஒரே மூச்சில் நூற்றுக் கணக்காகச் செய்யுட்களை இயற்றுவார். இடையிடையே அமையும் எதுகைக் கட்டுள்ள பாடல்களை 'இளைப்பாற்றுப் பாடல்கள்' எனக் கொள்வார். மிகவும் அரிய கற்பனைகளை ஒரு சில வினாடிகளிலேயே அமைப்பார்.

கையெழுத்து

இளமை முதல் ஏட்டில் எழுதும் பழக்கத்தால் பிள்ளையவர்களுடைய எழுத்து, அழகாக முத்துக் கோத்தாற்போல் இருந்தது. ஒவ்வொரு வரியும் கோணாமல் ஒழுங்காக இருப்பதுடன், எழுத்து ஒன்றுடன் ஒன்று சேராமல் விளங்கும். இவர் தம் கைப்பட எழுதிய சுவடிகளுக்குக் கணக்கே இல்லை.

வடமொழி ஆளுகை

வடமொழிச் சொற்களைத் திரித்து வழங்கும்போது மனம் போனவாறு திருத்துதலை அவர் விரும்பவில்லை. சொல்லின் உருவத்தையும், பிற தொடர்புகளையும் ஆராய்வதைக் காட்டிலும், ஆன்றோர் ஆட்சியில் உள்ளனவா என்பதை ஆராய்வதே சிறந்தது என்பது அவர் கருத்து. எல்லாப் பிறமொழிச் சொற்களையும் திருத்தி வழங்க வேண்டும் என்பது அவருக்கு உடன்பாடன்று.

பாடம் சொல்லும் போது எல்லாவற்றையும் மறந்து, கருமமே கண்ணாக விளங்குவார். சவரிமுத்தாப் பிள்ளைக்கு பெரிண புராணப் பாடம் நடத்தி வரும்போது கடுங்காய்ச்சலிலும் நோயின் நினைப்பேயின்றிப் பாடம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் நோயினால் பிள்ளையவர்கள் வருந்தியபோதும் அவருடைய கவி ஆற்றல் மெலிவுறவில்லை. திருவிடைமருதூர் தல விஷயமாக ஒரு திரிபந்தாதியை இயற்றினார். பிள்ளையவர்கள் தேவாரத்திலும், திருவாசகத்திலும் நெடுங்காலமாக ஆய்வு செய்தவர். அதனால் மாணாக்கர் ஐயம் எழுப்பும் போது அவர் தரும் விளக்கம் பெரும்புதையல் கிடைத்ததெனப் பயன்படும். பிள்ளையவர்கள் எல்லாம் ஒடுங்கிய நிலையிலும், தமிழுணர்வு ஒடுங்காமல், பக்திச் சுவை நிரம்பிய திருவாசகம்- அடைக்கலப் பத்துப் படிக்கக் கேட்டுச் சிவலோகம் எய்தினார்.

நிறைவுப் பாடல்

இளமையிற் கல்வி, இலக்கிய ஒழுக்கம்,
    எழிற்றமிழ் இசைக்கு நல் வாழ்வு;
வளமெலாம் மொழிக்கே வகுத்தளித்(து)அன்பின்
    வடிவெனப் பொலிந்துவீற் றிருத்தல்,
களமெலாம் வெல்லும் மாணவச் செல்வக்
    கருத்தினில் நெகிழ்ந்திடும் நெஞ்சம்
தளர்விலாத் தொண்டின் சிரபுரச் செம்மல்
    தமிழுணர்(வு)அடைகஇப் புவியே!

70. பிள்ளையவர்களும் மாணாக்கர்களும்

ஆ. மகாலஷ்மி
கும்மிடிப்பூண்டி

. . . திருச்சிரா மலையில் வாழெந்தை யருள்சேர்
மாட்சிமை விளங்குமீ னாட்சிசுந் தரமுகில்
-திருவிழிமிழலை சாமிநாத கவிராயர்.

தேனாட்சி செய்கவி யானின் செயன்முற்றுஞ் செப்புமுன்னே
மீனாட்சி சுந்தர வள்ளலை யெங்கள் விழ்பொருளை
வானாட்சி செய்யப் புரிந்ததென் னோமன் வடிவுகொடு
தானாட்சி செய்திரு வாரூர்த் தியாகசிந் தாமணியே
-தியாகராசலீலை முகவுரை

தேமேவு செவ்வந்தி யலர்சிர கிரிக்கண்வரு
சிவனடிய ரிற்சிறந்து
திகழுமீ னாட்சிசுந் தரதேசிகன்வயிற்
செந்தமிழெ லாமுணர்ந்து
-சித்திலிங்கமடம் தி.அ.

சிவானந்தஸ்வாமிகள் குறிப்பிடும் வகையில் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சிறந்த சிவபக்தர். சிவதீட்சைகளை முறையே இவர் பெற்றவர். பிள்ளையவர்கள் மாநிறத்தில் கம்பீரமான தோற்றத்துடன் அகலமான நெற்றி, முழங்கால் வரையிலுள்ள கைகளுடன் நடுவிரலின் மத்தியில் ஊடுருவிச் செல்லும் ரேகை, பூப்போன்ற உள்ளங்கை, சிறிய குடுமி, கௌரி சங்கரமுள்ள ருத்திராட்ச கண்டி, தூய வெண்ணிற ஆடை முதலியவற்றை நோக்குங்கால் பிள்ளையவர்கள் மகாவித்துவானுக்குச் சிறந்த தகுதியுடையவர் என்பதை அறியலாம்.

பிள்ளையவர்களின் அருங்குணமும் நிறைந்த புலமையும் தளரா நாவன்மையும் அவருடைய கீர்த்திக்கு அடிகோலியது. பொறுமை, திருப்தி, தம்மை வியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியுணர்வு, சிவபக்தி, மாணாக்கர்பால் அன்பு போன்ற அரிய நற்குணங்களைக் கொண்டிருந்தார். தமிழ் நூல்களை ஒய்வின்றி முறையாகப் பாடஞ்சொல்லும் திறத்தில் இவர் காலத்தில் இவரைப் போன்றவர் வேறுயாருமில்லை. வாழ்க்கையில் பிள்ளையவர்கள் சிறந்த நூலாசிரியராகவும், போதகாசிரியராகவும் இருந்து தமிழ் மாணாக்கர்களை வளப்படுத்தினார்.

பிள்ளையவர்கள் பல மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லும்

சமயங்களிலும், தாம் அறியாத விஷயங்களை யாரேனும் சொல்வார்களாயின் அன்புடன் கேட்பது வழக்கம். தமிழ்ப்பாடஞ் சொல்லிச் சொல்லி தமிழறிவைத் தமிழ் மக்களுக்குப் பயன்படச் செய்த வள்ளல் இவர். பிள்ளையவர்கள் இயற்றிய பல நூல்கள் தெரியாதவை. தெரிந்தவற்றுள் புராணங்கள்-22, பிற காப்பியங்கள்-6, பிரபந்தங்கள்-45, தனிப்பாடல்கள் அளவற்றவை. இவ்வாறு படைக்கப்பட்ட நூல்கள் ஒவ்வொன்றும் முத்து முத்தாய் விளங்குவதாலும் அவை தமிழ் மக்கள், தமிழ் மாணாக்கர்களின் உள்ளத்தில் இனிய இன்பத்தை உண்டாக்குவதாலும் என்றும் குன்றா இளமையோடு விளங்குகின்றன. தமிழ் உள்ளளவும் பிள்ளையவர்களின் பெரும்புகழ் நின்று நிலவும் என்பது திண்ணம்.

பிள்ளையவர்கள் மாணாக்கர்களிடையே பாடஞ் சொல்லும் போது தம்முடைய ஞானாசிரிய ஸ்தானமாகிய திருவாவ்டுதுறையிலுள்ள மடாலயத்தையும் குருமூர்த்திகளையும் உரிய இடங்களிற் பாராட்டிக் கொண்டே இருப்பார். உதாரணமாக பின் வரும் பாடலின் மூலம் அறியலாம்.

வானளவு புகழ்த்திருவா வடுதுறையிற் குருநமச்சி வாய மூர்த்தி
ஆனபர சிவனருளான் ஞானகலை முதற்பிறவு மமையக்கற்று
மோனமிகு சாத்தியனாய் மிளிர்கனக சபாபதிமா முனிவர் கோமான்
கூனன்மதி முடித்தபிரான் மதூகவனப புராணநீ கூறுகென்ன

இவர் மாணாக்கர்களுக்கு நல்ல முறையில் பாடஞ்சொல்ல வேண்டுமென எண்ணி பெரும்பாலும் யோசித்துக் கொண்டே இருப்பார். மாணாக்கர்களுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்களைக் கோவையாக மனதில் ஒழுங்குபடுத்திக் கொண்டு, பின்பு ஒரே மூச்சில் நூற்றுக்கணக்காகப் பாடல்களை கூறி அசத்துவார். தேவைப்படும் இடங்களில் கற்பனைநயம், சிறந்த சொல்லாற்றல் கொண்டு புதிய செய்யுள்களையும் மாணாக்கர்கள் முன்னிலையில் இயற்றுவார். அவ்வாறு அவர் செய்யுள் படைக்கும் போது, அதற்காக அகராதியையும், நிகண்டுகளையும் சொற்களையும் தேடித்தேடி கவிபாடுவதென்பது இவர்பால் ஒரு பொழுதுமில்லை. இவருடைய மனம் பாடல்களை உருவாக்கும் உலைக் கூடமாக இல்லாமல் வளமிக்க செய்யுள்களைப் பயிர் செய்யும் விளைநிலமாக இருந்தது. தம் வாழ்நாளில் ஆயிரக்கணக்காக செய்யுட்களை இயற்றினாலும் அவர்க்கு முழுதிருப்தி உண்டாகவில்லை.

தம்பால் வந்த மாணாக்கர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக் கூடாதென்று கருதி அவர்கள் பால் அளவற்ற அன்பு பூண்டு பாடஞ்சொல்லிக் கொடுக்கும் இயல்புடையவரானார். மாணாக்கர்களிடம் இவர் தாயைப் போன்று அன்புடையவராகப்பழகினார். மாணாக்கர்களும் இவரைத் தந்தையாகவே எண்ணி பயபக்தியோடு ஒழுகினர். மாணாக்கர்மேல் கொண்டுள்ள அன்பின் காரணமாக அவர்கள் புரியும் குற்றங்களை உடனுக்குடன் மறந்து விடுவார். மாணாக்கரிடம் எந்தெந்த வகையில் குறைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து நீக்குவார்.

ட.7.

மாணாக்கர்கள் அல்லாதவர்கள் கூடச் சந்தேகம் கேட்டால் அதையும் அன்போடு தீர்ப்பார். ஒரு முறை வரகனேரிச் சவரிமுத்தா பிள்ளை என்பவர் திருவிளையாடற்புராணத்திலுள்ள,

தன்கிளை யன்றி வேற்றுப் பறவைகள் தாமும் தம்போல்
நன்கதி யடைய வேண்டிற் றேகொளிந் நாரை செய்த
அன்பினில் வியப்போ விசனருளுனில் வியப்போ வன்பர்
கின்புருவான வீச நன்பருக் கெளிதே தய - (நாரைக்குமுத்தி)

என்னும் ஒரு செய்யுளைப் பற்றிய ஐயத்திற்குக் கடிதமெழுத அதற்கு பிள்ளையவர்கள் விடையாக எழுதிய கடிதம்:

இக்கடித நோக்கி யியற்செந் தமிழெவற்றும்
மிக்க தெனவளர்க்கு மேன்மையாற் - றொக்கபுகழந்
தென்னன் பொருவுந் திருவார் சவரிமுத்து
மன்ன னடையு மகிழ்

எனும் வெண்பாவால் முகமன் கூறி மேலும் அவர் விளக்கியமாவது:

அன்பினில் வியப்போ வீச நருளினில் வியப்போ.........கெளிதேதய

என்றது சரியென்றும் எளிதேது ஐய என்பதில் ஏது என்பது வினா எனவும் ஈசனன்பருக்கு அருளைப் பெறுதல் எளிது;அஃது அரியதன்று, அன்பு செய்தல் அரிது;அஃது எளியதன்று" என்று எழுதி அவ்வையத்தைப் போக்கினார்.

இவ்வாறு பிள்ளையவர்களுக்கு வசனம் எழுதுவதைக் காட்டிலும் செய்யுள் இயற்றுவதிலே ஆர்வம் அதிகம். குறிப்பாக கடிதங்கள் எளிய வசன நடையில் ரத்தினச் சுருக்கமாக இருக்கும். இதனைத் தம் மாணாக்கர்களையும் கடைபிடிக்கச் செய்த வல்லமையாளர். பிள்ளையவர்களின் மாணாக்கர்களும் குருவைப் போலவே குரு வணக்கமும் செய்யுள் நடையிலேயே இயற்றி அவருக்கு நன்றியுணர்வைக் காட்டினார்கள். அவை பின் வருமாறு:

துங்கநற் குணமீ னாட்சிசுந் தரனென்
தோம்அறுத்(து)அருள்செய் தே சிகனே -அழகிரி சாமி நாயகர்.

இன்னமெம்போ லியர்பலருக் கிலக்கியமு மிலக்கணமும் எளிது
தந்தோன்
அன்னவன்பேர் மீனாட்சி சுந்தரநா வலவனென ஆய்ந்தோர் யாரும்.......
-ஆறுமுக தம்பிரான்

மேதகுஞ் சீர்கொண்ட திரிசிர புரத்தினான் மீனாட்சி சுந்தரப்பேர்
விசயன்.....
-திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியார்

எளியேன் றிமை மன்னியசீர் மீனாட்சி சுந்தர தேசிகன்....
-இராமசாமி பிள்ளை

அறஞ்செய் மீனாட்சி சுந்தரப் பெயர் கொள் அறிஞன்....
-காஞ்சிபுரம் இராமானுஜ பிள்ளை

சிவநெறி சற்றும் பிறழ்விலாக் குரிசில் திரிசிர புரமுறை புனிதன்....
சிவநெறி சற்றும் பிறழ்விலாக் குரிசில் திரிசிர புரமுறை புனிதன்....
-சபாபதி முதலியார்

மீனாட்சி சுந்தரவென் னாசான்..
மீனாட்சி சுந்தர தேசிகன்...... -புதுவை சவராயலு நாயகர்.

இவ்வாறு மாணாக்கர்களுடைய குருவணக்கத்தையும் ரத்தினச் சுருக்கமாகச் சொல்லும் கவிதைகளையும் சொல்லிக்கொண்டே போகலாம். பிள்ளையவர்களின் தமிழ்ச் சொல்லாற்றலால் மாணாக்கர்கள் நாளுக்கு நாள் கூடினார்களே தவிரக் குறையவேயில்லை. பிள்ளையவர்களிடம் பாடம் கற்க முடியவில்லையே என்றெண்ணி வருந்தியவர்கள் பலர். பிள்ளையவர்கள் ஒவ்வொரு மாணாக்கர்க்கும் குருபக்தியும், சிவபக்தியும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுவார். சைவ மடாதிபதிகள் பிள்ளையவர்களின் சிவபக்தியைக் கண்டு "சைவப்பயிர் தழையத் தழையும் புயல்" என்று புகழ்ந்தனர்.

பிள்ளையவர்கள் மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லும் போதும், புராணங்களைப் பிரசங்கம் செய்யும் பொழுதும் ஒவ்வொரு கருத்தையும், மேற்கோள்களையும் விரைவின்றியும், தெளிவாகவும், பதசாரங்கள் சொல்லியும் விளக்கும் தன்மையுடையவர். அவர் பாடஞ்சொல்லும் சமயங்களில் "எல்லாம் கூடிக்கூடியும்" என்னும் சொற்றொடரையும், "ஊக்கம்" என்னும் சொல்லையும் "என்னப்பா" என்ற சொல்லையும் அடிக்கடிப் பயன்படுத்திப் பாடஞ்சொல்வார்.

பிள்ளையவர்கள் கல்வியறிவில்லாதவர்கள் செய்யும் உபகாரத்தை "பெறுவான் தவம்" என்று குறிப்பாகக் கூறுவார் அவை,

அறிவிலானெஞ்சுவுந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம்

என்னும் திருக்குறளிலுள்ள தொடர் ஆகும். இவர் கம்பராமாயணத்தை நுண்ணறிவோடும் இனிய சாரீரத்தோடும் சுவைப்படப் பிரசங்கம் செய்ததாலும் பாடஞ்சொல்லியதாலும் "கம்பராமாயணப் பிரசங்க வித்துவான்" என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

பிள்ளையவர்களின் சிறந்த கல்வியாற்றலையறிந்து அம்பலவாண தேசிகர் முன்னிலையில் பல வித்துவான்களும் பிரபுக்களும் சேர்ந்து நல்ல நாள் கூடி சபையில் சால்வைப் போர்த்தி "மகா வித்துவான்" என்ற பட்டத்தை வழங்கினார்கள். பிள்ளையவர்களிடம் கல்வி கற்ற மாணாக்கர்கள் பல மதத்தினர். அதில் குலாம்காதர் எனும் முகமதியர் பிள்ளையவர்களிடம் சீறாப்புராணம் பயின்றார். புதுச்சேரியைச் சேர்ந்த செ.சவராயலு நாயகரென்னும் கிறிஸ்தவர் இவரிடம் தேம்பாவணி,

திருக்காவலூர்க் கலம்பகம் கற்றுத் தேர்ச்சியடைந்தார். பிள்ளையவர்களிடம் கல்வி கற்று மிக்க புகழ்பெற்ற மாணாக்கர்களில் முதன்மையானவர் தெய்வநாயகம் பிள்ளை. அவருக்குப் பின் தியாகராச செட்டியாரும், ஆரியங்காவற் பிள்ளை மற்றும் பலரும் சிறந்த மாணாக்கர்களாகத் திகழ்ந்தனர்.

மீனாட்சி சுந்தரனா மேலோன் சிரகிரியில்
தானாட்சி யாவாழ் தருணத்தே - தேனாட்சிச்
செந்தமிழ் வன்பாற் சிறிதுணர்ந்ததேன் மன்னவித்தாற்
பந்தமெனக் குண்டேயுன் பால்

என்று வேங்கடசுப்புபிள்ளை பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட செய்தியை வேத நாயகம் பிள்ளைக்கு எழுதிய பாடலால் தெரிவிக்கின்றார். பிள்ளையவர்கள் எவ்வாறு குருவின் மேல் பக்தி கொண்டிருந்தாரோ அதே போல் சவராயலு நாயகர் பிள்ளையவர்களிடம் பக்தி கொண்டாரென்பதைக் காண்போம்.

இலக்கண விலக்கிய மினிதுற வெவர்க்கும்
கலக்க மறப்புகல் கரிசில் குண. ன்
தன்னிடைக் கற்பவர் மன்னவைக் களத்துள்
என்னையு மொருவனாத் துன்னவித் தருளி
மெய்யருள் சுரந்த மீனாட்சி சுந்தர
நல்லாசிரியன் -என்று பாராட்டி எழுதியுள்ளார்.

மீனாட்சி சுந்தரப்பேர் மேவு தமிழ்க் கடலிற்
றானாட்சி யாமமிர்தந் தானுண்டு-வானாள்
புரந்தரனை மீறுசவ ராயலுபொற் பார்மால்
புரந்தருளு மென்னுரையும் பூண்டு

என்று பொம்பைய பாளையம் பால சித்தானந்தர் பாடியுள்ளார்.

பிள்ளையவர்கள் யாருக்கேனும் கடிதமெழுதுகையில் தலைப்பில் ஒரு பாடலை எழுதுவிப்பது வழக்கமாகும். இக்கருத்தை மாணாக்கர்களும் பின்பற்ற வைத்த உத்தமவித்தகர். வடமொழி நூல்களையும், சைவ நூல்களையும், சுலோகங்களையும் நல்ல மொழி பெயர்த்து மாணாக்கர்களுக்குப் புரியவைப்பார். இதனைதான்,

கற்றற் கெளியனவாக் காட்டியரும் பாடலெல்லாம்
பற்றச்செய் நற்குணவென் பண்ணவனாம்- உத்தமநீ
ஞானப்பொருள் வழங்கி நற்றருமஞ் செய்வதுபோற்
றானமுண்டோ விவ்வுலகிற்றான்.

எனும் பாடல் விளக்குகிறது.

பிள்ளையவர்கள் பிறருக்காகப் பாடிக் கொடுத்தச் செய்யுள்கள் பல. அவர்கள் அதனைக் கொண்டு பல பரிசுகள் பெற்றனர் சாமிநாத பண்டாரம் பாடியதாக இவர் இயற்றியளித்த செய்யுள்:

சீர்பூத்த புகழ்பெருத்த வாறுமுக பூபாலா
 செறிந்தோர் யார்க்கும்
ஏர்பூத்த சந்தனப் பூசில்லையென்றாய் மேற்பூச்சென்
 றிருந்தேன் யானும்
வார்பூத்த புத்தகத்தை யொளித்தாயேல் வெளிப்படுத்த
 வல்லார் யாரே.

திருநெல்வேலி ஜில்லா தரம் பைஸல் கலெக்டராக இருந்த பக்கிள் துரை மீது சுப்பிரமணிய தேசிகர் விருப்பத்தின்படி பாடியவை.

நெடியபுகழ் படைத்தபக்கி ளெனும்வேந்த னடத்திவரு நீதி நோக்கிப்
படியமையும் பன்னாட்டுப் பலகுடியெ லாமொருதென்
பாண்டி நாட்டே.........

இரவவழி நடக்கலாங் கைநிறையப் பொருளேந்தி இவனாற் றிய
கரவுபரி பலரொழிந்தார் கொலைஞரு மெவ் வுயிரிடத்துங்
கருணை செய்வர்........

பிள்ளையவர்கள் பிறர் செய்த நன்றியை மறவாமற் பாராட்டும் குணமுடையவர் தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக் கொள்வார். இவர் பிறருடைய உதவியைப் பெற்றவுடன் நன்றியறிவினால் மனங்கசிவதில் இவரை ஒப்பார் யாருமில்லையென்றே சொல்லலாம். யாரிடத்தும் விரோதம் பாராட்டக் கூடாதென்பது இவருடைய கொள்கையாகும். அதையும் மீறி இவரைக் கடுமையாகப் பேசினால், அவர் மறுப்பொன்றும் பேசாமல் அமைதி காத்துச் சென்றுவிடுவார். ஆனால் அதே அன்பர்களோடு மீண்டும் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தால் பகை எல்லாவற்றையும் மறந்து அன்பாகப் பழகுவார். தனக்கு எந்த இன்னல் ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்வார். ஆனால் மாணாக்கர்களுக்கு ஏதேனும் குறை ஏற்பட்டால் மிகவும் வருந்தி, அதை நீக்குவதற்காகப் பாடுபடுவார். தம்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம், வெங்குறை தீர்ப்பிக்கும் விழுமியோர் இவர்.

பிள்ளையவர்களிடமிருந்து சாந்த குணமே அவர் பாற் மாணாக்கர்களையும், மற்றவர்களையும் பற்றியிழுக்கும் காந்தமாகத் திகழ்ந்தது. பின்வரும் செய்யுள்களிலிருந்து பிள்ளையவர்களிடம் மற்றவர்கள் எவ்வளவு மதிப்பு கொண்டிருந்தார்கள் என்பதைக் காணலாம்.

இருள்கனிந்த வென்மனத்து மிடையறா தொளிபரப்பி
 இருப்போன் கங்கைப்
பொருள் கனிந்த குலதீபன் மீனாட்சி சுந்தரனாம்
 புலவரேறே - தி. சுப்பராய செட்டியார்

எண்ணிய பலவு மாணவர்க் கன்பி னீந்திடு நிதிதமிழ் விளங்க
 நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தர நன்னவலன் .....
 -உ.வே. சாமிநாதையர்

குலம்விளக்குங் கற்பகமே குருமணியே திருவணியே
குணக்குன்றேயிந்
நிலம் விளக்குந் தினகரனே யெனவவனை வாழ்த்திடுவாய்
நிதமு நெஞ்சே

இவ்வாறு குளத்தூர் ச.வேத நாயகம்பிள்ளை முதல் அனைத்து மாணாக்கர்களும் பிள்ளையவர்களின் நற்குணத்தைப் பாராட்டுவதிலிருந்து அவர் புகழை நாம் எளிதில் உணரலாம்.

பிள்ளையவர்கள் விடியற்காலை நான்கு மணிக்கு முன்பே எழுந்து விடுவார். அவர் எழுந்துவுடனே மாணாக்கர்களை எழுப்ப தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லிக் கொண்டே வாசலிலேயே உலாத்துவார். மாணாக்கர்கள் அனைவரும் எழுந்து காலைக்கடன் முடிந்துவரும் வழியிலேயே இயற்கையை ரசித்தவாறே செய்யுள் இயற்றுவார். எதையும் எதிர்பார்க்காமல் நேரங்கிடைகின்ற சமயங்களிளெல்லாம் பாடஞ்சொல்லி தரமுள்ள மாணாக்கர்களை உருவாக்கியதால் இவருடைய புகழ் "ஜனசஞ்சாரமற்ற காட்டிலேகூட" பரவியிருந்தது. அவர் என்றும் பணத்திற்கு அடிமையாகாமல் தமிழுக்கு அடிமையாகி இருந்தார். இத்தகைய சிறந்த புகழால் ஒரு சமயம் லண்டனிலிருந்து "மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், இந்தியா" என்று மட்டுமே விலாசமிட்டு வந்த கடிதம் அவருக்கு எந்த ஒரு தடங்கலுமில்லாமல் வந்ததையெண்ணி அவருடைய மாணாக்கர்களும் மற்றவர்களும் ஆனந்தத்தால் வியந்தனர். பிள்ளையவர்கள் ஒருமுறை பாடஞ்சொல்வது ஆயிரந்தரம் படிப்பதற்குச் சமானம் என்று சொல்வதுண்டு.

ஒரு சமயம் ஸ்ரீ சங்கராசாரியார் செய்த சிவானந்த லஹரியிலுள்ள "ஸதாமோஹாடவ்யாம்" என்ற சுலோகத்தைச் சொல்லி பொருளும் சொன்னார். அதனை புலவர் சிரோமணி எழுத, அது அந்தச் சுலோகத்தின் மொழி பெயர்ப்பாக அமைந்தது அச்செய்யுள் வருமாறு:-

மோகமா மடவி திரிந்தரி வையர்தம்
முலைக்குவட் டிடைநட மாடித்
தாகமா ராசைத் தருக்குலந் தோறும்
தாவுமென் புன்மனக் குரங்கைப்
பாகமார் பத்தி நாண்கொடு கட்டிப்
பலிக்கு நீ செல்கயான் கொடுத்தேன்
ஏகநா யகனே தில்லையிலாடும்
இறைவனே யெம்பெரு மானே

பிள்ளையவர்கள் சிவபிரானை "நீர் அணிந்துள்ள பிறை, எலும்பு முதலிய பொருள்களும், உமக்கு இருப்பிடமாகிய கையிலாயமலை, ஊர்தியாகிய இடபம் முதலியவைகளும் வெண்ணிறம். இங்ஙனம் வெண்ணிறமுடைய பொருள்களையே நீருடைமையால் அடியேனுடைய வெள்ளறிவையும் கொள்ளுதல் முறையாகும்" என்னும் கருத்தை அமைத்து,

துணிபிறை வெண்மை யெலும்பணி வெண்மை

தூடுகங் காளமும் வெண்மை
துரோணமும் வெண்மை கபாலமும் வெண்மை
துவலைசால் கங்கையும் வெண்மை
பணிதரு கொக்கின் றூவலும் வெண்மை
பயில்குழை யருக்கமும் வெண்மை
பரவுறு கயிலை வாகனந் துவசம்
பரிக்குமக் கிவைகளும் வெண்மை
மணியொளி நீறு வாளிதுஞ் சாவம்
வயங்குதேர்ப் பாகிலா னில்லம்
மதம்பொழி யயிரா வணமிவை வெண்மை
மற்றியன் மேனியும் வெண்மை.

இவ்வாறு பிள்ளையவர்கள் மாணாக்கர்களும் நல்ல ரசனையுடன் செய்யுள் அமைப்பதில் வல்லவர்களாக திகழ்ந்தனர்.

இலங்குற மெயஞ்ஞானகலை முதலியபல் கலையுணர்ச்சி ஏய்ந்து தூய
நலங்குலவு பொறைவாய்மை யருளடக்க முறவாய்ந்து நலத்தி னின்றும்
விலங்குறுமென் னையுந்தனது மெய்யடியார் குழுவினிடே மேவச்சேர்ந்தேன்
வலங்குலவு சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரநா வலவ ரேறே
-மாயூரம் ந. முத்துசாமி பிள்ளை

பிள்ளையவர்கள் தமிழை அறிவுறுத்தி அதன்பாலுள்ள பலவகையான நயங்களை எடுத்துக்காட்டி மகோபகாரம் செய்தார். "செய்வனத் திருந்தச் செய்'' என்ற அமுதவாக்கின்படி சிறந்த ஆசிரியராகவும் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கிய வித்துவானாகவும் விளங்கினார். நாகபட்டின புராணம் அரங்கேற்றியபோது "குறிப்பறிந் தீதலே கொடை" என்பதற்கு ஐம்பது வகையாகப் பொருள் கூறிய வியப்பில் ஆழ்த்தினார். அறுபத்தோறு வருடங்கள் வாழ்ந்த வாழ்நாளில் அவர் ஆற்றிய தமிழ்த்தொண்டுகள் எண்ணிலடங்காத வையாகும்.

ஞாபக சக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளை மாணாக்கர்களுக்கு வழங்கிக் கையெழுத்துப் பிரதிகளை எழுதி எழுதிப் பாடஞ்சொன்னதால் மாணாக்கர்களும் எழுதும் பயிற்சி பெற்று சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவருடைய கல்வி மிகவும் ஆழமும் அகலமுமுடையதாக நிலவியது.

பிள்ளையவர்கள் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்பார். இரவில் சீனாக்கற்கண்டு கலந்த பாலும் பழமும் மட்டுமே அருந்துவார். தினமும் தனக்கு வரும் இரண்டு சேர் பாலில் ஒரு சேர் பாலை மாணாக்கர்களுக்குக் கொடுத்து மகிழ்வார். அப்பாத்துரை முதலியார், ஆறுமுகத்தா பிள்ளை, இராகவையங்கார், கோயிலூர்ச் சிதம்பர ஐயா, தேவக் கோட்டை சிந்தியச் செட்டியார், சுப்பிரமணிய தம்பிரான், பக்கிள் துறை, பொன்னுசாமித் தேவர்,

வேங்கடாசாரியர், முன்ஸீப் வேதநாயகம் பிள்ளை, அரிய நாயகம் பிள்ளை, அருணாசலம் பிள்ளை, ஐயாறப்ப பிள்ளை, கலியாணி சோழபுரம் சிதம்பரம் பிள்ளை, வக்கீல் சௌந்தர நாயகம் பிள்ளை ஆகியோர்களை பிள்ளையவர்கள் தம் செய்யுட்களால் பாராட்டியுள்ளார்.

அழகிரிசாமி நாயகர், ஆறுமுக தம்பிரான், காஞ்சிபுரம் இரகுநாதையர், எவ்வுளூர் இராமசாமி செட்டியார், இராமசாமி பிள்ளை, காஞ்சிபுரம் இராமாநுஜ பிள்ளை, ஆறைமாநகர் ஐயாசாமி முதலியார், நாகப்பட்டினம் கிருஷ்ணசாமி முதலியார், சபாபதி முதலியார், புரசை சபாபதி முதலியார், புதுவை சவராய நாயகர், சவேரிநாத பிள்ளை, திரு வீழிமிழலை சாமிநாத கவிராயர், சி.சாமிநாத தேசிகர், உ.வே.சாமிநாதையர், சென்னை சின்னசாமி பிள்ளை, சுந்தரம் பிள்ளை, தி.சுப்பராய செட்டியார், சி.தியாகராச செட்டியார், தெய்வநாயகம் பிள்ளை, வல்லூர்த் தேவராச பிள்ளை, பாலகுரு, பெரியண்ணம் பிள்ளை, பொன்னம்பல முதலியார், மழவை மகாலிங்கையர், முத்துசாமி கவிராயர், முத்துசாமி பிள்ளை (மாயூரம்), முருகப்பிள்ளை, நாகப்பட்டினம் வீரப்ப செட்டியார், திரிசிரபுரம் வீரராகவ செட்டியார், தாராநல்லூர் வீராசாமி நாயகர், குளத்தூர் ச.வேதநாயகம்பிள்ளை, வைத்தியலிங்கபத்தர் ஆகிய மாணாக்கர்களும் மற்றும் பெயர் தெரியாத பல மாணாக்கர்களும் பிள்ளையவர்களின் புகழ் வாழ்விற்கு சான்றானவர்கள்.

என்பிழை பொறுத்தரு ளெழிற்குரு ராயன்
தன்பத மலரிணை தழைத்து வாழியவே
தண்ணிய கருணை தந்தெனை யாண்ட
புண்ணிய போதகன் பொலிந்துவா ழியவே

71. செந்தமிழ் இலக்கியப் படைப்புகள்

தி. மகாலட்சுமி
சென்னை

19-ஆம் நூற்றாண்டிலே தமிழுலகிலே புகழ்பெற்றுச் சிறந்து விளங்கிய தமிழ்ப்பெரியார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். 19,20 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்கல்விப்பணி ஆசிரியப் பணி-பதிப்புப்பணிக்குப் பிள்ளையவர்களே முன்னோடி ஆவர். அவர் தொடங்கி வைத்த ஆசிரியப் பணி, அது தொடர்பான பதிப்புப் பணி என்பனவற்றை அவர்தம் மாணாக்கர் பரம்பரையினர் பின்பற்றினர். ஆசிரியப் பணியில் படைப்பாசிரியராக இருந்து அவர் தமிழுக்குச் செய்த படைப்புகள் பற்றியும், படைப்புகள் எழுந்த சூழல் பற்றியும், படைப்புக்கு அடிப்படையாக அமைந்த புலமை பற்றியும், படைப்புகளின் போது ஏற்பட்ட இடையூறு பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

படைப்புகள்

பக்தி உணர்வே இவரது படைப்புகளில் மேலோங்கி இருக்கிறது. மனித வாழ்க்கையை மேம்படுத்தும் அறநெறியையும், பக்தியையும், அனுபவ உண்மையையும் இவரது படைப்புகள் வெளிக்காட்டுகின்றன. தாம் வாழ்ந்த சமூகச் சூழலை உணர்ந்து அதற்குத் தக நூல்கள் வகுத்துள்ளார். அரிய பல கருத்துகளும், புதிய புதிய கற்பனைகளும், இனிய வருணனைகளும், எதுகை, முரண், மடக்கு, யமகம், திரிபு போன்ற யாப்பு நயங்களும், உவமை, உருவகம், தன்மை நவிற்சி, தற்குறிப்பேற்றல், வேற்றுப்பொருள் வைப்பமைதி, சிலேடை போன்ற அணி நயங்களும், உலக வழக்குகளும் இவற்றில் மலிந்துள்ளன. இப்படைப்புகளில் வெளிப்படும். இலக்கண இலக்கியப் புலமை இவரது தமிழ் பற்றினை, தமிழ்மொழி அறிவினை, தனித்திறமையினை, புலமை ஆற்றலைக் காட்டுகின்றன. இவருக்குள்ள சிவபக்தியின் முதிர்வையும் இவரது நூல்கள் நன்கு தெரிவிக்கின்றன.

இளமையில் பாடிய இவரது நூல்கள் எளிய நடையில் அமைந்தவை. சிவபெருமான்பால் இயல்பின் எழுந்த அன்பினால் பக்திச் சுவை மட்டும் மலிந்த செய்யுட்கள் அவற்றுள் காணப்படும். ஒரே கருத்தைப் பலவிதமாக அமைத்துச் சில செய்யுட்களைத் தொடர்ந்து பாடியுள்ளார்.

பிற்காலத்து நூல்களில் கற்பனை நயங்களும் அணிகளும் சிறந்த கருத்துகளும் அங்கங்கே அமைந்திருக்கும். சைவ சித்தாந்த நூற்கருத்துகளும், பழைய இலக்கியங்களிலுள்ள சொற்களும், பொருள்களும் காணப்படும்.

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் புராணங்கள் 22,

சிற்றிலக்கியங்கள் 45, பிறகாப்பியங்கள் 2, வரலாறு 3, மான்மியம் ஒன்று தனிப்பாடல்கள் கணக்கற்றவை. சிறப்புப் பாயிரங்கள் பல. இவை தவிர சில உரைகளையும் பதிப்புகளையும் தந்துள்ளார். இவர் இயற்றிக் கிடைக்காமலும், தெரியாமலும் போன நூல்களும் சிலவுண்டு.

புராணம்

இவருடைய நூல்களில் பெரும்பான்மையானவை புராணங்களே, புதிதாகப் புராணம் இயற்றுதல், பழைய புராணம் இருந்தும் மீண்டும் புதிதாகச் செய்தல், வடமொழிப் புராணங்களைத் தமிழில் வசன நடையாக மொழிபெயர்த்துக் கொண்டு அதன் வழி தமிழ்ச் செய்யுளில் புராணம் இயற்றுதல் என்ற மூன்று நிலைகளில் இவர் புராணம் இயற்றியவர். காப்பிய இலக்கணப்படி அமைக்கும் புதிய முறையை மேற்கொண்டவர். எனவே காப்பிய இலக்கணங்களைச் சுவை ததும்ப அமைத்துப் பாடும் முறை இவரது புராணங்களில் மிகுதியாகக் காணப்படும்.

தியாகராசலீலை, திருமயிலைப் புராணம், திருவரன் குளப்புராணம், பட்டீச்சுவரப் புராணம் ஆகியவை முற்றுப் பெறாதவை. தியாகராச லீலை என்ற வடமொழி நூலின் பிற்பகுதி கிடைக்காததால் காப்பிய உறுப்புகளெல்லாம் அமையப் பாடவேண்டுமென்றெண்ணி முதன்முதலில் தொடங்கிய இந்நூல் முற்றுப் பெறவில்லை. இம்மனக்குறை உறையூர் புராணத்தை முடித்தபோது இவருக்கு நீங்கியது. திருமயிலைப் புராணத்தை அரங்கேற்றச் சென்னை செல்லும் போது கடையில் சீகாழியில் தங்கியபோது சீகாழிக்கோவையை இயற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டதால் சென்னைப் பயணம் தடைபட்டு அதன்பின் புராணம் முடிக்கப் பெறவேயில்லை.

திருவரன்குளப்புராணம் கடவுள் வாழ்த்து, ஆக்குவித்தோன் வரலாறு, அவையடக்கம், திருநாட்டுப் படலத்தின் பத்துப்பாடல்கள் இயற்றப்பட்டு பின்பு முழுமை பெறவில்லை. நாட்டுப் படலத்தில் சிலபாகம் வரையில் ஆகியிருந்த பட்டீச்சுரப்புராணம் எப்படியோ கைதவறியிருக்கிறது. அதன்பின் மீண்டும் காப்பும், நூற்செய்யுள் ஒன்றும் இயற்றியுள்ளார். காப்பின் இரண்டடிகள் உ.வே.சா.வின் மனனத்திலிருந்து கிடைத்திருக்கிறது (எ.ச.என்சரித்திரம்,ப.233).

கண்டதேவிப்புராணம், ஸ்ரீ காசிரகசியம், குறுக்கைப்புராணம், கோயிலூர்ப் புராணம், வீரவனப் புராணம், திருப்பெருந்துறைப்புராணம், திருநாகைக்காரோணப் புராணம் முதலான பன்னிரண்டு நூல்கள் முற்றுப்பெற்று அச்சாகியுள்ளன. அவற்றுள் ஆற்றூர் புராணம், தனியூர் புராணம், மண்ணிப்படிக்கரைப் புராணம், விளத்தொட்டிப் புராணம் ஆகிய நான்கும் தவிர மற்றவை எட்டும் தற்போது கிடைப்பது அரிதாகவுள்ளது.

திருப்பெருந்துறைக்கு வடமொழிப் புராணத்தின் தமிழ்மொழி பெயர்ப்புகள் இரண்டு முன்பே இருந்தன. இவ்விரண்டும் தலவரலாறுகளை வெளிப்படுத்தும் நோக்கோடு அமைந்தவை இத்தலத்திற்கு இவர் இயற்றிய புராணத்தில் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு முதலிய வருணனைகள்

கற்பனைத்திறம் விளங்க அமைந்திருக்கிறது. பிரமதேவர், சோழராசன், ஒரு வேடன் முதலியோர் செய்தனவாக உள்ள துதிச் செய்யுட்கள் மனத்தை உருக்கி அன்பை மிகுவிக்கின்றன.

திருநாகைக்காரோணப் புராணம் பலர் பாராட்டுகளைப் பெற்றுப் புகழுடன் விளங்கியது. பிள்ளையவர்கள் இயற்றிய புராணங்களுள் இது சிறந்தது என அவருடைய மாணாக்கர்களும் பிறரும் கூறுவர் (எ.ச.ப. 247).

அம்பர்புராணம், திருதுருத்திப் புராணம் ஆகியவை அச்சிடப்பெறவில்லை. திருவீழிமிழலைக் கோயிலுக்கு இருந்த வடமொழிப் புராணத்தைப் பெற்றுக் கொண்டு, தமிழில் இயற்ற பிள்ளையவர்கள் ஒப்புக் கொண்டார். இருப்பினும் உடல் நலக்குறைவால் அந்நூல் தொடங்கப்படவேயில்லை. (மீ.ச.ப. 207).

சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கியங்கள் 45இல் பதிகங்கள் 4, அந்தாதி 6, திரிபந்தாதி 4, யமக அந்தாதி 3, வெண்பா அந்தாதி ஒன்று, மாலை 7, பிள்ளைத்தமிழ் 10, கலம்பகம் 2, கோவை 3, உலாஒன்று, தூது 2, குறவஞ்சி ஒன்று, சிலேடை வெண்பா ஒன்று, பிற 7.

இவற்றுள் திட்டக்குடிப்பதிகம், தண்டபாணி பதிற்றுப்பந்தாதி, திருவானைக்காத்திரிபந்தாதி, எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி, பாகம் பிரியான் பிள்ளைத் தமிழ், பிரம்மவித்தியா நாயகி பிள்ளைத் தமிழ், தானப் பாசாரியார் தசவிடுதூது, திருவிடைக்கழி குறவஞ்சி, திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா, ஆகிய ஒன்பது நூல்கள் இப்பொழுது கிடைப்பதில்லை. இச்சிலேடை வெண்பாவின் விநாயகக் காப்புச் செய்யுளின் பாதி மட்டும் உ.வே.சாவின் நினைவில் இருந்ததால் பின்வரும் 22 பிரபந்தத்திரட்டு முகவுரையில் இடம் பெற்றுள்ளது.

சீர்வெண்பா மாலைத் திருவாவடுதுறையார்க்
கூர்வெண்பா மாலை யுரைப்பவே

எஞ்சிய 36, நூல்களும் அச்சாகியுள்ளன. இவற்றுள் பூவாளூர்ப் பதிற்றுப் பத்தந்தாதிக்குக் காப்பும், 24 பாடல்களுமே கிடைக்கின்றன. 534 செய்யுட்களால் இயற்றப்பெற்ற சீகாழிக் கோவைக்கு 20 செய்யுட்களே கிடைக்கின்றன.

நூற்சிறப்பு

சைவ சமய நெறியை, இறையின் அருளிச் செயலை உலகுக்குச் சொல்லுவதாக, தமிழின் வளமையை வெளிப்படுத்துவதாக இப்பொருண்மைகள் அமைகின்றன. அன்பினை, செய்நன்றிக் கடனை வெளிப்படுத்தற்குத் தனி நபர் மீதும் ஒன்றிரண்டு நூல்கள் எழுந்துள்ளன. அனைத்து நூல்களும் சில சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பினும் அவற்றுள் சில மட்டுமே ஈண்டு சுட்டப்பெறுகிறது.

அந்தாதி

திருச்சிராமலையமக அந்தாதியை இளமைப் பருவத்துப் பாடியதால் ஆர்வமிகுதியால் பதினொரு வாழ்த்துச் செய்யுட்களையும், நூதன முறையில் அவையடக்கமாக ஒன்றையும் பாடியுள்ளார். பிற அந்தாதிகளில் இம்முறை இல்லை. இந்நூல் இயற்றப் பெற்ற காலத்து யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றது. அதற்குப்பிறகு இவர் செய்த அனைத்து நூல்களைக் காட்டிலும் இது சிறந்த தென்னும் பெருமையும் பெற்றது (மீ.ச.ப. 43) தேவார திருவாசகங்களிலுள்ள கருத்துகள் அமைந்த சில பாடல்கள் திருஊறைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலியவற்றில் உள்ளன. இவரது இறுதிக் காலத்தில் தொடங்கப்பெற்ற பல நூல்களுள் முடிக்கப்பெற்றது திரிவிடை திரிபந்தாதியே.

இவர் இளமையில் பாடிய பதிற்றுப்பத்தந்தாதியில் பிற்காலத்து இவரது நூல்களிலுள்ள யமகம், திரிபு, ஆகிய சைவ சித்தாந்தக் கருத்துபோன்றன இல்லை. ஆயின் எளிய நடையும், அன்பை, நம்பிக்கையை வெளிப்படுத்தும் பொருளும் உள்ளன.

இந்நூலைப் பிற்காலத்து படைப்புகளுக்கு முன் நிகரில்லாதது என்று இழிவாக எண்ணிய இவரது மாணவர் சி. தியாகராச செட்டியார் "இதுநீர் இயற்றியதுதானா! இத்தகைய நூலை எதற்காகச் செய்தீர்" என்பன போன்ற கேள்விகள் பலவற்றைக் கேட்டார். பிள்ளை, "இதிலே ஏதாவது பிழை இருக்கிறதா! எளிய நடையில் பாடல் செய்வது தவறா? சாதாரண ஜனங்களும் படித்துப் பொருளறியும்படி இருந்தால் நல்லதுதானே!கடினமாக இருந்தால் கஷ்டமல்லவோ என்று கூறினார் (எ.ச.ப. 240).

இதன்வழி இவரது மாணவர்கள் இவருடன் மனமொத்துப் பழகும் நண்பராகவும் இருந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது. மேலும் பிள்ளையின் எழுத்துகளிலுள்ள பரிணாம வளர்ச்சியையும், பிழைபட நூல் அமைவதுதான் தவறு என்ற கருத்தையும், காலச் சூழலுக் கேற்பவும், பட்டறிவின் கொள்முதலுக்கேற்பவும் படைப்புகள் உருவாகின்றன என்பதையும் அறிய முடிகின்றது.

மாலை

எளிய நடையில் அமைந்த கற்குடி மாலையில் திருக்குறள், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், திருவாசகம், பெரியபுராணம், பழமொழிகள், திருவிளையாடற் புராணம், யாப்பருங்கலக்காரிகை முதலானவற்றிலுள்ள கருத்துகள் இடம்பெற்றுள்ளன. (மீ.ச.ப. 138)

பிள்ளைத்தமிழ்

இவரது முதல் பிள்ளைத்தமிழ் நூல் அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், இதில் விநாயகர், திருநாவுக்கரசர் முதலானோர்க்கு வணக்கங் கூறும் காப்புச் செய்யுட்கள் 12ம், அவையடக்கச் செய்யுள் ஒன்றும் உள்ளது. வேறு பிள்ளைத் தமிழ்களிலும் இவரே பிற்காலத்தில் செய்த பிள்ளைத் தமிழ்களிலும் இத்துணை விரிவான துதிகள் இல்லை

(மேற்.ப. 47) இந்நூலுக்குக் கிட்டிய புகழ் இதுவரையில் அவர் இயற்றிய எந்த நூலுக்கும் கிடைக்கவில்லை. அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழில் கற்பனை நயமும், சைவ சாத்திரக் கருத்துகளும், திருவாவடுதுறையாதீன வழக்கங்களும் உள்ளன. இந்நூலின் காப்புப் பருவத்தில் வேறு பிள்ளைத் தமிழ்களைப் போலத் திருமால் முதலியோரைக் காப்பாகக் கூறுதலைத் தவிர்த்துத் திருவாவடுதுறையாதீனத்துக் குருபரம்பரையினர்களைப் பதினொரு செய்யுட்களில் காப்புப் பருவத்தில் கூறி ஒரு புதிய அமைப்பை மேற்கொண்டுள்ளார் (மீ.ச.ப. 224), இப்புதிய முறை இவர் இறுதியாகச் செய்த சேக்கிழார் பிள்ளைத் தமிழிலும் உள்ளது இதில் திருத்தொண்டத் தொகையிலுள்ள பதினொரு திருப்பாசுரங்களுள் ஒவ்வொன்றிற் கூறப்பட்ட நாயன்மார்களை ஒவ்வொரு செய்யுளால் குறித்துள்ளார்.

கலம்பகம்

இவரது முதற் கலம்பகமான வாட்போக்கிக் கலம்பகத்தில் கலம்பகத்திற்குரிய உறுப்புகள் எவ்வளவு செம்மையாக அமைய வேண்டுமோ அவ்வளவு செம்மையாக அமைந்து விளங்குகின்றன.

கோவை

சீகாழிக் கோவையில் தலவரலாறுகள், நாயன்மார்களின் அருஞ் செயல்கள், சைவ சாத்திரக் கருத்துகள் போன்றன செவ்வனே அமைக்கப் பெற்றுள்ளன. இலக்கண விளக்கத்தின் விதியைத் தழுவி எழுதியதால் மற்ற கோவைகளில் காணப்படாத பல துறைகள் இதில் இடம்பெற்றுள்ளன. சைவம் தொடர்பான உவமை மிகுந்துள்ள இந்நூல் சில நேயர் படித்து இன்புறக் கூடிய ஒன்று (மேற். ப. 178) குற்றாலத்திற்கு ஒரு கோவை பாட வேண்டுமென்றே எண்ணம் என்ன காரணத்தாலோ நிறைவேறவில்லை.

அச்சு விபரம்

இச்சிற்றிலக்கியங்களுள் சில ஸ்ரீ.சி.தியாகராச செட்டியாரால் அச்சிடப்பெற்றன. அவை கிடைப்பது அரிதாக இருந்ததால் அவற்றையும், அவற்றுடன் வேறு சில சிற்றிலக்கியங்களையும் பிள்ளையால் இயற்றப்பெற்ற சிறப்புப் பாயிரங்களையும் சேர்த்து உ.வே.சா. பதிப்பித்துள்ளார்.

அதுபோது உ.வே.சா. பிள்ளையவர்களுடைய நூல்கள் சிலவற்றைத் தியாகராச செட்டியார், சுப்பராயசெட்டியார் முதலியவர்களிடமிருந்து திரட்டியதுடன், சிலவற்றை முயன்று தேடித் தொகுத்திருக்கிறார். எவ்வளவு முயன்றும் சில சிற்றிலக்கியங்கள் கிடைக்கவில்லை. பிள்ளையின் படைப்புகள் அனைத்தையும் வெளியிடப் பொருட் செலவு அதிகமாகும் என்பதால் சிற்றிலக்கியங்களை மட்டும் பிரபந்தத்திரட்டு எனும் பெயரில் 1910இல் முதற்பதிப்பாகவும், 1926இல் இரண்டாம் பதிப்பாகவும் கொண்டு வந்துள்ளார்.

கிடைத்த நூல்கள் இன்னார் இன்னாரிடமிருந்து கிடைத்தன என்பது முதற்பதிப்பின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பில்

சீகாழிக்கோவை, வியானசக் கோவை, திருவூறைப்பத்தந்தாதி, பொன்னூசல் போன்ற முதற்பதிப்பில் இல்லாத சில சிற்றிலக்கியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. முற்பதிப்பில் குறையாக இடம் பெற்ற பழைசைப்பதிற்றுப்பத்தந்தாதி பட்டீச்சுரம் ஸ்ரீ ஆறுமுகப் பிள்ளையால் கிடைப்பெற்று இரண்டாம் பதிப்பில் முழுமையும் இடம் பெற்றுள்ளது.

பிற காப்பியங்கள்

குசேலோபாக்கியானம், சூத சங்கிதை என்ற நூல்களைத் தெலுங்குமொழி நூல்களுக்கான, தமிழ்ப் பெயர்ப்புகளின் உதவியுடன் இயற்றியுள்ளார்.

வரலாறு

இவர் எழுதிய சரித்திர நூல்கள் மூன்றினுள் ஆதி குமர குருபர ஸ்வாமிகள் சரித்திரம் மட்டுமே அச்சாகியுள்ளது. மயில் ராவணன் சரித்திரக் கீர்த்தனங்களைப் பாடும் போது சுவைக்காகப் பிள்ளையவர்களால் நூறு பாடல்கள் தரப்பட்டு உத்தமதானபுரம் லிங்கப்பையரின் குமாரர்கள் இடையிடையே அப்பாடல்களையும் சொல்லிக் கதை நிகழ்த்தி வந்திருக்கின்றனர் (எ.ச.பக். 31-32). அந்த மயில் ராவணன் சரித்திரம் இப்போது கிடைப்பதில்லை.

சிவஞான யோகிகளிடத்துள்ள அளவற்ற அன்பால் அவர் சரித்திரத்தைக் காவியம் போல் படைக்க எண்ணி நாடு நகரச் சிறப்புகளைப் பாடத் தொடங்கினார். திருவாவடுதுறையின் பெருமைகளையும், ஆதீன குரு பரம்பரையின் சிறப்பையும் நன்றாகப் பாடவேண்டுமென்பது அவர் அவா. இவ்வளவு பெரிய அடித்தளத்தோடு தொடங்கிய இந்நூல் ஆசிரியரது உடல்நலக்குறைவால் நிறைவேறாமல் போயிற்று (மேற். பக். 384-385)

மான்மியம்

இவ்வகையில் குருபூசை மான்மியம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

உரைகள்

கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலிய நூல்களுக்கு இவர் சொல்லி எழுதுவித்த உரைகளே பின்பு மதுரை இராமசாமி பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டன. காஞ்சிபுராணம், தணிகைப்புராணம், திருவானக்காப்புராணம், முதலியவற்றிற்கு இவர் பாடஞ் சொன்ன உரையே பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்குவதாயிற்று (மீ.ச.ப. 279).

பதிப்புகள்

திரிசிரபுரத்திற்கு வடமொழியில் 64 அத்தியாயங்களுடன் இருந்த புராணத்தைத் தமிழிற் செய்யுளாக மொழிபெயர்க்க வேண்டுமென்று திரிசிரபுர தமிழ் அன்பர்களும், செல்வர்களும் கேட்டுக் கொண்டனர். இவர் எல்லப்ப நாவலராற் செய்யப்பெற்ற புராணம் ஒன்று உண்டு. அது நல்ல நடையுள்ளது என்று கூறி அதில் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார். எனவே அவர்களும் அதையே அச்சிடுங்கள் என்று இவரைக் கேட்டுக் கொண்டனர். இவர் இதனை எழுதுவோரால் நேர்ந்த பிழைகளைப்

பரிசோதித்து விரோதிகிருது வருஷத்தில் (1851)அச்சிட்டு வெளியிட்டார். (மேற்.ப.144) இங்ஙனம் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கிக் காஞ்சிபுராணத்தின் முதற்பாகம், திருவானைக்காப்புராணம், கல்லாட மூலம் முதலியவற்றைப் பதிப்பித்தார்.

தனிப்பாடல்கள்

இவர் இயற்றிய தனிப்பாடல்கள் பலவகைப்படும். வாய்ப்புகளுக்கு ஏற்ற வண்ணம் திறமையாகப் பாடிய பாடல்கள் எண்ணற்றவை. ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு வரலாறு உண்டு. உதவி செய்தவர்களைப் பாராட்டி நன்றி நவிலும் பொருட்டுப் பாடிய செய்யுட்கள் பல. யாருக்குக் கடிதம் எழுதினாலும் தலைப்பில் ஒரு பாடலை எழுதுவித்த வகையில் எழுதிய செய்யுட்கள் நூற்றுக்கணக்கில் இருக்கும். வடமொழிப் புலவர்கள் அவ்வப்பொழுது கூறும் சுலோகங்களைத் தமிழில் பெயர்த்து இயற்றிய செய்யுட்கள் பல. பிறருக்காகப் பாடிக் கொடுத்தவை பல. இவற்றுள் பல இப்பொழுது கிடைக்கவில்லை.

இவரது தந்தையார் மறைவின் போது அவரது பிரிவால் வருந்திச் செய்த பாடல்களுள் ஒரு பாடலே கிடைக்கிறது. தனது மகனின் திருமணச் செய்தியைத் தெரிவித்து ஸ்ரீ நமச்சிவாய தேசிகருக்கு எழுதிய கடிதத்தில் ஐந்து பாடல்கள் இடம் பெற்றுள்ளன. (மீ.ச.101). வடமொழிச் சுலோகங்களைத் தமிழ்ச் செய்யுள்களாக மாற்றி இவர் பாடியவை பல (மேற்.ப.109) திருவாவடுதுறை மடத்து குருபூசையின் போது பிள்ளையிடம் பாடல் வாங்கிப் பசுபதி பண்டாரம் பரிசு பெற்றார். இதை அறிந்த பலர் இரவு முழுவதும் பிள்ளையிடம் பாடல் இயற்றி வாங்கிப் பரிசு பெற்றனர். பரிசளித்த மடத்துத் தலைவர் இவை பிள்ளையால் இயற்றப் பெற்றவை என்றறிந்தும் அறியாதவர் போலப் பரிசுகளை வழங்கினார் (மேற்.பக். 65-67) இதன்வழி நினைத்த மாத்திரம் கவிதையை வெளிப்படுத்தும் கவித்திறனும், பிறருக்குத் தம்மால் இயன்றதை உதவும் நற்பண்பும் ஒருங்கே அமையப்பெற்றவர் பிள்ளை என்பது தெரிகிறது.

சிறப்புப் பாயிரங்கள்

பிள்ளையவர்களிடம் சிறப்புப் பாயிரம் பெற்றால் நூலியற்று பவர்களுக்கு உயர்ந்த மதிப்பு இருந்தது. எனவே பலர் இவரிடம் சிறப்புப் பாயிரம் பெற்றனர். சிறந்த நூலாயின் அகவலாலும் பல விருத்தங்களாலும் சிறப்புப் பாயிரம் அமைப்பார். இல்லையெனில் ஒன்றிரண்டு செய்யுள்களில் இன்னநூல் இன்னார் செய்தார் என்னும் பொருள்மட்டும் அமையும்படி எழுதித் தருவார். இவர் ஆறுமுக நாவலர், பதிப்பித்த திருக்கோவையாருரை, திருக்குறட் பரிமேலழகருரை, தருக்கசங்கிரகம், இறையனாரகப் பொருள், முதலியவற்றிற்கு நயம் மிகுந்த சிறப்புப் பாயிரங்களை அளித்திருக்கிறார்.

பிள்ளையின் நூல்களுக்கும் பலர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர். இவரது நூல்கள் பல அச்சாகாததால் அவற்றுள் பல கிடைப்பதில்லை. காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றத்திற்கு வந்திருந்த கனவான்கள், அந்நூலைப் பாராட்டிச் சிறப்புப் பாயிரங்களால் தங்கள் நன் மதிப்பைப் புலப்படுத்தினர்.

திரிசிரபுரம் லட்சுமண பிள்ளையின் பொருளுதவியால் 1842 இல் அச்சிடப்பட்ட அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழுக்கு மழலை மகாலிங்கையர், தாண்டவராயத் தம்பிரான் முதலான 15 பேர்கள் சிறப்புப் பாயிரம் கொடுத்துள்ளனர்.

திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதிக்கு உள்ள சிறப்புப் பாயிரம் பாடலைப் பாடியவர் இன்னாரென்று தெரியவில்லை (மேற்.ப.42).

நூல் எழுந்த சூழல்

உடன்வரும் நண்பர்கள் தலத்திலுள்ளோர், கோயிலைச் சார்ந்தவர்கள் பணம் படைத்த கனதன வான்கள், சைவ வேளாளர்கள், சைவச் செல்வர்கள், பெரியோர்களாகிய திருக்கூட்டத்தார், மாணாக்கர் போன்றோர் கேட்டுக் கொண்டமையும், ஒரு சிலர் நூலை முடிக்க, விரைந்து முடிக்க அவசரப்படுத்தியமையும், பணத்தேவையும், செய்நன்றிக் கடனும் பல படைப்புகள் எழக் காரணமாகியுள்ளன.

அம்பர் புராணத்தை வேலுப்பிள்ளை என்ற கனவானும், விளத்தொட்டிப்புராணம், திருவாளொளி புராணம் ஆகியவற்றை அவ்வவ்வூர் சைவ வேளாளர்களும், திருதுருத்திப் புராணத்தைக் குற்றாலத்திலுள்ள தியாகராஜ முதலியாரும், கோயிலூர் புராணத்தை ஸ்ரீ சிதம்பர ஐயரும் ஆக்குவித்துள்ளனர்.

திட்டக் குடிக்கு இவர் சென்றிருந்த போது, அத்தலத்து இறைவன் ஸ்ரீ வஸிஸ்டேசுவரரைப் பாடும்படி அக்கோயில் தர்மகர்த்தா கேட்டுக் கொண்டதனால் சில நாழிகையில் ஒரு பதிகம் பாடிமுடித்திருக்கிறார்.(மீ. ச.ப.21).

பணத்தேவையின் பொருட்டு முற்றுப் பெறாத திருமயிலைப் புராணத்தை அரங்கேற்றச் சென்னை செல்லும் போது இடையில் சீகாழியில் முன்சீப் வேதநாயகம் வீட்டில் தங்கினார். அவரும், பிறரும் சீகாழிக் கோவை இயற்றும்படி மிகவும் வற்புறுத்தியதால் அங்கேயே தங்கிச் சில மாதங்களில் நூலை முடித்துப் பணமும் பரிசும் பெற்றார். பணத்தேவை நிறைவுற்றதால் திருமயிலைப் புராணம் அதன் பின் முடிக்கப்பெறவேயில்லை. அரங்கேறி முற்றுப் பெற இருந்த இந்நூல் அப்போது பணத்தேவை தீர்ந்ததால் முற்றுப் பெறாமல் போயிருக்கிறது. எனவே பணத்தேவை கூடுதலாக இருந்திருப்பின் இன்னும் பல நூல்களைப் படைத்திருப்பாரே என்று எண்ண வைக்கிறது. இருப்பினும் போதிய பணமும், கவலையற்ற சூழலும் இருந்திருப்பின் பல நல்ல படைப்புகளைத் தந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இவரிடம் பாடங் கேட்டவர்கள் இவரது பணத்தட்டுப்பாட்டைப் போக்க இவரைக் கொண்டு சில புராணங்களைச் செய்ய வைத்துள்ளனர். (மீ.ச. 242).

திருவாவடுதுறைக்கு இவரது மாணாக்கர் சாமிநாத முனிவரால் செய்யப்பட்ட புராணம் இருந்தும் புதிதாக இயற்றும் படி இவரது மாணாக்கர் பிள்ளையைக் கேட்டுக் கொண்டனர். அவர் செய்திருக்கும்

போது நான் செய்வது முறையன்று என்று கூறி, கேட்டவர்களும் வருந்தாதிருக்க அவர்களுக்குத் திருவிடை மருதூர் திரிபந்தாதி செய்து கொடுத்திருக்கிறார்.

ஒரளவு எழுதி முடிக்கப் பெற்ற குசேலோ பாக்கியானத்தையும், சூத சங்கிதையையும் நம்மால் எழுத முடியவில்லையே என்று வருந்திய பெங்களூர் தேவராசப் பிள்ளையின் குறையை நீக்கப் பிள்ளை அவர்கள் முதல் நூலை சில நாட்களிலும், அடுத்த நூலை சில மாதங்களிலும் முடித்துக் கொடுத்திருக்கிறார்.

தேவராசர் காட்டிய அன்பு, அளித்த தொகை போன்றவற்றை அன்புடன் பிள்ளை அனுபவித்து இருந்தார். எனவே இந்நூல்களைத் தேவராசர் பெயரிலேயே வெளியிட்டுக் கொள்ளச் சொன்னார். இந்நூல்கள் தேவராச பிள்ளையைச் சார்ந்தவர்களால் அச்சிடப்பெற்றன. பிள்ளையும், பிள்ளையின் மாணாக்கரும், நண்பரும் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடிக்கொடுத்துள்ளனர்.

தனது மகன் திருமணத்திற்குப் பிள்ளை எதிர்பாராமல் இருந்தும் சவராயலு நாயகர் தக்க தொகையினை அனுப்பியிருந்தார். மனமகிழ்ந்த பிள்ளையவர்கள் செய்நன்றி மறவாது அவர் மீது ஒரு மாலை இயற்றி அனுப்பினார். பின்பு அது நாயகராலேயே பதிப்பிக்கப் பெற்றது. (மீ. ச. 104).

பிள்ளையிடம் பாடங்கேட்ட முன்சீப் வேதநாயகத்தின் அருமை பெருமைகளையும் அவர் செய்யுட் சுவையை நன்றாக அனுபவித்தலையும் பாராட்டி அவர்மீது 1853 இல் ஐந்திணைக் கோவையொன்றை இயற்றினார் (மேற்.152).

இக்கோவையின் சிறப்பை அறிந்த கா. சபாபதி முதலியாரும் பிறரும் விநாயக முதலியார் மீதும் ஐந்திணைக் கோவை செய்ய வற்புறுத்தவே பிள்ளை நூறு செய்யுட்கள் செய்து முடித்தார். எஞ்சியவற்றை பிள்ளையின் கட்டளைக்குட்பட்டு சி. தியாகராசசெட்டியார் செய்து முடித்தார்.

இங்ஙனம் தனிநபர்மீது தனக்குள்ள அன்பை, நன்றிக்கடனை வெளிப்படுத்தவும், பிறர் விருப்பத்திற்கிணங்கவும், நூல்களைச் செய்திருக்கிறார்.

குளிர்ச்சியான நேரம், இயற்கைக் காட்சி, கவலையற்ற நல்ல மன நிலை போன்றனவும் தெளிந்த வேகமான படைப்புகளைத் தர உதவியிருக்கின்றன.

குளிர்ந்த வேளைகளிலும், இயற்கைக் காட்சிகள் அமைந்த இடங்களிலும் இவர் ஊக்கத்துடன் உற்சாகத்துடன் (மேற். ப. 33) கவிதை இயற்றுவார். பொதுவாக காலை, பிற்பகல் நேரங்களில்தான் புராணச் செய்யுட்களைப் பாடுவார் என்பது முற்பகலை ஒதுக்கி குளிர்ந்த நேரத்தை விரும்பியதைக் காட்டுகிறது.

உறையூர்ப் புராணம் போலப் பிற்காலத்து இயற்றிய அம்பர்ப் புராணம்

யோசித்துச் செய்யப்படவில்லையே என்று பிள்ளையிடம் கேட்க, அவர், "அவ்வாறு அந்நூல் அமைந்ததற்குக் காரணம் தேவராச பிள்ளையின் பேருபகாரந்தான். அவ்வாறு யாரேனும் என்னைக் கவலையில்லாமல் ஆதரித்து வைத்திருந்தால் இன்னும் எவ்வளவோ செய்வேனே" என்று கூறுகிறார். எனவே கவலை இல்லாத சூழலும் நல்ல படைப்புகள் எழக்காரணமாகியுள்ளது. இதன்வழி ஒரு படைப்பை விமர்சனம் செய்யும் போது படைப்பு செய்யப்பட்ட சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என்பது தெரிகிறது.

புலமை

மகாவித்துவான் அவர்கள் கல்வியிலும் கவித்துவத்திலும் சிறந்து விளங்கியவர். ஆசு முதலிய நால்வகைக் கவிஞராகவும், நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர், என்னும் நால்வகை ஆசிரியராகவும், விளங்கியவர். அறிய விரும்பியவருக்கு உரைக்கும் தன்மையும், அறிஞர் நிறைந்த கூட்டத்தில் பேசும் வன்மையும் உடையவர். தன்னிகரில்லாத் தமிழ்ப்புலவர். சொல்விற்பனமும், கவிசொல்லும் நல்வித்தையும், தமிழ் மொழி ஈடுபாடும் உள்ளவர்.

இளமை தொடங்கியே தமிழ் நூல்களை முறையாகப் பயின்று உரம் பெற்றதாக இருந்த இவரது கல்வி மிகவும் ஆழமும் அகலமும் உடையது. இவர் படித்தவர்களிடம் பழகி அவரவரர்களுக்குத் தெரிந்தவற்றை இளமை முதல் கற்றவர். தமிழ் நூலாக எது கிடைப்பினும் படித்தறிந்தவர். நாம் படித்து வரும் நூல்களில் புதுக் கருத்துக்கள் கிடைப்பின் அதனை மேலும் அழகுபடுத்தித் தம் நூலில் சேர்த்து விடுபவர். தாம் கண்டும் கேட்டும், அனுபவித்தும் அறிந்தவற்றைச் செய்யுட்களில் அங்கங்கே அமைத்துப் பாடுபவர். தல வரலாறுகள் சைவ சாத்திரங்கள், அறிஞரிடம் பெற்ற கருத்துகள், வடமொழி அறிஞரிடமிருந்து பெற்ற வடநூற் கருத்துகள் போன்றவற்றை நினைவில் வைத்திருந்து தாம் இயற்றும் நூல்களில் இடத்துக் கேற்ப அமைத்துக் கொள்பவர். ஓயாது தமது அறிவாற்றல்களால் உழைத்து வந்த இவர் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தொகுத்து வைத்த செய்திகளை ஒழுங்குபடுத்துவதிலும், புதுச்செய்திகளை விசாரித்தறிவதிலும் செலவிட்டு வந்தவர். செய்திகளை நூலுள் தகுதிபெற இடங்கண்டு அமைக்கும் வல்லமையும், விரிவாக அமைத்துப் பாடும் வன்மையும் பெற்றவர்.

செய்யுள் இயற்றத் தனியிடம், தனிக்காலம், அதற்கான வசதிகள், ஓய்வு முதலியவற்றை எதிர்பார்க்காதவர். இன்ன காலத்தில்தான் பாடுவது என்ற வரையறை இல்லாவதர். தாம் எழுதுவதுடன் பிறரைக் கொண்டும் எழுதுவிப்பவர். எழுதுவித்ததைத் திருத்தம் செய்து கொள்பவர். எழுதுவோர் கைவருத்திச் சலித்தாலும், உள்ளமும் அறிவும் சிறிதும் சலியாது பருவ கால மேகம் போலச் செய்யுட்களைப் பொழியும் அற்புதச் சக்தி உள்ளவர். ஒரு முறை ஒரு கூட்டத்தில் ஒருவர் ஓர் இனிய செய்யுளைக் கூற, அச்செய்யுளின் இனிமையை நயந்து வியந்து பாராட்டிய பிள்ளை

இச்செய்யுள் எந்நூலில் உள்ளது என்று கேட்டார். அவரோ நீங்கள் இயற்றிய கும்பகோணப் புராணத்தில் தான் உள்ளது என்றார். அளவிறந்த செய்யுட்களைப் பாடியவராதலின் அதுதாம் இயற்றிய தென்பதை அவரால் அறிய இயலவில்லை.

நூல் எழுதுங் காலத்துத் தன் நினைவிழந்து, புறவுலகம் என்ற ஒன்று இருக்கிறது என்ற உணர்ச்சியை இழந்து நிற்கக் கூடியவர். ஒரு நாள் சூரியோதயத்தில் பல் தேய்க்க அமர்ந்தவர் மிக நெடு நேரம் கழித்து வேறு ஒருவர் உந்துதலால் தன் நினைவுக்கு வந்தவர் உடனே தாம் அவ்வளவு நேரமாகச் சிந்தித்ததை எழுதி முடித்தார். (மேற்.ப.101).

அதுபோல் ஆற்றுப் படித்துறையில் பூசை செய்ய அமர்ந்தவர் நீண்ட நெடுநேரம் தியானித்த வண்ணம் இருந்து விட்டு அதன் பின் அவர் நந்திகளைப் பற்றிய கற்பனைப் பாடல்களைக் கூறக்கூறத் தியாகராசர் ஏட்டில் எழுதி முடித்தார். (மேற்.ப.99).

திருத்தணிகைப் புராணத்திற்குப் பொருளை ஆராய்ந்த போது அதில் விளங்காத பகுதிக்குப் பலவாறு முயன்று சிவதருமோத்திரம் என்னும் நூல் உதவுமென அறிந்தார். அந்நூற் சுவடியை மிக முயன்று கடினமாகத் தேடிய பின் உள்ளூரில் ஒரு தேசிகரிடம் இருப்பதை அறிந்தார். இவரும், பிறரும் பலவாறு முயன்றும் முடியாமல் போனது. செய்தியறிந்த பிள்ளையின் மாணவர் சுந்தரம்பிள்ளை கனவானைப்போல வேடமிட்டுச் சென்று பலவாறு நடித்து அச்சுவடியைப் பெற்றுப் பிள்ளைக்குத் தந்து பிள்ளை ஒரு வாரத்தில் எழுதிக் கொண்டபின் மீண்டும் தேசிகருக்குச் சேர்த்திருக்கிறார். விளங்காத பகுதிக்கு விளக்கம் பெற அரிதின் முயன்றிருக்கிறார் எனில் இவரது படைப்புகளின் தரத்தை என்னென்பது.

பொதுவாக ஒரு புராணம் முழுவதும் முடிந்தபின்தான் அரங்கேற்றம் நடைபெறும். ஆயின் பிள்ளையவர்கள் புராணத்தின் பிறபகுதிகளை இயற்றிக் கொண்டே இருப்பார். முற்பகுதிகளை அரங்கேற்றுவார். சில நேரங்களில் அன்றன்று முற்பகலில் பாடல்களை இயற்றிப் பிற்பகலில் அரங்கேற்றுவதும் உண்டு. அது போன்ற நேரங்களில் பார்க்க வந்தவர்களுடன் உரையாடிக் கொண்டே இயற்றுவதும் உண்டு. உள்ளத்தில் சிந்தித்து வைத்த கருத்தே ஆயினும் வட்டத்தின் நடுவே பேசிக்கொண்டே ஆற்றொழுக்காக ஒப்பித்தலை என்னென்று வியப்பது.

ஓர் ஆண்டு, ஒரு சில மாதங்கள் என்ற நிலையில் நூல்களை முடிக்கும் பிள்ளையவர்கள் ஓரிரு நாட்களில், ஒரு நாளில், அதுவும் ஒரு நாளின் சில மணி நேரங்களில் நூல்களை முடித்திருக்கிறார் என்றால் அவருக்கு இணை அவரே அன்றோ.

சுருக்கமாகக் கூறின் மனவொருமை மிக ஆழமாகச் சிந்தித்து ஆராய்ந்து பாடலைச் செய்யும் தன்மை, நுணுக்கமாக அணுக்கமாக எந்த ஒரு செய்தியையும் அணுகும் முறை, நினைவாற்றல், மனத்தில் தேக்கி வைக்கும் திறன் போனறவற்றால் மிக விரைந்த நிலையிலும் சிறந்த கவிதைகளை மழையெனப் பொழிபவர் இவர் என்பது தெரிகிறது.

இடையூறு

பெருந்தன்மை உள்ள பண்பாளரான பிள்ளையவர்களையும் துன்பம் என்ற இடையூறு விட்டுவைக்கவில்லை. இத்துன்பங்களால் தாக்குற்ற போதிலும் அவற்றை இவர் கையாண்ட முறைகளால் புடம் போட்ட சொக்கத் தங்கமெனத் தன்னை வெளிக்காட்டிக் கொண்டார்.

பிள்ளையுடன் இருந்த ஒருவனே இவரது சீகாழிக் கோவையைக் காட்டிலும் சிறந்த நூல் ஒன்று உண்டென முன்சிப் வேத நாயகத்திடம் கூற, அவர் அவன் கூற்றுப் பொய்யென மெய்ப்பித்து அவனைக் கண்டித்ததுடன் பிள்ளையிடம் செய்தியைத் தெரிவித்து, இது போன்றவர்களையா உடன் வைத்துக் கொள்வது என்று கேட்கப் பிள்ளையவர்கள், "தக்கார் கிடைப்பதரிது, கிடைத்தவர்களை வைத்து மகிழ்ச்சி அடைவதைத் தவிர வேறுவழியில்லை, அவரும் நல்லவரே என்றார் (மீ.ச.ப.172).

இந்நூல் அரங்கேற்றத்தின்போது பொறாமையால் வேறு ஒருவர் வரம்பு கடந்து தேவையற்ற கேள்விகளைக் கேட்டு அரங்கேற்றத்தில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தக் கோபமுற்ற முன்சிப் அவரை வெளியேற்ற முயல, பிள்ளை வெளியேற்றாது தடுத்து அரங்கேற்றத்தை இனிது முடித்தார் (மேற்.ப.179).

திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழில் முதற்சீர் பொருத்தம் இல்லாதது.. அதனால் கடுமையான தீங்கு உமக்கு நேர்ந்தாலும் நேருமென நூல் இயற்றச் செய்தவரிடம் ஒருவர் கூறினார். பின்னர் அதுவும் பொறாமையால் கூறப்பட்ட பொய்யென்று உணரப்பட்டது. (மேற்.ப.211).

தேவராச பிள்ளைக்குப் பாடஞ் சொல்லப் பெங்களூர் சென்ற பிள்ளைக்கு அங்குக் கிடைத்த பாராட்டுகளும், சன்மானங்களும் அதிகமெனச் சிலர் சொல்லி வந்தனர். அவர்கள் உறையூர் புராண அரங்கேற்றத்தின் போது பிள்ளையவர்களின் திறனைக் கண்டு வியந்து பொறாமைக் குணத்தைப் போக்கிக் கொண்டதோடு, அகன்று, அறிவரிதாயுள்ள இவரது புலமைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று மனதாரப் பாராட்டினர்.

இவர் இயற்றிய திருவிடை மருதூருலாவைப் பற்றிப் பொறாமையால் பலவகையான புரளிகளை அங்கங்கே உண்டாக்கிப் பிள்ளைக்கு மனவருத்தம் உண்டாக்கியவர்களுள் முக்கியமானவர் இருவர். தவறை உணர்ந்த இவ்விருவரும் தம் குறையைத் தீர்த்துக் கொள்ள இவரிடமே மாணவர்களாக வந்தனர். பிள்ளை அவர்களிடத்தும் சிறிதும் வருத்தங்காட்டாது அன்புடன் பாடம் நடத்தினார் (மீ.சு.ப.129).

பிள்ளையிடம் அன்பு பாராட்டிப் பலவாறு உதவி வந்த சிவகுரு நாத பிள்ளையைப் பொய்யான அவதூறு கிளப்பிப் பிள்ளைக்கு எதிராகச் சிலர் மாற்றினர். அப்படி இருந்தும் நன்றி மறவாத பிள்ளை அவரால் தொடங்கப் பெற்ற குடந்தைப் புராணத்திற்கு முதல் செய்யுளில் அவர் பெயரை அமைத்துப் பாடினார். அவர் மறுத்ததால் முதல் செய்யுளைச் சுவடியில் அடித்துவிட்டு வேறு ஒரு செய்யுளை எழுதிச் சேர்த்தார். (மேற்.ப.298).

திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றச் சொன்னவரும், அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்தவரும் சுப்பிரமணித் தம்பிரான் ஆவார். இவ்வரங்கேற்றத்திற்குத் தொடர்ந்து வந்து ஆர்வத்துடன் கலந்து கொண்ட சிலர் வரச் சற்றுத் தாமதம் ஆனதால் அவர்கள் வந்தபின் தொடங்கலாம் என்று பிள்ளை கூறினார். இதனால் கோபமுற்ற சுப்பிரமணியத் தம்பிரான் மறுநாள் முதல் வராததால் சிலநாள் வரை அரங்கேற்றம் நடைபெறவில்லை; கோபம் தணிந்தபின் தொடர்ந்தது. இந்த அவமதிப்பால் உண்டான வருத்தம் பிள்ளைக்குத் தீரவில்லை. இந்நூற் பாடலை இயற்றுகையில் தம் மனவருத்தத்தைப் புலப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்ததால் தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டே மனமுருகி பாடல்களைச் செய்தார் (மேற்.ப.177). இங்குப் பிள்ளையவர்களின் வருத்தம் நம்மை வருத்தினும், துயரத்தின் பாதிப்பு தத்ரூபமான கவிதைகளைத் தரமுடிந்ததையும் உணரமுடிகிறது.

மடத்தில் பிள்ளைக்கு இருந்த செல்வாக்கைக் கண்ட அதிகாரிகளால் துன்பம் தகுதி குறைந்தவர்கள் பிள்ளையுடன் சேர்ந்து நூல் செய்ய விரும்பியதைத் தவிர்ப்பதற்குப் பட்ட துன்பம் என்றவாறு இவருக்கு ஏற்பட்ட இடையூறுகளை எல்லாம் பொறுமையால் வென்று புகழோடு விளங்கினார்.

பொறுமை, உள்ளதைக் கொண்டு நிறைவடைதல், பெருந்தன்மை, தம்மைவியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றிக் கடன், பகைமை பாராட்டாமை, எதிரிகளையும் தன்வசமாக்கும் ஆற்றல், உதவும் பண்பு முதலான பலவற்றையும் ஒருங்கே அமையப் பெற்றவர் பிள்ளையவர்கள் என்பதை இதன்வழி உணரமுடிகிறது. அத்துடன் இத்துணை நற்குணங்களை உடைய பிள்ளையவர்களையும் மனம் வருந்தச் செய்த பல நிகழ்வுகள் நடந்திருப்பதையும் அறிய முடிகிறது. இத்தகைய மன வருத்தங்களை ஒதுக்கி நல்ல படைப்புகளைத் தருதலையும், இம்மன வருத்தங்களே சில நேரங்களில் நல்ல படைப்புகள் உருவாகக் காரணியாவதையும் காணமுடிகிறது.

இவர் காப்பிய இலக்கணப்படி புராணங்களை அமைக்கும் புதிய முறையை மேற்கொண்டவர். நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு முதலிய வருணனைகள் கற்பனைத் திறங்கள் விளங்கத் தலவரலாறுகளை அமைத்தவர். மிக விரிவான துதிகளை வாழ்த்துச் செய்யுட்களாகத் தந்தவர். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் காப்புப் பருவத்தில் புதிய அமைப்பை மேற்கொண்டவர். கோவை இலக்கியத்தில் மற்ற கோவையில் காணப்படாத பல துறைகளைப் புகுத்தியவர் என்று இவரது படைப்பின் திறங்களைக் கூறிக் கொண்டே செல்லுதல் இயலும். சுருங்கக் கூறின் தனது புலமைத் திறத்தால் கிட்டிய வாய்ப்புகளுக்கேற்ப நல்ல பல படைப்புகளைத் தந்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள். இப்படைப்புகள் எழுந்த காரணத்தினால் உ.வே.சா போன்ற மாணாக்கர்களுக்குப் பதிப்புப் பணி சாத்தியமாயிற்று.

72. யமகவந்தாதியில் புலமை வளம்

கடவூர் மணிமாறன்
மாயனூர்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரிய படைப்புகளுள் திருத்தில்லை யமக வந்தாதியும் ஒன்று. நூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைந்துள்ள இந்நூல் சொல்லணியாகிய யமகத்தால் ஆனது. பல அடிகளிலாயினும் ஓரடியில் பல இடங்களிலாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது யமகம் ஆகும். இது தமிழில் மடக்கு எனப்படும்.

எழுத்தின் கூட்டம் இடைபிறிதின்றியும் (தண்டி. நூற்பா:92)

பெயர்த்தும் வேறு பொருடரின் மடக்கெனும் பெயர்த்தே

என்று மடக்கணியில் இலக்கணத்தை அணியிலக்கண நூலாகிய தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. எழுத்துக்களது தொகுதி பிறவெழுத்தானும் சொல்லானும் இடைவிடாதும் இடையிட்டும் வந்து பெயர்த்தும் வேறு பொருளை விளைப்பது மடக்கெனும் அலங்காரம்.

அந்தாதி என்பது யாப்பிலக்கண நூல் கூறும் நாற்பத்து மூன்று தொடைகளுள் ஒன்றாம். அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தாலும் அசையானும் சீரானும் அடியானும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பதே அந்தாதித் தொடையாகும்.

அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியனஃது
அந்தாதித் தொடையென்றறைதல் வேண்டும்.

என்று அந்தாதிக்கு இலக்கணம் வகுத்துள்ளார் நத்தத்தனார். ஓரடியில் அல்லது ஒரு செய்யுளின் ஈற்றில் வரும் சொல் அடுத்த அடியின் அல்லது அடுத்த செய்யுளின் முதலில் வருவது அந்தாதியாகும்.

அந்தாதி பாடுவதே அரிது. அதனினும் யமக வந்தாதி பாடுவது அரிதினும் அரிது. பிள்ளையவர்களைப் போன்றே பெரும் புலமை வல்லார்க்கே இது இயலும். இவ் யமக வந்தாதி போன்ற பிள்ளையவர்களின் பனுவல்கள் பலவும் அவரின் புலமை வளத்தைத் தெள்ளிதின் உணர்த்தும்.

உறையூர் முத்து வீரராகவ முதலியார். திரிசிரபுரம் சோமசுந்தர முதலியார், வீமநாயக்கரின் பாளையம் இருளாண்டி வாத்தியார், பாலக்கரை வீரராகவச் செட்டியார், கொட்டடி ஆறுமுகம் பிள்ளை, கற்குடி மருதமுத்துப் பிள்ளை, வேலாயுத முனிவர், கீழ்வேளூர்ச் சுப்பையா பண்டாரம் முதலிய புலவர் பெருமக்களிடம் பாடஞ் கேட்டுத் தம் தமிழின் புலமை வளத்தைப்

பெருக்கிக் கொண்டவர் பிள்ளையவர்கள்.

மேலும் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், திருவம்பலத்து இன்னமுதம் பிள்ளை, எழும்பூர் திருவேங்கடாசல முதலியார், மழவை மகாலிங்க ஐயர் ஆகியோரிடம் பல இலக்கண, இலக்கிய நூல்களைப் பாடங்கள் கேட்டும் ஐயம் தெளிந்தும் தம் புலமை வளத்தைப் பெருக்கிக் கொண்டார்.

தமிழ்கூறு நல்லுலகில் நன்கு அறிமுகமாகிய குலாம்காதர் நாவலர், சவரிராயனு நாயக்கர், தியாகராசச் செட்டியார், உ.வே.சாமிநாத அய்யர், சாமிநாத தேசிகர் சிங்கவனம் சுப்பு பாரதியார் முதலியோர் இவரின் மாணவர்கள் ஆவர். இதனைக் கொண்டே பிள்ளையவர்களின் அளப்பரிய தமிழ்ப் புலமை வளத்தை ஆய்ந்துணரலாம். இவரைப் பிற்காலக் கம்பர் எனப் பெருமையுறப் பேசுவர்.

இவர் பாடிய பிற அந்தாதிகள்

திரிச்சிராமலை யமக வந்தாதி, துறைசையமக வந்தாதி என்னும் இரு யமக வந்தாதிகளும் திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி, திருக்குடந்தைத் திரிபந்தாதி, திருவிடைமருதூர் திரிபந்தாதி என்னும் மூன்று திரிபந்தாதிகளும் பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவூரைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருப்பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி, பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் ஐந்து பதிற்றுப்பத்தந்தாதிகளும் இவர் பாடியுள்ளார். மேலும் திருவாவடுதுறை யமக அந்தாதி எறும்பீச்சர வெண்பா அந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய அந்தாதிகளும் இவர் பாடியவையே.

யமக வந்தாதி

தமிழில் சிற்றிலக்கிய வகையைப் பிரபந்தம் என்பர். தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் அந்தாதியும் ஒன்று. நேரிசை வெண்பா, நூறு அந்தாதியால் வந்தால் வெண்பா வந்தாதி என்றும் கட்டளைக் கலித்துறை நூறு அந்தாதியாய் வந்தால் கலித்துறை அந்தாதி என்றும் பல விகற்பமாய்ப் பெயர்பெறும்.

கந்தரந்தாதி, பழமலையந்தாதி, மதுதூ ரந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்ததாதி எனபன யாவும் யமக வந்தாதிகளே. திருத்தில்லை யமக வந்தாதி என்பதும் அடையடுத்த அந்தாதி வடிவ நூலே.

கற்பக விநாயகரை வணங்கித் தொடங்கும் இந்நூலில் முதற் பாடல்.

திருவம் பலவ மருந்தடை யுந்தபச் சேர்தரும்பி
திருவம் பலவ மருந்த நெஞ்சே சிவ ஞானத்தின்மு
திருவம் பலவ மருந்தடஞ் சோலை திகழுந்தில்லைத்
திருவம் பலவ மருந்தனை யாற்றுதி செய்தினமே"

என்று சிவபெருமான் வணக்கத்தை முன்மொழிகின்றது.

மனமே!செல்வங்களாயுள்ள பலவும் சண்டையும், இடையூறும் கெட, வரும் கேட்டிற்குரிய பயனில்லாத தீயவற்றைப் புசியேம்;சிவஞானத்தில்

தேர்வோம். ஆதலால் பலாவிருட்சங்கள் பொருந்திய அகன்ற சோலைகள் விளங்குகின்ற திருத்தில்லையின்கண் திரு அம்பலத்துள்ள அந்த அமிழ்தமொத்த சிவபெருமானை நாள்தோறும் வணங்குவாய்" என்பதே மேற்காண் முதற் பாடலில் பொருளாகும்.

திருவம் பல அமரும் தடையும் தப சேர்தரும்(பி)
திருவம்புஅல் அவம் அருந்தம் சிவஞானத்தில் (மு)
திருவம் பலவு அமரும் தடம் சோலை திகழும் தில்லை
திருஅம்பலம் அமருந்து அனையான் துதிசெய் தினமே

என நான்கு அடிகளிலும் உள்ள சொற்களைப் பிரித்துப் பொருள் காணுங்கால் எளிதில் பொருள் விளங்கும். இப்பாடல்கள் யாவும் முற்றக் கற்ற முழு புலமையாளர்க்கேயன்றி மற்றையோர்க்குச் சிறிதும் விளங்காது.

பாங்கி வெறி விலக்கல், காமமிகவுரைத்தல், தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல், தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல், சிறைப்புறமாகத் தோழி தலைமகள் அவலங் கூறல், பாங்கி இயற்பழித்தல், தலைவி இயற்பட மொழிதல் போன்ற அகத்துறைப் பாடல்களாகவே வளர்ந்து கனவு நலிபுரைத்ததில் இந்நூல் நிறைவு பெறுகிறது.

ஒரே தொடரும் நான்கு பொருள்களும்

சிலேடை எனப்படுவதும் இரட்டுற மொழிதல் எனப்படுவதும் பெரும்பாலும் ஒரு சொல் அல்லது தொடர் இரண்டு பொருள் தந்து நிற்கும். பிள்ளையவர்களின் யமக அந்தாதியில் ஒவ்வொரு சொல்லும் நான்கு பொருள்கள் தந்து நிற்கும் சிறப்பைக் காண முடிகிறது.

அகத்துறை இலக்கண நூல் நாற்கவிராச நம்பி எழுதிய நம்பியகப் பொருள். அதில் கூறப் பெற்றுள்ள அகத்துறைகளே இவ் யமக அந்தாதியின் பல பாடல்கள். பெரும்பாலும் இதிலுள்ள பாடல்கள் சிவபெருமானின் செம்புகழைப் பரவி நிற்கின்றன.

துன்ப மாலை யணிந்த திருமாலும் வணங்குத் தில்லைவனத்து உள்ளானே!வலப் பகுதியில் கற்பில் உயர்ந்த பிராட்டியார் பொருந்தாமல் இடப் பகுதியில் வைத்தவனே!யௌவனம் விளங்குகின்ற இருளையும் மேகத்தையும் ஒத்த கரிய கூந்தலையுடைய பெண்ணுக்கு மன்மதனானவன் துன்பத்தைச் செய்யா நின்றான் பொதியமாகிய பாம்பினது பெருமூச்சாகத் தென்றலானது அருளாய் நின்றது என்பதை,

வனவலங் கற்புய மாயோனெஞ் ஞான்றும் வணங்குதில்லை
வனவலங் கற்புயர் மாதுறை யாதிடம் வைத்தவயங்
வனவலங் கற்புய னேர் குழற் பேதைக்கு மன்மதன் செய்
வனவலங் கற்புயங் கத்துயிர்ப் பாய்ந்ததென் வளி நந்துமே"(10)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

இதில் அடிதோறும் இடம் பெற்றுள்ள வனவலங் கற்புய என்னும் தொடரானது, வன அலங்கல் புயமாயோன்;வன வலம் கற்பு உயர் மாது;

யவ்வனம் அலங்கு அல் புயல் நேர் குழல்;அவலம் செய்வன் கல்புயங்கத்து உயிர்ப்பு என்ற நான்கு பயந்து நிற்கின்றது.

காக்கை

உலகைக் காத்து அருள் புரியும் இடபமாகிய குதிரையையுடையாய்! சீர்காழியிடத்திலும், காசிப்பதியிலும், காஞ்சிப்பதியிலும் காக்கைக் குளம் என்னும் தீர்த்தத்தையுடைய பெரிய திருவிடைமருதூரிலும் எழுந்தருளியிருப்பவனே!உனது பொன்னம்பலத்தை வணங்கினால் கற்பகச் சோலை கைமிடத்து வர நினைக்க இடையில் மாறுதல் இல்லாமல் வரும். மோட்சம் வேண்டும் என்று வாய் திறத்தற்குள்ளாக அவ்விடத்திலேயே பிறவி நீங்கும் என்னும் பொருளில் அமைந்த,

காக்கைக் குளவிடை மாறின் றிவருங் கதியெனவ்
காக்கைக் குளவிடை மாறும் பலமென்று கைதொழின்மன்
காக்கைக் குளவிடை மாவாய கழுமலங் காசிகச்சி
காக்கைக் குளவிடை மாமரு தூருங் கலந்தவனே

என்ற பாடல் சிவப்பதிகள் பலவற்றை எடுத்துரைக்கின்றது.

சிவஞான போதம்

இந்நூலில் ஆற்றாத் தன்ன ஆற்றக் கூறல்' என்னும் தலைப்பிலான பாடல், வலியுற்ற (இந்திரியங்களாகிய)ஐந்து வேடரோடு சேர்ந்து வருந்துகின்ற மனமே, ஒழுக்கமாகப் பயனும் துளிகளும் நிறைந்த சிவகங்கை என்னும் பொய்கையில் நீராடு;பொன்னம்பலத்தை அடை;அவ்விடத்து வாழ்;சாகுமளவும் நடனத்தை வழிபாடு செய்; உனக்குத் துக்கம் வராது; பலவகைச் சாத்திரங்களும் பயன் இதுவே என்றுரைக்கும் என்ற கருத்தை உணர்த்துகின்றது.

"சாரம் பல முறை நூலுக்கு இதே என" இப்பாடல் தொடங்குகிறது. அதில் 'ஐவேடரிற் கூடித்தளர்மனம்' என்ற சொல்லாட்சியானது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்
டன்னியம் இன்மையில் அரன்கழல் செலுமே

என்ற சிவஞானப் போதச் செய்யுளை எதிரொலிக்கின்றது.

எடுத்தாண்ட தொடர்கள்

காதரங் காதரமா, கருமங்க கருமங் கணம்பர, கனியக் கனிய மனந்துதி, மடங்கலை யாதரியா, அருத்த மருத்தமென்றே, வருந்த வருந்த நமன், ரேரம்பலம்பல, பதஞ்சலி யாதவனே, பரவம் பரவத்தவரோ, வானம்பவனம், தனஞ்சய, மனம்பாவரியம் புலங்க போன்ற சொற்றொடர்கள் அடிதோறும் வேறு பொருள் பயந்து சொல்லின்பம் தருகின்றன.

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி என்னும் அகத்துறை இவ் யமக அந்தாதியில் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது, தாமரையில் வாழும் இலக்குமி நிலைபெற்ற அழகிய திருமடங்களும் பாடசாலைகளும் நிறைந்த

திருத்தில்லையினிடத்து இடையறாதுள்ள தேவர்களுடைய எலும்புகளை முழுதும் பூண்பவனாகிய சிவபெருமானது திருக்காளத்தி என்னும் தலத்திலுள்ள பெரிய மலையின்கண் யானைகளும் சிங்கங்களும் வந்து செல்லும் வழியில் செறிந்த இருளின்கண் பொறுமையில் பூமிதேவியையும் அழகிய ஆமையையும் இரத்தினச் சூட்டைப் புடைய சேடனையையும் ஒத்து விளங்குவோராகிய நமது தலைவர் வருவாரோ? என வியப்பும் வேட்கையும் மீதூரத் தலைவியின் ஏக்கத்தைப் புலப்படுத்துவதாக அமைந்த இப்பாடல் இலக்கியநயம் சான்றதாய் மிளிர்கின்றது.

மாதங் கமடங்கல் சேர்வழி நற்றிருள் வாய்ப்பொறைமண்
மாதங் கமடங்கல் வாயர வொப்பர் வருவர் கொல்பூ
மாதங் கமடங்கல் விச்சாலை யார்தில்லை மன்சுரந்த
மாதங் கமடங்கல் பூண்பவன் காளத்தி மால்வரைக்கே (76)

என்பதே அப்பாடல்.

சிவபெருமான்

இவ் யமக வந்தாதியில் சிவபெருமான், பாள மேனியர், ஆனந்தன், தகரானைம் தக்கனுக்கு இயைத்தவர். தையலை வாமம் வைத்தவன், தகரக்குழல் பாகர், அமலைப் பங்காளன், கனக் கந்தரத்தர், தினகரனுக்குப் பல்தகரப் புரிபன்பர், கரவரைக் கொன்று அடியார்க்கருள் தில்லைக் கடவுள், மயில் வாகன் சுந்தர், அத்தன், கோவா குளத்து முழுமுதல், தாமே தமக்குத் தலைவர், சிவக் கொழுந்து என்று பலவாறாகப் புகழ்ந்துரைக்கப்படுகின்றார்.

சிவபெருமான் உறையும் தலங்கள்

இன்னம்பர், அம்பர், அனேகதங்காவதம், தில்லை, கழுமலம், காசி, கச்சி, இடைமாமருது, காக்கைக்குளம், கேதாரம், நள்ளாறு, திருவாரூர் திருக்கழுக்குன்று ஆகிய தலங்களை உறைவிடமாகக் கொண்டவர் சிவபெருமான் என்று இவ்வந்தாதியில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

நாயன்மார்

இவ்வந்தாதியில் வன்றொண்டர் (சுந்தரமூர்த்தி வேட்கோவர்) (திருநீலகண்டர்)குங்கிலியக் கலையர், திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், சிறுத்தொண்டர், ஆகிய நாயன்மார்களைப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

அகத்துறைப் பாடல்வழி மிகவும் பொருத்தமாகவும், சிறப்பாகவும் சிவபெருமானின் புகழையும் பெருமையையும் நிலைநாட்டிக் கூறும் புலமைத்திறம் பிள்ளையவர்களன்றி வேறெவர்க்கும் அரிதேயாம். பாங்கி அறத்தொடு நிற்றலுக்குரிய பாடல்,

நம்பனை யன்றின் கரன்பல் வீழ்த்தகை நாயகன்வா
நம்பனை யன்றின் குரெரித் தாடை மன்றிற் கண்டாள்
நம்பனை யன்றி நல்லார்கள் பல்லோரவர் நாட்டுறத்தி
நம்பனை யன்றி னகக் கூவ வாடுமிந் நன்னுதலே! (84)

என்பதாகும். நம்பனும் ஐயனும் சூரியனது பல்லை உதிர்த்த

கையையுடைய தலைவனும் தேவர்களால் புகழுகின்ற இறைவனும் பகைவராகிய அசுரரது திரிபுரத்தையும் தகித்தவனும் கூத்தைச் சபையில் வழிபட்டவளாகிய இந்நல்ல நெற்றியையுடைய பெண் விரும்புகின்ற தன் தாயைத் தவிர மற்றப் பெண்கள் பலரும் பழிமொழியைக் கூறுதலாலும் நாள்தோறும் பனைமரத்தில் உள்ள அன்றில் பறவையானது விளக்கமாகக் கூவுதலினாலும் வாடா நின்றாள், என நயமுறவும் மனமுருகவும் பாங்கி அறத்தொடு நிற்றல் துறையைப் பாங்குற விளக்கியுள்ள திறம் குறிப்பிடத்தக்கதாம்.

சித்திரக்கவி

பழங்காலத்தே கோமூத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று, நாகபந்தம், சக்கரபந்தம், முரச பந்தம், சுழிகுளம், நீரோட்டம், சருப்பதோபத்திரம், அக்கரசத்கம் போன்ற சித்திரகவி பாடியோர் பலர் இருந்தனர். இன்றோ இத்தகைய பாவகைகளைப் பாடுவோர் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் 1815 இல் பிறந்த பிள்ளையவர்கள் எப்பாவகையையும் திறம்படப் பாடும் பெரும் புலமை மிக்கவராகத் திகழ்ந்துள்ளார்.

"சந்த மலிந்த செந்தமிழ்க் சுரசாய் வந்த மீனாட்சி சுந்தரவாரியன் எனப் புகழ்ப் பெறும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ்க்கடலாகத் திகழ்ந்தவர். எல்லையில்லாத பெரும்புகழ் கொண்ட தில்லையில் வாழும் பரம்பொருளாகிய சிவபெருமானை நாளும் வணங்கித் தொல்லை களைவோம்; துயர்க்கடலில் இருந்து மீள்வோம் என்பதை விளக்கும் திருத்தில்லை யமகவந்தாதி பிள்ளையவர்களின் புலமை வளத்தைப் பறை சாற்றுகின்றது.

73. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-சில உள்ளொப்பியல் உளவியல் சிந்தனைகள்

எம்.எம். மீறான் பிள்ளை
திருவனந்தபுரம்

ஒவ்வொரு நூலும் எழுவதற்குச் சில காரணிகள் உண்டு. அந்தந்தக் காலத்தில் அமைந்த சமய சமூக இலக்கிய பொருளாதாரச் சூழல்களே பெரும்பாலும் அக்காரணிகளாகும். இவை தனியாகவோ கூட்டாகவோ, குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தைத் தலைவராகக் கொண்டு குறிப்பிட்ட வகை இலக்கிய வடிவத்தைப் படைக்க, ஆசிரியரின் உள்ளத்தைப் பலவாறாகத் தூண்டுகின்றன. மன அழுத்தத்தின் வேகம் இத்தாக்கத்தினால் விரைவு பெறும்போது ஆசிரியன் அந்த இலக்கியப் பணியை செய்யத் தொடங்குகின்றான். அதை முழுமையாக முற்றுப்பெறச் செய்வதோடு அது தொடர்பான வேகமும் சுமையும் குறைய அவனது மனம் இலேசாகி திருப்தியும் மகிழ்ச்சியும் கொள்கிறது. இலக்கியப் படைப்பு உருவாக்கம் தொடர்பான ஆசிரியன்-படைப்பு பற்றிய இத்தகைய உளவியல் பார்வையை படைப்பாக்க உளவியல் என்பர்.

ஒரு இலக்கியத்தைப் பார்வையிடுகின்றவன் ஒரு சாதாரண வாசகன் என்ற நிலையிலிருந்து வேறுபட்டு, ஆய்வாளனாக அமைத்து அந்நூலை உளவியல் கண்ணோட்டத்தோடு பன்னிப் பன்னிப் படிக்கும்போது, அப்படைப்பில் சொற்களோடு சொற்களாகப் பொருளோடும் பின்னிப் பிணைந்து இழையோடியுள்ள ஆசிரிய இதயத்தின் இயல்பான சுவடுகளை அறிய இயலும். இச்சுவடுகள் பற்றிய தரவுகளிலிருந்து கருதுகோள்களை உருவாக்கவும், முடிவுகளைப் பெறவும் ஆசிரியர் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் பெரும்பயன்தரும் புறச்சான்றுகளாக அமையும். அகப்புறச்சான்றுகள் வழி படைப்பாளனோடு படைப்பைத் தொடர்புபடுத்திக் காணும் இந்த உளவியல் ஆய்வு வழி படைப்பாளியின் உள்ளத்தின் உணர்வுகளையும், உணர்வுகள் வழி உருவாகும் பண்பு நலன்களையும் ஆற்றல்களையும் அறிய இயலும். படைப்பு-படைப்பாளி-படிப்பாளி தொடர்பான இந்த முக்கோண கன பரிமாணப் பார்வையை படைப்பு உளவியலும் என்பர், படைப்பாக்க உளவியலும், படைப்பு உளவியலும் இலக்கிய ஒப்பாய்வில் உள்ளொப்பியல் நெறியின் பாற்பட்டவையாகக் கருதப்படுவதற்குரியன.

படைப்பாக்க, படைப்பு உளவியல் ஆய்வு நோக்கில், மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சிறந்த படைப்பான, சேக்கிழார் பிள்ளைத் தமிழினை ஆராய்ந்து காண்பது பெரும்பயன் விளைவிப்பதாகும்.

கிடைக்கப்பெறும் ஆய்வுத் தரவுகள் வழி மகா வித்வானின் மனவுணர்வுகளையும் பண்புநலன்களையும் படைப்பாற்றல் திறனுக்கான ஊக்கிகளையும் கணித்துக் கூறலாம். மூல நூலான சேக்கிழார் பிள்ளைத்தமிழும், ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு பற்றிய பிற நூற்களும் இம்முயற்சிக்கு ஆய்வு மூலங்களாக அமைகின்றன.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலகட்டத்தில் (1815-1876)அறுபத்தொன்று ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த சைவத் தமிழ் பெரும்புலவர். பெரும் தமிழ்ப் பாவலராக, சீர்மிகு ஆசிரியப் பெருந்தகையாக, தொடர் புராணச் சொற்பொழிவாளராக, பக்திமிகு பதிப்பயணியாக தமிழகத்தில் வலம் வந்தவர். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் அவர் இறப்பதற்கு இரண்டாண்டுகள் முன்னர் திருப்பெருந்துறையிலுள்ள திருவாடுதுறை ஆதீன மடத்தில் தங்கியிருந்தபோது, கி.பி.1874-ஆம் ஆண்டு தமது ஐம்பத்தியொன்பதாம் வயதில் இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது. பதிகம், அந்தாதி, சரித்திரம், பிள்ளைத்தமிழ், மாலை, புராணம், சங்கிதை, லீலை, உபாக்கியானம், கலம்பகம், தூது, உலா, வெண்பா, கோவை, புகழ்ச்சி, யமகம், குறவஞ்சி, அகவல், ஆகிய வடிவங்களிலாக எழுபதிற்கும் மேற்பட்ட நூற்களை இயற்றி ஆழ்ந்த பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற வித்தகராகத் திகழ்ந்த வாழ்வின் இறுதிப் பகுதியில் இந்நூல் இயற்றப்பெற்றது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே எட்டு பிள்ளைத் தமிழ் நூற்களைப் பாடிய பிள்ளையவர்கள் ஒன்பதாவது பிள்ளைக் கவிவடிவமாக இதனைப் பாடியுள்ளது காணலாம். முன்னர் பாடியவகைளில் அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் தவிர, ஏனையவை யாவும் தெய்வங்கள் பெயரில் அமைந்தனவாகும். ஆசிரியர் பாடிய பிள்ளைத்தமிழ்களில் தனிநபர் பெயரில் அமைந்த இரண்டாவது படைப்பாகவும், இறுதிப் படைப்பாகவும் இவ்வடிவம் அமைகின்றது.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் தோன்றுவதற்கு பல்வேறு சமய சமூக இலக்கிய பொருளாதாரத் தூண்டுதல்கள் காரணமாக அமையினும் தலையாயத்தூண்டுதல் காரணியாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். திருப்பெருந்துறை தெற்குத் தெருவிலுள்ள சைவமடத்தில் பரிவாரங்கள் சூடி தங்கியிருந்து, பெருஞ்செல்வந்தர்கள் சமயச்சான்றோர்கள் முன்னிலையில் திருப்பெருந்துறைப் புராணத்தை பாடி விரித்துரைத்து அரங்கேற்றிக் கொண்டிருந்தார் மகாவித்துவான் அத்தருவாயில் இந்நிகழ்ச்சியில் நாள்தோறும் பங்கு பெற்று மகிழ்ந்து கொண்டிருந்த வன்தொண்டச் செட்டியார் என்பவர் ஒரு நாள் பிள்ளையவர்களை நோக்கி, “மாணிக்கவாசகர் சரித்திரத்தை திருப்பெருந்துறைப் புராணத்தில் அருமையாகப் பாடியளித்த தாங்கள் திருத்தொண்டர்களின் பெருமைகளைப் பலரும் அறியும்படி பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெயரில் பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியருள வேண்டும்” என்று பணிந்து வணங்கிக் கேட்டுக் கொண்டார். மகிழ்ச்சியோடு இவ்வேண்டுகோளை ஏற்று இசைவு தெரிவித்த மீனாட்சிசுந்தரனார் “பெரிய புராணம் பாட வன்தொண்டரின் வாய்மொழியான திருத்தொண்டத்திதொகை காரணமானது. அப்புராணத்தைப்

பாடிய சேக்கிழார் பெருமான் மீது பிள்ளைத்தமிழ் பாட மற்றொரு வன்தொண்டரின் வாய்மொழி காரணமாயிற்று" என்று பிள்ளைத்தமிழ் சீர்பெறப் பிறந்தது. இதுவே நூல் பிறக்க முதல் தூண்டுதலாக அமைந்த நிகழ்ச்சி.

பல துணைத் தூண்டுதல்களும் மகாவித்துவானின் மன இசைவுக்கு காரணிகளாக அமைந்தன எனக் கருதலாம். பல்லாண்டுகளாக பெரியபுராணத்தைக் கற்றுத் தேர்ந்து அதைப் பாடி வரிவுரை நடத்தி வந்ததால் சேக்கிழாரின் சமயப்பற்றும் இலக்கியத் திறனும் மனத்தில் பதிந்து விட்டிருந்தன. சைவ சமயவுணர்வோடு நாயன்மார்களின் வரலாற்றைப் பாடியிருந்ததால் பிள்ளையவர்கள் உள்ளத்தில் சேக்கிழார் பற்றிய ஒரு தனியான மதிப்பும் மரியாதையும் கலந்த நேசம் உருப்பெற்று நிலை பெற்றிருந்தது. வன்தொண்டரின் வேண்டுகோள் மகாவித்துவானின் உள்ளத்தை உசுப்பி விட்ட சமயக் காரணியாகும். சேக்கிழாரின் சொல், பொருள், ஓசை, நயங்கள் ஆசிரியர் நெஞ்சத்தில் ஒரு இலக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நேரத்தில் வன் தொண்டரின் வேண்டுதல் எழ, இலக்கிய நோக்கிலும் உள்ளம் தூண்டப்பட்டதாகக் கருதலாம்.

இளமையிலும் வாலிபத்திலும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியும் பேசியும் பயணம் செய்தும் முயன்று திரட்டிய பொருளெல்லாம் பரிவாரங்களோடான கோயிற் பதி தரிசனப் பயணங்களுக்கும் ஏழை மாணவர் பராமரிப்பிற்கும் செலவாயிற்று. பிற்காலத்தில் குடும்பச் செலவிற்கும், கடனிலிருந்து மீட்சி பெறவும் பெரும் பொருள் தேவையாயிற்று. வருங்காலத்திற்கான பொருளை சேமித்து வைக்காத வருத்தம் வாட்டத் தொடங்கியது. இதனால் வெறுமனே புலவலர்களிடமிருந்து பொருள் பெறுவதைவிட, சிற்றிலக்கியங்கள் பாடியளித்து பொருள்பெற விரும்பினார். இச்சூழ்நிலையில் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் இயற்றப் பெற்றது. இவ்வாறு ஒரு பொருளாதாரக் காரணியும் மறைமுகமாக நூலுருவாக்கத்திற்கு தூண்டுதலாக அமைந்து விட்டது. இவை மகாவித்துவானின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் வழி பெறப்பெற்ற படைப்பாக்க உளவியல் சிந்தனைகளாக அமைவனவாகும்.

படைப்பு-படைப்பாளி-படிப்பாளி- எனும் பன்முகப் பரிமாண உளவியல் பார்வை வழி படைப்பாசிரியரின் பெருவாழ்வுச் சான்றுகள் உதவியுடன் படைப்பாளியின் உள்ளப் போக்கினையும் நோக்கினையும் படைப்பாற்றலையும் கண்டறிய முயல்வதும் பயன் தருவதாகும். சேக்கிழாரின் சைவத்தமிழ் சேவையைச் சிறப்பித்துப்பாட என் பிள்ளைத்தமிழ் பாவடிவத்தை பிள்ளையவர்கள் தேர்ந்தெடுத்தார் என்பதும் தேவையான சிந்தனையாகும். பிள்ளைத் தமிழ் பாட வேண்டி வன்தொண்டர் வேண்டியது மட்டுமின்றி, வேறு சில உளவியல் காரணங்களும் கணிப்பிற்குரியதாகும். தாம் பற்றும் பாசமும் கொண்டு பாராட்டும் தலைவரை மனதில் குழந்தையாக்கிக் காணவும், பல்வேறு

பருவங்களிலாக்கி கொஞ்சி விளையாடவும் வாய்ப்பளிக்கும் வடிவம் பிள்ளைத்தமிழ் போல் வேறொன்றில்லை. மேலும் பெற்றோரின் பாசவுணர்வோடு தாம் பெற்ற பாட்டுடைத் தலைவரை குழந்தையாக்கி மனதில் தொட்டில் கட்டி தாலாட்டவும் நெஞ்ச மஞ்சத்தில் அணைத்துப் பாராட்டவும் பிள்ளைத்தமிழேபெரும் வாய்ப்பளிக்கிறது. ஆகவே பிள்ளையவர்களும் பிள்ளைத் தமிழைத் தேர்ந்தெடுத்திருத்தல் வேண்டும் என்பது கணிப்பு.

மகாவித்துவானின் மனதில் மொழி இலக்கிய உணர்வுகளை விஞ்சும் வகையில் பேரளவு சுத்த சைவமே பொங்கிவழிவதை நூல்வழி அறியலாம். பற்று, பக்தி, பாசம், இவைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உயர்ப்பிணைப்பினை சைவத்தோடு கொண்டுள்ளதால் சேக்கிழார் பிள்ளைத் தமிழில் சேக்கிழார் வரலாற்றை விட சைவசமய வரலாற்றையே காண முடிகின்றது. வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், சைவசாத்திரங்கள், பக்திப் பாசுரங்கள், சைவாச்சாரியர், கோயிற்பதிகள், ஆதீனம், மடம் பற்றிய நிகழ்ச்சிகளும் விளக்கங்களும் குறிப்புக்களும் இக்கருத்திற்கு வலு சேர்ப்பதாகும். மனம் பரிபக்குவ ஆன்மீக நிலையை எய்தத் துடிக்கும் வாழ்வின் இறுதிப் பகுதியில் உருவான அறிவு, வயது, மன முதிர்ச்சியும் இந்நிலைக்கு காரணமாகக் கருதலாம்.

சைவ வேளாளர் குலத்தில் பிறந்த மகாவித்வான், தம் குலப்பெருமையை பெருமிதத்துடன் நினைவு கூரும் வகையில், 'குடிகளிலெல்லாம் உயர்ந்தகுடி' என்னும் பொருளில் 'உழவார வலம்' (காப்பு பருவம்-3) எனக் குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் தம்மைப் போல் வேளாளர் குடியில் பிறந்த சேக்கிழாரை உதவும் உரிமையும் வெளிப்பட 'வேளாளர் குல திலகா' (காப்பு பருவம்- 1-5) என அழைப்பதையும் காணமுடியும். இவை ஆசிரியரின் குலப்பற்றுணர்வினைச் சித்தரிப்பனவாகும்.

மீனாட்சி சுந்தரனார் மிகுந்த மொழிப் பற்றுடையவராவார். மடங்களில் தங்கி வடமொழியையும் நூற்களையும் கற்றுத் தேர்ந்தபோதும் வடமொழிச் சொற்களை பேரளவு, பாடல்களில் பயன்படுத்தாதது குறிப்பிடத்தக்கது. பொதிய மலையிலிருந்து தமிழ் வளர்த்த அகத்திய முனிவரை நினைவுபடுத்தும் வகையில் 'செந்தமிழ் சங்கத்து முதியோன்' (அம்புலிப் பருவம்-6) 'தண்டமிழ்க் குன்று' (சப்பாணிப் பருவம்-2) 'முந்து தமிழ்க் கவிபாடிய புலவன்' (சிறுபறைப் பருவம்-9) எனச் சித்தரிப்பதும் அமைகின்றது. தலையாய இலக்கணமாக தொல்காப்பியத்தைக் குறிப்பிடுவதும் (தாலப்பருவம்-6) தமிழ் நில முதல், கரு, உரிப்பொருள் பற்றிய குறிப்புக்களும் ஆசிரியரின் தமிழுணர்வு மிக்க தகைநெஞ்சே திருத்தமுறக் காட்டுவனவாகும்.

எண்ணற்ற நூற்களை மிகுந்த ஆர்வத்துடன் தேடிச் சென்றும் நாடிச்சென்றும் கண்டுபிடித்து படித்ததோடு மட்டுமின்றி படிப்பித்தும், பாப்படியும் , பாவலராகத் திகழ்ந்தவர் பிள்ளையவர்கள். கந்தபுராணம், சிவப்பிரகாசம் சிவஞான சித்தி, பெரியபுராணம், திருமந்திரம், திருவாசகம்,

தேவாரம், காஞ்சிபுராணம், நாகைப்புராணம், சிவஞானமாபாடியம் போன்ற சைவ இலக்கியங்களின் தாக்கங்களும் சுவடுகளும் சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இடம் பெற்றமைகின்றன. இவை அவரது ஆழமான அகலமான அறிவுத் தாகத்தையும் ஆர்வத்தையும் சுட்டியமைவனவாகும்.

பொதுத்தமிழ் நூற்களில் பெரும்பாவலரின் சிந்தையைப் பேரளவு கவர்ந்த நூலாக திருக்குறள் அமைவதை உணரலாம். அறம் பொருள் இன்பம்(சப்பாணி-1) எண்ணிய எண்ணியாங்கு (சப்பாணிப்பருவம்-5) பொறிவாயில் ஐந்தவித்தல் (காப்புப் பருவம்-5) பெருக்கத்துப் பணிதல் (காப்புப் பருவம்-4) போன்ற குறட்பாக்கள் பற்றிய குறிப்புக்கள், மீனாட்சி சுந்தரனார் நெஞ்சை சைவ நூற்களிடையே குறள் கவர்ந்து பெரும் தாக்கம் ஏற்படுத்திய நிலையைச் சுட்டுவதாகும்.

பிள்ளையவர்கள் வரலாற்றுணர்வும், ஆய்வுப் பாங்கும் நிறைந்த பேறிஞராகவும் திகழ்கிறார். நாயன்மார்கள், சைவச் சான்றோர்கள், சேர சோழ மன்னர்கள், பற்றிய நிகழ்ச்சிகளை கற்பனைக் கலவாது தரும் நிலை நூலில் உள்ளது. சமண சமயம் பற்றிய ஆசிரியரின் மதிப்பீடும் சில இடங்களில் உள்ளன. ஒல்லா அருகந்தர் (தாலப்பருவம்- 8) மேய சமயப் பாழ்ங்குழி (சப்பாணிப் பருவம்-3) ஈன சமயம் (சப்பாணிப் பருவம்-) என்பனவாகும் அவை. பல்வேறு சைவ சமய நூற்களில் தாம் கற்ற சமண சைவ சமயப் போராட்டம் பற்றிய கருத்துக்கள் நெஞ்சில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவால் உருவானவை இவை என்பது தெளிவு, இவ்வாறான படைப்பாக்க, படைப்பாக்கியோன், படைப்பு, நோக்கியோன் நோக்கிவமைந்த உள்ளொப்பியல் உளவியல் பார்வைகள், புதியநோக்கில் நூலையும் நூலாசிரியரையும் அடையாளங்காணப் பெரிதும் துணை புரிவதாகும்.

74.தமிழ்க் காளிதாசன்

பா.மாலினி
அண்ணாமலைநகர்

கல்வி பெருமை

மகாவித்துவான் அவர்கள் நுண்மான் நுழைபுலம் உடையவராக இருந்தார். தமிழ்பால், இவர் சிறந்த ஈடுபாடு உடையவர். தமிழை, தம் உயிரினும் மேலாக மதித்தார். இவர் பல இடங்களுக்குச் சென்று தம் அறிவைத் தம் மாணவர்களுக்கு வரையாது வழங்கினமையால் பிரபந்தங்கள் உயிர் பெற்றன. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள். சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்கள், சிவஞான முனிவர் பிரபந்தங்கள் போன்ற பிரபந்தங்களின் நயங்களைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலிய நூல்களுக்கு இவர் எழுதிய உரைகளே பின்பு மதுரை இராமசாமிப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டன. காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், திருவானைக்காவுபுராணம் முதலியவற்றிற்கு இவர் பாடஞ்சொன்ன உரையே பிற்காலத்தில் தமிழ் நாட்டில் நிலவியது. இவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, இவர் செவ்வந்திப்புராணம், காஞ்சிப்புராணத்தின் முதற்பாகம், திருவானைக்காப்புராணம், கல்லாட மூலம் முதலியவற்றைப் பதிப்பித்தனர்.

தமிழ்ஈடுபாடு

தமிழ்ப்புலவர்களுள் கச்சியப்ப முனிவரை இவர் பக்தியோடு வழிபட்டுப் பாராட்டுவார். சேக்கிழார், கம்பர், நெற்குன்ற வாண முதலியார், அம்பிகாபதி, கவி வீரராகவ முதலியார், வரதுங்கராம பாண்டியர், அதிவீரராம பாண்டியர், திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் என்பவர்களுடைய நூல்களில் இவருக்கு விருப்பம் அதிகம். திருப்பகலூ ரந்தாதியிலுள்ள திரிபின் அமைப்பை வியப்பார். திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள செய்யுட்களை அடிக்கடி சொல்லிக் கொண்டே யிருப்பார். கல்லாடப் பகுதிகள், தேவாரப் பகுதிகள் இவருக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். இலக்கண விளக்கத்தில் இவருக்கு மதிப்பு அதிகம். சிவஞான முனிவர் செய்யுள் நடையிலும், வசன நடையிலும் ஈடுபாடு உண்டு. கச்சியப்ப முனிவர் நூல்களில் உள்ள அரிய அமைப்புக்களை அதிகமாகப் புகழ்ந்து பேசுவார். அவருடைய நூலமைப்பே இவர் பெரும்பாலும் பின்பற்றிப் ்பாடுவார்.

படைப்புகளின் இயல்பு

இவருடைய நூல்களிற் பெரும்பான்மையானவை புராணங்களே, இவர் இயற்றும் புராணக் காப்பியங்களில் கடவுள் வாழ்த்திலும், அவையடக்கத்திலும் 'நூனுதல் பொருளத் தன்னகத்தடக்கி; என்னும் இலக்கணப்படி நூலில் வரும் செய்திகளை உரிய இடங்களின் பலவகையாக அமைப்பார். அவையடக்கங்கள் பலவற்றில் இலக்கண

செய்திகளையும், சாஸ்திரக் கருத்துக்களையும் காணலாம், வரலாறுகளைச் சொல்லும் பொழுது, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை முதலிய சிறு செய்யுட்களாற் கூறுவர்; தேவாரச் சந்தம், சைவசித்தாந்த சாஸ்திரங்களிலுள்ள கருத்துக்களைப் பல்வேறு உருவங்களில் இவர் நூல்களில் அமைத்துள்ளார். தம்முடைய ஞானாசாரிய ஸ்தானமாகிய திருவாவடுதுறையிலுள்ள மடாலயத்தியும் குரு மூர்த்திகளையும் உரிய இடங்களிற் பாராட்டிக் கொண்டிருப்பது இவருடைய வழக்கம்.

இவர் காவிய அமைப்பில் கம்பராகவும், பக்திச்சுவை பாடுவதில் தெய்வச் சேக்கிழாராகவும், இலக்கணச் செறிவும், சைவ ஆகமக் கருத்துக்களும் அமையப் பாடுவதில் மாதவச் சிவஞான சுவாமிகளாகவும், கச்சியப்ப முனிவராகவும் விளங்கியவர் என அறிஞர் ச.தண்டபாணி தேசிகர் இவரைப் போற்றுவர்.

இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, பிறரைப் பாராட்டும் பண்பு, இரக்க உணர்வு, பிறர் செய்த உதவியை மறவாமை, சிவபக்தி, மாணவரிடம் அன்பு காட்டல் முதலியவை சிறந்த பண்புகளாகும்.

'பணம் பந்தியிலே' என்று இல்லாமல், பணத்தை இவர் அடிமையாக்கினார். எவ்வளவு வறிய நிலையில் இருந்தாலும், தம் கொள்கைக்கு விரோதமான எதையும் செய்யாத தனித்தன்மை இவர் பால் இருந்தது. வறுமையிலும், செம்மையைக் கண்டார். எத்தகைய துன்பம் வந்தாலும், துன்பத்தைக் கண்டு சோர்வு அடைய மாட்டார். பொருட்செல்வத்தை பெரிதும் பொருட்படுத்தாமல் கல்விச் செல்வத்தையே பெரிதாக எண்ணி மதிப்பார்.

பொறுமை

பிறருடைய குற்றங்களை இவர் எடுத்துக் கூறமாட்டார். பிறரிடம் குற்றம் கண்டால், அவற்றை வெளிப்படையாகச் சொல்லி, கேலிச் செய்யமாட்டார். குற்றங்களை, பிறர் அறியாதவாறு பக்குவமாகச் சொல்லுவார்; குற்றங்கள் வெளிப்பட்டாலும், அதற்கு சமாதானம் சொல்லிப் பின்பு அவரை, அவ்வாறு சொல்லாத வண்ணம் பக்குவமாக பேசுவார்.

பிள்ளைத் தமிழ்களில் இவர் பகழிக் கூத்தரையும் குமரகுருபரரையும் ஒப்புவார், பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட திருத்தொண்டர் புராணம் அருளிய சேக்கிழார் பெருமானரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றதே சேக்கிழார் பிள்ளைத்தமிழாகும், பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் காப்புப் பருவத்தில் திருமால், சிவன், உமை, கணபதி, முருகன், அலைமகள், கலைமகள், தேவர்கள் முதலிய கடவுளர்களைப் போற்றிப் பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டுவதே பொது அமைப்பாகும். ஆனால் சேக்கிழார் பிள்ளைத் தமிழின் காப்புப்பருவத்தில் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்ட திருத்தொண்டர்களையே காப்புக் கடவுளர்களாகக் கூறப்பெற்றுள்ளது புதுமையாகும்.

மருவுக்கு வாசனை

அக்காலத்தில், திரிசிரபுரத்திலும், அதனைச் சூழ்ந்துள்ள ஊர்களிலும், தாங்கள் அறிந்தவற்றை மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்வது.

தமிழ்ப்புலவர்களின் வழக்கம், பழக, பழக, அவர்களிடம் படித்துவந்த ஏனைய மாணாக்கர்களும் இவர்பால் அன்புக் கொண்டனர். 'மருவுக்கு வாசனை போல்' - வாய்ந்த இவரது இயற்கையறிவும், கவிபாடும் திறனும், அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இவர், பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய அஷ்டப்பிரபந்தம், சிவப்பிரகாச ஸ்வாமிகள் பிரபந்தங்கள், குமரகுருபர ஸ்வாமிகள் பிரபந்தங்கள் முதலியவற்றை முறையே படித்து அவற்றின் சுவைகளை அறிந்து இன்புறுவார்; புறச்சமய நூல்களாக இருந்தாலும் அவற்றைப் படித்துப் பொருளறிவதில் இவருக்கு விருப்பமுண்டு.

சிவதீட்சை பெற்றது

பிள்ளையவர்கள் சிவதீட்சை செய்துகொள்ள விரும்பினார். அப்பொழுது திரிசிரபுரம் கீழைச் சிந்தாமணியில் இருந்த செட்டி பண்டாரத்தையா என்னும் அபிஷிக்தர் ஒருவர் இவருக்குத் தீட்சை செய்வித்த ஷணிகலிங்க பூசையும் எழுந்தருளச் செய்வித்தார். அன்ற முதல் பூசையை அன்போடு, நாள்தோறும் செய்து வந்தார்.

அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம்

திருவாவடுதுறை மடத்திலுள்ள சம்பிரதாயங்களையும், மற்றவற்றையும் பார்த்த இவருக்கு, அப்பொழுது தலைவராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் விஷயமாக ஒரு பிரபந்தம் இயற்ற வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. பின்னர், மடத்தின் சம்பிரதாயங்களையெல்லாம் நன்கு விசாரித்து அறிந்து கொண்டு சில தினங்களில் அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் ஒன்றை இயற்றி முடித்தார்.

மகாவித்துவான் பட்டம் பெற்றது.

திருவாவடுதுறையில் அம்பலவாண தேசிகர் முன்னிலையில் பல வித்துவான்களும், பிரபுக்களும் சூழ்ந்த மகாசபையில் அந்நூல் அரங்கேற்றப்பட்டது. அதைக்கேட்ட எல்லோரும் வியப்புற்றனர். திருவாவடுதுறை சம்பந்தமாகப் பல பிரபந்தங்கள் இருந்தாலும், அக்கலம்பகம் எல்லாவற்றிலும், சிறந்ததாகவும், பொருள் நலம் செறிந்ததர்கவும் சைவசம் பிரதாயங்களையும், ஆதீன சம்பிரதாயங்களையும் விளக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதென்று கொண்டாடினார்கள். அப்பொழுது ஆதீன வித்துவானாகவும் விளங்கிய கனகசபைத் தம்பிரான் முதலியோர்கள் இவருடைய புலமைத் திறத்தைக் கண்டு மகிழ்ந்து, 'இவர்களுக்குச் சந்நிதானம் தக்க மரியாதை செய்தருள் வேண்டும்', என்று தலைவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதனைக் கேட்ட அம்பலவாண தேசிகர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரோடும் ஆலோசித்து 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கினார். பட்டம் அளித்ததோடு இல்லாமல், சால்வை முதலிய பரிசில்களும் இவருக்கு வழங்கி இவரை பாராட்டினார்.

பேசும் பாங்கு

இவருடைய பேச்சில் சாந்தம் காணப்படும். சுருங்கச் சொல்லி, விளங்க வைக்கும் இயல்பு உடையவர். ஒரு கருத்தை விளக்கும் போது, இடையே மேற்கோள்காட்டியும் விளக்குவார். எல்லாம் கூடிக்கூடியும் ஊக்கம்

'என்னப்பா' 'அப்பா' போன்ற தொடர்களை மிகுதியாகக் காணலாம். கல்வி அறிவு இல்லாதவர்கள் செய்யும் செயலை, "பெறுவான் தவம்" என்று குறிப்பாகக் கூறுவார்; அறிவிலானெஞ்சுவந்தீதல் பிறிதியாதும், இல்லை பெறுவான் தவம்' என்னும் திருக்குறளில் உள்ள தொடராகும்.

பிள்ளையவர்களின் கீர்த்தி தமிழ்நாட்டிலும், பல இடங்களிலும் பரவியிருந்தது. சைவ மடாதிபதிகள் எல்லோருடைய நன்மதிப்பையும் இவர் நன்கு பெற்றிருந்தார். சைவர்கள் இவரை "சைவப் பயிர் தழையத் தழையும் புயல்" என்றே கருதி வந்தனர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்ற பெயரையுடையோர்கள் பண்டைக்காலத்தில் ஒருவொருவரே இருந்தனர். ஆதலின் அவர்களுடைய பெயர்கள் மற்றவர்களைச் சாராமலே தனிச் சிறப்புற்றார்கள். இவருடைய பெயரை உடையவர்கள் பலர் இருந்தும், 'மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்" - என்று கூறின் இவரையே குறிக்கும் பெருமையை பெற்று இருந்தார். தமிழ் வித்துவான்களில் 'பிள்ளையவர்கள்' என்றே வழங்கும் பெரிய கௌரவம் இவருக்குத்தான் இருந்தது.

தமிழ் மக்கள் அடைந்த பயன்

இப்புலவரால், தமிழ் மக்கள் அடைந்த பெருமை சொல்லில் அடங்கா, புதிய நூல்களை இயற்றித் தமிழ் நயங்களை அமைத்துக்காட்டி, பல சுவைகளையும், உரைச்செய்தார். பழைய நூல்களையும் தேடி, அதன் பெருமைகளைத் தமிழ் மக்கள் உணரும்படி செய்தார். மாணாக்கர் இடத்து தமிழ்ப்பற்றை ஊட்டி வளர்த்தவர். தமிழ்த் தெய்வத்தின் திருத்தொண்டர்களாகித் தமிழகத்தைத் தமிழன்பில் ஈடுபடுத்திய் சான்றோர் வரிசையில் இவரும் ஒருவர். தமிழ் மக்கள் உள்ளத்தில் குன்றா இளமையும், ஒருவித புத்துணர்ச்சியையும் இவருடைய நூல்கள் உண்டாக்கும். இவரின் நூல்களின் மூலம், பிள்ளையவர்களின் புலமை உருவத்தை அறியலாம். தமிழ் உள்ளளவும் இவரின் பெரும் புகழ் நின்று நிலவும் என்பது உறுதி.

சுத்தமலி துறைசையிற் சுப்பிரமணிய தேசிக மேய்த்
தூயோன் றன்பால்
வைத்தமலி தருமன் பின் வாழ்ந்தினிய செய்தமிழை
வளர்த்தென் போல்வார்க்
சுத்தமலி நூல் கணவின் மீனாட்சி சுந்தரப் பேர்
அண்ணலே நின்
புத்தமுத வாக்கினையு மன்பினையும் மறவேனெப்
போது மன்னோ

அறிஞர்கள் பிள்ளை அவர்களை பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பன், தமிழ்க்காளிதாசன், நிமிடகவி, புராணம் பாடும் புலவன், தமிழைக்காத்த பெருமான், புலவர் முதல்வன், கவிக்கார்மேகம், செந்தமிழ்க்குருநாதன், சிவநெறிச் செல்வன், விற்பன சிகாமணி, கருணைமூர்த்தி, இணையிலாப் புலவன், மெய்ஞ்ஞானக் கடல், புலவர் ஏறு என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்து பாடுவர்

75. பிள்ளையும்-பிள்ளைத்தமிழும்

பழ.முத்தப்பன்
மேலைச்சிவபுரி

'ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமும், இளந் தொந்தியும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்து உள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்தியிருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வர் என்று தோன்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வந்தர்களுக்கு உள்ள பூரிப்பு இல்லை. ஆழ்ந்த பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோன்றியது. கண்களில் எதையும் ஊடுருவிப் பார்க்கும் பார்வை இல்லை. அலட்சியமான பார்வையும் இல்லை. அவருடைய நடையில் ஓர் அமைதியும், வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவர் மார்பிலே உத்திராட்ச கண்டி விளங்கியது. பலகாலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்காகக் காத்திருக்கும் உபாசகனைப் போல் நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் தெய்வம் போல அவர் வந்தார்' (ப.159)இத்தொடர்கள் என் சரித்திரத்தில் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் முதன்முதலாகத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்ட காட்சியைப் பற்றி வருணித்த குறிப்புகளாகும்,

இத்தகைய வருணனைக்குரிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு உரையாசிரியராக, ஞானாசிரியராக விளங்கியதோடு பிரபந்தப் படைப்பாளராகவும் விளங்கினார். பதிகம், பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, கோவை, தூது, மாலை ஆகிய பிரபந்த வகைகளில் பல நூல்களை எழுதியுள்ளார். அவர் படைத்த பிள்ளைத்தமிழ் பற்றிய அறிமுக ஆய்வே இக்கட்டுரையின் உட்பொருளாகும்.

பிள்ளைத்தமிழ் நூல்கள்

உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் 1910இல் பதிப்பிக்கப்பெற்ற திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பிரபந்தத் திரட்டில்,

1. மணவை திருவெண்ணீற்று உமை பிள்ளைத் தமிழ்,
2. திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ்,
3. உறையூர் ஸ்ரீகாந்திமதி அம்மை பிள்ளைத்தமிழ்,
4. திருக்குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்
5. திருத்தவத்துறை பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்,
6. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்,
7. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்,
8. திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ்

என்ற எட்டுப்பிள்ளைத் தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன. சைவ

சித்தாந்த பதிப்புக்கழகம் 1964இல் வெளியிட்ட சேக்கிழார் பிள்ளைத் தமிழிற்கு, சுயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்கள் உரையெழுதி வெளியிட்ட சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பதிப்பில் பிள்ளையவர்களின் வரலாற்றுப் பகுதியில் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ் பதிப்பில் பிள்ளையவர்களின் வரலாற்றுப் பகுதியில் பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழ் என்பதும், பிரமவித்தியா நாயகி பிள்ளைத் தமிழ் என்பது குறிக்கப்பெற்றுள்ளன. எனவே இவ்விரண்டு பதிப்புகளின் வழி பிள்ளையவர்கள் பத்துப் பிள்ளைத் தமிழ் நூல்கள் பாடியிருக்கிறார்கள் என்பது பெறப்படுகின்றது. இப்பத்தில் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழும் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களாக அமைய, மற்றையவை பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களாக அமைந்துள்ளன. காப்புப் பருவம் தவிர மற்ற பருவங்கள் பெரும்பாலும் எல்லாப் பிள்ளைத்தமிழ் நூல்களிலும் பிள்ளைத்தமிழ் பிரபந்த இலக்கணப்படியே அமைந்துள்ளன. காப்புப் பருவம் மட்டுமே அவ்வப் பிள்ளைத்தமிழுக்கு ஏற்ப வேறுபட்டு விளங்குகின்றது.

வணக்கப்பாடல்கள்

பிள்ளைத்தமிழின் முதற்பகுதியில் பருவங்கள் தொடங்குவதற்கு முன்னால் காப்புப்பாடல்கள் அமைவது இயல்பாகும், பிள்ளையவர்கள் தாம்பாடிய பிள்ளைத்தமிழ் நூல்களில் இரண்டு விதமான அமைப்புகளைக் காப்புப் பாடல்களில் கொண்டிருக்கிறார். ஒன்று விநாயகர் துதி மட்டும் பாடுவது. மற்றொன்று எல்லாத் தெய்வங்களுக்கும் வணக்கம் பாடுவது. இந்த அமைப்பில் திருக்குடந்தை ஸ்ரீமங்களாம்பிகை பிள்ளைத்மிழ், திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் இரண்டிலும் விநாயகர் காப்புச் செய்யுள் மட்டுமே இடம் பெற்றுள்ளது. மற்றவற்றில் பிற தெய்வ வணக்கங்கள் அமைந்தள்ளன. பிற தெய்வ வணக்க நூல்களில் திருவெண்ணீற்று உமை பிள்ளைத் தமிழில் விநாயகர் வாழ்த்தோடு பிற தெய்வங்களைப் பற்றிய பாடல்கள் அமையாது திருஞானசம்பந்தர் வாழ்த்து மட்டும் அமைந்துள்ளது. இந்நூல் மணவை என்று வழங்கப்பெறும் திருமணநல்லூர் என்ற திருத்தலத்திற்கு உரியதாகும். இத்திருத்தலம் ஞானசம்பந்தருடைய வரலாற்றோடு தொடர்பு உடையது. இப்பெருமண நல்லூரில்தான் ஞானசம்பந்தருக்குத் திருமணம் நடைபெற்று திருமணத்திற்கு வந்தவர்களுடன் ஞானசம்பந்தர் சோதியில் கலந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது. எனவே விநாயகர் வணக்கத்தோடு திருஞான சம்பந்தர் வணக்கத்தை மட்டும் சேர்த்துப் பிள்ளையவர்கள் பாடியிருக்கிறார்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழில் விநாயகர் வணக்கமும் குரு வணக்கமும் அமைந்துள்ளன. பிற தெய்வ வணக்கம் இல்லை. குருவணக்கத்தில் திருவாவடுதுறை பண்டார சந்நிதிகளாம் தலைவர்களைப் போற்றியிருப்பது பிள்ளையவர்களின் நன்றி உணர்வினைக் கர்ட்டுகிறது.

அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழில் ஒரு புதிய மரபைப்

பிள்ளையவர்கள் தோற்றுவித்திருக்கின்றார்கள். இப்பிள்ளைத்தமிழில் விநாயகர் துதி மட்டும் முதலில் அமைய, பின்னர் காப்புப் பருவம் தொடங்குவதற்கு முன்னால் தனிப்பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. அப்பாடலுக்குத் தலைப்பு ஒன்று இடப்பெற்றுள்ளது.

'ஆன்றோர் இலக்கண முகமாகக் காவற்கடவுள் ஆவார் இவரெனத் துணிந்து அவ்வழி சென்றபின் கூறியது' - என்ற இத்தலைப்பிற்குப் பிறகு பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அம்பலவாண தேசிகர் கொலைதீர் தெய்வங்களையோ, முன்னவரின் வழிபடு தெய்வங்களையோ வழிபடாது, தன்னுடைய ஞானாசிரியரையே வழிபட்டமையால் தாமும் காப்புப் பருவத்தில் ஆதீன மரபு ஞானாசிரியர்களைக் காப்புச் செய்யுளில் வைத்துப் பாடியிருக்கிறேன் என்ற அமைப்பைப் பாடல்களில் காட்டியுள்ளார். குருமரபு என்பதை நன்கு உணர்ந்தவர் ஆதலால் பிள்ளையவர்கள் இவ்வாறு குறித்திருப்பது நினைவுகூறத்தக்கதாகும்.

திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் தனி ஒரு அவையடக்கப்பாடல் அமைந்துள்ளது. மற்ற பிள்ளைத்தமிழ் நூல்களில் அவையடக்கம் காணப்படவில்லை. காப்புப் பருவத்திற்கு முன்னால் அப்பாடல் அமைந்துள்ளது. அப்பாடலில் சான்றோர்கள் உணர்த்துகின்ற நூலைக் கேட்டு எழுந்த ஒரு சிறு குழவி அச்சான்றோர் அவையில் தத்தித் தத்திப் பேசினால் எப்படி இருக்குமோ அது போன்றது தான்பாடிய பிள்ளைத்தமிழ் என்று அவையடக்கத்தை அமைத்துள்ளார்.

மற்ற பிள்ளைத்தமிழ் நூல்களில் பிற தெய்வங்களை வணங்கும்போது சமயக்குரவர் நால்வருக்கும், சிவனடியார்களுக்கும் வணக்கம் கூறிப்பிற தெய்வங்களோடு அடியார்களை ஒத்த நிலையில் வைத்து வணங்கியிருக்கும் பிள்ளையவர்களின் தனித் தன்மை பாராட்டுதற்கு உரியதாகும்.

காப்புப்பருவம்

பிள்ளைத்தமிழ் இலக்கணப்படி காப்புப்பருவம் என்பது பாட்டுடைத் தலைவரைக் காக்க, காத்தல் தெய்வமான திருமால் முதலிய தெய்வங்களைப் போற்றிப் பாடுதலாகும், பெரும்பாலும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் பிள்ளையவர்கள் இந்த மரபைப் போற்றி ஒழுகியிருக்கிறார். ஆனால் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் இரண்டு நூல்களில் இம்மரபு அவரால் பின்பற்றப்படவில்லை.

சேக்கிழார் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தைத் திருத்தொண்டத் தொகைப்பாடல்கள் அமைப்பில் பத்துப்பாடல்களாக அமைத்துள்ளார். சேக்கிழார் பெருமானை அந்நூல் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமையால் பிறரால் வணங்கப்படுகின்ற பிற தெய்வங்களை வணங்கிச் சேக்கிழாரைக் காக்க என்று பாடாது, சேக்கிழாரின் வழிபடு தெய்வங்களாகிய அடியார்களையே வணங்கிச் சேக்கிழாரைக் காக்கப் பாடியிருக்கிறார். அவ்வாறு அடியார்களை வகைப்படுத்தும்போது சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்ற வரிசையில்

திருத்தொண்டத் தொகைப் பாடலுக்கு ஏற்பவே பிள்ளைத்தமிழ் காப்புப் பாடல்கள் பத்தையும் அமைத்துள்ளார். இத்தகைய அமைப்பு பிள்ளையவர்களின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுவதாகும்.

அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்தில் இடம் பெற்ற 11 பாடல்களில் நந்தி, சனத்குமார முனிவர், சத்தியஞான தரிசினி, பரஞ்சோதி மாமுனிவர், மெய்கண்டார், அருணந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி, அருள் நமசிவாயர், சித்த சிவப்பிரகாசர், நமசிவாய மூர்த்தி முதலான பதினால்வரைப் போற்றி அம்பலவாண தேசிகரைக் காக்கப் பாடியிருக்கிறார். இப்பாடல்கள், ஆதீனப் பரம்பரையின் வரலாற்றைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தள்ளன. இவ்வாறு காப்புப் பருவத்தை அவ்வவ் நூலுக்கு ஏற்பப் பிள்ளையவர்கள் பாடியிருக்கும் புதிய முயற்சி போற்றுதற்கு உரியதும் ஆகும்.

கவிச் சிறப்பு

பிள்ளைத்தமிழ் பாடல்களைப் பிள்ளையவர்கள் ஒரே மாதிரியாகப் பாடவில்லை. வேறு வேறு சந்தங்களில் பிள்ளையவர்கள் பாடியிருப்பது அவரின் கவித்திறத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

கானமர்குழற்கொளிசெய் நித்தில மிழைத்தபொ னூர்பிறைமு
கிற்கனொர் மதிப்பிறைமு ளைத்தது சிவணவி
ருத்தித்தி ருந்தாளில் வானவர்
காதல் செய் மடக்கொடிகண் மைக்குழல் மணிப்பிறை
நாடொறு மதிப்பரி தெனப்பல்பல மொய்த்திட
வருள்பொழி மைக்கட் டுணைச்சீர்கொ டேவியை –
(வெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ், பா.13)

என்று ஒரே வரியில் 23 சீர்கள் கொண்டு பாடியிருக்கிறார்.

ஆவாழ்க மாமறைக் குலம்வாழ்க நலமாறு மாகமத் திரள்கள் வாழ்க

என ஒரே வரியில் ஆறுசீர் கொண்டு பாடல்கள் பாடியுள்ளார். இவ்வாறு சந்த வேறுபாடுகளில் பாடுகின்ற திறம் பிள்ளையவர்களிடத்தில் காணப்படுகின்றது.

கற்பனையோடு பாடல்களைப் பாடுகின்ற ஆற்றல் பெற்றவர்க பிள்ளையவர்கள். அவருடைய கற்பனைகளை நூல்தோறும் பலவாறாகக் காணமுடிகிறது.

மைவைத்த கண்டரை வணங்கவரு தேவர்கள்
வணங்கு சாரூபம் உற்று
மன்னுவார் தம்குழுவிலின்று பிரித்துணர
வைத்த குறியே போலவும்
பரமனார் திருமார்பில் பைம்பொன் :படாமுலைச்
சுவடு செய்து
அகமகிழ் படைத்துக் களிக்கும் மயிலே (செங்கீரை:4)

என்று பாடி உமாதேவியின் முலைச்சுவடு சிவபெருமான் மார்பில் பட்டதற்குத் தேவர்களின் தனிநிலையை உவமையாகப் பிள்ளையவர்கள் பாடியிருப்பது கற்பனைக்குச் சான்றாகும்.

கற்பனையின் மறுபக்கமான வருணனையிலும் பிள்யைவர்களின் நூல்கள் நனிசிறந்து விளங்குகின்றன.

சோறு மணக்கும் மடங்களெல்லாம்
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்
சுவண மணக்கும் ஆடையெலாம்
தொங்கல் மணக்கும் தோள்களெலாம் (தாலப்:6)

என்ற சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பகுதியைப்பயின்றவர் மறந்துவிட இயலாது.

உவமை நலங்களைப் பிள்ளையவர்கள் தம் நூலில் கிடைக்கும் இடந்தோறும் பயன்படுத்தி மகிழ்விக்கிறார்.

முருகன் கொட்டுகின்ற சிறுபறையின் ஒலிக்கு உவமையாகப் பல பொருளைப் பாடுகின்ற பிள்ளையவர்களின் திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் பாடலை எடுத்துக் காட்டாகக் காட்டலாம்

மலைநாணுடற் கொடுங் கூற்றமென, ஒருபால் மயக்கும் இருளென்ன ஒருபால்
வடமேருவென்ன ஒருபால், அலைஎறிந்து கரைமாய்க்கும் உவரென்ன ஒருபால்
உலைநாண் மறக்கனலியென்ன ஒருபால் எங்கும் உழலும் வளியென்ன ஒருபால்
ஓங்குகுறட்பூதம் என்ன ஒருபால் கொலைஉவந்த கூடிஎன்ன ஒருபால் (சிறுபறை.2)

என்பன போன்ற பாடல் வரிகளை உவமைச் சிறப்புக்குக் காட்டாகக் காட்டலாம்.

சைவத்திருமடத்தோடு தொடர்புடையவர் என்பதால் பிள்ளையவர்களின் நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துகள் நூல்கள்தோறும் விரவிக் கிடக்கின்றன.

சேக்கிழார் பிள்ளைத்மிழில் சைவசமயங்களைப் பற்றிய குறிப்பினை வாரானைப் பருவப் பாடலில் குறிப்பிடுகின்றார். சிவஞான சித்தியார் பரபக்கத்தில் மறுக்கின்ற பிற மதங்களை ஆசிரியர் குறிப்பிடுவது தத்துவப் புலமைக்குச் சான்றாகும்.

நீடுமின்ப அரிவையர் புணர்பு என்பயரும்
மைந்து நிகழ்கந்தமும் கெடுதலே
நிலவும் இன்பம் என்மரும் குணாமன்று
மொழிதலே நிரம்பலுறும் இன்பம் என்மரும் (வாரானைப்:2)

என்ற இப்பகுதியில் அரிவையற் புணர்ப்பு இன்பம் என்ற உலகாயதரும், ஐந்து கந்தம் கெடுதல் இன்பம் என்ற பௌத்தரும், குணம் மூன்றும் ஒழிதல் இன்பம் என்ற நிகண்டவாதியரும், குறிக்கப் பெறுகின்றர். தொடர்ந்து வருகின்ற பகுதியில் இருவினைக்கேடு இன்பம் என்ற பிரபாகரரும், மலநாசம் இன்பம் என்ற பேதவாதிகளும், விக்கிரக நித்தம் இன்பம் என்கின்ற சைவசமவாதிகளும், உயிர்கெடுதல் இன்பம் என்ற பாடாண வாதிகளும், சித்தி இன்பம் என்கின்ற சங்கராந்த வாதிகளும் குறிக்கப் பெறுகின்றனர்.

அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழில் பெரும்பாலான பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கருகுமூல மலத்தினுள் உயிர்க் கலப்புற்றதுவே அகப்பந்தம்
கலந்து மாயை கன்மமோடு கலந்த பந்தம் அகப்புறமாம்
பெருகு புறமாம் தனுகரணம் பெற்ற பந்தம் புறப்புறமாம்
பிறநகு புவனபோகத்தில் பிணைந்த பந்தம் எனவிரித்தே
உருகும் அடியற்கு இரங்கி அவை ஒழியுமாறு (முத்தப்:1)

என்ற இப்பகுதியில் சைவசித்தாந்தக் கருத்துக்களை எளிதில் விளக்க ஆசிரியர் முயன்றிருப்பது பெருமைக்குரியதாகும்.

சைவச் சின்னங்களான திருநீறு, உருத்திராட்சம் இவற்றில் ஆழ்ந்த பக்தியும், பெருமையும் கொண்டவர் பிள்ளையவர்கள், இத்திருச் சின்னங்கள் இல்லாமல் பிள்யைவர்களைக் காண முடியாது என்பது என் சரித்திரம் உள்ளிட்ட பலநூல்களில் காணமுடிகிறது. எனவே வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் தம் படைப்புகளில் பிள்ளையவர்கள் இத்திருச்சின்னங்களை வழிபட்டுச் செல்லுகின்ற பாங்கினைக் கொண்டவராய் விளங்குகின்றார்.

வெண்ணீறு கண்மணி புனந்து ஐந்தெழுத்து எணா வீணராம்
சமயருக்கு
(சிறுபறைப்.5)

ஓங்குமதி மண்புலத்து உறைவது தெரிப்பதென ஒளிர்நீறு வெள்ளொளி
செய்ய
(வாரானைப்.1)

இலகு கண்மணி மாலை இடையிடை கோர்த்திடுக (9)

இவ்வாறு தத்துவக் கருத்துக்களையும் சமயப் பெருமைகளையும் பலவாறாகச் சொல்லுகின்ற பாங்கினைப் பிள்ளையவர்களின் பாடல்களில் காணமுடிகிறது.

புராணச் செய்திகளை நினைவுகூர்ந்து பாடுவதில் பிள்ளையவர்கள் வல்லவர்கள். சேக்கிழார் பிள்ளைத்தமிழில் பல தலபுராணச் செய்திகளை இடம் பெறச் செய்துள்ளார். காஞ்சி புராணம், நாகை புராணம் உள்ளிட்ட பல புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. மேலும் திருத்தொண்டர்

புராணச் செய்திகளின் சில பிரிவுகளையும் தம் படைப்பில் பிள்ளையவர்கள் கையாண்டுள்ளார். நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக இறைவன் பரவைப் பிராட்டியாரின் ஊடலைத் தீர்த்தபொழுது திருமாளிகையில் சிலநாள் திருமாலையும் அடைக்காயும் கொடுத்த கூனர் ஒருவரையும் குருடர் ஒருவரையும் கூனும் குருடும் இறைவன் அருளால் தீர்த்து ஏவல் கொண்டமையைச் சேக்கிழார் பிள்ளைத்தமிழின் அம்புலிப் பருவத்தில் 8ஆம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பிள்ளையவர்களின் பிள்ளைத் தமிழ் நூல்களில் புதுமையும், எளிமையும், கற்பனையும், வருணனையும், உவமை நலமும், தத்துவக் கருத்தமைவும், புராணச் செய்திகளும் அமைந்தமையான படித்து இன்புற இயலுகிறது. பிற்காலப் பிரபந்தங்களுக்குப் பிள்ளையவர்களின் பிரபந்தங்கள் வழிகாட்டுதலாய் அமைந்து இன்பம் பயக்கின்றன எனலாம்.

76.பிள்ளையவர்கள் வாக்கும் திருவள்ளுவர் வாக்கும்

பொதிகை முத்துக்குமரன் (முனைவர் இரா.முத்துக்குமாரசாமி)

ஒருமலை பிலந்து வீழவுரறி மிக்கார்த்துப் பொங்கி
வருமலை வயிற்றுச் செல்ல மலர்க்கரங் கவித் திட்டேற்றுப்
பொருமலை யொழித்தோமென்னறு புவிமகள் களிப்பத் தென்னந்
திருமலை யமருந் தெய்வச் செம்மலை வணக்கஞ்செய் வாம்.

-திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

திருவாவடுதுறை ஆதீனத்துச் செந்தமிழ்ச் செல்வியின் நடனசாலை, தமிழ்ப்புலவர்களுக்குத் தலைவர், ஞானப்பிதா, குணக்கடல், தமிழ்க் காளிதாசன், தமிழ்க்கடல், கவிச்சக்ரவர்த்தி (பேரரசன்), நவகுணன் (பொறுமை, திருப்தி, தன்னை வியவாமை, பிறர் குற்றம் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிதல், சிவபத்தி, மாணாக்கரிடத்து அன்பு) என்று உடனுறை புலவர்களாலும், புரவலர் தியாகராசச் செட்டியார் அவர்களாலும், மாணாக்கனாலும் பாராட்டப் பெற்றவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.

மூவேந்தர் முந்நாட்டு மூவூர் (பொதிகை, மதுரை, குமரி)ப் பெரும் புலவர் திருவள்ளுவர் (கி.மு.40-கி.பி.50) கி.மு.முதல் நூற்றாண்டிலும் கி.பி. முதல் நூற்றாண்டிலும் வாழ்ந்த, மதுரைச் சங்கப் புலவர் ஆவர். அவர் வாக்கும், அவர் வாழ்ந்த காலத்தில் 700 ஊர்களில் 1330 குறட்பாக்கருத்துகள், விளக்கங்கள், பின்னணி நிகழ்ச்சிகள் போன்றவை ஒலித்துக் கொண்டிருந்தன. பாண்டிய அரசர் முன்னிலையிலும் தென்பாண்டி முழுதும் திருவள்ளுவ மாலை இயற்றிய 54 புலவர்களிடமும் திருவள்ளுவர் வாக்குகள் ஒலித்துக் கொண்டிருந்தன. 12000 சொற்கள் மூலம் அவர் வாக்கு நாடெங்கும் பரவின. அக்கால பாண்டிய அரசு அவர்க்கு வேண்டிய வசதிகளைத் தந்தது. வள்ளுவர் வாக்கு நாமகள் வாக்காகும்.

தென்னிந்தியாவின் சாக்ரடீசு, உலகக் குடிமகன் தமிழகத்துத் தனிப்பெரும் தத்துவ ஞானி, மெய்யறிவின் எவரசுடுசிகரம், சாதி இனம் கடந்த பொதுமனித அறத்தைக் கூறிய அறவியல் அறிஞர், நள்ளிரவில் ஒளிவிடும் விண்மின் உலகக் கலங்கரை விளக்கும், தமிழர் பண்பாட்டுச் சிகரத்தின் உச்சி, அண்டங்களின் பொது அறநூல் யாத்த பேராசான், நான்முகனின் மறுபிறவி, அகத்திய வழியினர், வையத்தார் உள்ளுவதெல்லாம் அளந்தவர், முதுமொழிநூல் அகத்தியத்தின் பிழிவைத் தந்தவர் என்றும் உலக அறிஞர்களாலும் உடனுறை புலவர்கள் 54

பேர்களாலும் பாராட்டப்பெற்றவர்.

இருவர் வாக்கும் தமிழ்மொழி, தமிழினம் உயர்ந்து அதன்வழி உலக மனித இன முன்னேற்றம் அடைய வேண்டும் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பேறுகளைப் பெற வேண்டும் என்ற மறுமை நோக்கிய இம்மைப் பயன்கருதிய தம் வாழ்வை அமைத்துக் கொள்ள உதவுகிறது. அந்நோக்கிலே தம் வாக்கையும் இருவரும் பயன்படுத்தினர் என்பது ஒப்பாய்வால் புலப்படுகின்றது.

மொழி இலக்கிய முன்னேற்ற வளர்ச்சி உலகத்திற்கு இந்நூற்றாண்டுத் தேவை.

ஒப்பீட்டுக் கருத்துக்களஞ்சிய விளக்கம் புத்தாண்டு, புது நூறாயிரத்தாண்டு, புது நூற்றாண்டுச் சமயத்துவ இலக்கிய வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது. அதற்கு இருவர் கருத்துகளும், வாக்கும் பிற அறிஞர்கள் கருத்தும் ஒப்பீட்டாய்வாளர்க்குத் தேவைப்படுகிறது. புராணம், சிறுகதைகளும் இருவர் வாக்குகளில் காணப்படுகின்றன.

ஈன்ற வன்னையம் இகழ்ந்து நீக்கிடும்
சான்ற மேலவர் தன்மை சொல்வதென
ஏன்ற கள்ளுணா என்னுந் தீமையான்
மான்ற கும்பியே வாய்ப்பதுண்மையால்

-காசிரகசியம்.மீ.சு.பிள்ளை

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் - (923 திருவள்ளுவர்)

சமய அறம் கள்ளுண்ணாமை ஒப்பீட்டாய்வுக்கு இருவர் வாக்கும் பயன்படும்மொழிப்பொருள், உரைப்பொருள், விளக்கம், இணைச் சொற்களில் அகரமுதலி, சொல் எழுத்துப் பகுப்பாய்வு பிணைப்பாக்க அகரமுதலி போன்றவற்றை உருவாக்கவும் இருவர் வாக்கும் உதவுகின்றன.

கரைதரு சகாரவன்னம் காரிய சித்தி செய்ம் புரைதரு பாவநாசம் புரிதரும் ரகாரவன்னம்

விரைதரு கடுக்கைவேணி விமலனே உகாரவன்னம்

வரைதரு கணேசனிந்த மந்திரக் கதிதேவாவன்

குரு>க்+உ, ர்+உ

மொழியியல் பகுப்பாய்வுக்க வித்ததிட்டவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

க்+உ

கு>க்-காரியசித்தி+உ.உதவும் பெற

ரு ர்,உ+பாவத்தைச் சங்கார்+அம் செய்யும்-கணேசன்

உயர்வடைய உதவுபவர் என்ற பொருளை மீ.சு.பிள்ளை கூறுகிறார்.

அகரமுதல என்றும் தொடங்கும் திருக்குறள் பாடலைப் பகுப்பாய்வு செய்து பிணைப்பாக்கம் செய்தால் 1008 சொற்கள் ஒரே குறட்பாவில்

உருவாக்கும் வண்ணம் திருவள்ளுவர் தம் திருக்குறட்பாவை அமைத்துள்ளார். அகரம்-அரகர, அகம், கரகம், காரகம், மாரகம் போன்ற சொற்களை உருவாக்கிப் பலபொருள் காண உதவும்.

உலகச் சமுதாய முன்னேற்றத்திற்கு, சமய ஒருமைப்பாடு, மெய்யுணர்வு ஒருமைப்பாடு, குடிமக்கள் ஒருமைப்பாடு போன்ற ஒருமைப்பாடுகள் தேவைப்படுகின்றன. சமுதாயச் சீர்கேடுகளான அறஞ் செய்யாமை, இறைவனுக்கு அஞ்சாமை, எண்எழுத்து எழுதப்படிக்க அறியாமை, நல்குரவும் இரவும், பரத்தமையும் பிறனில் விழைதலும், கள்குடி போன்றவைகளை நீக்கக்களைய, இருவர் வாக்குகளும் உதவுகின்றன. ஒருமைப்பாடுகளுக்கும் அவ்வாறே உதவுகின்றன.

அறஞ்செய்யாமையை இருவர் வாக்குகளும் கண்டிப்பதுடன் எவ்வாறு அறஞ்செய்ய வேண்டும் என்பதையும் விளக்குகின்றன.

காசியினிருந்து பாவங்கருதினோர் செய்தார்
யாரும் மாசியல் கும்பி (நரகம் வதிவர்-62 காசிரகசியம்)

தாயினும் இனியதாந் தருமமொன் றனை
வாயினும் மனத்தினு மதிக்க மெய்யினும்
காயினும் இயற்றுதல் கடமை யாகும் - (மீ.பிள்ளை)

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல் - (திருவள்ளுவர்)

இருவரும் அறங்களைக் கூறினாலும் பிள்ளையவர்கள் 'நந்தன வனங்களாக்கி நறுமலர்த் தடங்களாக்கி அந்தமில் பொழில்களாக்கி அன்னசத்திரங்களாக்கி சித்திரம் பிறங்குமாறு திகழ்மனையாக்கி' என்னென்ன அறங்களைச் செய்யலாம் என்பதைத் தம் வாக்கால் விளக்குகிறார். இக்காலச் சூழ்நிலைக் கேடுகளைக் களைய வழிகாட்டுகிறார். செய்யும் அறத்தினாற் சித்த சுத்தியாம், உய்யும் மெய்ஞ்ஞானமும் உதிக்கும் என்று அவர் கூறுகிறார்.

இறை நம்பிக்கையின்மை இறையஞ்சாமையை இருவரும் எடுத்துக்கூறி இறைப்பொதுமைக்கு, சமயப்பூசல் ஒழிவதற்கு இருவரும் வழிகாட்டுகின்றனர்.

நலமலி தருமமே நமது(இறைவனது)ருபமாகும்
புலமலி தரவிஃதுணர்ந்த புந்தியோர்
குலமலி யதைவிடார் குருட்டு மூடர்கள்
நிலமலி தர வது நீத்து மாழ்குவார்- காசி ரகசியம் மீ.சு.பிள்ளை

இறையே அறவடிவு என்று கூறி அறஞ் செய்யத் தூண்டுகிறார்.

கற்ற தனாலாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

ஆதிபகவன் முதற்றே உலகு
பிறவிப்பெருங்கடல் நீந்துவர்.

என்ற தம் வாக்குமூலம் இறையுணர்வை ஊட்டுகிறார் திருவள்ளுவர். பிள்ளையோ மேலும் விளக்கமாக,

சோதி போற்றி சுடரும் சிற்றம்பலத் தாதி போற்றி அருமறை யாகம் ஓதி போற்றி உயக் கொண்டனையுமாள் நீதிபோற்றி நிருமல போற்றி - சிவமான்மிய காண்டத்தில் - பிள்ளையவர்கள் இறை வழிபாட்டை ஒளி வழிபாடாகச் சமயப்பூசல் நீங்க வழிகாட்டுகிறார். திருவள்ளுவரும் எண்குணனாக உள்ளார் எனக் குறிப்பிடுவது பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவும்.

என் எழுத்து அறியாமை எழுதப்படிக்கத் தெரியாமை சமுதாயச் சீர்கேடுகளுள் ஒன்று.

எண்ணே எண்ணின் மறைக்கொழுந்தே-பிள்ளையவர்கள்
எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு-திருவள்ளுவர்

இவற்றைப் பகுப்பாய்வு பிணைப்பாக்க முறையில் ஆராய்ந்து இன்றைய அமைத்துக் கணினி ஆசிக்(ASCII) கீ குறியீடுகள் 256 ஐயும் வெளிக்கொண்டு வந்து அதாவது அச்சொற்களில் அடக்கி முதல் வகுப்புக் கணித நூலையும் கணினிக் குறியீடுகள் அனைத்தையும் பாட நூலின்றியே' குழந்தைகளுக்குக் கற்பித்துவிட முடியும் என்பது ஒப்பீட்டுப் பகுப்பாய்வு இணைப்பாக்கக் கற்பிக்கும் முறை ஆய்வு காட்டுகிறது. திருவள்ளுவர். பிள்ளை-அறிவொளி இயக்கம் ஒன்றை சமயத் தனித்தமிழ் இயக்கவழி நடத்தி அனைவரையும் எழுதப்படிக்க வைத்துவிட முடியும். அதற்கு இருவர் வாக்குகளும் நமக்கு உதவுகின்றன.

நல்குரவும் இரவும்-வறுமையும் பிச்சையெடுத்தலும் சமுதாயச் சீர்கேடுகள். பிள்ளையவர்கள் நல்குரவை நன்கு அறிந்தவர். இவரது தந்தை சிதம்பரம் பிள்ளை மாதம் 'வ' ரூபாய் வாடகை வீட்டில் வசித்தவர். இவர் இறக்கும்பொழுது ரூ.3000 கடனில் இருந்தது. வறுமையைப் பற்றி வல்லூர் தேவராசப் பிள்ளையும், பிள்ளையவர்கள் பதிப்பித்த குசேலோபாக்கியானத்தில் விரிவுபட வறுமையைக் கூறியுள்ளார் பிள்ளையவர்கள் தருமமே என்று தொடங்கும் பாலில் நல்குரவு தீர வழிகாட்டுகிறார்.

திருவள்ளுவர் நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை என்று நான்கு அதிகாரத்தில் தொல்வரவும், தோலும் கெடுக்கும் தொகையாக நல்குரவு பல்குரைத் தன்பங்கள் சென்றுபடும். நெருப்பினுள் துஞ்சலும் ஆகும். நிரப்பினுள் யாது ஒன்றும் கண்பாடு அரிது என்ற தன் வாக்கால் வறுமையின் கொடுமையைத் திருவள்ளுவர் கூறுகிறார். இன்மை, இடும்பை, இரந்து, தீர்வாம் என்னும் வன்மையின் வன்பாட்டது இல்.

இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்-ஈர்ங்கை விதிரார் என்ற தம் வாக்குகளில்-வறுமை பிச்சையெடுத்தலை விளக்குகிறார். இவற்றை நீக்க ஆள்வினை ஆன்ற அறிவு என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் உழவர்-என்ற தம் வாக்குகளால் அவற்றைக் களைய வழிகாட்டுகிறார் திருவள்ளுவர்.

'ஆன்ற இன்சுவையுடைய அன்னதானமே, சான்ற பூதானம் கோதானமே சுடர்கான்ற பொற்றானம்' போன்ற தானங்களைச் செய்தும் நறுமலர்த் தடங்கள், நந்தவனங்கள், பூம்பொழில்கள், கூபந்தடாகம், குருவளர்தளி உருவாக்க வேண்டும் என்று பிள்ளையவர்கள் கூறுகிறார்கள். இருவர் வாக்குகளைச் செயற்படுத்தினால் இச்சமுதாயச் சீர்கேடுகள் நீங்கும்.

பிறனில் விழைதலும் கள்ளுண்ணுதலும் வரைவின் மகளிர்ச் சேறலும் சமுதாயச் சீர்கேடுகள். இவற்றைச் செய்தவர்கள் இம்மையிலும் மறுமையிலும் என்ன தண்டனை பெறுவார்கள் என இருவரும் எடுத்துக் கூறி இச்சீர்கேட்டை நீக்க வழிகாட்டுகிறார்கள். பிறனில் விழைந்த பாவி கொடிய குணத்து இராக்கதனாய்க் குணமிலா பைசாசமாய், கள்வனாய், கயமைத் தீய தொழிலனாய், இம்மையில் வருந்துவான், மறுமையிலும் நரகில் துன்பமுறுவான் என்று பிள்ளை தம் செய்யுளில் கூறியுள்ளார். கள்ளுண்ணும் தீமை பயக்கும் சுராபானஞ் செய்தபாவி, தூய்மையடையா உடல் வீங்கித் துக்கித்து உழுலுவர் பறவைகளாய், கிருமிக்கீடமாய்ப் பிறவியெடுப்பர் என்றும் அவர் கூறுகிறார்.

பகைபாவம் அச்சம் பழி என நான்கும்
பிறனில் விழைபவனைவிட்டு நீங்கா

கட்காதல் கொண்டு ஒழுகுவார் ஒளி இழப்பர்
வரைவின் மகளிர் மென்தோள் புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு

என்று திருவள்ளுவர் தம் வாக்கால் அச்சீர்கேடுகளை எடுத்துரைத்து அவற்றை நீக்குவது அரசின் கடமை என்பதையும் கூறுகிறார்.

இருவரும் மறுமையை, மறு உலகத் தண்டனைகளையும் எடுத்துக்கூறி சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியுள்ளனர்.

நல்லாறு-நன்று செய்க-உடல்நலம் பெற உயிர்நலம் பெற இருவரும் தம் வாக்கால் நல்வழி காட்டுகின்றனர்.

பிள்ளையவர்கள் சூதசங்கிதை, காசிரகசியம் என்ற இரு நூல்களில் நல்லாறு எது என்பதை விளக்கிக் கூறுகிறார். சூதசங்கிதையில் 159 செய்யுள்களில் இமயம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி (13-20) எட்டு அத்தியாயத்தில் விளக்குகிறார். 11,12இல் நாடிச்சக்கர நிலை, நாடி சுத்தி உரைத்தல் போன்றவற்றை விளக்குகிறார். இக்காலத்தில் வளர்ச்சி பெறும் அட்டாங்க யோக அறிவியல், வளர்ச்சிக்கும் ரெய்கி, தியான சிகிச்சைக்கும், சில்வா உளவியல் தியான முறைக்கும் உதவும் பல உயர் கருத்துகளைப் பிள்ளையவர்கள்

கூறியுள்ளார். அவர் மேலும்,

சகல பூதங்களையும் தன்னுயிரிற் காண்பதுவும்
சகல பூதங்களிடத்துந் தன்னுயிரைக் காண்பதுவும்

என்ற ஒரு புதிய தியான விதியைக் கூறுகிறார்.

இவற்றைச் செயற்கரிய செய்வார் பெரியர் என்று ஒருவரியில் திருவள்ளுவர் முன்னமே கூறியுள்ளார்.

கி.மு.முதல் நூற்றாண்டு திருவள்ளுவர் நூலும், கி.பி.19ஆம் நூற்றாண்டு மீ.சு.பிள்ளை அவர்கள் நூற்களும் நமக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை இவ்வாய்வுக்கட்டுரை விளக்குகிறது.

மேன்மொழிந்த இருவர் வாக்குகளையும் செயல்படுத்தி உயர்வடையத் தொண்டு நிறுவனங்களை ஏற்படுத்தியும், கூட்டமைப்பு ஏற்படுத்தியும், ஊர்தோறும் கோயில் தோறும் இருபெரும் புலவர் பெருமக்களின் கருத்துகளைக் கல்வியியல் பூங்காக்களாகவும், கண்காட்சிக் கூடங்களாகவும் நீர்நிலைகளாகவும் உருவாக்கியும், இணையம் வழியும் பரப்புவோமாக பரப்பின் புத்தாயிரத்தாண்டு புதிய தமிழ்மொழி, புதிய இனவளர்ச்சி ஏற்படும். தமிழர்களிடையே புத்துணர்வையும், புது மறுமர்ச்சியையும் ஏற்படுத்தி, வானுறையும் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருவள்ளுவர் ஆகிய இருபெரும் புத்தேள் புலவர்கள் மகிழும் வண்ணம் அறவாழி அந்தணன் அகத்தியன் உளம் மகிழும் வண்ணம் தொண்டாற்றி, அறம்பொருளின்பம் வீடு என்னும் நாற்பேற்றினை இம்மையிலும், மறுமையில் பொருளுக்குப்பதில் அருளை, அறம் அருள் இன்பம் வீடு ஆகியவற்றைப் பெறுவோமாக. பெற அவன் அவள் என்னும் உமாபதி உமையொரு பாகன் அருள் நமக்குக் கிடைப்பதாகுக.

தண்ணறும் முண்டகப் போதில் இருந்து உலகமாக்கிய வேதாவே இந்தக்
கண்ணகன்ற புவியில்தன்னுரு மாற்றி மக்களுக்கவினத்தாக்க
வண்ணமுறு மீனாட்சிசுந்தரமென்று ஒருநாமம் வயங்கஇன்பம்
விண்ணவரும் பெறத் தந்தி வனப்பிள்ளைத் தமிழினிதா விளம்பினனே
-உறையூர் முத்துவீர உபாத்தியாயர்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி
- உக்கிரப்பெருவழுதியார்.

மீ-10-

77. கற்றல் நெறியும் கற்பித்த திறனும்

முத்துஇலக்குமி
நிலக்கோட்டை

காலப்பதிவில் காலூன்றிய ஒவ்வொரு நாளும், திங்களும் ஆண்டும், நூற்றாண்டும் ஒவ்வொரு வகையில் வீச்சும் வீரியமும் கொண்டவை. 18ஆம் நூற்றாண்டில் அந்நியரின்-இஸ்லாமியரின் வருகையால் மக்களின் மொழி, இலக்கியம், சமயம், வாழ்வியல், பொருளாதாரம் என எல்லாவற்றிலும் ஒருவித அமைதியின்மை, குழப்பம் உருவாகியது. தமிழ்ப்புலவர்களை மன்னர்களும் ஆதரிக்கவில்லை. மக்களும் மறந்து போகும்படியான சூழல் நிலவியது. இந்நிலையில் தமிழ்க்காப்பக மடங்கள், சைவத் திருமடங்கள் தோன்றின என்பதே வரலாறு தரும் செய்தி. 14ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுரி ஆதீனமும் தோன்றின. 18ஆம் நூற்றாண்டில் திருப்பனந்தாள் காசி மடம் தோன்றியது. காலத்தால் முற்பட்டது மதுரை திருஞான சம்பந்தர் மடமாகும்.

'ஒரு புலவர் பால் பாடங் கேட்டவரேனும் பழகினவரேனும் அவருடைய பரம்பரையினரேனும் அவரது சரித்திரத்தை எழுதி வைப்பது தமிழ் நாட்டில் இல்லாமல் போயிற்று. இஃது ஒரு பெருங் குறையே' (ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம் முகவுரை-XI). இப்பெருங்குறையை நீக்கிய பெருமை தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களைச் சேரும். மகாவித்துவான் வாழ்க்கையில் டாக்டர் உ.வே.சா-விற்குத் தன்னிடம் இருந்த சிறப்பினை இவ்விரு மேதைகளின் சரித்திரத்தைப் படிக்குந் தோறும் புலனாகும்.

படைப்பாளர் கல்கிக்குச் சிவகாமியைப் பெற்றெடுக்கப் பதிமூன்று ஆண்டுகள் ஆயின என்று கூறுவர். இவண் உ.வே.சா.விற்குத் தன் குருவின் வாழ்வின் தடங்களை, தடையங்களைப் பதிவு செய்ய, படைப்பாக வெளியிட பத்தாண்டுகள் ஆயின என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையவர்களிடம் தான் பாடங்கேட்டவை உ.வே.சா. வாழ்வின் பெறுதற்கரிய பெரும் பேறாகக் கருதி உள்ளங் கிளர்ந்து உணர்ச்சி பொங்கக் குறிப்பிடுகிறார்.

இத்தன்மையினர் என்று இனங்காணலில் நட்பு மட்டுமல்ல, குடிவழி மட்டுமல்ல, கற்றலுக்குக் காரணமான ஆசானும் உண்டு. 'இவரின் மாணாக்கர்' என்று சொல்லுவதில் ஆசிரியரும், மாணவரும் ஒரு சேர நிறைவினைப் புகழைப் பெறுதல் வேண்டும். இவண் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைத் தன் மாணவன் 'வேங்கட ரத்னம்' பெயரைத் தன் விருப்பிற்கேற்பட 'சாமிநாதன்' என்று மாற்றிட,

வேங்கடரத்னமும் குருவின் வழியில் இப்பெயரை மனமுவந்து ஏற்றிட்டார். (ஸ்ரீ மீனாட்சி....ப.18) தமிழ் உலகில் 'உ.வே.சாமிநாத அய்யருக்குத் தனியிடம் மட்டுமல்ல, தனிப்பெயரே 'தமிழ்த்தாத்தா' என வழங்கும் அளவுக்கு என்றும் நிலைத்த புகழைப் பெற்றுள்ளது.

ஆசிரியர், மாணவர் பெயரையே மாற்றினார் என்றால் மாணவரோ, ஆசிரியர் பெயரைச் சொல்லுவதே குருவுக்குரிய மரியாதையில் குறைவு என்றெண்ணி அச்சத்தோடு எப்போதும் 'பிள்ளையவர்கள்' 'பிள்ளையவர்கள்' என்றே குறிப்பிடும் நயத்தக்க நாகரிகமிகு வித்தியாசமானவராக உள்ளார். தன் வாழ்வும், வாக்கும் ஆசிரியரால் தனக்குக் கிடைத்தவை (ஸ்ரீமீனாட்சி ப.9) என்ற ஆணித்தரமான அழுத்தமிகு சிந்தனைச் செவ்வி உடையவராகக் காணப்படுகிறார். ஆசிரியரால் மாணவரும் மாணவரால் ஆசிரியரும் ஏற்றம் பெறுதல் என்பதில் மகாவித்துவான் உ.வே.சா இருவரின் இணைவைக் குறிப்பிடலாம். அங்ஙனம் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சருக்கு ஒரு நரேந்தர் கிடைத்து விவேகானந்தராகி குருவுக்கு பெருமையும் புகழும் சேர்த்தாரோ (காந்தியுகம்.ப.46) அதே போல மகாவித்தவானுக்கு உ.வே.சா கிடைத்தமையால் மகாவித்துவானின் படைப்புகள் மேலும் துலக்கம் பெற்றுத் தெளிவாகத் தமிழ் உலகுக்குக் கிடைத்தன. உ.வே.சா. வின் அருமையான பதிப்புப் பணியால் மட்டுமே மகாவித்துவானின் புத்தகங்கள் வெளியாயின என்பது குறிப்பிடத்தக்கது. 'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே(ஸ்ரீ மீனாட்சி....முகவுரை)என்பதை எண்ணி இந்த மகாவித்துவானுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளேன்' என்பதே உ.வே.சா.வின் வாக்கு.

பண்டைக்காலப் பள்ளிக் கூடங்களில் மாணாக்கர்களுக்குக் குடும்பத்துக்கு வேண்டிய வைத்தியமுறைகளும், நான் பார்த்தல் சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல் வழிகளும், ஆலய வழி பாட்டுமுறை, கலாசாரங்கள் முதலியனவும், ஞாபக சக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் கற்பிக்கப்பட்டன. உபாத்தியாயர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்தனர். வாழ்க்கைக்குத் தேவையானவை என்று எண்ணப்பட்டவை அங்கு கற்பிக்கப்பட்டன. ஆசிரியர்கள் நன்னூலார் கூறியதைப் போன்று மங்கலமானவர்களாக, இன்றியமையாதவர்களாக யாவரும் மகிழ்ந்து மேற்கொள்ளும் இயல்பினர்களாக இருந்தனர். மேலும் ஆசிரியர்களது தமிழ்ப்புலமையும், நற்குணமும் நல்லொழுக்கமுமே அனைவரின் நன்மதிப்பைப் பெறுதற்குரிய காரணங்களாக இருந்தன. இத்தகு இலக்கணத்தின் இலக்கியமாகத் திகழ்ந்தார் சிதம்பரம்பிள்ளை. இவரது மகவே மீனாட்சி சுந்தரம்பிள்ளை. 'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' என்பதற்கேற்ப மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் இளம் வயதிலேயே ஆசிரியரானார். மேலும் அவரது கூர்ந்த அறிவுத் திறனும், நினைவாற்றலும் கல்விமான்களின் உரையைக் கேட்கும் பண்பும் இருந்தமையால் பாடல்களை மனனம் செய்வதில் சிறந்து விளங்கினார். மேலும் தாம் படித்த பாடல்களைச் சமயோசிதமாகப்

பிறருக்குச் சொல்லிக் காட்டி அவற்றை மட்டும் தனியே தொகுத்து ஏடுகளில் எழுதி வைக்கும் பழக்கத்தினராக விளங்கியுள்ளார்.

தந்தையார் மகனின் திறமையைப் புரிந்து கொண்டு அடிக்கடி 'சமுத்தி' கொடுத்துச் செய்யுள் இயற்றச் சொல்லியும் திரிபு யமகம் சிலேடைகளை அமைத்துப் பாடல் செய்யும்படி சொல்லியும் வந்துள்ளார். எனவே மிக இளம் பிராயத்திலேயே பாடல்களை பாடிய பெரும் புலவர் எனலாம். தந்தையாருடன் தமிழ்ப் பயிற்றுவிக்கும் இடங்களுக்குச் சென்று பாடல்களை எடுத்துரைத்துப் பொருள் விளக்கற் செய்து தனது கல்வியை மேம்படுத்திக் கொண்டார். மேலும் தந்தையார் இட்ட பணியால் மளிகைக் கடைக்குச் செல்லும் பொழுது ரங்கபிள்ளை என்பவரின் நட்பால் 'சமுத்தி' கொடுத்துப் பாடுவதும், பாடலுக்கு '2 அணா' பெறுவதும் என்பதைப் பழக்கத்தில் கொண்டு இருந்திருக்கிறார். அடுத்து, 'சொல்' என்பதற்கு 'நெல்' என்ற பொருளை அமைக்க எண்ணி அப்பொருளில் வெண்பாவை திரிமூர்த்தியுடன் சிலேடையாகப் பாடி 'ஒரு வண்டி நெல்லைப்' பெற்றார்(ப.13) என்ற குறிப்பையும் காண்கிறோம்.

பல வித்துவான்களுடன் நட்புப் பாராட்டித் தன் கற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொண்டார். திருவாவடுதுறை, பட்டீசுவரம் என ஊர்தோறும் சென்று தமிழ் நூல்களைக் கற்றார். அவ்வப்போது மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தமிழ்ப்புலவர்கள் வருகை தந்து இத்தலத்தின்மீது, இப்புராணத்தின்மீது பாடலை பாடுக என்றால் உடனே மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் வரகவியும் வற்றுதல் இல்லாது வளமான மழையாகக் கொட்டினார். இவ்வாறு பல தல புராணங்களும், அந்தாதிகளும் பிறந்தன.

சென்னைக்குச் சென்று காப்பியங்களையும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும் கேட்க விழைந்தபோது ஒரே நாளில் மூவரிடம் பாடங்கேட்கும் வகையில் தம்மை இயக்கினார். பகலின் முற்பகுதியில் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடமும், பிற்பகலில் எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியாரிடத்தும் அஸ்தமனத்திற்குப் பின்பு மயிலாப்பூரில் உள்ள திருவண்ணாமலை மடத்திலிருந்த திருவம்பலத் தின்னமுத பிள்ளையிடம் பாடங் கேட்டார். கபாலீசுவரர் கோவிலுக்குச் செல்லக் கால்கள் இழுத்தாலும் காலமில்லாத காரணத்தால் மனம் பாடங்கேட்டலுக்கு இழுக்கச் சென்று விடும் 'கருமமே கண்ணாயினார்' என்ற இலக்கின்படி விளங்கியுள்ளார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பாடலின் கண் ஐயப்பாடு வந்தால் யாராக இருந்தாலும் அவரை நாடிச் சென்று கேட்டுத் தெரிந்து கொள்வார். அதற்காக அவர் ஒருபோதும் தயங்கியதில்லை என்று உ.வே.சா. குறிப்பிடுகிறார். மேலும் வறியவனிடம் பழஞ்சுவடிப் பாடல் இருப்பதை அறிந்து அவருடன் பழகிப் பாடலைப் பெற்றார் என்பதை அறியும்போது அவரது அறிவுப் பசியின் தாகம் வேகம் புலப்படுகிறது.

பிறவியிலேயே ஒவ்வொரு மானுடப் பிறவியிடத்தும் சில உளப்போக்குகள் அமைந்துள்ளன. அவற்றை உளவியலார் 'இயல்வூக்கங்கள் (Insuincts) என இயம்புகின்றனர். இவ்வியல்வூக்கங்களின் அடிப்படையில் புதிய நடத்தைக் கற்றலின் காரணத்தால் தோன்றுகின்றன. புதிய நடத்தைச் செயலை 'பழக்கம்' (habit) என்று கூறலாம். 'கற்றல் செயலின் முடிவு பழக்கம் எனலாம் என கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற நூலில் கூறுகிறது (ப.280) இவண், மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் இயல்வூக்கப் பண்பும், வளப்பமான பழக்கமுமே (பாடலைக் கற்றல், மனனம் செய்தல், பிறருக்குச் சொல்லுதல் விளக்கம் செய்தல் என்பன போன்றவை) வாழ்வின் உயரிய நிலைக்கு உயர்த்தின என்று வரன்முறைப்படுத்தலாம்.

கற்றல் நெறியில் தனக்கெனத் தனித்துவப் போக்கினைக் கொண்ட மகாவித்துவான் தனது கற்பித்தல் முறையிலும் சிறந்த அணுகு முறைகளைக் கொண்டு விளங்கினார். 'பாடஞ் சொல்வதில் இயல்பாகவே இவருக்கு விருப்பம் அதிகம், இவருடைய கல்வி வளர்ச்சிக்கும் கவித்துவத்திற்கும் காரணம் இங்ஙனம் பாடஞ் சொல்லி வந்ததேயென்று சில பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்று உ.வே.சா கூறுகிறார். (ஸ்ரீ மீனாட்சி ப.82).

ஆசிரியர், மாணாக்கர்கட்கு எடுத்துரைக்கும்பொழுது, மாணாக்கரின் திறனறிந்து விளக்குவதோடு மாணாக்கரின் வாயிலிருந்தே விடையினைப் பெறுதல் என்ற திறமையினையும் உடைய ஒருவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகு தன்மையினராக மகாவித்துவான் மாணாக்கரிடம் விளங்கியிருக்கிறார். மேலும் 'இவ்வளவு நூல்களையும் இவர் எப்படி மனத்திற் பதித்து வைத்துக் கொண்டாரோ' என்று வியக்கும் வண்ணம் (ஸ்ரீ மீனாட்சி ... பாகம் 2) (ப.274) 'அளக்கலாகா அளவும் பொருளும்' (நன்.ப.26) உடையராக விளங்கினார்.

"ஆசிரியப் பணியை மக்கட் சமுதாயத்தை உருவாக்கும் 'மானிடப் பொறியியல் பணி' என்று கூறினும் பொருந்தும்" என்று டாக்டர் ந.சுப்புரெட்டியார் கூறுகிறார். இத்தகு மானிடப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒவ்வொரு ஆசானும் மகத்துவப் பண்புகளை உடையவராக விளங்குதல் வேண்டும். மகாவித்துவான் அத்தகு பண்பினராக விளங்கினார். எனவே தான் உ.வே.சா, 'இவருடைய வீடு கலைமகள் நிலையமாகத் திகழ்ந்தது. பல மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்வதும், தம்மைப் பார்க்க வந்த பிரபுக்களிடம் தமிழ் நூல்களிலுள்ள அருமையான செய்திகளைக் கூறி மகிழ்வித்தலும், புதிய செய்யுட்களை இயற்றுதலும் ஆகிய தமிழ்த் தெய்வ வழிபாடுகளே காலை முதல் இரவு நெடு நேரம் வரையிலும் இவருடைய வேலையாக இருந்தன' என்கிறார்.

ஆசிரியர் மனத்தில் நன்மாணாக்கர் என்ற மதிப்பைப் பெற்றவரே இடம் பிடிப்பர். மகாவித்துவான் பல நன் மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்கு உரியவர். சுப்பராய செட்டியார், ஆறுமுகந்தா பிள்ளை, சுந்தரம்பிள்ளை சவராயலு பொன்னம்பல முதலியார், சாமிநாத தேசிகர், உ.வே.சாமிநாத அய்யர் போன்ற பலராவர். உதில் உ.வே.சா மீது மகாவித்துவானுக்குத் தனித்தொரு 'அன்பு' 'ஈடுபாடு' இருந்தது. இதனை அவர் தம் செயல்பாடுகளினால் உணர முடிகிறது. சாமிநாத அய்யருக்கு ஆகாரம் உரிய காலத்தில் வழங்கப்பட்டதா என வினவுவார். (பாகம் 2.ப.17) புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் சொல்வார். (பாகம்-2,ப.62,ப.142) உ.வே.சா. வுக்காகத் தானே செய்யுள் இயற்றிக் கொடுத்து ஆறுமுகத்தா பிள்ளையிடம் கொடுக்கச் செய்கிறார் (பாகம்-2,ப.61) மேலும் பழைய மாணாக்கர் புதிய மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லுதல் என்ற மரபில், ஒருமுறை உ.வே.சா 'நாட்டஞ் சிவந்தனை' என்னும் செய்யுளில் 'சிவந்தனை நேர்ந்தேயுறும்' என்பதில் 'நேர்ந்து' என்பதற்குச் சிவமானது தன்னை ஒத்த அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் என்று பொருள் கூறினார். இதனைக் கேட்ட மகாவித்துவான், உ.வே.சா.வைத் தனியே அழைத்து 'நேர்ந்து' என்பதற்குப் பொருள் 'கொடுத்து' என்பது தான் எனச் சுட்டிக் காட்டிச் செல்கிறார் (பாகம்-2,ப.63).

இங்ஙனம் மகாவித்துவான் கற்பித்தலில் தன்னை மறந்து, அவரது அன்பென்னும் மழையில் நனைந்தவராக உ.வே.சா காணப்படுகிறார். எனவேதான் தனது 'என் சரித்திரத்தில்' மகாவித்துவானின் அன்பின் நெகிழ்வை உருகி உணர்ந்து உரைத்துள்ளார். 'அன்பை எவ்வளவு காலம் தடைப்படுத்த முடியும்? தடைப்படுத்தப்பட்ட அன்பு என்றாவது ஒருநாள் மிக வேகமாக வெளிப்படத் தான் வேண்டும். அப்போது ஏற்படும் நிகழ்ச்சிகள் ஆச்சரியமாகவே இருக்கும் (என் சரித்திரம்,ப.297) என்ற வரிகளால் அறிதற்கு இயலும்.

1.அன்றைய குருகுலக் கல்வியினால் கற்றலும், கற்பித்தலும் காலக்கணக்கின்படி நடைபெறவில்லை. எனவே குரு-மாணாக்கர் உறவில் நெருக்கம் மிகுதி. மாணாக்கர் குருவை அணுக்கமாகக் கொண்டு நுணுக்கமான கருத்துக்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

2. இத்தகு உறவு, உணர்வு எக்காலத்திற்கும் எந்நாட்டவருக்கும் எம் மொழியினருக்கும் வேண்டப்படுவது. இன்றைய 'சென்று தேய்ந்து இறுதல்' நிலையை உணர்ந்து 'ஆசிரியர்' தன் ஆளுமையை உயர்த்த முன் வரவேண்டும்.

3.நன்னூலார் கூறும் ஆசிரியர், மாணாக்கர் இலக்கணத்தைக் கேட்டுள்ளவர்கட்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள் முறையே மகாவித்துவானும், உ.வே.சா. வும் என்பதைச் சரித்திரங்களைப் படிக்குந்தோறும் புலனாகும்.

4. 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்றும், 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என வாழ்வியல் வழிகாட்டுகளாகவும் கூறுதலுண்டு. மேலும் 'குரு பிரம்மா, குரு விஷ்ணு, குரு தேவோ குரு மகேஷ்வர நமஹ' என்று வழிபடுதலும் உண்டு. இவண் உ.வே.சா. தனது குருவை இறைவனாக ஏற்று, வாழ்வியல் வழிகாட்டியாகக் கொண்டு, வழிபாடு செய்து வணங்கி வந்தார். இத்தகு போற்றுதலுக்கும் வணங்குதலுக்கும் உரிய உயரிய ஆசானாக மகாவித்துவான் காட்சியளித்தார்.

5.ஆசிரியரின் சிறப்பினை உணர்ந்த ஆசிரியர் டாக்டர் இராதா கிருஷ்ணனின் பிறந்த நாள் ஆசிரியர் தினமாயிற்று. ஒவ்வொரு நாளும் ஆசிரியருக்குரிய நாள் என்ற உணர்வோடு ஆசிரியர்கள் தம் கற்றலிலும் கற்பித்தலிலும் தங்களை மாணாக்கர் இனங் காணும்படி மகாவித்துவான் வழி நடப்பாராயின் பல உ.வே.சா.வினர் தோன்றலாம்.

78. திருவிடைமருதூர் உலா

பொன்.முத்தையன்
கும்பகோணம்

தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளம் மிக்கது. ஈராயிரம் ஆண்டுகால வரலாறுடையது. உயர்தனிச் செம்மொழி. உலா, தூது, பரணி, கோவை ஆகியன சிற்றிலக்கியங்கள். இவை தொண்ணூற்றாறு வகையின. பாட்டுடைத் தலைவன் பலவகைக் கோலங்களுடன் தேர்மீது உலாவரும் போது, வீதிகளிலுள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறான ஏழு பருவத்து மகளிரும், அத்தலைவனைக் கண்டு காமுற்றதாகக் கலி வெண்பா யாப்பில் பாடப்படுவது உலா இலக்கியம், இதனை உலாப்புறம் என்றும் வழங்குவர்.

தெய்வங்கள் மீதோ, ஆசாரியர்கள் மீதோ அல்லது வள்ளல்கள் மீதோ புலவர்கள் பல்வேறு சமயங்களில் உலா நூல்கள் இயற்றியுள்ளனர். இவ்வகையில் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருக்கயிலாய ஞான உலா' 'ஆதியுலா' என்று ஆன்றோரால் பாராட்டப்படுகின்றது. 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்ற தொல்காப்பிய நூற்பா, உலா நூல்கள் தோன்ற அடிப்படையாகும்.

உலா அமைப்பு

உலா நூல்களில் பொதுவான ஓர் அமைப்பு உண்டு. முதற்கண் பாட்டுடைத்தலைவனின் பெருமை திருமஞ்சனச் சிறப்பு அவன் ஏறி வரும் ாகனச் சிறப்பு, உடன்வரும் குழாங்களின் பெருமை ஆகியன விளக்கமாக அமையும். அடுத்து முறையே உலாக் காணும் பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெ.ஂ என்ற ஏழு பருவ மகளிர் தலைவனைக் கண்டு காமுற்ற இயல்புகள் அவ்வப்பருவத்து மன நிலைக்கு ஏற்றவாறு கற்பனையுடன் கூறப்படும். எனினும் அந்தந்த நூலாசிரியர்கள் திறத்திற்கேற்ப, உலா நூல்கள் சிறப்பால் வேறுபடும்.

நூலாசிரியர்

திருவிடைமருதூர் உலா, திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது. திருவிடைமருதூர்த் திரிபந்தாதி, மருதவாணர் பதிகம் ஆகியனவும் அவர் பாடியனவே. உலா நூல் என்ற அமைப்பில் அவர் இயற்றியது இந்த ஒன்றே எனலாம்.

சாமிநாத தேசிகர் என்பாருக்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவிடைமருதூர்ப் புராணத்தினைப் பாடஞ் சொல்லி வந்தார்கள். அக்காலத்தில், பிள்ளையவர்கள் மனம், மகாலிங்கப் பெருமானிடம் பெரிதும் ஈடுபட்டது. இக்குறிப்பறிந்த அன்பர் சிலர் வேண்ட, !மகாவித்துவான் இந்த உலாவைப் பாடினார். அரிவைப் பருவத்துடன் உலா நின்றுவிட, தஞ்சை முத்துசாமிப்பிள்ளை என்பார் உலாவினை நிறைவு செய்யுமாறு வேண்ட,

பிள்ளையவர்கள் கரந்தைத் திருவாவடுதுறையாதீன மடத்தில் தங்கி நூலினை நிறைவு செய்தார். கி.பி. 1870 இல் திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப் பெருமான் திருமுன்னர், கட்டளை விசாரணை சிவதாணுத் தம்பிரான் சுவாமிகள் முன்பு உலா அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று பிள்ளையவர்கள் சரித்திரம் கூறுகிறது. பிள்ளையவர்களில் மாணவர், திரிசிரபுரம் சி.தியாகராச செட்டியார் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார். அதன்கண், அவர், பிள்ளையவர்களை 'மீனாட்சி சுந்தர நாவலரேறு' என்று பாராட்டுகிறார்.

இறைவன் இயல்பு

நூலின் முதற்பகுதியாக அமையும் இறைவனின் திருவுருவ வேறுபாட்டுச் சிறப்பு தத்துவச் செறிவுடன் அமைந்துள்ளது. எல்லாம் வல்ல எம்பெருமானின் இறையாண்மைத் திறம், தோற்றப்பொலிவுடன் சுட்டப்பெறுகிறது. நான்முகனும், இந்திரனும், மாலவனும் வானோரும் ஏனோரும் இன்பமுற, இறைவன் ஐந்தொழிலாற்றுகின்ற அருள் மேகமாக உள்ளானாம் என்றாலும் தனக்கென அவனுக்கோர் தொழில் இல்லையாம்

ஐந்தொழி லாற்று மருட்கொன்ற - ஐந்தொழில்
சந்ததமுஞ் செய்துந் தனக்கோர் தொழிலில்லான் (2,3)

மங்கை உமையாளுடன் கலந்தும் விகாரமிலான். துன்னி எவற்றுந்தோய்ந்தும் அவன் தோய்விலான். மண் முதலான வடிவமெல்லாம் அவனாக இருப்பினும் தனக்கோர் உருவமில்லானாம். எத்தத்துவங்கட்கும் எட்டாத, தத்துவாதீதனாக இறைவன் உள்ளானாம். இவ்வாறு இறைவனுடைய தன்னேரிலாத தன்மைகளைப் பிள்ளையவர்கள் பாடுகின்றார்.

உலாவந்த பேரழகு

இறைவனாம் மகாலிங்கப் பெருமான் உலா வருகின்றான். தேரும், பரியும், சிவிகையும், யானையும், பிறரும் வர, ஆலவட்டம் மொய்ப்ப, வெண்குடை விளங்க, பதலை, முழவம் முதலான பல்லியம் கண்ணுதலான் உலா வந்தானாம், பெருமான் உலாவந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியன்றோ. 'காணக் கண் கோடி வேண்டுமன்றோ' இதோ பிள்ளையவர்கள் பாடுகின்றார்.

கண்ணுடையான் வந்தான் கருதுமொரு பாகம்
பெண்ணுடையான் வந்தான்! பிரான்வந்தான் (244)

நல்லா ரணியாக நாயகன்வந் தான்புலமை
வல்லா ரணமருத வாணிவந்தான் (246)

சாவாம னஞ்சுண்ட தம்பிரான் வந்தானெம்
மூவா முழுமுதன் மூர்த்திவந்தான் - தாவாத (248)

பொவினம் பலத்தாடும் புண்ணியன்வந் தானென்று
சின்னம் பலவுமெதிர் சேவிப்ப (249)

இறைவன் உலாவந்தானாம்! கண்பெற்ற பேறு இதன் பேறுண்டோ?- இதனைக் காணாத கண் என்ன கண்ணே! கண்டார்தம் கண் என்ன கண்ணே! என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா.

உடன்வந்தோர் பெருமை

மகாலிங்கப்பெருமான் உலாவரும்போது பலரும் உடன் வருகின்றனர். இந்திரன், மால், பிரமன், இலக்குமி, கலைமகள், தமிழ் பாடிய சம்பந்தர், கடல்மிதந்த வித்தகனாம் கலை மலிந்த நாவரசர், தம்பிரான் தோழர், ஆண்டகையாம் மணிவாசகர் முதலான பலரும் உடன் வருகின்றனராம், அம்மட்டோ, மெய்கண்ட சந்தானம் தழைக்க வந்த குரவர் போரேறு, ஞானம் திகழ்வரும் ஆனந்தச் செல்வனாம், திருவாவடுதுறைவாழ் நமச்சிவாய தேவனும் வரமணியாம், பதினாறாம் பட்டத்துச் சுப்பிரமணிய தேசிகரும் உடன் வந்தாராம், சைவ மாமணியாம் பிள்ளையவர்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவரின் வழிவந்தவரல்லவா! ஆவடுதுறைவாழ் குருமணியை எப்படிப் பாடுகிறார் பாருங்கள்.

பண்பார்கை லாய பரம்பரை மெய்கண்டான்
நண்பார்சந் தான நனி தழைக்க - விண்பார்
புகழ வருங்குரவர் போரேறு ஞானந்
திகழ வருமானந்தச் செல்வன் - இகழ்வில்
துறவுபூன் டோர்பலர்க்குஞ் சூளா மணிமிக்க
உறவுபூன் டெள்வுயிறு முன்மை - பெறவைக்கும்
ஞான வினோதனுயர் நாவலர்தம் போரேறு
சான முடையார் தனித்துணைவன் - மானத்
திருவா வடுதுறைவாழ் செல்வன் கருணை
மருவா வருநமச்சி வாயன் - பொருவா
வரமணியென றெல்லோரும் வாழ்த்தப் பொலிசுப்
பிரமணிய தேசிகனம் பெம்மான்-பரவுமுண்மை
தாங்க பெருஞ் சித்தாந்தசைவக் குழாங்கனெ
ஓங்குதிருக் கூட்டத்துடன் மேல (230-36)

ஏழு பருவ மகளிர் தம் இயல்பு

பேதையின் அழகு

மதிப்பிஞ்சு, இளங்கிள்ளை, இவர்ச்சியுறாத குயில், இளந்தென்றல் என்று பேதையை அறிமுகப்படுத்தும் புலவர்.

என்மார்பி னில்லா னிரண்டு புடைப்பன்னாய்
நின்மார்பி பூற்றமைசொ னீயென்பாள்
நடந்தனேன் யான்நீ நடந்திலை பெண்வாவாய்
இந்தகுறை யென்னென்று கேட்பாள்-உடைந்திடுமுன்
வல்லையே பாலிம் மரப்பாவைக் கட்டமுலை
யில்லையே யாற்கொடுப்பா ரென்றழுவாள்-வல்லார்

எழுதுமொரு பூசையைக்கண் டின்றே கிளிக்குப்
பழுதுவரு மென்றோட்டப் பாரிப்பாள் - (330,332-34)

எனப்பாடுவது, புலமை நயத்துடன் உளவியல் சார்ந்த சிறப்பும் உடையது எனலாம்.

மங்கை நல்லாள்.

மங்கைப் பருவத்தாள் மாசிலாத பேரழகி. அவள் அலையில் பிறவாத அமுதமாம்! மலையில் பிறவாத வைரமாம்! காமதேனுவாம்! அவள் தன் தலைமீது பூச் சொருகும்போது இளைஞர் மனத்தினையும் சேர்த்துச் சொருகி விடுவாளாம். அவள் கண்கள் காதல் மிக்கவை. உண்டவிடத்தினை மீண்டும் சிவன் உமிழ்ந்து விட்டானோ? என்று மாலும் பிரமனும் அஞ்சுகின்ற அழகிய கண்ணாள் என்று பாடுகிறார்.

மடந்தை நல்லாள்

மடந்தைப் பெண்ணாள் காமன் தன் வெற்றிக்கொடி போல்வாள். அவன் செங்கோலன்ன செவியுடையாள். அவன் குடை போன்ற கொங்கையாள். முற்றும் துறந்த முனிவர்களும் அவள் புன்னகைக்கு முன் மண்டியிடுவர். இத்தகு காமச் செல்வியாம் மடந்தையின் முகம் தாமரை. மைக்கண் குவளையாம், செவ்வாய் கழுநீர்ப் பூவாம்! காதுகள் வள்ளை போலாம். கூந்தல் பாசியாம், கழுத்து சங்குப் போலாம். நீர்ச்சுழியன்ன கொப்பூழ். அவள் வயிற்றில் அலை போன்ற மடிப்புண்டு. நண்டு போன்ற முழங்கால். கணைக்கால் வரால் போன்றன. புறங்கால் ஆமை போன்றதாம், ஒட்டு மொத்தமாக, காமத்தாகம் கொண்ட ஆடவர் குழாம் முழ்குகின்ற காதல் தடாகம் என்று மடந்தையின் அழகின் உருவகப்படுத்தும் இடம் சுவைநலன் மிக்கது.

அழகுருவாம் அரிவை

அரிவை எனும் பெண்ணாள் ஓர் அழகோவியம் போல்வாள். அவள் கூந்தல், இளையான்குடி மாற நாயனார் நெல்முனை வாரிய கங்குல்போல் இருண்டது. புருவமோ, கண்ணப்பர் வில் போன்றது. கோட்புலியார் வாள்போல் கொடுங்கண்ணாள். அப்பூதியார் அமைத்த தடாக வள்ளைபோல் காதினாள். கணநாதர் நாதவனச் சண்பகம் போல் நாசியாள். இவ்வாறு அவள் மேனியழகுக்கு, நாயன்மார்களின் தொண்டுகளை ஒப்பிட்டுப்பாடும் திறம் போற்றுதற்குரியது. அவள் வீணை தொட்டுப் பாடினாளாம். மூவர் தமிழும், வாசகத்தமிழும், வழுதியின் வண்டமிடும் இன்ன பிறவும் கலந்து அவள் பாங்கி பாடினாள் என்று பாடும் இடம் இன்பக்கேணியெனலாம்.

தெரிவை நல்லாள்.

தெரிவை என்ற தேன்மொழியாள் புரிகுழலாள். மதிநெற்றியாள். அறிவாட்டாயர் வைத்த மாவடு அன்ன கண்ணாள். அவள், பெருமானுடைய பல்வேறு செயல்பாடுகளில் உள்ள முரண் எண்ணி வியக்கின்றாள். பொன்மலையைக் குழைத்த பிரான் அம்மை தழுவக் குழைந்தது வியப்பன்றோ! ஒருடலில் ஆண் பாதி, பெண் பாதி அமைந்தது

வியப்பன்றோ! பகையான பாம்பினையும் சந்திரனையும் தன் தலைமீது பக்கமாக வைத்தது வியப்பன்றோ, பொன் மண் புனையாற அப்பெருமான் எலும்பும், மண்டையோடும் புனைவதுதான் என்னே! என்று பலவாறு வியக்கின்ற மடந்தை, அவர்பால் கொண்ட காதலால் மெலிகின்றாள் என்றும், காதல் மயக்கத்திலிருந்த தெரிவைக்குத் தோழி கூறிய மருதவாணரின் பெருமை தெப்பமாக உதவின. அவள் கரையேறினாள் என்று கனிந்து பாடுகின்றார் கோவித்துவான்.

பெருமைமிகு பேரிளம் பெண்

பேரிளம் பெண் ஏழு, பருவ மகளிருள் அகவையால் மூத்தவள் அவள். கூந்தல் நிறம் குமரி இருட்டுப் போலாம், வதனமோ, சுதிருதயமாகும்போது மறையும் பேரொளிச் சந்திரன்வாலாம். கண்ணுக்கு மைதீட்டும் ஆர்வமிலாள் வளையலணியாது உருத்திராக்கமாலை அணிந்துள்ளாள். அவள் தோழி, பருப்பதம், துருத்தி, ஆலங்காடு, மேருலை, கச்சி, ஆரூர், தில்லையம்பலம் என்று பல தளங்களிலும் உளைகின்ற ஈசனாம் மருதவாணி புகழ்பாடி, மருத வட்டமாம் இடை மருதூர் யாதுண்டோ? இவ்வூரில் பிறந்த நம்மினம் மேலார் யார்? நமக்கு என்ன குறை, என்று பாட, பேரிளம் பெண்ணாள், உலாவந்த உலகமுதல்வனாம் பெருமானைக்கண்டு பணிந்தாள். 'கடல் விடம் உண்டவரே! கடல் எம்மை முனியுமோ? நும் கடைக்காட்டில் மதி இருந்தால் எமை அது வெகுமிடுமோ? வேய்முத்த மானவரே! உம் வாய் முத்தம் எவை வாட்டுமோ? நீர் ஏறும் போரேற்றின் மணி எம்மை வருத்துமோ? வரமணியாம் சுப்பிரமணிய தேசிகனையடைந்து நான் திறமடைவேன். அவரும் நீயும் ஒளிறென்கிறாரே! இது எவ்வாறு? அவர் யோகி. நீரோ மாதணைந்த போகி! எனையகலாதீர்! என்ற பலவாறு இரங்கினாள். இறைவன் தேர் அப்பால் நகர்ந்தது என்கிறார் புலவர். இவ்வாறு இவ்வுலாவில் இறைவனைக் கண்ட ஏழுபருவ மகளிர்தம் இயல்புகளும் பேசப்படுகின்றன.

இனிய தொடர்கள்

இவ்வுலாவில், பொருளமைதி சான்ற இனிய தொடர்கள் பல இடம் பெறுகின்றன. அவை கற்போர்க்குச் சொல்லின்பம் நல்குவன. நூலாசிரியருடைய சொல்வன்மையினை நன்கு உணர்த்துவன. காப்புப் பாடலில், இத்தலத்து ஆண்ட விநாயகரை 'ஆண்ட மாதங்கம்' என்கிறார். இறைவனை 'ஐந்தொழிலாற்றும் அருட்கொண்டு'(2) என்கிறார். மேலும், 'தெய்வப்பெருமான் சிவபெருமான் (75) மருதவாணி (138) சாவாமல் நஞ்சுண்ட தம்பிரான் (249) பிரவைகுஞ்சரம் (261) 'தன்னையருச்சித்த தம்பிரன்' (52) என்றெல்லாம் இறைவனை விளிக்குந்தொடர்கள் மிக்க இன்பம் தருவன.

திருவிடை மருதூர்த் தல புராணச் செய்திகள், தேவாரமூவர், மணிவாசகர், அறுபான் மும்மையடியார்கள், தொகையடியார்கள் பற்றிய செய்திகள், சிவனுடைய சிறப்புணர்த்தும் புராணச் செய்திகள் போல்வன. இவ்வுலாவில் தக்க இடங்களில் சிறப்பான விளக்கம் பெறுகின்றன. திருவிடைமருதூரில்

மருதமரம் தலமாம். இதன் சிறப்பினைக் கூறவரும் பாவலர்,

வாசிசர் போல வருந்தித் தமிழ்நாட்டீர்
ஏகிரெனவந் திருத்ததுபோல்-வாகார்
திருப்புவன முற்றுஞ் செழுமறைகள் யாவும்
விருப்புமிக நின்றேத்தும் வெள்ளிப்-பொருப்புப்
பெருவளவர் நாட்டின் பெரும்புண் ணியத்தால்
ஒருமருத மாகியவ னூற்ற(து) - (30-32)

என்கிறார். 'நாவரசர்போல், கயிலாயம் வரை, வருந்திச் செல்ல வேண்டா. கயிலாயமே இத்தலத்தில் மருத மரமாகியுள்ளது வந்து காண்பீர்' என்கிறார் பொருத்தம்தானே?

தீர்த்த விசேடம் சிறப்பாக அமைந்துள்ளது. கலியாணதீர்த்தம் (காவிரி)காக தீர்த்தம் முதலான இத்தலத்தின் தீர்த்தங்களில் மூழ்கி நீராடினோர் பேரின்பப் பேறு அடைவர் என்கிறார்.

பண்ணிய தீர்த்தமுதற் பத்துந்தோய் வார்பிறப்பை
மண்ணி யருளு மகாலிங்கமே - (85)

என்கிறார். இவ்வாறெனில், இத்தலத்திற்கு வந்து, தீர்த்தமாடித் திருவருள் பெற யார்தான் விரும்பமாட்டார்? இவ்வாறு பல சிறப்புக்கள் இந்நூலில் இடம்பெறகின்றன.

இலக்கியச் சுவை

மீனாட்சி சுந்தரம்பிள்ளை செஞ்சொற் புலவர். சீரிய, கூரிய தீஞ்சொல் வல்லவர். அவர்தம் புலமை வளத்தால் இவ்வுலா மெருகேறிய பொன்னாரமென மின்னுகிறது. சிறுசெய்தியும், அவர் சொல்லும் அழகால் சுவை நலத்தில் உயர்ந்து விடுகிறது. இதற்குப் பல சான்றுகள் காட்டலாமெனினும், ஒன்றிரண்டனைக் காண்போம், பேதைப் பெண் தெருவில் விளையாடிக்கொண்டிருக்கிறாள். மாட மாளிகைகள் சூழ்ந்த தெருவில், மணலில் அவள் சிறுவீடுகள் கட்டி விளையாடுகிறாள். இதனைப் புலவர்பிரான்,

-தெருவில்
நெருங்கப் புகுந்து நிறைகல்வி யான்றோர்
சுருங்கச் சொலன்முதலாத் தோற்றி-ஒருங்கு
பொருள்புணர்த்திப் பாடப் பொலிசெய்யுள் முன்னந்
தெருளுணர்ச்சி சாலாச் சிறியர்-மருள்வகையிற்
பாடுகின்ற செய்யுளெனப் பற்பலவாஞ் சிற்பமேலாங்
கூடுகின்ற மாடக் குலமுன்னர்-நீடுபெரு
வீடுசிறு வீடென்று மேன்மை பூறவியற்றிக்
கூடு மவர்முனையிங் கோலமென- (342-45)

எனப்பாடுகிறார். கற்றார்தம் பாடல்கள்முன் கல்லாதார் பாடல்கள் போன்று மாட மாளிகைகள் முன்னர் பேதை மணலில் வீடுகள் கட்டி

விளையாடினாளாம். உவமைநயம் நுட்பமானது.

பெதும்பைப் பருவத்திலொரு காட்சி. இறைவன் அமர்ந்த பல தலங்களைப் பாடுகின்ற புலவர்,

பிறந்தார் பிறவாத பேரூரும் நாளும்
இறந்தா ரிறவாத வூரும்-சிறந்த நலத்(து)
ஆட்டை விரும்பியடு புலியும்-ஆடரவும்
ஒட்டைப் பாமலு துறையூரும் - (393-94)

எனக் குறிப்பிடுகின்றார். பிறந்தார் மறவாத பேரூர் திருவாரூர். இறந்தார் இறவாத ஊர் காசி. திருவாரூரில் பிறக்க முத்தி. காசியில் இறக்க முத்தி, ஆட்டை என்பது நடனம், ஆடு என இருபொருள்படும். சுடுபுலி என்பது சொல்லும் புலி, ஆடு;புலி என இருபொருள்படும்

பேதைப்பெண்ணின் தோற்றத்தை விளக்கும் புலவர் பெருமான்.

முற்று தமிழ்விரகர் முன்மைணர் வாதம்போல்
உற்றுமுடிக் கப்படா வோதியாள்- (335)

என்றும், பெதும்பையின் கூந்தல் முடிப்பை,

-நீடுசண்பை
நாட்டிறைவ னசெண் ணகத்தமண ரைச் செயல்போற்
கூட்டி முடித்த குழலினாள் - (376)

என்றும் கூறுகிறார். பேதையின் கூந்தல் சரியாக முடியாமலிருந்தது என்றும், பெதும்பையின் கூந்தல் நன்கு முடிக்கப்பட்டிருந்தது என்றும் கூறுகின்ற புலவர், முன்னதற்குச் சமணர்களின் வாதங்கள் சம்பந்தர் முன்னே முழுமைபெறாமல், முடிக்கப்படாத நிலையினையும், பின்னதற்குச் சமணர் அனைவரையும் ஒருசேர ஞானசம்பந்தர் அழித்ததனையும் உவமையாய்ச் சொல்லுகின்றார். சம்பந்தர்-சமணர்வாதத் தன்மைகளை இங்கு ஏற்றாற் போன்று எடுத்தாண்டு கவி இன்பம் தருகிறார். வரலாற்றுச் சிறப்புடன் அமைந்த உவமை இன்பம் இது.

மடந்தையின் இயல்புகளைச் சொல்லும்போது, காமநோய் கண்ட அவள் பலவாறு பெருமானை எண்ணிப் புலம்புகிறாள். அப்போது-

சடைமே லதுகொடுத்தாற் றத்துதிரைக் கங்கை
விடைமேலீர் நும்மை வெறுப்பண்-அடையும்
இடத்தோ ளதுகொடுத்தா லெவ்வலகு மீன்ற
மடப்பாவை கோபநுமை வாட்டும்-அடுத்த
வலத்தோ ளணியன் மருவ வளித்தால்
சொலத்தா னொருவருண்டோ? சொல்லீர்! (526-528)

என்கிறாள்! இறைவரே! உம் தலையிலுள்ள மாலையை எனக்களித்தால் கங்கை எம்மைச் சினந்திடுவாள். இடது தோள் மாலையைத் தந்தால்

அம்மைக்குச் சினத்துக்கு ஆட்படுவீர்! வலது தோள் மாலையினை எனக்களித்தால் ஒருவரும் உம்மைக்குறை சொல்ல இயலாது! தருவீரா? சொல்லுக என்கிறாள். மிக நயமான சுவை நல்கும் இப்பகுதி, நமக்கு,

கங்கை காணக்கொடார் முடிக் கண்ணியை
மங்கை காணக்கொடார் மணமாலையை

என்ற இத்தலத் தேவார பகுதியை நினைவூட்டினால் அது வியப்பில்லை.

இவ்வாறு திருவிடை மருதூர் உலாவில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பண்ணாற்புலமையும், பக்திமையும், திருவாவடுதுறை ஆதீனத்தின்பாலும் பதினாறாம் பட்டம் சுப்பிரமணிய தேசிகர்பாலும் கொண்ட இடையறாப் பேரன்பும் நன்கு வெளிப்படுகின்றது. மருதமாணிக்கத் தீங்கனியாம் மகாலிங்கப் பெருமாள் மீது மகாவித்துவான் பாடிய திருவிடைமருதூர் உலாவை நாமும் சுவைத்து மகிழ்வோம்.

மடைமருதீ சனைப்பணிதற் கொருவர்
எண்ணூற்றெழுந்திடில் அங்கவர்வினையும் எழுந்துநிற்கும்
நடையுறில் அவ்வூர்நோக்கிப் புறவூர் நோக்கி நடக்கும்
அது செல்லாமல் அவர்கள் ஏகத்
திடமிலராய் உடனொருகால் திரும்பினாலும்
சென்றவினை சென்றதேயாம்!
புடவிபுகழ் காசியினுற்றிலகு கங்கைப் புனல்படிந்து
வருபலன் மற் றவருக்கெய்தும்

-மருதவனப்புராணம்.

79. செட்டிநாடும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும்

தெ.முருகசாமி
காரைக்குடி

அடுத்த தலைமுறைக்கன்றி அடுத்தடுத்த தலைமுறையினர்க்கும் தம்மையே முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்ட (அர்ப்பணித்துக் கொண்ட) வாழ்வும் வாக்கும் உடையது மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வரலாறாகும். அன்னாரது வாழ்வில் தொடர்புடைய பல பகுதிகளுள் செட்டிநாட்டுப் பகுதியுடன் கொண்ட தொடர்பு குறிப்பிடத் தக்கதாகும், இது பற்றிக் கூறும் இக்கட்டுரையில் செவி வழியானதும் அச்சிட்டுப் பதிவானதுமான செய்திகள் தரப்பெற்றுள்ளன.

தென்பொதிகையிலிருந்து தென்றலொடு தமிழ் பிறந்ததைப் போலச் செட்டிநாட்டுச் சீமையிலிருந்து இருபதாம் நூற்றாண்டில் சைவத்தொடு தெய்வத் தமிழும் புது பரிமாணத்தைப் பெற்றது. செட்டிநாட்டுத் தனவணிகப் பெருமக்கள், பல தமிழ் அறிஞர்களை ஆதரித்தார்கள். பாரதியார், மு.இராகவையங்கார், விபுலானந்தர், சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன் போன்றோரை ஆதரித்ததால் பல தமிழ் நூல்கள் வெளிவந்தன. இந்த அறிஞர் தம் வரிசையின் முன்னோடியாகத் திகழ்பவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆவார்.

சரசுவதியும், இலக்குமியும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. என்பதற்கேற்பக் கலிகாலக் கம்பராகத் திகழ்ந்த பிள்ளை அவர்களுக்கு அடிக்கடி பொருள் முட்டுப்பாடு நேர்ந்ததை அவர்தம் சரிதக் குறிப்பு கூறுகிறது. பொருள் முட்டுப்பாடு ஏற்பட்ட ஒரு சமயத்தில் பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்ட தேவகோட்டை நாராயணன் செட்டியார் என்பவர் பிள்ளை அவர்களுக்குப் பொருள் வருவாய் கிடைக்கும் வண்ணம் செய்விக்க விரும்பினாராம். அதற்கேற்பப் பாண்டி நாட்டில் நகரத்தார் வாழும் வட்டகையினுள் (ஊர்களுள்) சிவத்தலங்கள் சிலவற்றிற்குப் புராணம் இயற்றுவிக்கப் பிள்ளை அவர்கள் செட்டி நாட்டுப் பகுதிக்கு வரவழைக்கப் பெற்றார். இந்தக் குறிப்பைப் பிள்ளையின் சரித்திரம் எழுதிய உ.வே.சா 'நகர வைசியப் பிரபுக்கள் இக்கவிஞர் கோமானது பெரும் புகழை அறிந்திருந்தவர்களாகதலின் நாராயணன் செட்டியாருடைய முயற்சிகள் பயனுற்றன' எனக் குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டின் பிறபகுதிகளில் புராணம் பாடியது போல செட்டி நாட்டிலும் புராணம் பாடியுள்ளார். ஆனால் இவற்றிலுள்ள ஒரே ஒரு வேறுபாடு யாதெனில் பொருள் முட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டாகப் பிள்ளை அவர்கள் செட்டிநாட்டுக்கு வரவழைக்கப்பட்டார் என்ற குறிப்பு அவர் தம் சரித்திரத்தில் வேறெங்கும் காணப்பெறாத ஒன்றாக உள்ளது. இதனால் அவர் பொருளுக்குப் புராணம் பாடினார் என்பதாகக்

கருதக்கூடாது. அவரது புலமை மதிக்கப்பெற்று ஆதரிக்கப்பட்ட நிலையில் புராணங்கள் வெளிவந்தன என்பதே மேலோங்கிய உண்மையாகும். சடையப்பரின் ஆதரவு இல்லாமலிருந்திருந்தால் கம்பநாட்டாழ்வாரின் தமிழை நாம் இழந்திருப்போம் என்பது போல நகரத்தாரின் ஆதரவு இல்லாமலிருந்தால் செட்டிநாட்டுப் பகுதியில் பிள்ளை அவர்களின் தமிழைத் தமிழிலக்கிய உலகம் இழந்திருக்கும் என்பதோடு நகரத்தாரின் வள்ளல் தன்மையின் ஒரு கூறான வரலாற்றுண்மை வெளிப்படாமலே போயிருக்கும் என்பதும் உண்மையாகும்.

மன்னர் பின்னோர் எனச் சிலப்பதிகாரம் பாராட்டும் தல வணிகப் பெருமக்களை நாட்டுக்கோட்டை நகரத்தார் எனக் கூறுவர். அவர்கள் ஒருசேர வாழும் பகுதி செட்டிநாடு எனப்படும். இச்செட்டிநாட்டில் காரைக்குடியும், தேவகோட்டையும் சிறந்த நகரங்கள் ஆகும். குறிப்பாகக் காரைக்குடியை மையமாகக் கொண்ட வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கு எல்லைக்குள் உள்ள ஊர்கள் பற்றிய புராணங்களைப் பிள்ளை அவர்கள் பாடினார்கள்.

காரைக்குடிக்கு மேற்கே உள்ளது கோயிலூர். இங்கு சிவகங்கை சமஸ்தானத்துக்குச் சொந்தமான பழம்பெரும் சிவாலயம் உள்ளது. மேலும் நகரத்தார்க்குச் சொந்தமான அவர்களின் ஆளுகைக்கும் ஆதீனக்கர்த்தர் தலைமைக்கும் உட்பட்ட பெரிய வேதாந்தத் திருமடமும் ஒன்று உள்ளது. திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசர் திருக்கோயிலின் பழமையைப் புதுப்பித்து திருப்பணி செய்த பெருமை நகரத்தார்க்கே உரியது என்றாலும் திருமடத்தைத் தோற்றுவித்து திருக்கோயிலைப் பொலிவு பெறச் செய்தவர்கள் நகரத்தார் மரபைச் சார்ந்த முத்துராமலிங்க ஆண்டவர் சுவாமிகள் ஆவார்கள். அவர்களது அருளாட்சிக்குப் பின்னர் ஆதீனக் கர்த்தராக வீற்றிருந்த ஸ்ரீ சிதம்பர ஐயாவின் காலத்தில் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் கோயிலூருக்கு வரவழைக்கப் பெற்றார். ஸ்ரீ சிதம்பர ஐயாவின் விருப்பப்படி கோயிலூர்ப் புராணம் பாடப்பெற்ற குறிப்பைப் பிள்ளை அவர்கள்,

மேலாய துறவினுக்கோர் துணையாகி யுள்ளான்.............
சிதம்பர தேசிகன் எனும் மாபெரியோன்....... கழனியம்பதியின்
மேவுங் கொற்றவாளீசர் தெய்வமான்மிய ஆரியத்தை ....
தமிழினாலே பாடிந் தருதி என்றான் .... செப்பிடலுற்றேன்

என அவையடக்கப் பாடல்களில் கூறியுள்ளார்கள். மேலும் திருநெல்லையம்மனின் சந்நிதி முன்னர் முத்துராமலிங்க ஆண்டவரின் திருவுருவச் சிலை உள்ள குறிப்பும் புராணத்துள் பதிவு செய்து பாடப்பட்டுள்ளது. இக்குறிப்பை நகரத்தாரின் சிவபக்தியை வெளிப்படுத்திக் காட்டும் குறிப்பாகக் கொள்ள வேண்டும்.

குலவுவெங் காம மாதி கொடும்பகை ஒழித்தல் வேண்டின்
நிலவுபே ரருள்சால் எங்கள் நெல்லைநா யகிமுன் இவ்வாறு
உலவுமெய் யன்பின் வ்ழ்ந்து கிடமின்என் றுணர்த்தல் போலக்
கலவுத லொடுகி டப்பான் கருதுமோர் பெரியோ னம்மா.

பீ-11.

ஆண்டவரின் சிலை அம்மனின் திருப்பாதத்தைத் தரையில் விழ்ந்து வணங்குவதைப் போல செதுக்கப்பட்டுள்ளது. அந்தந்த ஆலயக்குறிப்பை அருளாளர்கள் ஆங்காங்கே சென்று கேட்டறிந்து பாடிப் பதிவு செய்துள்ளது போலவே பிள்ளையவர்கள் இக்கோயிலூர் புராணத்தில் நகரத்தாரின் செய்தியைப் பதிவு செய்துள்ளார் எனலாம்.

காரைக்குடிக்கு வடமேற்கே காரைக்குடியிலிருந்து காளையார்கோவில் ஊருக்குச் செல்லும் குறுக்கு நெடுஞ்சாலையில் உள்ளது சூரைக்குடியாகும். சூரிய பகவானால் வழிபடப்பெற்ற கயற்கண் அம்மை உடனாய சங்கரநாதர் திருக்கோயில் பற்றிய வடமொழி நூலைப் பிள்ளை அவர்கள் தமிழில் புராணமாகத் தந்தார்கள். இங்ஙனம் இந்நூலை ஆக்குவிக்கக் காரணமாக இருந்தவர் பற்றி உ.வே.சா குறிக்கையில் 'இந்நூலை ஆக்குவித்த பிரபு காரைக்குடி முரு.லெ.இலக்குமணச் செட்டியார் அவர்களுடைய புத்திரரும் பெருங் கொடையாளி என்று மிக்க புகழ்பெற்று விளங்கியவருமான கிருஷ்ண செட்டியார்' என்பதாகும்.

இக்குறிப்பைப் பிள்ளை அவர்கள் புராணத்துள் குறிக்கையில் 'சூரையம்பதி தெய்வமான்மிய . . . . வடமொழியை . . . . . தமிழினாற் பாடி முடித்திட வேண்டுமால் என்று,

கழிமகிழ் சிறப்பக் காரையம் பதிவாழ் கனமிகு வணிகர்தம் குலத்தோன் . . . . லக்குமணப் புண்ணியன் புரிதவத் துதித்தோன், வழிவழி யறமே பயின்றிடு நலத்தான், மழையெனப் பொழி கரதலத்தான்,

வளரொளியனைய தளிப்பணி சிறப்பின் மல்குறப் புதுக்கிய வள்ளல், கிளர்மணித் தடந்ததோட் கிருட்டின மகிபன் கெழுதகு சிரத்தையிற் கேட்ப . . . . . . உரைத்திடலுற்றேன்

எனப் பல படியாகக் கூறுகிறார்கள். இக்குறிப்பில் பொதுவாக நகரத்தாரின் சிறப்பும் சிறப்பாக இச்சூரைக்குடிப் புராணத்தைப் பாடுவித்த கிருஷ்ணன் செட்டியாரின் பண்பும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இயல்பாகப் பெரும் பொருளுடைய நகரத்தார்கள் வழிவழி யறம் செய்யும் இயல்பினர். இம்மரபில் உதித்த கிருஷ்ணன் செட்டியார் 'வள்ளல்' எனப் பாராட்டப்பட்டதோடு 'மகிபன்' எனப் புகழப்பட்டது எல்லோரையும் விஞ்சிய பேறுடைய பாராட்டாகும். கிருஷ்ணன் செட்டியாரின் திருக்கோயில் திருப்பணித் தொண்டு அவர் காலத்திற்குப் பின்னரும் அவர்தம் குடும்பத்தினரால் பேணப்பட்டு வருவதால் 'மகிபன்' என்ற சிறப்பு, கருவிலே திருவுடைய குறிப்பை உணர்த்தும் பாராட்டு என்பதில் ஐயமில்லை.

சூரைக்குடிப் புராணம் பாடி வருங்கால் ஒரே யாப்பிலேயே பிள்ளை அவர்கள் பாடுகிறார்களே எனச் சிலர் கூறிய செய்தியைக் கேட்ட பிள்ளை அவர்கள் வேறு வேறு சந்தக் குறிப்புகளுடன் கழிநெடிலடிப்பாடல்களாகப் பல பாடத் தொடங்கி ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வோர் வெண் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றார் என்பது செவிவழியான செய்தியாகும். காரைக்குடிக்கு வடகிழக்கே உள்ளது சாக்கோட்டை எனப்படும் வீரவனம்

என்ற ஊராகும். இங்குள்ள உமையாம்பிகை உடனாய வீரசேகரர் திருக்கோயில் பற்றிய சிறப்பை வெளிவுலகம் அறிந்து கொள்ளவேண்டி சாக்கோட்டையைச் சார்ந்த நகராகிய புதுவயலில் வாழ்ந்த முருகப்பச் செட்டியார் போன்ற சில தன வைசிகப் பிரபுக்களின் வேண்டுகோளின்படி வீரவனப் புராணம் பாடப் பெற்றதாக உ.வே.சா அவர்கள் பிள்ளையின் சரித்திரச் சுருக்கத்தில் பக்கம் 150இல் குறிப்பிடுகிறார்கள். இக்குறிப்பைப் புராணத்துள்,

தண்ணிய நீறு பூசி தவாதகண் மணியும் தாங்கி
எண்ணிய எழுத்தோர் ஐந்தும் இதயத்துப் பதித்து வாழும்
புண்ணிய வணிகர் கேட்ப விரையூர்ப் புராணம் சூதர்
பண்ணிய மொழிபெ யர்த்துப் பாடுல் உற்றேன் மன்னோ

எனக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் பிள்ளையவர்கள் குறிக்கின்றார்கள். இதில் சைவத்திற்கே உரிய ஐந்தெழுத்தை மறவாத சிறப்பைக் கூறுவது பிற இனத்தார்க்கில்லாத நகரத்தார்க்கே உரிய தனிச் சிறப்பாகும்.

ஐந்தெழுத்து மந்திரத்தை ஆணும், பெண்ணும் ஓதி உணரவேண்டும் என்பது நகரத்தார்க்குரிய மரபு. இதற்காகவே இம்மந்திர உபதேசங்கேட்க ஆடவர்க்குப் பாதரக்குடியில் கலாமடமும், பெண்டிர்க்குத் துலாவூரில் மடமும் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இளம் வயதில் இம்மந்திரத்தைக் கேட்டறியாது போனாலும், அறுபதாம் வயதைக் கொண்டாடும் மணிவிழாவிற்கு முன்னர் அவரவரும் அவ்வத் திருமடங்களில் உபதேசங் கேட்டே ஆகவேண்டும் என்பது விதியாகும். இங்ஙனம் உபதேசம் கேட்டறிய வேண்டிய கட்டாயத்தால் தான் தனவணிக மரபினர் நகரத்தார் எனப்பட்டனர் என்ற ஓர் ஆய்வுக் குறிப்பும் உண்டு. அகரம் என்றால் அ என்ற எழுத்தைக் குறிப்பது போல நகரம் என்றால் 'ந' என்ற எழுத்து 'நமசிவாய' மந்திரத்தின் முதலெழுத்துக் குறிப்பாகும்.

இங்ஙனம் வீரவன புராணத்துள் புகழ்ந்த பிள்ளை அவர்கள் நகரத்தாரின் உத்தம குணத்தைக் கண்ட தேவிப் புராணத்துள் பதிவு செய்துள்ளார்கள். காரைக்குடிக்குத் தென்கிழக்கேயும் தேவகோட்டைக்கு அருகேயும் உள்ளது கண்டதேவி என்னும் சிற்றூர். இங்குள்ள பெரிய நாயகி உடனாய சொர்ண அருள்சர் திருக்கோயில் பற்றிய வரலாற்றை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துத் தருமாறு தன வணிகர்கள் விரும்பிக் கேட்கக் கண்டதேவிப் புராணம் பாடப்பட்டதாகப் புராணத்தின் அவையடக்கப் பகுதி கூறுகிறது. இதுபற்றிய குறிப்பைப் பிள்ளைச் சரித்திரத்தில் பக்கம் 142இல் உ.வே.சா. வும் குறிக்கின்றார்.

தரைபுகழ் வேத சாரமாம் விபூதி சாதனமே பொருளாக் கொண்டு
உரைபுகழ் சிறந்த தேவி சாலப்பே ருத்தம வணிகர்கள் யாரும் . . . .
. கண்ட தேவி. . . . மான்மிய வடமொழியை . . . . மொழிபெயர்த்து
. . . . தமிழாற்பாடுக என்றலும் அனையார். . . . . புகன்ற கட்டுரை
மறுப்பதற்கஞ்சி . . . . . உரைசெயற் துணிந்தனன்'

என்பது பிள்ளையவர்கள் கூற்று. நகரத்தார்கள் பிள்ளையை மதித்ததைப் போலவே பிள்ளையும் நகரத்தாரை மதித்த பேருண்மை இக்குறிப்பில் காணக்கிடக்கும் ஓர் பேருண்மையாகும், நகரத்தார் கேட்டுக்

கொண்டதற்கேற்பப் பிற புராணங்களைப் பாடியது போலவே கண்டதேவிப் புராணம் பாடினாலும் 'மறுத்தற்கு அஞ்சிப் புராணப் பாட விரும்பிய குறிப்புதான் பிள்ளையவர்களுக்கும் செட்டிநாட்டுக்கும் உள்ள நெருக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.

செட்டிநாட்டுப் பகுதிக்குப் பிள்ளை அவர்களை வரவழைத்து அறிமுகப்படுத்திய தேவகோட்டை நாராயணன் செட்டியார், பிள்ளை அவர்களின் சிறந்த சீடர். ஊனக்கண் இல்லையானாலும் ஞானக்கண் பார்வை உடையவர். இவர் பற்றிய குறிப்பை உ.வே.சா. அவர்கள் பிள்ளையின் சரித்திரச் சுருக்கத்தில-1 பக்கம் 143இல் சிறப்பாக எழுதியுள்ளார்கள். நாராணயரின் ஒழுக்கச் சிறப்பையும், சைவப்பற்றையும் நன்கறிந்த பிறரெல்லாம் கூடிப் பிள்ளையிடம் நாராயணருக்கு வன்தொண்டர் எனப் பெயரிட்டு வழங்குமாறு வேண்டிக் கொண்டபடி அதனை அங்கீகரித்த பிள்ளை அவர்கள்,

சத்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற் றாட்கமலப்
பத்தியாற் றேவார பாராய ணத்தினால்
வான்தோய் புகழ்மிகுந்த வன்தொண்ட னென்னும் பேர்
சான்றோய் நினக்குத் தகும்

என்ற அரியதொரு பாடலால் வாழ்த்த அன்று முதல் நாராயணர் வன்தொண்டர் எனப்பட்டார்.

வன்தொண்டச் செட்டியார் சேக்கிழாரிடம் மிகுந்த ஈடுபாடுடையவர். இதனால் 'திருத்தொண்டர்களுடைய பெருமைகளை நன்றாக யாவரும் அறியும்படி பெரியபுராணத்தின் வாயிலாகப் புலப்படுத்தியருளிய சேக்கிழார் திறத்தில் பிள்ளைத்தமிழ் ஒன்று ஐயா அவர்கள் செய்தருள வேண்டும்' என வணக்கமாய்க் கேட்டுக் கொள்ள, பிள்ளை அவர்கள்,

'பெரிய புராணயத்திற்கு வன்தொண்டர் வாய்மொழியாகிய திருத்தொண்டத்தொகை காரணமாக இருந்தது. அப்புராணத்தை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழுக்கு வன்தொண்டச் செட்டியாரது வாய்மொழியே காரணமாயிற்று. இது நல்ல அறிகுறி' என மகிழ்ந்து கூறிச் சேக்கிழார் மீது பிள்ளைத்தமிழ் பாடியதாக உ.வே.சா குறிப்பிடுகிறார்கள் (2.ப.45)

காரைக்குடியில் அறுபத்துமூவர் குருபூசை மடத்திற்குப் பிள்ளை அவர்கள் வந்து தங்கியிருந்தபோது குருபூசையின் பெருமையைப் பாடியருள வேண்டும் எனக் காரைக்குடியைச் சார்ந்த மெ.பெரி.ராம.மெய்யப்ப செட்டியார் கேட்டுக் கொண்டவாறு குருபூசை மான்மியம் என்ற ஒருநுலைப் பிள்ளையவர்கள் பாடியதாக உ.வே.சா.(2.ப.69) குறிப்பிட்டுள்ளார்.

இப்படியாக மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் செட்டிநாட்டுத் தொடர்பால் தெய்வத் தமிழின் வாழ்வும், நகரத்தாரின் வாழ்வும் சென்ற காலத்தின் பழுதிலாத் திறனால் செழுமைப்படுத்தப்பட்டன என்பதாம்.

80. அகிலாண்ட நாயகி மாலையில் அம்பிகையின் அருட்திறம்

க.முருகேசன்
கோவை

தமிழின் அருள் செல்வமாகிய பக்தி இலக்கியம் செல்வத்துள் பெருஞ்செல்வம். தெய்வத்தைப் பாடுவதையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும் இவ்விலக்கியத்தில் சமூக உணர்வுகளும் மானிட மதிப்புகளும் நீங்கா இடம்பெற்றிருக்கின்றன. அழகிய பூக்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட பூமாலைகளை இறைவனின் திருமேனியில் அணிவிப்பது போல ஞானவள்ளல்களின் உள்ளக்கமலங்களில் ஊறித்தெளிந்த பக்திப் பெருக்கால் இறைவனின் மீது பாமாலை சூட்டி வழிபடுதலும் தொன்று தொட்டு நம்மிடையே நிலவிவரும் பக்தி வெளிப்பாடு.

திருவானைக்கா என்னும் ஊரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அகிலாண்ட நாயகியின் மீது பாடப்பெற்ற நூலே 'அகிலாண்ட நாயகி மாலை'. சக்தி விசேடத்தலம் எனப் போற்றப்படும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் சம்புநாதர்; தேவியார் ஸ்ரீ அகிலாண்ட நாயகி. திருமால், அயன், மருத்துவர், உருத்திரன், வசுக்கள், அருக்கன் ஆகியோர் தவம் புரிந்த பெறற்கரிய பேறுபெற்ற தலம் திருவானைக்கா. ஒரு சமயம் சிவபெருமான் தேவியைப் பிரிந்து போன போது தேவி 'கணநாத அருகிருந்தோர் பார்த்திருப்ப வெள்ளல் நகை புரிய' அதன் காரணமாக இறைவன் சாபமேற்று அம்பிகை அகிலாண்ட நாயகியாகத் தோன்றி இத்தலத்து இலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலபுராணம் விளக்குகின்றது.

சிவபிரான் புரிந்தருளிய திருவிளையாடல்கள், சைவசித்தாந்தக் கருத்துக்கள் தலபுராணச் செய்திகள் போன்ற செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அன்னை அம்பிகையின் அருட்சிறப்பினை சித்தரித்துக் காட்டியுள்ள தன்மையை வெளிப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

அருட்சிறப்பு

சூரிய வெயிலும் நிலவொளியும் ஒருங்கே வீசும் புதுமை அம்பிகையிடம் தோன்றுகின்றது. குபேரன் போன்ற பெருஞ்செல்வம் படைத்தவர்களும், நிறைந்த கல்வியாளர்களும் தேவியின் கடைக்கண் அருளைப் பெற்றதனாலேயே அந்த அரிய செல்வத்தையும் கல்வியையும் பெற்றனர் என்பதை,

வடதிசை யவனுஞ் சமழ்ப்புறக் கனகம்
வாய்ந்துதென் றிசைநகத் தமருங்
குடமுனி யவனுஞ் சமழ்ப்புறக் கல்வி
கூர்ந்துமிக் குயர்ந்தவர் பலருந்
தடமலர் புரைநின் முகத்திரு கடைக்கட்
சார்பொருங் குற்றவ ரன்றோ (தி.அ.நா.மா.2)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

தேவியின் திருமணக்கோலம் கண்டு தரிசித்தவர்களுக்குப் பெரும் பேரானந்தத்தை அளிப்பது. இறைவன் தேவியின் தாள்மலரைப் பிடித்து அம்மியில் வைக்கையில், அக்கல்லில் பொருந்திய பாதம் என் மனக்கல்லின்மீது பொருந்துவதற்குத் தடை என்ன? என்று உருகாத மனதைக் கல்லாகக் கூறுகிறார் ஆசிரியர். தாயுமானவர் எனக்கன்னெஞ்ச முருகவில்லையே' (தாயுமானவர் பாடல்-78) என்று மனதைக் கல்லாக உருவகித்துப் பாடியுள்ளார்.

மார்க்கண்டனுக்காக சிவபெருமான் இமயனை உதைத்த வரலாறு சுட்டப்படுகின்றது.

மடியமுன் னுதைத்தான் றுணையடைந் தேனும்
வருதிமற் றதுநினக் கரிதோ
நெடியவன் பிரம னிந்திரன் முதலோர்
நித்தமும் தாழ்ந்துசூழ்ந் தேத்தி (தி.அ.நா.மா-4)

என்று கூற்றுவனைவிடக் கொடியவனாகத் தம்மைக் கூறிக் கொண்டு, தனக்கு உறுதுணையாகப் பரமனை அழைத்து வருமாறு கூறுவதில் சிவ-சக்தி இருவரையும் ஒருங்கே தரிசிக்க விழையும் அவாவினை அறியமுடிகின்றது.

பிழைபொறுத்தல்

அளவறு பிழைகள் பொறுத்தரு ளின்னை
யணியுருப் பாதியில் வைத்தான்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்றான் (அ.நா.மா.7)

என்ற வரிகளில் சிவன் எல்லாப் பிழைகளையும் பொறுக்கும் தேவிக்குப் பாதியிடமே அளித்து, முப்பிழை பொறுக்கும் நீர்மகளாகிய கங்கையைச் சிரமேற்கொண்டது பித்தன் செயல் என்று கூறியுள்ளது நயமான வஞ்சப் புகழ்ச்சி.

அன்னையின் திருவுருவம்

அம்பிகையின் திருவுருவத்தை வர்ணிக்கும் பாடல் தேவியின் திருக்கரங்களில் கரும்புவில்லும், அடியார்களின் மலங்களைப் போக்கும் அங்குச பாசமும் வைத்திருப்பதை நயம்பட எடுத்துரைக்கின்றது. அகங்கார, மமகாரங்களிலிருந்து விடுபட்டவரே தேவியின் அருளுக்குரியவர். அபிராமபட்டரும்,

திருத்தன பாரமு மாரமும் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே
(அபிராமி அந்தாதி-9)

என்ற அந்தாதி வரிகளில் அபிராமியின் திருக்கையிடத்தில் உள்ள கரும்பு வில்லையும் மலர் அம்பையும் குறிப்பிடுவதை இங்கு ஒப்புநோக்கலாம்.

முத்தொழில் புரிபவள்

மணிவடம், சங்கு, சக்கரம் இவற்றை அணிந்தும் தாங்கியும் நிற்பவன் திருமால்; சூலமும், வேலும் தாங்குபவன் சிவபெருமான். ஆனால் இவையனைத்தையும் தாங்கி நிற்பதால் அபிராமியே படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களையும் நடத்துபவள்;

மூவரு மிற்று மூவகைத் தொழிற்கு
மூலநீ யென்பது தெரிந்தேன்
காவரு மலர்நல் கிடுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே (தி.அ.நா.மா-13)

பொழிசுவை நறுநீர் மேகம் உவர்நீரைப் பருகி நன்னீராகச் செய்து வழங்குவது போன்று தன்னுடைய குற்றங்களையும் களைந்து கருணைகாட்ட வேண்டும் என்று தேவியிடம் ஆசிரியர் வேண்டுகின்றார். இக்கருத்திற்கு அரணாக,

அறுகுளத் துகுத்தும் அகல்வயிற் பொழிந்தும்
உறுதுநிலத்துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி (புறம் -142)

என்ற புறநானூற்றுப் பாடலைச் சுட்டலாம்.

ஈசுவரியின் புகழை விரும்பும் அறிவிற் சிறந்தவர் பிற தெய்வங்களை வழுத்தமாட்டார். அப்படிச் செய்தல் கருப்பஞ்சாற்றினை விடுத்து வேப்பெண்ணெயைச் சுவைத்தல் போலும். கொலை செய்வதற்குப் பயன்படும் வாள்கூட இரசவாதத்தால் பொன்னாக மாறுவதுபோல் மாபாவியாக தான் இருப்பினும் தன்னைத் தேவியின் திருவருள் புனிதமாக்கிவிடும் என்கிறார் பிள்ளையவர்கள். இவ்வரிகள்,

முதல்வன் அருணோக்கால் இன்புறு
வேதகத்திரும்பு பொன்னானாற் போல் (கண்ணப்ப-154)

என்ற பெரிய புராண வரிகளோடு ஒப்பிடத்தக்கன.

இறைவன் தனது சிரத்தில் வைத்துக்கொண்ட கங்கைநதி சிறப்புப் பெற்றவளா? அவருக்கு அமைந்த இடம் பாம்பும் எருக்கும் எலும்பும் என்ற இழிக்கப்பட்ட பொருள்கள் நிறைந்த மயானம்தான். ஆனால் தேவிக்கு அமைந்த இடம் இறைவனின் உடம்பில் பாதியன்றோ. ஆதலால் உன் உயர்வு அவருக்கு இல்லை என்பதை,

அருகுநுண் ணிடைநிற் கஞ்சியே யன்றே
லணியுருப் பாதிமற் றிலையோ (தி.அ.நா.மா-17)

என்ற வரிகளில் பிள்ளையவர்கள் விளக்குகின்றார். அகிலாண்ட நாயகிக்கு அருள் செய்யும்பொருட்டு இறைவன் ஜம்புலிங்கம் என்ற பெயருடன் வெண்நாவல் மரத்தடியில் அமர்ந்தான் என்ற குறிப்பினை,

மலையடி உதித்து வளர்ந்துவெண் ணாவன்
மரத்தடி வாழ்பவற் புணர்ந்தாய் (தி.அ.நா.மா-18)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

குழந்தையின் நோய் தீரும்பொருட்டு மருந்து உண்பவள் அன்னையே ஆனால் நல்வினை, தீவினை ஆகியவற்றைக் கொண்டு கொடியவனே ஆனாலும் தனக்கு அருள்புரியுமாறு பெருமானுக்கு உரைக்க அபிராமியின் வேண்டுகின்றார். பிச்சை பெற்று புலித்தோல் உடுத்தும் பெருமானுக்கு இடப்புறத்தாளாகிய அகிலாண்ட நாயகி, உயிர்களின் வயிற்றில் பசி அழலாகத் திகழ்வது தவிர்த்து, அவற்றிற்கு இனிது உணவு ஊட்டும் அறம் முதலியவற்றை மேற்கொண்டது அவளின் அருட்சிறப்பையே காட்டுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

பிறைமதி

இறைவனின் திருமுடி மீது காணப்படும் பிறைமதிச் சுவடு தேவியின் அடிமீதும் காணப்படுவதற்குக் காரணம் காட்டும் பிள்ளையவர்கள், ஊடற் காலத்து இறைவன் தேவியின் தாளிற் படும்படி வணங்கியபோது அதே பிறைச்சுவடு தேவியின் திருவடியில் படிந்தது என நயமாக உரைக்கின்றார். சுந்தரும் தம் தேவாரப் பாடலின் முதலடியாக 'பித்தா பிறை சூடிப் பெருமானே' என்று பாடுகிறார்.

நாயகியின் சாயல்

சிவம் சக்திதனை ஈன்றும், சக்திதான் சிவத்தை ஈன்றும் உவந்திருவரும் விளங்கும் தன்மையால் இருவரும் ஒன்றே வேறல்லர் என்பது பெறப்படும். அம்பிகை உலகத்து உயிர்களையெல்லாம் ஈன்று அவற்றை இருநாழி நெற்கொண்டு ஊட்டித் துன்பம் போக்கித் தன்நடை போன்று நடக்கும் புறவாதலாலும், தன் மழலைச் சொற்கள் போன்று பேசுவன கிளியும் மைனாவுமாதலாலும், தன் சாயலை மேற்கொண்டது மயிலாகலானும் அம்பிகை அவற்றைப் பேணி வளர்த்தாள் என்பதை,

உரவுறு கருணை யால்வளர்த் திடுந
யொருமலை மகளென வுதித்து
விரவுறு புறவு கிளிமயில் பூவை
விரும்புபு வளர்த்தவா றென்னே (தி.அ.நா.மா-37)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன.

திருமகளும் கலைமகளும் பணிசெய்தல்

செந்தாமரையில் திருமகளும், வெண்டாமரையில் கலைமகளும் உறைவர். அவர்கள் இருவருமே அபிராமியின் முகமாகிய விரிந்த தாமரை

மலர்க் கண்ணன்றோ உறைவர் என்பது திருவும் கலையும் நிறைந்து ஒளிர்பவள் தேவி என்பதை எடுத்துரைக்கின்றன.

அபிராமிக்கு திருமகளும் கலைமகளும் ஒப்பனை புரிந்து பணிபூட்டி அலங்கரிப்பர். அவர்களைத் தாங்குகின்ற செந்தாமரையும் வெண்டாமரையும் தவமுடையன;

அரும்புவோர் நின்கைக் கணிபல வணிந்துள்
ளவாவொடு தாங்குமா தர்களை
விரும்புபு சுமக்கு மெல்லிதழ்க் கமல
மெய்த்தவ முடையன வெனவே (தி.அ.நா.மா-54)

என்ற பாடலடிகள் தேவிக்கு அகிலாண்ட நாயகிக்கு பணி செய்யத் திருமகளும் கலைமகளும் என்ன தவம் செய்தார்களோ என்று விளக்குகின்றன.

திருமால் அர்ச்சனை

இறைவனுக்கு அர்ச்சனை செய்யுங்கால் ஆயிரம் மலர்களில் ஒன்று குறையத் தன் கண்மலர் கொண்டு திருமால் அர்ச்சனை செய்தார். அச்செயலை அடியேன் நினைக்கவும் ஒண்ணாத ஆகையால் தேவி வந்து அருள வேண்டும் என வேண்டுகின்றார் ஆசிரியர்.

மதுமல ரொன்று குறையினு மதற்கு
மாறுகண் ணிடந்திடல் வேண்டும் (தி.அநா.மா.50)

அதுசெய மாயோ னல்லன்யா னின் பொன்
னடியிருச் சனைசெய்வான் புகுந்தேன் (தி.அ.நா.மா.50)

மேகம் கறுத்து நீரை எங்கும் பொழிவது போன்று தேவியும் தன் மேனி பசந்து அருள்மழை எங்கும் பொழிய வேண்டும் என்கிறார் ஆசிரியர். 'முன்னிக் கடலைச் சுருக்கி' என்ற திருவெம்பாவை வரிகள் இதனை நினைவூட்டுகின்றன.

ஒன்றுக்கும் பற்றாத அன்பிலன் ஆகிய என்பால் உன் கருணை காட்டி எனை குன்றின்மேலிட்ட விளக்கென ஒளிரச் செய்யுமாறு வேண்டுகின்றார். மேலும் இறைவனின் பாகத்து தேவி உறைவதைப் போல், தேவியின் திருவடி நிழலில் அடியேன் உறையுமாறு அருள்புரியவும் வேண்டுகின்றார். சிவபெருமானிடத்திலுள்ள சிவசக்தியைப் பிரித்தறிய முடியாது. உலகத்தைத் தொழில்படுத்த இச்சக்தி சிவபெருமானின் உள்ளக்குறிப்பை எதிர்நோக்கியபடி அனுசரித்து இச்சக்தி உலகத்தை இயக்கி வருகின்றது. இவ்வுண்மையை,

சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும்பெண்ணும் உன் குணகுணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்

என்பதாக சிவஞானசித்தியார் உரைக்கின்றது

சிவபெருமான் எங்கு அருள்வழங்கச் சென்றாலும் தேவியுடனே சென்று வழங்குவான் ஆதலால் இறைவன் அருள்வடிவான சக்தியைக் கொண்டுதான் அன்பர்க்கு அருள் வழங்குவான் என்ற நெறியைக் குறிக்கின்றார் ஆசிரியர்;

ஆவிநேர் கொழுந னோடுவந் தாண்டா
எம்மையென் பாரிலை யன்னே (தி.அ.நா.மா-68)

பாற்கடலைக் கடையும்போது எழுந்த விடம் இறைவனால் உண்ணப்பட்டது. அபிராமியின் பவளம் போன்ற வாயமுதம் கொண்டுதான் அவ்விசத்தினை உண்ணத் துணிந்தார் இறைவன் என்பதை,

நங்கைநின பவளவா யமிர்தப்
பயனுணர்ந் தன்றோ வலனெனி அனைய
பரமனெவ் வாறுணத் துணிவான் (தி.அ.நா.மா-70)

என்ற பாடல்வரிகள் காட்டுகின்றன. சிவபிரான் இடத்தாள் எமனை உதைத்தான் அதனை இறுகப் பற்றி எப்பால் எமன் அணுகான் எனினும் அத்தாள் பெருமானின் இடப்புறத்தில் உறையும் நின்தாளன்றோ என வியந்து மென்பதம் என்று கூறுவது விந்தையே என்று வியந்து போற்றுகின்றார்.

திருவானைக்காலில் இன்றும் உள்ள ஐந்தாவது சுற்றாகிய விபூதிப் பிரகாரம், சிவபிரான் அடியார் வேடம் பூண்டு எழுந்தருளி மதில்கட்டுவதற்கு மக்களை ஏவி அவரவர்கள் செய்த தொழிலுக்குக் கூலியாக விபூதி அளித்தனர் என்றும், அது பொன்னாக மாறியது என்றும் திருவானைக்காவல் தலபுராணம் கூறும் செய்தி இங்கு சுட்டப்படுகின்றது.

பெண்பாற் பிள்ளைத்தமிழில் சிற்றிலிழைத்தல் என்பது ஒரு பருவம். தேவி சிற்றலிழைத்து விளையாடுவது,

அண்டகோ டிகளென் றுரைத்திடுஞ் சிற்றி
லமைத்தமைத் தாடிடு வாய்நீ
துண்டவான் மதியஞ் சூடிய சடிலச்
சுந்தர னழிததாழித் தாடும் (தி.அ.நா.மா-81)

என்ற வரிகளில் குறிக்கப்படுகிறது. இறைவி அமைத்தமைத்தாடும்; இறைவன் அழித்தழித்தாடும் என்ற முரண் நயமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு ‘காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி’ என்ற திருவாசகப் பாடலைச் சுட்டுவது பொருத்தமாகும்.

நறுமணமில்லாத மலரோ, இன்ப நயமில்லாத மொழியோ பொறுமை இலாதான் முகமோ, புத்திரப்பேறு இல்லா வீடோ, நீரில்லா புனலிடையோ பயன்தராது என்பதனைக் குறிப்பிடும் அகிலாண்ட நாயகி மாலையின் குறிப்பிற்கு இணையாக,

சந்திரனில்லா வானம் தாமரையில்லாப் பொய்கை
மந்திரியில்லா வேந்தன் மதகரியில்லாச் சேனை
சுந்தரப் புலவரில்லாத தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகளில்லா வீணை தனிமிலா மங்கை போலாம்

என்ற விவேகசிந்தாமணிப் பாடலைச் சுட்டலாம்

யாரும் கேட்காமல் முகிலானது மழையைப் பொழிந்து போல் மன்றாடிக் கேட்டுப் பின் ஆளுவதை விட தேவியே வலிந்து வந்து ஆட்கொள்ளுதல் தேவிக்குப் பெருமைதரும். இறைவனுக்கும் இறைவிக்கும் இடையில் வேற்றுமையின்மையை,

முன்னவன் றனக்குமோர் பாதி
ஏகலி லெழினின் றனக்குமோர் பாதி
எம்பிரான் மேனியி லென்றால் (தி.அ.நா.மா-90)

என்ற பாடலில் இறைவனின் திருமேனியில் மோகினி உருக்கொண்ட திருமால் ஓர் பாதி கொண்டான்; உமையொரு பாதி கொண்டாள் என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றது.

சிவபெருமான் சிதம்பரம், திருநெல்வேலி, திருமுல்லை வாயில் என்ற தலங்களிற் கோயில் கொண்டமை, இவை முறையே பிராட்டியின் இடை, தோள், பற்கள் என்பனவற்றை ஒக்கும் என்ற குறிப்பு இந்நான்கு தலங்களும் தேவிக்கு உவமைத் தொடர்புடைமை கூறப்பெற்றது.

'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன்' என்ற மாணிக்க வாசகரின் வரிகளுக்கு ஒப்பாக, பிறப்பெடுப்பது என்பது பெருந்துன்பம் ஆதலால் அதனைப்போக்க எண்ணியதாகவும் அதன் பொருட்டு அருள்புரியுமாறு சிவபெருமானுக்கு தன்னை அறிவுறுத்துமாறு வேண்டும் வரிகள்,

கொடியது பிறத்த லதனினு மம்ம
கொடியதே யிறத்தலிவ் விரண்டும்
தடிதர நினைத்தேன் றந்தைதா யில்லான்
றறுகண்வெங் கூற்றுதைந் தாற்குன் (தி.அ.நா.மா-96)

என்பதாகும். கொடியபிறவித் துன்பமும் தொடர்ந்து தொடர்ந்து ஏற்படக்கூடியது; ஒருயிர் எடுக்கும் பிறவிகளைக் கணக்கிடுதல் அரிது என்பதை,

எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம் (அருணகிரிநாதர் பாடல்)

என்பதாகக் குறிப்பிடுகின்றார் அருணகிரிநாதர்.

பெருமானுடன் தேவி ஊடும்போது சிவபிரான் முடிக்கண அணிந்த சந்திரன் திடுக்கிட்டஞ்சுமாறு மோதும். எனின் முள்ளோடு கூடிய தண்டினை உடைய பங்கயம் தேவியின் திருவடிக்கு இணையாகாது என்று குறிப்பிடப்படுகின்றது.

துணிபடு பொழுது பரன்முடி மதிபந்
துன்னெனத் தாக்குநீர் வாவி
நனிபடு முட்டாட் பங்கயம் பெறுமோ
நவின்றன் விணையிலென் றுணர்ந்தேன் (தி.அ.நா.மா-100)

என சிலேடைப் பொருளில் முள்ளையுடையதாள் என்றும் அறிவிலி என்றும் பொருள்படக் கூறப்பட்டுள்ளது. இறைவன் திருமேனியின் இருபாதிகளும் தேவியுடையதாய் இருக்க இறைவனைச் சக்திமயம் என்று கூறாது சிவமயம் என்பது ஏன் என்று நயம்பட வினவுகின்றார் பிள்ளையவர்கள்.

இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றச் சிறப்புப் பொருந்திய புராணங்கள் உண்டு. அப்புராணங்கள் தோன்றிய அவ்வக்கால சமூக வாழ்க்கைநிலை, ஆட்சிமுறை ஆகியவற்றை விளக்கிக் கூறுவதால் அவை ஒரு வரலாற்றுக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. இப்புராணங்கள் அருளைப் பரப்பும் நோக்கில் அமைந்திருக்கின்றன.

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலையில் அமைந்துள்ள நூறு பாடல்களின் வழி ஆசிரியர் வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தேவியின் அருட்திறத்தினை வெளிப்படுத்திக் காட்டும் விதம் குறிப்பிடத்தக்கது.

81.தியாகராச லீலையில் கற்பனை

ந.முருகேசன்
திருப்பனந்தாள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பராகத் திகழ்ந்தவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. அவர், 'நடக்கும் புத்தக சாலை' என்ற பெரும்புகழுக்கு உரியவர்; பல பெரும் புலவர்களை உருவாக்கிய பெருமைக்குச் சொந்தக்காரர்; திருவாவடுதுறை ஆதீனப் புலவராய் விளங்கியவர்; பற்பல தலபுராணங்களையும் பற்பல சிற்றிலக்கியங்களையும் சுவையுடன் பாடியவர்; தம்காலப் புலவர் பெருமக்களால் வணக்கத்திற்கு உரியவராகக் கொண்டாடப்பட்டுப் 'பிள்ளையவர்கள்' என்ற சுட்டால் மரியாதையாகப் பேசப் பட்டவர்.

தியாகராச லீலை

அவர் இயற்றிய தலபுராணங்களில் 'திருவாரூர்த் தியாகராசலீலை'யும் ஒன்றாகும். திருவாரூர்த் திருவிளையாடல் எனவும் இந்நூல் வழங்கப்படும். 'திருவாரூர்த் தியாகராசலீலை' என்றே உ.வே.சா. பதிப்பித்துள்ளார். இப்புலவர் இயற்றிய பெருங்காப்பியங்கள் பலவற்றுள் தியாகராலீலையே முதலில் செய்யப்பட்டது என்பர்.

திருவாரூர்த் தியாகராசப் பெருமானே காப்பியத் தலைவராவார். சங்கரசேவகன் என்னும் சோழமன்னனின் வேண்டுகோளுக்கிணங்கி, திருவாரூர்த் தியாகராசர், மன்னராகி, ஆட்சி செய்த வரலாறுகளாகிய முந்நூற்றறுபது திருவிளையாடல்களை உணர்த்துவது, திருவாரூர்த் தியாகராச லீலையாகும், முதல் பதின்மூன்று திருவிளையாடல்களும், பதினான்காம் திருவிளையாடலில் முதற் பாகமும் பிள்ளையவர்களால் பாடப்பட்டுள்ளது. வடமொழி மூலம் முழுவதும் கிடைக்காததால், புராணம் முழுமை பெறாததாகவுள்ளது.

முந்நூற்றறுபது திருவிளையாடல் என்பதால், அவற்றிற்குத் தக்கவண்ணம், கடவுள் வாழ்த்து, திருநாட்டுப் படலம், திருநகரப் படலம் முதலியவைகளை விரிவாகப் பாடியுள்ளார். 999 பாடல்கள் கொண்ட இந்நூல், திருநாட்டுப் படலத்தில் 175 பாடல்களையும் திருநகரப் படலத்தில் 175 பாடல்களையும் கொண்டிருப்பது நோக்கத் தக்கது. பெருங்காப்பியமாகப் பாட வேண்டும் என்பதால் இவ்வாறு பாடியுள்ளார். நாட்டுவளத்திற்குச் சோழநாட்டையும், நகர் வளத்திற்குத் திருவாரூரையும் பாடியுள்ளார்.

காப்பியக் கற்பனை

ஒரு பெருங் காப்பியத்தின் முக்கியக் கூறுகளில் கற்பனை இன்றியமையாத ஒன்றாகும், கற்பனைவளம் இல்லாத காவியம் மக்கள் மன்றத்தில் நிலைக்காது, எனவே கற்பனையழகோடு காவியம் வேண்டும் என்பது காப்பியப் புலவர்களின் கொள்கையாகும், அக்கொள்கையின் வழி,

பிள்ளையவர்களும் இத்தியாகராச லீலையைக் கற்பனை வளம் மிக்கதாய்ப் படைத்துள்ளார்

அவையடக்கக் கற்பனை

தாம் பாடும் முதற்காப்பியம் என்பதால், நூலின் தொடக்கத்திலிருந்தே, கற்பனைவளம் மிகப் பாட எண்ணியுள்ளார் கவிஞர். எனவே அவையடக்கத்திலேயே கற்பனை வெளிப்படுகிறது.

பெரியோர்கள் எழுதும் கடிதத்தைத் 'திருமுகம்' என்பது வழக்கு. அவ்வழக்கை அடிப்படையாகக் கொண்டு கற்பனை செய்கிறார் கவிஞர். முகத்திறுக்கு உரிய கண்முதலிய அங்கங்கள் இல்லாத பனை ஓலையைத் 'திருமுகம்' என்று உரைப்பார்கள். அதுபோலக் கவிதைக்கு உரிய சிறந்த கூறுகள் இல்லாத என் பாடலையும் நல்ல பாடல் என்று சான்றோர்கள் கூறுவார்கள் என்று புனைகின்றார்.

முகத்திறுக் குரிய அங்கம்
முழுமையும் இலாத ஒன்றைத்
தகத்திரு முகமென் றாள்வார்
தழைகவிக் குரிய அங்க
மகத்துவ ஞான வாய்மை
மருவிலாச் சிறியேன் பாடல்
அகத்திலை எனினும் நல்ல
பாடலென் றெடுத்தாள் வாரால்

என்பது பிள்ளையவர்களின் பாடல். உலகில் உள்ள ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கிக் கற்பனை செய்யும் திறன் பாராட்டத் தக்கது.

ஆரூர்ப் பெருமான் திருவிளையாடலைத் தம்மால் பாட இயலாது என்று அவையடக்கமாகப் பாடும் புலவர், தம் பாடல் இனிக்கும் என்பதற்குக் கூறும் காரணம் கற்பனையழகு மிக்கது. 'தமிழ்' என்பதற்கு இனிமை என்பது பொருள். இதனை அடிப்படையாகக் கொண்டது கற்பனை.

அமிழ்தினும் இனிய ஆரூர்
அண்ணலார் ஆடல் அன்றி
உமிழ்சுவை உடைநின் பாட்டும்
இனிக்குமோ உலகிற் கென்னில்
தமிழெனும் பெயர்க்கு மேலோர்
சாற்றிய பொருளை யோரின்
இமிழ்திரைப் பரவை ஞாலத்(து)
இனிப்பதற் கையம் இன்றே

என்பது கவிஞரின் பாடல். 'தமிழ்' என்னும் பெயர்க்குச் சான்றோர் 'இனிமை' என்று சாற்றிய பொருளை நோக்கின், தமிழில் பாடப்படும் தம் பாடலும் இனிக்கும் என்று நயமாகக் கூறுவது சுவைக்கத் தக்கது.

காரணம் சொல்வதில் கற்பனை

கவிஞர், சில வழக்குகளுக்குக் காரணம் கற்மித்துப் பாடுகின்றார். அப்படிக் காரணம் கற்பிப்பதில் கற்பனை வெளிப்படுகிறது. சோழவள நாட்டைச் 'சென்னிநாடு' என்றும் 'நீர்நாடு' என்றும் கூறுவர். இவ்வாறு கூறுவதற்குப் புதிய காரணம் கூறிப் பாடும் பாடல்கள் கற்பனை மிக்கவையாகும். கூறும் காரணத்தில் கற்பனை வெளிப்படுகிறது.

சோழமன்னனுக்குச் 'சென்னி' என்ற ஒரு பெயர் உண்டு. இப்பெயரின் அடிப்படையில் சோழநாட்டைச் சென்னிநாடு என்பர். ஆனால் புலவர் ஒரு புதிய காரணம் கூறுகின்றார்.

அறமலி புகழ்சொல் சென்னி
ஆண்டகா ரணத்தால் அன்றித்
திறமலி பலநாட் டிற்கும்
சென்னிபோல் சிறந்த லானும்
நிறமலி சென்னி நாடென்
றொருபெயர் நிகழப் பூண்ட(து)
உறமலி வளத்தான் மிக்க
உயர்புகழ்ச் சோழ நாடு

சென்னி (சொழன்) ஆண்ட காரணத்தால் மட்டுமன்றி, பல நாடுகளுக்கும் (சென்னி-தலை) தலையாக - தலைமையாக இருக்கின்ற காரணத்தாலும் சோழ நாட்டிற்குச் சென்னிநாடு என்ற பெயர் உண்டாயிற்று எனப்பாடுவது இனிமையானது.

காவிரி பாய்ந்து நீர்வளம் மிக்கதாய்த் திகழ்வதால் சோழநாட்டை 'நீர்நாடு' என்று கூறுவர். நீர் என்பதற்குத் தண்ணீர் என்ற பொருளோடு குணம் என்ற பொருளும் உண்டு. இதனைக் கருத்திற் கொண்டு, நீர்நாடு என்பதற்குப் புதிய காரணம் கூறுகிறார் கவிஞர். இதில் அவர்தம் கற்பனை வெளிப்படுகிறது.

ஓங்குசீர்ப் பொன்னி நன்னீர்
உடையகா ரணத்தால் அன்றிப்
பாங்குசால் அறம்வ ழாத
குணம்உடைப் பயத்தி னானும்
தேங்குசீர் நீர்நா டென்றோர்
செழும்பெயர் படைத்த தம்மா
வாங்குநீர்ப் புவியுண் மிக்க
வளந்தரு சோழ நாடு

'நீர்' என்பதற்கு நல்லகுணம் என்பதைப் பொருளாகக் கொண்டு கற்பனை செய்துள்ளார். பெருமைமிக்க காவிரி நதியின் நீர் உடைய காரணத்தால் மட்டுமன்றி, அறம் வழுவாத நல்ல குணம் உடைய காரணத்தாலும் நீர்நாடு என்ற பெயர் கொண்டது சோழநாடு என்று புனைவதில் புலவரின் கற்பனைத் திறமும் புலமைத்திறமும் ஒளிவீசக் காணலாம்

வானில் உள்ள தேவர்கள் வியர்வை தோன்றாத மேனியராக வாழ்கிறார்கள் என்று கூறி, அதற்குக் கவிஞர் கூறும் காரணத்திலும் கற்பனை வளம் உண்டு.

கண்ணகன் ஆரூர் சூழ்ந்த
கடிகமழ் காமர் சோலை
வண்வான் கிழித்து மேற்போய்
மழைகவிந் தனைய தாகித்
தண்ணமர் நிழல் செய்யும்
தன்மையால் அன்றோ நானும்
விண்ணவர் வெயர்வு தோன்றா
மேனிய ராகி வாழ்வார்

திருவாரூரில் உள்ள மணம்மிக்க பூக்களைக் கொண்ட சோலைகளில் உள்ள அடர்ந்த மரங்கள் விண்ணைத் தொட்டு மேகம் கவிழ்ந்ததைப் போல விளங்கி நிழல் தருகின்ற காரணத்தால், வானில் உள்ள தேவர்கள், ஞாயிற்றின் வெம்மைக் கொடுமையில் இருந்து நீங்கி வியர்வை தோன்றாத மேனியராகி வாழ்கின்றார்களாம். மிகைக் கற்பனையாக இருந்தாலும், கவிதை, இன்பத்தைத் தரக் கூடியதாகும்.

மழை பற்றிய கற்பனை

திருகாட்டுப் படலத்தில் காணப்படும் மழை பற்றிய கற்பனை குறிப்பிடத்தக்கது. அன்பு செலுத்தும் அடியவர்கட்கு ஆரூர்த் தியாகராசப் பெருமான் அருள்பொழிவது போல் மழை பொழிந்தது என்று பாடுகிறார் கவிஞர்.

தங்கு மாநிலம் குழைதர இடையறாத் தாரை
எங்கு மாகவுட் குழையுமெய் யடியவர்க் கென்றும்
தெங்கு மாவளை செழுங்கம லைப்பதித் தியாகர்
பொங்கு மாரருள் பொழிதல்போல் பெருமழை பொழிந்த

என்பது பிள்ளையவர்களின் மழைபற்றிய கற்பனை. மெய்யடியார்கட்காகத் தியாகராசரின் பேரருள் பொங்கும் என்பதும், அவ்வருள் இடையறாது கிடைக்கும் என்பதும் உய்த்துணரத் தக்கது

பயிர் பற்றிய கற்பனை

விளையும் பயிர் பற்றிய கற்பனையைச் சீவகசிந்தாமணி, பெரிய புராணம் போன்ற காப்பியங்களில் இனிது காணலாம். அவ்வாறே இந்நூலிலும் காணமுடிகிறது. தோன்றும் போது நிமிர்ந்து தோன்றி, உழவர்களால் பிற வயலில் பதிக்கப் பட்டபோது, சிறிது சாய்வடைந்து, மீண்டும் நிமிர்ந்த இளம்பயிர், திருப்பனந்தாள் சிவலிங்கப் பெருமானைப் போன்றதாம் என்று கற்பனை செய்கின்றார் கவிஞர்

குறியுறத் தோன்றும் போது
கோணறத் தோன்றிப் பின்னர்
வெறிவயற் பதித்த போது
சிறிதுசாய் வடைந்து மீட்டும்
அறிதர நிமிர்ந்த பைங்கூழ்
அரிஅயன் முதலோர் ஏத்தும்
செறிவளத் திருப்ப னந்தாள்
சிவலிங்கப் பெருமான் நேரும்

திருப்பனந்தாள் தல வரலாற்றைக் கற்பனையாக்கியுள்ளார் புலவர். முதலில் நேராகத் தோன்றி, தாடகை என்னும் பெண்ணின் பூஜை மாலையை அணிந்து கொள்வதற்காக வளைந்து, பின்பு குங்கிலியக் கலைய நாயனார்க்காக, நிமிர்ந்தருளினார் திருப்பனந்தாள் சிவலிங்கப் பெருமான் என்பது, திருப்பனந்தாள் தல வரலாறாகும்.

சிவனடியார் பக்தியில்

சிவனடியார்களை மறவாத சிந்தையுடையவராய் வாழ்ந்த பிள்ளையவர்கள், சிவனடியார்கள் வாழ்வையும் கற்பனைக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். திருநாட்டுப் படலத்தில் ஆலால சுந்தரர் வரலாற்றை நினைத்துக் கவிதை புனைகிறார். பதடிபோக்கி, மருதநில மக்கள், குவிக்கும் செந்நெல், மலைபோல் உள்ளதென்பார், அம்மலை, சுந்தரர்க்காக, சிவபெருமான், குண்டையூர்க் கிழார்பால், பண்டைநாள் அளித்த செந்நெல், மலைபோன்றது என்று பாடுகின்றார்.

தொண்டையஞ் செவ்வாய் வெண்பல்
துடியிடை உமையா ளோடு
குண்டையூர் தம்பி ரானார்
குண்டையூர்க் கிழவர் தம்பால்
பண்டைநாள் அளித்த செந்நெல்
வரையெனப் பதடி போக்கி
இண்டையார் மருத மாக்கள்
எங்கணும் குவிப்பார் செந்நெல்

என்பது பாடல். சுந்தரர் வாழ்க்கையில், பிள்ளையவர்கட்கு உள்ள ஈடுபாட்டை இக்கவிதை மூலம் உணரலாம்.

கண்ணப்பர் வரலாற்றையும் அழகிய கற்பனைக்குப் பயன்படுத்துகிறார். இழிவான இறைச்சி உணவை அதிலும் எச்சில் உணவை எம்பிரான் உண்ணத் தந்துவிட்டு, அழிவில்லாத பேரின்பம் துய்த்த கண்ணப்ப நாயனாரைப் போல, இழிவான உவர்நீரை - பலரும் பயன்படுத்தியதாய் எச்சிலாய் உள்ள நீரை, மேகங்கள் அருந்தத் தந்து, அழிவில்லாத சுவைமிக்க நன்னீரைக் கடல் அருந்தியது என்று கற்பனை செய்கிறார் கவிஞர்.

ம.12.

இழிதக விறைச்சி எச்சில்
எம்பிரான் உண்ண நல்கி
அழிவில்பே ரின்பம் துய்த்த
அன்பர்கண் ணப்ப ரேபோல்
இழிதக உவர்நீர் எச்சில்
எழிலிகள் உண்ண நல்கி
அழிவில்இன் சுவைய நன்னீர்
அருந்திய தாழி மாதோ

என்பது பிள்ளையவர்களின் உவமைநலம் கனிந்த - கற்பனை வளம் மிக்க கவிதை.

மீண்டும் கூந்தல் மணம்

பெண்ணின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டா என்று, இறைவனோடு நக்கீரர் வாதிட்டார் என்பது, மதுரைத் திருவிளையாடற் புராணக் கதை. மீண்டும் அப்பிரச்சனையில் ஈடுபடுகிறார் இக்கவிஞர். நக்கீரர் கருத்தையே ஏற்கும் பிள்ளையவர்கள், திருநகரப் படலத்தில் புனையும் பாடலிது.

மன்னுடை யடிகள் வான
மங்கையர் மணிவார் கூந்தல்
துன்றுதென் கமலைச் சோலை
துதைமலர் நாற்றம் சார்வ
தென்றறி யார்போல் கீரன்
எதிர்சினந் தனர்அன் னார்முன்
நின்றுயாம் கேட்போம் நெற்றி
நெருப்பிலா திருப்பா ராயின்!

திருவாரூர் நகரில் உள்ள, சோலைகளில் பூத்த பூக்களை, அணிந்து கொள்வதால்தான், வான மங்கையர் கூந்தலில் மணம் வீசுகிறது என்பதை அறியார் போல, இறைவன், நக்கீரனிடத்துச் சினந்து பேசினார். எதிர்நின்று நானும் கேட்பேன், முன்போல, இறைவன் நெற்றிவிழி இல்லாதிருந்தால் என்று நகைச்சுவையுடன் பாடுவது இனிமையானது.

இவ்வாறு, தியாகராசலீலை, கற்பனைவளம் மிக்கதாய்த் திகழ்கிறது. பிள்ளையவர்களின் கவித்திறனுக்குச் சான்றாகவும் விளங்குகிறது. இந்நூல் முழுமை பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். திருநாட்டுப்படலம், திருநகரப்படலம் போன்றவற்றைத் தமிழ்பயிலும் மாணவர்கட்குப் பாடமாக வைத்தல் நலம்.

82. அம்புலிப் பருவ மாண்புகள்

க.முருகையா
மேலநீலித நல்லூர்

சேக்கிழாரின் மறைவுக்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின்பு தோன்றிய உமாபதி சிவாச்சாரியார் - சேக்கிழார் பெருமானைச் சிறப்பித்துச் சேக்கிழார் புராணம் இயற்றியுள்ளார். 700 ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய பெரும் புலவரான திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடி சேக்கிழாரை, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியுள்ளார்.

சேக்கிழார் பிள்ளைத் தமிழின் பெருமைகள்

முருகக் கடவுளைத் தமிழோடு இணைத்துப் பாடியுள்ள பாங்கும் முன்வைத்து முதன்மைப்படுத்தியிருப்பதும் இலக்கியத் தலைவராக ஏற்றம் தந்திருப்பதும் வீரவழி பாட்டுக்குரிய நிகழ்ச்சியாகும்.

பருவமுறை

பொதுவாகப் பிள்ளைத் தமிழ் இலக்கியம் பத்துப் பருவங்களாகப் வகுக்கப் பெற்று ஒவ்வொரு பருவத்திற்கும் பத்து விருத்தப் பாக்கள் வீதம் மொத்தம் நூறு விருத்தப்பாக்கள் கொண்டதாக அமைக்கப்பெறும். குழந்தையின் மூன்றாந் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரையில் உள்ள மாதங்கள் பத்துப் பருவங்களாக பகுக்கப்பெறுகின்றன. அதாவது மூன்று, ஐந்து, ஏழு, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்து, பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று என ஒற்றைப்படை திங்கள் அடிப்படையில் பாடப்பெறுகின்றன.

அம்புலிப்பருவ மாண்புகள்

பாட்டுடைத் தலைவனை குழந்தையாக உருவகித்துப் பாடுகின்ற பிள்ளைத் தமிழில் அம்புலி பருவம் மிகவும் முக்கியமான பருவமாகும். இலக்கியச் செறிவும் ஓசை நயமும் நாடகப் பாங்கும் நிறைந்த பகுதி இதுவாகும். ஆசிரியருக்குப் பாடுவதற்கு மிகவும் கடினமான பகுதி இதுவாகும். அம்புலி ஆசிரியருக்கு வெம்புலி என்பது பழமொழியாகும்.

சைவ சமயப் பிள்ளைத் தமிழ் நூல்கள் அனைத்திலும் அம்புலிப் பருவம் சிறப்பாகப் பாடப்பெற்றுள்ளன. பிள்ளைத் தமிழ் நூல்களுக்கு இப்பருவமே ஓர் அளவு கோலாக விளங்குகின்றது. இப்பருவத்திலேயே கவிஞரின் திட்ப நுட்பங்கள் வெளிப்பெறுகின்றன. இது சந்திரனைப் பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையுடன் ஆடவா என அழைக்கும்போது, சாம, பேத, தான, தண்டம் ஆகிய நால்வகை உபாயங்களால் அழைத்தல் மரபாகும். இவ்வாறு அழைக்கும்போது சந்திரனுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் ஒப்புமை அணி அமையப் பாடுதல் மரபு.

சேக்கிழார் பிள்ளைத் தமிழின் அம்புலிப் பருவத்தில் முதலிரண்டு பாடல்கள் சாம உபாயத்தாலும் அடுத்துவரும் ஐந்து பாடல்கள் பேத உபாயத்தாலும் ஏனைய இரு பாடல்கள் தான உபாயத்தாலும் இறுதியிலுள்ள பாடல் தண்ட உபாயத்தாலும் செவிலித்தாய் அம்புலியை குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனோடு விளையாட வரும்படி அழைப்பதாகப் பாடப்பெற்றுள்ளன.

அம்புலியின் சிறப்பியல்புகள்

சந்திரன் பதினாறு கலைகளுடன் திகழ்பவன் திருபாற் கடலில் தோன்றிய சிறப்பும் உடையவன், குளிர்ந்த ஒளி உடையவன் சந்திரனது குளிர்ந்த ஒளியைக் கண்டபோது கடல் பொங்கும். சந்திரன் இடபராசிக்கு உரியவன். அழகிய வளத்தைக் கொண்டவன். அவன் அழகுடையவன் என்பதால் அவனை மாதர்களின் முகத்திற்குப் புலங்கள் ஒப்புமை கூறுவதை அறியலாம். சேக்கிழார் பெருமானும் பெருமைமிக்க அறிவுடையவர். பல்கலைக்குரிசில், இவரது தோற்றத்தால் வம்பர் கூடிய அவைகள் அலறி வாய் அடங்கின.

சேக்கிழாரின் பெருமைகள்

சேக்கிழார் பெருமான் சாந்த வடிவினர். உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பின்மையாலும், மற்றைய பணிக்குப் பழுதுண்டு ஆதலாலும் இவர் எருதால் ஏராம் கலப்பை வளத்தால் உழுது உண்ணும் பெருமை கொண்டவர். குடியில் சிறந்து விளங்கியவர், ஆகையால் சேக்கிழார் சந்திரனுக்கு ஒப்பாவர்.

அம்புலியும் சேக்கிழாரும்

சந்திரன் தோன்றத் தாமரைகள் குவிந்துவிடும். அத்தகைய ஒளிக் கதிர்களைப் பெற்றவனாகத் திகழ்கிறான். நட்சத்திரங்களுடன் பொலிபவன் ஆயினன், அத்திரிமா முனிவர் விழியினின்று வந்தவர். இறைவன் சடாமுடியில் இருக்கும் கங்கையுடன் சந்திரனும் இருப்பவன். உலகுக்கு ஒளிதரும் பேறு பெற்றவன். பொருள்களின் விளைச்சலுக்குப் பால் சுரபித்து உலக உயிர்களைக் காப்பவர். சேக்கிழார் பெருமானாரும் அன்பர்களது கைகளாலய தாமரைகள் குவிய விளங்குபவர். வீடு முழுவதும் நெல் நிரம்பக் கொண்டு மகிழ்பவர். சிவனது கண்போல் பொலிபவர். வேளார்கள் கங்கா நதி சம்பந்தமுடையவர்கள் அவர்களை கங்கை புத்திரர்கள் என்று கூறுதல் உண்டு. வேளாளர்கள் உலகுயிர்களை உழவு வளத்தால் காப்பவர். இக்காப்புத் தொழில் சேக்கிழார்க்கும் உண்டு. இத்தகைய காரணங்களால் சந்திரனும் சேக்கிழாரும் ஒருவரோடு ஒருவர் ஒப்பாவர். இவ்வாறு செவிலித்தாய் சந்திரனுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் ஒப்புமை கூறி அவனோடு விளையாட வருமாறு அம்புலியை அழைகின்றாள்.

பின்வரும் பாடல் இங்கு சான்றாய்வுக்கு மேற்கொள்ளப் பெறுகின்றன.

பாடுமதியோன் எனப் படுகலால் வாய்விண்டு
பதினாயிரம் சுரும்பர்
பண்பட இன்நறவு வீசுகழுநீர்மாலை
பாங்குற உவந்திடுதலால்..............

அருள் உருத்தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலி ஆடவாவே

என அம்புலிக்கும் குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெற்றுள்ள பாட்டுடைத் தலைவனுக்கும் சிலேடை அணி விளங்க ஒப்புமை கூறப்பெற்றுள்ளது.

அம்புலியின் குறைவும் சேக்கிழாரின் நிறைவும்

சேக்கிழாரோடு சந்திரனை விளையாட வருமாறு அழைத்தபோதும் சந்திரன் குறைபாடு உடையவராகவும், சேக்கிழார் நிறைவுடையவராகவும் விளங்குகிறார். சந்திரன் இரவில் தோன்றுபவனும் யாசிப்பவனும் ஆவான். ஆகையால் இரவோன் என அழைக்கப்படுகிறான். சேக்கிழார் இல்லை என்று கூறாத வேளாளர் பெருங்குலத்தில் தோன்றியவர். கள்வன் சந்திரன் வருகையினை எண்ணி மகிழ்கின்றான்.

சேக்கிழார் எப்பொழுதும் கள்வர்களை வெறுப்பவர். இவர் மிகவும் நல்லவர். ஆனால் சந்திரன் சிற்சில சமயங்களில் நல்ல பெயர் எடுப்பதில்லை. சேக்கிழார் தேவர்களுள் ஒருவராகக் கோயில்களில் வணங்கப்பட்டு வருகிறார். சந்திரன் தேவர்களுள் ஒருவனே ஆனாலும், இராட்சதன் என அழைக்கப்படும் தானவன் என்னும் பெயரைக் கொண்டவன். ஆகையால் அவன் சிறுமையுற்றவன் ஆகின்றான். இது போன்று பல பாடல்கள் சேக்கிழார் பெருமானுக்கும் சந்திரனுக்குமுள்ள பேத உபாயங்களைப் பற்றிக் கூறுகின்றன. இவ்வாறெல்லாம் கூறியழைத்தும், அம்புலி குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனோடு விளையாட வரவில்லை. அம்புலி வந்து விளையாடினால் கைக்கூடும் நன்மைகள் அடுத்துக் கூறப்படும்.

சந்திரனால் விளையும் பயனைச் சேக்கிழார் நன்கு உணர்வர். இவர் சந்திரன் போல நன்றி மறந்தவர் இல்லை. சந்திரன் ஒளிபடுவதால்தான் பயிர், செடி, கொடி மரங்கள் எல்லாம் கருக்கொள்கின்றன.

சேக்கிழாரின் அருள்

பயிர்த்தொழிலைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட சேக்கிழார் சந்திரனால் உண்டாகும் பயனை அறியாரல்லர். சந்திரனுக்குள்ள கூனை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உண்டு. சேக்கிழாருக்குக் கூன் மேல் நிரம்ப வெறுப்பு உண்டு. இவர்தம் பெரிய புராணச் செய்யுள்களில் எங்கும் கூன் வைத்தவரில்லை சேக்கிழார் தொடர்பு சந்திரனுக்குப் பெரும் பயன் நல்க முடியும். சந்திரன் களங்கம் உடையவன். அது அவனின் அழகைப் பாழ்ப்படுத்துகின்றது. களங்கம் தீர்ப்பதில் சேக்கிழார் கை தேர்ந்தவர். தலை மயிர் பறித்தும், அறையிற் பாயுடுத்தும், தழைத்திள் கைவைத்தும் உழலும் சழக்கர்களாகிய சமணர் நெறிக் களங்கம் இவராலேயே நீங்கியது. கலைகள் பலவற்றிலும் தேர்ச்சி படைத்தோர்

பலர் இவர் கடைக்கண் நோக்குக் காத்து நிற்கின்றனர். இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட சேக்கிழார் சந்திரனைக் கடைக்கணித்தழைப்பது இவர்க்கு இயல்பாக உள்ள இரக்கத்தாலாகும்.

சந்திரன் மறுப்பும் சேக்கிழார் சினமும்

இப்படி தான் உபாயம் மேற்கொண்டழைத்தும் அம்புலி வரவில்லை. எனவே தண்ட உபாயம் மேற்கொண்டு குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனோடு விளையாட வருமாறு அழைக்கப்பெறுகின்றான். சேக்கிழார் சந்திரனிடத்துக் கடுஞ்சினம் கொண்டிருக்கிறார். அன்பாகப் பலமுறை விளையாட அழைத்தும் சந்திரன் வராமையால் அவர் முகம் வெதும்புகிறார், சந்திரன்பால் களங்கம் இருப்பதால் சேக்கிழார் எதிரே வர நாணுகிறான். ஆதலால் சினம் கொள்ள வேண்டாம் எனச் செவிலித்தாய் சேக்கிழாரிடம் வேண்டிக் கொண்டிருக்கின்றாள். இனியும் சினம் தணிப்பது தம்மால் இயலாது. அச்சினம் உள்ளது நொடிப் பொழுதேயினும் அதனைத் தாங்கும் ஆற்றல் சந்திரன் பெற்றிருக்கவில்லை. வேறு போக்கும் சந்திரனுக்கு இல்லை. சந்திரன் ஒரு பொடிப் பையன் எனச் சொல்லிச் சேக்கிழார் அவன்மேல் ஒரு செய்யுள் திருவாய் மலர்ந்தருள்வரேல் சந்திரன் பிழைப்பு அழிந்தொழியும். சிவபெருமான் திருமுடிமேல் இப்போது அமர்ந்து திகழ்கின்றான். இந்நிலையில் சந்திரன் தன் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கவில்லை. சேக்கிழார் செய்யுளைக் கேட்கும் சிவனாரும் சந்திரனைச் 'சீ' என வெறுப்பர். சேக்கிழார் வாய்ச்சொல்லில் சிவபெருமானுக்கு அவ்வளவு மதிப்பு. அதனால் சந்திரன் அழிவான். அவ்வழிவைத் தவிர அவனுக்கு வேறு முடிவு எதுவும் இல்லை. இம்முடிவை சந்திரன் தன் மனக்கண் முன் கொண்டு வந்து விரைவில் ஓடி வந்தால் அவனுக்கு பிழைப்பு உண்டு. சேக்கிழார் அருளே உருவானவர். அருண்மொழித்தேவர் எனும் இயற்பெயரினர். ஆகையால் சந்திரனை மன்னிப்பார் எனச் செவிலித்தாய் சந்திரனை நோக்கிக் கூறி அவனை குழந்தையாகப் பாவித்து பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனோடு விளையாட வருமாறு அழைக்கின்றாள்.

இவ்வாறு பிள்ளைத் தமிழ் இலக்கியங்களில் அம்புலிப் பருவம் திட்ப நுட்பத்துடன் அமைக்கப்பெற்றுள்ளன. இயற்கை வருணனைக்கு மட்டுமே பாடுபொருளாயிருந்த நிலவை முன்வைத்துப் பாட்டுடைத் தலைவனின் சிறப்புக்கள் வெளிப்படுத்தப்பெறுகின்றன. படைப்பாசிரியர்களின் உழைப்பும் ஆற்றலும் வெளிப்பெற இப்பருவமே மிகுதியும் துணைபுரிவதைக் காணமுடிகின்றது. குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனாகிய சேக்கிழாரின் சிறப்பு மிகவும் அளப்பரிது. இங்கு திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் சேக்கிழாரின் அம்புலிப் பருவப் பாடல்கள் பிற்காலங்களிலும், தற்காலத்திலும், திரைப்படப் பாடல்களிலும் அம்புலியைச் சிறப்பித்துப் பாடுவதற்கு அடித்தளமாகவும், தூண்டுகோலாகவும் அமைந்துள்ளதென்றால் அது மிகையாகாது.

83.செந்தமிழ் மணக்கும் முருகர் பிள்ளைத்தமிழ்

சி.ரவி
திருப்பனந்தாள்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய புகழ்மிக்க சிற்றிலக்கியங்களில் திருவிடைக்காழி முருகர் பிள்ளைத்தமிழும் ஒன்றாகும், இந்நூல் அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்ற இனிய நூலாகும், இது 'திருவிடைக்கழி' என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மேல் இயற்றப்பெற்றதாகும், நாகப்பட்டிணம் மாவட்டத்தில் திருக்கடையூருக்கு அருகில் இவ்வூர் உள்ளது. இத்தலத்தின் பெயர் விடைக்கழி எனவும் இடைக்கழி எனவும் வழங்கும். அந்தத் தலத்தைச் சேர்ந்த சுப்பராய பிள்ளை இந்நூலைப் பாடச் செய்தவர் ஆவார்.

தலத்தின் பின்னணியும், தலத்தின் பொதுச் செய்திகளும், புராணச் செய்திகளும் விரவிவரப் பாடப்பட்ட பெருமையுடையது இந்நூல். தலத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்ட பிறகே இந்நூலை இயற்றியுள்ளார் என்பதை மேற்கூறப்பட்ட செய்தியால் உணர்ந்து கொள்ளலாம்,

இத்தலத்தில் முருகப்பெருமான் குராமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ளார் என்பதைக்

குலவிடைக் கழியின் மகிழ்வனத் திலொரு
குரவடிக்கணமர் நீபமாலைப்புய வேளைப்புரக்கவே

(காப்புப் பருவம்-2)

தேமலர் மேயகு ராநிழல் வாழ்பவ செங்கோ செங்கீரை

(செங்கீரைப் பருவம்-10)

என்று பாடியுள்ளமையால் அறிந்து கொள்ளலாம், இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் பெயர் பாவநாசப் பெருமான் என்பதை,

வழுவில் பத்திமையர் இருதயத்தளியின் மணிவிளக்கினமர்
பாவநாசப் பெருமானைப் பழிச்சுதும் (காப்புப் பருவம்-2)

என்று இசைப்பதால் உணர்ந்து கொள்ளலாம்.

இத்தலத்து இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றோர் இன்னார் இன்னார் என்ற புராணச் செய்தியை

பொருள்சால் பொகுட்டிதழ் மணத்தவிசின் நான்முகப்
புத்தேள் முதற்புலவரும்
பொறிபுலன் அடக்கியொரு நெறியுறு வசிட்டன்முற்
புண்ணியத் திருமுனிவரும்
வெருள்சான் முனைத்தனைய வேற்கைமுசு குந்தனொடு

வேந்தன்முற் பலவரசரும்
மேவிப் பணிந்துளத் தெண்ணிய தடைந்தவிம்
மேதகுதலம் (பா-9)

என்று அம்புலிப் பருவத்துப்பாடலால் வெளியிடுகிறார் புலவர்.

பிள்ளையவர்கள் தமிழிடத்துப் பற்று மிக்கவர் என்பதைத் தமிழைப் புகழ்ந்துரைக்கும் இடங்களால் உணர்ந்து கொள்ளலாம் தமிழை உளமாரப் போற்றிப் புகழ்கிறார். 'இன்தமிழ்' என்றும் 'செந்தமிழ்' என்றும் தமிழைப் போற்றும் புலவர் திருவிடைக்கழியைத் தமிழ் மணக்கும் ஊர் என்ற பொருளில்,

செந்தமிழ் மணந்தழை நடைக்கழி விடைக்கழி
(வாரானைப்பருவம்-5)

என்று பாடுவது போற்றத்தக்கது. இடைக்கழி உறையும் முருகனைத் தமிழொடு தொடர்புபடுத்தி

தமிழ்தெரி சங்கத் தலைமைப் புலவர் (தாலப்பருவம்-6)

என்று பாடுவதும் பாராட்டத்தக்கது. சமயம் நேரும்போதெல்லாம் தமிழைப் போற்ற மறப்பதில்லை புலவர்.

எதையும் அற்புதமாக வருணிக்கும் ஆற்றல் படைத்தவர் புலவர். வருணிக்கும் திறமே புலவரின் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடியது. வருணிப்பதற்குப் பன்னூற் பயிற்சியும் கற்பனை வளமும் வேண்டும். இரண்டும் கைவரப்பெற்ற காரணத்தால் பிள்ளையவர்களின் வருணனை மனத்தைக் கவரக் கூடியதாக உள்ளது. வருணனை அழகுக்கு,

மின்னும் பளிங்கீர்ந்து எடுத்தென்ன விளக்கஞ் சால்வெண் திருவுருவும்
வெள்ளித் தகடுஞ் சமழ்ப்பவிதழ் விரிக்கும் வெண்டா மரைமலரு
மன்னும் படிக வெண்மாலை வடமும் உவக்கும் அதற்கேற்ப
மாறா வெள்ளை மதியுடையேம் வாக்கும் புகுந்தாள் பதம்பணிவாம்
(காப்பு பருவம்-8)

என்ற பாடலை உதாரணமாய்க் காட்டலாம். கலைமகளின் திருவுருவத்தைக் கண்முன் நிலைநிறுத்துவது போலப் படம் பிடித்துள்ளார் புலவர் எனலாம்.

பாட்டுடைத் தெய்வத்தை மேன்மைப்படுத்திப் புனைவது புலவர்கள் இயல்பு. இயல்பாகப் பரம்பொருளாக உள்ள குமரக் கடவுளைப் பாடுவதால் மேன்மைப் படுத்திப்பாடுவதில் சிரமம் ஏதும் இல்லை.

ஆட்டுஞ் சமயம் ஆறினுக்கும் ஆதா ரங்கள் ஆறினுக்கும்
அத்து வாவோர் ஆறினுக்கும் அமையும் தானே முதலென்று
தீட்டும் படியா வருந்தெளியத் தெளித்தாங்கு ஆறு முகந்திகழச்
செல்வ மலியும் இடைக்கழிவாழ் சேயைப் பரிந்து காக்கவே
(காப்புப் பருவம்-9)

என்று பாடுகிறார். கந்தக் கடவுள் ஆறு சமயங்களுக்கும் ஆறு ஆதாரங்களுக்கும் ஆறு அத்துவாக்களுக்கும் தாமே முதல்வர் என்பதைத் தெரிவிக்க ஆறு திருமுகங்களோடு விளங்குகிறார் என்று தத்துவச் செறிவோடும் கற்பனை அழகோடும் கூறுவது சிறப்பானது.

சிற்றில் பருவப் பாடல்களும் வருகைப்பருவப் பாடல்களும் சிறப்பானவையாகும்; படித்து இன்புறத் தக்கனவாகும்; பிள்ளையவர்களின் கவித்திறனுக்குச் சான்று கூறுவனவாய்த் திகழ்பவையாகும்.

சிற்றில் பருவத்தில், பெண்கள், முருகக் கடவுளை நோக்கி, 'முருகா! உன்னை நினைந்து உருகும் அடியார்களுடைய வினை முதலியவற்றைச் சிதைத்தருள்க; எம்முடைய சிற்றிலைச் சிதைக்க வேண்டாம்' என்று வேண்டுவதாக உள்ள

கண்ணீர் பெருக உருகியுளம் கசிநின் அடியார் மலமாயா
கன்மம் முழுதும் சிதை; அவர்முற் கடிய வினையைச் சிதை; அவர்தம்
எண்ணீர் பிறவிக் கணக்கெழுதும் ஏட்டைச் சிதை; நீ யே பரமென்று
எண்ணா திழுதை உறும்கனகர் எண்ணம் சிதை; மற் றிவைதவிர்ந்து
புண்ணீர் கவரும் வடிவேற்கைப் புலவா! புலவர் போரேறே!
பொறியி லேஞ்சிற் றிலஞ்சிதைத்தல் புகழோ! அலது புண்ணியமோ
தெண்ணீர் வளங்கூர் விடைக்கழிவாழ் செல்வா! சிற்றில் சிதையேலே!
சிந்திப் பவர்உள் ளூறமுதத் தெளிவே! சிற்றில் சிதையேலே!

(சிற்றில் பருவம்-6)

என்ற பாடல், சொற்பொருட் பின்வரு நிலையணியழகோடு அமைந்து, இன்பம் தரத்தக்கதாக உள்ளது.

'சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருந்த பொழுது, உமாதேவி வந்து, ஒரே உருவாகச் செய்தபோது, ஆறு திருமுகங்கள் அமைத்ததற்கேற்பப் பன்னிருகைகள் அமையாமல் விட்டது நாங்கள் செய்த புண்ணியமே' என்ற கருத்தில்,

நையா நின்ற சிறுமருங்குல் நங்கை உமையாள் பரமனொடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரைவாய் நண்ணி முகம்ஆ றினுக்கேற்பக்
கையா றிரண்டு புரிந்ததுபோற் காலா றிரண்டு செய்யாது
கருதி யிரண்டே செய்தனள்;மன் கடையேஞ் செய்த நல்வினையால்
நெய்யா இரண்டாய் இருந்துமவை விளைக்குங் குறும்பு
பொறுக்காதாய்
விளைந்தது இனியாம் செயலென்! வீடு தோறும் விடாதமர்ந்து
செய்யாள் மகிழும் விடைக்கழிவாழ் செல்வா! சிற்றில் சிதையேலே!
சிந்திப் பவர்உள் ளூறமுதத் தெளவே! சிற்றில் சிதையேலே!

(சிற்றில் பருவம்-9)

என்று பாடிய பாடல் நகைச்சுவையுணர்வு மிக்கோங்கும் பாடலாகும்.

வருகைப் பருவத்துப் பாடல்களைப் பாடும்போது, புலவர்கள் எல்லோரும் உருக்கமாகப் ப.ாடுவார்கள். பாட்டுடைத் தலைவனை அல்லது

தலைவியை முன்னிறுத்திப்பாடுவது போல உணர்ச்சி மேலிடப்பாடுவார்கள். பிள்ளையவர்களும்.

விண்ணே வளியே ஒளியழலே விரியும் புனலே மேதினியே
வெளிய மதியே செங்கதிரே மேய உயிரே யுயிர்க்குயிரே
பண்ணே பண்ணின் உடனமையும் பாட்டே! பாட்டின் உட்பொருளே!
பகரா றாறுக் கப்பாலாம் பரமே! பரவு வார்வரமே!

எண்ணே எண்ணின் மறைக்கொழுந்தே எண்ணி எழுதற் கரியபுகழ்
ஏறே யமையோர் பேறே!நன்கு இமயம் உயிர்த்த பெருமாட்டி
கண்ணே! கண்ணுக் கினியஇளங் களாய்! வருக! வருகவே!
கழியா வளங்கள் பொழியும்விடைக் கழியாய் வருக வருகவே

(வருகைப் பருவம்-9)

என்று உருக்கமாகப் பாடியுள்ளார். விண்ணே! வளியே! ஒளியழலே! என்று விளித்துப் பாட்டே! பாட்டின் உட்பொருளே! என்று அழைத்து, வருக! வருக! என்று முடிக்கும்போது, பாடல் உணர்ச்சி நிறைந்ததாக அமைகிறது.

இவ்வாறு, தலவரலாற்றுச் செய்திகள்-தமிழ் உணர்வு-வருணனைத்திறம்- தத்துவக் கருத்து-உருக்கம்- நகைச்சுவை- உணர்ச்சி அமையத் 'திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்' - விளங்குகிறது. பாடப்பட்ட காலத்தில் அறிஞர் பலராலும் பாராட்டப்பட்ட நூல் என்று உ.வே.சா குறிப்பிடுவதும் நினைக்கத் தக்கது.

84. பிள்ளைவர்கள் கற்பனையும் சொல்லாட்சியும்

துு.லலிதா
கோயம்புத்தூர்

பிற்காலத் தமிழ்ப் புலவர்களில் குறிப்பிடத்தகும் இடத்தைப் பெற்று சிறப்புடன் திகழ்ந்த பேராசிரியர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்யைவர்களால் பாடப்பட்டது சேக்கிழார் பிள்ளைத்தமிழ். சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த இப்பிள்ளைத்தமிழ் நூலில் கூறப்படும் சேக்கிழார் வரலாறும் செய்திகளும் பெரியபுராணம், சேக்கிழார் புராணம் தரும் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அமைவன. கடவுளர்களில் ஆண்களும் பெண்களும் பாட்டுடைத் தலைவராக விளங்குதல் போல, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புறும் மக்களையும் பாட்டுடைத் தலைவராக்கும் வழக்கு பிள்ளைத் தமிழில் உண்டு. அவ்வழக்குக்கேற்ப சேக்கிழாரைப் பிள்ளையாகப் பாவித்து எழுதப்பட்ட இந்நூலுள் கற்பனை, சொல்லாட்சி முதலிய செய்யுளுக்குரிய பலவகை நயங்களும் ஒருங்கு விளங்கக் காணலாம்.

உள்ளதை உள்ளவாறு உரைப்பது அறிவியல். அதையே உள்ளம் கொள்ளுமாறு உரைப்பது இலக்கியம். புலன்கள் நேரடியாக ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவுக்குக் கொண்டு வரும் ஒருவகைச் சக்தியே கற்பனை என்று பலரும் கருதுகின்றனர். நினைவு என்பதற்கும் இவ்வரையறை பொருந்துமாகையால் கற்பனைக்குரிய இலக்கணமாக அதைக் கொண்டுவிட முடியாது. அவ்வாறாயின் கற்பனை என்பது என்ன என்னும் வினா எழல் இயல்பே. அறிவியல் முடிவு போல் இன்னது தான் கற்பனை என்று அதைத் தெளிவுறுத்த முடியாவிடினும் முன்னர்க் கண்ட அல்லது அனுபவித்த பொருள்களோடும் மக்களோடும் கொண்ட உறவால் அப்பொருள்களையும் மனிதர்களையும் பற்றிய அனுபவத்தை மிகுத்தும் நிகர்த்தும் குறைத்தும் உள்ளம் கொள்ளுமாறு நயம்பட உரைப்பதே கற்பனை என்று பொதுவாகக் கூறலாம்.

தாலப்பருவத்தின் முதற் பாடலில் கற்பனை நயம் செறிந்திருப்பதைக் காண முடிகிறது. சங்குகள் ஈன்ற முத்துக்களை ஒருங்கு சேர்த்து, கரையில் குவித்த உழவர்கள் பின்னர் கள்ளை உண்ட மயக்கத்தால் அன்னப் பறவைகள் அம்முத்துக் குவியலில் அமர்ந்திருப்பதைப் பார்த்து அவற்றை அன்னங்களின் முட்டைகள் என்று கருதி மயங்கி பின்னர் நாணுவர் என்னும் பகுதி முத்துக்கள் மிகுதியை உடையது குன்றத்தூர் என்னும் அதன் வளத்தைக் கூறுவதோடன்றி ஆசிரியர் கற்பனைத் திறத்துக்கு எடுத்துக் காட்டாகவும் அமைகிறது. வெண்மையான நிறம் கொண்ட முத்துங்கள் அளவில் பெரியனவாய் விளங்கின என்பதும் அவை

அன்னப்பறவைகள் திரளாகக் கூடி அமருமாறு ஒருங்குச் சேர்த்து குவிக்கப்பட்டிருந்தன என்பதும் அதைக் கண்ணுற்ற மயக்கமுடைய உழவர்கள் வெள்ளிய அன்னங்களையே அவற்றின் முட்டைகள் என்று கருதினர் என்பதும் எண்ண இனிப்பதாகும், அன்னப்பறவைகள் அளவுக்கு முட்டைகள் பெரிதாக அமைந்திருந்தன என்று அவர்கள் எண்ணுவதற்கு அடிப்படை கட்குடி மயக்கம் என்பதும் அக்கள்ளின் மிகுதி வளத்துக்கு காரணமாக அமைவதே என்பதும் இதன் வழி அறியப்படும்.

வெண்ணந் துரறி வயிறுளைந்து
வீற்று வீற்றாக் கருவுயிர்த்த
வெண்ணித் திலத்தை யரித்தெடுத்து
வெள்வாய்க் களமர் கரைகுவிக்க
வண்ணந் துவரென் றுவமிக்கும்
வாயோ திமநீர் குடைந்தெழுந்து
மற்றக் குவியன் மேலிவர்ந்து
மருவி முதிரா வெயில்காயக்
கண்ணந் துறவுண் டெழுதருமக்
களமர் மரால முட்டையினைக்
கதிர்நித் திலமென்று றக்குவித்தோங்
கடையே மயங்கி யெனநாணும் (தாலப்-1)

என்பது இக்கருத்தமைந்த பாடல்.

சேக்கிழார் தொண்டை நாட்டைச் சேர்ந்த குன்றத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவராகையால் அந்நாடு, நகர்ச் சிறப்புகள் இப்பிள்ளைத் தமிழில் பயின்று வந்துள்ளன. இயற்கை வளம் கொழிக்கும் பகுதிகளைத் தம்மகத்துக் கொண்டனவாய் அவை சிறப்பிக்கப்படுகின்றன. குறிப்பாக, சிற்றில் பருவத்துப் பெரும்பகுதி தொண்டை நாட்டுச் செல்வத்தைப் பற்றிய கற்பனையும் தாலப்பருவத்து முற்பகுதியும் முத்தப் பருவத்துப் பிற்பகுதியும் குன்றத்தூர்ச் செல்வம் பற்றிய கற்பனையும் கொண்டனவாக விளங்குகின்றன. சான்றாக, சில காணலாம்.

பாலூட்டிக் குழந்தையை வளர்க்கும் தாய்போல் நீரூட்டி தொண்டை நாட்டைச் சேர்ந்த ஊர்களை வளர்ப்பது பாலாறு. அது நந்தி என்னும் பெயர் கொண்ட மலையில் தோன்றி வருவது. அம்மலையில் தவம் செய்த வசிட்ட முனிவரிடமிருந்த காமதேனு என்னும் தெய்வப்பசு பொழிந்த பாலே ஆறாக ஓடியது. அங்கங்கு அது ஓடி ஓடை, ஏரி, குளம், கிணறு, பொய்கை, வாய்க்கால் முதலிய இடங்களைப் பாலாக்கி, பின்னர் கருமையான நிறம் கொண்ட கடலில் கலந்தது. அப்போது கடலே பால் மயமாகும் காட்சியைத் தந்தது. அக்காட்சியைக் கண்டவர்கள் திருமால் அறிதுயில் கொள்ளும் இதுவோ, அதுவோ என ஐயுறுவர். இத்தகைய வளமிகுதியும் வெள்ள மிகுதியும் கொண்ட நாடு தொண்டை நாடு என்று அந்நாட்டை கற்பனை நயம் தோன்றக் கூறுகிறார்.

பாலாற்றின் நீரைக் கொண்டு விளங்கும் பொய்கைகள் பலவிடங்களிலும்

உள்ளன. அப்பொய்கைகளில் தாமரை முதலிய மலர்கள் மலர்ந்துள்ளன. அம்மலர்களில் அன்னப்பறவைகள் அமர்ந்திருக்கும் காட்சி, மேலோர் நல்ல ஆசனங்களில் அமர்ந்துள்ளது போலத் தோன்றுகிறது. அவ்வாறுள்ள பறவைகள் அஞ்சி நிலைகுலையும்படி எருமைகள் அப்பொய்கைகளில் ஓடி வந்து விழுகின்றன. சான்றோர் குழுவில் கயவர் புகுந்தது போல உள்ளது இந்தக் காட்சி. எருமைகள் விழுந்ததால் அச்சங்கொண்டு துள்ளி மேலெழுந்த வாளை அருகிலிருந்த தென்னையில் மோதியதால் அதன் காய்கள் உதிர்ந்தன. காய்கள் உதிர, எருமைகள் அஞ்சிக் கரை சேர்ந்தன. துள்ளி மேலெழுந்த வாளை மீன் தன் உடலழுக்கு தேவகங்கை நீராலும் நீங்காதென்று கருதி, முழு மதியின் நடுவிடத்தைப் பிளக்க, அங்கிருந்து ஒழுகிய அமுத தாரையொடு தானும் விரைந்து கீழிறங்கியதாகக் கற்பனை செய்கிறார் கவிஞர்.

வாளை மீன் போலவே வரால் மீன் பற்றிய காட்சியும் நூலுள் இடம் பெறுகிறது. நந்தி மலையில் பெருமழை பெய்ய, பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வரும். யானைகளையும் உருட்டிக் கொண்டு வரும் அப்புது வெள்ளத்தில் வரால் மீன் எதிரேறிச் செல்லும், உருண்டு வரும் யானை மேல் எதிர் சென்ற மீன் முட்டியதும் அது அச்ச மிகுதியால் துள்ளிக் குதிக்கும். தன்னை விட்டு விலகிச் சென்று விட்ட கன்றைத் தேடிக் கொண்டிருந்த தேவலோகக் காமதேனுவின் மடியில் அம்மீன் முட்ட தன் கன்றுதான் பாலுக்கு முட்டியதாக எண்ணி அது பாலை நிறையச் சொரியும். அப்பால் முழுவதும் வரால் மீன் வானத்தில் செய்த துளை வழியே கீழிறங்கி, பாலாற்றில் கலக்கும், காதமேனுவின் பாலால் அவ்வாற்றுக்கு ஒரு காலத்து உண்டாய பெயரைப் புதுப்பிப்பது போல அது விளங்கும்.

வாழைக்குருத்து நீண்டு வளர்ந்து முழுமதியின் நடுவிடத்தே முட்டிக் கொண்டிருக்கும் தோற்றம் காமவேளின் கொற்றக்குடைக்கு அமைந்த காம்பு போல விளங்கும். தேமாஞ்சோலைகள் மற்றொரு பக்கம் செழித்து வளர்ந்திருக்கும். மேலும் மரங்கள் இலைகளை உதிர்த்து, புது தளிர்களைத் தாங்கி நிற்கும். அத்தளிர்கள் செந்நிறம் கொண்டவையாகையால் மரத்துக்கு மேலாக உயர்ந்து செல்லும் கருநிற மேகங்கள் அவற்றைத் தழுவிக் கொண்டு செல்லும் காட்சி, செந்தீ வண்ணராகிய சிவபிரான் யானைத்தோல் போர்த்தியிருப்பது போலத் தோன்றும் என்பதாக அமைகிறது காட்சி. இவ்வருணனைகளில் உவமையும் உயர்வு நவிற்சியும் ஒரு சேர இடம் பெற்றிருப்பது எண்ணத்தக்கது.

தண்டக நாட்டு வளம் கூற வந்தவர் 'கரிய நிறமுடைய எருமைக்கடா பொய்கையில் பாய்ந்து நீரைக் கலக்க, அதனால் அங்குள்ள வரால் மீன் எழுந்து துள்ளி தென்னையில் மோத. அத்தென்னையின் நெற்றுக்கள் உதிரும் தண்டக நாடு' என்கிறார். இயற்கையிறந்த முறையில் கூறப்படும் உயர்வு நவிற்சிக்கு மற்றுமொரு சான்றாகிறது இது.

கன்னங் கரிய கடாப்பாய்ந்து
காமர் பொய்கை நீர்கலக்கல்
கழிந்தோட் டெடுக்க வராலெழுந்து
கடுக மோதப் பலவுதிருந்
தென்னப் பழத்தண் டகநாடா (சிற்றில்-8)

என்பது அப்பகுதி. சங்க இலக்கியங்களில் அளவிறந்த முறையில் கற்பனை செய்து கூறும் இத்தகைய உயர்வு நவிற்சி இடம்பெறவில்லை. ஆனால் அதற்கு மாறான நம்பவியலாக் கற்பனை பிற்கால இலக்கியங்களில் உண்டு என்பதற்கு காட்டாவது போல் விளங்குவன இவ்வருணனைகள்.

கலைஞர்தம் கலைத்திறத்தை வெளிப்படுத்த கருவியாக அமைவன பலவாகும். அவற்றுள் ஓவியனுக்குத் தூரிகையும் சிற்பிக்கு உளியும் கருவியாமாறு சொற்கள் கவிஞனுக்கு திறமையை வெளிப்படுத்தும் கருவியாகின்றன. அத்தகைய சொற்களைப் பயன்படுத்தும் விதத்தில் உத்தியில் கவிஞரிடை வேறுபாடு மிகுதியும் உண்டு. சொல்லாட்சி முறையில் அவ்வேறுபாடுகளை நன்கறிய முடியும். ஒரு கதை அல்லது வரலாற்றை மையமாகக் கொண்டு இலக்கியம் யாக்கும் புலமையரின் மேம்பாடு சொற்களை தம் கவித்திறத்தால் கட்டியாளும் திறமையைப் பொருத்தே அமைந்திட முடியும். கற்றவர் போற்ற கவிமழை பொழியும் பெருநாவலராக பிள்ளையவர்கள் விளங்கினாரெனின் அவரிடம் அமைந்திருந்த சொல்லாட்சிச் சிறப்பே அதற்குக் காரணமாகும்.

சொல்லும் பொருளும் நன்கு விளங்குமாறு சுருங்கச் சொல்லல் முதலாய அழகுகளெல்லாம் அமைய, அமங்கலச் சொற்களை நீக்கி, விலக்க வேண்டுவனவற்றை விலக்கி, வேண்டுவனவற்றை உள்ளடக்கி, அடியவர்களின் அருமை, பெருமையைப் பாராட்டி கல்லும் கரையுமாறு கவிபாடும் பெருமைக்குரிய பிள்ளைச் சேக்கிழாரை எவ்வாறு ஆசிரியர் பாராட்டுகிறாரோ அவ்வாறாய பாராட்டுக்கள் அனைத்துக்கும் உரியவராக அவரே விளங்குவதை பாடலைப் பயில்வார் அறிந்து கொள்ளுவது உறுதி. பிள்ளைச் சேக்கிழாரைப் பற்றிய அப்பாடல்,

சொல்லும் பொருளும் நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி யமைய வமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல விலக்கியமே
வேறா காதென் றுலகேத்த
அல்லும் பகலு மம்பலவ
ஒருடர் காய வரும்பணிசெய்
தருள் பெற் றுய்ந்த வடியார்த
மருமை பெருமை பாராட்டிக்

கல்லுங் கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தந் தருகவே (முத்த-3) என்பதாகும்.

சேக்கிழாரின் மேன்மையைக் கூறுமுகத்தான் பல்வேறாய சொற் சேர்க்கைகளை அமைக்கிறார் ஆசிரியர். முத்தம் தருவதற்கு குழந்தையை அழைப்பதாக அமைந்த முத்தப் பருவப் பாடலில் (பா-5) சேக்கிழாரின் அருமை, பெருமைகளை நினைந்து நிலத்திலுள்ள கற்பகம், ஞானக்கடல், சைவப் பெருவாழ்வு, குணக்குன்று, நாவலரேறு, அருட்சிந்தாமணி, அறிவில் எழுஞ்சுடர், வாழ்த்துவார் பேறு, பத்தி விளைநிலம், போக்குவரவற்ற பூரணம், புத்திக்கினிக்கும் சுவையமுது என்னும் பொருள்களைக் கொண்டன அவர் கையாளும் சொற்கள். 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்' என்பதே பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழார் பற்றிய கருத்தாதலின், அப்பெருமானுடைய பலவகைச் சிறப்புக்களையும் நன்கு எண்ணிப் பார்த்து, அவற்றைக் கோவையாக்கி அணிசெய்கிறார் ஆசிரியர். இவ்வாறமையும் பாடல்கள் ஏனைய பிள்ளைத் தமிழ் நூல்களிலும் உண்டு. குறிப்பாக, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் இறைவியின் அருமை, பெருமைகளை அடுக்கிக் கூறுவாராய் பழம்பாடல் தொடையின் பயன், தமிழின் ஒழுகு நறுஞ்சுவை, தொழும்பர் உள்ளத்துக்கேற்ற விளக்கு, இளமென்பிடி, இளவஞ்சிக் கொடி, பெருவாழ்வு என்னும் சொற்களை உள்ளடக்கி பாடலை அமைக்கிறார் குமரகுருபரர். அதே வழியில் அமைவதாகவே புண்ணியமுதல், பொங்கொளி மணி, பொய்யாப் பெருவாழ்வு, பொள்ளலின் முத்து, கள்ளமில் வித்து, புரையில் சுவைப்பாகு, தண்ணிய அமுது, மண்ணியல் மதி, தமிழ் நாவலரேறு, சத்திய நிதி, நோய்சாடு பெரும்பகை, இனிக்கும் நறுந்தேன், பத்திரசங்கனி கனி, அண்ணிய பொருள், ஆய்பவ தெருள் என்னும் செங்கீரைப் பருவப் பாடல் தொடர்களும் உள்ளன.

புண்ணிய முதலே பொங்கொளி மணியே
பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலின் முத்தே கள்ளமில் வித்தே
புரையில் சுவைப்பாகே
தண்ணிய வமுதே மண்ணியன் மதியே
தமிழ்நா வலரேறே
சத்துவ நிதியே பொத்திய மலநோய்
சாடு பெரும்பகையே
யெண்ணிய வன்ப ருளத்தமு தூற
வினிக்கு நறுந்தேனே
யென்றும் பத்திர சங்கனி கனியே
யெந்நா ளினுமெங்கட்
கண்ணிய பொருளே யாய்பவர் தெருளே (செங்-7)

என்பது அது.

'நாற்சீரின் நானெறி விளக்கியொளிர் சேக்கிழார்' என்று விநாயகக் கடவுள்

வணக்கத்தில் கூறியவர் பாட்டுடைத் தலைவராக விளங்கும் அவருடைய பெருமைகளையும் சிறப்புக்களையும் எடுத்தோதுவாராய் காப்புப் பருவம் முதலாக சிறுதேர்ப்பருவம் ஈறாக பல்வேறு அடைமொழிகளுடன் அவருடைய பெயரைக் கூறுகிறார். எம்மையாண்ட குன்றத்தூர்ப் பிரான், குன்றை நகராளி, குன்றையூர் வேந்து, குன்றத்தூர் ஒருத்தர், நாவலர் பிரான், குன்றை அருண்மொழி நலத்தன், குன்றத்தூர் உதித்த என் பரமன், வேளாண்குலக்கதிர், குன்றை விமலன், பாலறாவாயர் முற்றோன்றல், குன்றத்தூர் உதித்த பெருவள்ளல், குன்றை நகர் இமய அருளாளி, ஆன்ற தோன்றல் என அவர் பிறந்த குன்றத்தூரைச் சார்த்தி முதலாவதாக அமைந்த காப்புப் பருவத்தில் பெருமை பேசுகிறார். இங்ஙனம் அவ்வூரைச் சார்த்தி சேக்கிழாரின் பெருமை பேசும் தொடர்கள் பிற பருவங்களிலும் நிறைந்துள்ளன. கண்ணனை குழந்தையாகப் பாவித்துப் பாடிய பாரதி, அத்தெய்வக் குழந்தையைச் சிறப்பிக்குமுகத்தான் சின்னஞ்சிறுகிளி, செல்வக் களஞ்சியம், பிள்ளைக் கனியமுது, பேசும்பொற்சித்திரம், ஆடிவரும் தேன், கண்ணிற்பாவை வைரமணி என தொடர்களை உருவாக்கினாற்போல் இங்கு ஆசிரியரும் சேக்கிழாரைச் சிறப்பிக்கும் வகையில் அவர்தம் பல்வேறு பெருமைகளையும் படிப்பவர் சிந்தையில் பதியுமாறு சின்னஞ்சிறு தொடர்களில் கையாண்டுள்ளமை அறியத்தகும்.

ஒரே சொல்லுக்கு இருவேறு பொருள் பயக்க நிற்பது இரட்டுற மொழிதல் எனப்படும் சிலேடையாகும். அம்புலிப் பருவத்தின் முதலிரு பாடல்களில் இருவேறு பொருள்படுமாறு சொற்கள் அமையப் பெற்றுள்ளன. 'அம்புலியே!' எங்கள் சேக்கிழார் பாடல்பாடும் அறிவுத்திறன் வாய்க்கப் பெற்றவர். உனக்கு பெருமைக்குரிய சிவபிரான் முடியில் அமரும் சிறப்பு உள்ளது. வேளாண்குடி மரபில் தோன்றிய சேக்கிழார் பெருமான் கழுநீர் மாலை அணிந்துள்ளார். உன்னைக் கண்டு கழுநீர் மலர, அதனால் நீ மகிழ்கிறாய். தொண்டு காரணமாக இன்ப உருவினனாகிய சிவபிரானொடு கூடும் சிறப்பு பெற்றவர் சேக்கிழார். நீ அவரோடு சேர்ந்து ஒளி வீசித் திகழக் கூடியவன். சேக்கிழார் நிரம்பிய நூற்கலைகளை உடையவர். நீயும் தேய்ந்து மிகும் பதினாறு கலைகளை உடையவன். நீ அழகிய பெரிய கடலில் தோன்றுகிறாய். அவரோ வீணர்களுடைய அவை அலறச் செய்கிறார். சேக்கிழார் அமைதியே உருவானவர். அதுபோலவே நீ அமைதி உருவினனாய் தண்ணொளி வழங்குகிறாய். எம் தலைவர் சேக்கிழார் என்னும் பெயரை உடையவர். அது போன்றே நீயும் 'சே' எனப்படும் இடபராசிக்குரியோனாக உள்ளாய். சேக்கிழார் ஏரால் உழுது உணவுப் பொருள் சேர்க்கும் வேளாண்குடிப் பிறந்தவர். நீ மிகுந்த அழகினைக் கொண்டவனாக விளங்குகிறாய்' என்னும் பொருள்களமைய விளங்குகிறது பாடல்.

ஏது, இரட்டுற மொழிதல் என்னும் இரண்டு அணிகள் கொண்டதாக அமைகிறது ஒரு பாடல்.

நன்பா லெவரு முறத்தரிக்கு
நலங்கூர் நீற்றின் வெள்ளொளியால்
நாவா லெவரு மரமுழக்க
நாளுஞ் செயவாம் பேரொலியா
லெண்பாற் புலவ ரமுது கொளற்
கெந்த விடத்து நெருங்குதலா
லேர்சா லரம்பை யெழுதலினா
லியனா கேசன் வைகுதலாற்
கண்பாற் கரிதோய் திருமடந்தை
காமுற் றிடலான் மாளிகைமேற்
கருமால் கிடந்து கண்டுமிலுங்
காட்சித் திறனாற் பொங்கியெழுந்
தண்பாற் கடனேர் குன்றத்தூர் (தாலப்-2)

என்பது அது. விருப்பத்துடன் அணியும் திருநீற்றின் வெண்மையாலும் எல்லோரும் அரன் நாமத்தை உச்சரிக்கும் ஓசையாலும் எவ்விடத்தும் அறிஞர் உணவுண்ண நிறைந்திருப்பதாலும் வாழைகள் ஓங்கி வளர்ந்திருப்பதாலும் நாகேச்சுரராகிய இறைவன் தங்கியிருப்பதாலும் செல்வம் நிலைபெற்றிருப்பதாலும் கரிய மேகங்கள் தவழ்வதாலும் சிறப்புப் பெற்றது குன்றத்தூர் என்னும் பொருள் படவும் தேவர் அமுதுண்ணுவதாலும் விண்ணுலகத்து அரம்பை வந்து சேர்வதாலும் பாம்பரசனாகிய ஆதிசேடன் உரைவதாலும் இலக்குமி விரும்புவதாலும் கரிய திருமால் அறிதுயில் கொள்வதாலும் என்னும் பொருள்படவும் நின்று குன்றத்தூர் பாற்கடலை ஒத்திருந்தது என்று விளக்குகிறார் ஆசிரியர்.

பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினால் (திருவெம்-3)

என்னும் பாடல் பகுதியில் இறைவனும் இறைவியும் சேர்ந்திருப்பது போல் பொய்கை விளங்கியது என்னும் பாடலில் காணப்படும் ஏது, இரட்டுற மொழிதல் என்பதாகிய அழகுகளைக் கொண்டு விளங்குவதே இது.

காப்புப் பருவ முதற் பாடலிலேயே தமக்குரிய திறத்தால் ஒன்றுபோல் ஒலிக்கும் சொற்களைப் பாடலில் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

ஏர்கொண்ட தில்லைமு வாயிரர்முன் வழுவரு
மெழுவருந் தழுவருமெம
திதயந் தழால்கொண் டுறைந்திடச் செய்தவரை
யெப்போது மேத்தெடுப்பாம் (காப்பு-1)

என்னும் இரண்டாமடியில் காணப்படும் வழுவரும், எழுவரும், தழுவரும்

ட.13

என்னும் சொற்கள் வழு+அரும் என்று பிரிந்து நின்று குற்றமற்ற என்னும் பொருள் பயக்கும் வகையிலும், 'எழுவரும்' என்பது தில்லைவாழ் அந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருளர், விறன்மிண்டர், அமர்நீதியார் என்னும் எழுவரைக் குறித்தது என்னும் பொருள் பயக்குமாறும் 'தழுவரும்' என்பது தழுவ+அரும் என்று பிரிந்து நின்று 'தழுவுதற்கரிய' என்னும் பொருள் பயக்குமாறும் அமைத்துக் காட்டுகிறார். மேலும், இவ்வொரு பாடலிலேயே இறைவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, அவ்வருண்மொழியைக் கேட்டு உவந்து அதன் மேன்மையைப் புலப்படுத்தும் பொருட்டு அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் அச்சொல்லை நடுவிலும் ஈற்றிலுமாக அமைத்தார் என்று கூறி தம் இறை அன்பையும் பணிவையும் சொல்லின் சிறப்பையும் நூலில் ஒருங்கு அறிவித்து விடுகிறார் ஆசிரியர். அடுத்ததாக அமையும் பாடலில் 'எழு' என்னும் சொல் இவ்வாறே பன்முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. எழுமை என்னும் அச்சொல் 'ஏழு' என்பதன் குறுகிய வடிவமாகும். 'எழுகின்ற' என்னும் பொருளைத் தருவதாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'மும்மை' என்னும் சொல் இவ்வகையிலேயே பின்னருள்ள பாடலின் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'மூன்று' என்னும் பொருள் பயக்கும் விதத்தில் அனைத்து இடங்களிலும் ஆளப்படுவதோடு 'ஆறு' என்னும் எண்ணிக்கையைக் குறிக்க 'இருமும்மை' என்று கையாண்டிருப்பதையும் காணமுடிகிறது. இப்பாடலின் (காப்பு-3) மூன்றாமடியில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகளுக்கும் சேக்கிழார் பெருமானை ஒப்பிட்டுரைக்கும் அழகு போற்றுதற்குரியதாம்.

நம்மையருள் சிவபாத விருதய ருளத்துவகை
நண்ணவொண் பொருளாதலா
னாடுமுழ வாரவல மியைதலா லியாவோரு
நாவலர் பிரானென்னலால்

என்பது அப்பகுதியாகும்.

தமிழ் இலக்கணங்களில் கரைகண்ட பிள்ளையவர்கள் அடியவர்களைக் குறிப்பது கூட தனித்தன்மை கொண்டதாக அமைகிறது. திருமால் பிள்ளையைக் காக்குமாறு வேண்டும் ஏனைய தமிழ் நூல்களில் கூறப்படுவது போலன்றி அடியார்கள் குழந்தையைக் காக்குமாறு வேண்டும் முறையில் அமைத்தவர் எவ்வெவ்வடியார் காக்க வேண்டும் என்பதைக் காட்டும் வகையில் அவர்களின் பெயர்களை நேரடியாகக் கூறாமல் தமக்குரிய இலக்கணப் பயிற்சியால்

மும்மையாப் பகரமாதி
மும்மையுயிர் குறினெடி றணித்து மதசப்வூர்ந்து
முதலமையு நாமமுற்றார்.

என்று கூறுவதன் வாயிலாக அகரம் ஊர்ந்த சவ்வை முதலாகக் கொண்ட பெயரையுடைய சண்டேசர், இகரம் ஊர்ந்த் தவ்வை முதலாகக் கொண்ட பெயர்களையுடைய திருநாளைப் போவார், திருக்குறிப்புத்

தொண்டர், உகரம் தனித்து முதலாக அமைந்த உருந்திரபசுபதியார், உகரம் ஊர்ந்த மவ்வை முதலாக உடைய மூர்த்தியார் என்னும் அடியார்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரின் இலக்கணப் பயிற்சிக்குத் தக்கதொரு சான்றாக இது அமைவதோடு அப்பயிற்சியை செய்யுட் சொற்சேர்க்கையில் விளங்குமாறு செய்துள்ள நுட்பம் அறிந்து போற்றுதற்குரியது.

தொண்டை நாட்டு வளம் கூறுமுகத்தான் நறுமணம் கமழும் பல்வேறு இடங்களை வருணிக்கப் புகுந்த புலவர் 'மணக்கும்' என்னும் சொல்லை பாடல் முழுவதும் பயன்படுத்தியுள்ளார். நறிய வாசம் கமழும் என்னும் பொருளுடன் கலத்தல், பொருந்துதல், மணம்புரிதல், கூடுதல், வேட்டல், நேர்தல், விளங்குதல், புணர்தல், அணைத்தல் என்னும் பொருள்களையும் பயந்து நிற்கும் சொல்லாகும் அது அப்பொருள்களிலேயே இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

சேகாறுமணக்கு மடங்களெலாந்
தூய்மை மணக்குஞ் சிந்தையெலாஞ்
சுவண மணக்கு மாடையெலாந்
தொங்கன் மணக்குந் தோள்களெலாஞ்
சேறு மணக்குங் கழனியெலாஞ்
செல்வ மணக்கு மாடமெலாந்
தென்றன் மணக்கு மேடையெலாந்
தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்
நீறு மணக்கு நெற்றியெலா
நெய்யே மணக்குங் கறிகளெலா
நெருப்பு மணக்குங் குண்டமெலா
நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறு மணக்குங் குன்றத்தூர் (தாலப்-5)

என்பது பாடல். ஆயிரம், ஆர் என்னும் சொற்களையும்(செங்-5, தாலப்-10) இத்தகைய முறையில் பயன்படுத்தியுள்ள பாங்கை அறிய முடிகிறது.

பன்னூற் பயிற்சி மிக்கவர் ஆசிரியர் என்பது யாவரும் அறிந்த ஒன்றே. பின்வரும் பாடலொன்றே அதற்குச் சான்றாகும். சப்பாணிப் பருவ முதற் பாடலில் சோழ அரசனின் சிறப்புக்களைப் புலப்படுத்தும் போது 'விரும்புதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் அறியும் நுட்பமான கல்வியறிவும் அவ்வறிவுக்கேற்ற ஒழுக்கமும் அறிஞர்களைத் தழுவிக்கொண்டு அவர் சொற்களை ஏற்றுக் கொள்ளும் உயர்வும் கைம்மாறு கருதாத கொடைப்பண்பும் சேனை சேர்மாட்சியும் பகைவருக்கஞ்சா வலிமையும் இடமறிதல், காலமறிதல் முதலானவற்றைப் பெற்று விளங்கும் சிறப்பும் இன்னாச்சொல் பகராமையும் எப்போதும் நெருங்கிப் பழகுவாரும் உளக்கருத்தை எளிதில் அறியவியலா ஏற்றமும் காட்சிக்கெளிமையும் உடையவன் இவன் என்று உலகோர் நினைத்து சோழ அரசனுக்குரிய மணிகள் பதித்த முடி சூடுமாறு தொட்டுக் கொடுக்கும்

வேளாளர் குடித் தோன்றலாம் சேக்கிழார் தம்முடைய மலர் போன்ற கைகளைச் சேர்த்து சப்பாணி கொட்டுக' என்னும் பொருள்படக் கூறும் இப்பாடலில் அரசன் பெற்றிலங்க வேண்டுவதாக வான்புகழ் வள்ளுவர் கல்வி, அறிவுடைமை, ஒழுக்கமுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், கொடை, படைமாட்சி பகைத்திறம் தெரிதல், இடமறிதல், காலமறிதல் முதலிய அதிகாரங்களில் வகுத்துரைத்த அனைத்துப் பண்புகளையும் தொகுத்துரைத்துள்ளமை புலனாகும். முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போலப் போற்றுபவர் ஆசிரியர் என்பதைக் காட்டுவதாக உள்ளது இக்காட்சி. விழையற முதற் கல்வி. அறியு நுண்ணறிவு, மேதைக்கிணங்கு ஒழுக்கு, இவையுடையார்த்தழீஇ தழீஇயவர் அவர் சொலினி தேற்கும் மேம்பாடு, மழைநிகர், கொடைத்திறன், நனிவருஉ தினியீட்டு மாண்பு, மாற்றலரை அஞ்சா வன்மை, இடம், காலமுதலறிதல், கடியமாற்ற நவிலாத குணம், உழையரும் விருப்பமறியாதல் காட்சிக் கெளிமை என கையாளும் தொடர்களில் அக்கருத்தைக் காட்டுகிறார் அவர்.

மொழிக்கு அடிப்படையாக அமைவன எழுத்தும் சொல்லுமாகும். எழுத்துக்கள், அவ்வெழுத்துக்கள் சேர்ந்து உருவாகும் சொற்கள் ஆகியவற்றின் பயனை நுனித்துணர்ந்து கற்பனை கலந்து கையாளும் இலக்கிய ஆசிரியரின் நயமிக்க கூற்றுக்களே உள்ளீத்தைக் கொள்ளை கொள்ளுவனவாய்த் திகழும். அத்தகைய பயனறி புலவராக ஆசிரியர் விளங்குவதை சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் செவ்வனே காட்டுகின்றன.

85. கலம்பகங்களில் யாப்பியல் பார்வை

நா.லோகநாகன்
புதுச்சேரி

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களுள் வாட்போக்கிக் கலம்பகத்தையும் அம்பலவாணர் தேகிசர் கலம்பகத்தையும் யாப்பியல் நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகம்.

கலம்பக அமைப்பியல்

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்-1495)

என்ற நூற்பாவின் உரையில் பேராசிரியர்,

'புதுவது கிளந்த யாப்பின் மேற்று' என்றதென்னையெனின் புதிதாகத் தாம் வேண்டியவற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதி செய்யுளுமெ்ன உணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப (தொல் பே.உரை.வெ.வா.ப.1028) என்பர்.

கலம்பகத்தின் உறுப்புக்களை முதலுறுப்பு, துணையுறுப்பு என இருவகைப்படுத்துவர். ஐம்பாவும் அதன் இனமும் யாப்பு உறுப்புக்களாகும், மேலும் மடக்கு என்னும் சொல்லணியும் உயர்வு நவிற்சியணியும் சிலேடையணியும் ஆகிய பொருளணியும் யாப்பின் உறுப்புக்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

முதன் முதலில் தோன்றிய பன்னிரு பாட்டியல் நூல்களில் கூறும் கலம்பக உறுப்புக்கள், ஒருபோகு, புயம், அம்மனை, ஊசல், யமகம், களி, மறம், சித்து, காலம், மதங்கி, வண்டு, கொண்டல், மருள், சம்பிரதம், தவசு ஆகும். அதன்பின் தோன்றிய வெண்பாப் பாட்டியல் பத்தொன்பதும், நவநீதப் பாட்டியல் பதினைந்தும், பிரபந்த மரபியல் பத்தொன்பதும், சிதம்பரப் பாட்டியல் இருபதும் இலக்கண விளக்கம் இருபத்தொன்றும் தொன்னூல் விளக்கம் பதினாறும் முத்துவீரியம் பத்தொன்பதும் பிரபந்ததீபிகை பத்தொன்பதும் ஆக உறுப்புக்களின் எண்ணிக்கையிலும் உறுப்புக்களின் பெயர்களிலும் மாறுபட்டுள்ளன. இலக்கணங்கள் தங்கள் காலச் சூழற்கேற்ப இது கலம்பக இலக்கியங்களின் பல்கோண வளர்ச்சியைக் காட்டுகின்றன.

பாட்டியல் நூல்களிடையே ஒத்த இயல்பு தோன்றாமையினால் பாடும் புலவர்களிடையே ஒத்த இயல்பு தோன்றவில்லை. பாட்டியல் நூல்கள் வளர்ந்த நிலையைக் காட்டினாலும் அந்நூல்களுக்குள் ஒற்றுமையைக் காணாமல் வேற்றுமையைக் காண்கிறோம், கலம்பக இலக்கியங்களில்

அகத்துறைகளையும் புறத்துறைகளையும் கலந்து பாடிப் புதுமையான இலக்கிய வகையை உருவாக்கினர். ஆதலால் இதனை விருந்திலக்கியம் என்பர்.

புலவர்கள் தம் புலமைத் திறத்தைக் காட்ட அகத்தையும் புறத்தையும் பாட வல்லவர்கள் என்பதை உறுதிப் படுத்துவதோடு பல்வேறு துறைகளிலும், யாப்புகளிலும், பாடுபொருள்களிலும் பா வல்லவர்கள் என்பதைக் காட்ட கலம்பகம் வாய்ப்பளிக்கிறது.

கலம்பக யாப்பியல்

கலம்பக இலக்கியங்களில் ஒருபோகு, வெண்பா, கலித்துறை என வரும் மூன்று பாவகைகளும் தொடக்கத்தில் அமைய வேண்டும் என்பது பாட்டியல் விதி

சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை (ப.பா.இ.45)

எனப் பன்னிரு பாட்டியலும்

கூறும் ஒரு போகு வெண்பாக் கலித்துறைகள்
மாறில் முதல் உறுப்பாம் . . . .

என வெண்பாப் பாட்டியலும் கூறும். இம்மூன்றும் முதலுறுப்புக்கள்.

வெண்பா, வெண்டுறை, ஆசிரியம், ஆசிரியவிருத்தம், கலிப்பா, கலித்தாழிசை, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, வஞ்சிப்பா, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் ஆகிய பிற பாவகைகளும் கலம்பகங்களில் பயன்படுத்தப்படும் என்று பாட்டியல் நூல்கள் பகர்கின்றன.

கலம்பகம் அந்தாதியாப்பில் அமைய வேண்டும். பிள்ளையவர்களின் கலம்பகங்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

. . . . இவற்றை அந்தாதித்து இயம்பிய கூற்றாய்க் கலந்து பாடுவது கலம்பகம். (பி.ம.5, இல.வி.512) இலக்கண விளக்கப் பாட்டியல் கலம்பகங்கள் அந்தாதியாக வருதலோடு இறுதிப்பாட்டின் ஈற்றுநிலை முதல்பாட்டின் முதல் நிலையோடு மண்டலித்து வருதல் வேண்டும் என்று கூறுகிறது.

கலம்பகச் செய்யுள்கள் ஒரு செய்யுளோடு அடுத்த செய்யுள் எழுத்தாலோ, சொல்லாலோ தொடர்பு கொண்டிலங்குகின்றன. ஆனால் பொருண்மைத் தொடர்பில்லை.

வெண்பா: வெண்பாவின் வகைகளான நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, குறள் வெண்பா, பஃறொடை வெண்பா ஆகியவற்றையும் அதன் இனங்களான ஒரொலி வெண்டுறை, வெளிவிருத்தம் ஆகியவற்றையும் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்.

.... மற்றெல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி என்ற பாடலுக்கிணங்கப் பிள்ளையவர்கள் பாடுதற்கரிய பாடலான வெண்பாக்களைச் சிறப்பாகப்

பாடியுள்ளார்.கட்டுப்பாடுள்ள பாவினை அடிதோறும் தலையாகெதுகை களும் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமைத்தும் அடிகளில் சீர்மோனைகள் சீரெதுகை, சீரியைபுகள் பொருந்த பாடி ஓசை நயம் மிகும் அளவில் பாடியுள்ளார்.

ஆலன்றி ஞான வரசமர்ந்து மேவுபரி
பாலன் றிருவம் பலவாணன் - மாலன்றிக்
கோலரியா னென்றுமயல் கொண்டாய் பெரும்பேதாய்
மாலரியாற் கேது மயல் (பாடல்-41. ப.259)

சங்க இலக்கியங்களிலும் சங்க மருவிய இலக்கியங்களிலும் ஈற்றடியில் சீர்மோனை அமைவதில்லை. ஆனால் பிள்ளையவர் பாடல்களில் சீர்மோனை அமைந்து ஒளிர்கின்றன.

நேரிசையாசிரியப்பா

ஆசிரியப்பாக்களில் இலக்கணம் மிகவும் நெகிழ்வுடையது. பெரும்பாலும் இயற்சீர்களையும், ஆசிரியத்தளைகளையும் பெற்றுவரும். மற்ற சீர்களும் தளைகளும் வரும். அதற்குத் தடையில்லை. சிலேடையிலும் கூத்தராற்றுப் படையிலும் இப்பாவினைப் பயன்படுத்தியுள்ளார்.

அறுசீர் விருத்த வகைகள்

அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிரு சீர், பதினான்கு சீர் ஆகியவற்றாலமைந்த ஆசிரிய விருத்த வகைகளை இயற்றியுள்ளார். இவர் கலம்பகங்களில் நால்வகையான அறுசீர் ஆசிரிய விருத்தங்கள் உள.

அடிதோறும் நான்கு காய்+மா+தேமா

தரைகமழ்வன் பொழிற்றிருவா வடுதுறைக்கண் குரவர்பிரான்
றானாய்த் தெய்வ
விரைகமழும் பலவாண மேலொனுஎன் மைலியயுணர்ந்தேன்
விளம்பக் கேள்
குரைகமழ்தண் கயிலாயத் தொருவண்கா ணாலவனத்
துறைந்தான் முன்னம்
புரைகமழிவ் வரசவனத் துறைவானிப போதவன்சீர்
புகல்வார் யாரே (அ.கலம், பா-5, ப.252)

இவ்வகையில் அதிக பாட்ல்களைப் பாடியுள்ளார். மேலும் அறுசீர் விருத்த வகைகளில் மா+மா+காய், மா+நான்கு விளம்+காய் ஆகிய செய்யுள்களை இயற்றியுள்ளார்.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

<u>விளம்+மா+விளம்+மா+விளம்+விளம்+மா</u>

மாநலம் பொலிய வளர்பொழிற் துறைசை மருவிய வம்பல வாணா
பாநலம் பொலியப் பாடுவோ நின்னைப் பெரிசிலெங் களுக்கெவன்
கொடுப்பா
யூநலம் பொலிய ஆட்டு பு வளர்த்த வுடன் முதன் மூன்றையுங்

கொள்வா
யாநலம் பொலிய வடியவர் பலர்க்கு மருளுநின் வள்ளன்மை யழகே
(அ.ப.வா, கலம் பா-13, ப.254)

இப்பாவகைகளில் மிகுதியாகப் பாடியுள்ளார்.

எண்சீர் ஆசிரியவிருத்தம்

இவ்வகையில் நான்கு வகையான பாக்களை வரைந்துள்ளார். காலம் என்ற பகுதியில் மடக்கு என்ற அமைப்பில் வந்துள்ள

அரையடியில் மூன்றுகாய்+தேமா

மின்னுமற லுறவருந்திக் குயினடுக்குங் காலம்
விடாதுமற லுறவருந்தி குயினடுங்குங் கால
. . . . (வா.போ.க, பா.எண்-27)

இப்பாடலில் இயைபு அடிதோறும் ஈற்றடியில் அமைந்து ஓசை நலத்தைத் தருவதோடு சிலேடையமைப்பையும் நல்குகிறது. மற்ற அமைப்புக்களாகிய இரு காய்+மா+தேமா, விளம்+காய்+விளம்+காய், மா+காய்+மா+காய். போன்ற அமைப்புக்களிலும் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்.

கலிப்பா

பிள்ளையவர்கள் கலிப்பாவகையில் ஒருபோகு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, கலிப்பாவின் இனங்களில் கட்டளைக் கலித்துறை, கலித்தாழிசை, கட்டளைக்கலிப்பா, கலிவிருத்தம், கலிநிலைத்துறை ஆகியவற்றையும் யாத்துள்ளார்.

ஒருபோகு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

இவர்தம் ஒருபோகில் தரவு இரண்டும் தாழிசை ஆறும் அராகம் நான்கும் பெயர்த்து வந்த தாழிசை ஆறும் இரண்டு நாற்சீரோரடியம் போதரங்கம், நான்கு நாற்சீரோரடியம் போதரங்கம், எட்டு முச்சீரோரடியம் போதரங்கம், பதினாறு இருசீரோரடி அம்பபோதரங்கம், தனிச் சொல் பதினைந்தடி நேரிசையாசிரியச் சுரிதகத்தால் நிறைவுள்ளது.

தரவுகள், தாழிசைகள் வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் கலந்து வந்துள்ளன. அராகம் இயற்சீரும் இயற்சீர் வெண்டளையும் வந்துள.

அடிகளின் எண்ணிக்கை இருகலம்பகங்களிலும் வேறுபட்டுள்ளன.

தரவு கொச்சகக் கலிப்பா
தரவே தரவிணை தாழிசை தாமும்
சிலவும் பலவும் சிறந்து மயங்கியும்
மற்றும் விகற்பம் பலவாய் வருநவும்
கொச்சகம் எனம் குறியின ஆகும் (யா.கலம்.பா-86, ப.346).

தரவு ஒன்று மட்டும் வந்தால் தரவு கொச்சகக் கலிப்பாவாகும்.

பாராய்வாட் போக்கிப் பரமனார் எண்காற்புற்
வாரா யறுகாற்புள் வண்டேநீ யாதலினா
லோராய் பயந்தபமுன் னுற்றவிரு காற்புளல
சேரா யவர்பாலென் சிந்தைமய லோதுதற்கே

(வா.போ.க.பா-23, ப.228)

இப்பாடலில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் பொருந்தியுள்ளது.

கட்டளைக் கலித்துறை

அடியடி தோறும் ஐஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே

(யா.காரிகை பிற்சேர்க்கை, ப.200)

சான்று

மலைாய னிலத்து வருவேன் சினக்கமுன் மாமுகில்கா
மலையா னிலத்து வணங்குவல சென்னித் தழும்பரங்க
மலையா னிலத்து விதயோகர் முன்வரு வாரணிம
தலையா னிலத்து மகிழ்ந்திருந் தேற்கத் தருதிரின்றே

(வா.போ.க, பா-25, ப.229)

இப்பாட்டில் முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் வந்துள்ளது. கடையொரு விளங்காயாகி நிறைவுற்றுள்ளது.

கட்டளைக் கலிப்பா

மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே
நேர்முதல் நிறைமுதல் நிரனிறை யானே
பதினோ ரெழுத்தும் பன்னீ ரெழுத்தும்
இயைந்தரை யடியாய் நடந்த ஃதிரட்டித்
தொத்து நான் கிறுவது கட்டளைக் கலிப்பா

(யா.காரிகை பிற்சேர்க்கை, ப.199)

மடக்கு எனும் பகுதியில் கட்டளைக் கலிப்பா வந்துள்ளது.

காலை யம்புய மஞ்சர ணங்களே
காய்ந்த தும்முன மஞ்சர ணங்களே
. . . .

அடிதோறும் அரையடிக்கு மாச்சீர் முன்வர நேரில் தொடங்கின் பதினொரெழுத்தும் நிரையிலிருப்பின் பன்னீரெழுத்தும் வருதல் வேண்டும் என்ற விதிப்படி இப்பாடலில் அரையடிக்கு மாச்சீர் முன்வர பதினொரெழுத்துக்களால் முடிவுறுகின்றன.

கலித்தாழிசை

அடியெனைத் தாகியும் ஒத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே (யா.கலம்.பா-87, ப.366)

பாடும் துறைசைப் பதியம் பல வாண
னாடுங் கலியால நாதன்கா ணம்மானை
நாடுங் கயிலாய நாதனே யாமாயி
. . . . (அ.வா.கலம் பாடல்-12, ப.253).

அடிசலிவாயும் பலவாயும் வந்து தம்மில் ஒத்து ஈற்றடி மிக்கு வருவன எல்லாம் கலித்தாழிசை என்பர்.

கலிநிலைத்துறை

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை (யா.க.88)

ஓரடியில் எந்த இடத்தில் எந்தச் சீர் இருத்தல் வேண்டும் என்பதை விருத்தப் பாவியல் என்ற இலக்கண நூல் மட்டுமே நன்கு விரித்துரைக்கிறது. ஓரடியில் முதற்சீராகக் குறிலீற்றுமாவும் இரண்டாம் சீராகக் கூவிளமும் மூன்று நான்காம் சீர்களாக விளச்சீர்களும் இறுதிச் சீராக மாச்சீரும் இருத்தல் வேண்டும். இதனைக் குறிய மாவொடு கூவிளம் மூவ்விளம் வென்றறிதி என்பது இதன் இலக்கணம். (வி.பா.2:1)

மைய னாம் பொழிற் றுறைசையி ணம்பல வாணன்
பொய்ய ளாமெனை யுந்தடுத் தாண்டனை புகலி
னைய னாங்கொடி யோன் மகா பாதக னண்ணச்
செய்ய ளாமது ரையிண் முணான் டதுபொருஉந் தெளிவே
(அ.வா-50, ப.260)

முதற்சீர் மாச்சீராய் இருத்தல் மட்டும் போதாது. அவை மைய, பொய்ய, னைய, செய்ய என்பன போன்று குறிலீற்று மாச்சீராக இருத்தல் வேண்டும், விளச்சீர் வருமிடத்தில் ஒரோவழி மாங்காய்ச்சீர் அருகி வருதலுமுண்டு.

விளமது வரும்என விதித்த வீட்டினில்
விளமது கொண்டிலாக் காயும் வேண்டுவர் (விரு.பா.இ-12:1)

இப்பா இயல்பான ஆற்றொழுக்கு நடையில் ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளையும் கொண்டுள்ளது.

சந்தப்பாக்கள்

நாரைவிடும் தூது எனும் பகுதியை விளக்க கலிநிலைத்துறை என்ற பா அமைந்துள்ளது.

தழையுஞ் சிறைமட நாராய் வாராய் சாராயாய்
. . . .
(அ.தே.க-23, ப.க255)

இதே அமைப்பில் மற்ற அடிகளும் வருகின்றன. இப்பா முதல் நான்கு சீரும் நான்கு மாத்திரையினைப் பெற்று ஈற்றுச்சீர் ஆறுமாத்திரைப் பெற்று வருவதால் சந்தக் கலிநிலைத்துறை எனலாம்.

வண்டுவிடு தூது

என்னும் அமைப்பில் கலிவிருத்தம் என்றும் பா உள்ளது.

கூறுஞ்சிறை வண்டீர்குழல் கொண்டீர்மது வுண் டீ
. . . . (அ.தே.க-24, ப.256)

இதே அமைப்பில் மற்ற அடிகளும் வருகின்றன.

இப்பா ஆறுமாத்திரைச் சீர் மூன்றும் நான்கு மாத்திரைச் சீர் ஒன்றும் பயின்றுள்ளது. எனவே கலிவிருத்தம் என்பதைவிடச் சந்தக் கலிவிருத்தம் என்பதே சாலும்.

சம்பிரதம்

என்னும் பகுதியில் எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரிய விருத்தம் எனும் பெயரில் உள்ளது. அது பன்னிரு கழிநெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம் எனப் பொருந்தும்

ஆயுமிவை மெய்ம்மையொவ் வொருவிரற் றலையொவ்வொ
ராழிகோத் துறவே டுப்பா (வா.போ.க-45, ப.233)

இதே அமைப்பில் மற்ற அடிகளும் வருகின்றன. அரையடிக்கு முதல் ஐந்து சீர் ஐந்து மாத்திரையும் ஆறாவது சீர் ஏழு மாத்திரையினமைப்பில் உள்ளது. அம்பலவாண தேசிகர், சிலேடை என்னும் பகுதியில் தாழிசை ஒன்று வந்துள்ளது. அப்பாடல் பதினான்கு சீர்ச் சந்த விருத்தம் அல்லது எழுசீர் இரட்டை சந்த விருத்தம் எனலாம்.

சொல்ல ரும் பகழி தூவுவான் விழி
சுரந்தவங்கியுண வாயவேன்
. . . . (அ.தே.க-52, ப.261)

மூன்று மாத்திரை ஐந்து மாத்திரை மூன்று முறை வந்து இறுதியில் ஐந்து மாத்திரைச் சீராக வருகிறது.

வண்ணம்

புயவகுப்பு என்னும் பகுதியில் ஆசிரியச் சந்த விருத்தம் வந்துள்ளது. அப்பா

முதுமறை யுணர்ந்து கவுணியர் முன்னன்பர்
மொழிதமி ழலங்கள் முற்றப் புனைந்தன
. . . . (வா.போ.க.பாடல்-9)

என்ற முறையில் மற்ற அடிகள் வந்துள்ளன.

தன தன தனந்த தனதன தனந்த
தன தன தனந்த தத்தத் தனந்தன

என்ற வண்ண அமைப்பில் வந்துள்ளதால் சந்த விருத்தம் என்பதை விட வண்ணப் பா என்றழைக்கலாம்.

மடக்கு என்னும் பகுதியில சந்தத் தாழிசை எனும் பா வந்துள்ளது.

அரைவிரால வணியுமாடை யதளதாக வன்றேவே
றறைவதாக வரவமாக வணியதாக என்பூதார்
. . . . (வா.பா.க.பா-47, ப.234)

அதே நிலையில் மற்ற அடிகள் வந்துள்ளன.

ஆனால்,

தனனதான தனனதான தனனதான தந்தனா

என்ற வண்ண அமைப்பில் உள்ளதால் இப்பாடலை எண்சீர் வண்ண விருத்தம் எனலாம்.

புயவகுப்பு என்னும் பகுதியில் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம் என்னும் பா உள்ளது.

உரிய தென்றொளிர் நீ றொன்ற வொன்றின
வுறுநர் தம்படர் பாசங் களைந்தன
. . . . (அ.தே.க-பா-8, ப.253)

தனன தந்தன தானந் தனந்தன

என்ற சந்தக் குழிப்புத் தவறாமல் வருவதால் சந்த விருத்தம் என்பதைவிட எண்சீர் வண்ண விருத்தம் என்பதே பொருத்தமாகும்.

ஊசல் பகுதியில் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியச் சந்தவிருத்தம் என்றுள்ளது.

ஊச லாடு நெஞ்சமே யோவி மாய வஞ்சமே
வீச லாதி யங்கரே மேவிராச லிங்கரே
வாகும் வீசு தென்றலோ வாது பாய நின்றலோ
மூச வேள தங்கையே மூட வாடு மங்கையே
(வா.போ.க-58, ப.236)

பாடல் தான தான தந்தனா தான தான தந்தனா

என்ற அமைப்பில் வந்தள்ளதால் அறுசீர் வண்ணவிருத்தம் எனலாம்.

பிள்ளையவர்கள் தாம் இயற்றிய பாக்களுக்குத் தாமே பெயர் சூட்டினாரா? அல்லது வேறு யாராவது சூட்டியுள்ளனரா? என்பதை அறிய இயலவில்லை.

1. பிள்ளையவர்கள் ஐம்பாவிலும் அதன் இனத்திலும் பாடியுள்ளார்
2. மடக்கு யமகம் போன்ற சொல்லணிகள் அமைந்துள்ளன.
3. பல்வகை ஓசை நயங்களோடு சந்தப்பாக்கள் அமைந்து காணப்படுகின்றன.
4. பல்வகை வண்ணப் பாக்கள் காணப்படுகின்றன.

86. ஆசிரியரும் மாணவரும்

சு.லோகாம்பாள்
திருவனந்தபுரம்

அனுபவ முதிர்ச்சியினால் பெற்ற அறிவைத் தகுதி பெற்றவர்களுக்கு வழங்கும் பணியே கல்விப் பணி ஆகும். இது வழிவழியான அளித்தல்-பெறுதல் பணியாக அமைகிறது. காலங்காலமாக நடந்து வரும் இப்பணி வரிசையில் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், மகா மகோத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரும் குறிப்பிடத் தக்கவராவர்.

ஆசிரிய-மாணவத் தொடரில், ஆசிரியரின் தாக்கம் மாணவரிடம் அமைந்திருக்கும் ஆயினும், ஆசிரியரிடமிருந்து விலகிய நோக்குடையாராக மாணவர் திகழும்போது பெருவியப்பு மலர்வதோடு, அம் மாற்றத்திற்கான காரணத்தையும் கண்டுகொள்ள ஆராய்ச்சி உள்ளம் விரும்புகிறது.

தமிழ்க் கல்வி மரபில், ஆசிரியர் - மாணவராக, பிள்ளையவர்களும் ஐயர் அவர்களும் தொடர்புள்ளவர்கள் என்பதை யாவரும் அறிவர். ஆசிரியரான பிள்ளையவர்கள் செய்யுள் வழியில் சிறந்திருக்க, அவருடைய மனதிற்கு நெருங்கிய மாணவர் ஐயர் அவர்கள் ஆராய்ச்சி உரைக்கு ஊக்கம் கொண்டது வியப்பைத் தருகிறது.

'திருவாவடுதுறை மடத்தில் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் ஆதின கர்த்தர்களாக இருந்தார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அந்த மடத்தின் ஆதீன வித்துவானாக இருந்து கொண்டு பல மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடம் சொல்லி வந்தார்கள். அப்போது பாடங்கேட்டவர்களுள் யானும் ஒருவன். மாணவர்களுக்கு உரிய போஜன வசதி முதலியவைகளெல்லாம் திருவாவடுதுறையில் ஆதீன கர்த்தரவர்களால் நன்றாக அமைக்கப் பெற்றிருந்தன. இதனால் மாணாக்கர்கள் யாதொரு கவலையுமில்லாமல் ஊக்கத்தோடு பாடங்கேட்டு வந்தனர்' என்று உ.வே.சா அவர்கள் பிள்ளையவர்களுக்கும் தமக்கும் உள்ள கல்விக் களத் தொடர்பை வெளியிட்டுள்ளார். (புதியதும் பழையதும் பக்.30) பாடங்கேட்க வந்த நாள் முதல் பிள்ளையவர்களுடைய இறுதி மூச்சு வரையில் இடையே சில மாதங்கள் மட்டுமே பிரிந்து வாழ்ந்திருந்த உ.வே.சா அவர்கள், பிள்ளையவர்களோடு நெருங்கியே வாழ்ந்திருக்கிறார். உ.வே.சா.வின் 'பிரஜோற்பத்தி வருஷம் சித்திரை மாதம் (1871 ஏப்ரல்) இப்புலவர் பிரானிடம் நான் பாடங்கேட்க வந்து சேர்ந்தேன். அது முதல் இவர்கள் சிவபதமடைந்த காலம் வரை இருக்கும் பெரும்பேறு பெற்றேன்' என்று விம்மிதமடைந்தவராக உள்ளார். (மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம் இரண்டாம் பாகம் பக்.vi)

பிள்ளையின் இறுதி நேரத்தில் உ.வே.சா. திருவாசகத்திலுள்ள அடைக்கலப் பத்து பாடியிருக்கும்போது பிள்ளையின் மூச்சு நின்றது என்று யோகி சுத்தானந்த பாரதியாரும் கூறியுள்ளார். (மீனாட்சிசுந்தரம் பிள்ளை பக்.41) இவ்வாறிருந்த பிள்ளையவர்களின் இயல்புகள் பெரும்பாலும் உ.வே.சா விடமும் தாக்கம் பெற்று விளங்குவதுதான் இயல்பு.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு வடமொழி அறிவைப் பெருக்கியவர் தியாகராஜ சாஸ்திரிகள். வேதத்திலும், அலங்காரதத்துவத்திலும் இவர் நிபுணராம், இசையிலும், கவிகள் இயற்றுவதிலும் ஆற்றலுடையவராம், ஆங்கிலம் முதலிய வேறு மொழிகளிலும் பயிற்சியுடையவராம், அவரே பிள்ளையவர்களின் திறமையைக் கண்டு 'உங்களைப்போல் பாடுகிறவர்கள் யார் இருக்கிறார்கள்? இவ்வளவு அழகாகப் கற்பனை அமைக்கும் சக்தி உங்களுக்குத் தான் இருக்கிறது. தமிழிலே பழக்கமில்லாத எனக்குக்கூட இந்தப் பாடல்களின் பொருள்கள் நன்றாக விளங்குகின்றன. சிறந்த கவித்துவமென்பது இதுதான். பூர்வ ஜென்மத்தில் நீங்கள் கம்பராக இருக்க வேண்டும்" என்று பிள்ளையவர்களைப் பாராட்டினார் என்று உ.வே.சா அவர்களே குறித்துள்ளார். (புதியதும் பழையதும் பக்.106-110) 'இவர் (மீனாட்சி சுந்தரர்) மூக்குத் தூளை அபூர்வமாக உபயோகிப்பது வழக்கம். அதைப்போட்டுக் கொண்டு தொடங்கி விட்டால் யாதொரு தடையுமின்றி பாடல்களைச் சொல்லிக் கொண்டே செல்வார். அப்போது பக்கத்திலுள்ள வர்களெல்லாம் அன்றைக்கு மிக்க வேகமாகச் செய்யுட்கள் இயற்றப்படுமென்று அறிந்து கொள்வார்கள்' என்று தியாகராஜ சாஸ்திரிகளின் கம்பரான' பிள்யைவர்களின் செய்யுள் இயற்றும் திறமையை விண்டுரைத்துள்ளார். (புதியதும், பழையதும் பக்.95-96). மேலும் உ.வே.சா அவர்களே 'இருபத்தெட்டுக் காப்பியங்களும் நாற்பத்தைந்து பிரபந்தங்களும் இவர்கள் இயற்றியனவாக இப்பொழுது தெரிய வருகின்றன. இவர்கள் இயற்றிய தனிப்பாடல்களோ அளவு கடந்தன. இவ்வளவு இயற்றிய தனிப்பாடல்களில் மிகுதியான நூல்களை இயற்றியவர்கள் தமிழ்ப்புலவர்களில் வேறு யாருமில்லை' என்றும் உறுதியாகவும் வெளிப்படுத்துகிறார் (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரச் சுருக்கம் பக்.vii).

'காப்பிய இலக்கணங்களைச் சுவை ததும்ப அமைத்துப்பாடும் முறை இவர் புராணங்களில் மிகுதியாகக் காணப்படுமாதலால், இவர் இயல்பை அறிந்த பலர், 'நாட்டுச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம், நகரச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம் என்று தனித் தனியே தம் தம் ஆவலை வெளியிட்டு அங்ஙனம் அவ்வப் பகுதிகளைக் கேட்டு மகிழ்ந்தனர்' என்று உ.வே.சா குறித்துள்ளார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம் பக்.59).

'தமிழ்க் காளிதாசர்' என்று வடமொழி புலவர்களால் மகுடம் சூட்டப் பெற்றவர் பிள்ளையவர்கள் என்பது சுத்தானந்த பாரதியாரின் குறிப்பாகவுள்ளது. உ.வே.சா. வும் இதனைத் தம் நூலில் குறித்துள்ளார்

(ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரச் சுருக்கம் - இரண்டாம் பாகம் பக்.83) கொடுத்த பெருளைப் பற்றி கவி புனைந்து விளக்கும் ஆற்றல் பெற்ற பிள்ளையவர்களுக்கு, உ.வே.சா இறுதி வரை மாணவ மணியாக தொண்டு புரிந்ததோடு பிள்ளையவர்களின் இலக்கிய படைப்புக்களை உலகறியச் செய்த தொண்டினையும் செய்தார் என்று கூறுவார். 'சாமிநாத ஐயரே மீனாட்சி சுந்தரனாரின் அருமை பெருமைகளை இன்று நமக்கு விளக்கினார். அவரே புலவரின் வரலாற்றை விரிவாக நமக்கு எழுதியளித்தார் என்ற வாக்குகளை நெஞ்சில் கொள்ள வேண்டும்..(புலவர் பெருமான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பக்.44-45) இத்தகு மாணவர், தம் ஆசிரியரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே வாழ்ந்திருப்பதுதான் இயல்பானவொன்று. ஆயின் உ.வே.சா. வின் திறமை வேறொரு வகையில் ஒளி விட்டது என்று பார்க்கலாம். பழைய தமிழ் நூல்களைப் பொருள் அறிந்து மக்கட் சேவை செய்யும் பணியைத் தலைமேற்கொண்டாரென்று தமிழுலகம் கூறும். பிள்ளையவர்கள் இயற்றிய படைப்புகளை இன்று உலகறியச் செய்தவர் உ.வே.சா. தாம் என்கின்ற நிலைக்கு அவர் கொண்ட தீவிரம் புலப்படுகிறது.

தமிழ்ச் செய்யுட்களை இயற்றுவதை விடவும் புலவர்கள் இயற்றிய தமிழ்ச் செய்யுட்களுக்கு ஆராய்ச்சி உரை வழங்கும் மேன்மைத் தொண்டுதான் உ.வே.சா ஏற்றுக்கொண்டது என்பதைத் தமிழுலகம் நன்கு அறிந்துள்ளது. உ.வே.சா வின் உழைப்பு இல்லையேல் இன்று பல தமிழ் நூல்களிலுள்ள அரிய பெரிய பொருள்களெல்லாம் குருடன் கையில் கிடைத்த ஒவியம் போல் பயனற்றுப் போயிருக்கும் செய்யுள் பாட வல்லுனரான ஆசிரியருக்கு மாணவராகி,

..........செவி வாயாக நெஞ்சுகளனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப்

(நன்.னூ.40) பாடல் கேட்ட உ.வே.சா அன்னமாக, ஆவாக பிள்ளையவர்களின் தலை மாணாக்கராக திகழ்ந்த உ.வே.சா. வின் ஈடுபாடு, பழைய நூற்களுக்கு ஆய்வுரை எழுதுவதிலும் விளக்கம் தந்து பதிப்பித்தலிலும் திரும்பிய காரணம் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு காலக்கட்டங்களின் தேவையே அந்தந்த காலக்கட்டங்களின் இலக்கியங்களாக முகிழ்கின்றன. மக்களுக்குத் தேவையானதையே படைத்து அளிக்கின்றனர். கேள்விச் செல்வதால் கல்விச் செல்வம் பெற்றிருந்த காலக்கட்டத்தில் பெருத்த பொருள்களைச் சிறுத்த சொற்களிலே வடித்து மனதில் நிறுத்தும் செய்யுட்களாக பாடியதன் நோக்கம் அந்தந்த கால தேவையே என்பதில் ஐயமில்லை. இதன் பொருட்டு 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தினார்கள் புலவர்கள்; இது பண்டைய தமிழிலக்கிய போக்கு; தமிழ்க் கல்வி மட்டுமே கருதுகோளாகக் கொண்ட தமிழ்க் கல்விப் போக்கின் கடைசி கண்ணி உ.வே.சா. தான் என்பது உண்மை. அவருக்குப் பாடல்புனையும் திறமை இயல்பாகவிருந்திருக்கிறது. ஆயினும் ஆய்வுரை எழுதுவதில் ஈடுபாடு கொண்டார். தாம் கற்ற

கல்வியின் பயன் தம் சமகால மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று அவர் விரும்பினார் போலும்!.

கல்வி பெறுவதற்காக, பிள்ளையவர்களை அணுகிய நாட்களில் உ.வே.சா. விற்கு நல்ல தமிழ்ப் பயிற்சி இருந்திருக்கிறது. இவ்வுண்மை 'என் தந்தையாரே எனக்கு முதல் நிலை தமிழாசிரியராக இருந்து நிகண்டு சதகம் முதலிய கருவி நூல்களைக் கற்பித்து வந்தனர் என்று கூறுகிறார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம் இரண்டாம் பாகம் ப.1) அதற்கு பிள்ளையவர்கள் 'நிகண்டு முதலியவை பாடமாக இருப்பது நல்லதே. இக்காலத்தில் அவற்றை எங்கே நெட்டுருப் பண்ணுகிறார்கள்? அந்த வழக்கமே போய்விட்டது, படிக்கும்படி சொன்னாலும் கேட்கிறார்களில்லை என்றார்' என்று உ.வே.சா. வே நினைவு கூறுகின்றார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம். இரண்டாம் பாகம் ப.6) ஆதலால், முன்னோர் பாடி வைத்த செய்யுட்களின் பொருள் புரிந்து கொள்ள முயலாத மாணவர்களைப் பிள்ளையவர்களே பார்த்து சலித்துக் கொண்டிருக்கிறார் என்ற அவல நிலை தெரிய வருகிறது. ஆயினும், நல்லாசிரியருடைய இலக்கணத்திற்கேற்றாற் போல் அவரே இறுதி வரையிலும் நல்ல மாணவராகவே வாழ்ந்திருக்கிறார் என்பதைக் கண்டவர் உ.வே.சா. ஆகவேதான் அவர் தம் ஆசிரியரை நினைத்துக் கொள்ளும்போது, 'இவராற்பார்க்கப் படாத நூல்கள் எவையேனும் கிடைக்குமாயின் அவற்றைத் தாமே வைத்துக் கொண்டு நன்கு ஆராய்ந்து படித்து வருவார். விளங்காத விஷயங்களை யார் சொன்னாலும் விருப்பத்தோடு கேட்டு அறிந்து கொள்வார். விஷயம் தெரிய வேண்டுமென்னும் நோக்கத்தையன்றி இன்னாரிடம் கேட்கலாம், இன்னாரிடம் கேட்கக் கூடாதென்னும் வேற்றுமை இவர்பால் இல்லை' என்கிறார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம். இரண்டாம் பாகம் பக்.16).

பிள்ளையவர்களின் தாக்கம் உ.வே.சா. வில் நன்கு ஊன்றியது என்றே கூறலாம். 'முனைவன் கண்டது முதநூலாகும்' (நன் பொதுப் நூ.6) என்றால், அதில் பிற்காலத்தார்களுக்குப் புரியாத பொருட்களும் தட்டுப்படலாம். அது காலத்தின் மொழிப் பயன்பாட்டின் கோலமாகும். அந்நிலையில் நூற்பொருளை உலக வழக்கொடு ஒருங்கிணைத்துக் காணும் வழியே நூற்பொருளைப் புரிந்து கொள்ள வழி வகுக்கும். 'நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி ஏற்புழி அறிந்திதற் கிவ்வகையாமெனத் தகும் வகை செலுத்துதல் தந்திர உத்தி' (நன்-பொதுப் நூ-15) என்பதனைப் புரிந்தவராதலால், உ.வே.சா இந்த உத்தியையே பிடித்துக் கொண்டார் போலும்.

நூல் படைப்போர் கருதிய பொருள் ஒன்றாகவிருக்க, அதனைப் படி எடுப்பவர்களின் இயல்பு கேற்பப் படிகள் வேறுபட வாய்ப்புண்டு. ஆகவே உலக வழக்கினை யொட்டியே பொருள் கோடல் சிறப்புடையதாக இருக்கும். "சொல்லுக்கு மதிப்பு உண்டாவது புலவர்களுடைய ஆட்சியில் அது

வழங்கி வருவதனால்தான். ஆதலின் சொல்லின் உருவத்தையும் பிற தொடர்புகளையும் ஆராய்வதினும் ஆன்றோர் ஆட்சியில் உள்ளனவா என்பதை ஆராய்வதே சிறந்ததென்பது இவர் கருத்து" என்று பிள்ளையைக் குறித்து உ.வே.சா கூறுகிறார் (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரச் சுருக்கம் பக்.97-98).

மடத்தில் ஆடுமாடுகளைப் பராமரித்து வந்த இடையனிடமிருந்து கூட அருமையான உலக வழக்கினைக் கேட்டறிந்து கொண்டதை உ.வே.சா பதிவு செய்துள்ளார். 'பழமொழி இடையன் எறிந்த மரம்' என்றும், சிந்தாமணியில் 'இடை மகன் கொன்றவின்னா மரத்தினேன்' என்றும், 'இடையன் எறிந்த மரமேயொத்திராமே' என்றும் பெரிய திருமொழி கூறுதற்குப் பொருள் தெரிந்து கொண்டாராம். இதனை அவரே தமது நூலில் குறித்திருக்கிறார். (நினைவு மஞ்சரி பக். 36-43).

இலக்கியங்களாவது வாழ்க்கைச் சித்திரங்களாகும். அவைகளின் பொருளை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், உலக அனுபவத்திலிருந்து விலகாமலிருத்தல் அவசியமாகும், பண்டையோர், இயற்கையோடிணைந்த வாழ்வினை மேற்கொண்டிருந்தவர்கள். ஆனால் உ.வே.சா. வின் கால கட்டத்திற்கு முன்பே மக்கள் இயற்கையிலிருந்து விலகத் தொட்டனர் போலும். உ.வே.சா.வே அத்தகு நிலைக்கு ஆளாகியிருப்பதால்தான் இடையன் வாழ்வினைக் கூர்ந்து அறிந்து கொண்ட அனுபவத்தைக் குறித்துள்ளார் என்று பார்க்கிறோம். ஆகவே, காலத்திற்கு ஏற்றமாறிய வகையில் தமது தமிழறிவிற்கு வேலை கொடுக்க எண்ணினார். 'காலத்திற்கும் நாகரிகத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றபடி ஜனங்களுடைய கருத்துக்களும் விருப்பங்களும் மாறி வருகின்றன. செய்யுள் நூல்களே எங்கும் பரவி வசன நடை நூல்கள் அருகி வழங்கிய காலம் ஒன்று, இப்பொழுது செய்யுள் நூல்கள் குறைந்தும் வசன நூல்கள் அதிகமாகவும் வழங்கி வருகின்றன. காரணம் செய்யுளைக் காட்டிலும் வசன மூலமாக ஜனங்கள் விஷயங்களை மிகவும் சுலபமாகத் தெரிந்து கொள்ள இயல்வதுதான்' என்பது, உ.வே.சா அவர் வாழ்ந்த காலத்தை நன்கு புரிந்து கொண்டதால் எழுதிய கூற்றாகும். (நினைவு மஞ்சரி முதற்பாகம்-முகவுரை).

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால கையினனே' (நன்.நூ.462) என்பதை உ.வே.சா ஏற்றுக் கொண்டார் போலும், 'வசனம் எழுதுவதைக் காட்டிலும் செய்யுள் இயற்றுவதில்தான் ஆசிரியருக்கு விருப்பம் அதிகம், ஆனால் மாணவர் உ.வே.சா அவர்களோ உரை காண்பதில் திறமையைக் காட்டத் தொடங்கினார். சீவகசிந்தாமணிக்கு உரை கண்டு முதன் முதலாக 1887-ல் பதிப்பித்த போது தமக்குப் பெரும் ஊக்கம் கிடைத்ததாக அவரே கூறியுள்ளார்.

உ.வே.சா காலகட்டத்தில் ஐரோப்பிய மொழிகளில் அறிவு தமிழுக்குள் புகலாயின. ஐரோப்பியர் வருகையால் அச்சு இயந்திரமும் பயன்பாட்டிற்குக் கிடைத்தது. இவைகளால் உ.வே.சா. வின் ஊக்கம் மிகுதியாயிற்று.

மீ.14.

உ.வே.சா தமிழ்ப் பரம்பரைக் கல்வியில் வளர்ந்தவர். ஆங்கில அறிவே இல்லாதவர். ஆயினும் ஆங்கிலம் அறிந்த தமிழ்ப் பெருமக்களைத் தொடர்பு கொண்டு, அவர்களுடைய உதவியால், ஆங்கில மொழி நூல்களின் பொருட்களை உள்வாங்கிக் கொண்டு, தம் பதிப்புப் பணிக்கு அவ்வறிவைப் பயன்படுத்திக் கொண்ட மேதையாவார். 'அவர் ஆங்கிலத்திலே பேசினாலும் அருகிலிருந்தவர்கள் எனக்கு அதை மொழிபெயர்த்துச் சொன்னார்கள்' என்று தமக்கு ஆங்கில அறிவு இல்லை என்தை உ.வே.சா வெளியிடுகிறார். (நினைவு மஞ்சரி.ப.184).

மணிமேகலையை பவுத்த நூலாக சிறப்பாக பதிப்பிக்கும் பணிக்கு அவருக்குப் பெரிதும் உதவியவர் ஸ்ரீமான் மஞர் ரங்காசாரியரவர்களாம். இதை உ.வே.சா, 'பௌத்த மதத்தைப் பற்றி எனக்கு இயல்பாக என்ன செய்யும்; எங்கள் காலேஜ் புரொபஸர் ஸ்ரீமன் மஞர் ரங்காசாரியரவர்கள் பல அருமையான புஷ்தகங்களைப் படித்தறிந்து எனக்கு விஷயங்களை விளக்கினார்கள். அவற்றைக் கிரகித்துக் கொண்டு அந்த அறிவோடு பார்க்கும்போது மணிமேகலை விளங்கியது. வீர சோழியம் முதலிய நூல்களில் சிதறிக் கிடக்கும் பல பழைய செய்யுட்களுக்கும் நன்றாகப் பொருள் தெரிந்தது. நம்மைப் போல மற்றவர்களும் கஷ்டப்படுவார்களே என்ற எண்ணத்தால் நான் அறிந்து கொண்ட விஷயங்களைத் தொகுத்து ஒரு புஸ்தகமாக எழுதினேன்'. (நினைவு மஞ்சரி ப.184) என்னும் உ.வே.சா. வின் நெஞ்சத் திறப்பு அவருடைய உரைப் பணிக்கு உதவியது எதுவென்பதையும் அப்பணியை அவர் மேற்கொண்டதன் காரணமென்னவென்பதும் தெளிவாகவே காட்டுகிறது.

தாம் மே கொண்ட ஆராய்ச்சிகளின் போது எது உண்மையென்று கண்டறிவதுதான் சிறந்த ஆய்வாளரின் நோக்கமாகயிருத்தல் வேண்டுமேயன்றி ஆய்விற்குரிய பொருள் வசம் ஆதல் கூடாதென்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டிருந்தார் உ.வே.சா. 'ஆராய்ச்சியில் இவர் தம்மையே இழந்து விட்டார். தாம் காணும் பொருட்களைப் புறம்பே நின்று பற்றின்றிக் காணுவதை விட்டு அந்தப் பொருட்கின் வசப்பட்டு மயங்குகிறார்' என்று உ.வே.சா பிறரொருவரை விமர்சிப்பதிலிருந்தே அத்தகு ஆய்வாளரல்ல உ.வே.சா என்பதையும் வெளிப்படுத்துகின்றாரன்றே!.

உ.வே.சா வாழ்ந்திருந்த காலத்திற்கு முன் வரையில் தமிழில் எத்தனையோ இலக்கியங்கள் முகிழ்ந்தன. அவைகளுள் எல்லாமே கால வெள்ளத்தை எதிர்த்து வாழ்ந்தனவென்று கூறுவதற்கில்லை. இவ்வுண்மையை உ.வே.சா தமது நூலில் ஆணித்தனமாகக் கூறுகிறார். 'சங்கீதமும், சாஹித்தியமும் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்யப்பட்டாலன்றிச் சிறப்புடையன வல்லவென்பது நம்முடைய பெரியோர் கொள்கை. நம் நாட்டில் எத்தனையோ கலைஞர்களும் புலவர்களும் வாழ்ந்திருந்தாலும், கால வெள்ளத்தில் அவர்களுடைய சிற்பங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. தெய்வ பக்தியாகிய கனம் அவற்றில் இருந்தால் அவை மாத்திரம் பல காலம்

கால வெள்ளத்தை எதிர்த்து நின்று விளங்குகின்றன. நூற்றுக் கணக்கான வித்துவான்கள் தமிழ் நாட்டிலே வாழ்ந்து ஆயிரக் கணக்கான சாஹித்தியங்களை இயற்றினார்கள். அவற்றிற் பெரும்பாலானவை அழிந்து போயின. அதற்கு முக்கியமான காரணம் வித்தையைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யாமல் ஜமீன்தார்களையும், பிரபுக்களையும் பாடினமையே ....' என்று கூறுவதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. மேற்கூறிய கூற்றின் இறுதி வாசகங்களை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் படைப்புகளுக்கும் பொருந்துமாயினும், சைவப் பழமாக அவர் தம்மை வெளிப்படுத்தி தல புராணங்களாகவே பாடி செல்வந்தர்களுக்கு இன்பம் அளித்துள்ளதாலேயே உ.வே.சா முயற்சியால் அவை வெளிக்கொணரப்பட்டது எனலாம். பழைய தமிழ் இலக்கியங் களுக்கும் உ.வே.சா மதிப்புக் கொடுத்து இக்காரணத்தால்தான் என்றும் கூறுமுடிகிறது.

மடத்திலிருந்து தமிழ்க்கல்வி கற்ற பெருந்தகை, தம் ஆசிரியரைப் போலன்றி, வேறொரு வழியில் தமிழ்த் தொண்டாற்றியதற்கு அவர் வாழ்ந்த காலத்தின் தேவையேயாகும் என்றால் அது மிகை இல்லை. அவர் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்கும் நாட்களில் உடன் பயின்றவர் குமாரசாமித் தம்பிரான். இருவரும் ஒரே காலத்தில் வெளி வருகையில் 'அவர் திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராகச் சென்றார். எனக்குக் கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதர் வேலை கிடைத்தது' என்று உ.வே.சா கூறுவது விடையாக அமைகிறது (நினைவு மஞ்சரி. ப.190).

ஒரு திசையிலிருந்து உந்தப்படவும், எதிர் திசையிலிருந்து இழுக்கப்படவும் செய்தால் ஒருவர் நின்ற இடத்திலிருந்து இழுக்கும் திசைக்கு விரைவாக நகர்வது இயல்பாகும், தமிழ்ச் சூழலைக் கட்டிக் காத்த மடத்துச் சூழலைவிட்டு, ஆங்கிலத் தொடர்பு கிட்டக் கூடிய கல்லூரிச் சூழலுக்குச் சூழ்நிலை தள்ளவும், இயற்கையை விடுத்து எளிதான கல்வி வழிகளை நாட்டங்கொண்ட உரைநடைச் சார்பு பெற்ற ஆங்கிலச் சூழல் வரவேற்கவும் செய்த போது உ.வே.சா. விற்கென்று தனிப்பட்ட ஒரு கல்விக்களம் உருவாயிற்று. அக்காலத்தில் அவர் தம் ஆசிரியரை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, தமிழ் மொழியைச் சுவாசித்துக் கொண்டு வாழ்ந்ததால் இன்றும் வாழ்கிறார். நாளையும் வாழ்வார். ஆசிரியரை வெல்லும் மாணவராக வல்ல, ஆசிரியருக்கு நன்றி செலுத்துபவராக ஆம்! தமிழ் தாத்தாவாக!

87. அம்புலிப்பருவம் பாடும் அருங்கவி

மு.வசந்தமல்லிகா
கோவை

அம்புலிப்பருவம்

இப்பருவம் பாட்டுருடைத் தலைவனாகிய குழந்தையின் பதினெட்டாம் மாதத்தில் நிகழ்வது.

'மதிசர் ஒன்பதில் மதியை அழைத்தலும்' என்று பிங்கலத்தை நிகண்டு கூறும். இப்பருவத்திற்கும் பிறபருவங்களுக்கும் வேறுபாடு உண்டு. காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம் வாரானை முதலிய பருவங்கள் பாட்டுடைத் தலைவனை நேரே விளித்து இவ்வாறு செய்க என வேண்டுவது. ஆனால் அம்புலிப்பருவத்தில் மட்டும் நிலவை அழைத்துக் குழந்தையின் மாண்பினைச் சொல்லி அழைப்பதாகும், இப்பருவத்தைப் பாடுவதில் புலவர்கள் தம் வல்லமையை மிகுதியும் காட்ட வேண்டும். ஔவையாரும், 'காசினியில் பிள்ளைக் கவிக்கு அம்புலி பிலியாம்' என்று குறிப்பிட்டுள்ளார், ஒவ்வொரு பிரபந்தத்திலும் ஒவ்வோர் இடம் சிறப்புப் பெற்றுள்ளது. கலம்பகத்தில் அம்மானை எனும் உறுப்பைப் பாடுவதிலும், உலாவில் பெதும்பைப் பருவப் பாடல்களைப் பாடுவதிலும் புலவன் தன் புலமையை வெளிப்படுத்த வேண்டும்.

அம்புலிப் பருவத்தில் பிள்ளைத் தமிழ் பாட்டுடைத் தலைவனாம் குழந்தையில் மாண்பினைப் பேசி, அம்மாண்பு நிலவுக்கு இல்லை என்பதைக் காட்டியும், பாட்டுடைத் தலைவனுக்கும் நிலவுக்கும் ஒப்புமை காட்டி, நிலவினைக் குழந்தையுடன் ஆடவருமாறு அழைக்கும் முறையில் பாடுதலாகும், அவ்வாறு அழைக்கும் பொழுது சாம, தாள, பேத, தண்ட உபாயங்களை மேற்கொண்டு அழைக்கும் முறையில் பாடவேண்டும். இம்முறையில் பாடுவதில் மிகச் சிறந்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. இவர் அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், திருத்தலத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ், திருப்பெருமண நல்லூர் திருநீற்றுஅம்மை பிள்ளைத்தமிழ், திருஉறந்தை காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ் என ஆறு பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களையும், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற ஆண்பாற் பிள்ளைத்தமிழையும் பாடியுள்ளார். இத்துணை பிள்ளைத்தமிழ் நூல்களைப் பாடியுள்ளமையால், இவரை அறிஞர் உலகம், 'பிள்ளைத்தமிழ் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை' என்று சிறப்புடன் அழைத்தது. இவரது கவித்திறமையைப் போற்றி, பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் 'மீனாட்சி சுந்தரம் பிள்யைவர்கள் பாடிய பிற பிள்ளைத்தமிழிலும் இச்சேக்கிழார்

பிள்ளைத்தமிழில் தமது முழுத்திறனையும் காட்டியுள்ளார். உண்மை இது வெறும் புகழ்ச்சி அல்ல' எனப் பாராட்டியுள்ளார்.

அம்புலிப்பருவப்பாடல்கள் அமைப்பு

பாட்டுடைத் தலைவனாம் குழந்தையோடு, நிலவினை விளையாட வருமாறு அழைக்கும்பொழுது, சாம, தான, பேத, தண்ட உபாயங்களை மேற்கொண்டு பாடவேண்டும் என்ற விதியின்படி, இந்நூலில் அம்புலிப்பருவம் பாடப்பட்டுள்ளது. இப்பருவத்தில் பத்துப் பாடல்களில் முதலிரண்டு பாடல்கள் சாம உபாயத்திலும், மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு பாடல்கள் பேத உபாயத்திலும், எட்டாம் ஒன்பதாம் பாடல்கள் தான உபாயத்திலும் பாடப்பட்டுள்ளன. பத்தாம் பாடலில் தண்ட உபாயத்தையும் கையாண்டுள்ளார். இவ்வுபாயங்கள் இப்பாடல்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பது குறித்து இனி காண்போம்.

சாம உபாயம்

நிலவோடு சமாதானமாகப் பேசி, குழந்தையும் நீயும் இன்னின்ன ஒப்புமை உடையவர்களாகத் திகழ்கின்றீர்கள் என ஒப்புமை காட்டி, குழந்தையோடு விளையாட வருமாறு அழைத்தல் சாம உபாயமாகும், இந்நூலில் முதல் இரண்டு பாடல்களில் சிலேடை வகையில் இருவருக்கும் ஒப்புமை காட்டப்பட்டுள்ளது.

'பாடுமதியோன் எனப்படுதலால் வாய்விண்டு................................ என்றும் திகழ்சாந்தமே உடைமையால்' என்ற வரிகள் வரை வரும் அடிகளில் நிலவிற்கும், சேக்கிழாருக்கும் உள்ள ஒப்புமை காட்டப்பட்டுள்ளது. 'புலவர்கள் பலரும் சந்திரனைப் பாடுவதா; நிலவுவர கழுநீர்மலர்கள் மலர்தல் பதினாறு கலைகள் உடைமை, சிவ பெருமானால் சூடப்படுவது, திருப்பாற்கடலில் தோன்றியமை; ஆகியவைகள், சேக்கிழாருக்கு சிலேடைப் பொருளில் பொருமைமிக்க அறிவுடையவர், செங்கழுநீர் மாலையை உடையவர், பல கலைகளில் வல்லவர், இவர் தோன்றியதால், நெடியவம்பர் அவை அடங்கின, சிவனோடு இரண்டறக் கலந்தவர் என்ற முறைகளில் ஒப்பிடப்பட்டு, சமாதானமாகப் பேசி, -குழந்தையோடு விளையாட வருமாறு அழைக்கின்றார்.

2-ஆம் பாடலில்,

சந்திரன் தோன்றத் தாமரை குவிதல், நட்சத்திரங்களோடு பொலிபவன், அத்திரிமுனிவன் விழியினின்று வந்தவன், இறைவன் சடாமுடியில் கங்கையோடு இணைந்து விளங்குபவன் என்ற கருத்துக்கள், சேக்கிழாரைக் குறிப்பிடும்பொழுது, சேக்கிழார் பெருமானும் அன்பர்களது கைகளாகிய தாமரைகள் குவிய விளங்குபவர், வீடு முழுவதும் நெல் நிரப்பக் கொண்டு மகிழ்பவர், சிவனார் கண்போலப் பொலிபவர் வேளாளர்கள் கங்கா நதி சம்பந்தம் உடையவர்கள், என்ற காரணங்களால் சந்திரனும், சேக்கிழாரும் ஒப்பாவார்கள் எனக் கூறி நிலவினை விளையாட வருமாறு அழைக்கிறார்.

பேதம்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பேத உபாயத்தை, அதாவது நிலவிற்தும்,

சேக்கிழாருக்கும் உள்ள வேற்றுமையைக் கூறி, நிலவை விடச் சேக்கிழார் எவ்வாறெல்லாம் உயர்ந்தவர் என்று பேதப்படுத்தி, இன்னின்ன வகைகளில் நிலவை விட சேக்கிழார் உயர்ந்தவர் ஆகையால் அவரோடு விளையாட வந்தால், உனக்குச் சிறப்புச் சேரும் என்று கூறி குழந்தையோடு விளையாட வருமாறு அழைத்துள்ளார். இவ்வுபாயத்தை பிள்ளையவர்கள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழாம் பாடல்களில் கையாண்டுள்ளார். இவ்விருவருக்கும் உள்ள வேற்றுமையைப் பண்பு செயல் முதலியவற்றால் வேறுபடுத்திக் காட்டி நிலவினை விளையாட வருமாறு அழைக்கிறார்.

மூன்றாம் பாடலில்,

'இரவோன் எனத்திரிவை நீ, இகழ்ச்சியால் கள்வனை ஒப்பை நீ என்றும், நான்காம் பாடலில், 'செம்பொன்னோடு இரும்பு ஒத்த' என்றும், ஐந்தாம் பாடலில், 'இயற்கையே வெண்மதியோன்' எனவும், நிலவின் பண்பினை எடுத்துக் காட்டியுள்ளார்.

சேக்கிழாரின் பண்புகளாக,

மகாப்பிரபு என எங்கள் ஐயன் பொலிபவன் (பாடல்-3)

எம்மை இனிதாள்பவன் செம்மதியவன் (பாடல்-4)

கோமான் பெருங்கல்வி ஆட்சியுடையான் (பாடல்-5)

இவ்வரிகளில், சேக்கிழாரின் உயர்வைக் காட்டி வேறபடுத்துகிறார்.

செயல் வேறுபாடுகளாக,

சந்திரன் தன் குருவாகிய பிரகஸ்பதியின் மனைவியோடு புணர்ந்தமையால் அவரால் சபிக்கப்பட்டவன் (பாடல்-4).

சந்திரன் ஒவ்வொரு ராசியிலும் ரண்டேகால் நாள் தங்கிச் செல்பவனாதலால், தீய கோள்களான சனி, இராகு, கேதுக்களோடு இருந்து செல்கின்றான். ஆக இவனை, 'வெம்மையுடையார்களோடு உறவு கொள்வோன்(பாடல்-5) என்றனர். 'பாம்பினால் விழுங்கப்பட்டு உமிழப்படுவதால் நிலைகுலைந்தவன் (பாடல்-6) என நிலவின் செயல்களைக் கூறுகிறார். சேக்கிழாரின் செயல்களாக, 'சிறு தூக்கில் எழுபரவையும் புக முடித்துற நிறுத்தான்' என ஒரு பாட்டில் பரவை எனும் சொல்லை ஏழுமுறை வருமாறு பாடிய வித்தகர் (பாடல்-6) என்றும், சேக்கிழார் என்றும் பெருந்தன்மை கொண்டவர்களோடு தொடர்புடையவர் (பாடல்-5) என்றும், இறைவனுடைய அருளை நிரம்பப் பெற்றவர் என்றும் (பாடல்-4) செயல் வடிவில் இருவருக்கும் உள்ள வேற்றுமையைக் கூறி, பேத உபாயத்தைக் கையாண்டுள்ளார்.

தானம்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எட்டு, ஒன்பதாம் பாடல்களில் தான உபாயத்தை மேற்கொண்டுள்ளார். பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையோடு விளையாட வருதியேல் நன்மை உனக்கு உண்டாகும் என நிலவினை அழைப்பது தான உபாயமாகும்; அம்முறையில் எட்டாம் பாடலில் நிலவு சேக்கிழாரோடு விளையாட வந்தால் அதனுடைய கூனை (கலைகளை) நீக்குவார் சேக்கிழார் என்று பாடியுள்ளார். சேக்கிழார்

செய்யுளில் ஓர் உறுப்பாக விளங்கும் கூன் வைத்துப் பாடுவதில் வல்லவர் என்பதை உணர்த்தும் வகையில்

செயிர் கொள் நின் கூன் ஒழிப்பான் வாய் மலர்ந்து கூன் செய்யுளினம்
உறவைத்திலான், என்றும்

ஒப்பிலா எங்கள் பெருமான் நட்பு மதிநிற்கு உயிர்க்கு உறுதி
செய்வதாகும்

என்றும் இவனோடு விளையாட வந்தால் உன் உயிர்க்கு உய்தி உண்டாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒன்பதாம் பாடலில்,

'நின் களங்கம் போக்கி, திகழ் புனிதமே ஆக்குவான்' என விளையாட வந்தால் நிலவிற்கு உண்டாகும் நன்மை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தண்டம்

பத்தாம் பாடலில்,

புன்மையான் இவன் என்றோர் கவிகூறின் முக்கண் பிராதனனும்
உனை வெறுப்பான்
வீதலுறுதலேயன்றி வெறொன்றும் உள்ளது கொல்

என்ற வரிகளில் குழந்தையோடு விளையாட வரவில்லை எனில் நீ அழிந்து விடுவாய் என்று நிலவிற்கு ஏற்படும் தண்டனை குறித்தும் பாடி, சாம, பேத, தாள, தண்ட உபாயங்களை மேற்கொண்டு பாடியுள்ளார்.

புராண கருத்துக்கள்

சிவனடியார்களின் புராணம் பாடிய சேக்கிழாரைப் பற்றிய பிள்ளைத் தமிழ் ஆதலால் புராணக் கருத்துக்களையும் ஆங்காங்கே அள்ளித் தெளித்துச் சென்றுள்ளார் ஆசிரியர்.

இரண்டாம் பாடலில், சந்திரன் அத்திரி முனிவர் விழியில் தோன்றியதை, 'ஓர் அறவர் விழியின் வெளிவந்து ஒளிருவை' எனப் பாடியுள்ளார்.

குருபகவானிடம் சந்திரன் சாபம் பெற்ற புராணக் கருத்தை, 'வானோர் பேணுகுரவன் பாங்கர் நிக்கிகரமே பெற்ற பேதை நீ' என்ற அடிகளில் குருபகவானின் மனைவியோடு சந்திரன் புணர்ந்ததால் அவளால் சபிக்கப் பெற்ற கதையைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆறாவது பாடல் சந்திரன் இராகு கேதுக்களால் விழுங்கப்படுவதன் காரணம், இராகு கேது வரலாற்றைக் கூறியுள்ளார்.

இப்புராணக் கருத்துக்கள் அன்றி திருஞானசம்பந்தர், சமணனாயிருந்த கூன் பாண்டியனை சைவனாக்கி, அவனடைய கூனை நீக்கிய செய்தியையும் எட்டாம் பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அம்புலிப்பருவம், அதற்குரிய இலக்கண அமைதியோடு சிறப்புற விளங்குவது மட்டுமல்லாது பல்வேறு புராணக் கருத்துக்களையும் கொண்டு விளங்கும் வகையில் பாடி, மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் புலமையை மெய்ப்பித்துள்ளார்.

88. சென்னையில் எழுந்த செந்தமிழ்ப் பனுவல்கள்

வி.வசுமதி, சந்திரா கிருட்டிணன்
கோவை

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் சரித்திரம் வாயிலாக அவர்தம் சென்னையில் உண்டான அனுபவக் கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. பிள்ளையவர்கள் சென்னைக்கு இரண்டு முறை சென்றார் என்பதனை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே அங்கு நிகழ்ந்த பிள்ளையவர்களின் சுவையான அனுபவங்கள், அவர்கட்கு அறிமுகமான பெரும்புலவர்கள், இயற்றிய பனுவல்கள் மேலும் அவர் வழியில் தரிசித்த தலச் சிறப்புக்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

பிள்ளை அவர்களின் பல்துறை அறிவு

சோமரசம் பேட்டையில் வாழ்ந்து வந்த பிள்ளை அவர்கள் கல்வித்தாகம் காரணமாக அவ்விடம் விட்டு நீங்கி திரிசிரபுரம் அடைந்தார். கல்விமான்கள் பலரிடமும் கல்வி கேட்டு தாமும் பதிகங்கள், அந்தாதி நூல்களை இயற்றினார்.

இங்ஙனம் செல்லுகையில் இவருக்கு நெடுநாட்களாக நெஞ்சில் ஓர் அவா குடிகொண்டிருந்தது. அதாவது சென்னை மாநகரில் துரைத்தனத்தார் போர்ட்டு துரை என்பார் கல்விச் சங்கமொன்றை அமைத்துப் பற்பல ஊர்களிலிருந்த சிறந்த தமிழ் வித்துவான்களை வரவழைத்துக் கூட்டி அவர்கள் வாயிலாக மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லித் தருதல், செய்யுள் நூல்களை வசனமாக எழுதுவித்தல், வேறுமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் முதலியவைகளை நடத்தி வரும் அமைப்பு முறையினைக் கேட்டு அங்கு சென்றால் பலருடன் பழகும் வாய்ப்பும் அதன்வழி பலவித அறிஞர்களின் தொடர்பும் கிட்டும் என்பதே ஆகும். பொருளாதாரச் சூழலால் இவருக்குச் சென்னை செல்ல வாய்ப்பு இன்றியே கனவுகளில் வாழ்ந்தார்.

நனவாகிய கனவு

பிள்ளையவர்களை ஆதரித்து வந்த இலட்சுமண பிள்ளை என்பார் அவருடைய சொந்த அலுவல் காரணமாக சென்னை செல்ல நல்லவொரு மனிதரைத் தேடி, இறுதியில் இவரைப் பணித்தார். பிள்ளையவர்களுக்கோ எல்லையில்லாத ஆனந்தம் பெருகியது. மகிழ்ச்சியில் திளைத்த பிள்ளை அவர்களின் அவாவினையும் அறிந்து இலட்சுமண பிள்ளையவர்கள் இவருக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து சென்னைக்கு அனுப்பி வைத்தார். சென்னை சென்றவுடன் இலட்சுமண பிள்ளை

அவர்களின் அலுவலை சரிசெய்துவிட்டு அந்நகர் தமிழ் வித்துவான்களிடம் சென்று அறிய வேண்டியவற்றை அறியலுற்றார்.

சென்னையிலிருந்த அறிஞர்கள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னை சென்றபொழுது அங்கு,

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரான், காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை, போரூர் வாத்தியார், அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் ஆகியோர்களின் அறிமுகம் பெற்றார்.

அவர்கள் வழி திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய சைவ நூல்களிலும், கல்லாடம், காப்பிய நூல்கள், பிரபந்த வியாக்கியானங்கள், முதலியவற்றிலுள்ள தனக்கு நேர்ந்த ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டார்.

மழவை மகாலிங்கையர் சந்திப்பும் - அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் நூல் பதிப்பும்

சென்னை வித்துவான்களுள் சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை என்ற மூவரும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் தமிழ்ப் புலமையையும், ஞாபக சக்தியையும், அடக்கத்தையும், தருக்கின்மையையும் குறித்து மிக்க வியந்தனர். எனவே இம்மூவரும் பிள்ளையவர்களை மழவை மகாலிங்கையருக்குக் காட்டி மகிழ்விக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தனர்.

முறையாகத் தமிழ்ப் பயின்ற தமிழாசானுள் தலைசிறந்த தமிழாளர் எனலாம். சபாபதி முதலியாரின் அறிமுகத்தோடு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கும் - மழவை மகாலிங்கையருக்கும் நட்பு தொடர்ந்தது. மகாலிங்கையர் மீனாட்சி சுந்தரம் அவர்களின் தமிழ்ப் புலமையை அறிய பாடல் ஒன்றை கூறச் சொன்னார். அப்போது உடனே,

இராசத வரையமர் பவள விலங்க
லிடம்படர் பைங்கொடியே
இமையவர் மகிழ்வொடு புழுஞ் சிமயத்
திமயம் வரும்பிடியே
சரணினை பவருட் டிமிரஞ் சிதறச்
சாரு மிளங்கதிரே
சாதுமறை யாலு மளப்பரி தான
கயங்கு பொலாமணியே
மரகத வரையிள கியவெழி லெனவெழில்
வாய்த்த செழுஞ்சுடரே
மதுரித நவரச மொழுகக் கனியும்

வளர்த்த நறுங்கனியே
தரணி மிசைப்பொலி தருமக் குயிலே
தாலோ தாலேலோ
தழையுந் தந்தி வனத்தமர் மயிலே
தாலோ தாலேலோ

என்ற பாடலை பொருள் விளங்க மெல்லவே கூறினார்.

சற்றே வியந்த மகாலிங்கையர் இதுவரை கேட்டிறாத இப்பாடலின் இனிமை கண்டு வியப்புடன் ' இச்செய்யுள் எந்த நூலில் உள்ளது?' என வினவ பிள்ளையவர்கள், 'அடியேன் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் நூலில் உள்ளது' என்றார். இவரின் அடக்கத்தைக் கண்டு மகாலிங்கையர் பெருமை கொண்டு இவருடன் இருந்த நட்புரிமையைக் கூட்டிக் கொண்டார். உடனிருந்த மூவரும் இவரின் தருக்கின்மை கண்டு வியந்தனர். எனவேதான் வள்ளுவரும்

அடக்கம் அமரருள் உய்க்கும் (திருக்குறள்-121)

என்றார் போலும்!.

பின்னர் 1842-ம் ஆண்டு திரிசிரபுரம் இலட்சுமண பிள்ளையின் பொருளுதவியால் மழவை மகாலிங்கைர், தாண்டவராயத் தம்பிரான் முதலியோரின் சிறப்புப் பாயிரங்களுடன் நூலாக வெளிவந்தது.

அறிஞர்களின் அறிமுகத்திற்காகவும், தனது ஐயம் பொருட்டும் சென்னை சென்ற மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் நூலைப் பதிப்பித்து ஓராண்டு காலம் தங்கி ஈண்டு வருவதற்கு ஏதுவாக அமைந்த இலட்சுமண பிள்ளையின் அலுவலையும் முடித்துக் கொண்டு,

உவப்ப தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (திருக்குறள்-394)

என்பதற்கிணங்க திரிசிரபுரம் மீண்டார்.

பேரும் புகழும் பெற்ற நம் பிள்ளையவர்கள் பெரியோரிடம் சென்று பாடங்கேட்டும் தம்மறிவாலும் பிரபந்தங்களும் புராணங்களும் இயற்றினார். இவர் இயற்றிய 'தியாகராச லீலை' சிறப்பான இடம் பெறுகின்றது எனலாம்.

இத்தகு புகழ்பெற்ற இவரிடம் சவராயலு நாயகர், வேதநாயகம்பிள்ளை, தெய்வநாயகம் பிள்ளை, ஆரியங்காவற் பிள்ளை, அழகிரிராஜு உட்பட பலர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர்களாயினர்.

இரண்டாவது முறையில் சென்னை நகர அனுபவங்கள்

கல்விப் புலமையால் சிறப்புற்ற இவரின் வளர்ச்சியை செவியுற்ற சென்னைவாசி சபாபதி முதலியார் அவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் பார்க்க விருப்பமுற்றதைக் கடிதம் வழி குறிப்பிட்டனர். மீண்டும் ஒருமுறை தமிழறிஞர்களைச் சந்திக்கும்பொருட்டு சென்னை நகரப்

பயணம் மேற்கொண்டார்.

சென்னையில் எழுந்த செந்தமிழ் பனுவல்கள்

முதல்முறை சென்னைக்கு வந்தபோது 'அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்' - நூல் மட்டுமே வெளியானது. ஆனால் இரண்டாம் முறை சென்னை வந்தபோது நூல்கள் சிலவற்றைக் கொடுத்து தமிழுலகத்தை வளர்த்தார் பிள்ளையவர்கள் எனலாம். 'திருமயிலைப் புராணம்' - என்ற புராண நூல், 'சித்திர சத்திரப் புகழ்ச்சிமாலை', 'சிதம்பரேசர் மாலை' - என்ற இரண்டு சிற்றிலக்கிய வகையுள் அடங்கும் மாலை நூல்களையும், 'வியாசைக் கோவை' என்ற கோவை நூலினையும் படைத்து அரங்கேற்றம் செய்தார் எனலாம். எனவே இரண்டாவது முறைப் பயணத்தின் வழியே பிள்ளையவர்களின் புலமை மேலும் வளர்ந்தது என்பது திண்ணம்.

இனி மேற்குறிப்பிட்ட இந்நான்கு நூல்களின் சிறப்பும், அவை எழுந்த சூழலையும் காண்போம்.

திருமயிலைப் புராணம்

பிள்ளையவர்களின் நட்புக்குரியவருள் ஒருவரான விநாயக முதலியார் அவர்கள் இவர் செய்த தியாகராச லீலை உறையூர்ப் புராணம் முதலியவற்றைச் செவியுற்று திருமயிலைக்கு ஒரு புராணம் இயற்றுமாறு வற்புறுத்தினார். மேலும் அவ்வூரின் வடமொழிப் புராணத்தையும் கொடுத்தார். அவர்களின் வேண்டுகோளின்படி, பாயிரமும், நாட்டுப்படலமும், நகரப் படலங்கள் மட்டுமே செய்து கொடுத்தார். அப்பகுதிகள் இன்று கிடைக்கப்பெறாமை மிகவும் வருந்தத்தக்கது.

மாலை நூல்கள்

பிள்ளையவர்கள் சென்னையில் இருந்தபோது இரண்டு மாலை இலக்கியங்களைப் படைத்தார். அவற்றுள் 'சித்திர சத்திரப் புகழ்ச்சிமாலை' என்ற நூல் ஒன்றாகும். இது அன்று திருமயிலைத் திருக்குளத்தின் தென்கரையிலுள்ள சித்திர சத்திரம் என்று வழங்கப் பெறும் சத்திரத்தைக் கட்டுவித்து அதற்குப் பலவித வருவாய்களையும் ஏற்படுத்திக்கொடுத்த பெருமைக்குரிய 'வியாசர் பாடி விநாயக முதலியார்' மீது பாடப்பட்ட நூலாகும். புலவர் பெருமக்களின் விருப்பத்திற்கிணங்க அச்சத்திரத்தின் பெருமையை சிறப்பித்து நூறு விருத்தங்களடங்கிய இந்நூலினை இயற்றினார்.

இதனைப் பாராட்டி,

தெருள்பெற்றான் வியாசநகர் விநாயகமா லதற்கேற்பச்
செயிர்தீர் மிக்க
பொருள்பெற்றா னதற்கேற்ப மயிலையிற்சத் திரங்கட்டிப்
புகழ்சால் பெம்மான்
அருள்பெற்றா னிவன்றிப் பொருள்பெற்றும் அறஞ்செய்யா
அவனி யுள்ளார்
மருள்பெற்றார் சிறுமைபெற்றா ரின்னுமென்பெற் றாரென்னின்
வசை பெற் றாரே

என்ற விநாயக முதலியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கும் அளித்த சாத்துகவியின் வழி அறியலாம்.

சிவஞான முனிவர் வாழ்ந்த இடமாகக் கருதப்படும் 'தொட்டிக் கலை' என்று அழைக்கப்படும் இடத்தில் முனிவர் அவர்களின் நூற்பயனை அனுபவித்துக் கொண்டு இருந்தார். அப்போது கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் அத்தலத்து சிதம்பரேசர் மீது ஒரு சந்நிதிமுறை சுப்பிரமணிய முனிவராற் பாடப்பெற்று நின்றுவிட்டபடியால் அதைப் பூர்த்தி செய்யும்படி வேண்டினார். அதன் பொருட்டு,

நெற்படு பழனம் பற்பல வேண்டி
நின்றன னியினி திருக்கும்
மற்படு பழனம் வாஞ்சியேன் கொடிய
வஞ்சக னல்லனோ கடையேன்

என்று சொற்பதங்கள் பொருந்தியும்,

என்றுமை யாற்றை மேவுமென் மனநின்
இணையிலை யாற்றைமே வாது
சென்றுயர் தில்லை தரிசித்த தில்லை

என்று தன்னுணர்வு மிஞ்சியும், செவிக்கும் சிந்தைக்கும் இனிமை படைக்கும் வண்ணம் மேற்கூறிய வகையில் செய்யுட்களை அமைத்து 'சிதம்பரேசர் மாலை' எனும் பனுவலை இயற்றினார். எனினும் அச்சந்நிதி முறை முற்றுப்பெறவில்லை என்பதே நம்மால் உணர முடிகிறது எனலாம்.

வியாசைக் கோவை

சென்னையில் இருந்து வருகையில் சபாபதி முதலியார் விநாயக முதலியார் மீது மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய குளத்தூர் கோவை போன்ற ஒரு நூலை பாடும்படி வேண்டினார். அவ்வாறே நூறு செய்யுட்கள் அடங்கிய 'வியாசைக் கோவை' நூலை இயற்றினார். பெரிதும் மகிழ்ந்த விநாயக முதலியார் அவர்கள் பிள்ளையவர்களுக்கு விரைவில் இந்நூலினை நிறைவு செய்யும்பொருட்டு பொருளுதவியையும் செய்தார். திரிசிரபுரம் மீண்டு இவரின் கட்டளையின்படி சி.தியாகராச செட்டியார் என்பவரால் எஞ்சிய பகுதியை பிள்ளையவர்கள் நிறைவேற்றினார்.

கோவை அகத்துறை இலக்கியம் என்பதால் தலைவன் தலைவி பாத்திரங்களாக வடிக்கப்பெற்றுள்ளது. இந்நூலுள் கவித்திறம் பாங்குற அமைந்துள்ளமையை,

நீர்வேட் டடைந்திரந் தோரைப் பிரமற்கு நேடரிய
ஆர்வேட்ட வேணிப் புனல்கொண்டுண் பாயென் நலைதலொக்கும்
பார்வேட்ட சீர்த்தி விநாயக மால்வரைப் பான்மொழியாய்
தார்வேட்ட மங்கையை நீவரைந் தெய்தென்று சாற்றியதே

போன்ற பாடலின் வழி அறியலாம்.

இவ்வாறாக சென்னைக்கு இரண்டாவது முறை செல்லும்போது

மேற்குறிப்பிட்ட நான்கு நூல்களும் மொத்தம் சென்னை நகரில் ஐந்து நூல்களை மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றினார் எனலாம்.

லச்சிறப்புக்கள்

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதன்முறை சென்னைக்கு ந்தபோது ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலின் வழி செல்வார். பாடங்கேட்கும் ூவம் காரணமாக கோயிலின் வெளியே நின்று அஞ்சலி செலுத்தி விட்டுச் செல்வதாக அவரின் சரித்திரக் குறிப்பின்வழி அறியமுடிகிறது.

ஆனால் இரண்டாம்முறை சென்னை செல்லும்போது வழியில் உள்ள பட்டீசுவரம், திருவாவடுதுறை, தருமபுரம், சிதம்பரம், திருப்பாதிரிப் புலியூர் முதலிய தலங்களை தரிசித்த முகமாக வந்தார். இவ்விடங்களின் தலபுராணங்கள் வழி சைவத் திருத்தலங்கள் என்ற சிறப்புப் பெற்றமையை உணரலாம். அத்தகு தலங்களை இவரும் தரிசித்தமையால் தலமும் சிறப்பு பெறுகின்றன என்பது முடிபாகும்.

மேலும் சென்னையிலிருந்து வருகையில் சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் போன்றோர் தமிழ் வளர்த்த தலங்களைத் தானும் தரிசித்தார். குளத்தூர் ஸ்ரீ சோமேசர் - அமுதாம்பிகையை தரிசனம் செய்தார். ஸ்ரீ சிதம்பரேசுவரரையும், ஸ்ரீ சிவகாமி அம்மையையும், ஸ்ரீ ஆதிகேசவப் பெருமானையும், தரிசித்து வந்தார். எனவே பிள்ளையவர்களின் குருபக்தியும் தமிழார்வமும் இந்நிகழ்ச்சியின் வழி நமக்குப் புலப்படுகின்றது.

இதுகாறும் கூறிய செய்திகளின் வழி திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் சென்னை நகர அனுபவங்களும், அதன்வழி தமிழன்னைக்குக் கிடைத்த அரிய நூல்கள் பற்றியும் அறிய முடிந்தது. முதன்முறை வரும்போது தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் வகையில் இருந்தமையால் அதிகமாக புகழ்பெறவில்லை எனலாம். ஆனால் அடுத்தமுறை சென்னை நகர அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கிச் சென்றமையால் அவரால் பலவிடங்களுக்கும் சென்று தன் பயண அனுபவங்களைப் பெற்றார் எனலாம். எனவே மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சென்னை அனுபவங்கள் வழி 'அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்', 'சித்திர சத்திரப் புகழ்ச்சிமாலை', 'வியாசைக் கோவை', 'திருமயிலைப் புராணம்', 'சிதம்பரேசர் மாலை' ஆகிய ஐந்து நூல்களைத் தமிழுலகிற்குத் தந்தார். இவ்வாறாக பிள்ளை அவர்களின் சென்னை நகரப் பயணம் அமைந்திருந்தது.

89. பிள்ளையவர்களும் வன்றொண்டரும்

நா.வள்ளி
காரைக்குடி

தமிழறிஞர்களின் தாய் வீடாகச் செட்டிநாடு விளங்கியது, விளங்குகிறது. தமிழ் வாழ்வோடு தங்கள் வாழ்வையும் இணைத்துக் கொண்ட நகரத்தார்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல வகையிலும் துணை நின்றனர். தமிழ் வளர்ச்சி தொடர்பான அனைத்திலும் ஆர்வலராக இருந்தனர்.

தமிழ்ப் புலவர்கள் மீது கொண்டிருந்த மதிப்பின் காரணமாகத் தாங்கள் வசிக்கும் வீதிகளுக்குத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களை வைத்து அவர்களின் வினைவைப் போற்றினர். சான்றாகப் பாகனேரியில் உள்ள ஔவையார் தெரு, நேமத்தான்பட்டியில் உள்ள அப்பர் தெரு, தேவகோட்டையில் உள்ள சம்பந்தர் தெரு, கண்டனூரில் உள்ள வ.உ.சி தெரு, இராஜாஜி தெரு ஆகியவற்றைக் கூறலாம். தங்களுடைய கடைகளுக்கும், தாங்கள் வசிக்கும் இல்லங்களுக்கும், தாங்கள் நிறுவிய பள்ளிகள், நூல் நிலையங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலியவற்றிற்கும் தமிழ்ப் புலவர்களின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாவார்.

19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஈடு இணையற்ற புலவராக விளங்கி, பல தல புராணங்கள் பிள்ளைத்தமிழ், அந்தாதி இலக்கியங்கள் ஆகியவற்றைப் படைத்து இலக்கிய உலகிற்கு அரும்பணி ஆற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நகரத்தார்களோடு தொடர்பு கொள்ளக் காரணமாக இருந்தவர் நாராயணன் செட்டியார் என்ற வன்றொண்டர் ஆவார்.

வன்றொண்டர் மகாவித்துவான் அவர்களின் மாணாக்கர். இவரது இயற்பெயர் நாராயணன் செட்டியார் என்பதாகும், தேவகோட்டையைச் சேர்ந்தவர். அவரது முன்னோர்கள் திருப்பெருந்துறையில் அன்னசத்திரம், உப்பு மடம், ஊறுகாய்மடம், அறுபத்துமூவர் மடம் எனப் பல திருப்பணிகள் செய்தவர்கள். வன்றொண்டர் இளமையில் ஐந்து வயதாக இருக்கும்போது, அம்மை நோயின் பாதிப்பால் கண் பார்வை இழந்தவர். தமிழகப் புலவர்களில் அந்தகக்கவி வீரராகவ முதலியாரைப்போல, மாம்பழக் கவிச்சிங்க நாவலரைப் போல இவரும் தம் நெஞ்சமே ஏடாகத் தமிழைக் கற்றார்.

வன்றொண்டர் இளமையிலேயே கல்வி பயிலத் தொடங்கி

தேவகோட்டையிலும், அயலூர்களிலும் யார் யாருக்கு எந்தெந்த நூல் பழக்கமோ அவரவரிடம் சென்று நூல்களைப் பாடம் கேட்டு வந்தார். 'பொங்கரில் நுழைந்து வாவிபுகுந்து பங்கயந் துழாவிப் பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப்பந்தர் தாவிக் கொங்கலர் மணங்கூட்டுண்டு குளிர்ந்து மெல்லென்று தென்றல் அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் இயங்குமன்றே' என்று பரஞ்சோதி முனிவர், தென்றல் பல மலர்களிலுள்ள வாசனைகளைத் தோய்ந்து வந்ததற்கு, அங்கங்கே கலைகள் தேரும் அறிவனை உவமை கூறுவர். அதுபோல் வன்றொண்டரும் கற்றுத் தேர்ந்தார்.

வன்றொண்டர் - பிள்ளையவர்களின் சந்திப்பு

பிள்ளையவர்களின் கல்வியின் பெருமையையும், மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லும் அருமையையும் கேள்விப்பட்ட வன்றொண்டர் அவரிடம் சென்று பயில வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். அச்சமயத்தில் மகாமகம் வந்தது. மகாமகத்துக்கு கும்பகோணம் சென்றிருந்த வன்றொண்டர், அங்கு வந்திருந்த பிள்ளையவர்களைச் சந்தித்து தமது நெடுநாள் விருப்பத்தைத் தெரியப்படுத்தினார். அவரது ஆர்வத்தை உணர்ந்த பிள்ளையவர்கள் வன்றொண்டரைத் தம் மாணாக்கராக ஏற்றுக்கொண்டார்கள்.

பாடம் கேட்கும் காலங்களில் வன்றொண்டர், பிள்ளையவர்கள் சென்ற இடங்களுக்கு எல்லாம் தானும் சென்று அவருடன் தங்கிப் பாடம் கேட்டு வந்தார். வன்றொண்டருக்குத் துணையாக ஒரு தனவைசியர் எப்போதும் இருந்து நூல்களைப் படித்துக்காட்டி உதவி செய்து வந்தார். படிப்பவர் இல்லாதபோது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே, படித்துப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள் என்றும் அறிகிறோம்.

வன்றொண்டர்-பெயர்க்காரணம்

தமிழ் கூறும் நல்லுலகம் இரண்டு வன்றொண்டர்களைப் பற்றி அறியும். இறைவனிடம் வழக்குப்பேசி வன்றொண்டர் என்று பெயர் பெற்ற சுந்தரர் ஒருவர். மகாவித்துவானின் சீடராகிய வன்றொண்டர் மற்றொருவர். அவருக்கு இப்பெயர் வந்ததற்கான காரணத்தை டாக்டர் உ.வே.சா அவர்கள் தம் நூலான நல்லுரைக் கோவையில் (முதற் பாகம்) விளக்கமாக எழுதியுள்ளார்கள்.

சிவபக்தி மிக்கவரான நாராயணன் செட்டியார் மிகவும் கடுமையான நியமங்களை மேற்கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் திருவாவடுதுறை மடத்திற்கு வந்திருந்தபோது அவரது சிவ பக்தியையும், நியமங்களைக் கடைப்பிடிக்கும் நேர்த்தியையும் கண்டு வியந்த பல அன்பர்கள், அவருக்கு வன்றொண்டர் என்று பெயரிட்டு வழங்க வேண்டுமென்று, பிள்ளையவர்களிடம் சொல்ல, பிள்ளையவர்களும் அது மிகவும் பொருத்தமானதென்று பாராட்டி, 'சத்தி வாழ் வாமத்துச் சங்கரன் பொன்தாள் கமலப் பத்தியால் தேவாரப் பாராயத்தினால் வான்றோய் புகழ் மிகுந்த வன்றொண்டன் என்னும் பேர் சான்றோய் நினைக்குத் தகும்' என்னும்

செய்யுளையும், 'வன்றொண்டனென்னும் பேர் பெற்றாய் எனவரும் விருத்தத்தையும் கூற அன்று முதல் அப்பெயரே அவருக்கு நிலைத்து விட்டது.

ஆசிரியர்-மாணாக்கர் உறவு

வன்றொண்டர் மிகுந்த நினைவாற்றல் உடையவர். ஒரு சமயம் உ.வே.சாவிற்கும் மற்ற மாணாக்கர்களுக்கும் பிள்ளையவர்கள் கந்தபுராணத்தைப் பாடஞ்சொல்லி வந்தபோது, கந்த புராணத்தில் கயமுகன் உற்பத்திப் படலத்தில் 'மாண்டகுமவ் வல்லியகலன்' எனத் தொடங்கும் எழுபதாம் செய்யுளுக்குரிய பொருளைக் கூறத் தொடங்கும்போது சிறிது மறதி ஏற்பட, 'இந்த நூலை வன்றொண்டர் என்பால் முன்பு பாடம் கேட்டிருக்கின்றார். ஆதலில் அவரைக் கேட்டால் சொல்வார்' என்றார். வன்றொண்டர் ஊரிலிருந்து வந்திருந்த காலத்தில் பிள்ளையவர்கள் வன்றொண்டரிடம் கந்தபுராணம் கயமுகன் உற்பத்திப் படலத்தில் எழுபதாவது பாடல் என்று சொல்லத் தொடங்கும்போதே 'மாண்டகு மவ்வல்லியகலன்' என்னும் செய்யுளா என்று, அச்செய்யுள் முழுவதையும் சொல்லி பிள்ளையவர்கள் கூறிய பொருளையும் கூறினார். அதனைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர். பிள்ளையவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தான் சொல்லிக் கொடுத்த பொருளை மாணாக்கன் திருப்பிச் சொல்வதைக் கேட்பதைவிட ஓர் ஆசிரியருக்கு வேறு என்ன மகிழ்ச்சியிருக்க முடியும்?.

திருப்பெருந்துறைப் புராணத்தைப் பிள்ளையவர்கள், திருப்பெருந் துறையிலேயே அரங்கேற்றினார்கள். அது சமயம் வன்றொண்டரும் அங்கிருந்தார். புராண அரங்கேற்றம் ஒவ்வொரு நாளும் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும். பிள்ளையவர்கள் சில சமயம் வன்றொண்டர் தன் நியம வழிபாடுகளை முடித்துக்கொண்டு வரும் வரையில் புராணம் பிரசங்கத்தைத் தொடராமல் இருப்பாராம், அதனால் ஸ்ரீசுப்பிரமணியத் தம்பிரானவர்களுடைய கோபத்துக்குக் கூட பிள்ளையவர்கள் ஆளாக நேர்ந்தது என்று அறிகிறோம், இந்த நிகழ்ச்சி பிள்ளையவர்களுக்கு வன்றொண்டர் பால் இருந்த பேரன்பைக் காட்டுகிறது.

பெரிய புராணத்தை பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டு அதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த வன்றொண்டர், தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழார் மீதும் அன்பு கொண்டிருந்தார். சேக்கிழார் பெருமானுக்குக் கோயில் கட்ட வேண்டுமென்று எண்ணித் தேவகோட்டையில் இடம் வாங்கி, அக்கோயிலில் கட்டுவதற்காக மணி முதலியவற்றை வரவழைத்திருந்தார். அந்த இடத்தில் பின்பு நகரச் சிவன் கோயில் கட்டப்பட்டாலும், அக்கோவிலில் சேக்கிழாருக்கு என ஒரு தனிச் சந்நிதி எற்படுத்தப்பட்டு வருடம் தோறும் சேக்கிழார் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றத்தின் போது ஒரு நாள் பிள்ளையவர்களிடம் சேக்கிழார் மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். பெரியபுராணத்திற்கு,

வன்றொண்டராகிய சுந்தரரது திருத்தொண்டத் தொகை காரணமாக இருந்ததைப்போல, அப்புராணத்தை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு வன்றொண்டச் செட்டியாரது வாய்மொழியே காரணமாயிற்று. வன்றொண்டர் விருப்பப்படியே, பிள்ளையவர்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, சேக்கிழார் பிள்ளைத் தமிழைச் சில தினங்களிலேயே பாடி முடித்தார்கள்.

செட்டிநாட்டுத் தொடர்பு

தனக்குக் கல்விச்செல்வம் வழங்கிய ஆசிரியருக்கு உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் சிறப்புச் செய்த வன்றொடர், பிள்ளையவர்களை செட்டிநாட்டிற்கு வரவழைத்து அப்பகுதியிலுள்ள கோவிலூர், கண்டதேவி, சூரக்குடி, வீரவனம் என்ற நான்கு தலங்களுக்கும் புராணம் பாடும்படிச் செய்வித்து, அங்கங்கே உள்ள நகரத்தார் மூலமாகப் பொருளுதவி செய்வித்தார்.

பிள்ளையவர்கள் புராணங்களை அரங்கேற்றும் காலங்களில் கிடைக்கும் வருமானம், ஊரை விட்டுப் புறப்படுவதற்குள் அந்தந்த ஊர்களில் உள்ள கடைகளில் வாங்கியிருந்த பொருள்களுக்காகவும், தம்முடன் அழைத்துச் சென்ற மாணாக்கர்களுக்காகவும் செலவாகி விடுவதைக் கண்ட வன்றொண்டர் மேற்கூறிய நான்கு புராணங்களும் அரங்கேற்றப்பட்ட காலங்களில் வேறுவிதமான ஏற்பாடுகள் செய்தார். அதன்படி திருவாவடுதுறை மடத்திலிருந்து அரங்கேற்றப்போகும்போது உண்டாகும் செலவுகளை திருவாவடுதுறை மடத்தாரும், அரங்கேற்றம் முடிந்து திரும்பும்போது ஏற்படும் செலவுகளை நகரத்தாரும் ஏற்றுக்கொண்டனர். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு புராணத்திற்கும் செய்யுள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்குப் பண்ணி கட்டும் தொகைக்கு உண்டியல் கொடுத்து அத்தொகையை நாகப்பட்டினம் வெளிப்பாளையத்திலுள்ள ஒரு நகரத்தார் கடையில் பெற்றுக்கொள்ளும்படிச் செய்தார். இதைக் குறித்து 'நகர வட்டகையிலுள்ள ஸ்தலங்களுக்குப் புராணங்கள் இயற்றி அரங்கேற்றிய காலத்தில்தான் பிள்ளையவர்கள் பெரிய தொகையைக் கண்ணாலே கண்டார்கள். அவர்கள் இந்த நன்றியை என்றும் பாராட்டி வந்தார்கள்' என்று உ.வே.சா குறிப்பிட்டுள்ளார். பிள்ளையவர்களும், வன்றொண்டரின் இச்செயலைப் பாராட்டி,

பாடுவதெங்கே யிந்தப் பாண்டிநாட்டு எல்லை வந்து
கூடுவதெங்கே ஒரு பாற் கோதையான்-நீடு புகழ்ப்
பாராயணன் என்று இப்பார் முழுதும் கொண்டாடும்
நாராயணனில்லையேல் நாம் என்று செய்யுளைப் பாடியிருக்கிறார்கள்.

பிள்ளையவர்களும் வன்றொண்டரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த அன்பும், வன்றொண்டர், தம் ஆசிரியர்பால் கொண்டிருந்த குரு பக்தியும், உற்றுழி உதவிய பாங்கும் ஆசிரியர்-மாணாக்கர் நல்லுறவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்,

ß.15-

90.அறம்பாடாப் பெரும்புலவர்

சி.விமலா
காரைக்குடி

பிள்ளையவர்கள் பாடிய பாடல்களிலும், இலக்கியங்களிலும் யாரையும் அறம் வைத்துப் பாடவில்லை. மேலும் யாரையும் வைதோ, வெகுண்டோ, பழித்தோ பாடவில்லை. கி.பி.17,18-ஆம் நூற்றாண்டுகளில் புலவர்கள் அறம் வைத்துப் பாடுதல் மிகுதி.

அறம்பாடுதல்

அறம்பாடுதல் என்பது எந்த நிகழ்ச்சியையாவது அறுந்து போகும்படி பாடுதல் ஆகும், 'அறம்' என்பதை 'அறும்' என்பதன் திரிபாகும். தொல்காப்பியராலும், திருவள்ளுவராலும் நிறைமொழி என்று வழங்கிய அடிப்படை பிற்காலத்தில் அறம்பாடுதல் என்று வழங்கப் பெற்றது. 'அறம்பாடுதல்' என்பது தீச்சொற்பட்டுத் தீங்குண்டாகப் பாடுதல் என்று செந்தமிழ்ப் பொருளகராதி பொருள் தருகிறது. 'அறப்பாடல் அறம்பாடுதல் என்பதற்கு வசைபாடல், இழியறப்பாடுதல் என்றும், அறம்பாடல் கையரம்பாடுதல் என்று பல பொருள் உண்டு. இதேபோன்று 'அறம்' என்பதற்குக் கையறம், தருமம், நீர்மை, நூற்பயன், நான்கினொன்று பெரியோரியல், பின்னொன்று புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைகவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை என்று தமிழ் பேரகராதி பொருள் தருகிறது.

மங்கலமொழி

ஒரு செய்யுளை இயற்றும் போது முதல் பாடல் மங்கலமாகத் தொடங்க வேண்டும். இந்தப் பாடலில் பொருத்தங்களும் அமைந்திருக்க வேண்டும். முதல் பாடலில் முதல் சொல் மங்கலச் சொல்லாக இருக்க வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்காவிட்டால் பாட்டுடைத் தலைவனுக்கோ, தலைவிக்கோ ஏதாவது ஊறு நிகழ்ந்துவிடும் என்று நம்புகின்றனர். புலவர்கள் பாட்டியல் நூல்கள், நூல் இயற்றுவது எவ்வாறு, அதற்கு என்னென்ன பொருத்தங்கள் அமைந்திருக்க வேண்டும் என்பதைக் கூறுகின்றன. பாட்டியல்கள் பொருத்தங்களைக் கூறுவது போல், தொல்காப்பியர் 'ஒப்பு' என்று தலைவன் தலைவியர்க்குக் கூறியுள்ளார். இதனுடைய வளர்ச்சியே நூலுக்குப் பரவிற்று. மங்கலச் சொல் என்பது பாடலின் முதல் அடியின் முதல் சொல். மங்கல மொழி என்பது வாழ்த்துகின்ற நன்மை சார்ந்த மொழியாகும். மங்கலச் சொல் மங்கலமொழி செய்யுட்களின் முதற்கவியின் முதலில் வருவதற்குரிய சுபமொழி என்ற விளக்குவர். மங்கலச் சொல் என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன் 'சுபத்தைக் குறிக்கும் மொழி' என்று கூறுகிறது.

வழிகாட்டுதல்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர் உ.வே.சா. அவர்கள், இவர் ஒருநாள் இரவில் நித்திரை மிகுதியில் பாடம் கேட்கப் போகாமல் தூங்கி விட்டார். இதனைக் கண்ட ஆறுமுகத்தாப் பிள்ளையவர்கள் உ.வே.சா. வின் மாயூரம் புராணப் புத்தகத்தையும், புத்தகக்கட்டையும் எடுத்து மறைத்து வைத்து விட்டார். காலையில் எழுந்து காலைக்கடனை முடித்து விட்டுப் படிப்பதற்கு மாயூரம் புராணத்தைப் பார்த்தார். உ.வே.சா. தன் புத்தகத்தையும், புத்தகக் கட்டையும் காணவில்லை. இவர் அங்குமிங்கும் அலைந்து தன் புத்தகங்களைத் தேடினார். பின் பிள்ளையவர்களிடம் தன் புத்தகங்கள் காணாமல் போனதைக் கூறினார். ஆறுமுகத்தாப் பிள்ளையவர்கள் இவர் ஏன் படிக்காமல் இருக்கிறான்? என்ன தேடுகிறான்? என்று கேட்கிறார்.

இவரின் புத்தகங்கள் காணாமல் போனதை பிள்ளையவர்கள் கூறுகிறார். அதனைக் கேட்ட ஆறுமுகத்தா பிள்ளை ஒரு செய்யுள் இயற்றிப்பாடும் உன் புத்தகங்களை வருவித்துத் தருகிறேன் என்கிறார். உடனே உ.வே.சா. அவர்கள் ஒரு வெண்பாவை யோசித்து முடித்து பிள்ளையவர்களிடம் சொல்லிக் காட்டும்பொருட்டு முதல் அடியைச் சொன்னார். அவை 'சீர்மருவு மாறுமுகச் செம்மலே' என்று உ.வே.சாமிநாதையர் தொடங்கினார். உடனே மீனாட்சி சுந்தரம் அவர்கள் பாடலை நிறுத்தும்படிக் கூறினார். 'நீர் சொல்லிய தொடர் மாறுமுகச் செம்மலே' என்று பிரிக்கப்படுமே என்று கூறி விபரீதமான அர்த்தமாகும்படி ஒரு போதும் பாடுதல் கூடாது. ஜாக்கிரதையாகச் செய்யுளைச் செய்து முடிக்க வேண்டும்' என்று கூறினார். பின் இவரே ஒரு வெண்பாவைச் சொல்லி ஆறுமுகத்தாப் பிள்ளையிடம் பாடிக்காட்டச் சொல்கிறார். உ.வே.சா அவர்கள் பாடலைப்பாடி புத்தகங்களைப் பெறுகிறார்.

அவை

ஆறுமுக பூபால வன்பிலார் போலென்பால்
மாறுமுகங் கொண்டான் மதிப்பவரால் கூறுதமிழ்
வாசிக்க வந்தவென்மேல் வன்மமென்ன யாவரும்
நேசிக்கு மாதயை செய் நீ

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அறம் வைத்துப் பாடவில்லை. ஆனால் , அறம் வைத்துப் பாடுவதையும், தீமை விளையப் பாடுவதையும் அறிந்து இருக்கிறார். அவருக்கு ஒரு செய்யுளை எவ்வாறு தொடங்கிப் பாடவேண்டும், பொருள் மாறுபடும்படிப் பாடினால் தீமைகள் விளையும் என்பதை அறிந்து செய்யுள் இயற்றியுள்ளார். உ.வே.சா. அவர்கள் இயல்பாகப் பாடிய பாடலைச் சொல்ல வரும்போது பிள்ளையவர்கள் தடுத்து வேறுமாதிரி நன்மை விளையும் பொருளுடன் மங்கலமாகவே பாடச் சொல்கிறார்.

புராண அரங்கேற்றமும் பொதுமக்கள் அச்சமும்

மகாவித்துவான் அவர்கள் தூரைமாநகர்ப் புராணம் இயற்றி

அரங்கேற்றுவதற்கு அவ்வூருக்குச் சென்று இருந்தார். அவர் அந்த ஊரில் தங்கியிருக்கும் நாட்களில் பக்கத்து ஊர்க்காரர்கள் சிலர் கற்கண்டு, பழம் முதலிய பொருள்கள் நிறைந்த தட்டங்களைக் கொண்டு வந்து அடியவர்முன் வைத்து வணங்கி நின்றனர். இவர்கள் ஏதோ ஒன்றைக் கேட்கத்தான் வந்திருக்கிறார்கள் என நினைந்து தாங்களுக்கு என்ன வேண்டும், வேண்டியதைக் கேளுங்கள் என்றார். வந்தவர்கள் இவரிடம் நாம் எதையாவது பேசினால் ஐயாவிற்குக் கோபம் வந்து தீமை உண்டானால் என்ன செய்வது, என அஞ்சி வ்யதில் முதிர்ந்த ஒரு பெரியவர் மட்டும் பேசினார். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என வேண்டிக் கொண்டனர். 'ஐயா தாங்கள் பாட்டின் பெருமையையும், வாக்கின் பெருமையையும் அறிந்திருக்கிறோம், ஆகையால் எங்கள் கோயிலைப் பற்றி பாடல்கள் பாட வேண்டும். நாங்கள் அறிவில்லாதவர்கள் என்று உத்தேசித்துப் பாடல்களைக் குறைத்து விடக்கூடாது. நாங்கள் ஏதாவது குற்றம் செய்தல் கூடும். அதை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் மேல் கோபங்கொண்டு அறம் வைத்துப் பாடவும் கூடாது. ஒவ்வொரு பாடலும் நாலடிக்குக் குறையவும் கூடாது. அப்படிக் குறைந்தாற் கோயிலைச் சேர்ந்தவர்களுக்கும், அடுத்த ஊரில் உள்ள எங்களுக்கும் கெடுதி நேரும் என்று கூறி வேண்டிக் கேட்டுக் கொண்டனர். பிள்ளையவர்கள் நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். பாடல்களையும் பாடல்களின் அடிகளையும் குறைக்க மாட்டேன். அறம் வைத்தும் பாட மாட்டேன். ஒவ்வொரு பாட்டும் நான்கு அடிகளுக்குக் குறையாமலே இருக்கும் என்று உறுதி கூறினார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய தலபுராணங்கள், இலக்கியங்கள் அனைத்தும் மங்கலமொழிகளில் தொடங்கிப் பாடப்பட்டு இருக்கின்றன.

திருவிடைமருதூர் உலாவில் முதல் பாடல் மங்கலமாகவே தொடங்கிப் பாடியிருக்கிறார். அவை.

'பமேவு' நான்முகத்துப் புங்கவனுஞ் செங்கமல

துறைசை யமக வந்தாதி

'தருவம்' பரவ மலமாயை கன் மஞ்சிதை தரவ

சீகாழிக் கோவை

"பூமேவு' கஞ்ச முமேந்தெழி னிலமும் பூந்தளவு

வாட்போகிக் கலம்பகம்

'மாமேவு' செங்கமல மலருறையுந் திருமகளும்

இதேபோன்று ஆசிரியர் தான் இயற்றிய நூல்களில் எல்லாம் மங்கலச் சொல்லை நுழைத்தே நூலைத் தொடங்குகிறார்.

பன்னிருப் பாட்டியல் மங்கலச் சொற்களாக பொன், பூ, திரு, மணி, புனல், ஆரணம், கடல், செங்கதிர் இதுபோன்ற சொற்களை மங்கலச் சொல் என்று கூறுகின்றது. மகாவித்துவான் அவர்கள் பன்னிருபாட்டியலில்' உள்ள மங்கலச் சொல்லையே தன் நூல்களில் பயன்படுத்தி இருக்கிறார். 'பூ' என்ற சொல்லை இரண்டு செய்யுளில் பயன்படுத்தி இருக்கிறார்.

91. அகிலாண்டநாயகி மாலையில் அடியார்கள்

சு.விஜயகாந்தி
மயிலம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் இலக்கியங்களில் தலவரலாறு, புராணவரலாறு, அடியார்கள் வரலாறு ஆகியன காணக்கிடைக்கின்றன. இவர் பெரியபுராணக் கீர்த்தனத்திற்கு சிறப்புப்பாயிரம் அளித்தமையிலிருந்து இப்புராணத்தின் மீது இவர் கொண்ட தீராக்காதலை உணரவியலும். இவர் தாமியற்றிய நூல்கள் பலவற்றுள் பெரிய புராண அடியார்கள் வரலாற்றினைச் சுட்டிச் சென்றுள்ளார். இவருக்கு நாயன்மார்களிடத்திருந்த பற்றின் காரணமாக இவர் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடினாரென, உ.வே.சா. தம் ஆசிரியர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர் தாமியற்றிய பல நூல்களில் அடியார்களுக்கு வணக்கம் கூறிப் போற்றியுள்ளார். இவருக்கு முன்பு கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அடியார்கள் மீது நெஞ்சார்ந்த பற்றுடையவர். இவர் தம் நூல்களில் அடியார்களின் வரலாற்றை, பல கோணங்களில் புதிய இலக்கிய உத்தியாக நவின்றுள்ளார். சுவாமிகளின் நூல்களில் மிகுதியும் பற்றுடைய பிள்ளையவர்கள் தம் நூல்களிலும் ஆங்காங்கே அடியவர் தம் வரலாற்றை நினைவூட்டிச் சென்றுள்ளார்.

மகாவித்துவான் பாடிய திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலையில் அடியவர்கள் வரலாற்றைச் சுட்டிச் சென்ற வகையை ஆய்வதே இக்கட்டுரை. இந்நூலுள் வெவ்வேறு அடியார்கள் பலரைப் பற்றிய குறிப்புக்கள் காணப் பெற்றாலும் பெரியபுராண அடியார்களை மட்டும் இக்கட்டுரை சுட்டுகிறது. இந்நூலுள் 11 பாடல்களில் அடியார்கள் பற்றிக் குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. சமயக் குரவர் வரிசையில் முன்னிலை வகிக்கும் ஞானசம்பந்தர் 4 பாடல்களிலும் அடுத்து இடம் பெறும் சுந்தரர் 3 பாடல்களிலும் குறிப்பிடப்பெற்றுள்ளனர். எஞ்சிய 4 பாடல்களில் பிற அடியார்கள் சுட்டப் பெற்றுள்ளனர்.

ஞானப்பால் உண்ட சம்பந்தர்

திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டு களித்த நிகழ்வு மூவிடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

முழுப்புகழ் நினக்கு

பண்டொரு காலத்தில் சிவனின் அருள்வழி, நீ புகலிப்பாலனுக்கு ஞானப்பால் ஊட்டியமையால் முழுப்புகழும் நினைக்கில்லை. இன்று அடியேனுக்கு ஞானப்பால் நேரிடையாக அளித்தால் முழுப்புகழும்

நினைக்காகுமெனப் புகன்று இறைவியை ஆட்கொள்ள வேண்டுகிறார் புலவர். (பா.6). இறையடியார்கள் இறையருளைப் பெறவிழையுமிடத்து, தமக்கு முன் வாழ்ந்த அடியார்களின் வரலாற்று நிகழ்வுகளில் ஆழத்தோய்ந்த பற்று கொண்டமையால், முன்னர் வாழ்ந்த அடியார்களை இறைவன் ஆட்கொண்டருளியது போல், தம்மையும் ஆட்கொள்ளல் வேண்டுமென்ற தம் உள்ளக்கிடக்கையை இறைமுன் வைப்பது இயல்பு. இவ்வியல்புடைய புலவரும் இறைவியின் ஆற்றல் நேரிடையாக தன்னிச்சையாகச் செயல்பட்டு புகழுறுதல் வேண்டும். தாமும் புகழ்ச்சிமிகு இறையடியராகத் திகழ்தல் வேண்டுமென்றத் தம் அவாவினை உணர்த்துகின்றார்.

அழாவிடினும் அளிப்பவரிலையோ?

'அழுத பிள்ளை பால்குடிக்கும்' எனும் மொழிக்கிணங்க சீர்காழியில் சம்பந்தராம் குழவி ஆழுதமையால் நீ பாலூட்டினாய். குழவி அழாவிட்டாலும் தன் குழந்தையின் பசி வேளையறிந்து பாலுட்டும் தாய் இல்லையா? பசியோடுள்ள குழவியாகிய எனக்கு அருள்வாய் என்கிறார் புலவர்.(பா.28) பாட்டுடைத்தலைவி இவ்வுலகை ஈன்ற இறைவியாதலின் தாயின் உள்ளவியல்பை ஈங்கு புலவர் சுட்டுகிறார். குழவி அழுவதற்கு முன்பே, குழவியின் உடல், உள்ளம் இவற்றின் தேவையறிந்து பாலூட்டும் தாய் தலைசிறந்தவள். ஆகையால் நீயும் அழாத குழவியாகிய என் உளக்குறிப்பறிந்து உளமிரங்கி எனக்கருள்வாயென இறைவி அருளைப் பெற விழைகின்றார் புலவர்.

'இலைபடர்ந்த பொய்கையிடத்தழுதல் கண்டு முலைசுரந்த அன்னையோ முன்னின் - நிலை விளம்பக் கொங்கை சுரந்த அருள் கோமகளோ சம்பந்தா இங்கு உயர்ந்தாள் ஆர்கொல் எனக்கு'(நால்வர் நான்மணிமாலை-5) என்பது, குழவியினியல்பைக் கேட்டவுடன் முலைசுரக்கும் தாயின் தலையன்பை உரைக்கும்.

'பால் நினைத்தூட்டும் தாயினும் சாலப்பரிந்தூட்டும் (திருவாசகம்-542) இறைப்பொருளின் உண்மையையும் நாம் இங்கு உணரவியலும்.

உனக்குற்ற புகழ் எம்பிரானுக்கு உண்டு கொல்

'அம்பலத்தாடும் பெருமாள் அன்று உபமன்யு முனிவருக்குத் தீம்பால் ஊட்டினார். நீயும் பசித்தழும் இளைமகவுக்குத் தீம்பால் ஊட்டினாய். ஆனால் உனக்குக் கிட்டிய புகழ்போல் எம்பிரானுக்குக் கிட்டியதா இளம்புவாய்', என இறைவியருளைப் பெற விழைகின்றார் புலவர்.(பா-29). இவ்விடத்து பாட்டுடைத்தலைவி அகிலாண்ட நாயகியின் அறிவு சான்ற புகழ் புலவரால் வியந்துரைக்கப்படுகிறது. இறைவி சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டியமையால், அவர் தேவாரப்பதிகம் பாடிச் சிறப்புற்று, இவ்வுலகை உய்வித்தார். இவ்விதம் உனக்குற்ற புகழ் இறைவனுக்குக் கிட்டவில்லை. ஆதலின் நீ மிகுதியும் புகழுக்குரியவள். உன் புகழுக்குரிய அடியவனாக, தமிழ்த்தொண்டனாக என்னையும் ஏற்றுக்கொள் என்கிறார் புலவர்.

'அணியார் மதிற் கச்சியப்பன் அருள்பால் ஆழியுண்டுத் தனியாப் பசிதவிர்ந்தான் உபமன்யு நீசண்பையற்கு மணியார் தனப்பால் சிறிதளித்தாய், உண்டு, மாமிறவி மிணிதீர் இசைப்பாடினான் இந்த பாற்கினை பேசின் உண்டே?'(காமாட்சி அந்தாதி.பா-61).

எனுமடிகள் அம்மையின் உயர்வை, பெண்ணின் பெருமையைத் தெற்றெனவுரைக்கின்றன.

மகிழ்ச்சி மிகவுண்டு போலும் எதிர்வந்து
புகழ்ச்சியோடு நீ பாடும் போது...........
.............புகலிச்சம்பந்தா
தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு (நால்வர் நான்மணிமாலை-13)

என்பதுவும், தந்தையை விடத் தாயாகிய உமையம்மை உற்ற மகிழ்ச்சியை தெள்ளிதின் புலப்படுத்தும்.

அன்பு கொளல் அரிதோ

ஞானசம்பந்தர் வரலாற்றில் மூன்று நிகழ்வுகளை 69ஆம் பாடலில் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'அடியவர் குறிப்போர்ந்து ஆண்பனை காய்க்க, ஆற்றெதிர் செல்லவேடு, என்பின் பொடிமடவரலாக' (பா.69) எனத்திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கியது; வைகையில் இட்ட ஏடு நீரோட்டத்தை எதிர்த்துத் திருவேரகத்தில் ஏறியது, திருமயிலையில் என்பு, பூம்பாவையாக்கியதென்ற இவ்வற்புதங்கள் அடியவர் உளக்குறிப்பினை ஓர்ந்து பரமன் அருளால் நிகழ்ந்தன. கொடியவனாகிய எனது குறிப்போர்ந்து உன்னடிக்கு அன்பு கொள அருள்புரிவது உனக்கரிதோ? என வினவுகிறார் புலவர்.

பரமன், சம்பந்தர் மூலமாக பலவித அற்புதங்களை நிகழ்த்தி தம் ஆற்றலை மெய்ப்பித்துள்ளார். அது போல் அற்புதங்கள் எவையும் என்பால் நீ நிகழ்த்த வேண்டாம். உன்மீது நான் அன்பு கொள அருளீந்தால் போதுமென்பது இறையியல்புணர்ந்த புலவர் தம் எளிய உள்ளத்தைப் புலப்படுத்தும்.

சுந்தரர் வாழ்க்கை வரலாற்று நிகழ்வினுள் மூன்றனைப் புலவர் சுட்டுகிறார்.

1. இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டமை.
2. பித்தா, வென இறைவனைப் பாடியமை.
3. முதலை வாயிலிருந்து பிள்ளையை மீட்டமை.

தடுத்தாட் கொண்டார்

சுந்தரரைத் திருமண காலத்தில் இறைவன் அந்தண வேடம் தரித்து வந்து திருமணத்தைத் தடுத்து, அவைமுன் வழக்குரைத்து அவரைத் தன் அடிமையாக ஆட்கொண்டான். அதுபோல் நீயும், என்னை வழிவழியாக உன் அடிமையாக ஆட்கொண்டருளல் வேண்டுமென முறையிடுகிறார் புலவர். (பா.49) இத்தருணம் மட்டுமின்றி எத்தருணத்திலும் தன்னை அடியவராக ஏற்றருளல் வேண்டுமென்றத் தம் அவாவினைப் புலவர்

புகல்கின்றார்.

தனை விடுத்தாய் ஏன்?

சுந்தரர் பலரும் அறியும்படி 'பித்தா' என இறைவனை இகழ்ந்தார். 'பணவ போ' என்றார். அவ்வாறிகழ்ந்தவரை இறைவன் புரந்தனன். நான் உன்னைப் புகழ்ந்துரைத்து அருள்புரிய வாவென அழைக்கின்றேன். சுந்தரர் போல் உனை இகழவில்லை. என்னைப் புரக்காது விட்டாயே ஏன்? என வினவுகிறார் புலவர். (பா-67). இறையடிமையாகிய சுந்தரரின் விருப்பினை இறைவன் உணர்ந்து அருளியது போல் நீயும் என் உளமறிந்து எனக்கு இரங்கி அருளுமென்கிறார் புலவர்.

முதலையுண்ட மகவை அழைத்தல்

சம்பந்தர் வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறும் 69ஆம் பாடலில் தொடர்ந்து சுந்தரர் முதலையுண்ட மகவை அழைத்த நிகழ்வினையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார் புலவர்.

'கராம் விழுங்கும் பொருள்கரச் செய்தான் பரமன்' (பா-69) அவிநாசியில் கரவுண்ட மகவை உயிருடன் அழைத்து சுந்தரருக்குப் பரமன் அருளீந்தான். அதுபோல் என் உளக்குறிப்போர்ந்து உன்னடிக்கு அன்பு கொள அருள்புரிவது அரிதோ? என வினவுகிறார்.

தன் வாழ்க்கையில் சுந்தரர் சம்பந்தர் போல் அற்புதங்கள் நிகழ்த்த வேண்டாம். உன் திருவடிமீது அன்பு கொளதற்கு அருளீந்தால் போதுமென புலவர் தன்னிரக்கத்துடன் இறைவனிடம் வேண்டுகிறார்.

பிற அடியார்கள்:

கண்ணப்பர், சிறுதொண்டர், சண்டீசர், இயற்பகை நாயனார் கோட்புலியார் கழற்சிங்கநாயனார், சாக்கிய நாயனார் போன்றோர் 4 பாடல்களில் சுட்டப்பெறுகின்றனர். இவர்களுள் கண்ணப்பர், சிறுதொண்டர், சண்டீசர் ஆகிய மூவரும் இருவிடங்களில் சுட்டப்பட்டுள்ளனர்.

செயற்கரிய செய்தார்:

விழியிடந்தப்பிய கண்ணப்பர், மகவரிந்து உணவாக ஊட்டிய சிறுதொண்டர், தந்தை தாள் தடிந்த சண்டீசர், மனைவியை இறைவனுக்குத் தந்துதவிய இயற்பகை போன்ற செயற்கருஞ்செயலாற்றியோருக்கு நின் கொழுநன் அருளினான். இத்தகு செயற்கருஞ்செயல் என்னால் ஆற்றவொன்னாதெனக் கருதி நான் உனையடைந்தேன். நீ மிகுதியும் ஈர உள்ளத்தினள் ஆதலின் உன் அடியவனை வருத்தாமல் அருள்வாய். (பா-10) ஈங்கு, இறைவியல்பு, அருள் செய்நெறி ஆகிய இரண்டையும் புலவர் பகுத்துணர்த்துகிறார். சிவப்பிரகாசர் தானருளிய திருவெங்கைக் கலம்பகம், சிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது போன்ற இலக்கியங்களில் செயற்கருஞ் செயலாற்றிய அடியவர் வரலாற்றை இயம்பியது போல் ஈங்கு பிள்ளையவர்களும் இயம்பியது ஒப்பிடற்குரித்து. (திருவெங்கைக் கலம்பகம்-16).

நின்கொழுநன் அருள்வான்

சண்டீசர் தன் தந்தையைக் கொன்றும், கழற்சிங்கர் தம் மனைவியைக் கொன்றும், சிறுதொண்டர் தம் மகனைக் கொன்றும், கோட்புலியார் தம் சுற்றத்தைனைக் கொன்றும் நின் கொழுநனின் அருளுக்குரித்தோராயினர். அவ்வாறல்லாமல் மலரனைய உன்பதம் அடைந்தோர்க்கு விருப்பத்தோடு நீ அருள்வதையறிந்த நான் உனை அடைந்தேன். நீ எனக்கருள்செய் என வேண்டுகிறார், புலவர் (பா-14) ஈங்கு, இறைவி தன்பதம் சேர்ந்த அடியார்களைத் துன்புறுத்தாமல் அவர்களுக்கு அருளுவாளென்ற அவள் அருள்செய்யும் நெறியைப் பிரித்து உணர்த்துகிறார் புலவர்.

மெல்லியள் நீ

இறைவன் வந்திக்கிழவியின் பொருட்டு பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன் கரத்தால் பிரம்படிப்பட்டார். சாக்கிய நாயனாரால் கல்லடிப்பட்டார். அர்ச்சுனனால் வில்லடிபட்டார். இவ்விதம் வன்முறையில் வழிபட்டோருக்கெல்லாம் இறைவன் அருளியமைக்குக் காரணம் சிவன் உரம்பயில்பவன். ஆதலின் வன்முறையில் தம்மைத் துன்புறுத்தி வழிபட்ட அடியார்களுக்கு அருளினான். நீ மெல்லியள். அதனால் என்னைத் துன்புறுத்தாமல் எனை ஆட்கொள்வாயென வேண்டுமிடத்து இறைவியின் மெல்லியல்பைச் சொல்லியும் அடியார்கள் வழி இறைவனின் உரம்பயிலும் இயல்பைச் சுட்டியும் இறைவியருளை வேண்டுகிறார் புலவர்.

விதி விலக்கிலான்

வேடர் தலைவனான கண்ணப்பர் தந்தை ஊனை உண்டான். இறைவன் உனக்குப் பாதி மேனியைத் தந்தருளினான். அதனால் இறைவன் விதிவிலக்கிலாது அடியவரின் உளமறிந்து அவரை ஏற்கும் இயல்பினன். இத்தன்மையை நீ இறைவனிடம் வெகுளாமல் உணர்த்தினால், ஆளத் தகாத என்னையும் அவன் என் தகுதி கருதாது ஆட்கொள்வான் என்பது புலவரின் முறையீடு.(பா.97) இங்கு இறைவியின் வழி இறைவன் அருளைப் பெற விழையும் புலவரின் உள்ளத்தையும் அடியவர்கள் இறைவனை வழிபடும் வழிபாட்டு நெறியையும் உணர்த்துகிறார் புலவர். இவ்வழிபாட்டு நெறி இறைவன் விருப்பு வெறுப்பற்றவன். விதிக்கு விலக்கானவன் என்ற இறைவனியல்பினைத் தெரிவிக்கும்.

மேல் சுட்டப்பட்ட அடியார்கள் தன்னைத் துன்புறுத்தியும், தன்னைச் சார்ந்தோரைத் துன்புறுத்தியும், இறைவனைத் துன்புறுத்தியும், இறைவன் அருளைப் பெற்றனர். ஆனால் இறைவி எவரையும் துன்புறுத்தாமல் அருள்வாள் என்ற இறைவி அருள் செய்நெறி இங்கு உணர்த்தப் பெறுகிறது.

1. 'முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் சொல்லும் பொன்னே போல் போற்றுவம்(7) எனும் கூற்றுக்கிணங்கத் தமக்கு முன் வாழ்ந்த சிவப்பிரகாசர் நூல்களையொட்டித் தம் நூல்களிலும் அடியார் வரலாற்றை இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார் புலவர்.

2. தம் நூலில் அடியார்களைச் சுட்டக் காரணம், தமக்கு முன் வாழ்ந்த

அடியார்களைப் போல் தாமும் இறையால் ஆட்கொள்ளப்படல் வேண்டுமென்ற அவா.

3. இறைவியருளை வேண்டுதலில், நேரிடையாக இறைவியை வேண்டுதல், இறைவியைத் துணையாகக் கொண்டு வேண்டுதல் எனவிருநிலை சுட்டப்பெறுகிறது.

4. இறைவியின் அருள் வேண்டுதலில் அடியார் வரலாறு,

1. எடுத்துக்காட்டாகக் கூறல்
2. வினா-விடையாகக் கூறல்
3. இறைவியின் இயல்புரைத்துக் கூறல்
4. இறைவன் இறைவி ஆகிய இருவரின் வேறுபட்ட இயல்புரைத்துக் கூறல் எனும் நான்கு உத்திகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. இறைவன், இறைவி ஆகிய இருவரும் அருள் செய்நெறி பகுத்துச் சுட்டப்பட்டுள்ளது.

6. சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரின் வாழ்க்கை நிகழ்வுகள் மிகுதியும் சுட்டப்படக் காரணம், இவ்விருவரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் மிகப் பலவாக இருத்தல் ஆகும்.

92. பிள்ளையவர்கள் கற்ற மற்றும் கற்பித்த முறைகள்

தே.வேலப்பன்
இரவிபுதூர்

அந்நாளையச் செய்தி இதழொன்றில் வந்த ஒரு குறிப்பு இது: இக்காலத்தில் தமிழ்நாட்டுக்கு இரண்டு கண்களாக விளங்குகிறவர் இருவர். அவருள் ஒருவர் வசனம் எழுதுவதில் ஆற்றலுடையவர்; மற்றொருவர் செய்யுளியற்றுவதில் ஆற்றலுடையவர். வசனம் எழுதுபவர் ஆறுமுக நாவலர், செய்யுளியற்றுபவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. நாவலர், சிதம்பரத்தில் பாடசாலை வைத்துத் தமிழைப் பரிபாலித்து வருகிறார்; மற்றொருவர் தாமே நடையாடு புத்தகசாலையாக இருந்து, தம்முடைய செலவிலேயே பிள்ளைகளைப் படிப்பித்து வருகிறார். இவ்வாறு பிள்ளையவர்களின் ஆளுமையில் குறிப்பிடத்தக்க ஒரு கூறு அவருடைய கற்பித்தல் பணி என்றாகிறது. கற்றல், கற்பித்தலுக்கு அடிப்படை. இந்நிலையில், பிள்ளயவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகள் பற்றிய ஓர் ஆய்வு பயன்தருவதாகவே {இருக்க முடியும்.

கற்றல்

வாய்மொழி, எழுத்து, காட்சி அமைப்பு ஆகிய மூன்றுமே கருத்தூட்டம் ஏற்படுத்துவதற்கான ஊடகங்கள் என்பார்கள் கல்வியாளர்கள். 9 விழுக்காடு எழுத்து மூலமாகவும், 16 விழுக்காடு படிப்பதன் மூலமாகவும், 30 விழுக்காடு பேச்சு மூலமாகவும், 45 விழுக்காடு மற்றவருடைய உரைகளைக் கேட்பதன் மூலமாகவும் கருத்தூட்டம் ஏற்படுவதாகக் கணித்தறியப்பட்டுமுள்ளது. இங்கு, நம் பிள்ளையவர்கள் ஒரு கணக்காயரின் பிள்ளை என்பதையும், தம்வீட்டுத் திண்ணைப் பள்ளியில் மற்ற மாணவருடன் பிள்ளைப் பருவத்திலேயே பல நூல்களைப் பயின்று வந்தார் என்பதையும், தமது தந்தையைப் பார்த்துச் செல்ல வரும் கல்விமான்களின் பேச்சை வலிந்து சென்று ஊன்றிக் கேட்டு வந்தார் என்பதையும் அறியும்போது, அவருக்குக் 'குலவித்தை கல்லாமல் பாகப்பட்டதில்' விந்தையில்லை.

அச்சேறிய நூல்கள் இல்லாத அக்காலத்தில், படிப்பவர்கள் நூல்களைப் பிரதி செய்து படித்தாக வேண்டி வந்தது. ஒருமுறை எழுதுவது, பலமுறை வாசிப்பதற்குச் சமமாதலால், படித்தவை நினைவில் நன்கு பதிய இந்தப் பிரதியெடுக்கும் வழக்கம் பெரிதும் உதவியது. பிள்ளையவர்கள் கம்பராமாயணத்தை மூன்று முறை பிரதியெடுத்துள்ளார் என்பார் உ.வே.சா. இதனால், இவருடைய கையெழுத்தும் 'அழகாக முத்துக்கோத்தாற் போல இருக்கும். ஒவ்வொரு வரியும் கோணாமல் ஒழுங்காக இருக்கும்; எழுத்து ஒன்றுடன் ஒன்று சேராது'.

இவருடைய தந்தையார் அடிக்கடி சமுத்தி கொடுத்துச் செய்யுள் இயற்றச் சொல்வது வழக்கம். இந்தப் பயிற்சி பிள்ளையின் செய்யுள் செய்யும் திறமையை ஊக்குவித்தது. 'நான் கேட்கிறேன் (கேட்பதை)மறந்து விடுகிறேன்; நான் பார்க்கிறேன்(பார்த்தது) நினைவில் நிற்கிறது; நான் செய்கிறேன் (செயலில் ஈடுபடுவதால்) முழுவிளக்கம் பெறுகிறேன்' என்ற ஒரு சீனப் பழஞ்சொல் இங்கு நினைவுகூர்தற்குரியது.

கற்பதில் பிள்ளையவர்களுக்கு இருந்த ஆர்வம் ஒப்புவமையற்றது. தண்டியலங்காரம் படிக்க ஆசை; நூலோ அன்னப்பிட்சை எடுத்து வாழும் ஒரு பரதேசி 'மடற்பனை'யிடம் உள்ளது. தெருத்தோறும் அந்தப் பரதேசியைப் பின்தொடர்ந்து, அவருக்குப் பிரியமான கஞ்சாவை வாங்கிக் கொடுத்து நூலைப் பெற்றுப் பிரதி செய்து கொண்டு, பாடமும் கேட்டார் பிள்ளையவர்கள். சிவதருமோத்திரச் சுவடியைப் பிள்ளையவர்களுக்காக அவரது மாணவர் சுந்தரம் பிள்ளை ஒரு நாடகமே ஆடிப் பெற்றுக் கொடுக்கிறார். எங்கு சென்றாலும் பழைய சுவடி ஏதாவது இருக்கிறதா என்று விசாரிப்பதும் அவற்றைப் படியெடுத்து வைத்துக்கொள்வதும் அவரது மற்றொரு வழக்கம்.

நூல்களைச் சேகரிப்பதிலிருந்த பேரளவு ஆர்வம், பிற அறிஞர்களைப் பார்த்துப் பழகி ஐயங்களைத் தீர்த்து, அறிவை வளர்த்துக் கொள்வதிலும் பிள்ளையவர்களுக்கு இருந்தது. இந்த நோக்கத்துடன் தான் தமது முதல் சென்னைப் பயணத்தை அவர் மேற்கொள்கிறார். அப்போது, 'திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை வீட்டிற்குச் சொல்லும்போது ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலின் வாயிலின் வழியேதான் செல்வேன். அப்பொழுது உள்ளே சென்று ஸ்வாமியை தரிசித்துக் கொண்டு போகவேண்டுமென்னும் விருப்பம் இருப்பினும் நேரமாய் விடுமேயென்னும் கவலையால் சந்நிதியில் நின்றே அஞ்சலி செய்துவிட்டுச் செல்வேன்' என்ற அவர் கூற்று இந்த ஆர்வத்தை நன்கு புலப்படுத்துவதாகும்.

பாடங் கேட்பதற்காகப் பொருட் செலவிடுவதற்கும் பிள்ளை ஒருபோதும் தயங்கியதில்லை. இலக்கண விளக்கம் நூலைப் பாடங்கேட்க வேண்டும் என்பது அவரது பேரவா. அந்நூலைப் பாடஞ்சொல்லத் திறமையுள்ளவர் கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகர் என விசாரித்தறிகிறார். அவரை அணுகிய போது, பாடங் கேட்க வேண்டுமெனில், மாதம் ஒன்றுக்கு ரூ.20/- கொடுக்க வேண்டும் என்றும், 3 மாதத்தில் தொகையை முன் பணமாகக் கொடுத்திட வேண்டும் என்றும், பாடங் கேட்கும் போது ஆசனப் பலகையில் தேசிகரை இருக்கச் செய்து மரியாதையாகக் கேட்க வேண்டும் என்றும் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு, மாதக் கட்டணம் கொடுப்பதற்குக் கையில் காசில்லாததால், 'காந்திமதியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றியபோது தமக்குக் கிடைத்த கடுக்கன் ஜோடியைக் கழற்றி விற்று, 6 மாதத் தொகையையும் முன்னதாகவே கொடுத்து விடுகிறார் பிள்ளையவர்கள்.

தொடர்ந்து பாடஞ் சொல்லி வந்ததும் அவருடைய கல்வி வளர்ச்சிக்கு

ஒரு காரணமே. இடைவிடாமல் பாடஞ் சொல்லி வந்ததனால் பாடல்கள் அத்தனையும் அவர் நினைவில் நிலைத்து நின்றன. அவரது முதல் மாணாக்கர் தியாகராசச் செட்டியார், அவரை நோக்கி 'நீங்கள் இடைவிடாமற் பாடஞ் சொல்வதாகப் பேர் வைத்துக் கொண்டு நன்றாகப் படித்து வருகிறீர்கள்' என்று சொன்னமை இங்கு நினைவுகூர்தற்குரியது.

கற்பித்தல்

இயல்பாகவே, தாம் கற்ற முறைகள் சிலவற்றைத் தாம் கற்பிக்கும் போதும் செயற்படுத்துகிறார் பிள்ளையவர்கள். நூல்களைப் பிரதி செய்யும் பயிற்சியையும், சென்ற இடங்களிலெல்லாம் ஏடுகள் சேகரிக்கும் பணியையும் தம்முடைய மாணவர்களையும் மேற்கொள்ள வைத்ததன் விளைவாகத்தான் அவர் மாணவர் உ.வே.சா, வழியாகப் பழந்தமிழ் நூல்கள் பல தமிழர்களுக்கே கிடைத்தன. தந்தை தமக்கு சமுத்தி கொடுத்துச் செய்யுள் இயற்றச் சொல்லி வந்ததுபோல, ஈற்றடியைக் கொடுத்துச் செய்யுளியற்றுமாறு தம் மாணவர்களை இவரும் கேட்டுக் கொள்வது வழக்கமாயிற்று. அப்போது, 'பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டுவதற்காகத் தந்தை அவர்களோடு சேர்ந்து விளையாடுவதில்லையா? அதைப்போல அவரும் எங்களுடன் சேர்ந்து செய்யுளியற்றிடுவார்' என்பார் உ.வே.சா. பிள்ளைப் பிராயத்தில் தம் தந்தையின் தொடர்பால் தமக்குக் கிடைத்த வாய்ப்பினைத் தாம் பயன்படுத்திக் கொண்டது போலத் தம்மைப் பார்த்துச் செல்வரும் கல்விமான்களுடன் கலந்துரையாடும் போது, தம் மாணவர்களையும் அதில் வலிய ஈடுபடவைத்து, அந்த ஈடுபாடே ஒரு கற்பித்தல் உத்தியாக அமைந்து விட்டிருந்தது. திருவாவடுதுறையில் தாம் பெற்ற இவ்வகையான அனுபவத்தின் காரணமாக மடத்தை 'ஒரு சர்வகலாசாலை', 'கலைமகள் திருக்கோயில்' என்றே மதிக்கிறார் உ.வே.சா.

நுழைவுத் தேர்வில் தேறியவர்களுக்கே பிள்ளையவர்களின் பள்ளியில் சேரமுடியும்; தகுதியற்றவர்கள் 'எழுவாய் பயனிலை' என ஒதுக்கி விடப்படுகின்றனர். மாணவர்களின் விருப்பார்வத்தையும், மனப்பான்மையையும் அறிந்து கொண்டு கற்பிக்க வேண்டும் என்பது இந்நாளையக் கல்விக் கோட்பாடுகளில் ஒன்று தான்.

பாடஞ் சொல்வதற்கெனக் குறிப்பிட்டவொரு இடமோ, காலவரையறையோ பிள்ளையவர்களுக்கு இல்லை. குளத்துப் படித்துறையில், வண்டியில் பயணிக்கும் போது, சாலையில் நடக்கும் போது, எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கும் போது, சயனித்தவாறு, எப்போதுமே கற்பித்தல் தான். கைகளைக் கட்டிக் கொண்டே ஆறுமணி நேரம் வரையில் காலைப்பெயர்த்து வையாமல் அமர்ந்தபடியே இருந்து பாடஞ் சொல்வார். 'பாடஞ் சொல்லாவிட்டால் இவருக்குப் பொழுது போகாது' என்பார் உ.வே.சா.

இவர் பாடஞ் சொல்லும் முறையை உ.வே.சா இவ்வாறு சொல்வார்: 'பாடஞ் சொல்லும் பொழுது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்வார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன

கருத்துக்களை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவார்.... பல பல நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துச் சொல்லி, மாணாக்கர் மனத்தில் கருத்துக்கள் தெளிவாகப் பதியும்படிச் செய்வார். .... பாடஞ் சொல்லும் நூல்களின் உரைகளில் மேற்கோளாக வரும் செய்யுட்களுக்குப் பொருள் கூறுவார். புலவர் பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்வார். அருங்கருத்துகளை சொல்லிவரும் பொழுது அவற்றைத் தாம் அறிந்த வரலாற்றையும் கூறுவதுண்டு'. 'இங்ஙனம் இவர் பழக்கி வந்தமை கவனிப்பையும் ஆராய்ச்சி முறையையும் உண்டு பண்ணியது' என்பார் உ.வே.சா.

பிள்ளையவர்கள் கற்பித்தவையெல்லாம் அடிப்படையில் கவிதை நூல்கள். கவிதைகள் ஓசைச் சிறப்புடையவை, அவற்றுள் ஆழ்ந்திருக்கும் ஒரு கவியுள்ளம். கவிதையைக் கற்பிப்பவர்கள் அந்த உள்ளார்ந்த ஓசையின்பத்தையும், அமிழ்ந்திருக்கும் கவியுள்ளத்தையும் வெளிப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். பிள்ளையவர்களும் திருச்சி வட்டத்தில் வழங்கும் ஒருவகை இசைமுறையிலே தான் செய்யுள்களைச் சொல்லி வந்திருக்கிறார். அவர் 'நல்ல நூல்களில் உள்ள சிறந்த பகுதிகளைப் படிக்கும் பொழுதும், பாடஞ் சொல்லும் பொழுதும் மனமுருகிக் கண்ணீர் வீழ்த்துவார்' என்று உ.வே.சா. சொல்லிச் செல்வதிலிருந்து கவிஞர் உள்ளத்திலுள்ளதைத் தாம் வாங்கிப் பிறர்க்கு அவர் அளித்து வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர
மொழிந்திடுதல்; சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
கனவுபல காட்டல்; கண்ணீர்த்
துளிவர உள் உருக்குதல் இங் கிவையெல்லாம்
நீ அருளும் தொழில்க ளன்றோ?
ஒளிவளரும் தமிழ் வாணி; அடியனேற்கு
இவையனைத்தும் உதவுவாயே'

என்ற பாரதியின் வேண்டுகோளை மொத்தமாக நிறைவேற்றும் வகையில் அமைந்திருந்தது பிள்ளையவர்களின் பாடஞ் சொல்லும் முறை எனலாம்.

புதிய மாணவர்களுக்குப் பழைய மாணவர்களைக் கொண்டு பாடம் சொல்லுவிப்பது இவர் முறை; இதற்குக் காரணம் அவர்களுக்குப் பாடஞ்சொல்லும் ஆற்றல் உண்டாக வேண்டும் என்பதுதான். மாணவர் படித்த நூல்களிலிருந்து நல்ல பாடல்களை விருந்தினர்களுக்குச் சொல்லிக் காட்டிப் பொருள் சொல்லும் படியும் அவர் ஏவுவதுண்டு. இதனால் அம்மாணவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சியும் ஊக்கமும் கூச்சமின்றிப் பேசும் ஆற்றலும் நாளடைவில் அதிகரிக்க வழியேற்பட்டது. பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் போதும், முன்னரே ஓரளவு பயிற்சியுள்ளவர்களுக்கு ஒரு பாடமும், மற்றவர்களுக்கு வேறொரு பாடமும் நடத்தப்பட்டு வந்தது. திருவாவடுதுறை மடத்திலேயே பெரிய வரிசை, சின்ன வரிசை என இரு

வகுப்புகளுக்குத் தனித்தனியே வெவ்வேறு பாடங்கள் நடத்தப்பட்டு வந்தன.

பதினாயிரம் பாடல்களுக்குக் குறையாமல் பாடங்கேட்ட பின்பே இலக்கணப் பாடம் தொடங்குவது நலம் என்பது அவரது கருத்து. பதங்களைப் பிரித்துப் பழகுவதற்கும், பலவகையான பதங்களைத் தெரிந்து கொள்வதற்கும், மனனம் செய்வதற்கும் உதவுவதாக இருக்குமாதலால் அந்தாதிகளைப் படித்தறியுமாறு அவர் கேட்டுக் கொள்வதுண்டு. நிகண்டு போன்றவையும் பாடமாக இருப்பது நல்லது என்பது அவரது மற்றொரு கருத்து. அவற்றை நெட்டுருப்போடும் வழக்கம் மறைந்து விட்டது பற்றி அவர் வருத்தமே அடைகிறார்.

பிள்ளையவர்கள் எந்த இடத்துக்குச் சென்றாலும் அந்த இடத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை, திருத்தலமானால் அதன் புராணங்களை, உடனிருப்பவர்களுக்குச் சொல்லுவது வழக்கம், இதனால் பயணங்களெல்லாம் கல்விச் சுற்றுலாக்களாக - களப்பயணங்களாகப் - பயன் தந்தன.

மாணவர் நலன் மீது பிள்ளையவர்களுக்கிருந்த அக்கறை எடுத்துக்காட்டு நிலையது. மாணவர் ஆரியங்காவல் பிள்ளை நள்ளிரவில் முணுமுணுத்த ஒரு பாடலிலிருந்து அவர் வீட்டு நினைவால் வருந்துகிறார் என்பதை அறிந்து, அவருக்குத் தெரியாமலேயே வீட்டாருக்கு எழுதி மனைவியையும், பெற்றோரையும் வரவழைக்கிறார் நம் ஆசிரியப் பெருந்தகை. தமக்கு அம்மை கண்டபோதும் சுரங்கண்ட போது பிள்ளையவர்கள் அடைந்த வேதனையும், காட்டிய அக்கறையும் உ.வே.சாவை நெகிழ வைத்திருக்கின்றன.

மாணவர்களுக்கு உணவு வசதி செய்து தருவதில் அவர் தனிக் கவனஞ் செலுத்தி வந்தார். பிராமண மாணவராகிய உ.வே.சா.வுக்குத் தனி ஏற்பாடு செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி பற்றிப் பல குறிப்புக்கள் உள்ளன. திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகப் பிள்ளையவர்களை நியமிக்க வேண்டுமெனக் குருமகாசன்னிதானத்திடம் சின்னப்பட்டம் சுப்பிரமணிய தேசிகர் பரிந்துரைத்த போது, தக்க சம்பளம் கொடுக்க வேண்டுமே என்ற சிக்கல் தலை தூக்கிய வேளையில், தேசிகர், 'அதைப்பற்றிய கவலை சிறிதும் வேண்டாம், இவருடைய மாணாக்கர்களைப் போஷித்துப் பாதுகாத்தலே போதும்; அதனாலேயே இவர் மிகவும் திருப்தியடைவார், அதற்கு மேல் ஒன்றும் வேண்டாம்' என்று தெளிவுபடுத்திய அந்தக் கருத்து இங்கு நினைவு கூர்தற்குரியது. மற்றொரு நிகழ்ச்சியும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். 'சீகாழிக்கோவை' இயற்றி அரங்கேற்றிய பிள்ளையவர்களுக்குப் பல கனவான்கள் ரூ.30 முதல் 300 வரை சன்மானம் செய்கிறார்கள். அதில் ஒரு பகுதியைத் தம்முடைய மாணவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தும், அவர்களில் முத்துக்குமாரப் பிள்ளை என்பவருக்கு மணம் செய்வித்தும் வீடுகட்டிக் கொடுத்தும் செலவழித்து விடுகிறார் அவர்.

பிள்ளையவர்கள் கற்ற மற்றும் கற்பித்த முறைகள் இக்காலத்துக்குப் பொருந்தி வருமா? என்ற சிந்தனை எழ இடமில்லாமலில்லை. அக்காலக் கல்விமுறை, ஆசிரியர் ஒருவரின் ஆளுமையை மையமாகக் கொண்டிருந்ததெனில், தற்காலக் கல்வி முறையோ பள்ளி/கல்லூரிகளில் திட்டமிடப்பட்ட ஒரு கட்டமைப்பைச் சார்ந்துள்ளது. இருந்தாலும், இன்றும் கல்வித்தரத்தை நிர்ணயிப்பதில் ஆசிரியனின் ஆளுமையே முதற் காரணியாக உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. மேலும் மாணவர்க்கு உண்டி, தங்குமிடம், நூல்கள் முதலியவற்றைச் செய்து கொடுப்பது கல்வியாளர் கடமை என்பதுவும் இன்றைக்கும் பொருந்தி வருகிற ஒரு கல்வித்துறை உண்மையாகவே உள்ளது. பிள்ளையவர்களின் கற்ற, மற்றும் கற்பித்த முறைகளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்பதையும் இவ்வாறு நிறுவலாம்: இங்கிலிஷ் படித்தால் இகத்துக் லாபம்; ஸமஸ்கிருதம் படித்தால் பரத்துக்கு லாபம்; தமிழைப் படித்தால் இரண்டுக்கும் லாபம் இல்லை' என்று உ.வே.சாவிடம் ஒரு கனவான் அன்று கூறிய நிலை மேலும் தீவிரமடைந்துள்ளதைத் தான் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம், இது தொடர்ந்தால், திருவாவடுதுறை மடம் போன்ற சர்வகலாசாலைகளில் தான் பிள்ளையவர்களின் ஆளுமையை ஈட்டியவர்களால் தான் தமிழ் கற்கப்படும், கற்பிக்கப்படும் என்றவொரு எதிர்காலம் தவிர்க்க முடியாததாகிவிடலாம்.

93. பேரறிஞராசிரியரைப் பற்றிப் பெரும்சீடர் கூறியது

கி.ஸ்ரீநிவாசன்
சென்னை

சிவமுறு தென்சொலைத் திலக்கணத்திற்
தெளிவுற சிறியனேற் கருளும்
நலமுறு புகழ் மீனாட்சி சுந்தரவே
னான் மலரடி முடிபுனைவாம்

'இவர் காலத்திலும், இவர் காலத்திற்குப் பின்னரும் இம்மகாவித்துவானவர்களைப் போன்றவர்களைக் காணுதல் மிக அரிதாக இருக்கின்றது' என இவருடைய முக்கிய சீடர்களுள் முதன்மையாக விளங்கும் உத்தமதானபுரம் உ.வே.சாமிநாத அய்யரவர்கள் தனது நூலில் கூறியிருப்பது இங்கு நினைவுகொள்ளத் தக்கது. இவ்வொரு கருத்திலேயே மகாவித்துவானவர்களைப் புகழுச்சியில் வைத்தது, இப்புலவர் கோமான். தமிழ்த்தாயின் பெருமையை உணர்ந்து, அளவிடற்கரியவாறு தமிழ்ப்பணியில் தன்னை வாணாள் முழுவதும் அர்ப்பணித்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவது

சோகங்களுற்ற வுயிர்த்துன்பமகல வேணியிடை
மேகங்களைத் தாங்கும் வித்தகனே - போகங்கள்
பாவித்தருளும் பரமனே கார் மழையை
ஆலித்துப் பெய்ய அருள்

என்று செய்யுள் பாடி அனைவரையும் ஆச்சரியத்திலாழ்த்தி ஆழ்த்தி கருங்கோடையில் மழையை வரவழைத்த புலவர் சிதம்பரம் பிள்ளை அவர்களின் குமாரரன்றோ, எப்பொழுதும் தமிழ்ப்பாடல்கள் பாடி அனைவரையும் வியப்பிலாழ்த்தி பரவசப்படுத்திய நம் சரித்திர நாயகர் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

சிவநேசச் செல்வராய் விளங்கிய தந்தையின் தமிழ்ப்புலமையும், சைவப் பண்பும், நம் புலவர் பெருமானவர்களிடம் குழந்தைப் பருவமுதல் விளங்கி, ஆல விருட்சம் போல் தழைத்து, அவர் காலத்திய தமிழ்ப் பேரறிஞர்களுள் வித்தகராகவும் சைவப் பண்பாட்டில் நாயன்மார்கள் போன்றும், தமிழை ஐயந்திரிபறக்கற்று, கற்ற நற்றமிழை நூற்றுக்கணக்கான புலவர்கட்கீந்து, தமிழ்த்தாயை அரியாசனத்திலமர்த்தி, அத்தாய்க்கு தமிழ்ப்பாமாலைகளை மகுடமாகச் சூட்டி தமிழன்னையின் பெருமகனாய் விளங்கியவரன்றோ நமது மகாவித்துவான்.

இம்மகாவித்துவானவர்களின் அற்புதத்திறனை ஈண்டு சிறிது பார்ப்போம்.

நமது சரித்திர நாயகர் 15-ம் பிராயத்தின் போது நடைபெற்ற ஓர் அற்புத நிகழ்ச்சியாவது:

மீ-16.

'இப்பாட்டுக் கருத்தஞ்சொல்' என்று ஈற்றடியை வைத்து ஓர் செய்யுள் இயற்ற இயலுமா என சவால் விடப்பட்டபோது, நமது இளம்பிராயக் கவிஞர்பிரான் உடனேயே

ஒண் கமலம் வாழ்ந்தன்னமாகி யுரலணைந்து
தண்கயநீர்த் தூங்கித் தருமேறூர்ந் - தெண்கதிரின்
மேயவித்தான் மூவராகும் விளம்பியதென்
தூயவிப்பாட்டுக் கருத்தஞ்சொல்

என்று 'தூய' எனும் நற்பொருளுடைய பதத்தைச் சேர்த்து கேட்கப்பட்ட ஈற்றடியிலேயே திரு மூர்த்திகளின் பேரில் சிலேடை பாடி அனைவரும் வியக்கும் வண்ணம் சவாலை வென்றார். அதற்காக ஒரு வண்டி நெல்லையும் பரிசாகப் பெற்றார்!! தனதருமைத் தந்தை தமிழ்விரோதியாண்டில் சிவபதவியடைந்தபோது, கசிந்துருகிக் கண்ணீர் மல்கி,

முந்தையறிஞர் மொழிநூல் பல நவிற்றும்
தந்தையெனப் பிரியத்தான் செய்த - நிந்தைமிகும்
ஆண்டே விரோதியெனு மப்பெயர் நிற்கேதகுமால்
ஈண்டேது ஒய்யாயினி

என்ற விரோதியாண்டை விரோதியென்றே சபித்து தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். தந்தையாரின் பெரும் பிரிவிற்குப் பிறகு, மலைக்கோட்டையருகில் ஒரு சிறுவீடை மாதம் கால் ரூபாய்க்கு வாடகைக்கு அமர்த்திக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்!!.

இப்புலவர் பெருமானின் தமிழ் கற்கும் அவா எத்துணை பெரியது என கீழ்க்கண்ட நிகழ்ச்சி நம்மை வியக்க வைக்கிறது!

நமது பெருமானுக்கு தண்டியலங்காரப் பிரதியும் கிடைக்கவில்லை; கற்றுக்கொடுக்கவும் சரியான போதகர் கிடைக்கவில்லை. ஆனால் இவருக்கோ இந்நூலைப் படிக்கப் பேரவா. ஓர் பரதேசியிடம் இதன் பிரதியிருக்கிறிது என்றும் அவர் அதனை நன்கறிந்திருந்தனர் என்றும் ஆனால் அப்பரதேசி ஒரு விசித்திரமான குணமுடையவரென்றும் அறிந்தார். அறிந்தவர், அப்பரதேசியிடம் நட்புகொண்டு, அவர் தெருத்தெருவாய்ப் பிச்சையெடுக்கும்போது அவர் கூடவே சென்று, அவருக்குப் பிரியமான போதைப் பொருளையும் வாங்கிக் கொடுத்து, அவரிடமிருந்து பிரதியையும் பெற்றதோடல்லாமல் விளக்கங்களையும் கேட்டுத் தெளிந்து, பின்னர் பிரதியை பத்திரமாய் திருப்பிக் கொடுத்தனர் என்று அறியக் கிடக்கின்றது! என்னே இப்புலவர் பெருமானின் தமிழ்கற்கும் ஆர்வம்!! இந்நிகழ்ச்சி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறதன்றோ!

இப்பெருமான் திரிசிரபுரத்திலும், மற்றும் பல தலங்களுக்கும் சென்று அத்தலங்களிலும், சென்னை, காஞ்சீபுரம், பெங்களூர் முதலிய பல இடங்களுக்குச் சென்று, பெரும் பெரும் புலவர்களோடும் தமிழ் விற்பன்னர்களோடும் பழகி, அளவளாவி, கற்க வேண்டியதைக் கற்று, சொல்ல வேண்டிய பாடங்களைச் சொல்லி, அந்தாதிகள், பதிகங்கள்,

பிள்ளைத்தமிழ், தலபுராணங்கள் முதலியவற்றை எண்ணிலடங்காமல் இயற்றி, தமிழ்ப் பிரபந்தங்களைக் கடல்போல் பெருக்கியுள்ளார்!

இவரியற்றிய நூல்களின் நயம், பாங்கு, இலக்கணச் சிறப்பு, மொழியின் மேன்மை எல்லாம் யாவரும் எக்காலத்தும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன என்று அவர் சரித்திர நூலில் காணக் கிடைக்கிறது.

முதலில் இவரியற்றிய திட்டகுடிப்பதிகம், தருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி, பின்னர் அவரால் பாடப்பெற்ற மயிலிராவணன் சரித்திரம், பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி, திருவானைக்காத்திரிபந்தாதி முதலிய நூல்கள் இவரது 26-ஆம் பிராயத்திற்குள் முடிக்கப்பெற்றதாகக் கூறப்படுகின்றன. ஈண்டு திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் திருவாசகத்தின் வரிகளை ஞாபகப்படுத்துகின்றன. ஓர் செய்யுளில்

பணிகின்றேனிலை நாத்தழும்புற நினைப்பலகவி யாற்பாடத்
துணிகின்றேனிலை தீவினைதொலைக்க நின்றொண்டரிற் றொண்டாகத்
தணிகின்றேனிவையுள்ள நெக்குருகியுன் றார்களின்றும் பூக்கொண்
டணிகின்றேனிலை யெங்ஙன முய்குவேனரதன புரத்தானே!

எனக் கூறுவது சைவக்குரவர்களின் குரலாக ஒலிக்கிறதல்லவா? மேலும் இச்செய்யுளில் அருணகிரிப் பெருமானின்

உனைத்தினந் தொழுதினனுன தியல்பனை
உரைத்திலன் பலமலர் கொடுனடியினை
உரப்பணிந்திலன் ஒரு தவமிலனுன தருள் மாறாது

என்ற திருப்புகழ்ப் பாட்டில் வரும் கருத்தும் ஒத்ததாக இருக்கிறதல்லவா? சான்றோர்களின் ஒத்த கருத்துக்களை சான்றோரே பகர்வர்! பின்னர் இந்நூலிற்கான கீழ்க்கண்ட சிறப்புப்பாயிரம் நாம் புனையும் ஆரமாகவே அமைகிறது.

உய்ய மணிபார்பரிய்யன விண்ணோரும் புகழ்ந்த திருவூறைத்
துய்ய மணியீசருக்கன்பு துலங்கந்தாதி சொற்றுயர்ந்தான்
செய்ய மணிச்சீர் சிதம்பரமன் சேயாவுதித் தெம்மானருளைப்
பெய்ய மணிமாக்கவிசொலு நாப்பெறு மீனாட்சி சுந்தரனே!

இதன்பின்னர் திருச்சிராமலையமக அந்தாதி, அகிலாண்ட நாயகிமாலை, அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களை இயற்றினார். திருச்சிராமலையமக அந்தாதி இதுவரை செய்த நூல்கள் அனைத்திலும் சிறப்பாயிருந்ததோடல்லாமல், அகிலாண்ட நாயகிமாலை நம் மகாவித்துவான் ஜம்புநாதர் கோவிலை ஒரு தடவை வலம் வருவதற்குள் பாடி முடிக்கப்பெற்றது!. சிவப்பிரகாச சுவாமிகள் சோண சைலமாலையை அக்கோயிலை வலம் வருவதற்குள் முடித்தது போல், நீவிர் அகிலாண்ட நாயகிமாலையைப் பாடி முடிக்க இயலுமா எனக் கேட்கப்பட்ட போது, யாவரும் வியக்கும் வண்ணம் அவ்வாறே முடித்துக் காட்டிய பெருமை, புலமை, திறமை நம் நாயகரைச் சாரும் பெருமானின் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் 1842-ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டபோது, கீழ்க்காணும்

சிறப்பு பாயிரத்தை இராமநாதபுரம் அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர் பாடியுள்ளார்.

சுந்தவேளோ வலது கலைமகளோ விப்வுருக்கொண்
டாம் காணு ன்னை
அந்த நாட்டவமிருந்து புலவோருக் காகுசெய
வன்பாற் பெற்ற
தந்தையே தந்தையுனைத்தான் படிக்க வைத்தனனே
தமிழுக்காசான்
சுந்தரமோ மதிவதனா ஸ்ரீமீனாட்சி சுந்தரனே
துலங்குமாயே!

இச்சிறப்புப் பாயிரத்தைக் காட்டிலுமா, யான் புலவர் பெருமானின் புகழ் பாடக்கூடும்.

மேலும் நம் பெருமான் மாணவர்க்கு அன்பாய் பாடம் சொல்லுவதிலும், பெரியபுராணப் பிரசங்கள் செய்வதிலும், சென்ற சிவத்தலங்கட்குத் தலபுராணங்கள் பாடுவதிலும், நிகரற்று விளங்கினார். பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதியைத் திறனுற இயற்றி,

நெஞ்சுற வருங்கலைகள் கற்குமவர் தம்மளவில்

நேய நிகழாதவர்கள் யார்? என சிறப்புப் பாயிரம் பெற்றார். இதன் பின்னர் இயற்றப்பட்ட தியாகராசலீலை தேனினுமினிய முதற் காப்பியமாகத் திகழ்ந்தது.

இஃதிவ்வாறிருக்க, நம் கவிஞர்பிரான் திருத்தணிகைப் புராணத்தை முற்றும் அறிய, சிவதருமோத்திரம் என்ற நூல் இன்றியமையாதது எனக் கேள்வியுற்று, அந்நூலைப் பெற அவர் எடுத்த முயற்சி விந்தையானது! திருசிரபுரம் புலவரொருவர் அதனை வைத்திருந்தும், பன்முறை கேட்டும் பயனில்லாமல், அதனால் வாட்டமுற்று, நண்பர் அன்பர் சுந்தரம் பிள்ளைவர்களிடம் இதனை இயம்ப, அவர் அந்த அமிஷக்கரை ஏமாற்றி அதன் பிரதியைப் பெற்று புலவர் பிரானிடம் சேர்ப்பித்தார். ஜமீன்தார் வேஷம் போட்டு, புலவர் அமிஷக்கரை ஏமாற்றியவிதம் சுந்தரம் பிள்ளையை சமர்த்தர் என நிரூபித்தது. பிரதி கிடைத்த நம் புலவர் கோமானின் மகிழ்ச்சிக்களவில்லை. தான் அவசரமவசரமாக நண்பர் பலருடன் பிரதியை எழுதச் செய்து திருப்பியளித்தார்! தமிழ்நூலைப் பார்க்க, படிக்க என்னே பிள்ளையவர்களின் ஆர்வம்.

பங்களூரில் கனவான் தேவராசப் பிள்ளைவர்களின் ஈடுபாடும், மரியாதையும் சொல்லொணாதது. எண்ணரிய நூல்களைக் கற்ற தேவராசப் பிள்ளை நமது கவிஞர் பிரான்மீது பாடிய கீழ்க்காணும் சிறப்புப்பாயிரம், நினைவிற்கொள்ளத்தக்கது.

சிவமுறுதென் சொலைத் திலக்கணத்திற்
றெளிவுற சிறியனேற் கருளும்
நலமுறு புகழ்மீனாட்சி சுந்தரவே

னான் மலரடி முடிபுனைவாம்

தேவராசம்பிள்ளை நன்றி கூற பிள்ளைவர்களும் நன்றியுணர்வுடன் குசேலோ பாக்கியானம், சூத சங்கீதை என இரு நூல்களை இயற்றி அவற்றை தேவராசப் பிள்ளையின் பேரிலேயே போட்டுக்கொள்ள அனுமதியளித்து அவர் அதனை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். பலரறியும்

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லிக் காட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி

என்ற வரிகள் குசேலோ பாக்கியானத்தில் வருகின்றன. திரிசிரபுர அன்பர்களும் மற்ற புலவர்களும் ஓர் மகாசபை கூட்டி, வித்துவான் என்ற பட்டத்தை நம் சரித்திர நாயகருக்கு வழங்கி, சால்வை போர்த்தி கௌரவித்தனர்

'மாமேவுசிர திரிவாழ் மீனாட்சி சுந்தர நாவலரேதே' என்று போற்றிப் புகழ்ந்தனர்.

கடல்போன்ற தமிழறிவு பெற்றாலும், மேலும் தமிழைக் கற்க வேண்டுமென நம்பிரான், கீழ் வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்க முனைந்தபோது, சிலர் இவரை எள்ளி நகையாடினர். ஆனால் எல்லாமறிந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், திருநெல்வேலியில் சிந்து பூந்துறையிலிருந்த தருமை வெள்ளியம்பலத் தம்பிரானவர்களிடம் தொல்காப்பியப் பாடம் கற்றதை இது ஒக்கும் எனக் கருத வேண்டும். என்னே இவர் தமிழார்வம்!.

புதுச்சேரி சவராயலு நாயகர், புகழ்பெற்ற முன்சிப் வேதநாயகம் பிள்ளை, தெய்வநாயகம் பிள்ளை, ஆரியங்காவற் பிள்ளை, இராமநாதபுரம் அழகிரிராஜா முதலிய பெரியோர்களும் இவரிடம் கல்விகற்ற போற்றிப் புகழ்ந்துள்ளனர். சித்திரச்சரித்திரப் புகழ்ச்சி மாலை, வியாசைக்கோவை, சிதம்பரேசர்மாலை, சீகாழிக் கோவை, திருத்தில்லையமக அந்தாதி, வெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், சச்சிதானந்த தேசிகர் மாலை, ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிரபந்தம் முதலியவற்றை சிறப்புற பின்னர் இயற்றினார்.

அப்பால் ஒரு விசேட காலத்தில், திருவாவடுதுறையில், ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் முன்னிலையில், பலநூறு வித்துவான்களும், பிரபுக்களும் சூழ்ந்திருந்த மகாசபையில், நம் கவிச்சக்ரவர்த்தியவர்கட்கு மகாவித்துவான் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. பின்னர் மேலும் பல நூல்களை இயற்றி தமிழ் வாழ் நல்லுலகிற்கீந்தார்! தமிழ்த் தெய்வமே ஓர் அவதாரமெடுத்ததெனவும், அவர் வாழ்ந்த இல்லம் கலைமகளில்லமாகத் திகழ்ந்தது எனவும் அவர் போன்று எண்ணற்ற தமிழ்நூல்களை அக்காலத்தில் யாருமியற்றிலர் எனவும் தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் அவர் சீடர் அவரது சரித்திரத்தில் பொன்னென எழுத்து முத்துக்களால் பொறித்துள்ளார். அன்னார் தமிழ்த்தொண்டு தொடர்ந்து பொலிவுறுக!

94. மகாவித்துவானும் சைவசித்தாந்தமும்

தா.ஜகன் மோகன்
புதுகும்முடிப்பூண்டி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ்வளர்ச்சியும் ஆன்மீக எழுச்சியும் மிகவும் போற்றத்தக்கன. தமிழ் வளர்ச்சியில் பெரும்பங்கு பெற்றிருந்தோருள் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனாரும் ஒருவர். அதே போன்று பிற்காலத்திலே மறைமலை அடிகளார், திரு.வி.க போன்ற தமிழாய்ந்த சித்தாந்த செல்வர்கள் தங்களைச் சீர்திருத்தச் சைவர்கள் எனப் பெருமையுடன் கூறிக் கொள்வதற்கு வித்திட்டவர் இந்நூற்றாண்டில் தோன்றிய திருவருட்பிரகாசவள்ளலார் ஆவார். இப்பெருமான் தோற்றுவித்த சுத்த சன்மார்க்கக் கொள்கைக்கு ஆறுமுக நாவலர் (1823-1879) போன்ற வைதிக சைவ சித்தாந்திகள் மத்தியில் எதிர்ப்புகள் தோன்றினாலும் காலப்போக்கிலே அதன் உண்மையை உணர்ந்து வரவேற்கலாயினர். இப்பெருமான் மகா வித்துவானின் சமகாலத்தவர். மகாவித்துவானின் காலம்(1815-1876). வள்ளல் பெருமான் 1823-இல் தோன்றி 1874-இல் இறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றவர். இக்கட்டுரையின் நோக்கம் மகாவித்துவான் சித்தாந்தத்தைக் கற்று உணர்ந்து மற்றவர்கட்கு எவ்வாறு உணர்த்தினர் என்பதை அவர் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திச் சில சித்தாந்தக் கருத்துக்களை அவர் உணர்த்திய வண்ணம் கூறுதலே ஆகும். சைவ சித்தாந்தம் அல்லது சுத்த சைவம், உலகு, உயிர், கடவுள் என்ற முப்பொருளின் உண்மையை உணர்த்தி ஆன்மத் தூய்மை எய்த உயிர்கட்கு உபகரித்தல், இம்மூன்றும் என்றும் உள்ளன(அநாதி), உலகு மாறுதலுறும் உள்பொருள்: உயிர் அறியாமை விரவிய அறிவு: கடவுள் அறியாமையே இல்லாத முற்றறிவு: இவை ஒன்றுக்கொன்று அத்துவிதமாய் இயைபு பெற்றுக் கடவுளின் அருட்பெருங்கருணையினால் உயிர் அறியாமை எனும் தளை நீங்கித் தூய்மையுற்று இறைவனுடன் கலத்தலே சைவசித்தாந்தத்தில் கூறும் நெறி. அருட்பிரகாச வள்ளலார் இறைவனை 'அருட்பெருஞ்ஜோதி' என அழைக்கின்றார். இஃது சைவ சித்தாந்த மொழியில் 'அருட்பதி' எனலாம். இதனை உணர்த்துவதற்கு சிவஞான சித்தியாரில் உள்ள பிரமாணத்தை இங்கு கூறுதல் பொருந்தும்

அருளது சத்தியாகும் அரன்தனக்கு அருளையின்றித்
தெருள் சிவமில்லை; அந்தச்சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னு யிர்க்கு அளிப்பன் - கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்.

இதனை அருளது அரன் தனக்குச் சத்தியாகும் எனப் பதியிடம் அருள் ஒன்றி இருத்தலையும் அருளையின்றித் தெருள் சிவமில்லை; அந்தச்

சிவமின்றேல் சத்தியில்லை என்பதனால் சிவசத்தியின் தாதான்மிய தன்மையையும் கண்கட்கு இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல மன்னுயிர்கட்கு மருளினை அருளால் வாட்டி அளிப்பன் ஈசன் என மேற்படி கூற்றுக்கு இயைபுறுத்தலாம்.

மகாவித்துவானவர்கள் தனது பதினைந்தாவது அகவையில் தந்தையை இழந்தார். இவருடைய ஆதரவாளர்கள் இவருக்கு காவேரி ஆச்சி எனும் நங்கையை மணம் செய்வித்து இவரை ஆதரித்து வந்தனர்.

முறைப்படி தீக்கை பெற்றது

பிள்ளையவர்கள் முறையாக தீக்கை பெற்று சிவபூசனைகள் செய்தால் தான் ஆன்ம லாபம் பெறலாம் என்பதை உணர்ந்து தனது இருபத்தோராவது வயதில் திரிசிரபுரத்தில் வந்திருந்த செட்டி பண்டாரத்தையா எனும் தக்காரிடம் (அபிஷிக்தர்) சிவதீக்கை பெற்று க்ஷணிக லிங்கப் பூசனையையும் அருளப்பெற்றார். சிவதீக்கையாவது சைவநூல்களைப் படிப்பதற்கும் அவற்றில் கண்டவாறு ஒழுகுவதற்கும் தகுதியளிப்பதாகும். தீக்கையின்றி வீடுபேறு அடைதல் இயலாது. இப்படிச் செய்யப்படும் தீக்கைகள் இருவகைத்து. அஃது இல்லறத்தார்க்கு அளிக்கப்படும் 'பௌதிக' தீக்கையும் பிரம்மச்சாரிகட்கும், துறவிகட்கும் அளிக்கப்படும் 'நைட்டிக' தீக்கையும் ஆகும்.

க்ஷணிக லிங்கப்பூசை

க்ஷணிகம் என்ற சொல்லுக்கு கணிகம், காலநுட்பட்ம, கணப்பொழுது இருக்கக் கூடியது எனப் பொருள். க்ஷணிக லிங்கம் பதினாறு வகைத்து. அவை: மணல், அரிசி, அன்னம், மண், கோமயம், வெண்ணெய், பழம், மா, சந்தனம், தருப்பை, விபூதி, சிவகண்மணி(உருத்திராக்கம்) மலர்மாலை, சர்க்கரை, நீர், தயிர் என்பன. இவற்றுள் ஒன்றைக் கொண்டு வழிபடுகாலம் வரை சிவபெருமானைத் தங்கியிருக்க வேண்டிக்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இலிங்காகாரம். இது நித்தியப்படி பூசையில் கொள்ளப்படுவது. (சைவ பூ).

சைவமெய்ப்பொருள் நூல்களில் பற்று

திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கிய கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காப்புராணத்தைப் படிக்கும் போதுதான் பிள்ளையவர்கட்கு முதல்முதலில் சைவ மெய்ப்பொருள் (சாத்திர) நூல்கள் பால் பற்று ஏற்பட்டது. தம்மால் அதுவரை அறியப்படாத சைவபெய்ப்பொருள் கருத்துக்களும், சைவ மறைமொழிகளும், (பரிபாஷை) புதியபுதிய யுக்திகளும், கற்பனைகளும் நிறைந்திருப்பதைக் கண்டு அந்நூலைப் பன்முறை பயின்று ஆராயத் தொடங்கினார். மேலும் முனிவரால் இயற்றப்பட்ட விநாயக புராணத்தில் சிவ பகுதிகள், பூவளூர்ப்புராணம், காஞ்சிப்புராணம் முதலிய நூல்களை ஊன்றிப்படித்து அவற்றில் தோன்றிய ஐயங்களை நீக்கிக் கொள்ள முனைந்து அதற்குத் தக்க சான்றோர் திருவாவடுதுறையில்தான் இருப்பர் என அறிந்து அங்கு ஆதீனத்தின் பதினான்காவது பட்டத்தில் இருந்த கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகரைச் சந்தித்துச் சில ஐயங்களை அகற்றிக் கொண்டார்.

பிள்ளையவர்கட்கு விநாயக புராணத்தின் பாயிரத்திலுள்ள

மரந்துளைத்த கணையானுஞ் சோவெறிந்த திரலானு மதிக்குந்தோறும்
சிரந்துளக்க வலைகடலுஞ் சேணிகந்த பெருவரையுந் திறத்திற்குன்றக்
கரந்துளக்கும் குறுமுனிக்குங் கருத்தின்மயல் பூட்டியகை தவஞ்சால் வெற்பின்
உரந்துளைத்த சேயிலை வேல் வலனுயர்த்த விளையவனை
யுளத்துள் வைப்பாம்.

இப்பாயிரத்தில் 'கரந்துளக்கும் குறுமுனிக்கு' எனும் பகுதிக்கு நெடுநாளாகப் பொருள் விளங்காமையால் சுப்பிரமணிய தேசிகர்பால் அவ்வையத்தைக் கூற அவரும் தம் உள்ளங்கையை ஏந்தி மறித்துக்காட்டி கடலை உண்டது கையை ஏந்தினமையால் என்றும் விந்தத்தை அழுடந்தியது கையைக் கவித்தமையால் என்றும் எளிய முறையில் மனதில் உணர்த்தியதைக் கேட்டுச் சான்றோர்கள் பொருள் விளக்கும் எளிமையையும், நுட்பத்தையும் வியந்தார். இதுவன்றித் தனக்கு நெடுநாளாக விளங்காதிருந்த சில வார்த்தைகட்குப் பொருள் விளக்கங்கள் பெற்றார். அவையாவன:-ஒலியல்=ஈயோட்டி எனும் விருது, கழுவாய்=பிராயசித்தம்: சைலாதி=திருநந்தி தேவர், வருதினி=சேனை, வாதராயணர்=வியாசர். மேலும் பிள்ளையவர்களுக்கு திருத்தணிகைப் புராணத்தில் அகத்தியன் அருள் பெற்ற படலத்தில் தோன்றிய சில ஐயங்களைச் சிவதருமோத்திரத்தின் வாயிலாகத்தான் நீக்கிக் கொள்ள இயலும் எனச் சான்றோர் பலர் கூறக்கேட்டுத் தான் எவ்வளவு முயன்றும் கிடைக்கப்பெறாத அந்நூலைத் தனது மாணாக்கர் சுந்தரம் பிள்ளையின் சாதுர்யத்தால் பெற்று படிசெய்து வைத்துக்கொண்டு தன் சந்தேகங்களைப் போக்கிக் கொண்டார்.

தன்னில் தோன்றும் ஐயங்களையும், திரிபுகளையும் நீக்கிக் கொள்ளத் தக்காரிடமும், தக்கநூல்கள் வாயிலாகவும் முந்தி முயன்று போக்கிக் கொண்டதால் அவருடைய புலமையும் சித்தாந்த அறிவும், செம்மையுற்றிருந்தது. வித்துவான் அவர்கள் வல்லூர் தேவராசப் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்கத் தங்கள் மாணாக்கர்களுடன் சிலநாட்கள் பங்களூரில் தங்கித் தமிழ் நூல்கள் பயிற்று வந்தார். அவ்வமயம், பங்களூரில் மாதவ சிவஞான யோகியவர்களின் தவசிப்பிள்ளை (90 வயது நிரம்பியவர்) இருப்பதை அறிந்து சிவஞான யோகிகளைக் காணச்சென்றால் எவ்வளவு மரியாதையுடன் செல்வாரோ அவ்வாறே சென்று அவரை நேரில் தரிசித்து முனிவரது உருவ அமைப்பு இயல்புகள், உவப்பான உணவுகள், பொழுதுபோக்கு, உடனிருந்தோரின் குறிப்புகள், கச்சியப்ப முனிவரின் வரலாறு முதலிய செய்திகளை அறிந்து கொண்டார். இஃது இவர் மற்ற ஞானிகள் பால் கொண்டிருந்த பற்றுதலையும் அவர்களைப் பின்பற்றுதற்கு எழுந்த அவாவினையும் காட்டுகிறது.

திருவாவடுதுறை ஆதீனவித்துவான் ஆகியது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினான்காம் பட்டமாகிய கீழ்வேளூர்

சுப்பிரமணிய தேசிகர் பூரணம் பெற்றபின்பு பதினைந்தாம் பட்டமாக அம்பலவாண தேசிகர் ஆதீன கர்த்தராக இருந்தார். அப்பொழுது சின்னபட்டமாக இருந்து வந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், தமது ஆசிரியர் தாண்டவராய தம்பிரான் வாயிலாக பிள்ளையவர்களின் புலமையையும் மாணவர்கள் பால் காட்டும் அன்பும் சித்தாந்த சாத்திர நூல்களை மாணவர்கட்குப் பயிற்றுவிக்கும் முறையும் பற்றி அறிந்திருந்தார். ஆதலால் பிள்ளையவர்களை ஆதீன கர்த்தராகிய அம்பலவாண தேசிகரிடம் வாதிட்டு அனுமதி பெற்று ஆதீன வித்துவானாக விளங்கச் செய்தார். அப்பொழுது அம்பலவாண தேசிகர் மேல் கலம்பகம் ஒன்று இயற்றி அரங்கேற்றினார். அவ்வமயம் அங்கிருந்த அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க அம்பலவாண தேசிகர் பிள்ளையவர்கட்கு 'மகாவித்துவான்' எனும் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார். மேலும் அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் ஒன்றும் இயற்றினார். இஃது, வேறுபிள்ளைத் தமிழ் நூல்களைப்போல் திருமால் முதலியவர்களைக் காப்பாகக் கூறுதலைத் தவிர்த்து திருவாவடுதுறை ஆதீனத்து குருபரம்பரையான பதினொரு பேரை அதாவது திருநந்தி தேவர், சனற்குமாரமுனிவர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர் ஆக நான்கு அகச் சந்தானங்களும் மெய்கண்ட நாயனார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆக நான்கு புறச்சந்தானங்களும் மேலும் அருணமச்சிவாயர், சித்தர் சிவபிரகாசர், நமச்சிவாய மூர்த்திகள் ஆகியோர் - ஆக பதினொரு குருபரம்பரையைக் காப்பாக வைத்துப் பதினொரு பாடல்கள் செய்தது இதற்குள்ள தனிச்சிறப்பாகும். இதற்குக் காரணம்

வழிபடுதேவுளுங் கொலைதீர் தெய்வதங்காப் புரைக்கவென வகுத்தவான்றோர்

மொழியுணர்ந்து மவ்வழிச்சென் றிலர்முன்னோ ரிரும்புகழ்க்கோ முத்தியெங்கள்

பொழிகருணைச் சின்மயனம் பலவாண தேசிகன்மேற் புகலப் புக்க
கழிமகிழ்யா மவ்வழிச்சென் றனஞ்சிறக்கு மிப்பிள்ளைக் கவியுந் தானே

என இவர் இயற்றிய கவிதையிலிருந்து விளங்கும்.

நிருவாண தீக்கை பெற்றது

மகாவித்துவானவர்கள் தனது 50-வது வயதில் - (1864) அம்பலவாண தேசிகரிடம் நிருவாண தீக்கை பெற்றார். தீக்கைகளின் அடிப்படை நோக்கம் உயிர்களைத் தளைகளினின்று விடுவித்தலாகும், சைவநெறியில் உயிர்களை நேரே சமய வழிகளில் தொடர்புறுத்த எழுவகை தீக்கைகளைப்பற்றிக் கூறப்படுகிறது. நிருவாண தீக்கையாவது தீக்கையில் மூன்றாவது நிலையில் உள்ளதாயும், ஆறு வழிகளிலும் (ஆறு அத்துவா) உயிருக்குள்ள வினைப்பயன்களை ஒரு காலத்திலேயே துய்த்துத் தொலைக்கச் செய்து உயிரை வீடு பேற்றிற்கு உரியதாக்குவதும் ஆகும். இதனை விரிக்கின் பெருகும். இதன் விளக்கங்களைச் சித்தாந்த நூல்களில் காண்க.

சிவஞான சித்தியார் பதவுரை சிறப்புப் பாயிரம்

சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு மாதவ சிவஞான முனிவர் இயற்றிய பொழிப்புரையை மாணவர்கள் படிக்க இடர்ப்படுவதை அறிந்த சுப்பிரமணிய தேசிகர் அப்பொழிப்புரையைச் சார்ந்த பதவுரை ஒன்று செய்தார். அதற்கு மகாவித்துவானவர்கள் ஐந்து சிறப்புப் பாயிரங்கள் இயற்றினார்.. இப்பாயிரத்தில் ஒன்று

முற்றுணர்ந்த வருணந்தி சிவனருள்செய் சித்தியெனும் முடிபா
நன்னூற்(கு)
உற்றுணர்ந்த சிவஞான மாமுனிவ னுரைத்த பொழிப்புரையிம்
மண்மேற்
கற்றுணர்ந்த சிலர்க்கன்றிப் பலர்க்குமுப காரமுறாக் கருத்தாழத்தைச்
சற்றுணர்ந்த எம்மனோர் களுமிடர்தீர்ந் தெளிதுணரும்
தன்மையோர்ந்து

1869இல் அம்பலவாண தேசிகர் பூரணம் பெற்றபின் மடத்தின் இளைய பட்டமாக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆதீனத்தின் கர்த்தராகப் பொறுப்பேற்றார். சுப்பிரமணிய தேசிகர் பால் இவர் பூண்டிருந்த பேரன்பாலும் பெருமதிப்பாலும் முன்னூற்றுப் பதினொன்று கண்ணிகளால் ஆன திருவாவடுதுறை ஆதீனத்து சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது என்ற சிற்றிலக்கியம் படைத்தார்.

கலி வெண்பாவாலான இஃது தொண்ணூற்று ஆறு சிற்றிலக்கிய வகைகளில் தூது இலக்கிய வகையைச் சார்ந்தது. இதே போன்று புறச்சந்தான வரிசையில் விளங்கும் உமாபதி சிவனார் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரை இறைவனாகவே கருதித் தமது உள்ளக் கிடக்கையை நெஞ்சின் வாயிலாக தூது அனுப்புவது போல் அமைத்து 'நெஞ்சுவிடுதூது' என ஒரு சித்தாந்த சாத்திரத்தைப் படைத்தார். அத்திருவடியை ஒற்றியே சுப்பிரமணிய தேசிகரை இறைவனாகவே மதித்து இந்நூலிலும் பல சித்தாந்தக் கருத்துக்களை மகாவித்துவான் உள்ளடக்கியுள்ளார்.

இவர் செய்த நூல்களில் உள்ள சித்தாந்தக் கருத்துக்கள் அனைத்தும் தொகுத்தால் ஒரு தனி நூல் தரத்தில் அமையுமாதலால் இட அளவைக் கருதி ஆங்காங்கே ஒரு சிலவற்றை மட்டும் இங்கு எடுத்து விளக்குதும்.

மகாவித்துவான் இலக்கியங்களில் உள்ள சித்தாந்தக் கருத்துக்கள்.

(1) சிவஞான யோகிகள் சரித்திரத்தில் - திருநந்தி தேவருக்குத் தென்முகக் கடவுள் சிவஞான போதத்தை உபதேசித்ததை 'எழுவாய்ச் சூத்திரம் பதிக்குப் பிரமாணம் பாசத்திற்கு இரண்டு, மூன்று பசுவிற்கா, நான்கு ஐந்து ஆறியல் பசுபாசம் பதிக்காம் வழுவாத இலக்கண(ம்) ஏழ் எட்டு ஒன்பான் சாதனமே மற்றை மூன்று எழுதாத சாத்தியங் கூறுதலாகும் இன்னும் ஒன்று உண்டு இயம்பக்கேளாய்'.

இந்த சிவஞான போதத்தில் அடங்கிய பன்னிரண்டு சூத்திரங்களை

போதித்த வண்ணம் ஒரு செய்யுளில் முறைப்படி கூறப்பட்டுள்ளது. முதல் மூன்று சூத்திரங்கள் பதி, பாசம், பசு பற்றிய பிரமாணத்தையும் அடுத்து நான்கு முதல் ஆறு சூத்திரங்கள் எதிர்நிறையாக பசு, பாசம், பதி இவற்றின் இலக்கணங்களையும் ஏழு, எட்டு ஒன்பது இறையைச் சாரும் சாதனங்களையும்; பத்து, பதினொன்று, பன்னிரண்டு சூத்திரங்கள் சாதனங்களாலுறும் பயன்களையும் கூறும். இச்சூத்திரங்களின் நுட்பங்களையெல்லாம் இங்கு விரிக்கின் பெருகும். அவற்றை சிவஞான போத விளக்க நூல்களில் கண்டு கொள்க.

(2)திருவாவடுதுறை ஆதீனத்து சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது.

மூலமலவேர் என்னும் மொய் கூர் தறிமுறித்துச்
சாலமலமாம் தளையறுத்து - ஞாலமுதல்
ஆராறு தத்துவமாய படைதுரந்து
மாறாத கன்மரம் சாய்த்துக் - கூறு
மனமாம் பரிமாவை மாய்த்து மதவேள்கைச்
..
சமய தடமார் படுகுழி சாராமல்
..
சித்தாந்த சைவமொன்றே தேற்றம் - மற்றுள்ளவெல்லாம்
மித்தாந்தம் என்றெடுத்துப் பேசுதல்போல்...............

இதில் உள்ள சித்தாந்த விளக்கங்கள் வருமாறு:-

மூலமலம் - ஆணவம் அல்லது சகசமலம்(உடன் தோன்றியது)
சாலமலம் - மாயாமலம் - கேவலத்திலுள்ள ஆன்மாக்களைக் கண்டு

பெருங்கருணை கொண்ட இறைவன் சகசமலமாகிய ஆணவ வல்லிருள் நீங்கும் பொருட்டு கருவி கரணாதிகள் அமைந்த உடலும், தங்க உலகையும் நுகர்தற்கு உலகப் பொருள்களையும் மாயையிலிருந்து படைத்து அருளுகின்றான். (அம்மாயை எனும் பொருளும் என்றும் உள்ளது) இது ஆகந்துக மலங்கள் இரண்டனுள் ஒன்று.

ஆறாறு தத்துவங்கள் - முப்பத்தாறு தத்துவங்கள் - இவை ஆன்ம தத்துவங்கள் 24. அவையாவன பஞ்சபூதங்கள்-5, கன்மேந்திரியங்கள்-5, ஞானேந்திரியங்கள்-5, தன்மாத்திரைகள்-5, அந்தக்கரணங்கள்-4, ஆக=24.

வித்தியாதத்துவங்கள்-7. அவை பஞ்சகஞ்சுகங்கள்-5, புருடன்-1, மாயை-1, ஆக=7.

சிவதத்துவம்-5, சக்தி, சதாசிவம், ஈசுவரம், சுத்தவித்தை ஆச=5.

இம்முப்பத்தாறு தத்துவங்களை வெல்லுதலே தத்துவ நிக்ரகம் எனப்படும். இங்கு இது 'படைதுறந்து' எனக் கூறப்பட்டது.

கன்ம மரம் சாய்த்து - கன்மம், வினை, விதி என்பவை ஒரு பொருட் கிளவிகளாகும். கன்மமலம் மற்றொரு ஆகந்துக மலமாகும். கன்மமரத்தைச் சாய்த்தல் அல்லது வெல்லுதல் சித்தாந்தத்திலே இருவினை ஒப்பு

எனப்படும். ஆன்மாக்கள் முக்தி நிலையின் படிமுறை - சத்தினிபாதம் (அருள் வீழ்ச்சி)>தவம்(வழிபாடு)> இருவினை ஒப்பு(வினைநீக்கம்)>ஞானம் >மலபரிபாகம் > முத்தி. இதில் இருவினை ஒப்பே கன்மமரம் சாய்த்து எனப்பட்டது.

ஆக மும்மலங்களை வெல்லுதல் பற்றி கூறப்பட்டது.

சமயப்படுகுழி சாராமல் - சித்தாந்த சைவமொன்றே தேற்றம்

இவற்றிற்குச் சிவஞானசித்தியாரில்

நரர்பயில் தேயம் தன்னில், நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தான் ஆகும்.
தரையினில் கீழைவிட்டுத் தவம் செய்சாதியில் வந்து
பரசமயங்கள் செல்லா பாக்கியம் பண்ணொணாதே

எனவரும் பாடலே சான்று.

(3) இறைவனை அடைய நான்கு மார்க்கங்களை சித்தாந்தம் கூறுகின்றது. அவையாவன:

தாதமார்க்கம்-அப்பர் பெருமானின் அணுகுமுறை(தொண்டு)
சற்புத்திரமார்க்கம்-ஞானசம்பந்த பெருமான் வழிகொண்டது (மகவு)
சகமார்க்கம்-சுந்தரர் பெருமான் கைகொண்டது -(நட்பு)
சன்மார்க்கம் - மணிவாசகப் பெருமான் பின்பற்றியது (அறிவு)

இதனை மகாவித்துவான் அவர்கள் பூவளூர்ப் பதிற்றுப் பத்தந்தாதியில் 'பொருந்து சன்மார்க்கம் நெடுஞ்சக மார்க்கம், புத்திர மார்க்கமும் இல்லேன், திருந்திய தாதமார்க்கமும் இல்லேன். தீவினை மார்க்கமே உடையேன்' எனக் கூறுகின்றார்.

(4) வீரவனப்புராணத்தில் திரு நந்தி தேவரைக் கூறுமிடத்து 'ஐந்தொழில் முதல்வனாய ஐந்துமா முகத்தோன் தேற்ற ஐந்தெழுத்(து)உண்மை தேறி ஐந்தெனும் தடையும் நீந்திட்டு; ஐந்தின் மேல் அருட்கலப்புற்று நைந்தெனும் நிலையில் நின்று ஐந்துரு உடையான் பாதம் ஐந்துறுப்பாலும் தாழ்வாம்'. இதில் கூறப்பட்ட...

ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

ஐந்துமாமுகம் - சத்தியோஜாதம் (மேற்கு) தற்புருடம்(கிழக்கு) வாமதேவம்(தெற்கு) அகோரம் (வடக்கு) ஈசானியம் அல்லது அதோமுகம் (மேனோக்கியது)

ஐந்தெழுத்து - தூலத்தில் 'நமசிவய' சூக்குமத்தில் 'சிவயநம'

ஐந்துதடை(நிலை)-நினைவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல்

ஐந்துஉரு -சிலாத முனிவருக்கு ஐந்து குமாரர்களாக களித்தமை

ஐந்தின்மேல் அருட்கலப்பு - சிவதத்துவம் ஐந்தும் அதாவது சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை கடந்து இறையருளில் கலத்தல்.

ஐந்துறுப்பால் தாழ்வாம் (பஞ்சாங்க நமஸ்காரம்)- இரண்டு முழங்கால்கள் இரண்டு கைகளுடன் தலையை பூமியில் படியச் செய்து வணங்குதல்.

(5)அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் திருவாவடுதுறையில் வழிபட்டு வரும் நடராஜ மூர்த்தியைப் பாடிய செய்யுள் ஞான சம்பந்தப் பெருமான் முதலிலே பாடிய 'தோடுடைய செவியன்' என்பதில் வரும் இறைவனின் வெண்மைசார் பொருள்களைக் கூறுவதற்கு ஒப்பாக உள்ளது. அப்பாடலாவது

துணிபிறை வெண்மை யெலும் பணி வெண்மை சூடுகங்காளமும் வெண்மை
துரோணமும் வெண்மை கபாலமும் வெண்மை துவலைசால் கங்கையும் வெண்மை
பணிதரு கொக்கின் றூவலும் வெண்மை பயில்குழை யருக்கமும் வெண்மை
பரவறு கயிலை வாகனந் துவசம் பரிக்குமக் கிவைகளும் வெண்மை
மணியொளிநீறு வாளிதுஞ் சாவம் வயங்குதேர்ப் பாகிலாளில்லம்
மதம்பொழி யயிரா வணமிவை வெண்மை மற்றியன் மேனியும் வெண்மை
அனிகிளர் முன்னா ணினக்கெனி னிந்நாள் அவிர்புகழ் நீற்றோடு துறைசை
அம்பல வாண வாரிய வடியேன் அறிவுவெண் மையுங்கொளல் வழக்கே.

சிவபெருமானின் வெண்மை அணிகலன்களை ஞானசம்பந்தரும் தோடுடைய செவி, விடையேரியோர் தூவெண்மதி சுடலைப் பொடி, ஏடுடைய மலர் ஆகியவற்றை வைத்து தனது முதல் தேவார திருப்பதிகத்தைத் தொடங்குகின்றார். இப்படி இவர் காலத்திலே செய்த கருவூலங்கள் எண்ணிறந்தன. இவர் செய்த யமக அந்தாதிகள் பல. அவற்றுள் தில்லையமக அந்தாதியும் திருவாவடுதுறை யமக அந்தாதியும் மிகவும் போற்றத்தக்கன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவரைப் போன்று தல புராணங்களை இயற்றியவர்கள் யாருமிலர். ஒரு தலபுராணம் இயற்றி அரங்கேற்றுதல் ஒரு கோயிலை நிர்மாணித்துக் குடமுழுக்குச் செய்வதற்கு ஒப்பென்பர். இவரால் யாக்கப்பட்டவைகளை சேகரித்துத் தமிழுலகத்துக்குத் தந்த பெருமை இவரது கடைசி காலத்தில் (1870) இவரிடம் மாணாக்கராக பாடம் கேட்ட உ.வே.சா.வையே சாரும்.

இப்பெருமான் தனது அறுபத்து ஒராவது வயதில் அதாவது 1-2-1876இல் பூதவுடல் நீத்து சிவபதம் அடைந்தார். இவருடைய பூதவுடல் காவிரிக்கரையில் தகனம் செய்யப்பட்டது என்று உ.வே.சா அவர்கள் இவர் வரலாற்றைக் கூறும்போது கருங்கல் நெஞ்சமும் கரையும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சித்தாந்தக் கருத்துக்களை தக்காரிடம் கற்று உணர்ந்து, உணர்த்தியவர். இவருடைய சிறப்பை உணர நீதிநெறி

விளக்கத்தில் குமரகுருபரர் செய்த பாடலொன்றைச் சான்றாகக் கொள்ளலாம்.

எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னாம் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றமுடைத்து

கிடைத்தற்கரிய பிறவி இம்மனிதப்பிறவி இதனை அருணந்தி சிவாசாரியப் பெருமான் சிவஞான சித்தியாரில்

அண்டசம், சுவேதசங்கள், உற்பிச்சம், சராயுசத்தோடு
எண்தரு நால், எண்பத்து நான்கு நூறாயிரத்தாய்
உண்டு பல் யோனி யெல்லாம் ஒழித்து மானுடத்து உதித்தல்
கண்டிடில், கடலைக் கையால் நீந்தினன் காரியங் காண்

என்று மனிதப் பிறவியின் மகத்துவத்தை விளக்குகின்றார். இப்படி அரிதிற்கிடைத்த மனிதப்பிறவியை மகாவித்துவான் போன்ற கற்றுத் தெளிந்து உலகுக்கு உணர்த்தியவர்களையும்

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு

என்னும் குறளுக்கிணங்க வாழ்ந்த திருவருட்பிரகாச வள்ளலாரைப் போன்று இறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்ற அருளாளர்களின் வாழ்க்கையையும் சான்றாகக் கொண்டு அவ்வழிப்பரவி ஆன்மத்தூய்மைப் பெற்று இறவா இன்ப அன்புடன் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ எனது உயிரினும் பெரிதாக மதிக்கும் வள்ளல் பெருமானைத் தொழுது இச்சிறு கட்டுரையை முடிக்கின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே'

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்.

95. சேக்கிழாரின் பெருமைகள்

கஸ்தூரி நாகராஜன்
குற்றாலம்

19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இலக்கிய உலகின் துருவநட்சத்திரம். சமயக் குரவர்கள் கோயில்கள் தோறும் சென்று தேவாரப்பாடல்களைப் பாடியது போன்று, சிவத்தலங்கள் தோறும் தலபுராணங்களைப் பாடியவர். திருவாவடுதுறை ஆதீனத்துடன் நெருங்கிய தொடர்புடைய மகாவித்துவான் அவர்கள், திருமடத்தைச் சார்ந்த ஸ்ரீ அம்பலவாண முனிவரிடம் பல சமய சாத்திர நூல்களைப் பயின்றவர்.

சேக்கிழார் பிள்ளைத் தமிழில், மகாவித்துவான் அவர்கள் சேக்கிழாரின் பெருமைகளைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். பெரியபுராணம் பாடிச் சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டு செய்துள்ள சேக்கிழாரின் வரலாறு மகாவித்துவான் அவர்களால் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மகாவித்துவான் அவர்களின் கற்பனைத் திறன், நுண்ணறிவுத்திறன், கவிவளம், சைவசமயப்பற்று, சிந்தாந்தப் பேரறிவு, திருமுறை ஈடுபாடு ஆகியனவற்றைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

“ஸ்ரீ சேக்கிழாரைப் பற்றி முழுவதும் உணர்ந்தவர் திருவாவடுதுறை யாதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள். அப் பெருமானின் பெருமைகளையெல்லாம் உலகுக்குத் தெரியும்படி ‘சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழ் எனும் நூலைப் பாடினார்கள் என்று கூறுப்படுகிறது.

திருத்தொண்டை நாட்டில் வேளாளர் குலத்தில், குன்றத்தூர் எனும் ஊரில் சேக்கிழார் தோன்றியருளினார் எனும் கருத்தைப் பிள்ளைத்தமிழில் வலியுறுத்துகின்றார்.

- - - - - - - - - - குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா சம பண்டித தெய்வச்
சைவா தாலே தாலே லோ’

என்றும்

சோறு மணக்கும் மடங்கள் எலாம்
தூய்மை மணக்கும் சிந்தை எலாம்
சுவணம் மணக்கும் சிந்தை எலாம்
தொங்கல் மணக்கும் தோள்கள் எலாம்

சேறு மணக்கும் கழனியெலாம்
செல்வம் மணக்கும் மாடமெலாம்
தென்றல் மணக்கும் மேடை எலாம்
தெய்வம் மணக்கும் செய்யுள் எலாம்
நீறுமணக்கும் நெற்றியெலாம்
நெய்யே மணக்கும் கறிகள் எலாம்
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்
நேயம் மணக்கும் வீதிஎலாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்
தலைவா தாலோ தாலே லோ (பா.5)

என்றும் குன்றத்தூரைப் பாடியுள்ளார்.

சேக்கிழான் என்பது வேளான்குடிகளுள் ஒன்று எருதுகளின் துணைகொண்டு வயல்களை உழுதுவரும் வேளாளன் சேக்கிழான் என்று அழைக்கப்பட்டனர். "கரிகால் சோழன் தொண்டை நாட்டை வளமாக்கி நாற்பத்தெண்ணாயிரம் குடிகளைக் குடிபுகுந்து வாழச் செய்தான். அக்குடிகளுள் சிறப்புக்குரியராகக் குறிப்பிடத் தக்கவை புரிசை கிழான், வெண்குளப்பக்கிழான், சேக்கிழான், கடல் கிழான், என்பவர்களின் குடிகள்" என்ற கருத்து நிலவுகிறது.

எல்லாத் தொழில்களிலும் உழவே தலையாயது என்னும் கருத்துக்கிணங்க சேக்கிழார் குடியினராகிய வேளாளர் குடியினால் செங்கோல் சிறந்து விளங்கியது எனும் கருத்தை,

தெள்ளும் வணிகர் குலம் எல்லாம்
தேற்றும் துலாக்கோல் அது கொள்ளச்
செம்பொன் மோலி அரசர் எலாம்
செங்கோல் கொள்ளச் சிறு கோல்கைக்
கொள்ளும் குலத்தில் உதித்த அருள்
கொண்டல் வருக வருகவே (வாரணை. பா.9)

என்கிறார்.

ஏரால் எண்திசை வளர்க்கும் புகழ் வேளாளர்
ஏரடிக்கும் சிறு கோலால் தரணி ஆளச்
சீராரும் முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ் செப்பலாமே

என்று உமாபதிவாச்சாரியர் போற்றுகிறார்.

பொங்கோதை கடல்தானைப்
போர் வேந்தர் நடத்து பெருஞ்
செங்கோலை நடத்துங்கோல்
ஏர் அடிக்கும் சிறு கோலே

என்கிறார் கம்பர்.

பலகுடை நிழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் (குறள்:1034)

என்கிறார் வள்ளுவர்.

சேக்கிழார் பிறந்த வேளாண்குடியின் பெருமையை நிலைநாட்ட பெரிதும் முயன்றுள்ளார் மகாவித்துவான் என்றால் அது மிகையன்று. உழவுத் தொழிலால்தான் உலகம் வாழ்ந்தது. அரசு சிறந்து விளங்கியது என்பது அன்றைய கருத்து. அக்கருத்தை நிலைநாட்டுவதற்கு முயல்வதைவிடச் சேக்கிழார் பிறந்தது வேளாளன்குடி என்பதைக் காட்ட மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார்.

அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றும் பண்புடைய குலம் சேக்கிழாரின் வேளாளன்குலம் என்பதை,

அண்டம் அளவும் வரை நாட்டில்
அரசர் கலகம் ஆதலினால்
ஆங்காங் கொருவி வணிகர் எலாம்
அயல்நாட் டகம்புக் கினிதமர்ந்து
விண்ட கலகத் திறம் தெறிந்து
மேயதத்தம் இடம் புக்க
விதம் உள் உணர்ந்து தம் சரண
மேஎன இருந்த மடக்கொடியை
மண்ட அழைத்துக் கொடு சென்றிம்
மடமாதினைக் கொள்ளுதிர் என
மயங்கல் கண்டு தங்கை எனும்
வாய்மை கொடுமைத்துனக் கேண்மை
கொண்ட குலத்தில் உதித்தருள் பெய்
கொண்டல் வருக வருகவே (வாரானை.பா.7)

எனும் பாடல் வழி விளக்குகின்றனர்.

சேரநாட்டுப் பெண் ஒருத்தி காஞ்சி புரத்தில் வேளாளர்களிடம் வளர்வதை அறிந்து அவளை அழைத்துப்போக அப்பெண்ணின் உறவினர் வந்தனர். அப்போது வேளாளர்கள், "நாங்கள் இப்பெண்ணை எங்கள் தங்கை போல் வளர்த்தோம். அவளை நீங்கள் குறைவாக எண்ணாமல் உங்கள் மரபினர் ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பதானால் அனுப்புவோம்" என்றனர் வணிகர்கள் அவ்வாறே அவளை வணிகன் ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, வேளாளர்கள் அப்பெண்ணிற்குச் சீதனம் முதலியவற்றைத் தந்தனர்.

சேக்கிழார் பெருமானும்,

ஆணையாம் என நீறுகண்டடிச் சேரன் என்னும்
சேணுலவு சீர்ச் சேரனார் திருமலை நாட்டு
வாணி லாவு பூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெரு தொண்டை நாடு

என்று குறிப்பிட்டுள்ளார்.

பீ.17.

சேக்கிழார், குன்றத்தூரில் திருநாகேசுரம் என்னும் பெயரில் ஒரு திருக்கோயில் எடுப்பித்த செய்தியைக் கூறியுள்ளார்.

நிலவிய நாகே சுரனின் தமர்தலின்
நிகழ் நாகேசுரமாய் (சப்பாணி.பா.10)

என்கிறார்.

சேக்கிழார் குன்றத்தூரில் ஒரு கோயிலை அமைத்து, அதற்குத் திருநாகேசுரம் என்று பெயரிட்டு வழிபட்டு வந்துள்ளார். சோழநாட்டில் இரண்டாம் ராசராசசோழனால் அமைப்பிக்கப்பட்ட திருநாசேசுரம் போன்று சேக்கிழார் குன்றத்தூரில் அமைத்துள்ளார். இறைவன் திருப்பெயர் 'நாகேசுரர்' இறைவியின் திருப்பெயர் மரகதவல்லி. "நித்தன் உறை திருநாகேச்சுரத்தில் அன்பு நிறைதலினால் மறவாத நிலைமை மிக்கர்" என்று கூறப்பட்டுள்ளது.

பழையனூர் வேளாளர் நீதிநெறியினின்றும் தவறாதவர் எனும் கருத்தை வலியுறுத்த பழையனூர் நீலி கதையைச் சான்றாக்கியுள்ளார் மகாவித்துவான். நீலியுடன் வாழ வணிகனை வற்புறுத்தியபோது.

"ஐயா, இவள் என் மனைவியல்லள். இவள் ஒரு பேய் நான் இவளோடு இங்கு இவ்விரா இருப்பேனானால் இவள், என்னை அறைந்து கொன்று விடுவாள்" என்று கூறினான். வேளாளர், 'நீ இவளோடு இன்று இரவு இங்கு இரு. இறக்க நேரின் நாங்கள் எழுபதின்மரும் உன் உயிர் பொருட்டு உயிர் விடுவோம்" என்றனர். நீலி, வணிகனைக் கொன்ற உடன் வேளாளர் எழுபது பேரும் தீயில் மூழ்கி உயிர் விடத் துணிந்தனர்.

இதை,

நலத்தின் உயரும் பழையனூர்
நாளும் பொலியும் அவையகத்து
நலிவுபுரி நீலியைக் கண்டு
நடுங்கா நின்ற வணிகனுக்கு
நிலத்தில் இயல்நின் உயிர்க்கிறுதி
நேருமாயி னியா மெல்லாம்
நெருப்பில் முழுகி உயிர்துறப்போம்
நீ ஒருதி என்றுரைத்த படி (வாரானை.பா.6)

எனும் பாடலால் அறியலாம்.

உமாபதிசிவாச்சாரியாரும்,

மாறுபடு பழையனூரார் நீலிசெய்த வஞ்சனையால்
வணிகன் உயிர் இழப்பத் தாங்கள்
கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திரு வாலங்காட்டப்பா
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்தள விட்டிவளவெனப் பேசலாமோ என்கிறார்.

தொண்டை நாட்டு வேளாளர் நீதியினின்றும் தவறாது கூறியபடி தீயில் மூழ்கி இறைவன் பேரருளைப் பெற்றனர். அத்தகைய சிறந்த குடியில் தோன்றியவர் சேக்கிழார் பெருமான் என்று காட்டுகிறார் மகாவித்துவான் அவர்கள்.

பிள்ளைத்தமிழில், சேக்கிழாரை ஓர் இலக்கியமாகவே உருவகப்படுத்துகின்றார்

சொல்லும் பொருளும் நனி சிறப்பச்
சுருங்கச் சொல்லல் முதலாய
தோட்டி யமைய அமங்கல மாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுங் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதி தழுவி
விரும்பு மூல இலக்கியமே (முத்தப்.பா.3)

என்கிறார்.

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்
ஓசையுடைமை ஆழமுடைத் தாதல
முறையின் வைப்பு உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தால்
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே

என்பதற்கு ஏற்ப சேக்கிழார் ஓர் இலக்கியமாகவே இருந்துள்ளார் என்று விளக்கப்படுகிறது.

சைவத் திருமுறையாம் பெரியபுராணம் பாடிய சேக்கிழாரை ஓர் இலக்கியமாகவே கூறுவது சாலச் சிறப்புடையதாகும்.

சேக்கிழாரின் குலப்பெருமையினைப் பிள்ளைத்தமிழில் போற்றிப் பாடிய மகாவித்துவான் அவர்கள் சேக்கிழாரின் வரலாற்றினை அறியபெரிதும் துணைசெய்துள்ளார். சேக்கிழாரின் சிவத்தொண்டினையும், கோயில் எடுப்பித்த வரலாற்றினையும் உறுதிபடுத்தியுள்ளார். தொன்மையில் ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு பெருமை உண்டு அதுபோல் வேளார் குலத்திற்கு என்று அடைக்கலப்பொருளைக் காத்தல், சொன்னதை நிறைவேற்றல், உழவுத்தொழிலை மேம்படுத்தல் என்ற குணநலன்களும், தொழில் வளமும் உண்டு என்பதை அழுத்தமாகவே காட்டியுள்ளார்.

96. கற்க, கற்பிக்க ஒரு கலங்கரை விளக்கம்

இரா. சுவாமிநாதன்
தஞ்சாவூர்

கற்க கசடற கற்பவை கற்றபின்-நிற்க
அதற்கு தக

என வள்ளுவன் வாய்மொழிநின்று தாய் மொழியாம் தமிழுக்குத் திருத்தொண்டாற்றுவதற்கென்றே அவதரித்த பெருந்தகைதான் திரிசிரபுரம் பிள்ளையவர்கள். அவர்தம் இளமையில் கற்றவிதமும் மற்றையோர்க்கு ஆசானாய் இருந்து போதித்த விதமும் எந்நூற்றாண்டும் வரும் ஆசிரிய-மாணாக்கட்கோர் இலக்கணமாய் திகழும் என்பது திண்ணம். தம் வாழ்நாள் அனைத்தையும் தமிழுக்கே அர்ப்பணித்ததோடன்றி தமக்குப்பிறகும் தமிழன்னையைத் தரமுடன் தழைத்தோங்கச்செய்ய வாழையடி வாழையென தன்னையே விஞ்சுமளவிற்கு மாணாக்கர்கள் தமிழ் தாத்தா. மகாவித்துவான் உ.வே.சா சோடச அவதானி சுப்ராய செட்டியார். இலக்கணம் இராமசாமிப்பிள்ளை, சுந்தரம் பிள்ளை போன்றோரை உகந்தளித்த தியாகச் செம்மல் திரிசிரபுரம் பிள்ளையவர்களை மாணவ-ஆசானாக நோக்குவதே இக்கட்டுரையின் சிறப்பாகும்.

கல்வி கற்க தொடங்குதல்

திரிசிரபுரம் பிள்ளையவர்கள் தம் ஐந்தாம் பிராயம் முதல் தம் தந்தை திரு.சிதம்பரம் பிள்ளையவர்களால் நடத்தப்பெற்ற திண்ணைப் பள்ளியிலேயே சேர்க்கப்பட்டு தமிழ், கணிதம், வைத்திய முறைகள், சோதிடம், ஆலயவழிபாட்டு முறைகள், குலாசாரங்கள், ஞாபக சக்தியினை வளர்ப்பதற்கான பயிற்சிகள் முதலியனவற்றுள் பயிற்றுவிக்கப்பட்டார். எல்லா மாணாக்கரிடத்தும் ஆசான் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்து தக்க வகையால் பாடஞ்செய்வித்தாலும் மாணாக்கரின் தத்தம் தனியார்வமேகற்றதனை சீர்தூக்கும்' என்பதனை தம் மாணவ பருவத்தில் மெய்பித்தவர் பிள்ளையவர்கள்.

தன்னார்வம்

தாம் படிக்கும் நூல்களிலுள்ள இனிய செய்யுட்களைச் சமயோசிதமாக பிறருக்கு சொல்லிக்காட்டயேதுவாகத் தொகுத்து, தனியே எழுதிவைத்து மனனம் செய்தார். தாம் படித்த தனிப்பாடல்களைப் போலவே பாடவேண்டுமென்ற தன்னார்வத்தால் அவற்றிலுள்ள சொற்றொடர் களையும், கருத்துக்களையும் தமது புதிய பாடல்களில் அமைத்துப் பயின்றார். அன்றியும் சக மாணவர்களுடன் விடுமுறை நாட்களில் திரிசிரபுரம் கடை. வீதிக்கு பொருட்கள் வாங்கச் செல்லும்போது

பெரும்பான்மை தற்கால மாணாக்கர் போலன்றி தாமும் தம் சகபிள்ளைகளும் தாம் மனனம் செய்த பாடல்களை சொல்லி பழகியதோடல்லாமல் ஒருவர் கூறிய பாடலின் இறுதிச் சொல்லை முதலாக உடைய வேறு ஏதேனுமொரு பாடலைச் சொல்ல இவ்வாறு விளையாட்டாகவும் கல்வி பயின்றதனைத் தற்கால மாணாக்கர்கட்கு எடுத்துரைக்கின் அவர்தம் தன்னார்வமும் மிகுமன்றோ?

தந்தைக்கோர் இன்ப அதிர்ச்சி

திரிசிரபுரத்தில் சுங்கம் வாங்கும் அதிகாரியாக பணியாற்றிய திரு. ரங்கபிள்ளையென்பார் விடுமுறை தினங்களில் பாடஞ்செய்துகொண்டு சென்ற பிள்ளைகளிடம் "பிள்ளையார்" மீது வெண்பா செய்ய இயலுமா எனவினவ பிற பிள்ளைகள் முயற்சித்துக்கொண்டிருக்கும் போதே பிள்ளையவர்கள் உடனடியாக,

பாரதத்தை மேருப் பருபரதத்திலே யெழுது
மாரதத்தை தந்தையாவர் வண்ணஞ்செய் சீருடையாய்
நற்றமிழை யாங்க ணயந்து கற்றத்தேறமனத்
துற்றருளை யெங்கட்குதவு

என விரைந்து முடித்ததனைக் கேட்ட ரங்கப்பிள்ளை மனமகிழ்ந்து இவர் வரும் சமயமெலாம் பாடலொன்றுக்கு இரண்டணா வீதம் சமுத்தி கொடுத்து ஊக்குவித்தார். இவ்வாறு பெற்ற இரண்டணாவினைக்கொண்டு பிள்ளையவர்கள் குறித்த அளவிற்கு மிகுதியாக கடையினின்று பொருட்களை வாங்கிச் சென்று தம் தந்தையாரை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அதோடன்றி முருங்கைப் பேட்டையைச்சார்ந்த கனவானொருவரின் விருப்பத்திற்கேற்ப "இப்பாட்டுக்கு தகுந்த சொல் என்பதனை ஈற்றடியாக வைத்து சிவன், விஷ்ணு, மற்றும் பிரம்மா ஆகியோரை நெல்லுக்கொப்பிட்டு "ஒண்கமலம்..........எனத்தொடங்கும் சிலேடையொன்றினையும் யாத்தார்.

தந்தையார் மறைவு

பிள்ளையவர்களின் பதினைந்தாம் பிராயத்தில் பிறந்த விரோதியெனும் புத்தாண்டு அன்னாருக்கு விரோதியாகவே வந்துதித்தது போலும்! அவ்வாண்டில்தான் பிள்ளையவர்களின் தந்தையார் சிவபதமடைந்தார்.

திருமணம்

தந்தையையிழந்த பிள்ளையவர்கள் சில காலம் சென்றபின் காவேரியாச்சி என்னும் நங்கையை கையகம் பற்றி சோமரசம்பேட்டையை விட்டு நீங்கி மீண்டும் திரிசிரபுரத்திற்கே வந்து மாதம் கால் ரூபாய் வாடகைக்கு ஒட்டு வீடொன்றில் குடியேறினார்.

மீண்டும் கல்வி

"கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதனையுணர்ந்த பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திற்கு வருகைதந்த திருவாவடுதுறை ஆதீனத்தில் முறையாகப்பயின்ற வேலாயுத முனிவர் என்பாரிடம் தினமும்

தவறாது பாடங்கேட்டும், பிரதியுஞ்செய்துகொண்டார்.

விடாப்பிடி

பிள்ளையவர்கள் தண்டியலங்காரம் கற்க விரும்பினார். ஆனால் அதற்கு அப்போது பாடஞ்சொல்வார் கிடைக்கவில்லை. இந்நிலையில் அவ்வூரில் தினமும் அன்னமிட்சை எடுத்துண்டு காலங்கழிக்க பரதேசி ஒருவருக்கு தண்டியலங்காரம் நன்கு பாடம் என்பதையறிந்து அவர் பிட்சை எடுக்கவரும் நேரமறிந்து தெருவெல்லாம் அவருடனேயே சென்று, குறிப்பறிந்து அன்னாருக்கு பிடித்தமான கஞ்சாவினை வாங்கிக்கொடுத்து அன்னாரிடமிருந்த தண்டியலங்காரத்தினை ஆர்வமுடன் கற்றுத் தேர்ந்தரெனின் பிள்ளையவர்களின் கல்வி கற்பதில் அன்னாரது ஆர்வமும் விடாப்பிடியும் மட்டுமின்றி குறிப்பறிதலும் சான்றோன் என்பது இந்நிகழ்வால் நன்கு தெளிவுறும். இதுவுமன்றி பொருத்த இலக்கணத்தையும், அஷ்ட நாகபந்தம் முதலிய சித்ரகவிகளின் இலக்கணங்களையும் திறம்பட கற்றார். இலட்சுமணபிள்ளை என்பார் கேட்டுக் கொண்டதற்கிணங்க "அகிலாண்டேஸ்வரி பிள்ளைத்தமிழை இயற்றி அதனால் பேரும் புகழும் பெற்றார். பின்னாளில் சென்னையிலுள்ள மகாலிங்கய்யர் இவரது அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழைக் கேட்டு
மகாலிங்கய்யர் இவரது அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழைக் கேட்டு

> தருமை வளர் குமர குரு முனிவன் கல்வி
> ....
> சுருதி நெறி தவறாதருணன் மீனாட்சி
> சுந்தர மாலன் பினொடு சொல்லும் போதே

எனப்பாராட்டினார்.

நினைவாற்றல்

சென்னையில் ஒருநாள் பிள்ளையவர்கள் திருவேங்கிடாசல முதலியார் என்பார் இல்லத்திற்குச் சென்றிருந்தபோது அவரால் பதிப்பிக்கப்பெற்ற கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் குருபடலத்தில் 27ஆவது செய்யுளில் நீங்களைவிடும் எனும் தொடர் நீர்களைவிரும் எனப்பதிப்பிக்கப் பெற்றதனைக் கண்ணுற்று நீங்களென்பதே பாடமன்றோ? ஆயினும் இதில் நீர்களென்று இருக்கின்றதேயென வினவ முதலியாரவர்கள் நீங்களென்பதற்கு பிரயேகமும் 'கள்' விகுதியேற்று நிலைமொழி இன்னதென்று தெரியாதலால்தான் அவ்வாறு பதிப்பித்ததாகக் கூற அதற்கு பிள்ளையவர்கள் இந்த பிரயோகம்

> ஆங்கது தெரிந்து வேதா
> வாவிகள் வினைக்கிடன்றி
> நீங்களிவ்வாறு செய்கை
> நெறியதன் றெள்ளலோடும் (கந்த.உருத்.10)

என எதுகையிலேயே பிரயோகித்திருப்பதனை எடுத்தியம்ப முதலியாரவர்கள் ஒரு சொல்லின் உருவத்தை புலப்படுத்துவதற்குறிய

மேற்கோளை நினைவிற் கொணர்வது வியப்பிற்குறியதெனப் பிள்ளையவர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

கற்றலுக்கோர் இலக்கணம்

திறம்பட கற்பதற்குத் தன்னார்வம், தன்னடக்கம், விடாமுயற்சி, நினைவாற்றல் போன்றன முக்கிய திறவுகோல்களாக திகழ்கின்றன. இவைகளனைத்தும் இளம் பிராயந்தொட்டே பிள்ளையவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. இருந்தபோதிலும், வட்டார வழக்கை முன்னறிந்து அதன் வழி நடக்காதலால் பிள்ளையவர்கட்குத் தன்னடக்கம் இல்லையோ என ஐயுறவைத்த நிகழ்வுகளுமுண்டு.

"பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்பதனை நன்குணர்ந்த பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று கற்க முற்பட்டு அங்கிருந்த அம்பலவாண முனிவரை வந்தனஞ்செய்து தம் விருப்பத்தினைத் தெரிவித்தபோது அதற்கு அம்பலவாணர் பிறகு வாரும்;யோசித்து சொல்வோம்;ஆதீன சிஷ்யருக்கே பாடஞ்சொல்லலாம் என்றும் மேலும் எவ்வளவோ சிரமப்பட்டு நாங்கள் கற்றவைகளை எளிதிற் கற்றுப்போக வந்தீரோ? என வினவியும் எளிதிற் சம்மதியாது அலைக்கழித்தனர். எனினும் விடாப்பிடியாக தினந்தோறும் அலைந்தலைந்து கேட்பதனையுணர்ந்து ஓர்நாள் மனமிறங்கி பாடங்கேட்கயேற்ற நல்ல நாள் பார்த்து வரச்சொன்னதும் மகிழ்ந்த பிள்ளையவர்கள் நன்நாளறிந்து செல்ல, புத்தகங்கொணர்ந்தீரா? என முனிவர் வினவ இல்லையெனக்கூறியதும் தம் புத்தகத்தினைக் கொடுக்க அதனைத் தாம் இருந்தநிலையிலேயே பெற எத்தனித்த பிள்ளையவர்களை வட்டார சம்பிரதாயமே தெரியவில்லையே எனச் சினந்தனர். அதற்குப் பிள்ளையவர்கள் தாம் புத்திபூர்வமாகத் தவறேதும் செய்யவில்லை எனவும் நல் வழி கற்பிக்கவும் வேண்டினார். உடன் அம்பலவாணர் நூதனமாகக் கற்க தொடங்கும்போது ஆசானை பத்திர புஷ்பங்களால் அர்சித்து வந்தனம் செய்து புத்தகத்தினைப்பெற்று பின்சொல்லென சொல்லல் வேண்டுமென்றார். பின்பு அதன்படியே பத்திர புஷ்பங்களைக் கொணர்ந்து அர்ச்சித்து நின்று வந்தனங்கள் செய்து புத்தகத்தைப் பெற்று மீண்டும் வந்தனம் செய்து பிரித்துபடிக்கத் தொடங்கியதும், நில்லும்.... பூசைக்கு நேரமாகிவிட்டதெனவும் மறு நாள் காலை வரும்படிக்கூற அவ்வாறே ஆசான் சொல்வழி நின்று கற்றார். இவ்வாறாக பிள்ளையவர்கள் பலரிடத்தும் சென்று அவர்கள் வேண்டுவன அறிந்து பலகுறை களைந்து ஒவ்வொரு நூலையும் சிறிது சிறிதாகக் கற்றுத் தேர்ந்து கற்றலுக்கோர் இலக்கணமாய் திகழ்கின்றார்.

கற்பித்தல்

தாம் கற்றபோது தமக்கேற்பட்ட இன்னல்கள் தம் மாணாக்கர்கட்கு ஏற்படலாகாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் பிள்ளையவர்கள். பிறரிடத்து கல்வி பயிலும் மாணாக்கரை விட தம்

மாணாக்கரும் பெயரும், புகழும் பெறவேண்டும்' என்றெண்ணி அதற்காக அயராது உழைத்து அவர்தம் திறமைகளையும் பெருமைகளையும் தமிழுலக்கீந்த பெருந்தகை!

அஷ்டாவதானம் சபாபதி முதலியாரைப் போன்றே தம் மாணவர் சுப்பராய செட்டியார் அவர்கட்குப் பதினாறு அவதானங்கள் கற்பித்து சோடச அவதானி என சிறப்பளித்து தக்க சன்மானங்களையும் பெறச் செய்தார்.

செல்வந்தர்கள் வரகனேரி நாராணயசாமி, உறையூர் அருணாசல முதலியார் போன்றோர்க்கு அவர்கள் விரும்பிய நூல்களைத் தடையின்றி வழங்கியும், பாடஞ்சொல்லியும் வந்தார். மேலும் ஏழை மாணாக்கர்கட்குப் பாடஞ்சொல்லியது மட்டுமின்றி உண்டி மற்றும் உறையுள் கொடுத்தும் உதவினர். தம் மாணாக்கருக்கு யாரேனும் தீங்கு செய்தால் அத்தீங்கு செய்தாரைத் தம் பகைவராகவேயெண்ணி கடித்தொழுகினார். மாணாக்கரிடம் இவர்காட்டிய அன்பிற்கு எல்லையே இல்லை யெனலாம்.

பிள்ளையவர்கள் தம் மாணாக்கர்கட்குக் கல்வி மட்டுமின்றி நன்னெறிகளை நயம்படகற்பித்தனர் என்பதற்குச் சான்றாக அவர்தம் மாணாக்கர்கள் இருந்தனர். தமிழ் தாத்தா உ.வே.சுவாமிநாதய்யர் அவர்கள் தம் ஆசானின் முழுப்பெயரினை உச்சரித்தாலே ஆசானின் மிதுள்ள பக்தி மாசுபட்டுவிடுமென்றெண்ணி ஆசானது முழுப் பெயரினை அச்சிடநேர்ந்தபோது அவ்வாறு செய்வதற்காகத் தமது வருத்தத்தினைத் தெரிவித்தால் குரு - சிஷ்ய உறவின் சிகரத்தினை எட்டியுள்ளாரெனின் மறுக்கயியலாது! உ.வே.சா அவர்கள் தம் ஆசான் பிள்ளையவர்களின் வாழ்க்கை சரிதத்தையெழுதி சிறந்த மாணவனுக்கோர் இலக்கணமாய்த் திகழ்கின்றார் எனின் மிகையாகாது!

பிள்ளையவர்கள் தம் மாணாக்கரிடத்து எவ்வளவு அன்புட னொழுகினாரோ அதனை விஞ்சுமளவிற்கு அவர்தம் மாணவரும் இருந்தனர்.

சிவதரு மோதிரச் சுவடி

பிள்ளையவர்கள் திருத்தணிகைப் புராணத்தில் அகத்தியன் அருள் பெறு படலத்திற்குச் செவ்வனே பொருள் புலப்படாததால் அதற்கு சிவதரு மோதிரம் என்னும் நூலின் மூலம் விளக்கம் பெற எண்ணி அந்நூல் தம்மூரிலேயே ஓர் அமிஷேகரிடம் இருப்பதையறிந்து தானும், தக்காரைக்கொண்டும் கேட்டதில் முயற்சி கைகூடவில்லை. இதனையறிந்த பிள்ளையவர்களின் மாணாக்கர் சிதம்பரம் பிள்ளையென்பார் பிரபு வேடமணிந்து அமிஷேகரிடம் சென்று தம் தாயார் இறந்துவிட்டதாக கற்பனையறைத்து அதற்கு இறுதி சடங்கு காலத்தில் சிவதருமோதிரச் சுவடியை படிக்கவேண்டுமெனக்கூறி பொருள் கொடுத்து அப்பிரதியினைப்பெற்று தம் ஆசானிடம் வழங்கினார். பிள்ளையவர்கள் மாணவரிடம் அப்பிரதியை எங்ஙனம் பெற்றார்? அவர் மீசையை ஏன் எடுத்தார்? தர்க்கம் ஏதேனும்

நிகழ்ந்ததா? எனப்பலவாறாக வினவ எங்கே தாம் செய்த தந்திரத்தை உடனடியாகக்கூறினால் எங்கே கடித்துரைப்பாரோ என்றெண்ணி சில நாட்கள் தம் ஆசானைக் காணாமலேயே இருந்தார். இதையறிந்த பிள்ளையவர்கள் சிதம்பரம் பிள்ளையை வரச்சொல்லி இப்படிச் செய்யலாமா என வினவ அதற்கு மாணவர்

பொய்மையும் வாய்மையுடைத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்

என்பதனையொட்டியே செய்தேன், குற்றமாகத் தோன்றின் பொறுத்தருள வேண்டுமென இறஞ்சினர்.

பிள்ளையவர்களின் மாணாக்கர்களாகிய தமிழ் தாத்தா உ.வே.சுவாமிநாதய்யர், சோடச அவதானி சுப்பராய செட்டியார். இலக்கணம் இராமசாமிப்பிள்ளை, மாணாக்கர் சுந்தரம் பிள்ளை, மற்றோரும் மாணாக்கர் எவ்விதம் கற்று நன்னெறிகளுடன் நடக்க வேண்டுமென்பதற்கும், பிள்ளையவர்கள் கற்றலுக்கும் மற்றும் கற்பித்தலுக்கும் எக்காலத்திற்கும் ஒளிகாட்டி நன்னெறியுடன் நல்வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்பது திண்ணம்.

97. பிள்ளையவர்களின் மொழிநடை

தூ. சேதுபாண்டியன்
மதுரை

ஒருவன் அன்றாட வாழ்வில் கருத்துப்பரிமாற்றத்திற்காக மொழியைப் பயன்படுத்தும் முறையிலிருந்து ஒரு படைப்பாளி மொழியைப் பயன்படுத்தும் முறை வேறுபடுகின்றது. அன்றாட வாழ்வில் மொழியைப் பயன்படுத்தும்போது ஒருவன் எத்தகைய முன் திட்டமும் இன்றி மொழியைப் பயன்படுத்துகின்றான். ஆனால் இலக்கியப் படைப்பு என்று வரும் போது ஒலிகளையும் சொற்களையும் தொடர்களையும் பார்த்துப் பார்த்துத் தேர்ந்து எடுத்துப் பயன்படுத்துகின்றான். இலக்கியங்கள் யாவும் மொழியால் அமைந்தனவேயாம் ஆனால் மொழியால் அமைந்தவை யாவும் இலக்கியமாவதில்லை. மொழியின் சிறப்புப் பயன்பாடே இலக்கியமாகின்றது. ஒரு மொழியில் உள்ள படைப்பாளிகள் எல்லோரும் ஒரே மொழியையே இலக்கியப் படைப்புக்குப் பயன்படுத்தினாலும் அவர்களின் படைப்பு வேறுபட்டு காணப்படுவது ஏன்? அவர்கள் தெரிந்தெடுத்த ஒலிகள் சொற்கள் தொடர்கள் அவற்றின் இணைவுகள் இவையே ஒரு படைப்பாளி மொழியைக் கையாளும் முறையிலிருந்து மற்றொரு படைப்பாளி மொழியைக் கையாளும் முறையை வேறுபடுத்துவதைக் காண்கிறோம். இவ்வேறுபாடே ஒரு படைப்பாளியை இனங்காணத் துணைபுரிகிறது. இவ்வாறு ஒரு படைப்பாளியை அவர் பயன்படுத்தும் மொழியமைப்பின் அடிப்படையில் இனங்காணுவதையே மொழிநடை ஆய்வு என்பர். இந்நோக்கில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மொழிநடையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த ஆய்வுக்கு மகாவித்துவான் அவர்களின் படைப்பான திருப்பெருமண நல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், திருவாணைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ், திருத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழ். ஆகிய பிள்ளைத் தமிழ் நூல்களும் வாட்போக்கிக் கலம்பகம், அம்பலவாணதேசிகர் கலம்பகம், ஆகிய கலம்பக நூல்களும்;திருத்துருத்திச் சுப்பிரமணியஸ்வாமி பதிகம், திரு குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம், திருத்துருத்திக் கச்சி விநாயகர் பதிகம், திருவிடைமருதூர் மருதவாணர் தோத்திரப் பதிகம்;மதுரை திருஞான சம்பந்தர் பதிற்றுப்பத்தந்தாதி; மதுரைத் திருஞான சம்பந்தர் ஆனந்தக்களிப்பு; சவராயலு நாயகர் மாலை, சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை, மற்றும் சில தனிப்பாடல்கள் ஆகியவை முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. நடையியல் பற்றிய நூல்களும் கட்டுரைகளும் துணைமைச் சான்றாதாரங்களாகின்றன.

ஒரு படைப்பாளியின் மொழிநடையினை ஆராயும்போது அவருடைய படைப்பில் காணலாகும் நடையியற்கூறுகளை ஒலி நிலையில் அமைந்துள்ள கூறுகள், சொல் நிலையில் அமைந்துள்ள கூறுகள், தொடர் நிலையில் அமைந்துள்ளன என மூன்று பிரிவில் பகுத்துக்கொண்டு ஆராயலாம் என்பர்.

மகாவித்துவான் அவர்கள் பல்வேறு இலக்கிய வகைகளைப் படைத்துள்ளார். அவருடைய பாடல்களில் எதுகை மோனை இவற்றில் எதுகைக்கே முதல் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எதுகையிலும் தனிச்சொற்களால் அமைந்த எதுகையை விடச் சொற்களின் இணைவினால் அமையும் எதுகையே அதிகம் இடம் பெறுகின்றன. அவற்றுள்ளும் நெட்டுயிர்கள் இடம்பெறும் எதுகைகளே அதிகம் இடம்பெறுகின்றன. இவடர் அமைத்துள்ள எதுகைகளின் பா, மா, தே, தூ, நா, கா ஆகிய ஓரெழுத்து மொழிகளுடன் மேவு என்ற சொல்லை இணைப்பதன் மூலமாக எதுகையை உருவாக்கியுள்ளதனைப் பல பாடல்களில் காணலாம். சில பாடல்களில் எதுகை அமைந்துள்ள முறையைப் பின்வரும் பாடல்கள் விளக்கும்.

மாமேவு வாட்போக்கி மாதேவர் தமக்கிருப்பு வரையை முன்னாட்
டுமேவு வெள்ளிவரை யாக்கியவன் சித்தர்யாஞ் சொல்லக் கேண்மோ
பாமேவு மற்றவர் கை நாகமும்பொன் னாக்கினர்தாள்பணிவா
னோர்க்குப்
பூமேவு நாகலோ கத்தையும் பொன் னுலகாகப் புரிந்தோ மன்றே.
(வாட்போக்கிக்கலம்பகம்.51)

இது போன்றே பல பாடல்களில் பாமேவு, மாமேவு, தூமேவு, நாமேவு, பூமேவு, போன்ற தொடர்களே எதுகையாக அமைந்துள்ளன. இத்தகைய ஓசை நயம் பொருந்திய எதுகை என்னும் கூறு மகாவித்துவானின் விருப்பக் கூறாக அமைந்துள்ளது.

ஒரு கவிதையில் அமைந்துள்ள பாடு பொருளை அக்கவிதையின் ஓசைநயத்தினால் விளக்குவதை ஒலிக்கோலம் என்பர். ஒரு நிகழ்ச்சியை வருணனை செய்யும் போது மொழியின்கண் பயன்படுத்தும் ஒலிகளின் இணைவால் அந்நிகழ்ச்சியையே உணரச்செய்வது தான் ஒலிக்கோலம் ஆகும். மகாவித்துவான் அவர்கள் இத்தகு உத்தியைப் பயன்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது. ஊசலாடுகின்ற நிகழ்ச்சியைப் பாடும் கவிஞர் ஊசலாடுவது போன்ற ஓசைநயம் அமையும் வகையில் ஒலிகளைத் தேர்ந்து சொற்களமைத்துப் பாடியிருப்பது படிப்பவர் மனத்தில் ஊசல் ஆடும் நிகழ்ச்சியை நேரில் பார்ப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஆசிரியர் அறுசீர்க் கழிநெடில் அடிகளால் அமைந்த சந்த விருத்தப்பாவைப் பயன்படுத்துகின்றார். இங்கு அவர் தேர்ந்தெடுத்த ஒலிகளின் இணைவு ஓசை நயத்தை உருவாக்குவதைக் காண முடிகின்றது. பின் வரும் பாடல் அதற்குச் சான்றாகின்றது.

ஊச லாடு நெஞ்சமே யோவி மாய வஞ்சமே
வீச லாதி பங்கரே மேவி ராச லிங்கரே
வாசம் வீசு தென்றலோ வாது பாய நின்றலோ
மூச வேள தங்கையே மூட லாடு நங்கையே.

இப்பாடலில் உள்ள ஒவ்வொரு அடியிலும் அறுசீர்கள் உள்ளன. ஓரடியில் உள்ள முதல் மூன்று சீர்களைப் படிக்கும் போது ஊசல் ஓரிடத்திலிருந்து அடுத்த பக்கத்திற்கு செல்வது போன்றும், அடுத்த மூன்று சீர்களைப் படிக்கும் போது ஊசல் எதிர்ப்புறத்திலிருந்து நம்பக்கம் வருவது போலவும் ஓசை அமைந்திருப்பதனைக் காண முடிகின்றது. இவ்வமைப்புக்கு முதலிரண்டு சீர்களை ஒரு நெடில் ஒரு குறில் என்றும் மூன்றாவது சீரை ஒரு குறில் ஒரு ஒற்று பின்னர் ஒரு குறில் ஒரு நெடில் என்று அமைத்துள்ள பாங்கே காரணமாகின்றது. மொத்தத்தில் இப்பாடல் தாத தாத தத்ததே தாத தாத தத்ததே என்ற தத்தகார ஓசை அடிப்படையில் அமைந்துள்ளது. இது மகாவித்துவான் அவர்களின் ஒலித் தேர்வுக்குச் சரியான சான்றாக அமைகின்றது.

ஒலிகளை இணைத்து அடுக்கி ஓசைநயம் உருவாக்குவது போன்றே ஒரே சொல்லைத் திரும்பத் திரும்ப ஒரே அளவுள்ள இடைவெளிக்குப் பிறகு வரும்படி பயன்படுத்தும் போதும் ஓசை நயத்தை உருவாக்க முடியும். மகாவித்துவான் அவர்கள் தாம் பாடியுள்ள பிள்ளைத்தமிழ் நூல்களில் எல்லாம் செங்கீரைப் பருவத்தில் ஆறு, மற்றும் ஏழாம் பாடல்களில் ஆட என்ற சொல்லை அடிதொறும் இறுதியில் இடம் பெறச் செய்வதின் மூலம் ஓசை நயமூட்டியுள்ளார். இதனைப் பின் வரும் பாடல்களால் அறியலாம்.

சூழியமுஞ்சிறு சுட்டியும் விட்டொளிர் சோதிவிரிந்தாடச்
சுடுதுதிச்செவி நீடுங்கிழையுந் தோடு மசைந்தாட
வீழியவாவுசெவ் வாயினெழுங்குறு வெண்ணகை நிலவாட
வெள்ளிய பிறைநுத லென்பது மெய்யென வெண்ணீற் றொளியாட
வாழிய வாழிய வென்றுமுனின்று வழுத்தும் பேரடியார்
மாறா வன்பெனும் வாரி குடைந்து மகிழ்ந்தவர் சன்மமெனு
மாழிய வாழி சுவற்று மடப்பிடி யாடுக செங்கீரை
யல்லூர்பொழிலமை நல்லூரெழிலுமை யாடுக செங்கீரை
(திருப்பெருமண நல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்)

கெண்டை யிரண்டு மருண்டொரு முளரி கிடந்து நடந்தாடக்
கெளிறொரு பதுநில மகளை விடாது கிளர்ந்து தளர்ந்தாடக்
கொண்ட லிரண்டொளி ருச்சியின் மீது குவிந்து கவிந்தாடக்
குமுத மலர்ந்தபொன் முளரி பிறந்தெழு குறுவெண் மணியாடத்
துண்டு படுங்கலை மதியிற் கட்டிய சுட்டி யசைந்தாடச்
சூழ்ந்திரு காந்தளடிப்படி வண்டு சுழன்று முரண்றாட
அண்ட மனைத்து முயிர்த்த பொலங்கொடி யாடுக செங்கீரை
அத்தி வனத்தம ரத்த ரிடத்தவ ளாடுக செங்கீரை.
(திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்)

மகாவித்துவானின் யாப்பியல் கூறாக ஒன்றனைச் சுட்டிக்காட்ட முடிகின்றது.

அவர் பாடிய கலம்பகங்களில் எல்லாம் ஊசல் என்னும் உறுப்பினைப் பாடும் இடத்தில் எல்லாம் நான்கடியால் அமைந்த கலித்தாழிசைப் பாடல்களில் முதல் மூன்றடிகள் அளவடிகளாய் அளவால் ஒத்திருக்க இறுதி அடி மட்டும் கழிநெடிலடியாகப் பாடுவதை இவருடைய நடையில் காணலாகும் ஒரு மறித்துவரு கூறாகக் கருத முடிகின்றது. இதுவும் ஓசை நயம் கருதி அமைக்கப்பட்ட ஒரு விலகலாகவே காணப்படுகின்றது. பின்வரும் பாடல்கள் இதற்குச் சான்றாகின்றன.

நல்லார் துறைசை நகுமம் பலவாணன்
பல்லார் வணங்கப் பரிந்தருளுஞ் சீர்பாடி
வல்லார் முலைகுலுங்க வண்கை வளையார்ப்ப
வல்லார் குழன்மடவீ ராடுகபொன் னூச
லணிமே கலையிடையீ ராடுகபொன் னூசல்
(அம்பலவாண தேசிகர் கலம்பகம்)

துதிக்கும் பரமர் சுரும்பரர் குழலோ
டுதிக்கும் வாட்போக்கி யுரையுஞ்சீர் பாடிக்
கதிர்க்கு முலைகுலுங்கக் கைவளைக ளார்ப்ப
வதிர்க்குந் துடியிடையீ ராடுக பொன்னூசல்
ஆயும் பிடிநடையீ ராடுக பொன்னூசல் (வாட்போக்கிக் கலம்பகம்)

இப்பாடல்களில் முதல் மூன்றடிகளை விட நான்காவது அடிமட்டும் எண்சீரடியாக நீண்டு அமைந்துள்ளன. இவ்வடிகளில் தான் தாழிசையின் இன்றியமையாக் கூறான பொருள் திரும்பத்திரும்பப் பயின்று வருவதைக் காணலாம்.

ஓசை நயத்திற்காக ஒலிகளைத் தேர்வு செய்தது போலவே பண்டை இலக்கணங்களில் உள்ள சந்தி விதிகளைப் பேணுவதற்காகவும் இவர் பல ஒலித்தேர்வுகளைச் செய்கின்றார். சான்றாக ஒரு சிலவற்றைக் கூறலாம். குற்றியலுகரத்தில் ஒரு சொல் முடிய அடுத்துவரும் சொல் யகரத்தில் தொடங்குமெனில் அங்குக் குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும் என்பது பண்டை இலக்கண நூலார் கருத்தாகும். ஆனால் இக்காலத்தமிழில் இவ்வழக்கு வழக்கிழந்து விட்டது என்றே கூறுமளவுக்கு அவ்விதியை யாரும் பின்பற்றுவதில்லை ஆனால் பழைமை நாட்டமும் மரபில் ஈடுபாடும் கொண்ட மகாவித்துவான் அவர்கள் தம் கவிதைகளில் குற்றியலுகரச் சொற்கள் இடம் பெற்று அதனை யடுத்து யகரம் முதலில் வரும் சொற்கள் இடம் பெறுமாயின் அந்த யகரத்துக்கு முன் உள்ள குற்றியலுகரத்தினைக் குற்றியலிகரமாக மாற்றிப்பாடுவதைக் காண முடிகிறது பின்வரும் பாடலடியில் இதனைக் காணலாம்:

நிதி கீழ் நோக்கியே மலர்தலென் றியாவரு நிகழ்த்துநின்

சொற்களை இணைக்கும் போது தோன்றும் சந்திவிதிகள் பல பண்டைத்தமிழ் இலக்கணம் கூறுவனவற்றிலிருந்து பிற்காலத்தில் எளிமைப்படுத்தப் பட்டுள்ளமையை இன்றைய தமிழில் காணமுடிகிறது. மேலும் மொழியை எளிமையாக்குவது மொழி வளர்ச்சிக்குத் துணைபுரியும் என்பது இக்கால மொழியியல் வல்லுநர்களின் சிந்தனையாகும். ஆனால் மகாவித்துவான் அவர்கள் தம் மொழியில் பண்டை இலக்கண நூல்களில் கூறப்பட்ட சந்தி விதிகளைச் சிறிதும் பிறழாமல் பயன்படுத்தி யிருப்பதை அவர்தம் படைப்பில் காணமுடிகின்றது. இதனாலேயே அவர்காலத்து வாழ்ந்த இராமலிங்க அடிகளார் போன்றோரின் பாடல்கள் எளிமையாக இருக்க இவருடைய பாடல்கள் சற்றுக் கடினமாக இருப்பதை உணரமுடிகிறது. இவ்வாறு சந்தி பிரிக்காது சேர்த்து எழுதும் முறையால் இவருடைய சமகாலத்தில் வாழ்ந்த ஏனையவர்களின் நடையிலிருந்து இவருடைய நடையை வேறுபடுத்திக் காட்டுகிறது.

ஒலிநிலையில் அவருடைய பாடல்களில் காணப்படும் நடையியற் கூறுகள் அனைத்தையும் விளக்குவதற்கு இக்கட்டுரையின் எல்லைப் பரப்பு இடம் தராது என்பதால் அடுத்துச் சொல் நிலையில் மகாவித்துவான் அவர்களின் பாடல்களில் காணலாகும் நடையியற் கூறுகளாகச் சிலவற்றைக் காணலாம்.

தமிழில் இல், அல் என்ற இரண்டு எதிர்மறைச் சொற்கள் உள்ளன. இவ்விரண்டுமே எதிர்மறைப் பொருளுணர்த்தினாலும் இவை இரண்டுக்கும் இடையே வேறுபாடுண்டு. இல் என்பது இரு என்ற உடன்பாட்டு வினையின் நேரடியான எதிர்மறைச் சொல்லாகும். இதனைப் பின்வரும் சான்றுகள் விளக்கும்.

1. அன்பு வீட்டில் இருக்கிறான் (உடன்பாடு)
2. அன்பு வீட்டில் இல்லை (எதிர்மறை)

அல் என்னும் எதிர்மறை வடிவம் ஆகு என்ற உடன்பாட்டு வினையின் நேரடியான எதிர்மறைச் சொல்லாகும். இதனைப் பின்வரும் சான்றுகள் விளக்கும்.

3. அவன் மனிதன் ஆவான்.
4. அவன் மனிதன் அல்லன்.

ஆனால் இன்றைய தமிழில் இல், அல் ஆகிய இரண்டு எதிர்மறைச் சொற்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு உணராததால் அல் என்ற சொல் வரவேண்டிய இடத்திலும் கூட இல் என்ற எதிர்மறைச் சொல்லையே பயன்படுத்தும் நிலையைக் காணமுடிகிறது. ஆனால் மகாவித்துவான் அவர்கள் தம் கவிதைகளில் இல், அல் இரண்டு சொற்களையும் அவற்றின் பொருள் மாறாமல் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. பின் வரும் பாடல்கள் இக்கருத்தை உணர்த்தும்.

அரியபுகழ்த் திருமயிலைத் திருக்குளத்து நேற்றுநீ ராடும் போதென்
பிரியமிகு கலையெடுத்து விநாயகமா லவண்மறைத்த பெற்றி

நோக்கித் தெரியவரு நீ கன்ன னாயினும்யா னிடைப்பெண்ணோ
செப்பு கென்றே
னுரியவொரு சிற்றிடைச்சி யலையோநீ யெனநகைத்தங் குரைத்திட்
டானே, (தனி விருத்தம்)

இரவிமுன மிருளில்லை யெம்பிரா னருண்முன் மலமில்லை நாளும்
புரவியன்மெய் யடியார்முன் பவமில்லை நல்லோர்முன் பொறாமை யில்லை
யுரவியல்கு ணாகரவி நாயகபூ பதிமுன்ன முலோப மில்லை
புரவியமெய்க் கீர்த்தியவன் றிருமயிலைச் சத்திரமுன் பசியு மின்றே.
(சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை)

தமிழில் ஒன்று என்ற எண்ணுப் பெயருக்கு ஓர், ஒரு என்ற இரண்டு மாற்று வடிவங்கள் உள்ளன. அது போன்றே இரண்டு என்ற எண்ணுப் பெயருக்கும் ஈர், இரு என்ற இரண்டு மாற்றுவடிவங்கள் உள்ளன. இவற்றுள் ஓர், ஈர் ஆகியன உயிரில் தொடங்கும் பெயருக்கு முன் அடையாகவும், ஒரு இரு என்பன ஏனைய இடங்களிலும் இடம் பெறுவது தமிழ் மரபாகும். மகாவித்துவான் அவர்களின் படைப்பில் இவை தவிர ஓர், இர் என்ற இரண்டு எண்ணுப்பெயர் அடைகளைக் காணமுடிகிறது. இதனை மகாவித்துவான் அவர்களின் மொழிநடையில் காணலாகும் தனித்த கூறாகக் கருதலாம். அவற்றைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.

மேர்பூத்த புவியிற் பதித்தொரு முழந்தா ளிருத்தியோர்
முழந்தாளெடுத்......
(திருக்பெருமணநல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்)

.....பொலிந்தன வெனச் சொலுந் திருமுக மொராறும்
பொலன்செய்மணி முடியொராறும்
பாமேவு செங்கதி ரிராறுநிக ராமெனப் பகர்மணிக் குழையிராறும்
(திருத்துருத்திச் சுப்பிரமணிஸ்வாமி பதிகம்)

மகாவித்துவான் அவர்களின் படைப்பில் பயன்படுத்தப்பட்ட மொழியில் அவருடைய மரபு போற்றும் பழைமை ஈடுபாடு வெளிப்படுகின்றது. வழக்கிழந்த பல தமிழ்ச்சொற்களை வலிந்து பயன்படுத்தியுள்ளமையைக் காண முடிகின்றது. குறிப்பாக நென்னல் என்ற சொல் நேற்று என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இன்று என்ற ஒரு சொல் இல்லை என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இன்று என்ற சொல் இன்றைக்கு என்ற பொருளில் பெருவழக்கில் உள்ளது இங்குச் சிந்தித்தற்குரியது.

அணிமயிலைத் தெருவின்மல ரோமலரென் றுரைத்துநென்ன
லடைந்தே ணாங்கோர்
திணிபுயனோர் வந்தரும்பு தாவென்றா னின்றென்றேன்
செப்பி னாய்போய்
கனிபுனையு யிரண்டுண்டே யென்றானொன் றேனுமிலை
காட்டு கென்றேன்
மணிமுலைத்தொட் டிவையென்றான் யாரென்றேன் விநாயகமான்
மதியென் றாரே.

என்ற பாடல் இவ்வாறு வழக்கிழந்த சொற்களைப் பயன்படுத்துவதற்குச் சான்றாகின்றது.

மகாவித்துவான் அவர்கள் வாழ்ந்த காலத்தில் கவிதை மொழி மிகச்செறிவானதாக இருந்ததுடன் புலமைத் திறனை வெளிக்காட்டும் வகையில் மடக்கு யமகம் போன்ற அணிகளமையச் சொற்களைப் பெய்து பல்வேறு வகையில் பொருள் தருமாறு எழுதுவது புலமைக்கு அழகு என்ற கருத்து இருந்திருக்குமோ என்று ஐயுற வேண்டியுள்ளது. அதைப்போன்றே பாடல்களில் சிருங்காரச்சுவை மிகுந்து காணப்படுவதுங்கூட அன்றைய காலத்தின் கருத்து நிலையோ என்று கருத வேண்டியுள்ளது. மகாவித்துவான் அவர்களின் மாணவர்களாகிய உ.வே.சாமிநாதய்யர், வேதநாயகம்பிள்ளை போன்றவர்களிடம் காணப்படாத சிருங்காலச்சுவை இவரிடம் காணப்படுகின்றது. அத்தகைய சிருங்காரச் சுவையமைந்த பாடல்களைப் படைக்கும் போதே மொழியில் பொருண்மை மயக்கம் அமையும் வகையில் தொடர்களைப் பயன்படுத்திச் சொல் விளையாட்டு ஆடுகின்றமையை இவருடைய படைப்பில் அதிகம் காண முடிகின்றது. இவை எல்லாம் அவர் பாடிய தனிப்பாடல்களாகவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இடைச்சி என்ற சொல்லை இடைக்குலப் பெண் என்ற பொருளும் இடையை உடைய பெண் என்ற பொருளும் தரும் வகையில் பின்வரும் பாடலில் பயன்படுத்தி யுள்ளமையைக் காணலாம்.

நீடுபுகழ்த் திருமயிலை விநாயகமால் சத்திரமு னேற்றுச் சென்றே
நாடுமவ நெனைநோக்கிச் சிற்றிடைச்சி வருகவென்றா னான்மு னிந்து
கூடுமிதற் குண்டுகொலோ சான்றென்றேன் பாற்கலசங் கோட லாலே
பாடுபெறு மென்றானின் றேயென்றேன் மார்பிரண்டு பாரென் றானே.

இதனைப்போன்றே தனம் என்ற சொல்லைச் செல்வம் என்று பொருள் தரும் வகையும் பெண்களின் மார்பகம் என்று பொருள் தரும் வகையிலும் பெய்து எழுதுகின்றமையைப் பின்வரும் பாடலில் காணலாம்.

ஏர்மருவு வியாசநகர் விநாயகமான் மயிலையிலென் எதிரே வந்து
வார்மருவு தனந்தாவென் றானுனைப்போல் வள்ளலோ மன்னா
வென்றேன்
பார்மருவு சுவர்க்கந்தா வென்றானங் கபாலீசர் பாற்கே ளென்றே
னூர் மருவு நகையொடுமார் புறமிவைதா வெனத்தொட்டா னாணி
னேனே.

இருபொருள் தரும் வகையில் ஒரு சொல்லைப் பெய்து எழுதுவது போன்றே ஒன்றுக்குமேற்பட்ட சொற்களையுடைய தொடரையும் பிறமொழிச் சிலேடையாகப் பாடியுள்ளதையும் இவருடைய கவிதையில் காணலாகும் ஒரு மொழிக்கூறாகக் கருதலாம்.

மதியாதவன் என்ற தொடரை மதி ஆதவன் என்று உம்மைத்தொகை

யாகவும் மதியாதவன் என்று வினையாலணையும் பெயராகவும், மதியாதவன் என்பதுடன் சம் என்ற முன்னொட்டைச் சேர்த்துச் சம்மதியாதவன் என்ற பொருளிலும், மதியாதவன் என்ற சொல்லின் முன் தா என்ற முன்னொட்டைச் சேர்த்துத் தாமதியாதவன் என்றும் பொருள்கொள்ளும்படி பாடியிருப்பது இவர் மொழியைச் சிறப்புறக் கையாளும் திறனுக்குச் சான்றாகின்றது. இதனைப் பின்வரும் பாடலில் காணலாம்.

மதியா தவனென நீ யிருந் தாலிந்த மங்கையைவான்
மதியா தவனெனக் காய்வான் மதனுஞ்சும் மாவுறச்சம்
மதியா தவனெவன் செய்வா ளிதிலென் வருங்கொடை தா
மதியா தவன்புது வைச்சவ ராயலு மன்னவனே.

(சவராயலு நாயகர் மாலை)

இவையெல்லாம் ஒரு செயற்கையான மொழியாக்க மாயினும் இலக்கியச் சுவை கூட்டுவதாகக் கவிதைக்கு முருகியல் இன்பம் கூட்டுவதாக அமைந்துள்ளது.

தமக்கு ஒரு நாற்காலி வேண்டுமென்று தம் நண்பருக்கு எழுதிய பாடல் ஒன்றில் நாற்காலி என்ற சொல் ஒரு காரணப்பெயர் என்பதைக் கருத்திற்கொண்டு நாற்காலி என்பது நான்கு கால்களையுடையது என்றால் அப்பெயர் எவற்றை எல்லாம் குறிக்கும் என்றும் அவற்றுள் தாம் கேட்பது எது என்றும் நகைச்சுவை படப் பாடியுள்ள பாடல் பின்வருமாறு:

உறுவலியி னிடங்கொண்டு வனப்பமைந்த
   நாற்காலி யொன்று வேண்டும்
மறுவறுநாற் காலியெனல் யானையன்று
   குதிரையன்று வல்லே றன்று
கறுவகல்பாற் பசுவன்றால் இவையெல்லாம்
   இயங்குதல்செய் கடன்மேற் கொள்ளும்
பெறுபவர்பால் இயங்காது வைத்தவிடத்
   தேயிருக்கப் பெற்ற தாமே.

மகாவித்துவான் அவர்களின் படைப்பில் காணலாகும் திட்டப்பாங்காகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதியைப் பதிகம் என்றழைப்பது தமிழ் மரபு. இத்தகைய பதிகத்தில் இடம் பெறும் பத்துப் பாடல்களும் ஒரே யாப்பில் அமைப்பதும் அப்பதிகத்தில் உள்ள பாடல்கள் அனைத்தும் ஒரே மகுடத்தைக் கொண்டு முடிவதும் இவருடைய ஒரு திட்டப் பாங்காகும். இதற்குத் திருத்துருத்திக்கச்சி விநாயகர் பதிகம் முழுவதும் !கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்று முகனே!என்ற மகுடத்தைக் கொண்டு முடிவதைச் சான்றாகக் கூறலாம்.

யாப்பின் பொருட்டு சில வினைச்சொற்களின் காலமேற்ற வடிவங்களை மாற்றி எழுதுவதும் இவருடைய திட்டப்பாங்கில் ஒரு கூறாகும் இதற்குப் பின்வரும் வினைச்சொற்களின் மாற்று வடிவம் சான்றாகும்.

புரிகுவாய் புரிவாய்
பணிகுவாம் பணிவாம்
சொற்ற சொன்ன

தொகைச் சொற்களை அனைத்தையும் கூறாமல் முதல் சொல்லை மட்டும் கூறி ஆதி என்ற சொல்லை சேர்த்து எழுதும் முறை இவருடைய படைப்பு முழுமையும் காணலாகும் ஒரு திட்டப் பாங்காகும். ஆதி என்பதற்கு முதலியன என்பது பொருளாம். இதற்குப் பின்வருவன சான்றாம்.

காமாதி, சந்தாதி, நோக்காதி, மிடியாதி

பெண் தெய்வங்களைப் பாடும்பொழுதெல்லாம் அவற்றை அஃறிணைப் பொருளாக உருவகிப்பது என்னும் நிலைமாற்றம் இவருடைய படைப்பில் காணப்படும் மற்றுமொரு திட்டப்பாங்காகும். பின்வரும் தொடர்கள் இதற்குச் சான்றாகின்றன.

புண்ணியக்கொம்பை
பொலங்கொடியை
மலைமருந்தை
அருவடிவை
கோமளக் கிளிமொழியை
எழில் கனிந்த மட வெள்ளனப் பேட்டினை

இதுகாறும் கூறியவற்றால் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் படைப்புகளில் காணலாகும் நடையியற் கூறுகளிற் சிலவற்றைப் பதச்சோறாக உணர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

98. தலபுராணங்கள் சுயமரியாதை பேசுவன

த.கோ. பரமசிவம்
தஞ்சை

தென்பாரத பக்தியியக்கம் புதுமையானது, புரட்சியானது. ஒவ்வொரு உயிரிலும் கலந்து நின்ற ஆன்மாவைக் காதலித்து அதைப் போற்றி மதித்த இயக்கமாகவே அது விளங்கிற்று. "வாய்த்தது ஈதோர் பிறவி நத்தமக்கு மதித்திடுமின்" என்ற அடிப்படையில் அது வேரூன்றியது. பிறமதங்களும் கொள்கைளும் பிறவியை இழிவு செய்தன. இது ஈனப்பிறவி, பாவம் சுமந்தது என்றெல்லாம் அவை இழிவு படுத்தி நின்றபோது இங்கே தோன்றிய பக்தி இயக்கம் மட்டும் சற்று மாறுபட்ட நிலையில் சிந்திக்கத் தொடங்கியது. "உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன். ஆயின், இன்றோ செம்பொருளாம் இறைவன் தங்குகின்ற இடமே இவ்வுடம்புதான் என்றுணர்ந்தேன். உடம்பினுக்குள்ளே உறுபொருள் இருக்கும் இவ்வுண்மையால் உடம்பை யானிருந்து ஓம்புவேன்'' என்று பறைசாற்றியதோடு நில்லாமல் ஒன்றாலேயே இறைவனை அடைய முடியும் என்று உறுதிபடக் கூறியது.

பக்தி செய்வதற்கு ஆரவாரங்கள் தேவையில்லை. எல்லோரும், எல்லா இனத்தவரும், எல்லா மொழியினரும், எல்லா நாட்டினரும், எல்லாத் தொழிலிலனரும் வேறுபாடின்றி பக்தி செய்யமுடியும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆண்டவன் குடியிருக்கிறான். தேடிக் கண்டுகொண்டேன் என் உள்ளே தேடிக்கண்டு கொண்டேன், உன் தரிசனம் காண்பதற்கு மனிதப் பிறவியும் வேண்டுவதே, இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்றெல்லாம் இவ்வுடம்பை மதித்துப் போற்றுவதை அடிப்படையாகக் கொண்டதே பக்தியியக்கம் என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு ஆன்மாவிலும் இறைவன் கலந்து நிற்கிறான். எனவே அந்த இறைவன் தங்கி இருக்கும் ஆன்மா இருக்கும் வீடாகிய உடம்பு போற்றற்குரியது. இவ்வுடம் பின் வழியாகத்தான் பக்தி செய்து முத்தி பெறமுடியும். இவ்வுடம்பு பக்திக்கும் அதன்வழி முக்திக்கும் இன்றியமையாத சிறப்புடையது. ஆதலின் இவ்வுடம்பு அருமையும் பெருமையும் உடைத்தாக விளங்குகிறது என்றால் அது முற்றிலும் பொருந்துவதாகும்.

சுய மரியாதை எது?

கடவுள் மறுப்புக் கொள்கையைப் போலியாகப் பறைசாற்றுவதுதான்- இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் குற்றமே பெரிதுடைய மனிதர்களுக்கு அடிமைபோல் உழைத்து ஏமாறுவதைத்தான் இன்று சுயமரியாதை என்கிறோம். உண்மையில் சுயமரியாதை என்பது நம்மையே

மதிப்பதில்தான் உள்ளது என்பது எத்தனை பேருக்குப் புரிகிறது? நாம் உயர்ந்தவர்கள் நம்மிடம் உள்ள ஆன்மாவில் எல்லாம்வல்ல இறைவனே வந்து தங்கியிருக்கிறான், ஆதலின் நம்மைநாம் மதித்துப் போற்றி நம்மையே முதலில் காதலிக்கும் நம்பிக்கையில்தான் சுயமரியாதை இருக்கிறது. இவ்வுண்மை புரியாமல் மயங்கித் தம்மைக் காதலியாமல் குற்றமே பெரிதுடைய தலைவர்களைக் காதலித்து ஏமாறுகின்ற கூட்டத்தை என்னவென்பது? இந்த உண்மையைத்தான் பக்தியியக்கம் அடிப்படையாகப் பறைசாற்றியது.

நாம், நம் உடம்பு, நம் உள்ளம், நாம் வாழும் ஊர், நம்மிடம் உள்ள நீர்நிலை எல்லாம் புனிதமானவை. நாம் வாழ்கின்ற இம்மண் இறைவனே சுமந்த சிறப்புடையது, நான்முகனும், திருமாலும், நாம் அங்கே சென்று பிறக்க வில்லையே என்று ஏங்கும் புகழுடையது. எங்கேயோ இருக்கின்ற புனிதமான கங்கை உன் ஊரில் உள்ள நீர்நிலையினைத் தான் நாடி வருகிறது. கயிலையில் உள்ள இறைவன் உன் ஊர்க் கோயிலில் விரும்பி வாழ்கின்றான். என்றெல்லாம் எடுத்துக்கூறி வாழ்க்கையில் ஒரு பிடிப்பை, நம்பிக்கையை, தன்னம்பிக்கையை உருவாக்கி அதன்வழி பக்திப் பயிரை வளர்ப்பதில் பக்தியியக்கப் பாசுரங்கள் தலைநின்றன. ஊர்கள் தோறும் பாதயாத்திரை மேற்கொண்ட நாயன்மார்களும் ஆழ்வார்களும் மனித இனத்தின் தொழில் இன வேற்றுமையைக் கடிந்து வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் வாழ வகை செய்தனர் என்றால் அது மிகையாகாது. இச்சுயமரியாதைப் போக்கை நன்குணர்ந்த நம் வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தம் நூல்களில் குறிப்பாகத் தலபுராணங்களில் இவ்வுண்மையை வலியுறுத்தியிருப்பதைக் காணவே (திருத்துருத்தி புராணத்தைச் சான்றாகக் கொண்டு) இக் கட்டுரை முயல்கிறது.

தலபுராணங்கள்

புராணங்கள் என்பன பழைய வரலாற்றைப் பேசுவன, குறிப்பாக இறைவன், அருட்திறத்தைப் பேசுவன எனலாம். புராணங்கள் பொது, சிறப்பு என்ற இரு வகைகளில் அடங்குவனவாம். இறைவனுடைய பழைய வரலாற்றைக் கூறும் 18 புராணங்களைப் பொது எனவும், திருவுருவச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு ஆகியவற்றைச் சிறப்பிக்கும் புராணங்களைச் சிறப்பின எனவும் கூறலாம். தலபுராணங்கள் என்பன இவ்வகைச் சிறப்பினத்தில் காணப்படுவன. புராணங்களையும் வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளியவன், இறைவனே என்னும் கொள்கை பண்டுதொட்டுப் பயிலப் பெறுவதாகும்.

பங்கமில் பதினெட்டொடு நான்குக்கு உணர்வுமாய்
அங்கம் ஆறும் சொன்னாலும் ஐயாறுடைய ஐயனே
-திருநாவுக்கரசர்.

புராணங்கள் அனைத்தும் இறைவன் பொருள்சேர் புகழினைப் புலப்படுத்தவே தோன்றின என்றாலும் அதன் வழி மனித குல மேம்பாடு ஒன்றினையே நோக்காகக் கொண்டன என்றால் அது மிகையாகாது

தலபுராணங்கள் என்பன ஊர்ச்சிறப்பைப் பேசுவன, தலத்தின் பழைய வரலாற்றைச் சிறப்பித்துக் கூறுவன எனலாம். இவ்வூர் தோன்றிய வரலாறு இது. இங்கேயுள்ள மூர்த்தியும் கோயிலும் இவரால் நிறுவப்பெற்ற சிறப்புடையது. இக் குளத்தைத் தொட்டவர் இத்தகு புகழ்வாய்ந்தவர். இவ்வூரில் வாழ்ந்தும், இக்குளத்தில், இவ்வாற்றில் படிந்தும் இவரை வழிபட்டும் பேறு பெற்றோர் இன்னின்னார் எனப் பல வரலாற்றையும் சிறப்பித்துப் பேசுவதே இப்புராணங்களின் நோக்கம். சுருக்கமாகக் கூறவேண்டுமாயின் தலபுராணங்கள் ஊர் வரலாற்றைத் தருகின்றன என்பதை விட அவ்விடத்தின் மேன்மையைச் சிறப்பித்துக் கூறுவன என்றால் அது மிகையாகாது. "ஏலே, நீ இருக்கின்ற இந்த ஊர் சாதாரண ஊரல்ல, இந்திரனும் சந்திரனும் தேவர்களும் முனிவர்களும் வந்து தங்கித் தவம் செய்து தொழுது வரங்களும், வளங்கள் பலவும் பெற்ற சிறப்புடையது'' என்ற வாழ்க்கைச் சூழலில் ஒரு பிடிப்பையூட்டி, அவநம்பிக்கையைத் துரத்தி நம்பிக்கையை ஊட்டி இப்பிறவியைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டுவதே இவ்வகைப் புராணங்களின் பயனாகும்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினார்க்கு/வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்னும் தாயுமானவர் அமுதமொழிக்கேற்ப தலபுராணங்களைப் படித்து தலயாத்திரை மேற்கொள்வோர்க்கு அறியாமையை அகற்றும் குருவே வாய்க்கப் பெறுவார் எனில் வேறென்ன சிறப்பு வேண்டும்? இதுதான் தலபுராணங்களின் பயன். ஒவ்வொரு சமயத்தார்க்கும் தலயாத்திரை என்பது மனிதநேய மாண்பினை உணர்த்துவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டது என்பர். ஆன்மநேயம் அதன் வழி மனிதநேயம், எவ்வுயிர்க்கும் இரங்கும் அருள்நேயம் பின் பக்திநேயம் முக்திநேயம் எனப்படிநிலைகளை வளர்ப்பன இத்தலயாத்திரைகள், இதனை நன்குணர்ந்த காரணத்தாலேயே நம் பிள்ளையவர்கள் தலபுராணங்கள் பலவற்றைப் பாடிச் சிறப்பித்தார்கள்.

திருமுறைகளே தலபுராணங்களின் முன்னோடி

இறைவன் புகழைக் கேட்பதே செவியின் பயன், இறைவன் பொருள்சேர் புகழைப் பாடுவதே வாயின் பயன். இறைவன் புகழைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்பது திருமுறைகளின் பண்பு. இளங்கோ அடிகளும் இறைவனைக் காணாத கண்ணும் கேளாத செவியும் பாடாத வாயும் என்னே என்னே என்று வியக்கிறார். புராணங்களைக் கேட்பதும் படிப்பதும் உணர்வதும் பக்தியின் பாற்பட்டதாகும். இதனைத் திருமுறைப் பாசுரங்கள் பல பட விதந்து பேசுதல் உணரலாம்.

செவிகாள் கேண்மின்களோ- சிவன் எம்மிறை
செம்பவள எரிபோல் மேனிப் பிரான்திறம்
எப்போதும் செவிகாள் கேண்மின்களோ -அப்பர்.

தலங்கள்தோறும் யாத்திரை மேற்கொண்ட நம் நாயன்மார்கள் இறைவன் பொருள்சேர் புகழைப் பக்திப் பரவசத்தால் பாடித்துதித்தனர்.

அத்துதிப்பாடல்கள் வழியாக அவர்கள் பல்வேறு புராணங்களையும் சுட்டிச் சென்றுள்ளனர். பதினெண்புராணங்களுடன் சிறப்புவகை புராணங்கள், ஆறு அங்கங்கள், வேதங்கள், இதிகாச, நாயனார், வரலாறுகள், தலவரலாறுகள், தீர்த்தச் சிறப்புகள் எனப் பலவற்றையும் அவர்தம் பாடல்கள் வழி அறியலாம். சுயமரியாதை உணர்வுக்கு இவை இன்றியமையாக் குறிப்புகளாகக் காணப்படுகிறன.

பொதுவகையில் சிவபெருமான் கங்கை தரித்தது. யானை உரித்தது, அவனது அடிமுடியைத் தேடியது, முப்புரம் எரித்தது, காமனைக் காய்ந்தது, பிரமன் சிரம் கொய்தது, மாதொரு பாகனாய் வந்தது, காலனைக் காய்ந்தது போன்ற வரலாறுகள் ஆங்காங்கே பேசப்படுகின்றன.

சிறப்பு வகையில் தலபுராணங்களுக்கு முன்னோடியாகத் திகழ்வதுபோல அந்தந்த ஊர்ப்பாசுரங்களில் அந்தந்த ஊர் வரலாற்றை இணைத்தும் பாடியுள்ளனர்.

ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த - ஞானசம்பந்தர்

(சீர்காழியில் பிரமன் பூசித்தது)

சுடப் பொடிந்து உடம்பிழந்து அநங்கனாய மன்மதன்
இடர்படக் கடந்தடந் துருத்தியாக எண்ணினாய் - சம்பந்தர்

(திருத்துருத்தியில் காமன் துயர் தீர்த்தது)

கரிதரு காலனைச் சாடினானுங் கடவூர் தனுள்
(கடவூரில் காலனைக் காய்ந்தது)

மாலாயிரங்கொண்டு மலர்க்கண்ணிட ஆழி
ஏலார் வலயத்தொடு ஈந்தான்.......வீழிமிழலையே
(திருவீழிமிழலையில் திருமாலுக்கு அருள் செய்தது)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
(அண்ணாமலையில் மாதொரு பாகனாகியது)

பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தியானை - அப்பர்.

(திருத்துருத்தி பெயர்க்காரணம்)

தேடிமால் செய்த கோயில் திருஇராமேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமே - அப்பர்.

கடலிடை மலைகள் தம்மால் அடைத்து மால் கருமம் முற்றித்
திடலிடைச் செய்த கோயில் திரு இராமேச்சுரத்தை - அப்பர்

(இராமன் செய்த இராமேஸ்வரம் வரலாறு)

சந்திரனொடு சூரியர் தாமுடன்
வந்துசிர் வழிபாடுகள் செய்தபின்

ஐந்தலை அரவின்பணி கொண்டருள்
மைந்தர் போல் மணி நாகேச்சரவரே - அப்பர்.

(ஐந்தலை நாகம் தொழுத நாகேஸ்வரம்)

மந்திரமும் தந்திரமும் ஆகித்திராநோய் தீர்த்தருள வல்லான்

(வைத்தீஸ்வரன் கோயில் மருந்துமாயவர் வரலாறு)

சாமியோடு சரச்சுவதியவள்
கோமியும் உறையும் குடமுக்கிலே - அப்பர்.

சுங்கை யாளவள் கன்னி எனப்படும்
கொங்கையாள் உறையும் குடமுக்கிலே.

கோதாவரி உறையும் குடமுக்கிலே -அப்பர்

(குடந்தைமகாமகக் குளத்தில் 7 நதிகளும் வரும் வரலாறு)

இவ்வாறு திருமுறைகளில் காணப்பெறும் இவ்வகைப் புராணச் செய்திகளை மூலமாகக் கொண்டே தல புராணங்கள் தனிப்பட்ட நிலையில் உருவாயின போலும். இவற்றுள் உள்ளூர்ச் செய்திகள், செவிவழிச்செய்திகள், பயணக்குறிப்பு, கல்வெட்டுகள், அடியார் வரலாறுகள், சிற்பங்கள், சிலைகள், தலவிருட்சங்கள் எனப்பலவும் இணைக்கப்பட்ட நிலையில் தலபுராணங்கள் பெருகிவளர்ந்தன எனலாம். திருமுறைகளில் ஆழங்கால்பட்டு ஊன்றித் திளைத்த பிள்ளையவர்களுக்கு இச்சிறப்பு நிலை புராணச் செய்திகளே தலபுராணங்கள் எழுத அடிகோலின என்றால் அது மிகையாகாது.

திருத்துருத்திப் புராணம்

பிள்ளையவர்கள் பல்வேறுபட்ட தமிழ்நூல்களை இயற்றினார்கள். சிற்றிலக்கியங்களாகவும் பேரிலக்கியங்களாகவும் அவர்கள் படைத்த நூல்களில் எல்லாம் தமிழும் தமிழினமும் மேன்மைபெறும் செய்திகள் மண்டிக் கிடக்கின்றன. சுயமரியாதை ஒன்றுதான் மனித குலத்தை உயர்த்தும் என்பதை உணர்ந்த நம் பிள்ளையவர்கள் அதனை வலியுறுத்தவே தலபுராணங்கள் பலவற்றைப் பாடியருளினார்கள். அவர்கள் வடமொழி நூல்களினின்று தமிழாக்கம் செய்து பாடிய புராணங்கள் சில, செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்டவற்றை முதன்முதலாகத் தமிழிலே செய்தளித்த புராணங்கள் சில, திருத்துருத்திப் புராணம் என்பது பிள்ளையவர்கள் செய்த தலபுராணங்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க புராணமாகும். இதனை வடமொழியினின்றே பெயர்த்து துருத்தியெம்மான் மான்மியம் எனத் தமிழில் பாடியதாகப் பாயிரம் கூறுகிறது.

துருத்தி என்பது ஆற்றிடைக் குறையாகும். உமையம்மையார் பரதமாமுனிவர்தம் மகளாகப் பிறந்து காவிரியாற்றிடையே இறைவனுருவை நிறுவி வழிபட்டமையால் அவ்விடம் திருத்துருத்தி

எனப்பட்டது. அவ்வூர் இன்று குத்தாலம் என வழங்கப்பெறுகிறது. தஞ்சை மாவட்டத்தில் (காவிரியின் தென்கரையில்)ஓர் ஊராகத் திகழும் குத்தாலம் அவ்விடத்தின் கோயில் மரமாகிய உத்தாலம் என்னும் பெயரால் குத்தாலம் என வழங்கப்பெறுகிறது. இறைவன் பெயர் சொன்னவாறறிவார் எனவும் இறைவி அரும்பன்ன வனமுலையாள் எனவும் அழைக்கப்பெறுகின்றன. நால்வரும் பாடிப் பரவிய சிறப்புடைய பாடல் பெற்ற தலமாக இது பெருமைபெற்றது. அகத்தியர், சுந்தரர், பட்டினத்தார் போன்றோருடன் சந்திரன், காமன், இந்திரன், பிரமன், சூரியன், அக்கினி, திருமால் போன்ற தேவர்களும் இவ்வூர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இந்நூல் கடவுள் வாழ்த்து, பாயிரம், நாட்டுப்படலம் முதலாக அகத்தியர் பூசனைப்படலம், அக்கினி லிங்கப் படலம், அம்பிகைப்பூசைப்படலம், கோமுத்திப் படலம், சுந்தரதீர்த்தப்படலம், திருத்துருத்திப் படலம், திருமணப்படலம் எனச் சிறப்புப் படலங்களுடன் நாற்பது படலங்களைக் கொண்டதாகும். கடவுள் வாழ்த்து உட்பட மொத்த விருத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1627. நல்ல தமிழில் அமைந்த நடையழகும் உவமை நயங்களும் பயின்று இன்புறும் தரத்தனவாய் அமைந்துள்ளன. இந்நூல் தருமையாதீனம் திருவளர்திரு சண்முகதேசிக மகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் சிங்காரவேற்பிள்ளையவர்களால் குறிப்பு வரையப்பெற்று சி. பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் உதவியால் 1933 ஆம் ஆண்டு முதன்முதலாக அச்சிடப் பெற்று வெளியிடப் பெற்றதாம்.

நாடும் காவிரியும் உயர்ந்தன

திருத்துருத்தித் தலத்தை அறிமுகம் செய்யுமுன் நம் பிள்ளையவர்கள் அவ்வூரின் சூழலை நாட்டுவளம், நகர்வளம், வழியாக ஆற்றுவளத்தையும் சிறப்புநிலையில் போற்றுகின்றார். "நம்பி நீ இருக்கும் ஊர்மட்டுமல்ல உன்னைச் சார்ந்த நாடும் உன்னருகே ஓடும் நதியும் எவ்வளவு சிறப்புடையன தெரியுமா? என வியக்க வைக்கிறார்.

பூதலம் ஒன்றைமற்றை யிருதலம் போற்ற நாவற்
காதலம் தீவை மற்றைத் தீவெலாங் கசிந்து போற்ற
வாதலங் கமையீர் ஒன்பான் பாடைகள் அனைத்தும் கூடி
ஓதஅன் பமைந்த தெய்வத் தமிழினை உவந்து போற்ற

தேயங்கள் பலவும் சோழ தேயத்தைப் புகழ்ந்து போற்ற
நேயங்கொள் கங்கை யாதி நிகழ்தரு நதிகள் எல்லாம்
மீயங்கொள் பொன்னி யாற்றை விருப்பொடு புகழ்ந்து போற்ற.

- அம்பிகை திருஅவதாரப் படலம் 8,9

மூன்று உலகங்களிலும் இம்மண்ணுலகே பிறரால் போற்றத்தக்கது. இம்மண்ணுலகிலும் பாரதபூமியே பிறபகுதிகளால் பாராட்டப்படுவது இங்கே பேசப்பெறும் மொழிகள் எல்லாம் தெய்வத்தமிழையே மிகுத்துப் பேசுகின்றன. இங்கே அமைந்துள்ள நாடுகளில் எல்லாம் சோழ நாடே புகழ்ந்து போற்றப்படுகிறது. இப்பூமியில் ஓடும் கங்கை முதலான

நதிகளையெல்லாம் பொன்னியாறாம் காவிரியையே விருப்பத்துடன் கொண்டாடுகின்றன

திராவிட நாடுமுற்றும் சிறந்தன அவற்றினுள்ளும்
தராதலம் புகழ் காவேரித் தண்புனல் நாடுமேலாம்
அராவணி எமக்கு மிக்க விருப்பமுண்டு அந்த நாடே
- (நிரஞ்சனன் புவி வருபடலம். 6)

எனச் சிவபெருமானே மகிழ்ந்து போற்றும் நாடாக இதுவிளங்குகிறது. மேலும் சோழ நாட்டில் பல தலங்களும் ஆங்காங்கே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வளவு சிறப்பு வாய்ந்த சூழலில்தான் திருத்துருத்தி நகர் உள்ளது.

இவ்வாறே காவிரியும் நாடும் ஆங்காங்கே விதந்து போற்றப்பட்டுள்ளன. இந்திரலோகத்து கற்பக வனமும் நாணும் வளம் கொண்டது துருத்தி நகர்.

திரைஎறி கங்கையாற்றிற் சிறந்த காவிரி என்றோதும்
உரைகெழு நதி ஒன்றும்ம உறுபல நதியாய் மல்கும்
கரையறும் வளஞ்சால் தெய்வக் கற்பகப் பொழிலு நாணப்
புரைதவிர் பொழில்கள் பல்ல பொருந்துவ எங்கும் ஆங்கே
- கோவிற்குப் பயிலிடம் கூறிய படலம். 6

மண்ணவரும் விண்ணவரும் போற்றும் திருத்துருத்தி

பாரெலாம் போற்றும் திருத்துருத்திநகர் இறைவனின் உறைவிடங்களில் தலை சிறந்ததாகும். இவ்வூரில் அமைந்த இறைவன் திருமேனி அம்பிகை பூசித்த சிறப்புடையதாகும். கங்கை முதலாய புண்ணிய நதிகள் எல்லாம் போற்றிவழிபடும் காவிரியின் நடுவுள் அமைந்த திருக்கோயிலும் அதைச்சுற்றியுள்ள இடங்களும் விண்ணவராலும் பணிந்து வழிபடப் பெற்ற சிறப்புடையதாகும். அம்பிகை பசு உருவாக வந்து கோழம்பம், திருவாவடுதுறை, தேரேழுந்தூர், வெண்காடு, ஆலங்காடு, திருத்துருத்தி முதலிய இடங்களில் பயின்று பரத மாமுனிவரின் மகாளாய்ப்பிறந்து வழிபட்டு இறைவனையே மணந்து பேறு பெற்ற சிறப்புடையதாகும். பிரமன், இந்திரன், திருமால், சந்திரன், சூரியன், அக்கினி சனற்குமாரர், காமன், சோழன், அகத்தியர் எனப்பலரும் இங்கே வந்து தங்கி வழிபட்டுப் பேறுபெற்றனர். ஆதலின் இத்தலம் சிறப்புடையதாக விதந்து ஓதப் பெறுகிறது.

திருநாவுக்கரசர் ஊர்ப்பெயர்களைச் சொன்னாலே கூட முக்தி கிடைக்கும் என்பார்.

பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாப் புலாத்துருத்தி போக்கலாமே

இவ்வழியிலேயே திருத்துருத்தி பெயரைச் சொன்னால்கூட நலம் தரும் என்கிறார் பிள்ளையவர்கள்.

துருத்தின் றொருகாற் சொல்வோர் தூய நம்உலகஞ்சேர்வார்
துருத்தியைக் காணப்பெற்றார் தூயநம் சமீபத் தேய்வார்
துருத்தியை யுள்ளத் துள்வோர் துலங்கும்நம் உருவங் கொள்வர்
துருத்தியுள் வசிப்போரேல்லாம் துணிந்து நம்மொடு கலப்பார்
- திருத்துருத்திப்படலம். 20

அத்தலங் கண்ணுற்றாலும் அன்புகொள வசித்தாலும்
மித்தமலமந் தறஞானம் பெற்றுயவர் ஐயமில்லை.
முத்தலமும் புகழ்குறியின் முறைபூசித் தினிதேத்தின்
கைத்தல ஆமலகமெனக் கருதியவை அனைத்துமுறும்
.... நோய்தீர்ந்தபடலம் 17.

படித்தாலும் பக்கநின்று கேட்டாலும் தொட்டாலும் கண்டாலும் கண்டாரைக் கண்டாலும் அத்தனைக்கும் தித்திக்கும் இறைவன் புகழ்போல், திருத்துருத்தியை நினைத்தாலும் சொன்னாலும், பயின்றாலும், கண்டாலும் முத்தியின் வகையெலாம் கிடைக்குமாம்!நம்பிக்கையின் உச்சநிலைக்கே கொண்டு செல்கிறார் பிள்ளைவர்கள்.

மேலும்,

நல்லகுணம் பொலி சிடர்காண் மெய்ஞ்ஞானந் தருதலம்
புல்லவருந் தவமாற்றுவார் அப்பொற்றலம் போலில்லை எத்தலத்தும்
-அகத். பூசைப்படலம். 6

பேசருங் காசி வைப்பின் அதிகமாய்ப் பிறங்கும்தானம்
நேசவன் துருத்தி ஒன்றே - மார்க்கண்டேசப்படலம். 5

விரதமாதவர் மேவுந் துருத்தி................
உத்தம தலங்கள் உள்ளும் உத்தமமாம் துருத்தி
-கதிரன் பூசைப்படலம்.

மறையெலாம் எடுத்தியம்பு மாத்தலம்
குறைவிலா விளங்குளிர் துருத்தியே
இறைவன் இங்ஙன மேத்தி னோர்க்கெலாம்
நிறையும் பேரருள் நிமிட நல்குவான்
- வருணலிங்கப் படலம் 3

துருத்தியின் சிறப்புகளை இவ்வாறு பலபடப் பாராட்டிப் பேசுகின்றார் நம் பிள்ளையவர்கள். தலங்களின்மீதும், அத்தலத்து உறையும் இறைவன் மீதும் பிள்ளையவர்கள் உண்டாக்கும் நம்பிக்கைக்கு எல்லையே இல்லை. திருமாற்பேறு இறைவன் மாத்திரை நேரத்தில் அருள்செய்வான் என்று அப்பர் பாடுவது போலவே திருத்துருத்தி நாயகர் நிமிடத்தில் நிறைவான அருளை வாரி வழங்குவார் என்கிறார் நம் பிள்ளையவர்கள்.

காசியை விட உயர்ந்த தலம்

கங்கையிலும் புனிதமான காவிரி பாய்கின்ற சிறப்புடன், கங்கைக்

கரையில் திகழும் புண்ணிய பூமியாம் காசியுடன் ஒப்பிட்டு இத்தலத்தைப் புகழ்கின்றார் பிள்ளையவர்கள். ஒரு கட்டத்தில் இந்நகர் காசியினும் உயர்ந்தது என்று மார்தட்டி மகிழ்கின்றார். காசியை வழிபட யாத்திரை சென்ற அந்தணன் இடையிலே தடையுண்டு மீண்டுவந்து திருத்துருத்தி நாதரையே வழிபட்டுப் பேறுபெற்ற வரலாற்றை விரிவாகக் காட்டுகின்றார். பேசருங்காசி வைப்பின் அதிகமாய்ப் பிறங்கும் தானம் துருத்தியே என்று பேசுகின்றார்.

கங்கையின் விசேடமாகிக் காவிரித் தென்பால் நின்றும்
பொங்கியோர் வடபாலேகும் பொலிந்துநந் திருமுன்னதாகத்
துங்க அந் நதிக்கு - (விசுவநாதப்படலம்.41)

அளிமிகுந் துருத்தித் தானத்து அதிகம் எவ்விடத்தும் இல்லை
களிசெயுங் காசி வைப்பிற் கலக்குமோர் வேட்கைபூண்டாய்
தெளிசெயும் உத்தாலஞ் சார் தெய்வமாத் தலத்தின் மேன்மை
வெளிசெயும் பொருட்டே இந்த விளையாடல் செய்தோம்.
-(விசுவநாதப்படலம்:39)

என்று சிவபெருமானே காசியை விட இத்தலம் உயர்ந்தது எனச் சான்றளிக்கின்றார். மேலும் அவர், காசியில் கூடநாம் சிலகாலம் நீங்கி இருந்தோம். ஆனால் திருத்துருத்தியில் எப்போதும் இருக்கின்றோம். ஆதலின் இதுவே உயர்ந்த தலம், என்று உயர்த்தியும் வேறு படுத்தியும் கூறுகின்றாராம்.

நிறைவளக் காசி வைப்பை நீங்கியும் இருந்தோம்
அறைபுகழ்த் துருத்திவைப்பை அகன்றொரு கணமும் வைகேம்,
- விசுவநாதப்படலம். 40

காசியில் இறக்க முத்தி என்பர். திருத்துருத்தியிலும் அத்தகு சிறப்பு கிடைக்கும் என்கிறார் நம் பிள்ளையவர்கள்.

முழுஞாலத் தெவரேனும் முடிவுநாள் வரலுணர்ந்து
வழுவா இத் தலம்புகுந்து மரணமடைகு வரென்னில்
மிக்க தவமுயன்றோரு மேவருநம் தாளடைவர்
நக்க மகத்துவ தலம் மற்றிது போலு நாடரிது.
- (அக்கினி லிங்கப்படலம் 25, 26).

ஒன்றினும் ஒன்று உயர்ந்தது, சிறந்தது எனும் போக்கில் இத்துருத்தி நகரின் சிறப்பைப் பிள்ளையவர்கள் வியந்தோதும் முறையை எண்ணி எண்ணி வியக்கலாம். நாம் வாழும் ஊரின் பெருமையைச் சுயமரியாதைப் போக்கில் எவ்வாறெல்லாம் சிறப்புக்கின்றார்?

அவனியின் மாந்தர் பூசையாற்றிய தலங்களுள்ளுந்
திவண்முடியரசர் பூசைசெய்தலம் விசேடமாகும்
உவமையில் அவற்றினுள்ளும் உத்தம விசேடமாகும்
தவமிகு முனிவர் பல்லோர் தாழ்ந்து பூசித்த தானம்

அத்தகு தலங்களுள்ளும் அரக்கர் பூசித்த தானம்
உத்தமம் அவற்றினுள்ளும் அவுணர் பூசித்த தோரில்
வித்தக விசேடம் அந்தத் தலத்துளும் விசேடமாகும்
சுத்தமிக் குயர்வானாடர் தொழுது பூசித்ததானம்

-மார்க்கண்டேசப்படலம். 6, 10

இப்படியே இந்திரன், பூசித்தது, அதனினும் பிரமன் பூசித்தது, அதனினும் திருமால் பூசித்தது, கணங்கள் பூசித்தது, குமரன் பூசித்தது, பிள்ளையார் பூசித்தது, சிறந்ததாம். இவற்றையெல்லாவற்றையும் விட ஆயிரம் மடங்கு உயர்ந்தன அம்பிகை பூசித்த தலங்கள். அவற்றுள்ளும் திருத்துருதியே சிறந்தது என்று முடிமணியாகக் காட்டி மகிழ்கின்றார்.

இத்தலம் கருதியவற்றையெல்லாம் வழங்கும் சிறப்புடையது. இந்திரன் சயந்தனைப் பெறவும், படைப்புக் கடவுளாம் பிரமன் பிள்ளைகளைப் பெறவும், அதிதி முப்பது முக்கோடி தேவர்களைப் பெறவும் இங்கே வந்து வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறுகின்றார்.

மரைமலர்க் கிழவன் முன்னோர் கற்பத்தின் வந்துமூழ்கிப்
புரைதபு குணஞ்சால் ஒர்பான் புத்திரர் பெற்று வாழ்ந்தான்

-திருவாலங்காட்டுப் படலம். . . . 7

தொழுகுலத்து உதித்த மேன்மைத் தூமொழி அதிதி என்பாள்
முழுகினள் ஒருமுப்பது முக்கோடி சுரரைப் பெற்றாள். . . .8

இவ்வளவு மேன்மைமிகு சிறப்புகளைச் சொன்ன பிறகும் நிறைவு கொள்ளாத நம் பிள்ளையவர்கள் திருத்துருத்தியின் பெருமைமிகு வரலாறுகளை எல்லாம் யாரால் முழுவதுமாக உரைக்க முடியும் என்று வியக்கின்றார்.

அருள்நிரம்பும் இவ் அற்புதத் தலத்து
அருமை யாவரே யறைய வல்லார்?

- வருணலிங்கப் படலம்.4.

சுயமரியாதையின் முடிமணியாக இக்கூற்று அமைதல் காணலாம்.

இவ்வாறு தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் பிள்ளையவர்கள் நம் சூழலை நம் ஊரை, நம் நதியை, நம் இறைவனைச் சிறப்பித்துப் பாடி நம்மைத் தலைநிமிரச் செய்து தன்னம்பிக்கையில் திளைக்க வைத்துள்ளார் எனில் அது மிகையாகாது. அதனால்தான் அவர்தம் சிறப்பை நமச்சிவாய முதலியார்,

வானாட்சி தரும்புலவர் இமையாது விழிதிறந்து வனப்பு நோக்கித்
தேனாட்சி தருங்கவிகள்பற்பலவா யிரமாகச் செய்து தந்த
கோனாட்சி தரும் புலவர் நாயகமாய் இலகி என்றுங் குன்றாச் சீர்த்தி
மீனாட்சி சுந்தரனாம் புலவர்மணி மாட்சியிவண் விளம்பற் பாற்றோ.

என்று வியக்கின்றார். வாழ்க தலபுராணங்கள். வளர்க நம் சுயமரியாதை.

99. பிள்ளையவர்களின் பிள்ளைத் தமிழ்

த. பூமிநாகநாதன்
சென்னை

செந்தமிழின் சீரிளமைத் திறத்தைக் காக்கக் காலங்காலமாகச் செந்நாப்புலவர்களும், சொல்லேர் உழவர்களும் தோன்றி வந்துள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் அப்படித் தோன்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர். முறையே வள்ளல் இராமலிங்க அடிகள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மற்றும் சிவநேயச் செல்வர் ஆறுமுகநாவலர். இவர்களில் பிள்ளையவர்கள் ஆசானாக இருந்து மாணவர்களை நெறிப்படுத்தியும், படைப்பாளனாக விளங்கிப் பைந்தமிழ்ப் பயிர் வளர்த்தும் தமிழ்த் தொண்டு செய்தவர். 19ஆம் நூற்றாண்டுக் காலச் சூழலுக்கேற்பத் தமிழையும், தமிழ்ச் சமயமான சைவநெறியையும் பேணிக்காப்பதில் கருத்துள்ளம் கொண்டு, மாற்றர் தூசுகள் துகளாறும் படியாக வாழ்ந்து காட்டிய செம்மல்.

இவரை, 19ஆம் நூற்றாண்டின் கம்பன், தமிழ்க் காளிதாசன், நிமிடகவி, புராணம் பாடும் புலவன், தமிழைக் காத்த பெருமான், புலவர் முதல்வன், கவிக்கார்மேகன், செந்தமிழ்க் குருநாதன், சிவநெறிச் செல்வன், விற்பன சிகாமணி, மெய்ஞான பானு என பலவாறாக இவர் காலத்துப் புலவர்கள் போற்றியதாக உ.வே.சா குறிப்பிடுகிறார்.

சைவம் தழைக்கப்பாடுபட்ட மூவர் முதலிகளைச் சேக்கிழார் உச்சி மேற்கொண்டு தொழுது சிவநெறி பரவப் பாடியது போன்று. அவ்வழி பின்பற்றிப் பிள்ளையவர்கள் இக்காலகட்டத்தில் இறைநேயத்தோடு தமிழ் மணமும் கமழப் பற்பல பனுவல்கள் செய்தார்.

சிற்றிலக்கியம் என்னும் 96 வகை மலைமுகடுகளில் இவர் எத்தனையோ கொடுமுடிகளைத் தொட்டவர். அந்தாதி, கலம்பகம், உலா கோவை, குறவஞ்சி, சரித்திரம், பதிகம், பிள்ளைத்தமிழ் எனச் சொல்லிக் கொண்டே போகலாம். ஈண்டுப் பிள்ளையவர்கள் படைத்த பிள்ளைத்தமிழ் நூல்கள் பற்றிய சிறப்புகளைத் தொகுத்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பிள்ளையவர்கள் ஆசானாகத் தன்னை உருவாக்கிக் கொண்ட பின், தன் ஞானத்தால் மாணவர்களை உருவாக்கியதோடு அல்லாது அம்மாணவர்களையே தனது உரைகல்லாகக் கொண்டு தனது படைப்பாற்றலைப் பெருக்கிக் கொண்டார் என்றால் மிகையாகாது.

பாடுபொருள்

பொதுவாகப் புலவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்பப் பாடுபொருளைத் தேர்ந்து எடுத்துக் கொள்வர். ஒரு சில படைப்பாளிகளே தங்களுக்கென உரிய கோட்பாட்டின் பொருண்மைக்கேற்பப் பாடுபொருளை அமைத்துக்

கொள்வர். முன்னவர் எதையும் பாடுவர். பின்னவர் அவ்வாறு செய்யார். மகாவித்துவான் அவர்கள் நிமிடகவி என்றாலும் தான் ஏற்றுக் கொண்ட பொருண்மையை விட்டு விலகிப் பாடியதில்லை எனத் துணிந்து கூறலாம். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபிரானின் சீலம் வெளிப்படும் படியாகவும், மூவா முதலியாகிய அம்பிகையின் அருளிச் செயலைச் சொல்லும்படியாகவும் அவ்வகையில் இறைநேயத்தை வளர்ப்பதுமாகிய கோட்பாட்டின் அடிப்படையில்தான் இவரது பாடைப்புகள் அத்தனையுமே நடைபயில்கின்றன. இவரது எண்பது படைப்புகளுமே சைவசமய நெறியை உலகிற்குச் சொல்லுவதோடு இனியதமிழின் வளமையையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

வடிவச் சிறப்பு

உலா, புராணம், கலம்பகம் என்ற சிற்றிலக்கிய வடிவங்களில் பலவற்றைப் பிள்ளையவர்கள் கையாண்டு இருந்தாலும், பிள்ளைத்தமிழ் வடிவம் அவற்றிலெல்லாம் முற்றிலும் மாறுபட்டு, சிறப்புற்று விளங்கும் ஒரு வடிவம் ஆகும். பாட்டுடைத் தலைவனாக படைக்கப்படும் பாத்திரம் அவ்விலக்கிய வடிவத்திற்கு ஏற்பத் தனது மனநிலையை வெளிப்படுத்தும் படியாகப் புலவர்கள் புனைத்துரைப்பர். உலா, கலம்பகம், தூது, போன்ற இலக்கியங்களில் பவனிவரும் பாட்டுடைத்தலைவர் காமம், வெகுளி, வீரம் எனப் பலவகையான பண்புகள் வெளிப்படும்படியாக அமைப்பது புலவர் மரபு. ஆனால் பிள்ளைத் தமிழில் பாட்டுடைத் தலைவனாக விளங்கும் தலைவனின் பண்புகளில் காமத்திற்கு இடமே இல்லை. வெகுளி, அச்சம் போன்ற தவிர்க்க வேண்டிய பண்புகள் இத்தலைவனிடம் காணப்படுவதில்லை. பிள்ளைத்தமிழ் இலக்கியம் தனது முதன்மைப் பாத்திரத்தின் சிறப்புகளைச் சொல்லத் துணியும் போது இறைநேயம், ஒழுக்கம், தமிழ்ப்பற்று, அன்பின் அரவணைப்பு, ஆற்றலின் வெளிப்பாடு என இவை போன்ற கூறுகளை உள்ளடக்கியதாகவே அமையும். மழலைப் பருவத்துப் பாட்டுடைத் தலைவன் என்பதால் பிள்ளைத்தமிழ்க் கவிதை சிற்றின்ப விளையாட்டுகள் பற்றிப் பேசுவதில்லை. இவை எல்லாவற்றையும் விடப் பிள்ளைத்தமிழ் படைக்க விரும்பும் படைப்பாசிரியன் தன்னைத் தாய்மை நிலையில் நிறுத்திக் கொண்டு படைக்கும் பாத்திரச் சேய்மை நோக்கோடு பார்ப்பதால் தாய்சேய் உறவே அடிப்படையில் விஞ்சி நிற்கும்.

பத்துப் பருவங்களுக்கு இடையே உள்ள அம்புலிப் பருவத்தில் சாம பேத, தான, தண்டம் என்ற உத்தியைக் காட்டும் பிள்ளைத்தமிழ்க்கவிஞன் ஞானம் கேட்பதும் தால, முத்த, செங்கீரை, சப்பாணி போன்ற பருவங்களின் வழியாக தாய்மையை வெளிப்படுத்தி அன்பின் பெருக்கை வெளிக்காட்டுவதும் என இருநிலைகளில் நின்று பிள்ளைத்தமிழ்ப் புலவர்கள் இறைநேயத்தை வளர்ப்பர்.

மகாவித்துவான் அவர்கள் பேரின்பப்பேற்றை அருளும் சேயாக இறைவனை எண்ணியதாலேயே தன்னைத் தாயாக்கிக் கொண்டு பத்துப்

பிள்ளைத்தமிழ் நூல்களைப் படைத்தார். அவை முறையே 1. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், 2. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், 3. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ், 4. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், 5. பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ், 6. பிரம்ம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ், 7. பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ், 8. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், 9. அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், 10. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பனவாகும்.

இவற்றில் பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழும், பிரம்ம வித்தியா நாயகி பிள்ளைத்தமிழும் ஐயரவர்கள் காலத்திலேயே மறைந்து போய்விட்டதாகக் குறிப்பிடுகிறார். எஞ்சிய நூல்கள் ஐயரவர்கள் முயற்சியால் நூல் வடிவாகியுள்ளன. மேலும் இவர் இயற்றிய இந்நூல்களில் ஏழு நூல்கள் பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களாகவும், மூன்று நூல்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களாகவும் அமைந்தவை. சேக்கிழார் மற்றும் அம்பலவாண தேசிகர் ஆகியோர் மானுட நிலையில் பாட்டுடைத் தலைவர்களாகவும், திருவிடைக்கழி என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் இறைநிலையில் பாட்டுடைத் தலைவனாகவும் இருந்து மேற்சொன்ன அம்மூன்று ஆண்பால் பிள்ளைத்தமிழ் நூல்களை அழகு செய்கின்றனர். அகிலாண்ட நாயகி, காந்திமதி, பிரம்ம விந்தியா நாயகி, பெருந்திருப்பிராட்டி, மங்களாம்பிகை, பாகம்பிரியாள், திருவெண்ணீற்றுமை ஆகிய எழுவரும் சோழ நந்நாட்டில் எழுந்தருளிய இறைவியராவர்.

பிள்ளைத் தமிழ் பத்து படைக்க வித்திட்டோர்

திருவானைக்காவைச் சேர்ந்த லட்சுமணப்பிள்ளை என்பார் வேண்டுகோளுக்கு இணங்க அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் உருவானது.

திருவானைக்கா அன்னைக்கும், திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டிக்கும், பிள்ளைக்கவி பாடிய செய்தியை அறிந்த உறையூர் பெருமக்கள் பிள்ளையவர்களிடம் தங்கள் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடக்கேட்க, அதன்பயனாய் முகிழ்த்தது காந்திமதி பிள்ளைத்தமிழ்.

'ஆச்சாபுரம்' என்று வழங்குகிற பெருமணநல்லூர் தலத்தில் வாழும் சிவலோக தியாக முதலியார் என்னும் சிவநேயச் செல்வர் வேண்டுகோளுக்குப் பிள்ளையவர்கள் செவிசாய்த்துப் பாடியதுதான் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்.

திருவிடைக்கழி நகரைச் சார்ந்த கார்காத்த வேளாளராகிய சுப்பராயபிள்ளை என்னும் நயனுடையான் விண்ணப்பத்திற்கு அமையப் பாடப் பெற்றதுதான் திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்.

'கண்ணபுரம்' ஊரைச்சார்ந்த சிவநேயர்களின் அன்பிற்கிணங்க, பிள்ளையவர்கள் நவின்றதுதான் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்.

திருவெண்காடு, எனும் திருத்தலம் காணப் பிள்ளையவர்கள் சென்றிருந்த போது அந்நகரத்து நடராசபிள்ளை என்பார் விருப்பிற்கிணங்கப் பாடப்பெற்றது பிரம்ம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ்.

திருத்தவத்துறை என்ற சிறப்புப் பெயரினையுடைய இன்றைய லால்குடி என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள பெருந்திருப்பிராட்டியின் மீது ஆசிரியர் அவ்வூர் மக்கள் விருப்பத்தை ஏற்றுப் பக்திரசம் சொட்டப்பாடியது தான் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழாகும்.

கும்பகோணம் நகரைச் சார்ந்த ஜவுளிக்கடை கனகசபைப்பிள்ளை என்னும் அன்பரின் அவாவின் காரணமாக முகிழ்த்ததுதான் மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்.

திருவாவடுதுறை ஆதீனத்திடத்துப் பிள்ளைக்கிருந்த நன்றியுணர்வையும், திருமடத்திடமிருந்த பெருமதிப்பையும் வெளிக்காட்டும் படியாகப் பிள்ளையவர்கள் படைத்ததுதான் அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ். அறிவுச் சுடராக விளங்கிய ஆதீனத்து ஞானாசிரியர்களின் புனிதத்தன்மையும் வள்ளத்தன்மையும் உலகறிய வேண்டி இந்நூலினை அந்நகரமக்கள் வேண்டுகோளுக்கு இணங்கப் பிள்ளையவர்கள் பாடினார்.

வன்தொண்டர் செட்டியார் என்பாரின் வேண்டுகோளை ஏற்றுத் தொண்டர்தம் சீர் பரவப் பாடிய சொல்லேர் உழவர் சேக்கிழார் தம் பெருமை மண்ணுலகு அறியப் பிள்ளையவர்கள் செய்ததுதான் சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

தமிழக இலக்கிய வரலாற்றைப் பார்த்தோமானால் பிறர் வேண்டுகோள் ஏற்றுப் பக்திப்பனுவல் பல படைத்த பெருமை நம் பிள்ளையவர்களுக்கே சாரும் எனலாம். பிற படைப்பாளர்கள் தாங்களே விரும்பிப் பாடியது உண்டு. பிறர்க்காகப் பாடியது குறைவாகத்தான் இருக்கும். ஆனால் பிள்ளையவர்கள் பிள்ளைத்தமிழ் பத்தும் பிறர் வேண்டப் பாடியது அவர் மக்கள் கவிஞராக விளங்கிய பாங்கினை உணர்த்தும். இனி இந்நூல்களின் சிறப்புறு செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

கவித்திறம்

நினைத்ததை நினைத்த வண்ணம் வார்த்தைகளாற் சொல்வதே மிகவும் அரிய செயல். மனத்திற் தோன்றிய இனிய கருத்துக்களைச் செய்யுள் உருவத்தில் அமைக்கும் கவித்துவம் பாராட்டிற்குரியதேயாகும். கருத்துக்களை நினைக்கலாம். நினைத்தவற்றைச் சொல்லலாம். சொல்வதையே அழகு பெறப்பன்னலாம். அதனையே கவியாக அமைக்கலாம். ஆனால் நினைத்தவற்றை நினைத்த போதெல்லாம் நினைத்தவழியே தமிழ்ச் சொற்கள் ஏவல் கேட்ப, வருத்தமின்றி, விளையாட்டாகக் கவிபாடும் திறமை எல்லாக் கவிஞர்களுக்கும் வாய்ப்பதன்று. அத்தகைய திறமையுடையவர் நம் பிள்ளையவர்கள் இது குறித்து.

எனை வைத்தி யெனை வைத்தி யெனப் புதங்களிடை யிடையரின் றிரந்து வேண்ட
இனிவைப்பா மினிவைப்பாம் பொறுத்திடுமின் பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற வொரு கடிகைக் களவில் கவித் தொடை தொகுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள் ளலைப் போல்வார் புவியில் யாரே

மகாவைத்தியநாதையருடைய தமையனாராகிய திரு இராமசாமி ஐயர் தமது இரங்கற்பாவில் பிள்ளையவர்களது கவித் திறத்தைப் பாராட்டுவதைக் கொண்டு அறிலாம்.

முதற் பிள்ளைத்தமிழ்

பிள்ளையவர்கள் படைத்த முதற்பிள்ளைத்தமிழ், திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள அகிலாண்ட நாயகி மீது பாடிய பனுவலே ஆகும். இந்நூல் பற்றிக் கூறும் போது உ.வே.சா அவர்கள், 'திரிபந்தாதிகளில் தளிர்த்துத் திரிசிபுரயமக அந்தாதியில் அரும்பி, அகிலாண்ட நாயகி மாலையிற் போதாகி, இப்புலவர் பெருமானது கவித்திறனும் புகழும் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில் மலர்ந்து நின்றன' எனப் புகழாரம் சூட்டுகிறார். இந்நூலின் தனிச்சிறப்பே இதில் அமையப்பெற்றுள்ள காப்புப்பருவம் ஆகும். வேறு பிள்ளைத்தமிழ் நூல்களிலும், இவரே பிற்காலத்திற் செய்த பிள்ளைத்தமிழ்களிலும் இத்தனை விரிவான துதிகள் இல்லை என்று உறுதிப்படக் கூறுகிறார். உ.வே.சா இவரது பாடல்களில் முரண் விளையாட்டு இயல்பாகவே அமைந்து காணப்படும். 'வேம்பர் குடிக்கோர் செங்கரும்பே' நிம்பர் குலத்துறு செந்தேனே, 'மதமாதங்க வனத்து மடமானே', 'போதக வனங்குடி புகுந்த மென் காமர்பிடியே' போல்வன முரண் வகைகளுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் என்ற நூலில் முருகக் கடவுள் ஆறு சமயங்களுக்கும், ஆறு ஆதாரங்களுக்கும் தாமே முதல்வரென்பதைத் தெரிவிக்க ஆறு திருமுகங்களோடு விளங்குகின்றான் என்னும் கருத்து வெளிப்பட அமைத்து, ஆறுமுகத் தத்துவத்திற்குப் பிள்ளையவர்கள் அளித்துள்ள விளக்கம் படித்து இன்புறத்தக்கது.

முருகப் பெருமானின் அருளிச் செயல்கள், தலத்தைப் பூசித்து பேறுபெற்ற பெருமைக்குரியோர், சிறப்புறு இறை தொன்மங்கள் போன்ற பல்வேறு செய்திகள் இதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இத்தலத்தின் பெயர் விடைக்கழி எனவும், இடைக்கழி எனவும், வழங்கும். இத்தலத்தின் கண் முருகப்பெருமான் குராமரத்தின் நீழலில் எழுந்தருளியுள்ளார் என்பதை,

தல விடைக்கழியின் மகிழ வனத்திலொடு
குரவடிக்கமர் நிபமாலைப்புய வேளைப்புரக்கவே (காப்பு-2)

௬.19.

"தேமலர் மேய குராநிழல் வாழ்பவ" (செங் - 10)என்ற பாடல்வழியாகவும் கூறுவதைக் காணலாம்.

பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழை நோக்கினோமானால் அதில் அவையடக்கப்பாடல் இடம் பெற்றிருக்காது. ஆயின், காப்பு பருவத்தில் அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் போன்று விநாயகர் தொடங்கி அனைத்துக் கடவுளர்களும் துதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பனுவலில் கற்பனை வளம் மிகுந்து காணப்படும் அப்படி வருணிக்கும் போது, தலத்திற்குப் பொருந்துமாறு ஒரு தொன்மக்கதையைக் கவிதை வடிவில் மக்கள் மனதில் பிள்ளையவர்கள் நிலைநிறுத்தத் தவறவில்லை. இச்செய்தியினைக் கூறும் கற்பனை வளத்தை உ.வே.சா அவர்கள் மிகச் சிறப்பான ஒன்றாகக் கூறுவர். அது வருமாறு:

'மருதத் திணையுள் தாமரைமலர் நிறைந்திருப்பதை நினைத்து பிரமதேவர் தம்முடைய தந்தையாகிய திருமாலுக்குக் குடையாக உதவிய மலையின் சிறகுகளை இந்திரன் அரிந்த பகைமையை எண்ணி அவனுக்குரிய மருதத்திணையில் அவன் தங்குவதற்கு இடமில்லாதபடி தமக்கும், தம் தாயாகிய திருமகளுக்கும், தம் மனைவியாகிய கலைமகளுக்கும் இருப்பிடங்களாகவும், தம் தம்பியாகிய மன்மதனுக்கு ஆயுத சாலையாகவும், தம்முடைய வாகனமாகிய அன்னத்துக்கு இருப்பிடமாகவும் பல தாமரைகளை எங்கும் உண்டாக்கி மகிழ்கின்றார் என்னும் கருத்தமைய.

தண்ணந் துழாய்ப்படலை துயல்வரு தடம்புயத்
 தாதைக்கு நிழல் செய்யத்
தந்தவரையின் சிறையரிந்த பகை கண்டரி
 தங்குதற் கிடமிலாமல்
என்னுந் தனக்குமனை யாய்க்குமனை யிற்குமனை
 யிளவலுக் கேதியுறையுள்
எகினுறையு ளாகமரு தத்திணையி லாக்கிமகி
 ழெண்கைப் பிரான் புரக்க

இந்த இனிய கற்பனையின் வாயிலாகப் பிள்ளையவர்கள் கற்றோர் மனதில் பெற்ற மதிப்பு அளப்பரியது. இந்நூலில் தான், தான் மானசீக ஆசானாக ஏற்றுக் கொண்ட கச்சியப்ப முனிவரின் கருத்துக்களைத் தன்வயமாக்கிக் கூறியுள்ளார்

அளவில் பல வலியுடைய வாணவ மகன்றவா
 லறிவன்றி யுருவமில்லா ஐயன் (பாயிரம்-3)

பாடலிலும்,

முத்தமைந் தன்பா லளித்தவற் கார்வருனெ
 முதுரை வழக்குடைமையாள் (பாயிரம்4)

பாடலிலும்,

கன்றெலிச் தூரற் படக்கைப் பிரான் (பாயிரம்-6)

பாடலிலும், எடுத்தாண்டுள்ளதை உ.வே.சா சுட்டிக்காட்டி செல்வார். இத்தலத்திற்கு திருத்தவத்துறை, அளகை, அளகாபுரி, வயிரவிவனம், பஞ்ச புண்ணியதலம் (நதி, வனம், புரம், புஷ்கரணி, சேத்திரம் என ஐந்துபேற்றைப் பெற்ற தலம்)எனப் பிள்ளையவர்கள் தலப்பெயர்களைத் தம்பாடலில் பலவாறாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

இந்நூலின் சுவைமிகு பாடலாக உ.வே.சா அவர்கள் சப்பாணிப் பருவத்தில் இடம் பெறும் கீழ்வரும் பாடலைக் கூறுகிறார்.

பவத்துயர் பாறவெனக்கரு ளைச்செயருட் பாவாய்
 பனிக்குல மால்வரை பெற்று வளர்த்த சுவைப்பாகே
சிவத்திரு வாளனிடத்தி லிருக்குமியற்றோகாய்
 திருப் பெணிலாவு கலைப்பெணி வர்க்கிர சத்தேனே
நவத்தளின் வேர்மலர் மொய்த்தவிர் மைத்த குழற்றாயே
 நயப்ப வெணாலற முற்றும் வளர்த்த கரத்தாலே
தவத்துயர் வார்களுளத்தவள் கொட்டுக சப்பாணி
 தவத்துறை வாழுமடப்பிடி கொட்டுக சப்பாணி

அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழில் தான் பிள்ளையவர்கள் சைவசமயத்தின்பால் அவர் கொண்டுள்ள பற்று எத்தகையது என்பது வெளிப்படும் படியாக, சைவசமயத்திற்காகவே திருமடம் நடத்தும் அம்பலவாண தேசிகரின் சீலம் வெளிப்படும் படியாகவும், சிவநெறி போற்றும் மடத்தின் செய்திகளாகிய காவித்துவசம் அமைத்தல், பரிசலசேடத்தை அடியார்க்கு அளித்தல், நெற்றியில் திருநீறு அணிதல் போன்ற பல செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

சிவஞான முனிவர் இயற்றிய சிவஞான போதச்சிற்றுரை, கச்சியப்ப முனிவர் இயற்றிய பஞ்சாக்கர தேசிகரந்தாதியையும் மறவாமல் பிள்ளையவர்கள் தம் உள்ளத்துக் கொண்டதன் விளைவே, அவர்களின்பால் அன்பு மேலிட அது பின்வரும் பாடலாக வெளிவந்தது என உ.வே.சா கூறுகிறார் பாடல் வருமாறு:

நின்னை யொப் பில்லாத சின்மய னெனக்கலை
 நிரம்புபா டிய முனிவ னாம்
நெடிய சிவஞான முனி (சப்-2)

என்ற பாடலில் போற்றிப் பதிக்கிறார்.

இந்நூலில் தான் பிள்ளையவர்கள் பாட்டுடைத் தலைவனை ஐம்பூதமாகப் போற்றுவதோடு இப்பாடலை இனிய சந்தத்திலும் அமைத்துள்ளார். கருத்தாழ மிக்க அப்பாடல் வருமாறு:

பரசமயத்தவர் வாயு ணுழைந்து பயின்றிரு பிருதுவியே
 பற்றிய தொண்டின் வழிப்படு சைவப் பைங்கூழ் பாய்புனலே
விரச வழுத்துநர் வெவ்வினை யடவி வெதுப்பி யெழுங்கனலே
 மெய்யுற நோக்கினர் பாவ மெனுந்துய் விலக்க வுலாம் வளியே
வரசர ணத்தின் மனத்தை நிறுத்தி வயக்கி முயக் குறுவான்
 மாதவ மாற்றுந ருள்ளந் தோறும் வயைந்து விராம் வெளியே

அரச வனத்தம ருங்குரு நாத னாடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பலவாண னாடுக செங்கீரை (சப்-6)

மானுடரை முதன்மைப் படுத்தி எழுந்த பிள்ளைத்தமிழில் இரண்டாவதாகவும் பிள்ளைத்தமிழ் நூல்களில் இறுதியாகவும் அமைவது இச்சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

இந்நூலின் கண் காணப்படும் காப்புப் பருவத்தில் பிற பிள்ளைத்தமிழ் நூல்கள் போல் திருமால் தொடங்கி ஏனைய கடவுளர்களைப் போற்றித் துதித்துக் காத்தருள வேண்டுவது போல அமைக்காது. பிள்ளையவர்கள் பெரிய புராணத்திற்கு இதன் தொகையாகிய திருத்தொண்டத் தொகையிலுள்ள பதினொரு திருப்பாசுரங்களுள் ஒவ்வொன்றிற் கூறப்பட்ட நாயன்மார்களைப் போற்றி ஒவ்வொரு செய்யுள் செய்துள்ளார். அதுமட்டுமின்றி பெரிய புராணத்திற் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முதலியவை காப்பிய இலக்கணப்படி பாடப்பட்டுள்ளன. தமிழ்நடை செவ்விதாக அமைந்துள்ளது தொண்டர்கள் அருமை பெருமைகள் அவரவர் நிலை, சாதி, குணம், மார்க்கம், முதலியவை எவ்வாறெல்லாம், விளக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகள் வெளிப்படும் படியாக இப்பிள்ளைத்தமிழ் அமைந்துள்ளது என உ.வே.சா கூறுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தோட்டி யமைய வமயங்கலமாம்
சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுந் தகைய முரண் காட்டி
விலக்கு விலகு விதி தழுவி

என்ற பாடல் வரிக்கு விளக்கம் தரப்புகுந்த உ.வே.சா. 'அமங்கலமாம் சொற்கள் புணராது அறக்களைந்து' என்றது மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரை வாளால் வீழ்த்தினான் என்பதை வெளிப்படையாகக் கூறாமல் "பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தவப் பரிசே செய்ய" என்று பாடியிருத்தலையும் ஏனாதி நாத நாயனார் புராணத்தில் அதிசூரனென்பவன் ஏனாதிநாத நாயனாரை வாளாலெறிந்ததை அங்ஙனமே. (முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்று வித்தான்)என்று கூறியிருத்தலையும் இவை போன்ற பிறவற்றையும் நினைந்தே யாகும் என உ.வே.சா. கூறியிருப்பது ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது.

சேக்கிழாரைக் குறிப்பிடும் போது பிள்ளையவர்கள்,
மூவரும் புகழும் வேதத் தமிழ்க் கணுள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள் செய் குன்றையூர் வேந்து
(காப்பு-9)எனப் புகழுவார்.

இந்நூலினிடத்துப் பிள்ளை அவர்களுக்கு அலாதியான அன்பு உண்டு. சேக்கிழார் பிள்ளைத்தமிழை இவர்பால் வரும் வித்துவான்களும் பிறரும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்து பாராட்டி வந்தனர். இவரே அதனை மீண்டும்

மீண்டும் படிப்பித்துக் கேட்டு இன்புறுவதுண்டு என உ.வே.சா தமது நூலில் குறிப்பிடுவதோடு இறுதி முத்திரையாகத் தேவாரம், பெரியபுராணம், முதலிய நூல்களில் ஈடுபட்டுள்ள வித்துவான்கள் அந்தப் பிள்ளைத்தமிழில் ஈடுபடாமல் இரார் எனக் கூறுவார்.

நடைச்சிறப்பு

சொல்லும் பொருளும் நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லல் முதலிய
தோட்டி அமைய அமங்கலமாம்
சொற்கள் புணராது அறக்களைந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்குக விலக விதி தழுவி

என்ற வகையில் கவிதை யாப்பதே இவர்தம் நடைச்சிறப்பு. இவருடைய கல்வி மிகவும் ஆழமும் அகலமும் உடையது. அளக்கலாகா அளவும் பொருளும் உடைய இவரது அறிவுத்திறம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மிளிர்ந்து விளங்குவது. அலைகளெல்லாம் அடங்கி ஒலியற்று இருக்கும் ஆழ்ந்த கடலைப்போல் அறிவின் வீச்சினைக் கண்டவுடன் அறிய முடியா வண்ணம் அடங்கி ஆற்றி இருக்கும் தோற்றம் கொண்டவர் பிள்ளையவர்கள்.

சிவதீட்சை முறையாகப் பெற்றமையால் இவருக்கு சிவபக்தி அதிகம். திருநீறு விளங்க எப்பொழுதும் நெற்றியில் நீறுடன் இருப்பவர். பிறவாயாக்கைப் பெரியோனாம் சிவபிரானையும், மூவா முதல்வியையும் தன் அகத்தே மறவாத காரணத்தால் சிவப்பணியே தனது இலக்கியப் பணியாக அமைய வாழ்ந்தவர். ஆகவே தனது கவிதை, சிவமணம் அகலாதே கமழ வேண்டும். அது நெஞ்சங்கனியக் கனிய, கண்ணீர்வார கவிபாடவேண்டும். அதில் இறைமணம் கமழ வேண்டும். அக்கவி புத்தி தருவதாய், சுத்திதருவதாய், சுத்தி தருவதாய், முத்தி தருவதாய் அமைய வேண்டும் என்ற எண்ணம் உடையவர் பிள்ளையவர்கள்.

ஆகவேதான், இவர்தம் பிள்ளைத்தமிழ் அத்தனையும் இறைமணம் கமழ்வதாக இருக்கிறது. சொல்லெல்லாம் தீஞ்சுவைச் சொற்களாகவே இவருக்கு வந்து அமைகின்றன.

அன்னை அகிலாண்ட நாயகியை,

புந்திசிறைப்படுத் தொளிர் காவை மேவுநம்
புண்ணியப் பூங்கோம்பு

எனவும்

நாதாந்த செல்வச் சிலம்பரசன் மனையாட்டி

(செங்கீரை - 5)

எனவும் இறைவியைப் பாராட்டுகிறார்.

திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவியை,

தேகமலி பனிமலைக் கொருபுதல்வி (செங்கீரை-2)

வோங்கு திருவத் தமிழ் மணவை யுரைவாய் (தால்-1)

குமரக் கடவுளை யன்ற கருங்குயில் (சப்-7)

குறுமுனி தொழு தெழு பனிமலை வருமயில் (சப்-9)

குடவளை மொய்த்த செய் மணவை மடப்பிடி (சப்-10)

என புதல்வி, கருங்குயில், வருமயில் மடம்பிடி என எளிய நடையில் பிள்ளையவர்கள் இறைவியை எத்துவதைக் காணலாம். அவ்விறைவியின் அருளிச் செயலைக் கூறும்போது,

கறவுதிர் பேரருள் விழிக்குடையு மீனுங் கலந்து
பரஞான மூறுங் கதிர் முலைக்குடையும் (முத்த-8)

பஞ்சாக்கரம் என்பதை ஒரு சிறப்புறு வாவியாக விதந்து காட்டுவார் பிள்ளையவர்கள்.

உலகு புகழ் பஞ்சாக்கரப் பெருந் தீர்த்த மென் றொன்றுண்டு

என்பது அவர் வாசகம்.

காந்திமதி பிள்ளைத்தமிழில் இறைவியை,

கானார் கொன்றை முடிக்கணிந்த கடவுட் பெருமான்
(முத்த-3)

ஒலிகட லமுதனை மூவர்கள் வாயருமைத்தமிழ் நற்பாட (சப்-10)

இதில் இறைவனை ஒலிகடல் அமுதன் எனப்பாராட்டுவது கண்டு இன்புறத்தக்கது.

மங்களாம்பிகைப் பிள்ளைத்தமிழில் மங்களாம்பிகையை வருணிக்கும்போது,

தானே தனக்கு சரியாய தாய் (வருகை- 10)

என்ற பாடலில் எத்தனை நயம் விளங்குகிறது என்பதைப் படிப்போர் உணரலாம்.

இதே போன்று சிவபிரானை,

வெண்ணாவ லெம் புண்ணியன்
பூமேவு வெண்ணாவனிழலமா முக்கட் புராதனர்
வெள்ளை நாவலடி முளைத்த தன்னேரிலி

எனப் போற்றிப் புகழ்வது இறைவனிடத்தும் இறைவி இடத்தும் அவர் கொண்ட பற்றை விளக்கும்.

கருத்தும் சுவையும்

தமிழில் மணமென்பது பலபொருள் தரும் ஒரு சொல். கூட்டமும் நாற்றமும் (மணமே)என்னும் இரு பொருள் குறித்துப் பயன்படும் சொல்.

இச்சொல்லை வைத்துப் பிள்ளையவர்கள் ஒரு தமிழிசையே செய்துள்ளார். இது சொற்பொருட் பின்வரு நிலையணி என்ற அணிவகையைச் சார்ந்தது. உரையின்றியே பாடல் தெளிவுறும்.

சோறுமணக்கு மடங்க ளெல்லாந்
  தூய்மை மணக்குஞ் சிந்தையெலாஞ்
சுவணமணக்கு மாடை யெலாந்
  தொங்கன் மணக்குந் தோள்களெலாஞ்
சேறுமணக்குங் கழனி யெலாந்
  செல்வமணக்கு மாட மெலாந்
தென்றன் மணக்கு மேடையெலாந்
  தெய்வ மணக்குஞ் செய்யுளெலா
நீறுமணக்கு நெற்றி யெலா
  நெய்யே மணக்குங் கறிக ளெலா
நெருப்பு மணக்குங் குண்ட மெலா
  நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறுமணக்குங் குன்றத்தூர்த்
  தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டித தெய்வச்
  சைவா தாலோ தாலேலோ

என்ற பாடல் கருத்து நயத்திற்கு ஒரு சான்று.

இப்படிப் பலவேறு நிலைகளில் பிள்ளையவர்களின் பிள்ளைத்தமிழ் நூல்கள் சிறந்து விளங்குவதைக் கண்டோம். இதுவரை இக்கட்டுரை வாயிலாகக் கண்ட செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

பிள்ளையவர்கள் சைவநெறி தழைக்கவே தம் இலக்கியப் பணியைப் பெரிதும் பயன்படுத்தினார்.

பத்துபிள்ளைத்தமிழ் நூல்களில் ஒன்று கிடைக்கவில்லை, பிரிதொன்று அச்சாகவில்லை.

படைப்பாளி என்ற முறையில் எதையும் படைக்க வல்லவராக மீனாட்சி சுந்தரம் பிள்ளை விளங்கினார்.

எளிமை, அடக்கம், ஆற்றல் என்ற பண்புகளோடு வாழ்ந்தவர் பிள்ளையவர்கள்.

தக்க வாய்ப்புக் கிடைத்திருக்குமேயானால் இன்னும் சிறந்த படைப்பாளியாகப் பிள்ளையவர்கள் விளங்கி இருப்பார்.

"இவருடைய ஆற்றலை இயன்றவரையில் பயனுறச் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தோடு, தக்கவண்ணம் யாரேனும் இவரை ஆதரித்து, ஊக்கத்தையளித்து வந்திருந்தால், இவர் இன்னும் எவ்வளவோ நூல்களை இயற்றியிருப்பார். சிலசில காலங்களில் சிலர் சிலரால் தங்கள் தங்கள் கருத்துக்கு இயைய இன்ன இன்ன வகையாகச் செய்ய

வேண்டுமென்று தூண்டப்பட்டுச் செய்த நூல்களே இப்போது இருக்கின்றன. இவருடைய புலமைக் கடலில் இருந்து ஊற்றெடுத்த சிறிய ஊற்றுகள் என்றே அவற்றைச் சொல்லவேண்டும். அக்கடல் முழுதும் மடைதிறந்திருந்தால் தமிழ்நாடு முழுவதும் இவருடைய பல துறைப்பட்ட கவி வெள்ளத்தில் மூழ்கி இன்புற்றிருக்கும் எனத் தன் ஆசிரியர் பற்றிக் கணிக்கிறார் உ.வே.சா இத்துணைச் சிறப்பு மிக்க நம் பிள்ளையவர்களைப் போற்றிப் பாராட்டினோர் பலர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையிலாப் பெருமகனாக விளங்கிய மகாவித்துவான் அவர்கள் அடிபணிந்து தமிழ் உள்ள அளவு அவர் பெயரும் விளங்கும் எனச் சொல்லி, திருமிகு. சி. தியாகராச செட்டியார் வாழ்த்தோடு கட்டுரையை நிறைவு செய்வோம்.

நீரேறு செஞ்சடில நின்மலனே பதியென்று
நிலவச் சாற்றும்
நாரேறு ஞானகலை முதலியநற் கலைபலவு
நன்கு தேர்ந்தோன்
கூரேறு மகத்தெனையுங் கற்றோர்சே ரவைக்களத்தோர்
கடையிற் சேர்த்தோன்
சீரேறு மீனாட்சி சுந்தரநா வலரேறு

- சி. தியாகராச செட்டியார் (திருவெண்ணிற்றுமை பிள்ளைத்தமிழ்)

100. மகாவித்துவானின் பனுவல்களும் பதிப்புகளும்

மொ. மருதமுத்து
சென்னை

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழகம் கண்ட பெரும்புலவர்களுள் ஒருவர். தமிழறிஞர்கள் இவரைப் 'பிற்காலக் கம்பர்' (இக்காலக்கம்பர்)எனவும், 'இரண்டாவது கம்பர்' எனவும், இரண்டு கம்பர் எனவும் சிறப்பித்துக் கூறுவர். 'பிள்ளை அவர்கள்' என்று சொன்ன அளவிலும், 'மகாவித்துவான்' என்று சொன்ன அளவிலும், 'மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று தமிழுலகம் அறிந்துகொள்ளும் அளவிற்கு, ஒரு முதுபெரும்புலவராக விளங்கியவர் இவர்.

மகாவித்துவான் படைத்தளித்த நூல்கள் பலப்பல. அவைகளைத் திருத்தலங்களைப்பற்றிப் பாடிய தலபுராணங்கள், இறைவன் மீது பாடிய நூல்கள், அம்மையின்மீது பாடிய நூல்கள், சமயத்தலைவர்மீது சூட்டிய புகழ்மாலைகள், வள்ளல்கள் மீது பாடிய நூல்கள், பல்வேறு தனிப்பாடல்கள், சிறப்புப்பாயிரமாகச் செய்தளித்த செந்தமிழ்ச் செய்யுள்கள் எனப் பாகுபடுத்தலாம்.

தமிழ் இலக்கிய வகையின் வரிசையிலும், நூல்களின் எண்ணிக்கை வரிசையிலும், பாடல்களின் எண்ணிக்கை வரிசையிலும் அதிகமாக யாத்துள்ள ஒரே புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களே ஆவார். சைவ சமயக் குரவர்களான நால்வரைப்போன்று, தலங்கள் தோறும் சென்று பாடும் இயல்பினைக்கொண்ட இவர் யமக, திரிபு அந்தாதிகளில் கவிகளைப் புனைவதில் வல்லவர். தமிழில் தலபுராண இலக்கியங்களையும், பிள்ளைத்தமிழ் நூல்கள், அந்தாதி நூல்கள் ஆகியவற்றையும் மிக அதிகமாகப் பாடியவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இவர், எல்லப்பநாவலரின் செவ்வந்திப் புராணத்தைத் திரிபுரவாசிகளின் விருப்பத்தின்படி, அதனை எழுதுவோரால் நேர்ந்த பிழைகளைப் பரிசோதித்து கி.பி. 1851ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். அப்பதிப்பில் இவர் பெயருக்குமுன் வித்துவானென்னும் அடைமொழி இருத்தலைக் காணலாம். இவர் பதிப்பித்த நூல் இது ஒன்றே ஆகும். இனி, மகாவித்துவானின் பனுவல்களைப் பதிப்பித்தோர் பற்றி ஆராயலாம்.

மகாவித்துவானின் பனுவல்களைப் பதிப்பித்தோர்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நூல்களைப் பதிப்பித்தவர்கள் பலர். அவர்களுள் சிறப்பாகச் சொல்லக்கூடியோரின் பதிப்புகள்:பி. தியாகராசச்செட்டியாரின் பதிப்பு, டாக்டர் உ.வே.சாமிநாதையரின் பதிப்பு

ஆகிய இரு பதிப்புகளுமாகும். 'திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு' என்ற பெயரில் பிள்ளையவர்களின் நூல்களை டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ளார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நூல்களை மேற்சொன்ன முறையில் 'பிரபந்தத் திரட்டு' என்ற பெயரில் பதிப்பித்துள்ளவர் டாக்டர். உ.வே.சாமிநாதைய்யர் மட்டுமே. சி. தியாகராச செட்டியாரும் மற்றோரும் பிள்ளையவர்களின் நூல்களைத் தனித்தனி நூல்களாகப் பதிப்பித்துள்ளனர்.

மகாவித்துவான் அவர்களின் பனுவலை கி.பி. 1842இல் முதன் முதலாகப் பதிப்பித்தவர். புரசப்பாக்கம் பொன்னம்பல முதலியார் அவர்களாவார். அந்நூலின் பெயர் திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ். கி.பி. 1850 ஆம் ஆண்டில் குசேலோபாக்கியானம் என்ற காப்பியமும், கி.பி. 1855 ஆம் ஆண்டில் சூதசங்கிதை என்ற நூலும் தேவராச பிள்ளையைச் சார்ந்தவர்களால், தேவராசபிள்ளையின் பெயரால் அச்சிடப்பெற்றன. கி.பி. 1852இல் திருவுறந்தை காந்திமதியம்மை பிள்ளைத்தமிழும், சேக்கிழார் பிள்ளைத்தமிழும் அச்சிடப்பெற்றன. அவ்விரு நூல்களைப் பதிப்பித்தவர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை. திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை என்னும் நூலானது சென்னையில் கி.பி. 1856 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது, அந்நூலினைப் பதிப்பித்தவர் யாரென்று அறியஇயலவில்லை.

கி.பி. 1868 இல் தி. சுப்பராய செட்டியார் அவர்களால் மாயூரப் புராணம் என்ற நூலும் கி.பி. 1869 இல் திருநாகைக்காரோணப் புராணம் என்ற நூலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. கி.பி. 1868 இல் தனியூர்ப் புராணமும், கி.பி. 1867 இல் துறைசை யமக அந்தாதியும், கி.பி. 1869 இல் திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழும், கி.பி. 1890இல் வாட்போக்கிக் கலம்பகமும் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. மேற்கண்ட இந்நூல்களைப் பதிப்பித்தவர்கள் இன்னாரென்று அறிய இயலவில்லை. திருப்பெருந்துறைப்புராணம், மண்ணிப்படிக்கரைப் புராணம், வாளொளிப் புற்றூர்ப்புராணம், குருபூசை மான்மியம் முதலான நூல்கள் பதிப்பிக்கப் பெற்றிருந்தும் பதிப்பித்தவர், ஆண்டு, இடம் ஆகிய விவரங்கள் கிடைக்கவில்லை.

சென்னை, சி. பாஸ்டர் அச்சுக்கூடம் மு. அரு. அண்ணாமலை செட்டியார், பா. சொக்கலிங்கம் பிள்ளை ஆகியவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு கி.பி. 1881 இல் ஸ்ரீ காசி ரகசியம் என்ற நூலினைப் பதிப்பித்துள்ளது. திரு சி. பொன்னுசாமி பிள்ளை அவர்களின் பண உதவியைக் கொண்டு ப. சிங்காரவேற் பிள்ளை அவர்கள் கி.பி. 1933 இல் திருத்துருத்திப் புராணம் என்ற நூலினைப் பதிப்பித்துள்ளார். திரு. ஜி. இராஜகோபால பிள்ளை அவர்கள் கி.பி. 1954. 1965 ஆகிய ஆண்டுகளில் தியாகராச லீலை என்ற நூலினை இருபகுதிகளாகப் பதிப்பித்துள்ளார். பம்மல் விஜயரங்க முதலியார் அவர்கள், திருஞான

சம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப் பத்தந்தாதி, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ஆனந்தக் களிப்பு ஆகிய இரு நூல்களையும் பதிப்பித்துள்ளார்;ஆண்டு விவரம் கிடைக்கவில்லை.

டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூல்நிலையம், கி.பி. 1961 இல் திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை என்ற நூலினை E.S.வரதராஜய்யர் அவர்கள் எழுதிய குறிப்புரையோடும், கி.பி. 1962 இல் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலினை சி. ஜெகந்நாதாசார்யர். அவர்களது குறிப்புரையோடும், கி.பி. 1965இல் அம்பர்ப் புராணம் என்ற நூலினை ச. தண்டபாணி தேசிகர் அவர்களது குறிப்புரையோடும், கி.பி. 1976 இல் இரத்தினகிரி என்னும் வாட்போக்கிக் கலம்பகம் என்ற நூலினை அரும்பத உரையுடனும் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

திருவாவடுதுறை ஆதீனமானது கி.பி. 1961இல் அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் என்ற நூலினையும் கி.பி. 1964இல் திருத்தில்லை யமக அந்தாதி என்ற நூலினையும், கி.பி. 1963இல் அம்பலவாண தேசிகர் கலம்பகம் என்ற நூலினையும். கி.பி. 1970இல் துறைசை யமக அந்தாதி என்ற நூலினையும் திரு. த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய குறிப்புரைகளோடு வெளியிட்டுள்ளது.

கி.பி. 1958 ஆம் ஆண்டில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலினை, கயப்பாகம் சதாசிவ செட்டியார் அவர்களின் குறிப்புரையோடு வெளியிட்டுள்ளது. திருப்போரூர் ஸ்ரீ கந்த பெருமான் தேவத் தானம், கி.பி. 1964இல் சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மூலமும் விளக்கவுரையும் என்ற நூலினை, பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் எழுதிய விரிவான ஆராய்ச்சி மற்றும் குறிப்புரை, தெளிவுரைகளோடு 824 பக்கத்திற்கு வெளியிட்டுள்ளது. எந்த ஒரு பிள்ளைத்தமிழ் நூல்களுக்கும் இவ்வளவு விரிவான விளக்கவுரை இதுவரை எழுதப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி 1876இல் ஆறுமுகசுவாமிகள் அவர்களால் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. மேலும், மகாவித்துவான் கழகம் என்ற அமைப்பினால் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பதிப்பித்தவர் மற்றும் ஆண்டு விவரம் ஆகியன கிடைக்கவில்லை.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவத்தானம், கி.பி.1960 இல் பொன். சுப்பிரமணிய பிள்ளை அவர்களது குறிப்புரையோடு திருவிடைமருதூர் உலா என்ற நூலினைப் பதிப்பித்துள்ளது. சவராயலு நாயகர் மாலை என்ற நூலினை புதுவை செ. சவராயலு நாயகர் பதிப்பித்துள்ளார்;நூல் மற்றும் ஆண்டு விவரம் கிடைக்கவில்லை. தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது என்ற நூலினைப் பதிப்பித்துள்ளது.

சி. தியாகராச செட்டியார் பதிப்பு

பிள்ளையவர்களின் மாணாக்கராகிய சி. தியாகராச செட்டியார் அவர்கள்

கி.பி. 1863இல் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் என்ற நூலினையும், கி.பி. 1881இல் உறையூர்ப் புராணம் மற்றும் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் ஆகிய இருநூல்களையும், கி.பி 1884இல் திருக்குடந்தைப் புராணம் என்னும் கும்பகோணப்புராணத்தையும், கி.பி. 1887இல் கோயிலூர்ப் புராணத்தையும், பதிப்பித்துள்ளார். தற்போது இந்நூல்கள் கிடைப்பதற்கு அரிதாக உள்ளன.

டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் பதிப்பு

மகாவித்துவான் அவர்களின் பனுவல்களை மிகவும் அதிகமான எண்ணிகையில் பதிப்பித்தவராக விளங்குகிறார் அவரின் மற்றொரு மாணாக்கராகிய டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள், இவர், சி.தியாகராச செட்டியார் அவர்களுடன் இணைந்து பிள்ளையவர்களின் நூலினை (கும்பகோணப் புராணம்)முதன்முதலாக கி.பி. 1884இல் பதிப்பித்துள்ளார். மேலும், இவர், கி.பி. 1903இல் வீரவனப்புராணம் என்ற நூலினையும், கி.பி. 1904இல் சூரைமாநகர்ப்புராணம் என்ற நூலினையும், கி.பி. 1934இல் விளத்தொட்டிப்புராணம் என்ற நூலினையும் பதிப்பித்துள்ளார்.

கி.பி 1910இல் ஆதீனத்தலைவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களின் விருப்பத்தின்பேரில் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் முதன்முதலாக 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பிரபந்தத் திரட்டு' என்ற பெயரில் மகாவித்துவான் அவர்களின் நாற்பது நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதற்கடுத்து, இப்பிரபந்தத் திரட்டு, திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் அவர்களின் உதவியைக் கொண்டு கி.பி. 1926இல் இரண்டாம் பதிப்பாக டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. முதற்பதிப்பில் அபூர்த்தியாக இருந்த பழசைப் பதிற்றுப் பத்தந்தாதி பட்டீச்சுரம் ஸ்ரீ ஆறுமுகம் பிள்ளை அவர்களால் கிடைக்கப்பெற்று இரண்டாம் பதிப்பில் பூர்த்தியாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. சீகாழிக்கோவை, வியாசைக்கோவை, திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி, பொன்னூசல் முதலிய நான்கு நூல்களும் இப்பதிப்பிற் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 44 நூல்களும், மகாவித்துவான் அவர்களின் தனிப்பாடல்கள் சிலவும், சிறப்புப் பாயிரங்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. இதிலுள்ள நூல்கள் இயன்றவரை இலக்கிய வரிசை முதலியவற்றைத் தழுவி தொகுக்கப்பட்டுள்ளன.

டாக்டர் ஐயரவர்கள் இப்பிரபந்தத்திரட்டில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களது வாழ்க்கைச் சுருக்கத்தையும், மேலும் நூல்களுக்குரிய விரிவான ஆராய்ச்சி முன்னுரையும், நூல்களின் கீழ்க்குறிப்புகளாக அருஞ்சொற்பொருள் விளக்கம் ஆகியனவும் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதியும், அரும்பதம் முதலியவற்றின் அகராதியும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு இப்பதிப்பு மிகவும் சிறப்புற்றமைகிறது.

கி.பி. 1905 இல் டாக்டர் ஐயரவர்கள் 'தியாகராசலீலை' என்ற நூலினைக் குறிப்புரையுடன் முதன்முதலாகப் பதிப்பித்துள்ளார். இந்நூல் கி.பி. 1928இல்

இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. மகாவித்துவான் அவர்கள் இயற்றிய 80 நூல்களில் இவ்வாறு 52 நூல்களுக்குமேல் டாக்டர் ஐயரவர்கள் பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாயும் போற்றுதற்குரியதாகவும் அமைகிறது.

மகாவித்துவான் அவர்களின் நூற்சிறப்பு

கீழ்வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களின் தரிசனத்திற்குப் பிறகுதான் தமிழின் பரப்பும் பெருமையும் பிள்ளையவர்களுக்கு விளங்கின; தமிழில் பலநூல்களும் அவற்றில் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த பகுதிகளுமுள்ளன என்றறிந்து, தாமியற்றிய நூல்களில் அச்சுவைகளை திறம்படக் கையாண்டுள்ளதைக் காணலாம். இவர், இளமையிற் பாடியவற்றிற்கும், பிற்காலத்தில் பாடியவற்றிற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. இளமையிற் பாடியவை எளிய நடையில் அமைந்தவை. சிவபெருமான்பால் இயல்பின் எழுந்த அன்பினால் பக்திச்சுவை மட்டும் மலிந்த செய்யுட்கள் காணப்படும். தேவார, திருவாசகங்களிலுள்ள கருத்துக்கள் அமைந்த சில பாடல்களும் திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களில் உள்ளன. ஒரே கருத்தைப் பலவிதமாக அமைத்துக் சில செய்யுட்களைத் தொடர்ந்து இவர் பாடியிருத்தலை இளமைக் காலத்திற் செய்த நூல்களில் காணலாம். பிற்காலத்து நூல்களிற் கற்பனை நயங்களும் அணிநயங்களும் சிறந்த கருத்துக்களும் அங்கங்கே அமைந்திருக்கும். சைவசித்தாந்த நூற்கருத்துக்களும் பழைய இலக்கியங்களிலுள்ள சொற்களும் பொருள்களும் காணப்படும். நீர்வளங்களையும். நிலவளங்களையும் புனைந்து மிக அரிய கற்பனைகளை மேகம்போலப் பொழிந்துள்ளதைப் பிற்காலத்தில் பாடியநூல்களில் காணமுடிகிறது.

மகாவித்துவான் பனுவல்களில் அவ்வவ் இலக்கியங்களின் இலக்கணம் நன்றாக அமைந்திருக்கும். பிள்ளைத்தமிழ்களில் இவர், பகழிக்கூத்தரையும் குமரகுருபரரையும் ஒப்பர். கோவைகளில் கற்பனைகளையும், நீதிகளையும் பண்டைப்புலவர் சொற்பொருள்களையும் காணலாம். இவர் இயற்றிய திருவிடை மருதூருலாவிற்கு இணையாக உள்ள ஒருலாவைக் காணலரிது. இப்புலவர் கோமான் இயற்றிய புராணக்காப்பியங்களுள் மிகச்சிறந்ததாகக் கருதப்படுவது திருநாகைக் காரோணப் புராணம். சொல்லணி, பொருளணி, தொடைநயம், பொருட்சிறப்பு, சுவைநயம், நீதி, சிவபக்திச் சிறப்பு, நாயன்மார் பெருமை முதலிய பலவும் இதன்பால் நிரம்பியுள்ளன. யமகந்திரிபு வகைகளில் வேறெவரும் இயற்றியிராத விசித்திரமான அமைப்புகளை இவர் வாக்கில் காணலாம்.

கிடைக்கப் பெறாத நூல்கள்

மகாவித்துவான் அவர்களின் நூல்களில் தற்போது கிடைக்கப்பெறாததாக விளங்குவன; 1. திட்டக்குடிப் பதிகம் 2. மயில் ராவணன் சரித்திரம். 3. தண்டபாணி பதிற்றுப் பத்தந்தாதி, 4. திருவானைக்காத் திரிபந்தாதி 5. எறும்பீச்சுரம் வெண்பா அந்தாத் 6. கண்ணபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்7. பிரம்மவித்தியாநாயகி பிள்ளைத்தமிழ் 8. திருமயிலைப்

புராணம் 9. தானப்பாசாரியார் தசவிடுதூது 10. திருவிடைக்கழி குறவஞ்சி 11. திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா 12. குருபூசை மான்மியம்.

கம்பனுக்குப் பின்னைத் தோன்றிய பெருங்கம்பன் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார். விரைந்தோடும் காலச் சூழலில் எத்தனையோ புலவர்களின் ஒளிபடைத்த வரலாறுகள் உருத்தெரியாமல் இழுத்துச் செல்லப்பட்டன. அதைப்போலவே மகாவித்துவானின் மாட்சிமை பொருந்திய வரலாற்றையும் காலச்சுவடானது தடயம் புலப்படாதபடி தேய்த்து அழித்திருக்கும். ஆனால் குருபக்தியை இறைஉணர்வாய்க் கொண்ட உ.வே.சா என்னும், மாணவரால் பிள்ளையவர்களின் வரலாறு திருக்கோயிலாகியது;அவ்வாறே அவரது பனுவல்களும் அம்மாணவராலும், மேற்கண்ட பிறராலும் பதிப்பாக்கப்பெற்று ஒளிவிளக்காகத் திகழ்கின்றன. எவ்வூர் செல்லினும் அவ்வூரின் தலபுராணமாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் புகழுடம்பு நின்று நிலவுகின்றது. பிள்ளையவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணியின் பெருமையை இன்றைய இளந்தமிழர்களுக்கு எடுத்துரைத்து உணர்த்துவது, தமிழைப் படித்தவர்களின் தலையாய கடமைகளில் ஒன்று!அதைத்தான் தற்போது திருவாவடுதுறை ஆதீனமும், உலகத் தமிழ்க்கல்வி இயக்கத்தின் இயக்குநரான தமிழ்ப்பேரறிஞர் முனைவர் ச.வே.சுப்பிரமணியனார் அவர்களும் செய்கின்றார்கள். அவர்களை வாழ்த்துவோம். நாம் நன்றி மறப்பது நன்றன்றல்லவா!

101. திருவாவடுதுறை ஆதீனம் பெற்ற பெரும்புலவர்

வே. இரா. மாதவன்
தஞ்சாவூர்.

சோழ நாட்டில் காவிரிக்கரையில் பசுக்கள் நிறைந்துள்ள தலம் திருவாவடுதுறை ஆகும். இறைவி பசுவடிவில் வழிபட்ட இத்தொன்மையான பதி மூவராலும் பாடப்பெற்றதாகும். இறைவன் வீரசிங்க ஆசனத்திலிருந்து சுந்தர நடனம் ஆடி மகாதாண்டவம் புரிந்த தலமும் இதுவேயாம். மேலும், ஞான சம்பந்தர், தம் தந்தையின் வேள்விக்காக இறைவனிடம் பொற்கிழி பெற்றது; சுந்தரர் உடற்பிணி தீரப் பிரார்த்தித்தது:திருவிடைமருதூரில் பரிவாரத் தலங்களுள் நந்தித் தலமாக விளங்குவது:தேவர்கள் 'படர் அரசு' ஆக விளங்க அதன்கீழ் இறைவன் எழுந்தருளியது;திருமூலர் தங்கியிருந்து தவம்செய்து திருமந்திரம் அருளியது;போக சித்தருடைய மாணவராகிய திருமாளிகைத் தேவர் பல அற்புதங்களை நிகழ்த்தியது;சேரமான் பெருமான் நாயனார், விக்ரம பாண்டியன் ஆகியோர் வழிபட்டது;முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டியது(புத்திரத் தியாகேசர்);சித்தர்க்கு அட்டமா சித்திகளை அருளியது;தருமதேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றது;திருமூலர், திருமாளிகைத்தேவர் முதலிய மகான்களுடைய சமாதிகள் இருப்பது முதலிய எண்ணற்ற சிறப்புக்களையுடையது இத்தலம். இங்குள்ள மாசிலாமணீசுவரர் திருக்கோயிலை அடுத்துள்ள ஆதீனமும் வரலாற்றுச் சிறப்புடையதாகும். மதுரையில் தோன்றி, திரிசிரபுரத்தில் வளர்ந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் (6.4.1815, 1.2.1876) தமிழ் மீதுள்ள காதலால் தருமபுரம், மதுரை, குன்றக்குடி, திருப்பனத்தாள் முதலிய மடங்களிலும் பிறவிடங்களிலும் சிறந்த மதிப்புப் பெற்றிருந்தவர். இவர்தம் வாழ்நாளில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் திருவாவடுதுறை ஆதீனத்துடன் கொண்டிருந்த தொடர்பையும் இப்புலவர் பெருமானால் ஆதீனம் பெற்ற பெருமைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழிநூல் பல நவிற்றும் தந்தை

மதுரைக் கணக்காயராக விளங்கிய சிதம்பரம் பிள்ளை என்பாரின் தவப்புதல்வராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை தம் இளம் வயதில் தந்தையாரிடமே பாடம் பயின்றார். பழம்பிறப்பிற் செய்த புண்ணியச் சிறப்பாலும், பரம்பரையின் சிறப்பாலும், தந்தையாரின் பழக்கத்தாலும் இவருக்குக் கல்வியறிவு மேன்மேலும் எளிதாகப் பெருகி வந்தது. தந்தை ஆசிரியராக இருந்த அப்பள்ளியிலேயே இவர் சட்டாம்பிள்ளையாகவும்

அமர்த்தப்பட்டார்.

அனைவரும் பாராட்டும் நினைவாற்றல் திறன், பழம்பாடல்களைக் கூர்ந்து ஆராயும் திறன், பெரியோர் பலர் பேசக் கேட்கும் கேள்வி ஞானம், படித்த செய்யுட்களில் கருத்துக்களமைய இனிமையாகப் பேசும் திறமை போன்றன இவருக்கு இளமையிலேயே இயற்கையாக அமைந்திருந்தன. பல ஊர்களிலும் பலராலும் பாராட்டப்பெற்ற தன் மகனின் பெரும்புகழை அருகிருந்து கண்டு மகிழ்ந்த தந்தையார் சிதம்பரம் பிள்ளை, இவருக்குப் பதினைந்து வயதானபோது இயற்கை எய்தினார், 'முந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும் தந்தை' இவரைப் பிரிந்ததும் அக்கவலையை மறக்க இவர் நூலாராய்ச்சியில் ஆழ்ந்தார்.

திரிசிரபுரம் வந்தது

தமிழ்ப் பயிற்சியை மேன்மேலும் பெற விரும்பிய இவருக்கு அப்பொழுது சோமரசம்பேட்டையில் பல நூல்கள் கிடைக்கவில்லை. கிடைத்த நூல்களைப் பாடங்கேட்பதற்கும் உண்டாகும் ஐயங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்வதற்கும் சிறந்த பெரியோர்கள் அங்கு இல்லை. இவற்றின் காரணமாக இவர் திரிசிரபுரத்திற்கு வந்து சேர்ந்தார். பின்னர், திரிசிரபுரத்திலும் அதனைச் சூழ்ந்துள்ள ஊர்களிலும் இருந்தவர்களிடம் தேடித் தேடிச் சென்று இவர் பல நூல்களை முயன்று கற்றார். இவருடைய கவியாற்றல் பலரையும் இவர்பால் ஈர்த்தது.

வேலாயுத முனிவரிடம் பாடங்கேட்டது

திருவாவடுதுறை ஆதீன மடத்தில் முறையாகப் பல நூல்களைப் பெரியோர்கள் பாற் கற்றுத் தேர்ந்தவர் வேலாயுதமுனிவர். இவர், திருச்சி மலைக்கோட்டையிலுள்ள மௌனசுவாமிகள் மடத்தில் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவருடைய கல்வியறிவை நன்கு அறிந்த பிள்ளையவர்கள் அவரிடம் காலை மாலை வேளைகளில் தவறாது சென்று முயன்று வழிபட்டு நூல்களை முறையே பெற்றுப் பிரதிசெய்து கொண்டு படித்தும் பல நாட்களாகத் தாம் படித்த நூல்களில் உள்ள ஐயங்களை வினாவித் தெளிந்தும் வந்தனர். அம்முனிவரால் இவருக்குப் பல தமிழ் நூற்பெயர்களும் தெரியவந்தன. அக்காலத்தில் இவருடன் திரிசிரபுரம் வித்துவான் கோவிந்தபிள்ளை என்பவரும் அவரிடம் பாடம் கேட்டு வந்தனர்.

கச்சியப்ப முனிவர் நூல்களைப் படித்தது

சிவதீட்சை பெற்று நாள்தோறும் சிவபூசை செய்து வந்த பிள்ளையவர்களுக்கு இருபத்தொரு வயதான நிலையில் பல அரிய தமிழ் நூல்களின் பயிற்சி கிட்டியது. இவர் புத்தகங்களைத் தேடுகையில் திருவானைக்கோயில் தர்மகர்த்தாவின் வீட்டில், திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவானாகிய கச்சியப்ப முனிவராற் செய்யப்பெற்ற திருவானைக்காப் புராணம் கிடைத்தது. அதை முறையே படித்து வருகையில் கடவுள் வாழ்த்தின் அழகும், நாட்டுச் சிறப்பு முதலிய காப்பிய உறுப்புகளின் அமைதியும், அவற்றிற் பழைய நூல் மேற்கோள்களும், இலக்கண

அமைதிகளும், தம்மால் அதுவரையில் அறியப்படாத சைவசாத்திரக் கருத்துக்களும், சைவ பரிபாஷைகளும், புதிய புதிய கற்பனைகளும் நிறைந்து சுவை ததும்பிக் கொண்டிருத்தலையறிந்து இன்புற்றுப் பன்முறை படித்து ஆராய்ச்சி செய்வாராயினார். அதனைப் படிக்கப் படிக்க அதுவரையிற் படித்த பல நூல்களினும் வேறு தலபுராணங்களினும் அது மிக்க சுவையுடையதென்று அறிந்து கொண்டனர். பின்னர், கச்சியப்ப முனிவர் செய்த வேறு நூல்களையும் தேடிப் படிக்க முற்பட்டார். விநாயகபுராணத்திற் சில பகுதிகள், பூவாளூர்ப் புராணம், காஞ்சிப் புராணம் ஆகிய நூல்களைப் படித்தபொழுது, இடையிடையே ஐயங்கள் சில நிகழ்ந்தன. அவற்றைத் தீர்ப்பவர்கள் அந்தப் பக்கத்தில் இல்லை. அவற்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமாயின் தாம் திருவாவடுதுறை ஆதீனத்திற்கே சென்றுவர வேண்டுமெனவும் அதற்காக இவ்வாதீனத்தின் தொடர்பை எந்த வழியாகவேனும் பெற வேண்டுமென்னும் விருப்பமும் பிள்ளையவர்களுக்கு உண்டாயின.

திருவாவடுதுறையை அடைந்தது

திரிசிரபுரத்திலிருந்து திருவாவடுதுறை செல்லப் புறப்பட்ட பிள்ளையவர்கள் வழியில் பட்டீச்சுரம், திருவலஞ்சுழி, சுவாமிமலை, கும்பகோணம், திருவிடைமருதூர், போன்ற தலங்களைத் தரிசித்து, அங்கங்கே அனைவராலும் பாராட்டப் பெற்றார். சீர்வளர்சீர் நமச்சிவாய மூர்த்திகள் காலத்தில் நிறுவப்பெற்ற திருவாவடுதுறை மடத்தினை அடைந்த இவர் அங்குள்ள காட்சிகளைக் கண்டு பெருவியப்பும் பெரு மகிழ்ச்சியும் கொண்டார். சிவ வேடமும் தல வேடமும் உடைய பல துறவிகள் அங்கே நிறைந்திருந்தனர். அடிக்கடி பல ஊர்களிலிருந்து அடியார்களும் பிரபுக்களும் பண்டிதர்களும் திருமடத்திற்கு வந்த வண்ணம் இருந்தனர். வித்துவான்கள் பலர் தம் திறமைக்கேற்ப பரிசுகளைப் பெற்று மகிழ்ந்திருந்த காட்சிகளையும், இறைத்தொண்டில் திளைத்திருந்த சிவனடியார்களின் திருக்கூட்டங்களையும் ஒருங்கே கண்ட பிள்ளையவர்கள் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "இத்தகைய காட்சியை இதுவரையில் நாம் கண்டிலோமே. எங்கே பார்த்தாலும் சிவமணமும் தமிழ் மணமும் உள்ள இந்த இடத்தைப் போன்ற வேறு ஓர் இடம் உலகத்தில் இருக்குமோ!சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் முதலியவர்கள் இத்தகைய இடத்தில் இருக்கப் பெற்றதனால்தானே சுவை மிகுந்த நூல்களை இயற்றியுள்ளார்கள்" என எண்ணி இத்திருமடத்தின் மேன்மைச் சிறப்பில் ஆழ்ந்து பரவசமானார். இனி, இத்திருமடத்தொடர்பே தம் பிறப்பின் பயன் என உணர்ந்தார்.

வேளூர் சுப்பிரமணிய தேசிகர் அருளாசி

அப்பொழுது, நமச்சிவாய மூர்த்திக்குப் பின் பதினான்காம் பட்டத்தில் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் ஆதீனகர்த்தராக வீற்றிருந்தார். வடமொழி தென்மொழி நூல்களிலும் சிவாகமங்களிலும் சாத்திர நூல்களிலும் பயிற்சிமிக்க இவ்வாதீனகர்த்தரை நேரில் தரிசித்த பிள்ளையவர்கள் தம் ஈடுபாட்டுணர்வை மிக்க அன்பாகத் தெரிவித்தார். தேசிகர் அவர்களும்

இவருடைய ஈடுபாட்டை மெச்சி அருளாசி வழங்கினார்கள். பின்பு, அவரிடம் பாடங்கேட்கும் சமயங்களில் இவருக்கு இருந்த ஐயங்களில் பலவற்றையும் தீர்த்தருளினார்கள்.

விநாயக புராணத்தின் பாயிரத்தில் உள்ள 'கரந்துளக்குங் குறுமுனிக்கு' என்னும் பகுதிக்கு இவருக்கு நெடுநாளாகப் பொருள் விளங்காமல் இருந்தது. பலர் கூறிய பொருள்களிலும் இவருக்கு மனநிறைவு இல்லை. இதனை இவர் தேசிகர்பால் விண்ணப்பம் செய்தனர். உடனே அவர் உள்ளங்கையை யேந்தி மறித்துக் காட்டிக் கடலை உண்டது கையை ஏந்தினமையால் என்றும் விந்தத்தை அழுத்தியது கையைக் கவித்தமையால் என்றும் பொருள் கூறினார். கேட்ட இவருக்குப் பெருமகிழ்ச்சி. உயர்ந்தோர்களிடத்துச் சிலபொழுதேனும் பழகுதலால் உண்டாகும் பெரும்பயனை அன்று இவர் நேரில் உணர்ந்தார். "இந்தப் பெரியவர்களை இதுகாறுந் தரிசியாமல் பலரிடத்தும் அலைந்தலைந்து வீணே காலங்கழித்து விட்டோமே" என்று மனம் வருந்தினார். இவ்வாறு இவர் தேசிகர்பால் கேட்டுக் கேட்டுத் தீர்த்துக் கொண்ட ஐயங்கள் பல. இவருக்கு நெடுநாளாகப் பொருள் விளங்காதிருந்த ஒலியல், கழுவாய், சைலாதி, வருதினி, வாதராயணர் என்னும் சொற்களுக்கு முறையே ஈயோட்டி என்னும் விருது, பிராயச்சித்தம், திருநந்திதேவர், சேனை, வியாசர் என்று பொருள் தெரிந்து கொண்டது தேசிகரிடத்தேதான் என்பதை இவரே அடிக்கடி அனைவரிடமும் கூறுவர். இவ்வாறு பல அரிய செய்யுட்களின் பொருள்களையெல்லாம் அடிக்கடி இவர் நேரில் முயன்று கற்றுத் தெளிந்தனர்.

பெரும் பேறு பெற்றமை

இவ்வாதீன கர்த்தரின் தரிசனத்தின் பின்புதான் தமிழின் பரப்பும் பெருமையும் இவருக்கு விளங்கின; தமிழில் பல நூல்களும் அவற்றில் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த பகுதிகளும் உள்ளன என்று அறிந்தனர். "இந்த மடத்தின் தொடர்பைப் பெற்றது பெரும் பேறு" என்றும், "இத்தொடர்பை எப்பொழுதும் பெற்றுய்ய வேண்டும்" என்றும் இவர் இடைவிடாது எண்ணி வந்தனர்.

பின்னர், இவர் சென்னை சென்று சுமார் ஒரு ஆண்டு தங்கியிருந்தார். அப்பொழுது அங்கிருந்த காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை, எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியார், மழவை மகாலிங்கையர் போன்ற பல தமிழ் பேரறிஞர்களிடம் அளவளாவி பல ஐயங்களைப் போக்கிக் கொண்டார்.

அம்பலவாண முனிவரிடம் பாடங் கேட்டல்

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் பரிபூரண தசையை அடைந்த பின்னரே பிள்ளையவர்கள் அங்கு மீண்டும் சென்றார். அப்பொழுது, அங்கே பதினைந்தாம் பட்டத்தில் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் அவர்கள் ஆதீனத் தலைவராக விளங்கினார்கள்.

சூரியனார் கோயிலிலுள்ள சிவாக்கிரயோகிகள் மடத்துத் தலைவராக அம்பலவாண தேசிகரால் நியமிக்கப்பட்ட அம்பலவாண முனிவர் என்பவர் தொண்ணூற்றாறு வயது நிரம்பிய பெரியவர். நிரம்பப் படித்தவர், சைவ புராண, சாத்திர நூல்களில் மிகுந்த ஆராய்ச்சியுடையவர்,. அவரிடம் பிள்ளையவர்கள் மிகவும் அரிதின் முயன்று சில நூல்களைப் பாடங் கேட்டார்.

திரிசிரபுரம் வந்த பின்பு இவர் திருவாவடுதுறைக்கு அடிக்கடி சென்று அங்கே கல்வி கேள்விகளிற் சிறந்திருந்த தம்பிரான்களோடு பழகித் தமக்குள்ள ஐயங்களை வினாவித் தெளிந்து கொள்வார். அங்ஙனம் தெளிந்ததை இவர் பின்பு இயற்றிய பிரபந்தங்களிலும் காப்பியங்களிலும் அமைந்துள்ள சைவ சாத்திரக் கருத்துக்கள் புலப்படுத்தும்.

தாண்டவராயத் தம்பிரானவர்கள்பால் பேரூர்ப்புராணம் பெற்றது

திருவாவடுதுறை ஆதீனத்தில் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தாண்டவராயத் தம்பிரான் அவர்களிடம் பல நூல்களைப் பாடங்கேட்டு வந்தார்கள். அப்பொழுது சென்னையிலிருந்த தம்பிரான் அவர்கள் கல்லிடைக்குறிச்சி செல்வதற்குப் பயணமாகித் திரிசிரபுரம் வந்து மௌனசுவாமி மடத்தில் சிலநாள் தங்கியிருந்தனர். அவரிடம் பேரூர்ப் புராணச் சுவடி இருந்ததை அறிந்த பிள்ளையவர்கள் அதனை மிக விரும்பிக் கேட்டுப் பெற்று, அரிதின் முயன்று சுவடி பெயர்த்து எழுதி அகமிக மகிழ்ந்தார். இவருடைய அருமை பெருமைகளை உணர்ந்த தம்பிரான் அவர்கள், "இவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து பாடஞ் சொல்வாராயின் இவருடைய கல்வி பலர்க்குப் பயன்படக்கூடும்;ஆதரவும் ஊக்கமும் இவருக்கும் வளர்ச்சியடையும்" என்று எண்ணினார். அக்கருத்தை மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடத்தும் தம்பிரான் அவர்களே வெளியிட்டனர்.

"பாடஞ் சொல்வதிலும் செய்யுள் செய்வதிலும் அவருக்கு இணையாக இக்காலத்தில் யாரும் இல்லையென்று சொல்லலாம்; இடைவிடாமற் பாடம் சொல்வதிற் சிறிதேனும் சலிப்பில்லாதவர்;நிறைந்த கல்விமான், இந்த ஆதீன வித்துவானாக அவர் நியமிக்கப்படுவராயின் ஆதீனத்தின் புகழ் எங்கும் பரவும். அவரைக் கொண்டு பல மாணாக்கர்களைப் படிப்பிக்கலாம்" என்று தம்பிரான் அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டனர். அக்கால முதல் சுப்பிரமணிய தேசிகர் இவரை ஆதீனத்தில் இருக்கச் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் உடையவராகி இருந்தனர்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஆகியது

தமிழ்ப் பெருங்கவிஞராகிய மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் பரம்பரையில் அவதரித்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள். இயல்பிலேயே தமிழார்வம் மிக்க இவர் திறமைமிக்க வித்துவான்களைப் போற்றி ஆதரிக்கும் திறனுடையவர். இவரே பிள்ளையவர்களை ஆதீன வித்துவானாக்கப் பெரிதும் முயற்சி மேற்கொண்டவராவார்.

அப்பொழுது ஆதீன கர்த்தராக இருந்த அம்பலவாண தேசிகரிடம் பிள்ளையவர்களுடைய பெருமைகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார் சின்னப்பட்டம் சுப்பிரமணிய தேசிகரவர்கள். "தமிழில் மிக்க பயிற்சியுள்ள மீனாட்சி சுந்தரம் பிள்ளையை இவ்விடத்திலே இருக்கச் செய்து தம்பிரான்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழ்ப் பாடங்களை முறையாகச் சொல்லி வருமாறு சந்நிதானத்திற் கட்டளையிட்டால் நலமாயிருக்கும். படிப்பதற்குப் பலர் காத்திருக்கிறார்கள்'' என்று விண்ணப்பித்தார். அப்போது ஆதீனகர்த்தர் பல கேள்விகளைக் கேட்டு இவரைப் பற்றி விசாரித்தார்கள். அவை அனைத்திற்கும் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தக்க விடை பகன்று பிள்ளையவர்களுக்காகப் பேசினார்கள். ஆதீன வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் இவரைப் பற்றிக் கூறிய செய்திகளையெல்லாம் ஆதீனத்திடம் தெரிவித்தார்கள்.

"இப்பொழுது வழங்கும் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் யாதொரு சிரமமும் இல்லாமல் மிகவும் சுலபமாக இடைவிடாமற் பாடஞ்சொல்லும் ஆற்றலையுடையவர் என்றும், அவ்வாறு சொல்வதொன்றே இவருக்குத் திருப்திதரப் போதுமானது என்றும், பல நூல்களை இயற்றியுள்ளார் என்றும் சொல்லியிருக்கிறார். இவருக்கு அவ்வாறு பாடஞ் சொல்லுவதே பொழுதுபோக்காகும். இவரைப் போற் சிரமமில்லாமற் பாடஞ் சொல்லுவதற்குச் சிறிதேனும் தம்மால் இயலாதென்றும், இவர் இருந்தால் மடத்திற்கு இன்னும் விசேஷமான கௌரவங்கள் உண்டாகுமென்றும், வித்துவான்கள் பலரிடத்தும் சென்று பாடங்கேட்டதனால் இந்த ஆதீனத்திலிருந்த சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் முதலியவர்களுடைய நூல்களை இவரையன்றிச் சொல்பவர் இல்லை என்றும் அடிக்கடி இவரைப் பற்றிப் பாராட்டிப் பேசி மகிழ்வார். மேலும், இவர் பல ஆண்டுகளுக்கு முன் வேளூர் மகா சந்நிதானத்தின் காலத்தில் அவர்களைத் தரிசித்து அவர்களாற் பாராட்டப் பெற்றவராம்" எனப் பலவாறு சுப்பிரமணிய தேசிகர் எடுத்துரைக்கின்றார்.

தமிழாசிரியருக்குச் சிறப்புச் செய்க

"படித்த வித்துவான்கள் இருத்தலும் அவர்களைக் கொண்டு பலரைப் படிப்பித்தலும் மடத்துக்கு ஏற்றவையாகும். அது சந்நிதானத்திற்குத் தெரிந்ததே. சமஸ்கிருத வித்துவான்களாக மடத்திற் பலகாலமாக இருந்தவர்களில் திருக்கோடி காவல் கோதண்டராம சாஸ்திரிகள், ராமகுட்டி சாஸ்திரிகள், திருவாலங்காட்டு விசுவபதி தீட்சிதர், அப்பா தீட்சிதர், அப்பைய தீட்சிதர், தியாகராய சாஸ்திரிகள் முதலியோர் இருந்து வடமொழியைப் பிரகாசப்படுத்துகிறார்களே? இங்கே சமஸ்கிருதம் படிக்க வருபவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுத்துப் படிப்பிப்பது போலத் தமிழ் கற்பவர்களுக்கும் அனுகூலம் செய்ய வேண்டுவது அவசியமே. சமஸ்கிருதத்தில் அவர்களெல்லோரும் எவ்வாறு சிறப்புற்று விளங்குகிறார்களோ அவ்வாறே இவரும் தமிழிற் பெரியவராக விளங்குகிறார். சிவஞான முனிவர் முதலிய பல பெரிய வித்துவான்கள் தமிழைப் பரிபாலனம் செய்தமையால் வித்தியா தானத்தில் மிகக் கீர்த்தி

பெற்ற இந்த இடத்தில் இவர் அவசியம் இருத்தல் வேண்டும். அதனால் மடத்தின் கௌரவம் பெருகும்;துரைத்தனத்தாரும் (ஆங்கில ஆட்சியாளர்) நம்மை மதிக்கும் நிலை உண்டாகும். இவருக்குப் பல உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களும் பழக்கம் உண்டு;ஆதலால் அவர்களெல்லாரும் நம்மை இன்னும் அதிகமாகக் கௌரவிக்கக் கூடும்" என இவ்வாறு கூறி, பிள்ளையவர்களால் ஆதீனப் புகழ் மேலும் ஓங்கும் என்பதைச் சுப்பிரமணிய தேசிகர் ஆதீனகர்த்தரிடம் விளக்கினார்.

புலவர் பெருமானின் அருமையை உணர்ந்த ஆதீனகர்த்தர் இவரை உடனே ஆதீன வித்துவானாக நியமித்தார். இவருக்கான அனைத்து உதவிகளையும் தரச்செய்து, இவருக்காக இரண்டு தவசிப் பிள்ளைகளையும் திட்டம் செய்து, பிள்ளையவர்களின் மாணாக்கர்களும் உடனிருந்து செயலாற்ற அனைத்து ஏற்பாடுகளுக்கும் மாணாக்கர்களும் உடனிருந்து செயலாற்ற அனைத்து ஏற்படுகளுக்கும் கட்டளையிட்டருளினார்கள்.

அப்போது பிள்ளையவர்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தம்மை ஆதீனத்து வித்துவானாக்கியது திருவருளேயென நினைந்து உருகினார். அன்று முதல் பல தம்பிரான்களுக்கும் அவரவர் திறனுக்கேற்ற பாடங்களை நடத்திவந்தார்.

பசுத்தொழுவம் - பாடஞ் சொல்லுமிடம்

இக்கவிஞர்பிரான் இருப்பதற்காகத் திருவாவடுதுறை மடத்திற்கு எதிரில் இருந்த ஒரு பசுத்தொழுவம் செப்பனிடப்பட்டு விடுதியாக அமைக்கப்பட்டது. அது விசாலமான முற்றத்தையுடையது. அதனை மிகவும் பரிசுத்தமான இடமென்று நினைந்து இவர் அங்கேயே இருந்து வந்தனர். பாடஞ்சொன்ன காலங்களையன்றி மற்றக் காலங்களில் தாம் பாடவேண்டிய நூல்களைப் பாடி மாணவர்களைக் கொண்டு எழுதுவித்தும் வந்தார். தம்முடைய மாணவர்கள் கவலையின்றி உண்டு பாடங்கேட்பதற்குரிய வசதிகள் அமைந்தமையால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதிற்கில்லையே என்று முன் கவலையுற்றிருந்த இவருக்கு இப்போது அளவற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. இதுவும் திருவாவடுதுறையிற் கோயில் கொண்டுள்ள சுவர்ணத்தியாகேசப் பெருமான் திருவருளும் நமச்சிவாய மூர்த்தியின் திருவருளுமே என்றே உவகை கொண்டார்.

திருவாவடுதுறை மடத்து சம்பிரதாயங்களையெல்லாம் நன்கு விசாரித்து அறிந்த பிள்ளையவர்கள் சில தினங்களில் அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் ஒன்று பாடி அரங்கேற்றினார்.

மகாவித்துவான் - பட்டம் பெற்றது

திருவாவடுதுறை தொடர்பாகப் பல பிரபந்தங்கள் இருந்தாலும் அம்பலவாண தேசிகர் கலம்பகம் எல்லாவற்றிலும் சிறந்ததாகவும் பொருள்நயம் செறிந்ததாகவும், சைவ சம்பிரதாயங்களையும் ஆதீன

சம்பிரதாயங்களையும் விளக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதென்று பலரும் கொண்டாடினார்கள். அப்பொழுது பெரிய காறுபாறாகவும், ஆதீன வித்துவானாகவுமிருந்த கனகசபைத் தம்பிரான் போன்றோர், "இவர்களுக்குச் சந்நிதானம் தக்க மரியாதை செய்தருள வேண்டும்" என்று தலைவரிடம் விண்ணப்பித்தனர். அதனைக் கேட்ட ஆதீன முதல்வர் அம்பலவாண தேசிகர் அவர்கள் இவருக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டம் அளித்து, சால்வை முதலிய பரிசில்களும் அளித்து மகிழ்ந்தார்கள். அத்தகைய பட்டத்திற்கு ஏற்ற பெரும்புலவர் இவரே என்பதை அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

ஆதீனம் அடைந்த பெருமைகள்

பின்பு, அம்பலவாண தேசிகர் மீது பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றும் இவர் இயற்றி அரங்கேற்றினார். அப்பொழுது, அந்நூலின் பெருமையை உணர்ந்த தேசிகர் மிகவும் மகிழ்வுற்று, தாம் சேமத்தில் வைத்திருந்த கல்லிழைத்த ஏறுமுக ருத்திராட்ச கண்டி யொன்றை வருவித்து, இவர் கழுத்திற் புனைந்தார் என்பர்.

இவ்வாறே பல நிகழ்ச்சிகளில் அம்பலவாண தேசிகருக்குப் பிள்ளையவர்களிடத்து மிக்க மதிப்பும் கருணையும் உண்டாயின. "இவர் இருப்பது மடத்திற்குக் கௌரவம் என்று சின்னப் பண்டாரம் சொன்னது சரியே. இவருக்கு என்னதான் செய்விக்கக் கூடாது!"என்று எண்ணிக் காறுபாறு முதலிய மடத்து அலுவலர்கள் பலரையும் அழைத்து, "இவருக்கு எந்தச் சமயத்தில் எது வேண்டுமாயினும் குறிப்பறிந்து கொடுக்க வேண்டும்;யாதொரு குறையுமின்றி இவரைப் பாதுகாத்து வரவேண்டும்" என்று கட்டளையிட்டார்கள்.

மடத்திற்கு வரும் பிரபுக்கள் அனைவரும், ''இத்தகைய மகாவித்துவானை ஆதரித்து வருதலும் இவர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்வித்து வருதலும் மடத்திற்கு ஏற்ற தருமங்களேயாகும். இந்த வித்துவானால் மடத்தின் புகழ் மிகுதிப்படும்" என்று தலைவரிடம் சொல்லிச் செல்வர். இதனாலும் ஆதீனத் தலைவருக்கு இவர்பால் மதிப்பு மிகுந்து வந்தது.

பின்பு, 1869-இல் அம்பலவாண தேசிகர் பரிபூரணம் ஆனார்கள். சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் பெரிய பட்டம் ஆயிற்றென்று அறிந்த பிள்ளையவர்கள் மடத்திற்கு வந்து தரிசித்தார்கள். பின்பு அடிக்கடி வந்து ஆதீனத் தலைவருடன் அளவளாவி மகிழ்ந்திருந்தார்கள். பின்னர், தம்முடைய மாணாக்கர் உ.வே. சாமிநாதையரையும் ஆதீனத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். மடத்திலேயே தங்கி அங்குள்ள சில தம்பிரான்களுக்கும் வேறு சிலருக்கும் பாடஞ் சொல்லி வந்தார். இடையிடையே பல நூல்களையும் இயற்றி வந்தார்.

சிவபதம் அடைந்தது

1876 ஆம் ஆண்டு திருவாவடுதுறையில் அருள்மிகு

கோமுத்தீசுவரருக்குப் பிரமோத்சவமும் மடத்தில் தைக் குருபூசையும் நடைபெற்று வந்த வேளையில் பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்தார்கள். ஆதீனமும், திருமடத்து அன்பர்களும், அருமை மாணாக்கர்களும், ஊர் மக்களும் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை. உ.வே.சாமிநாதையர் போன்றவர்களுக்கு ஆதீனத் தலைவரே ஆறுதல் கூறித் தேற்றினர். பிள்ளையவர்களோடு தொடர்புடைய பல பெரிய வித்துவான்களும் நேரில் வந்து சந்நிதானத்திடம் ஆறுதல் பெற்ற வண்ணமிருந்தனர்.

ஆதீன முதல்வரின் அகநெகிழ்வு

ஆதீன முதல்வர் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்த பலரிடம் பிள்ளையவர்களுடைய குணங்களையும் கல்விச் சிறப்பையும் பற்றிப் பாராட்டியும் பிரிவைப் பற்றி வருத்தமுற்றும் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தனர். "தேசாந்தரங்களிலெல்லாம் பிள்ளையவர்களுடைய பெரும் புலமைத்திறம் புகழப்படுகிறது. அவர்கள் பெயரோடு நமது மடத்தின் பெயரும் விளங்குகின்றது. அந்தப் புலவர் மணியின் ஆற்றல் இந்த மடத்தை எல்லோருக்கும் உரிய கல்வி நிலையமாகச் செய்தது. வைதிக மதத்தவர்களும் பிற மதத்தவர்களும் பல்வகைச் சாதியினரும் தமிழ் நூல்களைத் தடையின்றிப் பாடஞ் சொல்லும் அவர்களை எண்ணி எண்ணி இங்கே வந்தனர். நமது மடத்துக்கும் கௌரவத்தை அளித்தார்கள். முன் பழக்கமில்லாத எத்தனையோ உத்தியோகஸ்தர்களும் வேறு வகையான பிரபுக்களும் இந்த மடத்திற்கு வந்திருக்கிறார்கள். எல்லாம் அவர்களால் வந்த பாக்கியமே. பணமும் இடமும் அதிகாரமும் சாதியாத எவ்வளவோ காரியங்களை மடத்திற்காக அவர்கள் சாதித்து உதவியிருக்கிறார்கள். அவ்வளவுக்கும் இந்த மடத்திலிருந்து அவர்கள் பெற்ற பயன் சிறிதளவேயாகும். எங்கே இருந்தாலும் அவர்கள் தம்முடைய தமிழரசாட்சியை நடத்தியிருப்பார்கள். அதற்கு இம் மடத்தை அமைத்துக் கொண்டது ஆதீனத்தின் பாலுள்ள அபிமானமே. இந்த ஆதீன குலதெய்வமென்று சொல்லப்படுகிற சிவஞான முனிவர் முதலிய பெரியோர்களால் இவ் வாதீனம் தமிழ்க் கல்வியில் மிக்க சிறப்பை அடைந்ததாயினும் மடத்திலிருந்தே பாடம் சொல்லித் தமிழை விருத்தி செய்யவில்லையே என்ற குறை இந்த மடத்திற்கு இருந்து வந்தது. அக்குறை பிள்ளையவர்களாலேதான் தீர்ந்தது. இனிமேல் அத்தகைய உபகாரிகள் எங்கே பிறக்கப் போகிறார்கள்!. . . . அவர்களிடம் மதிப்புள்ள எத்தனை பேர் தம்மாலான அனுகூலங்களை மடத்திற்குச் செய்திருக்கிறார்கள்!'திருவாவடுதுறை ஆதீனம் செந்தமிழ்ச் செல்வியின் நடன சாலை' என்று பிற்காலத்திலும் யாவரும் கூறும் வண்ணம் செய்வித்த அவர்கள் இல்லாத குறை இனி என்றைக்கு நீங்குமோ தெரியவில்லை. . . . . கவித்துவ சக்தியை நேரில் காணாமல் யாராவது கேட்டால் உண்மையென்று நம்பமுடியாதபடி அவ்வளவு ஆச்சரியமாகப் பாடும் அந்த மகாகவியைத் தமிழ்மொழி இழந்த நட்டத்தை நீக்குதற்கு இனி யாரால் முடியும்?'' என இவ்வாறு ஆதீன முதல்வர்கள் பலவாறு சொல்லிக்கொண்டே இருந்தனராம்.

மிற்காலத்தில், பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்குரிய நலன்களையும் ஆதீனமே ஏற்று உதவி வந்தமையையும் இங்கே குறிப்பிடல் தகும்.

சேர்ந்திருந்த தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்துறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நிழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. (திருமந்திரம் 79)

என்பது திருமூலர் திருவாக்கு.

இத்தகைய தலத்தின் பெருமையையும், ஆதீனத்தின் பெருமையையும் ஒருங்கே உய்த்துணர்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்திருமடத்துடனேயே ஐக்கியமானார்கள். ஆதீனத்தால் இவர் பெற்ற பெருமைகளும், இவரால் ஆதீனம் பெற்ற பெருமைகளும் ஒன்றையொன்று விஞ்சி நிற்பன. இத்தகையதொரு சிறப்பு நிலையை வேறு எந்தப் புலவர் வரலாற்றிலும் காண்பதரிது.

இவருடைய வரலாற்றை வரைந்த டாக்டர் உ.வே. சாமிநாதைய்யர் அவர்கள், இவரால் தமிழ்நாட்டிற்கு உண்டான பயன்களைத் தொகுத்துரைத்திருப்பதும் இவண் எண்ணல் தகும்.

"இப் புலவர் பிரானால் தமிழ் மக்கள் பெற்ற பயன் மிகப் பெரிதாகும். புதிய புதிய நூல்களை இயற்றித் தமிழ் நயங்களை அமைத்துக் காட்டிய இவருடைய செய்யுளால் பலவகைச் சுவைகளை அறியும் பயனைத் தமிழ்மக்கள் பெறுகின்றனர். புது நூல்களை இயற்றியதோடு நில்லாமல் தாம் வருந்தித் தேடிய பழைய நூல்களை விளக்கி வைத்த இவருடைய செயல் தமிழ் நாட்டாரால் என்றைக்கும் நினைக்கத் தக்கதாகும். தமிழ்ப்பாடஞ் சொல்லிச் சொல்லி மாணாக்கர் கூட்டத்தை வளர்த்து அவர்கள் மூலமாகத் தமிழறிவைத் தமிழ் மக்களுக்குப் பயன்படச் செய்த வள்ளல் இவர். எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும் பழைய புராணங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பயின்று இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இவருடைய தொடர்பேனும் இவர்பாற் பாடங் கேட்டவர்களுடைய தொடர்பேனும் பெரும்பாலும் இருக்கும். இன்றளவும் ஓரளவில் புலவர்களுடைய நூல்களின்பால் உள்ள மதிப்புக்கு மூலகாரணம் இவரென்றே சொல்லலாம். தமிழ் தெய்வத்தின் திருத்தொண்டர்களாகித் தமிழகத்தைத் தமிழன்பில் ஈடுபடுத்திய பெரியார்களுடைய வரிசையில் இவரும் நிற்பர். தமிழ்நூற் கோவைகளில் இவருடைய நூல்களும் முத்துக்களைப் போல விளங்குகின்றன. இனியும் அவை தமிழ்மக்கள் உள்ளத்தில் இன்பத்தை உண்டாக்கிக் கொண்டே என்றும் குன்றா இளமையோடு விளங்கும். அவற்றை ஊன்றிப் படிப்பவர்கள் பிள்ளையவர்களின் புலமை உருவத்தை உணர்ந்து மகிழலாம். தமிழ் உள்ளளவும் இவருடைய பெரும்புகழ் நின்று 'நிலவுமென்பது திண்ணம்".

திருவாவடுதுறை ஆதீனம் பதினைந்தாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் அருளாட்சி காலத்தில் (கி.பி. 1845 முதல்

1869 வரை) ஆதீன மடாலயம் ஒரு பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தது. இதற்குப் பெருங்காரணமாக அமைந்தவர் நம் பிள்ளையவர்களே யாவார். பதினாறாவது குருமகா சந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சி காலத்தில் (1869-1888)சுமார் ஏழு ஆண்டுகள், இங்கிருந்த பிள்ளையவர்களிடம் பாடம் பயின்ற டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றோரது பொற்காலமாகும். அடுத்ததாக அருளாட்சி புரிந்த ஆறு குருமகா சந்நிதானங்களும் இவ்வாறே இறைப்பணியோடு தமிழ்ப்பணியும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர்.

இப்பொழுது இருபத்து மூன்றாவது குருமகாசந்நிதானமாக விளங்கும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதீன குருபீடத்தை அலங்கரித்து அருளாட்சி செய்து வருகின்றார்கள். சமயப்பணிகள் பலவற்றோடு கல்விப்பணிகள் பலவற்றையும் இவர்கள் மேற்கொண்டுள்ளமை இவண் குறிப்பிடத் தக்கதாகும். குறிப்பாக, சுவாமிகளின் திருவுளப்பாங்கின் வண்ணம், ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் நினைவாக ஆதீன குருமுதல்வர் மகரத் தலைநாள் குருபூசை (தை-அசுவதி)விழாவின் ஐந்தாம் திருநாளில் தமிழ்ப்புலமையும், தமிழ்த்தொண்டும் ஆற்றிய முதுபெரும் புலவர் ஒருவர்க்கு 1993 ஆம் ஆண்டு முதலாகத் தொடர்ந்து ஆண்டுதோறும் ரூ.2,000/- கொண்ட பொற்கிழியும், தங்கக் கணையாழியும், பொன்னாடையும் வழங்கப்பெற்று வருகின்றன. இதுவரையில், ஏழு தமிழ் மூதறிஞர்கள் இந் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். இப்பொழுது, குருமகா சந்நிதானம் அவர்கள் இந்த 2000 ஆவது ஆண்டில், ஆதீன மகாவித்துவானுக்காக இலக்கிய ஆய்வு மாநாட்டையும் கருத்தரங்கையும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளுக்கும் அருளாசி வழங்கிப் புரவலராகவும் இருந்து தமிழருளாட்சி புரிந்து வருகிறார்கள். முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் செந்தமிழ்ச் செம்மல் முனைவர். ச.வே. சுப்பிரமணியனார் அவர்களும், தமிழுலகம் போற்றும் பதிப்புச் செம்மலாக விளங்கும் பேராசிரியர் ச. மெய்யப்பனார் அவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தோடு இணைந்து மகாவித்துவானுக்காக நிகழ்த்தும் இத்தமிழ் மாநாடு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

102. குருவும் சீடரும்

அழ. முத்துப்பழனியப்பன்
வேதாரண்யம்

குருவருள் இல்லாமல் இறைவனின் திருவருள் கிட்டா என்பது மரபு. தெரியாதனவற்றைத் தெரிவித்தும், புரியாதனவற்றை புரிய வைத்தும், ஒரு புது உலகிற்கு மனிதனை மாற்றம் செய்வது குருவருள் தான். சென்ற நூற்றாண்டில் ஒரு குரு என்பவர், உண்மையிலேயே ஒரு பெருந்தகையாக விளங்கி, தன்பாற் சார்ந்த மாணவர்கட்கு நல்லறிவு புகட்டுவதுடன், அவர்கள் வாழ்வு செம்மையுற வேண்டும் என்ற பெருங்கொள்கை உடையவராயும் இருந்தார்கள்.

ஓதல், ஓதுவித்தல் என்ற பெருங் கொள்கையை, அவர்கள் குறைவறக் கடைபிடித்தார்கள்" "உடலை வளர்த்தற்குரிய பலவகையான பொருள்களை வழங்கும் அறங்களினும், உள்ளத்தின் உணர்வு வளர்ச்சிக்குக் காரணமான கல்வியை வழங்கும் வள்ளன்மை சிறந்ததாக ஆன்றோர்களால் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றது. ஒருமைக் கண் கற்ற கல்வி எழுமையும் பயன் தருதலால் அதனை வழங்கும் பெரியோர்கள் உலகில் உயர்ந்தவர்களாகவும், பேருபகாரிகளாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் செய்த பேரறத்தின் பயனாகவே கலைவளம் சிறந்து விளங்குகின்றது". என்பார் உ.வே.சா.

இத்தகைய பெருந்தகைகளில் ஒருவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். 19 ஆம் நூற்றாண்டில் மிகப் பெரும் கவிஞர் திலகமாகப் போற்றப்படுகின்றவர். தன்பாற் சார்ந்த மாணவர்கட்கு, உண்டியும், உறையுளும் தந்து, தமிழ்க் கல்வியை வாரி வாரி வழங்கினார். கல்வி ஒன்றையே பெருஞ் செல்வமாகக் கொண்ட இவர், அந்தக்கல்விச் செல்வத்தை, தம்பாற் சேர்ந்து விளங்கிய அனைவருக்கும் அவரவர் தகுதிப்படி வழங்கியிருக்கிறார். தம்மிடம் பயிலும் மாணவர்கள், இன்னும் நீண்ட காலம் தம்மருகில் இருந்து, இன்னும் கல்விச் செல்வத்தை, தம்மிடம் பெறாமல் இடையிடையே சொல்லிக் கொள்ளாமல் பிரிந்து செல்கிறார்களே என்ற பெருவருத்தம் இவரிடத்தில் இருந்தது. மாணவர்களிடத்தில் இவர் வைத்திருந்த அன்பு அளவிறந்தது.

நெஞ்சுற அருங்கலைகள் கற்குமவர் தம்மளவில்
நேயநிக ராதவர்கள் யார்?

என்ற வில்லிபாரத வரிகளை நினைப்பிக்கும் அளவில் அவர் அன்பு நிறைந்திருந்தது. இவர்பால் கற்றவர்கள் பலர். அரசர் முதல் ஆண்டி வரை இவரிடம் பயின்றார்கள். இவர் மாட்டு ஐயங்களைத் தெளிந்து கொள்வதற்காகவே பலர் இவரிடம் வந்தார்கள். சிறந்த கவிஞர் பிரானாகிய இவர் அவர்களுக்குச் சொல்லாம், அவரவர் கொண்ட கல்வித் தகுதிக்கு

ஏற்ற அளவில் கல்விக் கொடை வழங்கினார்.

இவரிடத்தில், பயின்றவர்களில், வித்துவான் தியாகராசச் செட்டியார், புதுவை செ. சவராயலு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்களில் உ.வே.சா. அவரது இறுதிக் காலத்தில் மாணவரானவர். பிள்ளையவர்களின் இறுதிக் காலம் வரை உடன் இருந்தவர். பிள்ளையவர்களுக்கும், உ.வே.சா. அவர்களுக்கும் இடையே இருந்த அன்பு எழுத்துக்களால் விவரிக்க இயலாது.

ஒரு குருநாதர் எவ்வாறு இருந்தார் என்பதை நாம் அறியும் போது வியக்கிறோம், அதே போல் சீடரும், குருவிடம் கொண்டிருந்த பக்தியும், மரியாதையும் அளவிடற் கரியது.

வேங்கடசுப்பன் என்ற இயற்பெயரை, சாமிநாதன் என மாற்றியது பிள்ளையவர்கள்தான். தான் செல்லுமிடங்களில் எல்லாம் உ.வே.சாவுக்குத் தனியாக உணவு வழங்கவும் ஏற்பாடு செய்வார். ஒரு முறை, திருவாவடுதுறைத் திருமடத்தில் அத்தாளம் (இரவு உணவு) நடைபெற்றது. நடைபெற்ற இடம், மயிலாடுதுறை, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் நடுவில் இருந்து உண்பார். அவரது இருபுறத்தும் ஒருபால் துறவிகளும், இன்னொருபுறம் இல்லறத்தாரும் உணவு உண்பர். இல்லறத்தார் வரிசையில் முதலிடம் பிள்ளையவர்களுக்கு உரியது. அவ்வாறு உணவு உண்டு கொண்டிருக்கும் போது, பிள்ளையவர்களுக்கு தம் மாணவர் சாமிநாதன் உணவு உட்கொண்டானோ என்ற ஐயம் எழுந்தது. உடன், அவர், யாரும் செய்யக் கூடாத ஒரு செயலைச் செய்தார். மேற்கொண்டும் உண்ணாமல், ஆதீனத்தலைவர் பந்தியில் இருந்து எழும் முன்னர், இவர் எழுந்து விட்டார். அது மிகப் பெரிய தவறாகும். நிலைமையை உய்த்துணர்ந்த, ஆதீனத் தலைவர், "உங்கள் மாணவர், சாமிநாதன் உணவு உண்டாயிற்று, நீங்கள் தொடர்ந்து உண்ணலாம்" என்று அமைதிப்படுத்தினார். இருப்பினும் பிள்ளையவர்கள், மேற்கொண்டும் உண்ணாமல், ஆகாரம் பண்ணுபவர் போலவே பாவனை பண்ணிவிட்டு, எல்லோரும் எழுவதற்கு முன்னரே எழுந்து கையையும் சுத்தி செய்யாமல், வெளியில் வந்து, உ.வே.சா இருந்த இடத்தில் வந்து", ஆகாரம் ஆயிற்றா?" என்று வினவினார். ஆகாரம் ஆயிற்று என்று உ.வே.சா. பதில் கூறியதும் தான் அவர் திருப்தி அடைந்தார்.

இவ்வாறு, தமது மாணவர் உணவு உண்டாரா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, ஆதீன மரபுகளையும் மீறியவர் இந்தக் குருநாதர் என்று அறியும் போது அவருடைய பெருமையை எண்ணி விம்மிதம் அடைகின்றோம்.

இதே போல் ஆறுமுகத்தா பிள்ளை என்ற வள்ளல், தேவையில்லாமல் உ.வே.சா விடம் கோபம் கொண்டு அவரது புத்தகங்கள், எழுத்தாணி போன்றவற்றை எடுத்து மறைத்து வைத்த போதும், மிகச் சாதுரியமாக, பிள்ளையவர்கள் தமது மாணவர் பெருமை மங்காமல் காத்ததையும்

அறியும் போது உண்மையிலேயே அவர் மிகப் பெரிய மனிதர் என்று அறிய முடிகிறது.

அதனால் தான் உ.வே.சா தமது குருநாதரைப் பற்றிக் கூறும் போது

அருத்திமிகு மெனையருகி லிருத்தியருந் தமிழ் நூல்கள்
அறைந்து பின்னர்த்
திருத்துறைசை யமர்தருசுப் பிரமணிய வருட்கடலின்
திருமுன் சாரப்
பொருத்தியனை யான்கருணைக் கிலக்காக்கி யிருபயனும்
பொருந்தச் செய்தோன்
மருத்தபொழிற் சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே என்றும்

எண்ணிய பலவு மாணவர்ச் சும்பினிந்திடு நிதி தமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னாவலன்

என்றும் புகழ்ந்துரைப்பார்.

பிள்ளையவர்கள், உ.வே.சா மீது வைத்திருந்த அன்பைப் போல், உ.வே.சாவும், தமது குருநாதர் மேல் வைத்திருந்த பக்தியும், மரியாதையும் அளவிடற்கரியது.

தமது குருநாதரான பிள்ளையவர்களின் சரிதத்தை, சுமார் 50 ஆண்டு காலம் தேடிப் பின்னர், தமது அந்திம காலத்தில் படுக்கையில் படுத்தவாறே அதைச் சொல்லியதாகவும், கி.வா.ஜ. எழுதுகின்றார். அவ்வாறு தமது குருநாதர் சரிதத்தை அவர் கூறிவரும் போது, அவர் கண்களில் நீர்வழிந்து, தலையணையை அடிக்கடி நனைக்குமாம். அந்த அளவிற்கு அவர் தமது குருநாதர் மேல் பக்தி வைத்திருந்தார். அதுபோல் தமது ஆசிரியப் பிரானின் சரித்தை இரண்டு பாகங்களாக வெளியிட்டார். சுமார் 700 பக்கங்கள் கொண்ட அந்நூலில், முதற் பாகத்தில் "மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஐந்து பிராயம் அடைந்தவுடன் சிதம்பரம் பிள்ளை இவருக்கு வித்தியாரம்பஞ் செய்வித்துத் தம் பள்ளிக் கூடத்திலேயே கல்வி பயிற்றத் தொடங்கினார்" (மீ.சு. சரித்திரம். பக் 9) என்று எழுதுகின்றார். அதே பக்கத்தின் அடிக்குறிப்பில் "பிள்ளையவர்களை இவ்வாறு பெயர் குறித்து எழுதுவதற்கு அஞ்சுகின்றேன்." என்று எழுதுகின்றார். இந்த ஓரிடத்தைத் தவிர, நூல் முழுதிலும், தமது ஆசிரியப்பிரானை பெயர் சொல்லி எழுதவில்லை, "இவர்". என்றும் "இக்கவிஞர் கோமான்" என்றும் பிள்ளையவர்கள் என்றுமே குறிக்கிறார். இது மட்டும் அன்றி, தமது ஆசிரியர் மறைந்ததும், ஆசிரியர் குடும்பத்துக்குப் பேருபகாரியாக விளங்கினார்.

உ.வே.சா வுடைய குருபக்தியை நேரில் அறிந்தவர், மறைந்த தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெ.பொ.மீ, மாநிலக்கல்லூரி மாணவராக இருந்த போது, திருவேட்டீஸ்வரன் பேட்டையில் உள்ள உ.வே.சா வின் இல்லத்திற்கு ஒரு முறை சென்றாராம். அப்போது உ.வே.சா வயதான

காலம். ஒரு திண்ணையின் மீது அமர்ந்திருந்தார். தெ.பொ.மீ அவரைப் பார்த்து அஞ்சலி கூறி, தமக்குச் சில நூல்கள் வேண்டும் என்றும், படித்தபின் திருப்பிச் கொடுப்பதாகவும் கூறியுள்ளார். உ.வே.சா வோ இப்படித்தான் பலபேர் சொல்லி நூல் வாங்கிச் செல்கிறார்கள், திருப்பி வருவதில்லை என்று மறுதலிக்கவே, தெ.பொ.மீ, மீண்டும் உறுதி கூறி நூல்களைக் கொடுக்குமாறு கேட்டுள்ளார். உ.வே.சா உன் பெயர் என்ன? என்று கேட்கவும், தெ.பொ.மீ, "மீனாட்சி சுந்தரம்" என்று பதில் அளித்துள்ளார். அந்த அளவில் திண்ணையில் இருந்து, இறங்கி எழுந்து நின்று, 'குருநாதர்' என்று வணங்கிப் பின் "அப்பா, நீ என் குருநாதர் பெயரை வைத்திருக்கிறாய். இந்த நூல் மட்டும் அன்று, வேறு எந்த நூல் வேண்டுமானாலும் என்னிடம் வந்து கேள்" என்று கூறிப் புத்தகங்களை வழங்கி வாழ்த்திப் பராட்டினாராம் (தெ.பொ.மீ இதை ஒரு தடவை தமது சொற்பொழிவின் போது தெரிவித்தார்).

சென்ற நூற்றாண்டில் நிலவிய இந்த தூய, மாணவன் மீதான பாசத்தையும், அதே போல் மாணவர் குருநாதர் மீது கொண்டு விளங்கிய பக்தியையும் பார்க்கும் போது, நாம் வியப்படைகின்றோம். இத்தகைய தலைமுறை ஒன்று இது போல் விளங்கி வாழ்ந்தது என்பதை அறியும் போது, இனி ஒரு காலம் இது போல் வராதா என்று ஏக்கம் கொள்கின்றோம்.

உண்மையில், மகாவித்துவான் பிள்ளையவர்கள் சரிதத்தை, உ.வே.சா எழுதியிராவிட்டால், பிள்ளையவர்களின் பெருமை இந்த அளவிற்கு வெளிச்சத்துக்கு வந்து இருக்குமா என்பது ஐயமே!

ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் இடையே உள்ள அன்பு, இதுபோல இல்லாவிட்டாலும், பிறர் பாராட்டத்தக்க வகையிலும், பின்பற்றக் கூடிய அளவிலும், விளங்கும் என்று எதிர்பார்ப்போமாகுக.

கட்டுரையாளர் முகவரி

1. புலவர் அரு. அப்பாசாமி
19. வேதபுரிநத்தம் தெரு
பாகூர் - 607 402 (புதுவை)

2. க. அமுதா
சின்ன உஞ்சனை
உஞ்சனை அஞ்சல்
அரியக்குடி வழி
சிவகங்கை மாவட்டம் - 630 202.

3. தி. அரங்கநாதன்
67B/4 அண்ணாநகர் விரிவு
கும்பகோணம் - 612 001.

4. டாக்டர். ச. அரங்கராசன்
96, வடக்கு அலங்கம்
தஞ்சாவூர் - 9.

5. டாக்டர் சபா. அருணாசலம்
கற்பகம் இல்லம்
34, அண்ணாசாலை
தேவகோட்டை - 630 302.

6. டாக்டர் அன்னிதாமசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

7. அநுராதா சீனிவாசன்
30. காந்திதெரு
போஸ்டல் ஆடிட் காலனி
சாலிக்கிராமம்
சென்னை - 600 093.

8. புலவர் முத்து. ஆபத் சகாயம்
2/9. காளத்தி தெரு
புது கும்முடிப்பூண்டி
அஞ்சல் - 601 201.

9. முனைவர் அ. ஆலிஸ்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.

10. முனைவர் க. இந்திரசித்து
252/2இ தளிப்பாதை
உடுமலைப்பேட்டை - 642 126.

11. மொ. இரவிக்குமார். அ. ஷோபனா
தமிழியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோவை - 641 046.

12. டாக்டர் மே.செ. இராசமாணிக்கம்
அருட்பெருஞ்சோதி மருத்துவமனை
ஈரோடு - 638 003.

13. முனைவர் சு. இராசாராம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 630 001.

14. சீ. இலட்சுமணன்
61/28A82. நியூ காலனி
சிங்கம்புணரி - 630 502.

15. முனைவர் இளங்கண்ணன்
(கே. பாலகிருஷ்ணன்)
சி.54, சிக்கந்தர் பாட்சா வீதி
காந்தி நகர்
உடுமலைப்பேட்டை - 642 154

16. வி. உண்ணாமலை
சிசிஐ. ஆர்.எஸ்.எச். கம்ப்ளக்ஸ்
துணைவேந்தர் இல்லம் அருகில்
அண்ணாமலைநகர் - 608 002.

17. டாக்டர் மு. கண்ணன்
1. நிவிசநதோஷ் இல்லம்
கீழக்குயில் குடிரோடு
நாகமலை புதுக்கோட்டை
மதுரை - 625 019.

18. ச. கண்மணி
3/20. விசாலட்சமி நகர்
சிவகாசி - 626 189.

19. வித்துவான் க. கதிரேசன்
குன்றக்குடி திருவண்ணாமலை
ஆதீனம்
குன்றக்குடி - 630 206.

20. முனைவர் கு. கதிரேசன்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர் - 628 216.

21. முனைவர் பொ.நா. கமலா
14 என்/3ஏ. பெரிய கருப்பன் தெரு
சிவகாசி - 626 189.

22. முனைவர் தி. கமலி
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகம்
சைதாப்பேட்டை
சென்னை - 600 015.

23. ச. கவிதா
7-4-38 ஏ. காமராஜர் தெரு.
டி. வாடிப்பட்டி - 625 218.

24. முனைவர் கஸ்தூரி நாகராஜன்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம் - 627 802.

25. முனைவர் இரா. கஸ்தூரி ராஜா
138. பெரம்பூர் நெடுஞ்சாலை
டி/10. அட்சயா அடுக்ககம்
சென்னை - 600 012.

26. இரா. காஞ்சனா
141. குமாரசாமி ராஜா தெரு.
என்.ஜி.ஓ. காலனி
நாகமலைப் புதுக்கோட்டை
மதுரை - 625 019.

27. க. கிருஷ்ணமூர்த்தி
பிளாட் எண். 17. திருநகர்
பழனி - 624 601.

28. புலவர் பி. கிருஷ்ணமூர்த்தி
அரசு மேனிலைப்பள்ளி
மீன்சுருட்டி - 612 903.

29. முனைவர் என். கிருஷ்ணன்
தெ.தி. இந்துக் கல்லூரி.
நாகர்கோவில் - 629 002.

30. தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
சிரவணபுரம். கௌமார மடாலயம்
சின்னவேடம் பட்டி அஞ்சல்
கோயமுத்தூர் - 641 006.

31. ச. குமார்
டி.சி. 38/1043
பாக்கியம் பிள்ளை காம்பவுண்டு
சபாபதி கோயில் தெரு
திருவனந்தபுரம் - 695 036.

32. புலவர். க. கொன்றையாண்டி
52. கந்தாடைத் தெரு
ஸ்ரீ வில்லிபுத்தூர் - 625 125.

33. தி.வே. கோபாலையர்
32. வைசியர் தெரு (மாடி)
புதுச்சேரி - 605 001.

34. கோ. ச. கோமதி முத்துக்குமரன்
42. பெரிய தெரு
மாத்தூர் - 602 105
காஞ்சிபுரம் மாவட்டம்.

35. முனைவர் குரு. கோவிந்தராசன்
813. பகுதி இரண்டு சத்துவாச்சாரி
வேலூர் - 632 009.

36. முனைவர் மு. கோவிந்தராசன்
33. வெள்ளாளர் தெரு
அமைந்த கரை
சென்னை - 600 029.

37. மோ.கோ. கோவைமணி
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

38. முனைவர் சிவ. சண்முக சுந்தரம்
எஸ். எஃப்-1. பல்லவன் நகர்
த.வி.வ.வா.குடியிருப்பு
காஞ்சிபுரம் - 631 501.

39. சு. சண்முகசுந்தரம்
2/180. பி.கே.எம்.நகர்
வண்டியூர் அஞ்சல்
மதுரை - 625 020.

40. முனைவர் கா. சத்தியபாமா
பி.59. மெயின்ரோடு
முனிசிபல் காலனி
தஞ்சாவூர் - 613 007.

41. முனைவர் மு. சதாசிவம்
5. அண்ணா தெரு
திருவான்மியூர்
சென்னை - 600 041.

42. கு. சாரதாம்பாள்
டி 9/2. 7வது வீதி
காந்திபுரம்
கோவை - 641 012.

43. முனைவர். ச. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி. சென்னை - 600 113.

44. முனைவர் வீ. சிவபாதம்
1/455 ஏ. முதல்தெரு
அஞ்சல் குடியிருப்பு.
நாஞ்சிக்கோட்டை சாலை.
தஞ்சாவூர் - 613 006.

45. கு. சிவலிங்கம்
தவத்திரு. இராமானந்த அடிகளார்
மேல்நிலைப்பள்ளி
சின்னவேடம்பட்டி அஞ்சல்
கோவை - 641 006.

46. வே. சீதாலட்சுமி
112. சிவசிவ காலனி.
சன்னதித் தெரு.
திருப்பனந்தாள் - 612 504.

47. ச.பொ. சீனிவாசன்
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்
திருவனந்தபுரம் - 695 581.

48. ம. சுந்தரமூர்த்தி
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை - 641 046.

49. புலவர் கோ. சுப்பிரமணியனார்
ஐயாறப்பர் அருளகம்
222. தெற்கு வீதி
திருவையாறு - 613 204.

50. முனைவர் பெ. சுப்பிரமணியன்
187. அல்லித் தெரு
குறிஞ்சி நகர் (ஆர் எம் எஸ் காலனி)
தஞ்சாவூர் - 613 006.

51. இரா. சுவாமிநாதன்
5. தெப்பகுளம் கீழ்கரை
இராஜ மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம் - 614 001.

52. சே. செந்தமிழ்ப்பாவை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 630 003.

53. முனைவர். சு. செல்லையாபிள்ளை
'வைத்தீசுவர பவன்'
449. கவிமணி நகர்
நாகர்கோவில் - 629 002.

54. தா. சேதுபாண்டியன்
மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

55. தவத்திரு. சொக்கலிங்க சுவாமிகள்
மீனாட்சி சொக்கலிங்க சுவாமி மடம்
861. தத்தோஜியப்பா சந்து
தஞ்சாவூர் - 613 001.

56. ப. ஞானம் கணபதி
250. இரண்டாவது குறுக்குத்தெரு.
மாரியப்பா நகர்
சிதம்பரம் - 608 002.

57. முனைவர். சு. தங்கத்துரை
திருகொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம் - 606 001.

58. இராம. தனசேகரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

59. ஜா. திரிசிபுர சூடாமணி
3. ஜோதி நகர். சேந்தங்குடி
மயிலாடுதுறை - 609 001.

60. முனைவர் செ. திருநாவுக்கரசு
1/9. அர்த்தசாமக்கட்டளைத்தெரு.
திருநாகேச்சரம் அஞ்சல்
கும்பகோணம் வட்டம் - 612 204.

61. திருவள்ளுவரடிமை முருகு
3பி. பிள்ளையார் கோயில் தெரு.
திருவான்மியூர்
சென்னை - 600 041.

62. க. துரையரசன்
பெரியவாச்சான் பிள்ளைத் தெரு
சேங்கனூர் அஞ்சல்
திருப்பனந்தாள் வழி - 612 504.

63. முனைவர் புரிசை ச. நடராசன்
416. அன்னம் இல்லம்.
எழில் நகர்
திருப்பத்தூர் - 635 601.

64. கோ.ப. நல்லசிவம்
926. மணிகர்ணீசர் கோவில் தெரு.
கீழ வீதி
தஞ்சாவூர் - 613 001.

65. முனைவர் வெ.அ. நாகரத்தினம்
சேரன் கலை அறிவியல் கல்லூரி
திட்டுப்பாறை
காங்கேயம்

66. புலவர் ப.வெ. நாகராஜன்
கௌமார மடாலயம்
சின்னவேடன் பட்டி அஞ்சல்
கோயமுத்தூர் - 641 006.

67. டாக்டர் நாகப்பா. நாச்சியப்பன்
82 எம். முத்தையா முதலி வீதி
முத்தியால் பேட்டை
புதுச்சேரி - 605 003.

68. முனைவர் தா. நீலகண்டபிள்ளை
3/66. நெடுந்தெரு.
பறக்கை - 629 601.

69. ச. பத்மினி
தவத்திரு. கந்தசாமி சுவாமிகள்
மெட்ரிகுலேஷன் பள்ளி
சின்ன வேடன்பட்டி அஞ்சல்
கோயமுத்தூர் - 641 006.

70. முனைவர் த.கோ. பரமசிவம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

71. புலவர் இல. பழனிச்சாமி
ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி
ஸ்ரீ சாரதா புரி
கரூர் - 639 005.

72. மு. பழனியப்பன்
175, சீனிவாச நகர்
5வது தெரு, மச்சுவாடி
புதுக்கோட்டை - 622 001.

73. கவிஞர் பிரபாகரன்
பிளாட் 30, கே.ஜி.எல்
பிரபு நகர் II
மீஞ்சூர் - 601 113.

74. த. பூமிநாகநாதன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

75. த. மகாலட்சுமி
27, பிருதிவி நகர்
கும்முடிப்பூண்டி - 601 201.

76. தி. மகாலட்சுமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

77. முனைவர் கடவூர் மணிமாறன்
109, மேலைத்தெரு
கிருட்டிணராயபுரம் - 639 102.

78. மொ. மருதமுத்து
ஆசியவியல் நிறுவனம்
செம்மஞ்சேரி
சென்னை - 600 119.

79. முனைவர் வே.இரா. மாதவன்
ஓலைச்சுவடித்துறை, சுவடிப்புலம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

80. முனைவர் பா. மாலினி
61, கிழக்கு ரத வீதி
சிதம்பரம் - 608 001.

81. எம்.எம். மீறான் பிள்ளை
பல்கலைக்கழகக் கல்லூரி,
திருவனந்தபுரம் - 695 034.

82. முனைவர் பழ. முத்தப்பன்
மீனாட்சி இல்லம்
அரிமா நகர்
பொன்னமராவதி - 622 407.

83. முனைவர் இரா. முத்துக்குமாரசாமி
42, பெரியதெரு,
மாத்தூர் - 602 105.

84. அழ. முத்துப்பழனியப்பன்
புதுஎண்:28, ஜனதா நகர்
சரவணம்பட்டி,
கோவை - 641 025.

85. முனைவர் முத்து இலக்குமி
4/192, ரோஜா வீதி,
குறிஞ்சிநகர், 'ஏ' பிளாக்
புது நத்தம் ரோடு
மதுரை - 625 014.

86. முனைவர் பொன். முத்தையன்
87. தெ. முருகசாமி
8, ஜஸ்கோனித் தெரு,
காரைக்குடி - 630 001.

88. க. முருகேசன்
2/5, வி.என்.ஆர். நகர்
வடவள்ளி அஞ்சல்
கோவை - 641 041.

89. முனைவர் ந. முருகேசன்
எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி
திருப்பனந்தாள் - 612 504.

90. முனைவர் க. கருப்பையா
170பி, மெயின் ரோடு
சங்கரன்கோவில் - 627 756.

91. முனைவர் சி. ரவி
12, தெற்கு வீதி
திருப்பனந்தாள் - 612 504.

92. முனைவர் து. லலிதா
2, அவினாசிலிங்கம் ஆசிரியர் குடியிருப்பு
கோயமுத்தூர் - 641 043.

93. நா. லோகநாதன்
28, பெருமாள் கோவில் வீதி
குமாரக் குப்பம்
வளவனூர் அஞ்சல் - 605 108.

94. முனைவர் சு. லோகாம்பாள்
1/752, ஏ, இரண்டாவது
மெயின்ரோடு,
காமாட்சி நகர்,
திருநெல்வேலி - 627 011.

95. மு. வசந்த மல்லிகா
96, இராமலிங்கம் காலனி
கோவை - 641 043.

96. வி. வசுமதி & சந்திரா கிருஷ்ணன்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை - 641 046.

97. முனைவர் நா. வள்ளி
1/1, லெட்சுமணன் செட்டியார் தெரு
காரைக்குடி - 630 001.

98. சி. விமலா
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 630 003.

99. சு. விஜயகாந்தி
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமி
தமிழ்க் கல்லூரி
மயிலம் - 604 304.

100. தே. வேலப்பன்
'நாஞ்சில் இல்லம்'
இரவிபுதூர் - 629 402.

101. தா. ஜகந் மோகன்
10/47, செட்டித் தெரு
புது கும்முடிப்பூண்டி அஞ்சல்
- 601 201.

102. கே. ஸ்ரீ. நிவாசன்
155-Iபி, மேற்கு சிவன்
கோவில் தெரு
வடபழனி,
சென்னை - 600 026.

(பார்வையாளர்கள்)

103. முனைவர் ப. கோபாலன்
பி. 46, எஸ். இராமசாமி நகர்
உடுமலைப்பேட்டை - 642 126.

104. வி.சி. நடராசன்
கா/பெ. ப. நாகப்பன் நாயர்
6-94, வெள்ளமடம் - 629 305.

105. ப. நாகப்பன் நாயர்
6-94, வெள்ளமடம் - 629 305.

106. என். நித்தியானந்த ஆச்சாரி
448, சாலை பஜார்,
மீனாட்சிபுரம்,
நாகர்கோவில் - 629 001.

107. ம. பகவதியப்பன்
வெள்ளாளர் தெரு,
தேரேகால் புதூர்,
திருப்பதிசாரம் அஞ்சல் - 629 901.

108. பி. மகாதேவன்
கா/பெ. ப. நாகப்பன் நாயர்
6-94, வெள்ளமடம் - 629 305.

